Sri

Srīmatē Rāmānujāya namaha

Bagavat Vishayam

TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMIḺĀKKAM

VOLUME - X (Hymns 993 - 1102)

by

VIDWAN

B. R. PURUSHOTHAMA NAIDU

Reader in Tamil

UNIVERSITY OF MADRAS.

UNIVERSITY OF MADRAS

1959.

T. 1857

MADRAS UNIVERSITY TAMIL DEPARTMENT

PUBLICATION No. 18 · 10.

1857

General Editor :

DR. R. P. SETHU PILLAI, B.A., B.L., D. LITT.,

Professor of Tamil

UNIVERSITY OF MADRAS.

TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMIḺĀKKAM

VOLUME - X (Hymns 993 - 1102.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயம்

திருவாய்மொழி

பகுதி - 10. (பத்தாம் பத்து)

ஈட்டின் தமிழாக்கம்

சென்னை

சருவகலாசாலைத் தமிழ் ரீடர்

வித்வான்

பு. ரா. புருஷோத்தம நாயடு

ஆக்கியது.

சென்னைச் சருவகலாசாலை

1959

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

இந்நூலுள் அடங்கியவை

---

1. திருவாய்மொழி பத்தாம்பத்து
மூலமும் ஈட்டின் தமிழாக்கமும். பக். 1—384

2. பிற்சேர்க்கை I
செய்யுள் முதற்குறிப்பகராதி. 385—386

3. பிற்சேர்க்கை II
வியாக்கியானத்தில் வந்துள்ள
ஐதிஹ்யங்கள் 387—390

4. பிற்சேர்க்கை III
பெரியோர்கள் உரைத்த உரை நயங்கள்
உள்ள இடங்கள் —390

5. பிற்சேர்க்கை IV
வியாக்கியானத்தில் வந்துள்ள
உவமைகள் 391—396

6. கண்ணிநுண் சிறுத்தாம்பின் முகவுரை i—viii

7. கண்ணிநுண் சிறுத்தாம்பு தோற்றுவாய் 1—18

8. கண்ணிநுண் சிறுத்தாம்பு
மூலமும் விரிவுரையும் 19—80

9. கண்ணிநுண் சிறுத்தாம்பு தம்பிரான்படி 81—110

10. கண்ணிநுண் சிறுத்தாம்பு
செய்யுள் முதற்குறிப்பு அகராதி. —111

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

முன்னுரை

என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம்புக்கு
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

—ஸ்ரீ வேதாந்த தேசிகன்.

திருவாய்மொழி பத்தாம்பத்திற்கு ஈட்டின் தமிழாக்கம் என்னையாளுடைய இறைவன் திருவருளால் வெளிவருகின்றது. இப்பத்தோடு முன்வெளிவந்த ஒன்பது பத்துக்களையும் சேர்த்துத் தண்தமிழ் உலகிற்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன். பெரியோர்கள் திருவுள்ளம் பற்றி ஏற்று அடியேனை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் ஆர்?
அருளிச்செயலை அறிவார் ஆர்? — அருள்பெற்ற
நாதமுனி முதலான நம் தேசிகரை அல்லால்
பேதை மனமே! உண்டோ பேசு.

என்கிறபடியே, ஆழ்வார்கள் சீர்மை எங்கே? அருளிச்செயல்களின் பெருமை எங்கே? வியாக்கியானங்களின் அருமை எங்கே? ஒன்றுக்கும் பற்றாத அடியேன் எங்கே? அவற்றை நினைக்குந்தோறும், காலாழும், நெஞ்சழியும், கண்சுழலும்.

இன்கவி பாடும் பரம கவிகளால்
தன்கவி தான்தன்னைப் பாடுவியாது இன்று
நன்கு வந்து என்னுடனாக்கி என்னால் தன்னை
வன்கவி பாடும் என் வைகுந்த நாதனே.

என்கிறபடியே, பொருள் அல்லாத என்னைப் பொருள் ஆக்கி அடிமைகொண்டு என் நெஞ்சத்துள்ளிருந்து இங்கு இரும் தமிழ் நூல் உரையை எழுதுவித்தான் இறைவன். அங்ஙனம் எழுதி முற்றுவித்த செல்வ நாரணன் திருத்தாள்களையும், ஞான தேசிகரான நம்மாழ்வாரது நற்றுள்களையும் மன மொழி மெய் களால் நினைந்து ஏத்தி இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம் அடிமைகொண்டு இத்தெய்வத் தமிழ்த் தொண்டினை அடியேனல் செய்வித்துக் கொண்டமைக்குக் காரணம் அடியேனது பெரிய தந்தையாரான ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி புவனகிரி அழகிய மணவாள ஏகாங்கி ஸ்வாமிகள் சம்பந்தமே ஆதலின் அப் பெரியாரை உன்னும்தோறும் அடியேன் மனம் எரி அணை அரக்கும் மெழுகும் ஒக்கின்றது. அப் பெரியாரது அந்தாமரை அன்ன அடியிணைகளை இறைஞ்சுகின்றேன்.

பெரியார் பலர் விரும்பியவாறு, திருவாய்மொழியின் சாரமானதும், ஸ்ரீ மதுரகவி ஆழ்வாரால் அருளிச்செய்யப்பட்டதுமான கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பிரபந்தத்தையும், பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வியாக்கியானத்தைத் தழுவி எழுதப்பட்ட விரிவுரையையும் இதன் ஈற்றில் சேர்த்திருக்கிறேன்.

இறைவனுடைய திருவருளும் ஆழ்வாருடைய தண்ணளியும் பெரியோர்களுடைய பேரருளும் இனிது நடத்த, ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று ஒரு பூசை முற்றவும் நக்குபுக்கென ஆசை பற்றி அடியேனல் எழுதப்பட்ட இதில் 'மறப்பெனும் கள்வன் வாரிக் கொண்டனனே' என்கிறபடியே அடியேனுடைய நினைவின் குறைவால் ஆங்காங்குப் பல பிழைகள் நேர்ந்திருக்கக் கூடும். அவற்றைப் பொறுத்தருளல் ஆன்று அமைந்து அடங்கிய சான்றோர் கடனாகும்.

இந் நூலைப் பல்கலைக் கழகத்தார் அச்சிடுதற்குக் காரணமாக இருந்த தமிழ்ப் பேராசிரியர், சொல்லின் செல்வர், டாக்டர். R. P. சேதுப் பிள்ளை, B.A., B.L., அவர்கட்கும், பல்கலைக் கழகப் பதிப்பாக வெளியிட்டு உதவிய, கரும்பு அயிலக் கூலி கொடுக்கும் குலத்தோன்றல்களான பல்கலைக் கழக அதிகாரிகட்கும் அடியேன் என்றென்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

ஆழ்வார் களையும் அருளிச்செயல் களையும்
தாழ்வா நினைப்பவர்கள் தாம் நரகில் — வீழ்வார்கள்
என்று நினைந்து நெஞ்சே! எப்பொழுதும் நீ அவர்பால்
சென்று அணுகக் கூசித் திரி.

— உபதேசரத்தினமாலை.

இங்ஙனம்,

சென்னை,
4—5—'59

B. R. புருஷோத்தம நாயடு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

—:o:—

திருவாய்மொழி

பத்தாம் பத்து

முதல் திருவாய்மொழி "தாள தாமரை"

முன்னுரை

ஈடு :—முதற்பத்தால், பகவத்விஷயம் புருஷார்த்தம் என்று அறுதியிட்டார்; இரண்டாம் பத்தால், அந்தக் கைங்கரியத்தில் களை அறுத்தார்; மூன்றும் பத்தால், களை அறுக்கப்பட்ட அந்தக் கைங்கரியமானது பாகவத சேஷத்வபரியந்தமான பகவத் கைங்கரியம் என்றார்; நான்காம் பத்தால், இப்படிப்பட்ட கைங்கரியத்திற்கு விரோதிகள் ஐஸ்வரிய கைவல்யங்கள் என்றார்; ஐந்தாம் பத்தால், அந்த விரோதிகளைப் போக்குவானும் அவனே என்றார்; ஆறும் பத்தால், விரோதிகளை அழிக்கும் தன்மையனான சர்வேஸ்வரன் திருவடிகளிலே சரணம் புக்கார்; ஏழாம் பத்தால், இப்படிப் பெரிய பிராட்டியார் முன்னிலையாகச் சரணம் புக்க இடத்திலும் தக்கபட நியாயம்போலே சம்சாரம் தொடருகிறபடியைக் கண்டு நோவுபட்டார்; எட்டாம் பத்தால், இப்படிப் பிரபந்நரா யிருக்கச் செய்தே தக்கபட நியாயம் போலே நம்மை விடாமல் தொடருகிறது, நம்முடைய ஆத்மாவிலும் ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களிலும் நசை அறுதபடியாலே என்று பார்த்து, அவற்றில் ஒரு நசை இல்லை என்றார்; ஒன்பதாம் பத்தால், 'இப்படி நசை அற்ற பின்பும் பாதுகாவாமல் ஒழிவான் என்?' என்று ஐயங்கொள்ள, 'நான் நாராயணன், எல்லா ஆற்றலோடும் கூடினவன், உம்முடைய விருப்பங்கள் அனைத்தையும் செய்து முடிக்கிறோம்' என்று அருளிச்செய்ய,

அவனுடைய சீலகுணத்தில் ஆழங்கால்பட்டார்; ஆழ்வாருடைய பதற்றத்தைக் கண்டு, திருமோகூரில் தங்கு வேட்டையாக வந்து தங்கி, இவர்க்கு அர்ச்சிராதி கதியையுங் காட்டி, இவருடைய விருப்பத்தை நிறைவேற்றினபடியை அருளிச் செய்கிறார் இந்தப் பத்தாம் பத்தால்.

[1] "நாளேல் அறியேன் எனக்கு உள்ளன" என்றார்; "மரணம் ஆனால்" என்று அறுதியிட்டுக் கொடுத்தான் இறைவன். [2] அவன் "செய்கிறேம்" என்று தலை துலுக்கினால், அது பெற்றதாய் மேலே நடக்கலாம்படியாய் இருக்குமன்றோ காரியம். [3] ஆகையாலே, பெறக்கூடிய காலத்தைப் பெற்றாராய்ப் போக்கிலே ஒருப்பட்டார்; போமிடத்தில், முகம்பழகின தேகத்தையும் விட்டு, பல காலம் பழகிய பந்துக்களையும் விட்டுத் தனியேயாய்ச் செல்ல வேண்டுதலானும், போகிற இடம் தான் கண்டு அறியாத நிலமாதலானும், அதுவும் நெடுங் கை நீட்டாதலானும், வழியிலே தடைகளும் பலவாக இருத்தலானும், அதாவது, அறிவின்மை கர்மம் வாசனை ருசி என்பன போன்று சொல்லுகிறவற்றைத் தெரிவித்தபடி; இவற்றை அடையப் போக்க வேண்டுமாதலானும், வழிக்குத் துணையாகக் கொண்டு போம்போது சர்வேஸ்வரனையே பற்ற வேண்டும்.

அது என்? இவன்தானே தனக்குத் துணை ஆனாலோ? எனின், இன்று அளவும்வர, பிறப்புஇறப்புக்களிலே உழன்று திரிவதற்குக் காரியம் பார்த்துப் போந்தவன் அன்றோ இவன்;

---

1. மேல் திருப்பதிகங்களில் கூறிய பொருளை அநுவதித்துக் கொண்டு, இத்திருவாய்மொழியில் காளமேகத்தை வழித்துணையாகப் பற்றுகைக்கு உறுப்பான காரணத்தை அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றித் தொடங்குகிறார் 'நாளேல்' என்று. "நாளேல்" என்றது, திருவாய். 9. 8 : 4. "மரணமானால்" என்பது, திருவாய். 9. 10 : 5.

2. வார்த்தை சொன்ன அளவில் பெற்றது ஆகுமோ? என்ன, 'அவன், செய்கிறேம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. இப்படிப் பெற்றதாக அறுதியிட்டாலும் உலகத்தின் இயல்பையும் பலவாக இருக்கிற தடைகளையும் பார்த்தால் சர்வேஸ்வரனையே துணையாகப் பற்றவேண்டும் என்கிறார் 'ஆகையாலே' என்று தொடங்கி. 'பெறக் கூடிய காலத்தைப் பெற்றாராய்' என்றது, "மரணமானால்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

[1] இச் சரீரத்தோடே இருக்கிற நாளிலே நலத்தைச் செய்ய நினைத்தானேயாகிலும் இவனுடைய முன் நிலையினைப் பார்த்தால் இவன்தான் தனக்குத் துணையாக மாட்டானே. [2] வழியிலே கொடு போமிடத்தில் இவனுக்கு வரும் தடைகளை அறிகைக்கு முற்றறிவினனாக வேண்டும்: அறிந்தால் அவற்றைப் போக்கிக் கொடு போகைக்கு எல்லாம் வல்ல ஆற்றலுடையவனாக வேண்டும்: [3] "யஃ ஸர்வஜ்ஞஃ ஸர்வ வித் - எவன் யாவற்றையும் பொதுப்பட அறிந்தவன், தனித்தனி அறிந்தவன்" என்பது போன்ற பிரமாணங்களால், சர்வேஸ்வரனை '**முற்றறிவினன், எல்லாம் வல்லவன்**' என்னாநின்றதே அன்றோ.

[4] 'எல்லாம் வல்லவனாகவே இருந்தானேயாகிலும் சம்பந்தம் உள்ளவனாக இராதபோது பயன் இல்லையே. [5] "தாயும் தந்தையும் உடன் பிறந்தவனும் இருப்பிடமும் பாதுகாப்பவனும் சிநேகிதனும் பேறும் ஆகிய இவை எல்லாம் ஸ்ரீமந் நாராயணனாகவே இருக்கிறான்" என்பது போன்றவைகளாலே, அவனே எல்லாவிதமான உறவினனாகச் சொல்லா நின்றதே: [6] "எம்மானும் எம்மனையும் என்னைப் பெற்று ஒழிந்ததற்பின், அம்மானும் அம்மனையும் அடியேனுக்கு ஆகி நின்ற" என்கிற படியே, ஆசையாலே அறிவற்றவர்களாய்க் குழந்தையைப்

---

1. முன்னர் அங்ஙனம் உழன்று திரிந்தானேயாகிலும், இப்பொழுது நலத்தை எண்ணுகின்றானே, அது துணை ஆகாதோ? எனின், 'இச் சரீரத்தோடே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். ஆகையாலே, சர்வேஸ்வரனே துணையாகவேண்டும் என்றபடி. 'நலத்தைச் செய்ய நினைத்தானே யாகிலும்' என்றது, சரணாகதி செய்ய நினைத்தானேயாகிலும் என்றபடி.

2. அவனே துணையாகவேண்டும் என்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வழியிலே' என்று தொடங்கி.

3. "யஃ ஸர்வஜ்ஞஃ" என்பது, முண்டகோப நிடதம்.

4. முற்றறிவினனும் எல்லாம் வல்லவனும் இருத்தலைப் போன்று சம்பந்தம் உள்ளவனாகவும் இருத்தல் வேண்டும் என்கிறார் 'எல்லாம் வல்லவனாக' என்று தொடங்கி.

5. அதற்குப் பிரமாணங்கள் காட்டுகிறார் "தாயும் தந்தையும்" என்று தொடங்கியும், "எம்மானும்" என்று தொடங்கியும்.

"மாதா பிதா ப்ராதா நிவாஸஃ ஶரணம் ஸுஹ்ருத்
கதிஃ நாராயணஃ" என்பது, சுபால உபநிடதம்.

6. "எம்மானும்" என்பது, பெரிய திருமொழி, 7. 2 : 3. இத் திருப்பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஆசையாலே' என்று தொடங்கி.

பெற்று 'இளமைக்கு விரோதி' என்று பொகட்டுப் போமவர்கள்; இவன்தான் பழகிப் போந்த முகத்தாலே 'அம்மே!' என்றபோதாக, பெண் குரலாலே 'ஏன்?' என்றும், 'அப்பா!' என்றபோதாக, ஆண்குரலாலே 'ஏன்?' என்றும், இப்படி முகம் கொடுத்துக்கொண்டு போகக்கடவனாய் இருக்குமன்றோ அவன்.

[1] சரீரமானது கட்டுக்குலைந்து பரமபதத்திலே போய்ப் புகுமளவும் செல்ல நடுவிலே உண்டாகும் தடைகளைப்போக்கிக் கொடு போகைக்கு ஈடான விரகு அறியுமவனாக வேண்டும்; விரோதிகளை இருதுண்டமாக இட்டுக்கொடுபோகவல்ல ஆற்றலுடையவனாக வேண்டும்; தான் தனக்குத் தஞ்சம் அல்லாத அன்று இவன் தனக்குத் தஞ்சம் என்று தன்னை இவன் கையிலே காட்டிக் கொடுக்கும்படி [2]நம்பத்தகுந்தவனாக வேண்டும்; [3]"முற்றறிவினன், எல்லாம்வல்லவன்" என்கிற படியே, தானே பிரமாணங்களாலே பிரசித்தமாக்கப்பட்டவன்; "தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய்" என்று இவர்தாமே தஞ்சம் என்றாரே. [4] "மயர்வு அற மதிநலம் அருளினன்" என்று, பேரருளினன் என்னுமிடம் தாமே கைகண்டார். [5] இனி, சேஷியாக இருக்கையாலே தானே சம்பந்தம் உள்ளவனாய் இருக்குமன்றோ.

---

1. வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, மேலே கூறியனவற்றை மீளவும் அருளிச்செய்கிறார் 'சரீரமானது' என்று தொடங்கி. இத் திருப்பதிகத்தில் வருகின்ற "அசுரரைத் தகர்க்கும்", "துணிக்கும் வல்லரட்டன்" என்பன போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'விரோதிகளை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. "திருமோகூர் ஆத்தன்" என்னும் பாசுரப் பகுதியாலே 'நம்பத் தகுந்தவன்' என்பது போதரும். ஆத்தன் = ஆப்தன்.

3. இவன் முற்றறிவினனாதலும், எல்லாம் வல்லவனாதலும் பிரமாணங்களால் பிரசித்தமாக்கப்பட்டவை என்று அருளிச்செய்யாநின்றுகொண்டு, இவன் நம்பத்தகுந்தவன் என்பதற்கும் பிரமாணம் காட்டுகிறார் 'முற்றறிவினன்' என்று தொடங்கி. "தஞ்சமாகிய" என்பது, திருவாய். 3. 6 : 9.

4. இக் குணங்கள் காரியப்படவேண்டுமானால் அருள்வேண்டுமே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "மயர்வு அற" என்று தொடங்கி. 'கை கண்டார்' என்றது, "அருளினன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

5. ஒரு காரணம் பற்றி வந்த உறவு முறை அன்றிக்கே, காரணம் இல்லாமலே வந்த உறவும் உண்டு என்கிறார் 'இனி' என்று தொடங்கி. சேஷி = ஆத்மாக்களைச் சேஷமாக உடையவன்; தலைவன். சேஷமாவது சாந்து, மலர், தாம்பூலம் முதலியவற்றைப் போன்று அவனுடைய இஷ்ட விநியோகத்திற்குத் தகுதியாக இருத்தல்.

[1] ஆக, "நம் விரோதிகளைப் போக்கிப் பரமபதத்தளவும் கொண்டுபோய் வழிநடத்துவான் காளமேகம்" என்று அறுதியிட்டு, அரு நிலங்களிலே வழிபோவார் 'அகப்படை' என்று மிடுக்கராய் இருப்பாரைக் கூட்டிக்கொண்டு தம் கைப் பொருளை அவர்கள் கையிலே கொடுத்து அமர்ந்த நிலத்திலே சென்றவாறே வாங்கிக்கொள்ளுவாரைப் போலே, உடலை விட்டு உயிர் பிரிகின்ற காலத்திலே காளமேகத்தின் பக்கலிலே ஆத்மாவை அடைக்கலம் செய்து, "பரமபதத்திலே புக்கால் பின்னர் நமக்கு ஆக்கிக்கொள்ளக் கடவோம்" என்று வழித் துணையாகப் பற்றுகிறார்.

[2] இந்தத் தன்மைகள் ஒன்றும் இல்லையேயாகிலும், அவன் முன்னே போகப் பின்னே போகாநின்றால் அவனுடைய வடிவழகினை அநுபவித்துக்கொண்டு போமதுவே பிரயோஜனமாகப் போரும்படி ஆயிற்று இருப்பது. [3]"வள்ளலே! உன் தமர்க்கு என்றும் நமன் தமர் கள்ளர் போல்" என்கிறபடியே, எதிரிகள் கூசிப்போம்படி பெருமிதமுடையனாய் இருப்பான் ஒருவனைப் பற்றவேண்டும் அன்றோ. [4]"யமன்,

---

1. விரோதிகளைப் போக்குகைக்குத் தகுந்த குணங்களை அருளிச்செய்தார் இதுகாறும். இனி, இத்திருவாய்மொழியிற் கூறப்படும் பொருளைத் தொகுத்து அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி. அருநிலம் - செல்லுதற்கு அரிய அஞ்சத்தக்க வழி. அகப் படை - அந்தரங்கமான சேனை.

2. "தோளும் நான்குடைச் சுரிகுழல்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'இந்தத் தன்மைகள்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. ஆற்றல் இருப்பினும் போராது, மதிப்பும் வேண்டும் என்கிறார் "வள்ளலே" என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 8. 10 : 7.

இப் பாசுரத்தால் அவனுக்கு மதிப்புத் தோற்றிற்றில்லையேயாகிலும், அவன் தமர்க்கு அது உண்டு ஆகையாலே, அவனுடைய மதிப்பும் கிம்புநரியாயத்தாலே போதரும்.

4. மதிப்புக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'யமன்' என்று தொடங்கி.

ஸ்வபுருஷம் அபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம்
வததி யம꞉ கில தஸ்ய கர்ண மூலே
பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந்
ப்ரபு꞉ அஹம் அந்ய ந்ருணாம் ந வைஷ்ணவாநாம்.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 3. 7 : 13. இச் சுலோகத்திற்குப் பொருள் மேலே காண்க. பக் 33. இச் சுலோகத்தோடு

திறம்பேன்மின் கண்டீர் திருவடி தன் நாமம்
மறந்தும் புறம் தொழா மாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்கள் என்றான் நமனும் தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு.

என்ற திருமழிசைப்பிரான் திருப்பாசுரம் ஒப்பு நோக்கல் தகும்.

கையில் பாசத்தைத் தரித்த தன் வேலையாளைப் பார்த்து, பகவானை அடைந்தவர்களை விட்டு விடு; நான் ஏனையோர்க்கே தலைவன் ; விஷ்ணு பக்தர்களுக்குத் தலைவன் அல்லன் என்று அவனுடைய காதின் அடியிலே சொன்னான்" என்கிறபடியே அவனும் சொல்லிவைத்தானே அன்றோ.

993.

தாள தாமரைத் தடம் அணி வயல் திருமோகூர்
நாளும் மேவி, நன்கு அமர்ந்து நின்று, அசுரரைத் தகர்க்கும்
தோளும் நான்குடைச் சுரி குழல் கமலக் கண் கனி வாய்க்
காளமேகத்தை அன்றி, மற்று ஒன்று இலம் கதியே.

பொழிப்புரை :—நாளத்தையுடைய தாமரைப் பூக்கள் நிறைந்த தடாகங்களையும் அழகிய வயல்களையுமுடைய திருமோகூர் என்னும் திவ்விய தேசத்திலே எப்பொழுதும் விரும்பி நன்கு எழுந்தருளி யிருந்து அசுரரை அழிக்கின்ற நான்கு திருத்தோள்களையும் சுருண்ட கூந்தலையும் தாமரைமலர் போன்ற திருக்கண்களையும் கொவ்வைக் கனி போன்ற திரு அதரத்தையுமுடைய காளமேகத்தை அல்லாமல் வேறு ஒரு புகலிடம் உடையோம் அல்லோம் என்கிறார் என்றவாறு.

விசேடக்குறிப்பு :—மேவுதல் - விரும்புதல். "நம்பு மேவு நசையாகும்மே" என்பது தொல்காப்பியம், சொல். உரியியல், 33. தகர்க்கும் என்பதனைக் காளமேகத்திற்கு அடையாக்கலும் ஒன்று. அமர்ந்து நின்று தகர்க்கும் காளமேகம் என்க. கதி மற்றொன்று இலம் என்க.

இத் திருவாய்மொழி கலி நிலைத்துறை.

ஈடு :—முதற் பாட்டு. [1] மரணமான மிகப் பெரிய அச்சத்தை நீக்குதற்கு, பகைவர்களை அழிக்கும் தன்மையனான காளமேகம் அல்லது துணை இல்லை என்று அவனைப் பற்றுகிறார்.

தாள தாமரை - சேற்றின் நன்மையாலே உரத்த தாளையுடைய தாமரை என்க. [2] மலையைச் சுமந்தாற் போன்று பூவின்

---

1. பின் அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.
2. தாள் இல்லாத தாமரை இல்லையே? அங்ஙனம் இருக்க, "தாள தாமரை" என்று விசேடிப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'மலையை' என்று தொடங்கி.

பெருமையைப் பொறுக்கவல்ல தாளையுடையதாதலின் ‘ **தாள** தாமரை’ என்கிறார். [1] “உரம் பெற்ற மலர்க் கமலம் உலகு அளந்த சேவடி போல் உயர்ந்து காட்ட” என்னக் கடவதன்றோ. சேற்று வாய்ப்பாலே உரம்பெற்று இருக்கிற கமலமானது ஓங்கி அலர்ந்தபோது, திரு உலகு அளந்தபோது எடுத்த திருவடிகளுக்குப் போலியாய் இருந்தது. [2]“அப்போது தேவர்களுடைய கூட்டங்களாலும்” என்கிறபடியே, தேவர்கள் திரண்டு காலை நீட்டித் [3] தலையாலே வணங்கித் தண்டன் இட்டாற் போலே இராநின்றதாயிற்று, செந்நெற்களானவை விழுந்து தலை சாய்ந்து கிடக்கிற போது. அணி தடம் - இப்படிப்பட்ட பூக்களாலே அலங்கரித்தாற் போலே இருக்குமாயிற்றுத் தடம். அணி வயல் திருமோகூர் - [4] இப்படிப்பட்ட தடங்களையும் வயல்களையுமுடைய திருமோகூர். [5] ஊரில் இனிமை முழுதும் வயலிலே காணுமித்தனை.

நாளும் மேவி - நாள்தோறும் நாள்தோறும் மிக்க விருப்பத்தைச் செய்து. [6]அவ் ஊரில் விடிந்த விடிவுதோறும்,

---

1. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் “உரம்பெற்ற” என்று. இது, பெரியாழ்வார் திருமொழி, 4. 9: 8.

2. மேலே காட்டிய திருமொழிப் பாசுரத்தின் நான்காம் அடிக்குப் பொருள் அருளிச்செய்கிறார் ‘அப்போது’ என்று தொடங்கி.

ஸங்கை: ஸுராணும் திவி பூதலஸ்தை:
ததா மநுஷ்யை: ககநே ச கேசரை:
ஸ்துத: க்ரமாந்ய: ப்ரசகார ஸர்வதா
மம அஸ்து மாங்கள்ய விவ்ருத்தயே ஹரி:.

என்பது, விஷ்ணுதர்மம்.

3. பத்தியின் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்குமாபோல்
மொய்த்த நீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்.

என்னும் பெரிய புராணச் செய்யுள் ஈண்டு நினைவிற்கு வருகின்றது.

4. “தாளதாமரை - அணி” என்றதனைத் தடத்துக்கும் வயலுக்கும் விசேஷணமாக்கி அருளிச்செய்கிறார் ‘இப்படிப்பட்ட’ என்று தொடங்கி.

5. அதனாற் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் ‘ஊரில்’ என்று தொடங்கி.

6. மேலே, ஊரின் இனிமையைச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் ‘அவ் ஊரில்’ என்று தொடங்கி. என்றது, எப்பொழுதும் இனிமையாக இருக்கையாலே, அவனுக்கும் எப்பொழுதும் விருப்பம் மாறாமல் இருக்கும்; இப்படி இருக்கையாலே விடிந்த விடிவுதோறும் அவனுக்கு “நல்ல விடிவாக விடிந்தது” என்னும்படி இருக்கும் என்றபடி.

அவனுக்கு [1]"நல்ல விடிவாக விடிந்தது எனக்கு" என்னும் படியாயிற்று இருப்பது. நன்கு அமர்ந்து நின்று - இவ் ஊரில் வசித்தலே ஒழிய வேறு ஒரு பிரயோசனத்தைக் கணிசியாதே இதுதானே பிரயோசனமாக நின்று. அசுரரைத் தகர்க்கும் தோளும் நான்குடை-அசுரக் கூட்டத்தைத் துணித்து அடுக்கி விரோதியைப் போக்கிக்கொண்டு போகவல்லன் என்று தோற்றும்படியான திருத்தோள்கள் நான்கினையுமுடைய. [2]'இவர் இப்போது அறிந்தபடி எங்ஙனே?' என்று கேட்க, 'விடு காதானாலும் தோடு இட்டு வளர்த்த காது என்று தெரியும் காண்' என்று அருளிச்செய்தருளின வார்த்தை. சுரி குழல் - [3]நெடுநாள் படப் பிறப்பு இறப்புக்களிலே உழன்று வருவதால் உளவாய எல்லாத் துன்பங்களும் ஆறும்படியாய் இருக்குமாயிற்று, பின்னே போகிறவனுக்கு முன்னே போகிறவன் ஒரு கால் திருக்குழலைக் குலைத்து நுழுந்த; [4]"கேசவன் கிலேசத்தை நாசம் செய்பவன்" என்னக் கடவதன்றே.

கமலம் கண் கனி வாய் - [5]மகளிருடைய பொய்யான நோக்கிலும் பொய்யான முறுவலிலும் அகப்பட்ட நெஞ்சாறல் எல்லாம் தீரும்படி மெய்யான நோக்கும் மெய்யான முறுவலும் இருக்கும்படி சொல்லுகிறது. காள மேகத்தை - [6]இராஜாக்கள் போகும்போது முன்னே மேகர் நீர் விடுமாறு போலே,

---

1. அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிஶா
யத் உந்நித்ராப்ஜ பத்ராக்ஷம் விஷ்ணோஃ த்ரக்ஷ்யாமி அஹம் முகம்.
என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 17 : 3.

2. தோள்களைக் கண்டமாத்திரத்தில் "அசுரரைத் தகர்க்கும்" என்று தோற்றுமோ? என்கிற சங்கையை அநுவதிக்கிறார் 'இவர்' என்று தொடங்கி. 'அருளிச்செய்தருளின வார்த்தை' என்றது, நம்பிள்ளை கேட்க நஞ்சீயர் அருளிச்செய்த வார்த்தை என்றபடி. விடு காது - வளர்த்துத் தொங்கவிடும் தொள்ளைக் காது.

3. "சுரிகுழல்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நெடுநாள்' என்று தொடங்கி.

4. அப்படித் தாபத்தைப் போக்கக் கூடியது என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'கேசவன்' என்று தொடங்கி.

"கேஶவஃ க்லேஶ நாஶநஃ" என்பது, மகா பாரதம்.

5. "கமலக் கண் கனி வாய்" என்ற அடைமொழிகட்கு, இடத்திற்கு ஏற்ப, பாவம் அருளிச்செய்கிறார் 'மகளிருடைய' என்று தொடங்கி.

6. "வழித்துணை" என்றதற்குத் தகுதியாக, "காளம்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இராஜாக்கள்' என்று தொடங்கி. மேகர் - வழியைப் பாதுகாக்குமவர். தண்ணீர் தெளிக்கின்றவர்கள் எனலுமாம்.

முன்னே காளமேகம் வனப்பாகிய அமிருதத்தைப் பெய்து கொண்டுபோக, பின்னே அக் குளிர்வாசத்தை அநுபவித்துப் போகலாம்படி இருக்குமாயிற்று. அன்றி மற்றொன்று இலம் கதியே-காளமேகத்தை ஒழிய வேறு வழித்துணை உடையோம் அல்லோம். (1)

994.

இலம் கதி மற்றொன்று எம்மைக்கும் ஈன் தண் துழாயின்
அலங்கல் அம் கண்ணி ஆயிரம் பேருடை அம்மான்
நலம் கொள் நான்மறை வாணர்கள் வாழ் திருமோகூர்
நலம் கழலவன் அடி நிழல் தடம் அன்றி யாமே.

பொ - ரை :—மிகக் குளிர்ந்த திருத்துழாயால் கட்டப்பெற்ற அசைகின்ற அழகிய மாலையினையும் ஆயிரம் திருப்பெயர்களையுமுடைய அம்மானும், அருளையே கைக்கொண்ட அந்தணர்கள் வாழ்கின்ற திருமோகூரில் எழுந்தருளியிருக்கின்ற சிறந்த திருவடிகளையுடையவனுமான இறைவனுடைய திருவடி நிழலாகிய தடாகத்தை அன்றி வேறு ஒரு பொருளை யாம் எல்லாப் பிறவிகளிலும் உபாயமாக உடையோம் அல்லோம்.

வி - கு :—நலங்கழலவன் அடி நிழல் தடம் அன்றி யாம் எம்மைக்கும் மற்றொன்று கதி இலம் என்க. ஈன் தண் என்பன ஒரு பொருட் பன்மொழி. ஈன் - இனிமையுமாம்; ஈனுதலுமாம். அலங்கல் - மார்பின் மாலையுமாம். கண்ணி-முடிமாலையுமாம். "கண்ணி கார் நறுங் கொன்றை" என்றார் புறத்தினும்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] இன்பத்திற்குக் காரணமான ஒப்பனையையும் உய்வு பெறுதற்குக் காரணமான திருப்பெயர்களையுமுடையவனுடைய திருவடிகள் அல்லது, காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் வேறு புகல் உடையோம் அல்லோம் என்கிறார்.

எம்மைக்கும் மற்றொன்று கதி இலம்-[2] இவ் வார்த்தை ஒரு பிறவியில் அன்றியே, எல்லாப் பிறவிகளிலும் இதுவே

---

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. "எம்மைக்கும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவ் வார்த்தை' என்று தொடங்கி, எம்மை என்றது, எல்லாப் பிறவிகளிலும் என்றபடி.

வார்த்தை. [1] எல்லாக் காலத்துக்கும் இது ஒழிய வேறு துணை உடையோம் அல்லோம். ஈன் தண் துழாயின் அலங்கல் அம் கண்ணி - தாரையும் குளிர்த்தியையுமுடைய திருத்துழாயின் ஒளியையுடைத்தான அழகிய மாலை. அலங்கல் - ஒளி; அசை தலுமாம்; [2] பின்னே போகாநின்றால் அடி மாறி இடும்போது வளையம் அசைந்து வரும்படியைக் கூறியபடி. திருமேனியில் சேர்ந்திருப்பதனாலே வந்த புகரைச் சொன்னபடி. ஆயிரம் பேருடை - [3] தோளும் தோள்மாலையுமான அழகினைக் கண்டு இவன் ஏத்தப் புக்கால், இழிந்த இடம் எல்லாம் துறையாம்படி கணக்கு இல்லாத திருப்பெயர்களையுடையவன்.

அம்மான் - [4] வடிவழகினைக் கண்டு சம்பந்தம் இல்லாதவர்களை ஏத்திற்றாக வேண்டாதே, "ஆழி அம் கை அம்மானை ஏத்தாது அயர்த்து, வாளா இருந்தொழிந்தேன் கீழ் நாள்கள் எல்லாம்" என்று ஏத்தாத நாட்களுக்கும் வயிறு பிடிக்க வேண்டும்படியான விஷயம். நலம் கொள் நான்மறை வாணர்கள் வாழ் திருமோகூர் - "அருளுடைமையே வேதார்த்தம்" என்று வேதங்களின் கருத்து கைவந்திருக்குமவர்களாய், வேதத்துக்கு வியாசபதம் செலுத்த வல்லரானவர்கள் வசிக்கிற தேசம். [5] அவ் ஊரில் வசிப்பதுவே வாழ்ச்சியாம். இதனால் அத் தேசத்தில் வசிப்பதனாலே, 'அடைந்தவர்களைப் பாதுகாத்தலே மிக உயர்ந்த தருமம்' என்று சர்வேஸ்வரனும் அதிலே நிலை நிற்க வேண்டும்படியான நகரம் என்பதனைத் தெரிவித்தபடி. [6] அவ் ஊரிலே சென்று அடைந்தவர்களை "நம்

---

1. ஆயின், இவர் இன்னமும் ஒரு பிறவி உண்டாகச் சொல்லுகிறாரோ? என்ன, 'எல்லாக் காலத்துக்கும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "அலங்கல்" என்பதற்குக் கூறிய இரண்டு பொருள்களையும் எதிர் நிரல் நிறையாக விளக்குகிறார் 'பின்னே போகாநின்றால்' என்று தொடங்கி.

3. மேற்பாசுரத்தில் உள்ள "தோளும்" என்ற பதத்தையும் கூட்டிக் கொண்டு, பாவம் அருளிச்செய்கிறார் 'தோளும்' என்று தொடங்கி.

4. மேலே கூறியவற்றையும் திருவுள்ளம் பற்றி "அம்மான்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வடிவழகினை' என்று தொடங்கி. "ஆழி அம் கை" என்பது, பெரிய திருவந். 82.

5. வசிக்கும் என்னாமல் "வாழ்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவ் ஊரில்' என்று தொடங்கி.

6. "நலம் கொள் நான்மறை வாணர்கள்" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'அவ் ஊரிலே' என்று தொடங்கி.

மோடு ஒத்தவர்களாக ஆகுக" என்னுமவர்கள். நலம் கழலவன் - [1] அடைந்தவர்களுடைய குணங்களையும் குற்றங்களையும் நினையாத திருவடிகள். அன்றிக்கே, [2] அவர்கள்தாம் அன்பினாலே மயங்கினவர்களாய் "இவன் கொல்லத் தக்கவன்" என்றாலும் "நான் விடமாட்டேன்" என்னுமவன் என்னலுமாம். அவன் அடி நிழல் தடம் அன்றி யாமே - அவனுடைய திருவடி நிழலாகிற பொய்கையை ஒழிய நாம் வேறொரு கதியுடையோம் அல்லோம். 'அவன்' என்பதனை முன்னும் பின்னும் கூட்டுக. (2)

995.

அன்றி யாம் ஒரு புகலிடம் இலம் என்று என்று அலற்றி
நின்று நான்முகன் அரனொடு தேவர்கள் நாட
வென்று இம் மூ உலகு அளித்து உழல்வான் திருமோகூர்
நன்று நாம் இனி நணுகுதும் நமது இடர் கெடவே.

பொ - ரை :—பிரமனும் சிவனும் தேவர்களும் நின்றுகொண்டு 'உன்னை அன்றி வேறு புகல் உடையோம் அல்லோம் யாம்' என்று என்று பலகாலும் கூப்பிட்டு அவனை வந்து அடைய, பகைவர்களை வென்று இம் மூன்று உலகங்களையும் காப்பாற்றி அதுவே வேலையாகத் திரிந்துகொண்டிருக்கின்றவன் எழுந்தருளியிருக்கின்ற திருமோகூரை, நமது துன்பம் எல்லாம் கெடும்படி நாம் இனி நன்றாக அடைவோம் என்கிறார்.

வி - கு :—நான்முகன் அரனொடு தேவர்கள் நின்று புகலிடம் இலம் என்று அலற்றி நாட வென்று அளித்து உழல்வானுடைய திருமோகூரை நமது இடர் கெட நாம் இனி நன்று நணுகுதும் என்க. உழல்வான் : வினையாலணையும் பெயர்.

---

1. "நலம்" என்றதனை விளக்குகிறார் 'அடைந்தவர்களுடைய' என்று தொடங்கி. "நற்றாள் தொழாஅரெனின்" என்பது திருக்குறள்.

2. மேலே "நலம்" என்பதனைத் திருவடிகளுக்கு அடையாக்கிப் பொருள் அருளிச்செய்தார். இப்பொழுது, அதனைக் கழலையுடையவனுக்கு அடைமொழியாக்கிப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவர்கள்தாம்' என்று தொடங்கி. அவர்கள் தாம் - அந்த அடியார்கள் தாம்.

> வத்யதாம் ஏஷ தண்டேந தீவ்ரேண ஸசிவைஃஸஹ
> ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா ஹி ஏஷ விபீஷணஃ.

என்பது, ஸ்ரீராமா. யுத். 17 : 27.

> மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந
> தோஷோயத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாம் ஏதத் அகர்ஹிதம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 3. இது, சீராமன் கூற்று.

ஈடு :—மூன்றாம் பாட்டு. [1] மூன்று உலகங்களையும் காப்பாற்றுகின்ற இறைவன் எழுந்தருளியிருக்கின்ற திருமோகூரை, நம்முடைய எல்லாத் துக்கங்களும் கெடச் சென்று அடைவோம் என்கிறார்.

அன்றி யாம் ஒரு புகலிடம் இலம் என்று என்று அலற்றி- [2] வேறு பிரயோஜனங்களை விரும்புகின்றவர்களும் வேறு பிரயோஜனங்களை விரும்பாதவர்கள் கூறுகின்ற பாசுரத்தைச் சொல்லுவர்கள் ஆயிற்று அவன் முகங்காட்டுகைக்காக. [3] 'தேவரை ஒழிய நாங்கள் ஒரு புகல் உடையோம் அல்லோம்' என்று எப்பொழுதும் அடைவு கெடச் சொல்லிக் கூப்பிட்டு. நின்று - வேறு பிரயோஜனங்களைக் கருதாதவர்களைப் போன்று தங்கள் பிரயோஜனம் கைபுகுருமளவும் நின்று. நான்முகன் அரனொடு தேவர்கள் நாட - பிரமன், சிவன், இவர்களோடே கூடத் தேவசாதி முழுதும் வந்து [4] அடைய. வென்று இம் மூ உலகு அளித்து உழல்வான் திருமோகூர் - அவர்களுடைய பகைவர்களை வென்று, அவர்களுக்கு இடமான இம் மூஉலகங்களையும் காப்பாற்றி, அதுவே தொழிலாக இருக்குமவன் வந்து வசிக்கிற நகரமாயிற்று. இனி நாம் நன்று நணுகுதும் - அவன் எல்லாரையும் காப்பாற்றுவான் ஒருவன் ஆனபின்பு காப்பாற்றப்பட வேண்டும் என்னும் விருப்பத்தையுடைய நாம் நன்றாகக் கிட்டுவோம். [5] ஸ்ரீமதுரையிலே காலயவனன் ஜராசந்தன் முதலியோர்கள் கிட்டினாற் போலே அன்றிக்கே, [6] "நீணகர் நீள் எரி வைத்தருளாய்" என்று பிரமன் சிவன் முதலாயினோர் திருப்பாற்கடலைக் கிட்டினாற் போலும் அன்றிக்கே, வேறு ஒரு பயனையும் கருதாதவர்

1. பின் அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. வேறு பயன்களை விரும்புகிற தேவர்கள் "அன்றி யாம் ஒரு புகல் இடம் இலம்" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வேறு பிரயோஜனங்களை' என்று தொடங்கி.

3. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தேவரை' என்று தொடங்கி.

4. ஈண்டு 'அடைய' என்றது, மனத்தின் செய்கையை.

5. "நன்று" என்ற அடைமொழிக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஸ்ரீமதுரையிலே' என்று தொடங்கி.

6. "நீணகர்" என்பது, திருவிருத்தம், 92.

களாய்க் கிட்டுவோம். நமது இடர் கெட - [1] "ஆவார் ஆர் துணை" என்று இருக்கிற நம்முடைய துன்பம் கெடும்படியாக. (3)

996.

இடர்கெட எம்மைப் போந்து அளியாய் என்று என்று ஏத்திச்
சுடர்கொள் சோதியைத் தேவரும் முனிவரும் தொடரப்
படர்கொள் பாம்பணைப் பள்ளிகொள்வான் திருமோகூர்
இடர் கெட அடி பரவுதும் தொண்டீர்! வம்மினே.

பொ - ரை :—எழுந்தருளி வந்து துன்பம் எல்லாம் நீங்கும்படி எங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று ஏத்திக்கொண்டு, பேரொளியையுடைய ஒளிப்பிழம்பான திருமேனியைத் தேவர்களும் முனிவர்களும் தொடர்ந்து பற்றும் படியாக, பரப்பினைக் கொண்டிருக்கின்ற ஆதிசேஷ சயனத்திலே திருப்பாற்கடலிலே அறிதுயில் செய்கின்ற எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருமோகூரிலே சென்று, துன்பம் எல்லாம் நீங்கும்படி அவன் திருவடிகளைத் துதிப்போம்; தொண்டர்களே! வாருங்கோள் என்கிறார்.

வி - கு :—என்று என்று ஏத்தித் தொடரப் பள்ளிகொள்வான் என்க. அவன் நமக்காகத் திருமோகூரில் நிற்கின்றான் நம் இடர் கெட அவன் அடி பரவுதும் தொண்டீர் வம்மின் என்க.

ஈடு :—நாலாம் பாட்டு. [2] நம்முடைய எல்லாத் துக்கங்களும் கெட, திருமோகூரிலே வந்து சுலபனாய் நிற்கிறவனை அடைவதற்கு வாருங்கோள் என்று ஸ்ரீ வைஷ்ணவர்களை அழைக்கிறார்.

[3] 'இடர் கெடப் போந்து எம்மை அளியாய்' என்றாயிற்று, தங்களைத் தாங்களே ஈஸ்வரர்களாக மதித்துக்கொண்டிருக்கிற தேவர்களுக்கும் சாப அநுக்கிரகங்களைச் செய்யவல்ல முனிவர்களுக்கும் வார்த்தை. இடர் கெட - [4] வேதத்தைப் பறிகொடுத்

---

1. "ஆவார் ஆர்" என்பது, திருவாய். 5. 1 : 9.

2. நான்காம் அடியினைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "தேவரும் முனிவரும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி "இடர் கெட எம்மைப் போந்து அளியாய்" என்பதற்கு, ஈடுபாடு தோன்றப் பொருள் அருளிச்செய்கிறார் 'இடர் கெட' என்று தொடங்கி.

4. "இடர்" இன்னது என விவரிக்கிறார் 'வேதத்தை' என்று தொடங்கி,

தலால் உளதாய துன்பம் முதலானவைகள் போம்படியாக. எம்மை-முன் [1]"ஈஸ்வரோஹம்-நான் ஈஸ்வரன்' என்றிருந்தவர்கள், ஆபத்து மிக்கவாறே [2]"எங்களுடைய இந்தச் சரீரத்தைப் பார்த்தருள வேண்டும்" என்னுமாறு போலே தங்கள் வெறுமையை முன்னிடுவார்களத்தனை. போந்து அளியாய் - அவதரித்து வந்து காப்பாற்ற வேண்டும் என்பர்கள். என்றது, [3]முன்புஎல்லாம் விருப்பு அற்று இருந்தவர்கள், ஒன்று கெட்டவாறே படிகாப்பாரைப் பிடிக்குமாறுபோலே, நாங்கள் ஆபத்தை அடைந்தவர்களாய் வர நீ கிடக்கிறது என்? என்பர்கள் என்றபடி.

என்று என்று ஏத்தித் தொடர - தங்களுக்கு வந்த ஆபத்தாலே இடைவிடாதே புகழ்ந்து [4]வடிம்பிட்டு அடைவதற்காக. சுடர் கொள் சோதியை - [5]"ஆபத்து வந்த காலத்திலேயாகிலும் நம் பாடே வரப் பெற்றோமே!' என்று பேரொளிப் பிழம்பாக இருக்குமவனை. அன்றிக்கே, மிகச் சிறந்த அழகினையுடையவனுகையாலே அவ்அழகினை அநுபவிக்குமதுவே பிரயோஜனமாக உள்ளவனைக் கண்டீர் துக்கத்தைப் போக்குமவனாக நினைத்து என்னுதல். தேவரும் முனிவரும் தொடர - தேவர்களும் இருடிகளும். 'ஈஸ்வரோஹம்' என்று இருப்பாரும் செல்வத்தின் நிமித்தம் முயற்சி செய்கின்றவர்களும். படர் கொள் பாம்பணைப் பள்ளிகொள்வான் - [6]வேறு பிரயோசனங்களைக் கருதாதவர்களை அடிமை கொள்ளுகிறவன் கண்டீர், வேறு பிரயோசனங்களைக் கருதுகின்றவர்களுக்கு முகம் கொடுக்

---

1. "எம்மை" என்கிறவர்களுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'ஈஸ்வரோஹம்' என்று தொடங்கி.

2. ஏஹி பஸ்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம்
ஹதாநாம் ராக்ஷஸை: கோரை: பஹூநாம் பஹுதா வநே.
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 6: 16.

3. முன்னர் இவனால் ஒரு காரியம் இல்லை என்று இருந்தவர்கள், ஆபத்து வந்தவாறே, இவன் பக்கலிலே வந்து தங்கள் எளிமை தோன்ற அடையும் வகையை எடுத்துக்காட்டோடு அருளிச்செய்கிறார் 'முன்பெல்லாம்' என்று தொடங்கி. படிகாப்பார் - தலையாரிகள்.

4. வடிம்பிட்டு - நிர்ப்பந்தித்து.

5. "சுடர்கொள் சோதியை" என்பதற்கு, உபாயபரமாகவும் உபேயபரமாகவும் இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஆபத்து' என்று தொடங்கி. உபாயம் - வழி. உபேயம் - பலம்.

6. திருவனந்தாழ்வானுடைய சேர்த்தியைக் கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'வேறு பிரயோசனங்களை' என்று தொடங்கி.

கைக்காகத் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளுகிறான்! [1] தன் சேர்க்கையாலே வளரா நின்றுள்ள திருவனந்தாழ்வானாதலின் 'படர்கொள் பாம்பு' என்கிறார். தன்னுடைய சேர்க்கையாலே முற்றறிவினனை அறிவற்றவரைப் போன்று நித்திரைக்கு இடம் கொடுக்கும்படி பண்ணவல்லவன் திருவனந்தாழ்வானாதலின் '**பள்ளிகொள்வான்**' என்கிறார்.

திருமோகூர் - தேவர்கள் முதலாயினோர்கட்குச் சுலபன் ஆனாற் போலே, நமக்கும் சுலபன் ஆகைக்காகத் திருமோகூரிலே நின்றருளினான். இடர் கெட அடி பரவுதும் - நம்முடைய [2] எல்லாத் துக்கங்களும் கெடும்படியாக அவனுடைய திருவடிகளை அடைவோம். தொண்டீர் வம்மின்-நம்மோடு ஒரு குலத்தாராய் இருப்பார் அடங்கத் திரளுங்கோள். (1)

997.

தொண்டீர்! வம்மின்; நம் சுடர் ஒளி ஒரு தனி முதல்வன்,
அண்டம் மூ உலகு அளந்தவன் அணி திருமோகூர்,
எண் திசையும் ஈன் கரும்பொடு பெருஞ் செந்நெல் விளையக்
கொண்ட கோயிலை வலஞ்செய்து, இங்கு ஆடுதும் கூத்தே.

பொ - ரை :—நமக்குப் பேரொளிப் பிழம்பானவனும் ஒப்பற்ற தனித்த காரணமானவனும் அண்டத்துக்குட்பட்ட மூன்று உலகங்களையும் அளந்தவனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற, எட்டுத் திசைகளிலும் இனிய கரும்புகளோடு பெருஞ் செந்நெல்களும் விளையும்படியாகக் கொண்ட அழகிய திருமோகூரிலே உள்ள கோயிலை வலம் செய்து, இங்குக் கூத்து ஆடுதும்; தொண்டீர் வாருங்கோள்.

வி - கு :—எண் திசையும் ஈன் கரும்பொடு பெரும் செந்நெல் விளையக்கொண்ட அணி திருமோகூர் கோயிலை வலஞ்செய்து இங்குக் கூத்து ஆடுதும் தொண்டீர் வம்மின் என்க.

---

1. "படர்கொள் பாம்பு", "பள்ளிகொள்வான்" என்கையாலே ஒருவர்க்கு ஒருவர் சம்பந்தத்தால் இருவர்க்கும் வந்த வேறுபாட்டினை அருளிச்செய்கிறார் 'தன் சேர்க்கையாலே' என்றும், 'தன்னுடைய சேர்க்கையாலே' என்றும் தொடங்கி.

2. 'எல்லாத் துக்கங்களும்' என்றது, வழித்துணை இல்லை என்பது முதலான துக்கங்கள்.

ஈடு:—ஐந்தாம் பாட்டு. [1]அவன் எழுந்தருளி நிற்கின்ற திருமோகூரை அடைந்து அநுபவிக்க வாருங்கோள் என்கிறார்.

தொண்டீர் வம்மின் - பகவானிடத்தில் ஆசையுடையராயிருப்பீர் அனைவீரும் வாருங்கோள். நம் சுடர் ஒளி ஒரு தனி முதல்வன் - தனக்கு மேல் ஒன்றுஇல்லாத பேரொளிப் பிழம்பாய் மூன்றுவித காரணமும் தானேயானவன். [2]பிரமாணப் பிரசித்தியைத் திருவுள்ளம் பற்றி 'நம்' என்கிறார். அன்றிக்கே, தன் வடிவழகினையும் தமப்பனுன தன்னுடைய சம்பந்தத்தையும் நமக்கு அறிவித்தவன் என்னுதல். அண்டம் மூ உலகு அளந்தவன் - [3] அண்டத்துக்குப் புறம்பே இருக்கிறவன், மஹாபலியால் கவரப்பட்ட அண்டத்திற்குள்ளே இருக்கிற மூன்று வகைப்பட்ட உலகங்களையும் அளந்துகொண்டவன். [4]படைத்து விடுதலே அன்றி, படைக்கப்பட்ட உலகத்தை வலியுள்ளவர்கள் கவர்ந்துகொண்டால் எல்லை நடந்துகொண்டு காப்பாற்றுகின்றவன் என்பார் '**அளந்து**' என்கிறார்.

அணி திருமோகூர் - அவனுக்கு ஆபரணமான நகரம் என்னுதல். இந்த உலகத்திற்கு ஆபரணமான நகரம் என்னுதல். எண் திசையும் ஈன் கரும்பொடு பெரும் செந்நெல் விளைய - எட்டுத் திக்குக்களிலும் ஈன்ற கரும்போடே பெரும்

---

1. நான்காம் அடியினைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'பிரமாணப் பிரசித்தியை' என்றது, "தஸ்ய மத்யே வஹ்நிஸிகா அணீயோர்த்வா வ்யவஸ்திதஃ, நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா, நீவார ஶூகவத் தந்வீ பீதாபா ஸ்யாத் தநூபமா - அந்தத் துவாரத்தின் நடுவிலே பரமாத்மாவின் அப்ராக்ருதமான திருமேனியானது மெல்லியதாயும் மேல் நோக்கின பிரகாசத்தையுடையதாயும் இருக்கிறது; கரிய மேகத்தை நடுவிலுடையதான மின்னல் கொடி போன்று ஒளியுடன் கூடியதாயும் நீவாரம் என்ற நெல்லினது வால்போல் மெல்லியதாயும் உருக்கிய தங்கம் போன்ற ஒளியையுடையதாயுமிருக்கிற ஒரு சிகை இருந்தால் அது அந்தப் பரமாத்மாவின் திருமேனிக்கு ஒப்பு ஆகலாம்" என்ற பிரமாணத்தையும், (தைத்திரீய நாராயண உபநிடதம்). "ஸதேவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம்" என்ற பிரமாணத்தையும் (சாந்தோக்ய உபநிடதம்). திருவுள்ளம்பற்றி என்க. இந்த உபநிடதத்தின் பொருளை மேலே காண்க. திருவாய். 1. 5: 4.

3. "அண்டத்தில் மூஉலகு" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அண்டத்துக்கு' என்று தொடங்கி.

4. "அளந்தவன்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'படைத்து விடுதலே அன்றி' என்று தொடங்கி.

செந்நெல் விளையும்படி. கொண்ட கோயில் - திருவுள்ளத்தாலே ஏற்ற கோயில். [1] கரும்புக்கு நிழல் செய்தாற் போலே இருக்கும் செந்நெல். [2] அவனுடைய திருமுகப் பார்வையாலே ஊரும் [3]"காலம் அல்லாத காலங்களிலும் மரங்கள் பயனைக் கொடுக்கின்றன" என்கிறபடியே ஆயிற்று. வலம் செய்து - வலம் வந்து. இங்குக் கூத்து ஆடுதும் - [4]அங்குச் சென்றால் "நான் இனிய பொருள், நான் இனிய பொருள், நான் இனிய பொருள்" என்று களிக்கும் களிப்பினை இங்கே களிப்போம். (5)

998.

கூத்தன் கோவலன் குதற்று வல் அசுரர்கள் கூற்றம்
ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்
வாய்த்த தண் பணை வள வயல் சூழ் திருமோகூர்
ஆத்தன் தாமரை அடி அன்றி மற்று இலம் அரணே.

பொ - ரை :—குடக்கூத்து ஆடினவனும், கோபாலனும், துன்புறுத்துகின்ற கொடிய அசுரர்கட்கு யமன் போன்றவனும், துதிக்கின்ற நமக்கும் தேவர்கட்கும் முனிவர்கட்கும் இன்ப ரூபமாக இருப்பவனும், பொருந்திய குளிர்ந்த நீர் நிலங்களாலும் வளப்பம் பொருந்திய வயல்களாலும் சூழப்பட்டிருக்கிற திருமோகூரில் எழுந்தருளியிருக்கின்ற நம்பத்தக்கவனும் ஆன எம்பெருமானுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை அல்லாமல் பாதுகாக்கும் பொருளாக வேறு ஒன்று உடையோம் அல்லோம்.

வி - கு :—கூத்தன் - கூத்து ஆட்டுவிக்கின்றவனுமாம். கோவலன் - கோபாலன் என்னும் சொல்லின் சிதைவு. குதற்றுதல் - நெறி தவறுதல். ஆத்தன் என்பது ஆப்தன் என்ற சொல்லின் சிதைவு. நம்பத்தக்கவன் என்பது பொருள்.

---

1. "பெரும் செந்நெல்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கரும்புக்கு' என்று தொடங்கி.

2. "எண்திசையும் கரும்பொடு பெரும் செந்நெல் விளைய" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

3. "அகால பலிநோ வ்ருக்ஷாঃ ஸர்வேசஅபி மதுஸ்ரவாঃ
பவந்து மார்கே பகவந் அயோத்யாம் ப்ரதி கச்சதঃ.
என்பது, ஸ்ரீராமா. யுத். 127 : 17-18.

4. "இங்கே" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அங்குச் சென்றால்' என்று தொடங்கி.

அஹம் அந்நம் அஹம் அந்நம் அஹம் அந்நம்
அஹமந்நாதோ அஹமந்நாதோ அஹமந்நாதঃ.

என்பது, தைத்திரீய உபநிடதம்.

ஈடு:—ஆறும் பாட்டு. [1] திருமோகூரிலே நின்றருளின பரம ஆப்ததமன் திருவடிகள் அல்லது வேறு பாதுகாவல் நமக்கு இல்லை என்கிறார்.

கூத்தன் - [2] நடக்கப் புக்கால் வல்லார் ஆடினாற் போலே இருக்கை. [3] "பெருமாள் முன்னே எழுந்தருளினார்" என்கிற படியே [4] நடைச்சக்கரவத்துப் பிடிக்கலாமாய் இருக்குமாயிற்று. [5] அவன் முன்னே போகப் பின்னே போகையாவது, கூத்துக் கண்டு போகை ஆயிற்று. [6] "ஆடல் பாடல் அவை மாறினர் தாமே" என்னக்கடவதன்றோ. அவன் திருக்குழலை வாய் வைத்த போது அரம்பையர்கள் குழல் ஓசையைக் கேட்டுப் பாடுதலைத் தவிர்ந்தார்கள்; அவன் நடை அழகினைக் கண்டு ஆடுதலைத் தவிர்ந்தார்கள். கோவலன் - [7] தன்னைத் தாழ விட்டு அடியார்களைப் பாதுகாக்குமவன். [8] பிசாசத்துக்கு மோக்ஷத்தைக் கொடுத்து வழி நடத்தியவன் அன்றோ. குதற்று வல் அசுரர்கள் கூற்றம்-மிறுக்குக்களைப் பண்ணுகின்றவர்களாய், பெருமிடுக்கரான அசுரர்களுக்கு யமனாக உள்ளவன்.

---

1. நான்காம் அடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. கூத்து ஆடுகிறவனை அன்றோ 'கூத்தன்' என்பது? இவன் அப்படிக் கூத்து ஆடுகிறானோ? என்ன, 'நடக்க' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. அப்படி இருக்குமோ? என்ன, "பெருமாள்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

அக்ரதஃ ப்ரயயௌ ராமஃ ஸீதா மத்யே ஸுமத்யமா
ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிஃ லக்ஷ்மணஃ அநுஜகாம ஹ.

என்பது; ஸ்ரீராமா. ஆரண். 11: 1.

4. நடைச் சக்கரவத்துப் பிடிக்கலாம்படி - நடை அழகிற்குச் சக்கரவர்த்தி வந்தான் என்று விருது பிடிக்கலாம்படி என்றபடி.

5. இதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'அவன்முன்னே' என்று தொடங்கி.

6. 'வல்லார் ஆடினாற்போலே இருக்கும்' என்பதற்கு வேறும் ஒரு பிரமாணம் காட்டுகிறார். "ஆடல் பாடல்" என்று. இது, பெரியாழ்வார் திருமொழி, 3. 6: 4. இத் திருமொழிப் பாசுரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவன் திருக்குழலை' என்று தொடங்கி.

7. "கோவலன்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தன்னைத் தாழவிட்டு' என்று தொடங்கி.

8. வழித்துணையாகப் பற்றுமிடத்தில் கிருஷ்ணனைக் கூறியது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிசாசத்துக்கு' என்று தொடங்கி. பிசாசம் - கண்டாகர்ணன்.

ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன் - இன்று அடைகிற நமக்கும், [1] "வைகுந்தத்து அமரரும் முனிவரும்" என்கிறபடியே, எப்பொழுதும் தன்னையே அநுபவித்துக் கொண்டிருப்பவருக்கும் ஒக்க இனியன் ஆனவன். வாய்த்த தண் பணை வள வயல் சூழ் திருமோகூர் ஆத்தன் - அழகிதான நீர்நிலங்களையும் வளவிதான வயலையுமுடைய திருமோகூரிலே நின்றருளின மேலான பந்து. [2] தான் தனக்கு இல்லாத மரண சமயத்தில் [3] "என்னுடைய பக்தனை நானே நினைக்கிறேன்" என்னும் பரம ஆப்ததமன். [4] தன்னை அஞ்சினபோது அவன் பக்கலிலே பாரத்தை விட்டவனுய்ப் பாரம் இல்லாதவனும்படியான ஆப்ததமன் என்றபடி. தாமரை அடி அன்றி - [5] நம்பத் தகாதவனுக இருப்பினும் விட ஒண்ணுதாயிற்றுத் திருவடிகளில் இனிமை. மற்று இலம் அரணே - பாது காப்பவர்களாக வேறு சிலரை உடையோம் அல்லோம். என்றது, இனிமை இல்லையாகிலும் விட ஒண்ணுதபடி புறம்பு புகல் இல்லை என்கிருர் என்றபடி. (6)

ஞானக்கண் தா கனவொக்கும் பவம்துடை நஞ்சிருக்கும்
தானக்கண்டா ! கனற்சோதி ! என்றேத்தும் வன்தாலமுடன்
வானக்கண் தா கனவண்ணு என்ருேது ஒலி வந்தடையா
ஈனக்கண்டா கனற்கு ஈந்தான் பரகதி என்னப்பனே.

என்பது, திருவேங்கடத் தந்தாதி.

கண்ட கனுவின் பொருள்போல யாவும் பொய் காலனென்னும்
கண்டக னுவி கவர்வதுவே மெய் கதி நல்கெனக்
கண்டகனு இப்பொழுதே செல்கென்றருள் காரரங்கன்
கண்டகனுவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே.

என்பது, திருவரங்கத் தந்தாதி.

1. "வைகுந்தத்து" என்பது, திருவாய். 10. 9: 9.

2. "ஆத்தன்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'தான் தனக்கு' என்று தொடங்கி.

3. ததஃ தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்.

என்பது, ஸ்ரீ வராகசரமம்.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிருர் 'தன்னை அஞ்சின போது' என்று தொடங்கி.

5. "தாமரை அடி" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'நம்பத்தகாதவனுக' என்று தொடங்கி.

999.

மற்று இலம் அரண்; வான் பெரும் பாழ் தனி முதலாச்
சுற்றும் நீர் படைத்து, அதன் வழித் தொல் முனி முதலா
முற்றும் தேவரோடு உலகுசெய்வான் திருமோகூர்
சுற்றி நாம் வலம் செய்ய நம் துயர் கெடும் கடிதே.

பொ - ரை :—வலிய பெரிய ஒப்பற்றதான மூலப்பிரகிருதி முதலாகச் சுற்றிலும் உள்ள தண்ணீரையும் உண்டாக்கி, அந்த வழியாலே பழைய பிரமன் முதலாக எல்லாத் தேவசாதிகளோடு எல்லா உலகங்களையும் உண்டாக்கின இறைவன் எழுந்தருளியிருக்கின்ற திருமோகூரைச் சுற்றி நாம் வலம் செய்தால் நம்முடைய துன்பம் விரைவில் அழிந்துவிடும்; ஆதலால், பாதுகாக்கும் பொருள் வேறு ஒன்றனை உடையோம் அல்லோம் என்கிறார்.

வி - கு :—வலம் செய்யத் துயர் கடிது கெடும்; ஆதலால், மற்று அரண் இலம் என்க. வான் பெரும் தனி என்ற மூன்று சொற்களும் பாழிற்கு அடைமொழி. பாழ் - மூலப்பகுதி. தொல்முனி - பிரமன்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1]நம்மைப் பாதுகாத்தல் தனக்கே உரியதாய் எல்லா உலகங்களையும் படைக்கின்ற இறைவன் எழுந்தருளியிருக்கின்ற திருமோகூரை அடையவே, நம்முடைய துக்கங்கள் அப்போதே போம் என்கிறார்.

அரண் மற்று இலம் - வேறு ஓர் அரணை உடையோம் அல்லோம். அவன்தான் பாதுகாப்பவன் ஆகத்தக்க வல்லவனோ? என்னில், இது அன்றோ அவன்படி என்கிறது மேல்: வான்பெரும் பாழ்தனி முதலா - இவ்வருகு உண்டான காரியக் கூட்டங்கள் முழுதும் அழிந்த அன்றும் தான் அழியாமையாலே வலிதாய், அளவு இல்லாததாய், போக மோக்ஷங்களை விளைப்பதாய் ஒப்பற்றதான [2]மூலப்பகுதி தொடக்கமாக. சுற்று நீர் படைத்து - [3]"முதல் முன்னம் தண்ணீரை உண்டாக்கினர்" என்கிறபடியே, ஆவரண ஜலத்தை உண்டாக்கி. அதன் வழித் தொல் முனி முதலா - அவ்வழியாலே, தேவ

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. நித்தியமான மூலப்பகுதியைப் படைத்தல் என்றது, தமஸ் அக்ஷர அவ்யக்த ரூபமாக மாறும்படி செய்தலைக் குறித்தது.

3. "அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யம் அபாஸ்ருஜத்" என்பது, மநுஸ்மிருதி, 1 : 8.

சாதிகள் முதலானவற்றை நோக்கப் பழையனாய், மனன சீல னான பிரமன் தொடக்கமாக. முற்றும் தேவரோடு உலகு செய்வான் திருமோகூர் - எல்லாத் தேவ சாதியோடும்கூட எல்லா உலகங்களையும் உண்டாக்குமவன் வசிக்கிற திருமோ கூர். சுற்றி நாம் வலம் செய்ய - நாம் சென்று விடாதே வலம் வருதல் முதலானவைகளைச் செய்ய. நம் துயர் கடிது கெடும் - வழித்துணை இல்லை என்கிற நம் துன்பம் சடக்கெனப் போம். [1] "இந்தப் பரம்பொருளிடத்தில், பயம் இன்மைக்காக இடை விடாத நினைவின் ரூபமான தியானத்தை எவன் அடை கிறானோ அவன் பயம் அற்றவனாக ஆகின்றான்" என்னக் கடவதன்றோ. ஆனபின்பு மற்று இலம் அரண். (7)

1000.

துயர் கெடும் கடிது; அடைந்துவந்து அடியவர்! தொழுமின்;
உயர் கொள் சோலை ஒண் தடம் அணி ஒளி திருமோகூர்
பெயர்கள் ஆயிரமுடைய வல் அரக்கர் புக்கு அழுந்தத்
தயரதன் பெற்ற மரதக மணித் தடத்தினையே.

பொ - ரை :—உயர்த்தியைக் கொண்டுள்ள சோலைகளையும் அழ கிய தடாகங்களையும் உடைய அழகிய ஒளிபொருந்திய திருமோகூரிலே, ஆயிரக்கணக்கான பெயர்களையுடைய கொடிய அரக்கர்கள் புகுந்து அழுந்தும்படியாக, தசரதசக்கரவர்த்தி பெற்ற மரதகமணி போன்று நீல நிறத்தையுடைய தடாகத்தினை, அடியவர்களே! வந்து அடைந்து தொழுமின்; தொழுதால், உங்களுடைய துன்பம் எல்லாம் அதிவிரை வில் அழிந்துவிடும் என்கிறார்.

வி - கு :—அடியவர் வந்து அடைந்து மரதக மணித் தடத்தினைத் தொழுமின்; தொழுதால், துயர் கடிது கெடும் என்க. வல் அரக்கர் புக்கு அழுந்த பெற்ற மரதக மணித் தடம் என்றும், திருமோகூரிலே உள்ள மணித்தடம் என்றும் கூட்டுக.

---

1. அவனை அடைந்தால் துக்கம் போமோ? என்ன, "இந்தப் பரம் பொருள்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

யதாஹி ஏவஏஷ: ஏதஸ்மிந் அத்ருஶ்யே அநாத்ம்யே
அநிருக்தே அநிலயநே அபயம் ப்ரதிஷ்டாம்
விந்ததே, அதஸ: அபயம் கதோபவதி.

என்பது, தைத்திரீய உபநிடதம், 7.

ஈடு :—எட்டாம் பாட்டு. [1] திருமோகூரிலே நின்றருளின ஆண்பிள்ளையான தசரத சக்கரவர்த்தித் திருமகனை அடைய, நம்முடைய துக்கம் எல்லாம் போம் என்கிறார்.

துயர் கடிது கெடும் - நாம் விரும்பாதிருக்கச் செய்தே நம்முடைய துக்கங்கள் தன்னடையே சடக்கெனப் போம். அடைந்து வந்து - வந்து அடைந்து; வந்து கிட்டி. அடியவர் தொழுமின் - 'வழித்துணை இல்லை' என்று வருந்துகிற நீங்கள் அடைந்து வணங்குமின். உயர் கொள் சோலை ஒண் தடம் அணி ஒளி திருமோகூர் - உயர்ந்த சோலைகளாலும் அழகிய தடாகங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஒளியையுடைய திருமோகூர். [2] சோலையைக் கண்டால் அவன் வடிவினை நினைப்பூட்டுவதாக இருக்கும், தடாகங்களைக் கண்டால் சிரமத்தைப் போக்குகின்ற அவன் வடிவினை நினைப்பூட்டுவதாக இருக்கும். வாசத் தடம் போல் வருவான் அன்றோ அவன்தான்.

பெயர்கள் ஆயிரம் உடைய - [3] சர்வேஸ்வரன் அளித்துப் படைத்த [4]பெயர்களோபாதி போருமாயிற்று இவர்கள் பிறர்களைத் துன்புறுத்திப் பெற்ற பெயர்கள்; 'யஜ்ஞசத்ரு, பிரஹ்ம சத்ரு' என்பன போன்றனவே அன்றோ இவர்கள் பெயர்கள். வல் அரக்கர் புக்கு அழுந்த - பெரு மிடுக்கரான அசுரர்கள் புக்கு அழுந்தும்படி. தசரதன் பெற்ற மரதகமணித் தடத்தினை - சக்கரவர்த்தி பெற்ற நீலமணி போலே இருக்கிற தடாகத்தை - அடைந்து வந்து அடியவர் தொழுமின். [5] "வழியில்

---

1. முதலடியையும் நான்காம் அடியையும் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "மரதக மணித்தடம்" என்றதனைத் திருவுள்ளம் பற்றி "உயர் கொள் சோலை ஒண்தடம் அணி ஒளி திருமோகூர்" என்று விசேஷித்ததற்குக் கருத்து அருளிச் செய்கிறார் 'சோலையை' என்று தொடங்கி.

3. "பேரும் ஓராயிரம் பிற பல உடைய எம்பெருமான்" என்கிறபடியே, ஆயிரம் பெயர் உள்ளவன் அவன் அன்றோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி.

4. "களிறு பல பூட்டி என்றது, அவன் ஏறும் யானைகளை அவனை அவமதித்துச் சாட்டிற்குக் கடாவோபாதியாகப் பூட்டி என்றவாறு" பதிற்றுப் பத்து உரை. செய். 44. பெயர்களோபாதி-பெயர்களைப் போன்று என்றபடி.

5. இறைவனைத் தடாகமாக உருவகம் செய்ததற்கு இருவகையாகக் கருத்து அருளிச்செய்கிறார் "வழியில் உள்ள" என்று தொடங்கி.

"பதி தரு மரு வாபீ வாரிவத் ஸர்வபோக்யம்" என்பது பிரமாணம். மருபூமி - நீரும் நிழலும் இல்லாத இடம்; "மணி நீரும் மண்ணும்" என்னும் குறளைக் காண்க.

உள்ள மரம் என்ன, மருபூமியில் உள்ள தண்ணீர் என்ன, இவற்றைப் போன்று, எல்லாருக்கும் இனியனை" என்கிற படியே, அடியவர்கட்குப் பாதுகாவலனாய், [1]"இராமபிரானாகிற வடவாமுகாக்னியில் விழுகின்றவனான அந்த இராவணன்" என்கிறபடியே, விரும்பாத பகைவர்க்கு அழிவினைத் தரத் தக்கவனாக அன்றோ இருப்பது. [2]"என்னால் நீவிர் அநுமதிக்கப் பட்டவராய் மேலான உலகத்தை அடைவீராக" என்கிறபடியே, பறவையையும் வழி நடத்துமவன் அன்றோ. (8)

1001.

மணித் தடத்து அடி, மலர்க் கண்கள், பவளச் செவ்வாய்,
அணிக் கொள் நால் தடம் தோள் தெய்வம், அசுரரை என்றும்
துணிக்கும் வல் அரட்டன் உறை பொழில் திருமோகூர்
நணித்து; நம்முடை நல் அரண் நாம் அடைந்தனமே.

பொ - ரை :—தெளிந்த தடாகம் போன்ற திருவடிகளையும் தாமரை மலர் போன்ற திருக்கண்களையும் பவளம் போன்ற சிவந்த திருவாயினையும் அழகினைக் கொண்டுள்ள பெரிய நான்கு திருத் தோள்களையுமுடைய தெய்வமும், அசுரர்களை எக்காலத்தும் துண்டு துண்டாக வெட்டித் தள்ளுகின்ற பெருமிடுக்கனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற சோலைகள் சூழ்ந்த திருமோகூர் கிட்டிற்று ; அதனை நம்முடைய சிறந்த அரணாக நாம் அடைந்தோம் என்கிறார்.

வி - கு :—தெய்வமாகிய அரட்டன் உறை திருமோகூர் என்க. திருமோகூர் நணித்து, அதனை நம்முடை நல் அரணாக நாம் அடைந்தனம் என்க.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [3] நமக்கு அரணான திருமோகூரை நாம் அடையப் பெற்றோம் என்று தம் இலாபத்தைப் பேசுகிறார்.

---

1. ஸம்ஹாரிணா ராகவ ஸாகரேண ப்ரச்சாத்யமாநஃ தரஸா பவத்பிஃ
யுக்தஸ்து அயம் தாரயிதும் ஸமேத்ய காகுத்ஸ்த பாதாளமுகே
என்பது, ஸ்ரீராமா. யுத். 14 : 20. பதர் ஸஃ.

2. வழித்துணையாகப் பற்றுகிற இடத்தில் சக்கரவர்த்தித் திருமகனைச் சொல்லுவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் "என்னால்" என்று தொடங்கி. 'பறவை' என்றது சடாயுவை. "மயா த்வம் ஸம்அநுஜ்ஞாதஃ கச்ச லோகாந் அநுத்தமாந்" என்பது, ஸ்ரீராமா. ஆரண். 68 : 30.

3. நான்காம் அடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

[1]மணித் தடத்து அடி - தெளிந்த தடாகம் போலாயிற்றுத் திருவடிகள் இருப்பன. என்றது, சிரமத்தைப் போக்கக் கூடிய திருவடிகள் என்றபடி. மலர்க் கண்கள்-அத் தடாகம் பூத்தாற் போலே ஆயிற்றுத் திருக்கண்கள் இருப்பன. பவளம் செவ் வாய் - பவளம் போன்ற சிவந்த திரு அதரத்தையுடையனாய். அணிக் கொள் தடம் நால் தோள் தெய்வம்-தனக்குத் தானே ஆபரணமாக இருக்கும் பெரிய நான்கு திருத்தோள்களையு முடைய தெய்வம். [2]அவன் வழித் துணையாகப் போம்போது சிரமத்தைப் போக்கக்கூடிய வடிவும் தன் உகப்புத் தோற் றின புன்முறுவல் கடைக்கண் நோக்கம் முதலானவைகளையு முடையவனாய், ஒரு கல்மதிளுக்குள்ளே போமாறு போலே அச்சம் கெட்டுப் போம்படி ஆயிற்றுத் தோள் நிழலிலே ஒதுங் கினால் இருக்கும்படி. [3]வெற்றியில் விருப்பத்தோடே ஆயிற் றுப் போவது. [4]'வழியிலே எங்கே என்ன தடை வருகிறதோ?' என்று ஆசிலே வைத்த கையும் தானுமாயாயிற்றுப் போவது. அசுரரை என்றும் துணிக்கும் வல் அரட்டன் - அசுரக் கூட் டத்தை என்றும் துணிக்கும் பெருமிடுக்கன். உறை பொழில் திருமோகூர் - வசிக்கின்ற பொழிலையுடைய திருமோகூர். "சிங்கம் வசிக்கும் முழைஞ்சு" என்னுமாறுபோலே. நணித்து - கிட்டிற்று. நம்முடை நல் அரண் - நம்மைப் பாது காக்கக்கூடிய நகரத்தை. நாம் அடைந்தனம் - காப்பாற்றப் படவேண்டும் என்னும் விருப்பத்தையுடைய நாம் கிட்டப் பெற்றோம். (9)

1002.

நாம் அடைந்த நல் அரண் நமக்கு என்று, நல் அமரர்
தீமை செய்யும் வல்அசுரரை அஞ்சிச் சென்று அடைந்தால்
காம ரூபம் கொண்டு எழுந்து அளிப்பான் திருமோகூர்
நாமமே நவின்று எண்ணுமின், ஏத்துமின், நமர்காள்!

---

1. "மணி" என்பது தெளிவினைக் காட்டுகிறது.

2. வழித்துணை சொல்லுகிற இடத்தில் திவ்விய அவயவங்களைச் சொல்லுதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவன் வழித்துணை' என்று தொடங்கி.

3. "தெய்வம்" என்றது, "திவு க்ரீடா விஜிகீஷா" என்பது போன்ற தாதுவினால் கிடைத்த வெற்றியின் விருப்பத்தைச் சொல்லுகிறது என்கிறார் 'வெற்றியில்' என்று தொடங்கி.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'வழியிலே' என்று தொடங்கி. ஆசி - ஆயுதத்தின் பிடி.

பொ - ரை:—'நமக்குப் பாதுகாவலாக நாம் அடைந்த நல் அரண்' என்று சிறந்த தேவர்கள், தீங்கினைச் செய்கின்ற கொடிய அசுரர்களுக்கு அஞ்சிச் சென்று சரணம் அடைந்தால், விரும்பிய உருவத்தைக் கொண்டு புறப்பட்டு வந்து காப்பாற்றுகின்ற இறைவன் எழுந்தருளியிருக்கின்ற திருமோகூரினுடைய பெயரையே சொல்லிக்கொண்டு, நம்மவர்களே! நினையுங்கோள்; துதியுங்கோள் என்கிறார்.

வி - கு :—நல் அமரர் நமக்கு அரணாக நாம் அடைந்த நல் அரண் என்று அசுரரை அஞ்சிச் சென்று அடைந்தால் காமரூபம் கொண்டு எழுந்து அளிப்பவன் என்க. காமரூபம் - விரும்பிய உருவம். அளிப்பான் : பெயர். நமர்காள்! அங்ஙனம் அளிக்கின்றவனுடைய திருமோகூர் நாமமே நவின்று எண்ணுமின், ஏத்துமின் என்க.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1]மூவேழ் உலகையும் உலகினுள் மன்பதையும் ஆகிய எல்லாவற்றையும் காக்கின்ற இறைவன் வசிக்கிற திருமோகூரை, நமர்காள்! ஆதரித்து நினைத்து ஏத்துங்கோள் என்கிறார்.

நாம் அடைந்த நல் அரண் நமக்கு என்று-'நம்மைப் பாதுகாக்கும் பொருளாக நாம் கிட்டின நல் அரண்' என்று அந்தத் தேவர்கள் பாசுரம் இருக்கும்படி. நல் அமரர் -[2] தங்கள் ஆபத்துக்கு இவனே உபாயம் என்று அறிகையாலே '**நல் அமரர்**' என்கிறார். அசுரர்களைக் காட்டிலும் வேறுபாடு இத் துணையேயாம். தீமை செய்யும் வல் அசுரரை அஞ்சிச் சென்று அடைந்தால் - பிறரைத் துன்புறுத்துதலையே தங்களுக்குத் தொழிலாகக் கொண்ட அசுரர்களுக்கு அஞ்சி வந்து சரணம் புக்கால். காம ரூபம் கொண்டு எழுந்து அளிப்பான் திருமோகூர் - காத்தலுக்குத் தகுதியான வடிவினைக் கொண்டு புறப்பட்டுக் காப்பாற்றுகிறவன் வசிக்கிற திருமோகூர். நமர்காள் நாமமே நவின்று எண்ணுமின் ஏத்துமின் - நம்முடையவர்களே! ஊரின் பெயரை வாயாலே சொல்லி நினைத்து உவகையின் மிகுதியாலே ஏத்துங்கோள். (10)

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. தாங்களே இறைவர்கள் என்று செருக்குற்று இருக்கும் தேவர்களை "நல் அமரர்" என்றதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'தங்கள் ஆபத்துக்கு' என்று தொடங்கி.

1003.

ஏத்துமின் நமர்காள் ! என்று, தான் குடமாடு
கூத்தனைக் குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள்
வாய்த்த ஆயிரத்துள் இவை வண் திருமோகூர்க்கு
ஈத்த பத்து, இவை ஏத்த வல்லார்க்கு இடர் கெடுமே.

பொ-ரை :—நம்முடையவர்களே ! என் செயலைக் கண்டு மகிழ்ந்து ஏத்துங்கோள் என்று சொல்லி, அதற்குத் தகுதியாகக் குடக்கூத்து ஆடிய இறைவன் விஷயமாக, திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபர் அருளிச்செய்த குற்றேவல்களாய்ப் பொருந்தின ஆயிரம் திருப் பாசுரங்களுள் இப் பத்துத் திருப்பாசுரங்களும், வளவிய திருமோ கூர்க்கு அளித்தவையாகும்; இப் பத்துப் பாசுரங்களையும் கற்கவல்லவர் கட்குத் துன்பமெல்லாம் அழியும் என்கிறார்.

வி - கு :—ஏத்துமின் என்று குடம் ஆடு கூத்தன் என்க. இவை ஈத்த பத்து ஆகும்; இவை ஏத்த வல்லார்க்கு இடர் கெடும் என்க.

ஈடு :—[1]முடிவில், மேலான வண்மையையுடைய திருமோ கூர்க்குக் கொடுத்த இத் திருவாய்மொழியினைக் கற்கவல்லார்க் குத் துன்பமெல்லாம் நீங்கும் என்கிறார்.

ஏத்துமின் - நம் செயல்களை உகப்பார் எல்லாரும் கண்டு [2]வாய்படைத்த பிரயோஜனம் பெறும்படி ஏத்துங்கோள் என்று தான் சொல்லி, அதற்கு விஷயமாகத் தான் குடக் கூத்து ஆடினவனை. குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள் - ஆழ்வாருடைய குற்றேவல்கள். என்றது, [3]அவன் குடக் கூத்தினை நினைத்து இவர் நாவினாலே பாடுகிற அடிமையிலே மூண்டார் என்றபடி. வாய்த்த ஆயிரத்துள் இவை - சர்வேஸ் வரனுக்கு நேர்பட்ட ஆயிரத்துள்ளே வாய்த்தவை ஆயிற்று இவை. வண் திருமோகூர்க்கு ஈத்த பத்து - மேலான வண்

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நா என்ன நாவே !
நாராயணா ! என்னா நா என்ன நாவே !!

என்பது சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை.

3. "நமர்காள் ஏத்துமின்" என்றது, இவர்க்குப் பலித்தது என்கிறார் அவன் குடக் கூத்தினை' என்று தொடங்கி.

மையையுடைய திருமோகூர்க்குக் கொடுத்த பத்து. [1] "இந்தக் காமதேனு (பசுக்களில்) இரத்தினம் என்பது பிரசித்தம்; (தர்மசாஸ்திர விதிப்படி) இரத்தினத்திற்கு உரியவன் அரசன்" என்னுமாறு போலே, இத் திருவாய்மொழியின் இனிமையாலே திருமோகூர்க்காய் இருந்தன என்று கொடுத்தார். இவை ஏத்த வல்லார்க்கு இடர் கெடும் - இப் பத்தினைக் கற்க வல்லார்க்கு, உடலை விட்டு உயிர் நீங்குகிற காலத்தில் 'வழித்துணை இல்லை' என்று வருந்த வேண்டாதபடி காளமேகம் வழித்துணையாம். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

தாள் அடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம்
காளமேகத்தைக் கதியாக்கி — மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகில் ஏக எண்ணும் மாறன் எனக்
கேதமுள தெல்லாம் கெடும். (91)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. ஆயிரத்திலும் இந்தப் பத்தையும் கொடுப்பான் என்? என்ன, "இந்தக் காமதேனு" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

கவாம் ஶத ஸஹஸ்ரேண தீயதாம் ஶபளா மம
ரத்நம் ஹி பகவந் ஏதத் ரத்நஹாரீச பார்த்திவஃ.

என்பது, ஸ்ரீராமா. பால. 53 : 9. வசிஷ்டபகவானைப் பார்த்து விஸ்வாமித்திரர் கூறியது இது.

இரண்டாந் திருவாய்மொழி - "கெடும் இடர்"

முன்னுரை

ஈடு:—[1]"'**ஒரு நல் சுற்றம்**' என்ற திருமொழியிலே பல திருப்பதிகளையும் அருளிச்செய்த இதற்குக் கருத்து என்?" என்று **சீயர் பட்டரைக்** கேட்க, "பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்திற்குப் போம் பெண்பிள்ளைகள் பந்துக்கள் இருந்த இடம் எங்கும் கண்டு விடைக்கொண்டு போமாறு போலே, [2] அடையத் தக்க பரமபதம் அணித்தானவாறே திருப்பதிகள் தோறும் புகுகிறார்" என்று அருளிச்செய்தார். இவரும் அப்படியே திருப்புளிங்குடியிலே புகுவது, திருக்காட்கரையிலே புகுவது, திருமூழிக்களத்திலே புகுவது, திருநாவாயிலே புகுவது, திருக்கண்ணபுரத்திலே புகுவது, திருமோகூரிலே புகுவது, திருவனந்தபுரத்திலே புகுவதாகிறார். அடையத்தக்க பரமபதம் ஏறப் போவதாக ஒருப்பட்டு, நடுவிலே உண்டான தடைகளைப் போக்கி வழிகொடுபோய் விடுகைக்குக் காளமேகத்தைத் துணையாகப் பற்றினாராய் நின்றார் மேல்.

"அவ்வளவுதான் நமக்குப் போகவேண்டுமோ, இங்கே உள்ள திருவனந்தபுரமே [3] அடையத்தக்க பரமபதமாக இருக்க?" என்று திருவனந்தபுரத்தைப் பரமபதமாக அறுதியிட்டார்; அங்ஙனம் அறுதியிட்டு, [4] அந் நகரமாகிற இதுதான், வாசமே கமழும் சோலை வயல் அணி அனந்தபுரமாகையாலே,

---

1. "பண்டை நாளாலே" என்ற திருவாய்மொழி தொடங்கிப் பல காலும் திருப்பதிகளை அருளிச்செய்வான் என்? என்ன, "ஒரு நல் சுற்றம்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "ஒரு நல் சுற்றம்" என்பது, பெரிய திருமொழியிலே பத்தாம் பத்தில் முதல் திருமொழி.

2. மேல் திருவாய்மொழியோடே இத் திருவாய்மொழிக்கு இயைபு அருளிச்செய்கிறார் 'அடையத்தக்க பரமபதம்' என்று தொடங்கி.

3. இங்கே, இத் திருவாய்மொழியில் உள்ள முதல் பாசுரத்தில் "சுரும்பு அலற்றும்" என்றதற்கு எழுதிய வியாக்கியானத்தைப் பார்க்கவும்.

4. இதனைப் பரமபதமாக அறுதியிடுதற்குரிய காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அந் நகரமாகிற இதுதான்' என்று தொடங்கி.

[1]அவன் விரும்பி வசிக்கவேண்டும்படி எல்லை இல்லாத இனியதுமாய், அவன் வந்து வசிக்கையாலே சம்சார துக்கமும் தட்டாத இடமுமாய், இச் சரீர சம்பந்தம் அற்று அவ் வருகு போனால் செய்யும் அடிமையை ருசி பிறந்தபோதே இங்கே செய்யலாம் படியாய், இனித் தான் [2]"அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்கு அகப்பணி செய்வர் விண்ணோர்" என்கிறபடியே, நித்தியசூரிகளும் வந்து அடிமை செய்கிற நகரமாகையாலே [3]"அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ?" என்று ஆசைப்பட்டபடியே அவர்களோடே கூடவுமாய், அவ் வருகு போக வேண்டினாரே யாகிலும் [4]"பெரியோரை ஒரு காலும் பிரிகிலேன்" என்கிறபடியே, அவர்களோடே போகவுமாய் இருக்கும் அன்றோ.

[5]உகந்தருளின நிலங்களில் நிலைதான், முதலிலே பகவானிடத்தில் ருசியைப் பிறப்பிக்கைக்கு உடலுமாய், ருசி பிறந்தால் [6]"எவர்கள் என்னை இந்த விதமாக வணங்குகிறார்களோ அவர்களுக்கு அந்த விதமாகவே நான் அருள்செய்கிறேன்" என்கிறபடியே, சுலபனாய் இருக்கும் தன்மைக்கு எல்லை நிலமும் ஆகையாலே உபாயத்திற்கு உரிய தன்மைகளும் நிறைந்ததாய், பரமபதத்திற்குக் கொடுபோமிடத்தில், ஆதிவாஹிக கணத்தில் முதல்வனான தானே [7]"உள்ளத்திலுறையும் இறைவனால் அருளப்பட்டவனாகிறான்" என்கிறபடியே வழியில் உண்டாகும் தடைகளையும் போக்கிக் கொடுபோகைக்கும் முற்பாடனாகைக்கும் உடலாய், பிறப்பு இறப்புக்களின் தளை நீங்கி

---

1. இத் திருவாய்மொழியில் வருகின்ற "நேசம் செய்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அவன் விரும்பி' என்று தொடங்கியும், "தீரும் நோய் வினைகள் எல்லாம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'சம்சார துக்கமும்' என்று தொடங்கியும், "கடைத்தலை சீய்க்கப் பெற்றால்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'இச் சரீர சம்பந்தம்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

2. "அமரர் கோன்" என்பது, திருவாய். 10. 2: 6.

3. "அடியார்கள்" என்பது, திருவாய். 2. 3: 10.

4. "பெரியோரை" என்பது, பெரிய திருமொழி, 7. 4: 4.

5. மேலே கூறப்பட்ட தன்மைகள் எல்லாம் இங்கே கூடுமோ? என்ன, 'உகந்தருளின' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. யே யதா மாம் ப்ரபத்யந்தே தாந் ததைவ பஜாமி அஹம்
மம வர்த்ம அநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வஶ:.

என்பது, ஸ்ரீ கீதை, 4: 11.

7. "ஹார்த்த அநுக்ருஹீத: ஶதாதிகயா"

என்பது, உத்தரமீமாம்சையில் 4-வது அத்தியாயத்தில் 2-வது பாதம்.

அவ்வருகே போனால் செய்யும் அடிமையை இவ் உடலோடு கிடக்கச் செய்தே யாதாயினும் ஒரு காலத்தில் செய்கைக்கும் உடலாய் இருக்குமன்றே ஆகையாலே, கூடும் என்க.

[1] ஆக, "ருசியைப் பிறப்பிக்கைக்கும் உடலாய், ருசி பிறந்தபோதே உபாயம் ஆகைக்கும் உடலாய், ஞானத்தையும் பக்தியையும் வளர்க்கக் கூடியதுமாய், இச் சரீரத்தோடே இருக்கச்செய்தே அடிமை செய்கைக்கும் உடலாய் இருக்கை யாலே திருவனந்தபுரமே அடையத்தக்க மேலான பரமபத மாம்" என்று அறுதியிட்டபடியே, நம்மோடு சம்பந்தமுடைய வர்கள் எல்லாரும் அங்கே போய்த் திரளுங்கோள் என்கிறார்.

இதுதான் மற்றைத் திருப்பதிகளுக்கும் ஒவ்வாதோ? [2] "யாவரும் வந்து வணங்கும் பொழில் திருவாறன்விளையதனை மேவி வலம் செய்து கைதொழக் கூடும் கொல் என்னும் என் சிந்தனையே" என்பது போன்றவைகளும் உண்டே? என்னில், எல்லாவற்றுக்கும் எல்லாம் உண்டாய் இருந்தாலும் ஒவ்வோர் இடங்களிலே ஒவ்வோர் வகையான நினைவின் விசேடங்கள் ஓடினால் அவற்றுக்குச் சேர வார்த்தை சொல்லுமித்தனை.

1004.

கெடும் இடராய எல்லாம், கேசவா! என்ன; நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுக கில்லார்;
விடமுடை அரவில் பள்ளி விரும்பினான் சுரும்பு அலற்றும்
தடம் உடை வயல் அனந்தபுரநகர் புகுதும் இன்றே.

பொ - ரை :—கேசவா! என்று ஒருமுறை சொல்ல எல்லாத் துன்பங்களும் அழியும்; எப்பொழுதும் கொடிய காரியங்களையே செய்கின்ற யமதூதர்களும் அணுகமாட்டார்கள்; ஆதலால், விஷம்பொருந்திய ஆதிசேட சயனத்திலே அறிதுயில் செய்கின்ற எம்பெருமானுடைய, வண்டுகள் ஒலிக்கின்ற தடாகங்களையுடைய வயல்கள்சூழ்ந்த திருவனந்தபுரம் என்னும் நகரத்தை இன்றே அடைவோம் என்கிறார்.

வி - கு :—கேசவா! என்ன இடராய எல்லாம் கெடும் என மாறுக. பள்ளி விரும்பினனுடைய அனந்தபுரநகர் என்க. பள்ளி விரும்பினன்: பெயர். புகுதும் - புகுவோம். தமர்களும் - உம்மை: உயர்வு சிறப்பு.

1. மேலே கூறியவற்றை எல்லாம் சேர்த்துக்கொண்டு எடுத்த விஷயத்தை முடிக்கிறார் 'ஆக' என்று தொடங்கி. "நடமினோ நமர்கள் உள்ளீர்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'நம்மோடு சம்பந்தமுடையவர்கள்' என்கிறார்.

2. "யாவரும்" என்பது, திருவாய். 7. 10: 9.

ஈடு:—முதற்பாட்டு. [1] ப்ரீதியாலே திருநாமத்தைச்சொல்ல, திருவனந்தபுரத்துக்குச் செல்வதற்குத் தடையாக உள்ளவை அனைத்தும் அழியும்; அங்கே புக வாருங்கோள் என்று அநுகூலரை அழைக்கிறார்.

இடர் ஆய எல்லாம் கெடும் - இடர் என்று பேர் பெற்றவை எல்லாம் கெடும். என்றது, பார்ப்பார்த் தப்பிய கொடுமைக்குக் கழுவாயாக பன்னிரண்டு ஆண்டுகள் செய்யும் வேள்வியைச் சரித்தால் மற்றொரு பாவத்துக்கு மற்றொரு கழுவாய் செய்ய வேண்டி இருக்குமன்றோ, இங்கு அது வேண்டா; [2] "பாவங்களாகிற விறகிற்கு நெருப்புப் போன்றவர்" என்கிறபடியே, எல்லாத் துன்பங்களும் ஒரு முறையிலேயே அழியும் என்கிறார் என்றபடி. கழுவாயும் பலப்பலவாக இருக்குமோ? என்ன, கேசவா என்ன - அவன் ஒரு விரோதியைப் போக்கினபடியைச் சொல்ல, விரோதி என்று பேர் பெற்றவை எல்லாம் நசிக்கும். [3] இராவணன் ஒருவனும் தீவினை செய்ய இராக்கதச் சாதியாக அழிந்தாற் போலே. [4] "போய பிழையும் புகுதருவான் நின்றனவும்" என்கிறபடியே, அநுபவிக்கக் கடவனவும் முன்பே தொடங்கி அநுபவிக்கிறவையும் எல்லாம் நசிக்குமாதலின் 'எல்லாம்' என்கிறார். காரியத்தில் வந்தால் அதன் பயனைக் கொடுத்தே தீருமாதலின் வார்த்தை மாத்திரமே அமையும் என்பார் 'என்ன கெடும்' என்கிறார்.

இனி, கேசவா என்ன இடராய எல்லாம் கெடும் என்பதற்கு, [5] "கேஶவ: க்லேச நாஶந:" என்கிறபடியே, நீண்ட மயிர்முடியை யுடையனாய் இருக்கும் இருப்பைச் சொல்லப்

---

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "பாபேந்தநாக்நி: ஸஸதைவ நிர்மல:
மமாஸ்து மாங்கள்ய விவ்ருத்தயே ஹரி:."
என்பது, விஷ்ணுதர்மம்.

3. ஒரு விரோதியைப் போக்கினபடியைச் சொன்னால், எல்லாப் பாவங்களும் போகுமோ? என்ன, 'இராவணன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "இரக்கம் இன்றி எங்கோன் செய்த தீமை இம்மையே எமக்கு எய்திற்றுக் காணீர்" என்ற பெரியதிருமொழிப் பாசுரம் இங்கு நினைத்தல் தகும்.

4. திருப்பாவை, 5.

5. நரகே பச்யமாநஸ்து யமேந பரிபாஷித:
கிம் த்வயா நார்ச்சிதோ தேவ: கேஶவ: க்லேஶ நாஶந:,
என்பது மஹாபாரதம்.

பிறவியாலாய துன்பங்கள் அனைத்தும் போம் என்றும், [1]பிரமனுக்கும் சிவனுக்கும் தலைவனே என்னப் பிறவியாலாய துன்பங்கள் அனைத்தும் போம் என்றும் பொருள் கூறலுமாம். ஆயினும், சொல்லிப் போருமது முன்னர்க் கூறிய பொருளே.

நாளும் கொடு வினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுக கில்லார் - நாள்தோறும் கொடிய செயலைச் செய்யக்கூடிய யமனுடைய தூதுவர்களும் வந்து கிட்டப் பெறூர்கள். யமனுடைய தூதுவர்கள் என்று, சர்வேஸ்வரன் உடையார் பக்கலிலே வந்து கிட்டவோ என்பார் 'தமர்களும்' என்கிறூர். [2]"ஸ்வபுருஷம்" என்று தொடங்கும் சுலோகத்தைக் காண்க. [3]"அளவற்ற ஆற்றலையுடைய அந்த யஜ்ஞ வராகப் பெருமானை எவர்கள் வணங்குகின்றூர்களோ அவர்களை நான் பலமுறை வணங்குகிறேன்" என்ற இடத்திலே "எவர்கள் வணங்குகின்றூர்களோ அவர்களை நான் வணங்குகிறேன்" என்பதே அன்றே அக் கூற்றுவன் வார்த்தையும் என்றது, [4]"இறைஞ்சியும் சாதுவராய்ப் போதுமின்கள் என்றூன்" என்கிறபடியே, அவர்களைக் கண்டால் 'நாம் கடவோம் அல்லோம்' என்று போராதே, அவர்களை அணுகி வணக்கத்தைச் செய்துவிட்டுச் செல்லுங்கோள் என்கிறுன் என்றபடி.

"ஸ்வபுருஷம்"என்னும் சுலோகத்தில் [5]யமன், தன் பரிகரம் கையும் பாசமும் சூலமும் நாயுமுமாய்ப் போருகிற படியைப் பார்த்துப் பாகவதர்களும் அல்லாதாரும் கலந்திருப்பர்கள்;

---

1. கஇதி ப்ரஹ்மணோநாம ஈஶோஹம் ஸர்வதேஹிநாம்
ஆவாம் தவ அங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேஶவ நாமவாந்.
என்பது பிரமாணம்.

2. கிட்டமாட்டாமைக்கு வடமொழி தென்மொழிகளிலிருந்து பல பிரமாணங்கள் காட்டுகிறூர் "ஸ்வபுருஷம்" என்று தொடங்கி.
ஸ்வபுருஷம் அபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம் வததி யமः கில தஸ்ய கர்ணமூலே
பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந், ப்ரபுः அஹம்அந்யந்ருணாம் ந
என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 3. 7 : 13. வைஷ்ணவாநாம்.

3. தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோः அமித தேஜஸः
ப்ரணமம் யேபி குர்வந்தி தேஷாமபி நமோநமः.
என்பது ஸ்ரீ விஷ்ணு தர்மம்.

4. "இறைஞ்சியும்" என்பது, நான்முகன் திருவந்தாதி, 68.

5. "ஸ்வபுருஷம்" என்று மேலே காட்டிய சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அச் சுலோகத்திலே உள்ள "பாஶ ஹஸ்தம்" என்றதனைக் கடாக்ஷித்துச் சுலோகத்திற்கு அவதாரிகை அருளிச்செய்கிறூர் 'யமன்' என்று தொடங்கி.

பாகவதர்கள் முன்னே இவன் கிட்டில் செய்வது என்? என்று பயந்து சொல்லுகிறான். "ஸ்வபுருஷம் - தனக்கு அந்தரங்கனாய் இருக்கையாலே, தன் மேன்மை சொல்லவேண்டும் இடத்திலே தாழ்வு சொல்லுகிறனாயிற்றுத் தவிர ஒண்ணாமையாலே. அபிவீக்ஷ்ய - [1]இவன் தான் நாலிரண்டு ஓலை மறுக்கத் தரமுடையனாய்இருக்குமாயிற்று; சொல் செல்லுகைக்காக இப்படி இருக்கிறவனைப் பார்க்கிற பார்வையிலே காரியத்தின் கௌரவமெல்லாம் தோற்றும்படி பார்த்தான் ஆயிற்று. மதுஸூதந ப்ரபந்நாந் - 'இவர்களை நலிந்தால் அவனுக்கு என்?' என்ன, இவர்கள் அவன் பக்கலிலே பாரங்களை எல்லாம் போட்டவர்களாய் இருப்பர்கள்; இவர்களுக்கு வந்தது ஒன்றுக்கு [2]அவன் மார்வு தட்டிக்கொண்டு வரும். நன்று; [3]உனக்கு உடையோமாய்ப் போகிற நாங்கள் வேறு சிலர்க்கு அஞ்ச வேண்டும்படி இருந்ததாகில், நீ பின்னை யாராய் இவ் இருப்பு இருந்து ஏவுகிறது? என்ன, ப்ரபு: அஹம் அந்யந்ருணாம் - எனக்கு அடைத்த விஷயத்தில் என் சொல் செல்லாதாகில் அன்றோ எனக்குக் குறையாவது? நாம் கடவோம் அல்லாதவர்களிடத்திலே நாம் ஆராயாநிற்கவோ!" என்றான். இது தன்னைத் திருமழிசைப் பிரானும் அருளிச்செய்தாரே அன்றோ, "திறம்பேன்மின் கண்டீர் திருவடி தன் நாமம், மறந்தும் புறம் தொழா மாந்தர் - இறைஞ்சியும், சாதுவராய்ப் போதுமின்கள் என்றான் நமனும் தன், தூதுவரைக் கூவிச் செவிக்கு" என்று.

[4]"அவன் தமர் எவ் வினையராகிலும் எம் கோன், அவன் தமரே என்று ஒழிவது அல்லால், நமன் தமரால், ஆராயப்பட்டு அறியார் கண்டீர் அரவணைமேல், பேராயற்கு ஆட்பட்டார் பேர்" என்று அவர் தங்களிலே சொல்லியிருக்கும் வார்த்தை அன்றோ இது. [5]"மாறு செய்த வாள் அரக்கன் நாள் உலப்ப அன்று இலங்கை, நீறு செய்து சென்று கொன்று வென்றி

1. "அபி, வி" என்ற உபசர்க்கத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவன்தான்' என்று தொடங்கி.

2. 'அவன் மார்வு தட்டிக்கொண்டு வரும்' என்றது, "மோக்ஷயிஷ்யாமி - விடுவிக்கிறேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

3. "ப்ரபுః அஹம் அந்யந்ருணாம்" என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'உனக்கு உடையோமாய்' என்று தொடங்கி.

4. "அவன்தமர்" என்பது, முதல் திருஅந்தாதி, 55.

5. "மாறு செய்த" என்பது, திருச்சந்த விருத்தம், 116. இதற்குக் கருத்து, 'சக்கரவர்த்தித் திருமகனார்' என்று தொடங்கும் வாக்கியம்,

கொண்ட வீரனுர், வேறு செய்து தம்முள் என்னை வைத்திடாமையால் நமன், கூறு செய்து கொண்டு இறந்த குற்றம் எண்ண வல்லனே" என்கிறபடியே, சக்கரவர்த்தித் திருமகனுர் பெயரை இவன் ஆராயவோ? என்க.

[1] ஒரு திருவேட்டையிலே, பட்டர் திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாக இருக்க, 'மாலைப்பொழுது ஆயிற்று' என்று சிலர் விண்ணப்பம் செய்ய, "நாம் பெருமாள் அழகிலே துவக்குண்டு இன்று ஒருநாளும் செய்யவேண்டிய காரியத்திலே சிறிது தாழ நின்றேம் என்றுல் இது குற்றமாக யமன் கேட்கவோ? [2] ஓர் அரசன் இருந்து நாட்டுக் கணக்குக் கேட்டுக் கொடு வாராநின்றுல் அரசனுக்கு அந்தரங்கனுப் இருப்பான் ஒருவன் பெயரை வாசித்தால் 'ஓம்காண்! அது கிடக்க: மேற் செல்' என்றுல் பின்னை ஒரு நாளும் அப் பெயரை எடுத்து வாசிக்கப் பெறுன்காண்" என்றுராம். [3] இந்த விஷயத்திலே, [4]"உனக்கு ஆகித் தொண்டு பட்ட நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ" என்று அருளிச்செய்தார்.

[5]"வள்ளலே உன் தமர்க்கு என்றும் நமன் தமர் கள்ளர் போல்" என்கிறபடியே, இருவர் ஒரு வழிப் போகப் பெறுர்கள். [6]"கொடுமை செய்யும் கூற்றமும் என் கோலாடி குறுகப் பெறு" என்றுர் பட்டர்பிரான். விழுக்காடு அறியாதே வந்து கிட்டில் செய்வது என்? என்னில், "தடவரைத் தோள் சக்ர

---

1. யமனுடைய துன்பத்துக்கு அஞ்சவேண்டா என்னுமதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறுர் 'ஒரு திருவேட்டையிலே' என்று தொடங்கி.

2. நன்று; ஈஶ்வரனுடைய ஆணையை மறுத்தால் தண்டிக்காது இருக்கலாமோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறுர் 'ஓர் அரசன்' என்று தொடங்கி.

3. ஆயின், ஆணையை மறுத்தாலும் அஞ்சவேண்டாவே? எனின், 'இந்த விஷயத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர். 'இந்த விஷயத்திலே' என்றது, அந்தரங்கனுயிருப்பான் ஒருவன் என்ற இவ் விஷயத்திலே என்றபடி.

4. "உனக்காகி" என்பது, பெரிய திருமொழி, 6. 3 : 9.

5. யமனுடைய துன்பத்துக்கு அஞ்ச வேண்டாம் என்பதற்கு, மேலும் பிரமாணங்கள் காட்டுகிறுர் "வள்ளலே" என்று தொடங்கி. "வள்ளலே" என்பது, பெரியதிருமொழி, 8. 10 : 7. "கள்ளர்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர் 'இருவர்' என்று தொடங்கி.

6. "கொடுமை செய்யும்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 5. 4 : 4.

பாணீ சார்ங்க விற் சேவகனே!" என்கிறபடியே, திருவாழி இட்டுத் தோளைக் கழித்தல், ஓர் அம்பாலே தலையை உருட்டுதல் செய்யுமத்தனை.[1] வாணன்பட்டது படுதல், இராவணன் பட்டது படுதல் செய்யுமத்தனை. [2]"வேண்டாமை நமன் தமர் என் தமரை வினவப் பெறுவார் அலர் என்று உலகு ஏழ் ஆண்டான்" என்கிறபடியே, யம தூதுவர்கள் நம்முடையாரை வினவப் பெறார்கள். அதற்கு அடி என்? 'வேண்டாமை'-ஊர்க் கணக்கனோ கோயிற் கட்டணத்திலே புக்குப் படுக்கைப் பற்று ஆராய்வான்? [3]"செய்தாரேல் நன்று செய்தார்" என்கிறவன், இவர்கள் கையில் காட்டிக் கொடானே. [4]"நின் நாமம் கற்ற ஆவலிப்புடைமை, நமன் தமர் தலைகள் மீதே நாவல் இட்டு உழிதருகின்றோம்" என்பது திருமாலை.

[5]'உலக குருவான பகவானுக்கு நான் அடங்கினவனாக இருக்கிறேன், நான் சுவதந்திரன் அல்லன், என்னைத் தண்டிப்பதற்கும் விஷ்ணுவிற்கு ஆற்றல் உண்டு" என்கிறபடியே, உங்களை நியமிக்கப் போந்த என்னைப்போல் அல்லன்காண் என்னை நியமிக்குமவன்; இவ் ஓலக்கத்திலே வந்தால் அன்றோ நான் ஆராய்வது? அவன் எங்கும் உள்ளவன் அன்றோ.

நாளும் கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார் - பழையதாக நலிந்து போந்த வாசனை கொண்டு, பகவத் விஷயத்தில் [6]முதலடி இட்ட இன்றும் கிட்டவோ?

---

1. அதனை விவரணம் செய்கிறார் 'வாணன் பட்டது' என்று தொடங்கி.

2. "வேண்டாமை" என்பது, பெரியதிருமொழி, 10. 6 : 5. கோயில் கட்டணம் - அந்தப்புரம். படுக்கைப்பற்று - பெண்கள் இருக்குமிடம்.

3. அவன்தான் காட்டிக் கொடுத்தாலோ? எனின், "செய்தாரேல்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "செய்தாரேல்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 4. 9 : 2.

4. "நின் நாமம் கற்ற" என்பது திருமாலை, 1.

5. அஹம் அமரவரார்ச்சிதேந தாத்ரா
யமஇதி லோக ஹிதா ஹிதே நியுக்தஃ
ஹரிகுரு வஶகஃ அஸ்மி ந ஸ்வதந்த்ரஃ
ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணுஃ.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 3. 7 : 14.

சுலோகத்திலே உள்ள "விஷ்ணுஃ" என்ற பதத்தைத் திருவுள்ளம்பற்றிப் பொருள் அருளிச்செய்கிறார் 'உங்களை' என்று தொடங்கி.

6. "கேசவா" என்றது, வார்த்தை மாத்திரம் ஆகையாலே 'முதலடி இட்ட இன்றும்' என்கிறார்.

[1]"நிர்த்தோஷம் வித்தி-சாவது பிறப்பதாய்ப் போந்தவனுவது, கழுவாய் இல்லாத தீவினைகளை உடையவன் ஆவது; ஆனாலும், அவனைக் குற்றம் அற்றவன் ஆகவே புத்தி பண்ணவேண்டும். குற்றங்கள் இருக்க இப்படி நினைக்க வேண்டுவான் என்? என்ன, ப்ரபாவாத் - இவனையோ பார்ப்பது? இவன் பற்றின வனைப் பார்க்க வேண்டாவோ? இவனை ஆராய்கையாவது, பகவானுடைய பெருமையை அளவிட்டு அறிதலாம் அன்றோ." கில்லார் -[2] எரிகிற நெருப்பிலே கிட்டுவார் உளரோ? என்றது, ஏவுகின்ற தலைவனுடைய ஏவலை மேற்கொண்டு கிட்டாமை அன்று; தந் தாமை வேண்டாதார் உளரோ? என்றபடி.

மேலே, பெறக்கூடிய பேற்றினைச் சொல்லுகிறார்: விடம் உடை - [3]செந்தெங்கிற்கு முள் கட்டினாற் போலே ஒருவர்க்கும் முகம் கொள்ளாதிருக்கை; [4]"வாய்ந்த மதுகைடபரும் வயிறு உருகி மாண்டார்" என்கிறபடியே, பகைவர்களாகக் கிட்டினாரும் முடிந்து போம்படியாக இருக்கும். அரவு - சாதிக்கு உரியதான மென்மை நாற்றம் குளிர்த்தி என்னும் இவற்றை உடைத்தாய் இருக்கும். பள்ளி விரும்பினான் - [5] பரியங்க வித்யையிற் சொல்லுகிறபடியே ஆயிற்று அங்குக் கண் வளர்ந்

---

1. கிட்டாமைக்கு அடி ஏது? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் "நிர்த்தோஷம்" என்று தொடங்கி.

துராசாரோபி ஸர்வாஸீ க்ருதக்னோ நாஸ்திக: புரா
ஸமாஸ்ரயேத் ஆதிதேவம் ஸ்ரத்தயா ஸரணம்யதி
நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந:.

என்பது, பாரதம்.

இச் சுலோகத்திலே உள்ள "ஜந்தும்" என்பதனையும், "துராசாரோபி" என்பதனையும் திருவுள்ளம்பற்றி "நிர்தோஷம்வித்தி" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'சாவது' என்று தொடங்கி.

2. குறுகார் என்னாதே "குறுககில்லார்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'எரிகிற' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'ஏவுகின்ற' என்று தொடங்கி.

3. செந்தெங்கு - செவ்விளநீர்.

4. ஒருவரும் பார்க்க ஒண்ணாமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் "வாய்ந்த" என்று தொடங்கி. இது, மூன்றாம் திருஅந்தாதி, 66.

5. பரியங்க வித்தை இன்னது என்பதனை "அணைவது அரவணை" என்ற திருவாய்மொழியின் வியாக்கியானத்தில் கண்டு கொள்வது.

தருளுகிறது. [1]"அவனை இப்படி அறிந்தவன் தனது காலால் அவனுடைய படுக்கையில் ஏறுகிறான்" என்கிறபடியே, துகைத்து ஏறலாம்படியாய் ஆயிற்று இருப்பது. சுரும்பு அலற்றும்-[2]"இந்த விதமான சாமத்தைப் பாடிக்கொண்டிருக்கின்றான்" என்று சொல்லுகிறபடியே, முத்தர்கள் செய்யுமவற்றை வண்டுகள் செய்யாநிற்கும். தடம் உடை வயல் - விரஜைக்கும் ஏனையவற்றிற்கும் போலியாக இருக்குமாயிற்றுத் தடாகங்கள். அனந்தபுரநகர் - கலங்காப் பெருநகரத்துக்குப் போலியாக இருக்கும். புகுதும் இன்றே-'கிரமத்திலே புகுகிறோம்' என்று ஆறி இருக்குமது அன்று; இச்சை பிறந்த இன்றே போய்ப் புகுவோம். (1)

1005.

இன்று போய்ப் புகுதிராகில், எழுமையும் ஏதம் சாரா:
குன்று நேர் மாடம் மாடே குருந்து சேர் செருந்தி புன்னை
மன்று அலர் பொழில் அனந்தபுரநகர் மாயன் நாமம்
ஒன்றும் ஓர் ஆயிரம் ஆம் உள்ளுவார்க்கு உம்பர் ஊரே.

பொ - ரை:—இன்றே சென்று சேருதிராகில், எப்பொழுதும் ஒரு துன்பமும் உங்களை வந்து அடைய மாட்டாது; மலைகளை ஒத்த மாளிகைகளின் பக்கங்களில் குருந்த மரங்களும் சேர்ந்திருக்கின்ற செருந்தி மரங்களும் புன்னை மரங்களும் வாசனையோடு மலர்கின்ற சோலைகள் சூழ்ந்த திருவனந்தபுரம் என்னும் திவ்ய தேசத்திலே எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய திருப் பெயர்கள் ஒவ்வொன்றுமே ஆயிரம் திருப் பெயர்கள் கொடுக்கின்ற பலனைக் கொடுப்பனவாம்; ஆதலால், இத் தன்மையினை நினைப்பவர்கட்குக் கிடைப்பது பரமபதமேயாம் என்றவாறு.

வி - கு:—மாடு - பக்கம். குருந்து, செருந்தி, புன்னை என்பன, மர விசேடங்கள். மன்று - மன்றல் என்ற சொல்லின் விகாரம். பொது இடமுமாம்.

---

1. திருக்கண்வளர்வதற்குப் பிரயோஜனம் அருளிச்செய்கிறார் 'அவனை இப்படி அறிந்தவன்' என்று தொடங்கி.

"பாதேந அத்யாரோஹதி"

என்பது, உபநிடதம்.

2. "ஏதத் ஸாம காயந் ஆஸ்தே"

என்பது, தைத்திரீய உபநிடதம்.

ஈடு :—இரண்டாம் பாட்டு [1] தீவினைகள் போகைக்குச் சொன்ன திருப் பெயர்தானே ஆயிரம் வகைகளாலே பாது காவலாக இருக்கும் என்கிறார்.

இன்று போய்ப் புகுதிராகில் - போவோம் என்று இச்சை பிறந்த இன்றே சென்று சேர்வீர்கோளேயாகில். அதிகாரி ஆதற்கு, மற்றைய விஷயங்களில் வைராக்கியம் தொடக்க மானவை வேண்டாவோ? இச்சை மாத்திரம் போதியதாமோ? என்னில், [2] "என்று வைராக்கியம் உள்ளவனாக ஆகிறானோ அன்றே துறவறத்தை மேற்கொள்ளவேண்டும்" என்கிற படியே, அவை வேண்டுவன, ஒரு சிலர் மேற்கொள்ளக் கூடிய வையான விஷயங்களுக்கு; எல்லாரும் மேற்கொள்ளக் கூடிய தாய்ச் சம்பந்தமுள்ளதுமாய் முன்பே இவனை விரும்பி இவனது விருப்பத்தைப்பார்த்திருக்கும் விஷயத்துக்கு விருப்ப மாத்திரமே வேண்டுவது; விஷயத்துக்குத் தகுதியாக அதிகாரி யாகும் தன்மையை இவனால் சம்பாதிக்க முடியாமையாலும் [3] ஆள்பார்த்து உழிதருமவனாகையாலும் வேண்டா. [4] "அல்லது இராவணன் தானே யாகிலும்" என்னுமவன் அன்றோ; என்றது, விபீஷணன் என்று பெயராய், இராவணனாய் இருந் தான் என்று மீளாதேயுங்கோள் என்றான் என்றபடி.

[5] அது என்? அங்கு நின்றும் வந்தான் ஒருவனைக் கைக் கொண்டதாக அமையாதோ என்ன வேண்டா: குறை வாளர்க்கு அன்றோ நம்மால் காரியம் உள்ளது; அது உள்ளது,

---

1. நான்காம் அடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய் கிறார். 'சொன்ன திருப்பெயர்' என்றது, மேல் திருப்பாசுரத்திலே "கேசவா என்ன" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. "யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" என்பது, ஜாபாலி ஸ்மிருதி.

3. நான்முகன் திருஅந்தாதி, 60.

4. இவனுடைய இச்சையை அவன் எதிர்பார்த்திருப்பவனோ? என்ன, 'அல்லது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

ஆநய ஏநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தம் அஸ்ய அபயம் மயா
விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவண: ஸ்வயம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 34. "யதிவா" என்றதற்குப் பொருள் அருளிச் செய்கிறார் 'விபீஷணன்' என்று தொடங்கி. 'பெயராய்' என்றது, பெயரை வைத்துக் கொண்டவனாய் என்றபடி.

5. சுலோகத்திலே உள்ள "ஸ்வயம்" என்றதற்குக் கருத்து அருளிச் செய்கிறார் 'அது என்?' என்று தொடங்கி. 'அது' என்றது, குறையை,

இராவணனுக்கே அன்றோ. [1] "விபீஷணன் தர்மாத்மா" என்கிறபடியே, தனக்கு என்ன ஒரு கைம்முதலும் உள்ளவனுகையாலே நாளை வரவும் ஆம்: அரைக்கணம் கிட்டாவிடில் நாசமாக இருக்கிறது அந்த இராவணனுக்கே அன்றோ? ஆன பின்பு, அவனை அன்றோ முற்படக் கைக்கொள்ளவேண்டுவது? [2] இனித் தான் இவனைக் கைக் கொண்டால், இவனும் இவன் தன்னேடே வந்த நால்வரும் ஆகப் போம்; இராவணனைக் கைக் கொண்டால், துறுப்புக் கூடாகக் கைக் கொண்டதாகலாம்; மஹாராஜர் ஒருவரையும் அங்கீகரிக்க வானரசாதியாக வாழ்ந்து போனுற் போலே.

எழுமையும் ஏதம் சாரா-ஒரு காலமும் பொல்லாங்கு வந்து கிட்டாது. சாரா என்றதனுல் [3] அதற்கு அவன்தானும் நினைப்பிடவும் வேண்டா என்றபடி. "சும்மெனுதே கைவிட்டு ஓடித் தூறுகள் பாய்ந்தனவே" என்கிறபடியே, 'நாம் இவ்விடத்தில் இருப்பதற்கு உரியோம் அல்லோம்' என்று தன்னடையே வந்து கிட்டாது; [4] இராஜ குல சம்பந்தத்தாலே விட்டு ஓடிப் போம்; [5] "வானே மறிகடலோ மாருதமோ தீயகமோ, கானே ஒருங்கிற்றும் கண்டிலமால் - ஆன் ஈன்ற, கன்று உயரத் தாம் எறிந்து காய் உதிர்த்தார் தாள் பணிந்தோம், வன் துயரை ஆ ஆ! மருங்கு" என்ற திருப்பாசுரம் நினைவு கூர்க.

---

1. ஆனுல், விபீஷணன் குறைவாளன் அல்லனே? என்ன, 'விபீஷணன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

"விபீஷணஸ்து தர்மாத்மா நதுராக்ஷஸ சேஷ்டிதః"

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 17 : 24.

2. இராவணனையே கைக்கொள்ள வேண்டும் என்பதற்கு மேலும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிருர் 'இனித் தான்' என்று தொடங்கி. துறுப்புக்கூடு - அற்றுப் பொலி.

3. ஏதத்தைப் போக்கும் என்னுதே "ஏதம் சாரா" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'அதற்கு அவன் தானும்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிருர் "சும்மெனுதே" என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி, 5. 4: 3.

4. மூச்சு விடாதே போகைக்குக் காரணத்தை அருளிச்செய்கிருர் 'இராஜ குல சம்பந்தத்தாலே' என்று தொடங்கி.

5. அப்படிப் போவதற்குப் பிரமாணம் காட்டுகிருர் "வானே" என்று தொடங்கி. இது, பெரிய திருவந்தாதி, 54.

குன்று நேர் மாடம் மாடே குருந்து சேர் செருந்தி புன்னை-[1]ஏதம் சார்ந்தாலும் சென்று சேர வேண்டும்படி காணும் ஊரின் செல்வமும் இனிமையும். மலைகளைப் புடைபடத் தொளைத்து நெருங்க வைத்தாற்போலே இருக்கிற மாடங்களும், அதன் அருகே அம் மாடங்களுக்கு நிழல் செய்தாற் போலே இருக்கிற குருந்து, அதனோடே சேர்ந்த செருந்தி, புன்னை. அன்றிக்கே, சேர் என்பதற்கு, அம் மரங்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்கின்ற என்று பொருள் கூறலுமாம். மன்று அலர் பொழில்-[2] ஊர்ச் சுற்றிலே அலர்ந்து கிடக்கும் ஆயிற்றுப் பொழில்கள். அன்றிக்கே, மன்று என்று மன்றலாய், அலர்தல் என்று பரம்புகையாய், வாசனை பரம்பாநின்றுள்ள சோலை என்னுதலுமாம். இப் பொருளில் மன்றல் என்னும் சொல் மன்று என்று விகாரப்பட்டுக் கிடக்கின்றது.

குன்று நேர் மாடம்-[3] '**பிள்ளை திருநறையூர் அரையரும்** பட்டரும் உள்ளே புக்கு வலம் வாரா நிற்க நான் சேவித்துப் போனேன்: அல்லாதார் எல்லாரும் விரைந்து சடக்கென வாராநிற்க, இவர்கள் திருமாளிகைகளையும் திருக் கோபுரங்களையும் கண்களாலே பருகுவாரைப் போலே பார்த்துக் கொண்டு வருகிறபடியைக் கண்டு, அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்கச் செய்தே இவர்களான வாசி இருந்தபடி என்? என்று இருந்தேன்' என்று அருளிச்செய்வர்.

[4] இனி, சேர் செருந்தி என்பதற்கு, மரங்கள் ஒன்றோடு ஒன்று ஒத்து இருக்கின்ற என்னுதலுமாம். "இராகவனுக்கு ஒத்தவள் சீதாபிராட்டி" என்னுமாறு போலே ஆயிற்று

1. "ஏதம் சாரா" என்றதன்பின் "குன்று நேர் மாடம்" என்று தொடங்கிக் கூறுவதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஏதம் சார்ந்தாலும்' என்று தொடங்கி. "குன்று நேர் மாடம்" என்கையாலே, செல்வம் போதரும்; "குருந்து சேர் புன்னை" என்கையாலே, இனிமை பெறுதும்.

2. மன்றம் - நாற்சந்தி. அதனையே ஊர்ச்சுற்றிலே என்கிறார்.

3. இங்ஙனம் வருணிப்பதற்கு இவை இனிமையாக இருக்குமோ? என்ன, இருக்கும் என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'பிள்ளை திருநறையூர் அரையரும்' என்று தொடங்கி. 'அருளிச்செய்வர்' என்றது, நஞ்சீயரை.

4. "சேர் செருந்தி" என்பதற்கு, மூன்றாவதாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'இனி' என்று தொடங்கி.

துல்யஸீல வயோ வ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணம்
ராகவஃ அர்ஹதி வைதேஹீம் தம் ச இயம் அஸிதேக்ஷணா.

என்பது, ஸ்ரீராமா. சுந். 16 : 5.

என்றபடி. [1]மேல் நித்திய சூரிகளைச் சொல்லக்கடவதாக இருக்க, இங்கே தாவரங்களைச் சொல்லுகிறது என்? என்ன, உகந்தருளின நிலங்களில் மேன்மக்களோடு தாவரங்களோடு வாசி இல்லை என்று இருக்கும் உத்தேசிய புத்தியாலே: [2]நித்தியசூரிகளுக்கு ஆனால் அவ்வருகே போக நினைவு உண்டாகைக்குத் தகுதி உண்டு: நினையார்களித்தனை: ஞானத்தின் காரியமான அன்பின் மிகுதியாலே: நினைக்கைக்கும் தகுதி உண்டே அன்றோ; வேறு ஓரிடத்தில் போக நினைக்கைக்குத் தகுதி இல்லை அன்றோ இவற்றுக்கு. [3]**பிள்ளை ஜநநாதப் பிரஹ்மராயர்** திருமுடிக் குறையிலே மரம் வெட்டுவியாநிற்க, **எம்பார்** அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. **ஆச்சான் திருவாலி நாடு தாசர்** [4]சுரவன் பாக்குகள் நல்லன சிலவற்றைப் **பட்டருக்குக்** கொடுவந்து கொடுக்க, அவற்றைக் கண்டு 'இவை இருந்தபடி என்? திருவருள் கமுகினின்றும் வந்தவையோ?' என்று அருளிச்செய்தாராம். நீராலே வளர்ந்தவை அன்றே, அவனுடைய திருவருட் பார்வையாலே வளர்ந்தவை அன்றோ.

அனந்தபுரநகர் மாயன் - ஸ்ரீ வைகுண்டத்தை விட்டுத் 'தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கலாம்' என்னுமதனாலே திருவனந்தபுரத்தை விடமாட்டாதே நிற்கிற சீல குணத்தின் மிகுதியைச் சொல்லுகிறது. நாமம் ஒன்றும் ஓர் ஆயிரம் ஆம் - ஒரு திருப் பெயர் தானே விரோதிகளைப் போக்கிக் காப்பாற்றும் என்னுமிடம் [5]சொல்லிற்றே அன்றோ. அப்படியே ஆயிரம்படி பாதுகாவலாக இருக்கிற ஆயிரம் திருப்பெயர்களை யுடையவன். உள்ளுவார்க்கு-உத்தேசியமான பொருள் குறைவற்று

---

1. மேல் அடிகளாலே பொழிலை வருணித்ததற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'மேல் நித்தியசூரிகளை' என்று தொடங்கி. 'நித்திய சூரிகளை' என்றது, "விண்ணோர்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. ஆனாலும், மேம்பட்டவர்களான நித்திய சூரிகளைப் போன்று இவையும் உத்தேசியமாமோ? என்ன, 'நித்திய சூரிகளுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. திவ்விய தேசங்களில் உள்ளவை பகவானுடைய கடாக்ஷத்திற்கு உரியவை யாகையாலே உத்தேசியம் என்னுமதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'பிள்ளை ஜநநாதப் பிரஹ்மராயர்' என்று தொடங்கி. அருளிச்செய்த வார்த்தையை "மானேய் நோக்கு" என்ற திருவாய்மொழியின் வியாக்கியானத்திலே காண்க. (5: 9. 1.)

4. சுரவன்பாக்கு - உயர்ந்த பாக்கு. "திருவருள் கமுகு" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நீராலே' என்று தொடங்கி.

5. 'சொல்லிற்றே அன்றோ' என்றது, முதற் பாசுரத்திலே சொல்லிற்றே என்றபடி.

இருந்தது, இனி, நினைப்பாரே அன்றோ தேட்டம். உள்ளுவார்க்கு-[1]ஸ்ரீ வைகுண்டத்திலே நித்தியசூரிகள் ஓலக்கம் கொடுக்க அவர்கள் நடுவே இருக்கக்கூடிய சர்வேஸ்வரன், 'தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கலாம்' என்று இந் நகரை விரும்பி வசிக்கிற நீர்மையின் ஏற்றத்தை நினைக்க வல்லவர்க்கு. உம்பர் ஊரே -[2] திருப் பெயர்களை நினைப்பார்க்கு, அவ்விடம் தானே உம்பர் ஊர் ஆம். அன்றிக்கே, உள்ளுவார் பெறுமிடம் உம்பர் ஊர் என்னவும் ஆம். [3]அவ் உம்பர் ஊர் தானும் நம்மால் விரும்பப்படுவதும் அவன் விடாதே வசிப்பதனால் அன்றோ. அவனேதான் இவ்விடத்தே வசியாநின்றால் பின்னை இவ்விடமே உத்தேசியமாகத் தட்டு இல்லை அன்றோ. (2)

1006.

ஊரும் புள்; கொடியும் அஃதே; உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்தான்
சேரும் தண் அனந்தபுரம் சிக்கெனப் புகுதிராகில்,
தீரும் நோய் வினைகள் எல்லாம் திண்ணம்; நாம் அறியச் சொன்னோம்;
பேரும் ஓர் ஆயிரத்துள் ஒன்று நீர் பேசுமினே.

பொ-ரை:—கருடப் பறவையை வாகனமாகக் கொண்டு ஊராநிற்கும்; கொடியும் அக் கருடப் பறவையேயாம்; எல்லா உலகங்களையும் பிரளயகாலத்தில் உண்டு மீண்டு உமிழ்ந்தவனான இறைவன் எழுந்தருளி இருக்கின்ற குளிர்ந்த திருவனந்தபுரம் என்னும் திவ்விய தேசத்தை விரைவில் சென்று அடைவீரேயாகில் நோய்களும் நோய்களுக்குக் காரணமான வினைகளும் எல்லாம் நீங்கும்; இது உறுதியாகும்; நாம் அறியும்படி சொன்னோம்; ஒப்பு அற்ற ஆயிரம் திருப்பெயர்களில் யாதாயினும் ஒன்றனைச் சொல்லி அநுபவியுங்கோள் என்கிறார்.

---

1. "உள்ளுவார்க்கு" என்பதற்கு, "மாயன்" என்றதிற் கூறிய சில குணத்தைச் சேர்த்து, சில குணத்தை உள்ளுவார்க்கு என்று பொருள் அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ வைகுண்டத்திலே' என்று தொடங்கி.

2. மேலே சில குணத்தை உள்ளுவார்க்கு என்று பொருள் அருளிச்செய்து, இங்கே, "உள்ளுவார்க்கு" என்பதனை "நாமம்" என்றதனோடு சேர்த்துப் பொருள் அருளிச்செய்கிறார் 'திருப்பெயர்களை' என்று தொடங்கி. 'அவ்விடம் தானே' என்றது, திருவனந்தபுரமே என்றபடி.

3. பரமபதம் அன்றோ உத்தேசியம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவ் உம்பர் ஊர் தானும்' என்று தொடங்கி.

வி - கு :—புள் ஊரும்; கொடியும் அஃதே என்க. புகுதிராகில் நோயும் வினைகளும் எல்லாம் தீரும்; இது திண்ணம் என்க. அன்றிக்கே, திண்ணம் என்பதனைச் சொன்னேம் என்பதற்கு அடை ஆக்கலும் ஒன்று.

ஈடு :—மூன்றும் பாட்டு. [1] தீய வினைகள் போகைக்கு அந்நகரத்தை அடைதலே போதியதாம்: ஆயிரம் திருநாமங்களில் ஏதேனும் ஒன்றைச் சொல்லி அநுபவியுங்கோள் என்கிறார்.

புள் ஊரும் - [2] பெரிய திருவடியை வாகனமாகக் கொண்டு நடத்தும். கொடியும் அஃதே - கொடியும் அந்தப் பெரிய திருவடியே. [3] புள்ளினைக் கூறியது, நித்திய சூரிகளுக்கும் உபலக்ஷணம். [4] இவ் உலகத்தின் தொடர்பு சிறிதும் இல்லாத நித்திய சூரிகளுக்குச் "சென்றால் குடையாம்" என்கிறபடியே, உண்டாகச் சொல்லுகிற பலவகைப்பட்ட நிலைகள், இன்று சென்று கிட்டினவனுக்கும் வாசி அறக் கொடுக்கும் என்கைக்காகச் சொல்லுகிறது. [5] இவன் "நான் எல்லாத் தொண்டுகளையும் செய்வேன்" என்று இருந்தாலும் பயன் இல்லை அன்றோ, [6] "செய்க" என்று அவன் ஏவிக் கொள்ளாத அன்று. [7] இவன் இறைவனுக்குத் தொண்டு செய்யாத அன்று

---

1. பின் அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப."

என்பது கடவுள் வாழ்த்து, புறநானூறு.

3. பெரிய திருவடி ஒருவனையே வாகனமாகவும் கொடியாகவும் கொள்ளும் என்னும் இது, நித்தியசூரிகளில் ஒவ்வொருவரையும் பலவிதமான கைங்கரியங்களைக் கொள்ளும் என்னுமதற்கும் உபலக்ஷணம் என்றபடி.

4. "ஊரும் புள் கொடியும் அஃதே" என்றதனை அருளிச்செய்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவ் உலகத்தின்' என்று தொடங்கி. "சென்றால்" என்பது, முதல் திருவந்தாதி, 53.

5. அவன் கொடுக்கிறது என்? தானே செய்ய ஒண்ணாதோ? என்ன, 'இவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதஸ்ச தே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31: 25.

6. குருஷ்வ மாம் அநுசரம் வைதர்ம்யம் ந இஹ வித்யதே
க்ருதார்த்தஃ அஹம் பவிஷ்யாமி தவசார்த்தஃ ப்ரகல்பதே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31: 22.

7. எல்லாவற்றாலும் நிறைந்தவனான அவன் இவனைக் கொண்டு கைங்கரியம் கொள்ளுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவன்' என்று தொடங்கி.

ஆத்மாவிற்கு அடிமைத் தன்மை இல்லை; ஆகையாலே, ஒன்றிலும் விருப்பு இல்லாதவனான தான் குறைய நின்று இவனுடைய குறையைத் தீர்க்குமாயிற்று. என்றது, தான் குறையுடையவனாய் நின்று இவனைக் குறை இல்லாதவனாகச் செய்வான் என்றபடி.[1] இவன் தொண்டுசெய்து அடிமைத் தன்மையுடையவனாம்படி இவனைச் செய்வித்துக் குறைவற்றவனாக வேண்டுமன்றோ அவனுக்கு. என்றது,[2] இவன் தொண்டு செய்து அடிமைத்தன்மை யுடையவனாகும் பொருட்டு அவன் தன்னைத் தாழ விட்டான் என்றால், அது தானே நிறை யுடைமைக்கு உடலாக இருக்குமன்றோ அவனுக்கு என்றபடி. [3]"இன்னார் தூதன் என நின்றான்" என்ற பின்பே அன்றோ சேஷியாம் தன்மை அவனுக்கு உண்டாயிற்று.

உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்தான் - இவ் உலகத் தொடர்பு இல்லாத நித்தியசூரிகளை எல்லா அடிமைகளையும் கொள்ளுகை அன்றிக்கே, பிரளய ஆபத்தில் உலகத்தை எடுத்து வயிற்றிலே வைத்து நோக்கி, பின்னே உள்ளே கிடந்து தளர ஒண்ணாது என்று வெளிநாடு காண உமிழ்ந்தவன். சேரும் தண் அனந்தபுரம் -[4] பிரளய ஆபத்தில் உலகத்துக்கு அவன் வயிற்றில் புகாதபோது உண்டான செல்லாமையைப் போலே ஆயிற்று, அவனுக்கு இந்நகரத்திலே புகுராதபோது உண்டான தரிப்பறுதி. [5]பிரளய ஆபத்தில் நின்றும் உலக முழுதினையும் பாதுகாத்தவன். சேரும் - வந்து சேரும். அன்றிக்கே, பாரம் நீங்கினவனாய்க் கொண்டு சாய்ந்தருளுகிற இடம் என்னுதல். [6]மயக்கத்தாலே அவன் இப்படி விரும்புகிறான் அல்லன்; இனிமையாலே விடமாட்டாதவனாகிறான் என்ப

---

1. ஆயினும், ஒன்றிலும் விருப்பம் இல்லாதவன் என்ற தன்மைக்குக் குற்றம் வாராதோ? எனின், 'இவன் தொண்டு செய்து' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. அதனை விவரணம் செய்கிறார் 'இவன்' என்று தொடங்கி.

3. தன்னைத் தாழவிட்டது விருப்பம் இல்லாமைக்கு உடலாகக் கண்ட இடம் உண்டோ? என்ன, "இன்னார்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "இன்னார் தூதன்" என்பது, பெரிய திருமொழி, 2. 2: 3.

4. "உலகெல்லாம் உண்டு உமிழ்ந்தான் சேரும்" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரளய ஆபத்தில்' என்று தொடங்கி.

5. மேலதற்கே, வேறும் ஒரு பாவம் அருளிச்செய்கிறார் 'பிரளய ஆபத்தில் நின்றும்' என்று தொடங்கி.

6. "தண்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'மயக்கத்தாலே' என்று தொடங்கி.

தனைத் தெரிவிக்கிறார் 'தண்' என்ற சொல்லால். [1] உகந்தருளின நிலமாகில் இப்படி இருக்கவேண்டாவோ? [2]"தான் உகந்த ஊர்" என்னக் கடவதன்றோ. தானும் உகந்து நித்திய சூரிகளும் உகக்கும் இடம் அன்றோ பரமபதம்; இங்குத் தன் உகப்பு மாத்திரமே அன்றோ; என்றது, இவர்கள் விருப்பு அற்று இருப்பினும் தான் விடமாட்டாதே காலத்தை எதிர் நோக்கினவனாய் நிற்கிற இடம் அன்றோ என்றபடி.

சிக்கெனப் புகுதிராகில் - [3]"மீண்டு வருகிறான் இல்லை" என்கிறபடியே, மீளாத ருசியை உடையீர்களாய்க் கொண்டு கிட்டுவீர்கோளாகில். தீரும் நோய் வினைகள் எல்லாம் - துக்கங்களும் துக்கங்களுக்குக் காரணமானவைகளும் அழியும். திண்ணம் - [4] "சத்தியம் சத்தியம் மீண்டும் சத்தியம்" என்னுமாறு போலே. நாம் அறியச் சொன்னோம் - திண்ணமாக அநுபவத்தாலே கை கண்ட நாம், [5] இதில் வாசி அறியாத நீங்களும் இழக்க ஒண்ணாது என்று உங்கள் நெஞ்சிலே படும்படி சொன்னோம். பல நாள் துன்பப்பட்டுக் கரைகண்டவர் ஆகையாலே 'நாம்' என்கிறார். இனிக் கர்மங்கட்குக் கட்டுப்பட்டவர்களாய்ப் படுமவர்கள்,சொன்ன வார்த்தையை நினையாமையாலே படுகிறார்களத்தனை; நம்மேல் குறை அற நாம் சொன்னோம் என்பார் '**சொன்னோம்**' என்கிறார்.

நன்று; [6]செயலுக்கு அந் நகரத்தைச் சென்று சேர்தலே போதியதாம் என்றீர், இனிச் சொல்லியிருக்க அடுப்பது என்? என்ன, பேரும் ஓர் ஆயிரத்துள் ஒன்று நீர் பேசுமின் - ஒரு

---

1. ஈடுபாடு தோன்ற அருளிச்செய்கிறார் 'உகந்தருளின' என்று தொடங்கி. 'இப்படி இருக்க வேண்டாவோ' என்றது, ஈஸ்வரன் விரும்பும் படி இனிமையாக இருக்க வேண்டாவோ என்றபடி.

2. அவன் விரும்பியதே உகந்தருளின நிலம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் " தான் உகந்த " என்று தொடங்கி. இது, திருநெடுந்தாண்டகம், 6. இதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தானும் உகந்து' என்று தொடங்கி.

3. " நசபுநராவர்த்ததே நசபுநராவர்த்ததே "
என்பது, சாந்தோக்ய உபநிடதம்.

4. ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜம் உச்யதே
வேத ஶாஸ்த்ராத் பரம்நாஸ்தி ந தைவம் கேஶவாத் பரம்.
என்பது, பாரதம்.

5. " அறிய " என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதில்' என்று தொடங்கி.

6. 'செயலுக்கு' என்றது, மனம் வாக்குக் காயம் என்ற முக் கரணங்களில், காயத்தின் காரியமான செயலுக்கு என்றபடி.

திருப் பெயர் தானே ஆயிரம் படி பாதுகாவலாக இருக்கின்ற ஆயிரம் திருப் பெயர்களை யுடையவன் என்று [1]சொன்னோமே அன்றோ முன்பே; அவற்றிலே வாய்க்குத் தோற்றிற்று ஒரு திருப் பெயரைச் சொல்லுங்கோள். [2]மனத்தின் துணையும் வேண்டாம் என்பார் '**பேசுமின்**' என்கிறார். (3)

1007.

பேசுமின் கூசம் இன்றிப் பெரிய நீர் வேலை சூழ்ந்து
வாசமே கமழும் சோலை வயல் அணி அனந்தபுரம்
நேசம் செய்து உறைகின்றானை நெறிமையால் மலர்கள் தூவிப்
[3]பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே.

பொ - ரை :—மிக்க தண்ணீரையுடைய கடலாலே சூழப்பட்டு, நறுமணமே கமழ்கின்ற சோலைகள் சூழ்ந்த வயல்கள் நிறைந்த அழகிய திருவனந்தபுரம் என்னும் திவ்விய தேசத்தில் அன்பு வைத்து எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமானை, நூல்களில் கூறிய முறைப்படி மலர்களைக் கொண்டு அருச்சித்துப் பூசனை செய்கின்றவர்கள் புண்ணியம் செய்தவர்; அவர்கள் செய்துள்ள புண்ணியத்தைக் கூசுதல் இன்றிப் பேசி அநுபவியுங்கோள் என்கிறார்.

வி - கு :—புண்ணியம் செய்தவாற்றைக் கூசம் இன்றிப் பேசுமின் என்க. சூழ்ந்து - சூழ.

ஈடு :—நாலாம் பாட்டு. [4]பற்றுகின்றவர்கட்கு ருசி பிறப்பதற்காக, 'திருவனந்தபுரத்திலே புக்கு அடிமை செய்கிறவர்கள் எத்தகைய புண்ணியம் செய்தவர்கள்!' என்கிறார் அன்றிகே, அவர்கள் புண்ணியம் செய்தபடியைப் பேசுங்கோள் என்கிறார் என்னுதல்.

---

1. 'சொன்னோமே அன்றோ முன்பே' என்றது, "ஓராயிரமாய் உலகேழ் அளிக்கும்" (9. 3: 1.) என்ற திருப்பாசுரத்திலே சொன்னோமே என்றபடி.

2. "பேசுமின்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'மனத்தின் துணையும்' என்று தொடங்கி.

3. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

என்பது, திருக்குறள்.

4. நான்காம் அடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

கூசம் இன்றிப் பேசுமின்-உங்கள் தாழ்வினைப் பார்த்துக் கூசாதே பேசுங்கோள். [1] தாம் மயர்வற மதிநலம் அருளப் பெறச் செய்தேயும், பல காலம் பிறந்து இறந்து போந்த வாசனையாலே "அருவினையேன்" என்று பேசுகைக்குக் கூசின இது, இவர்களுக்கும் உண்டு என்று இருக்கிறார். [2] பகவானைப் பற்றிப் பேசும்போது கூசத்தான் வேண்டா அன்றோ; அறியாமையாலே அன்றோ பேசாதிருந்தது; பேசத் தக்க சம்பந்தமுள்ள விஷயம் என்று அறியவே கூசாதே பேசலாமே அன்றோ. பெரிய நீர் வேலை சூழ்ந்து - மிக்க தண்ணீரை யுடைத்தான கடலாலே சூழப்பட்டு. வாசமே கமழும் சோலை - நறுமணமே கமழாநிற்குமாயிற்றுச் சோலை. [3] சூழப் போந்த சோலையில் நறுமணம் புறம்பு போகாதபடி மதிள் இட்டாற் போலேயாயிற்று இருப்பது கடல். கடலில் நாற்றம் மேவிடாதபடி சோலையின் நறுமணமே விஞ்சியிருத்தலின் '**வாசமே கமழும்**' என்று ஏகாரம் கொடுத்து ஓதுகிறார்.

வயல் அணி அனந்தபுரம் - இப்படிப்பட்ட சோலையை யுடைத்தான வயலாலே அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற திருவனந்தபுரத்தை. [4] நேசம் செய்து உறைகின்றானைக் கூசம் இன்றிப் பேசுமின் என மேலே கூட்டுக. இப்போது, 'நேசம் செய்து உறைகின்றானைப் பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே' என்பது, வியப்பிலே நோக்கு. [5] அன்றிக்கே, நேசம் செய்து உறைகின்றானைப் பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாற்றைக் கூசம் இன்றிப் பேசுமின் எனக் கூட்டலுமாம். [6] அப்போது, பாகவதர்களின் பெருமையைக்

1. இவர்களுக்குக் கூசுதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தாம்' என்று தொடங்கி. "அருவினையேன்" என்பது, 1. 5: 1.

2. அவனைப் பேசும்போது கூசவேண்டா என்னுமதனையும், இப்படி இருக்கச் செய்தேயும் தாம் கூசியதற்குக் காரணத்தையும், அவனைக் கூசாதே பேசுகைக்குக் காரணத்தையும் அடைவே அருளிச்செய்கிறார் 'பகவானை' என்ற தொடங்கி.

3. "வேலை சூழ்ந்து வாசமே கமழும்" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சூழப் போந்த' என்று தொடங்கி.

4. அவதாரிகையில் அருளிச்செய்த இருவகையான கருத்துக்களுள் முதல் கருத்துக்குச் சேர அந்வயம் காட்டுகிறார் 'நேசம் செய்து' என்று தொடங்கி.

5. இரண்டாவது கருத்துக்குச் சேர அந்வயம் காட்டுகிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

6. பாகவதர்களைப் பேசும்போது கூசுதற்குக் காரணம் யாது? என்ற சங்கையை அநுவதித்து நீக்குகிறார் 'அப்போது' என்று தொடங்கி.

கூசம் இன்றிப் பேசுதலாவது என்? என்னில்,[1] பகவத்விஷயம் போலே வாய் வந்தபடி சொல்ல ஒண்ணாது பாகவத விஷயம் என்பதனைத் தெரிவித்தபடி.

நேசம் செய்து உறைகின்றானை - [2] பரமபதத்தில் தவிர ஒண்ணாமையாலே இருக்கின்றானத்தனை. அப் பரமபதத்தை வசை சொல்லி ஆயிற்று இங்கு வசிப்பது; [3] 'துன்புறுகின்றவர்களைப் பாதுகாப்பதற்கு உடல் அல்லாத இடமும் ஒரு வசிக்கும் இடமாயற்றதோ!' என்று, துன்புறுகின்றவர்களைப் பாதுகாப்பதற்குப் பாங்கான தேசம் என்று விரும்பி வசிப்பது இங்கேயாயிற்று; [4] "இந்தச் சித்திரகூடத்தில் வசிப்பது அயோத்யா நகரத்தில் வசிப்பதைக் காட்டிலும் மேலானது" என்கிறபடியே. [5] நெறிமையால் மலர்கள் தூவி - 'சர்வேஸ்வரன் சேஷி; இவ் உயிர்கள் எல்லாம் அவனுக்குச் சேஷம்' என்கிற முறைமையாலே மலர் முதலானவற்றை அவன் திருவடிகளிலே பணிமாறி. அன்றிக்கே, அவன்தான் இந் நகரத்தை விரும்பி இங்கே வசிப்பதுபோன்று, தாங்களும் பக்தியையுடையவர்களாய் மலர்களைத் தூவி என்னுதல். அன்றிக்கே? இவர்கள் வசிக்கிற இடம் என்று அவன் விரும்பி இங்கு வந்ததைப் போன்று, தாங்களும் ஒரு பிரயோஜனத்தைக் கணிசியாதே அவனை அடைந்து என்னுதலுமாம்.

---

1. 'பகவத்விஷயம் போலே வாய் வந்தபடி சொல்ல ஒண்ணாது பாகவத விஷயம்' என்றது, அவர்கள் அவனைக் காட்டிலும் பூஜிக்கத் தக்கவர்கள் ஆகையாலே பேசப் போகாது என்றபடி.

2. "அனந்தபுரம் நேசம் செய்து" என்றதற்குக் கருத்து அருளிச் செய்கிறார் 'பரமபதத்தில்' என்று தொடங்கி.

3. இங்கே அவனுக்கு அன்பு உண்டானமைக்குக் காரணத்தை அருளிச் செய்கிறார் 'துன்புறுகின்றவர்களை' என்று தொடங்கி.

4. அதற்கு எடுத்துக்காட்டு காட்டுகிறார் "இந்தச் சித்திர கூடத்தில்" என்று தொடங்கி.

தர்ஶநம் சித்ரகூடஸ்ய மந்தாகிந்யாஶ்ச ஶோபநே
அதிகம் புரவாஸாச்ச மந்யே தவச தர்ஶநாத்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 95 : 12.

5. "நெறிமையால் மலர்கள் தூவி" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருளில் "நெறிமையால்" என்பதற்கு, சேஷ சேஷி பாவத்தால் என்பது பொருள். இரண்டாவது பொருளில் அவன் அன்பு செலுத்தும் முறையாலே என்பது பொருள். மூன்றாவது பொருளில் வேறு பிரயோஜனத்தைக் கருதாமல் என்பது பொருள்.

புண்ணியம் செய்தவாறே - [1]சூட்டு நன் மாலைகள் தூயன ஏந்தி அடிமை செய்கிறவர்களுடைய அடிமையும் ஓர் அடிமை யாயற்றதோ! ஸ்ரீ பரதாழ்வானைப் போலே ஆயிற்று அவர்கள்; இளைய பெருமாளைப் போலே ஆயிற்று இவர்கள். அவன் விட்டுப் போரச் செய்தேயும், பாரதந்திரியத்தாலே விடமாட்டாதே கிடக்கிறார்கள் இத்தனை அன்றோ. (4)

1008

புண்ணியம் செய்து, நல்ல புனலொடு மலர்கள் தூவி
எண்ணுமின் எந்தை நாமம்; இப் பிறப்பு அறுக்கும்; அப்பால்
திண்ணம் நாம் அறியச் சொன்னோம் செறி பொழில்அனந்தபுரத்து
அண்ணலார் கமல பாதம் அணுகுவார் அமரர் ஆவார்.

பொ - ரை:—பக்தியோடு தண்ணீரையும் மலர்களையும் கொண்டு அருச்சித்து எம்பெருமானுடைய திருப்பெயரை நினைமின்; நினைத்தால், அந் நினைவு இப் பிறப்பினை நீக்கும்; அதற்குமேல், செறிந்த சோலைகள் சூழ்ந்த திருவனந்தபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரியோனுடைய திருவடித் தாமரைகளைச் சேர்கின்றவர்கள் நித்திய சூரிகள் ஆவார்கள்; எல்லோரும் அறியும்படியாக நாம் அறுதியிட்டுச் சொன்னோம் என்கிறார்.

வி - கு :—"நல்ல" என்ற அடைமொழி வாசனைப் பொருள்கள் கலவாமையைக் குறித்தது. அணுகுவார் அமரர் ஆவார்; தூவி எந்தை நாமம் எண்ணுமின் என்க. அறிய நாம் திண்ணம் சொன்னோம் என்க. சொன்னோம்; இது திண்ணம் என்னலுமாம்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [2]திருவனந்தபுரத்தை அடையுமவர்கள் நித்தியசூரிகள் ஆவார்கள்; ஆகையாலே, நீங்களும் அடைமின் என்கிறார்.

புண்ணியம் செய்து - பக்தியைச் செலுத்தி. [3]தியானம் வர்ண ஆச்ரம தர்மங்களை அங்கமாக உடைத்தாக இருக்கும்

1. "செய்தவாறே" என்ற ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் "சூட்டு நன் மாலைகள்" என்று தொடங்கி. இது, திருவிருத்தம், 21. 'அவர்கள்' என்றது, நித்தியசூரிகளை. 'இவர்கள்' என்றது, திருவனந்தபுரத்தில் உறையும் அடியவர்களை. 'ஸ்ரீ பரதாழ்வானைப் போலே ஆயிற்று அவர்கள்' என்றதனை இசைத்துக் காட்டுகிறார் 'அவன் விட்டுப் போரச் செய்தேயும்' என்று தொடங்கி.

2. ஈற்றடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. புண்ணியம் என்னும் சொல் பக்தியைக் காட்டுமாறு யாங்ஙனம்? என்ன, 'தியானம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

அன்றே ; [1] ஆக, வர்ண ஆச்ரம தர்மங்களின் பலமான பக்தியின் உருவத்தை அடைந்த ஞானத்தைச் சொல்லுகிறது. [2] "என்னிடத்தில் பக்தியையுடையவனாய் என்னிடத்தில் மனத்தை வைத்தவனாக ஆவாய்" என்னக் கடவது அன்றே. நல்ல புனலொடு மலர்கள் தூவி - நல்ல புனலோடே கூடின மலர்களைப் பக்தி பரவசராய்க் கொண்டு பணிமாறி. இதனால், அருச்சனை முதலியவற்றைச் சொல்லுகிறது. "என்னை ஆராதிக்கிறவனாயும் என்னை வணக்கம் செய்கிறவனாயும் ஆவாய்" என்னக் கடவது அன்றே. எண்ணுமின் - [3] "எப்பொழுதும் என்னைக் கீர்த்தனம் செய்கின்றவர்களாயும்" என்னுமின் றதே அன்றே, அதனைச் சொல்லுகிறது. எந்தை நாமம் - [4] இடறினவன் 'அம்மே' என்னுமாறு போலே திருநாமம் சொல்லுவதற்கு ஒரு தகுதியைத் தேடிக்கொள்ள வேண்டா; **நஞ்சீயர் பட்டரைத்** 'திருநாமம் சொல்லும்போது பக்தியுடையனாய்க் கொண்டு சொல்ல வேண்டுமோ?' என்று கேட்க, 'கங்கையிலே முழுகப் போமவனுக்கு வேறு ஒரு உவர்க் குழியிலே முழுகிப் போக வேண்டுமோ? மேல் உண்டான நன்மையைத்

---

1. காரணமான நல்வினையை இட்டுக் காரியமான பக்தியைச் சொல்லுகிறது என்கிறார் 'ஆக' என்று தொடங்கி. ஆகுபெயர் என்றபடி.

2. நல்வினையினையே சொல்லிற்றாகக் கொண்டால் என்னை? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என்னிடத்தில்' என்று தொடங்கி. என்றது, பகவத் கைங்கரியங்களை எல்லாம் பக்தி முன்னாகச் செய்யச் சொல்லுகையாலே இங்கும், "நல்ல புனலொடு" என்பது போன்றவைகளால் சொல்லப்படுகின்ற அருச்சனைக்கு அங்கம் பக்தி ஆகையாலே, அங்ஙனம் அங்கமான பக்தியைக் கொள்ளவேண்டும் என்றபடி.

> மந்மநாபவ மத்பக்தஃ மத்யாஜீ மாம் நமஸ்குரு
> மாமேவ ஏஷ்யஸி யுக்த்வா ஏவம் ஆத்மாநம் மத்பராயணஃ.

என்பது, ஸ்ரீ கீதை, 18 : 65.

'அருச்சனை முதலியவற்றைச் சொல்லுகிறது' என்றதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "என்னை" என்று தொடங்கி.

3. பகவானுடைய நாமத்தை எண்ணுதலும் பக்தியோடு கூடியிருக்க வேண்டும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "எப்பொழுதும்" என்று தொடங்கி.

> ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதாஃ
> நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே.

என்பது, ஸ்ரீ கீதை, 9 : 14.

4. "எந்தை நாமம்" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இடறினவன்' என்று தொடங்கி. இதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'நஞ்சீயர்' என்று தொடங்கி.

தருகிற இது தகுதியையும் தரமாட்டாதோ' என்று அருளிச் செய்தாராம். [1] திருநாமம் சொல்லுகைக்கு ருசியே ஆயிற்று வேண்டுவது; அவர்களே அதிகாரிகள்.

இப் பிறப்பு அறுக்கும்-[2] கண்டதே அன்றே இதனுடைய இழையீடு. [3]கவிழ்ந்து பார்க்க அமையுமே இதனுடைய அக வாயை; தன்னடையே வைராக்கியம் பிறக்குமே. [4] இப்படிக் கண்கூடாகக் கண்டிருக்கச் செய்தேயும் வைராக்கியம் பிறவா திருக்கிறதே அன்றே வாசனையின் கனம். [5]ஒரு செட்டியை 'இவன் தமிழில் சிறந்த புலமைப் படைத்தவன் என்று பட்ட ருக்குக் காட்டினார்களாக, பட்டர் அவனைப் பார்த்து [6]"உனக்கு யாதேனும் கேட்க விருப்பம் இருப்பின் கேட்கலாகாதோ?' என்ன, "சிலர் 'காண்கிற தேகத்துக்கு அவ்வருகு ஆத்மாவும் இல்லை, புண்ணிய பாவங்களும் இல்லை, ஈஸ்வரனும் இல்லை' என்று இராநின்றார்கள்; சிலர் 'இச் சரீரம்தான் நிலை அற்றது' என்று இதனுடைய தாழ்வினைக் கண்டு 'அவ்வருகே நிலைத் திருக்குமது ஒன்றனைப் பற்றவேண்டும்' என்று இராநின்றார்

---

1. இதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'திருநாமம்' என்று தொடங்கி.

2. "இ" என்ற சுட்டிற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கண்டதே அன்றே' என்று தொடங்கி. இழையீடு - நூலாலே தைத்தல். அதாவது, இழை இட்டாற்போலே இருக்கிற அவயவங்களினுடைய சேர்த்தி என்றபடி.

3. இதனை விவரணம் செய்கிறார் 'கவிழ்ந்து' என்று தொடங்கி.

மாக்கேழ் மடநல்லாய் என்று அரற்றும் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல் என்பது, நாலடியார்.

"மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்" என்பது, மணிமேகலை.

"பெண் என்பது எற்புச் சட்டகம்; முடைக் குரம்பை; புழுப் பிண்டம்; பைம் மறியா நோக்கப் பருந்தார்க்கும் தசைமைத்து; ஐயும் பித்தும் வளியும் குடரும் கொழுவும் புரளியும் நரம்பும் மூத்திர புரீடங்களும் என்று இவற்றது இயைபு; பொருளன்று" என்பது, களவியல் உரை.

4. இச் சரீரத்தின் தாழ்வினைப் பார்த்தும் நமக்கு வைராக்கியம் பிறவாமைக்குக் காரணம் என்? என்ன, 'இப்படி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. வாசனையின் கனம் என்பதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'ஒரு செட்டியை' என்று தொடங்கி.

6. காட்டின இடத்து, நாம் அறியாதது ஒன்று இவனிடம் கேட்க வேண்டி இருக்கிறதோ? என்று திருவுள்ளம்பற்றி, அவனைப் பார்த்து 'உனக்கு யாதேனும் கேட்க விருப்பமிருப்பின் கேட்கலாகாதோ?' என்றார் என்றபடி.

கள்; விஷயம் ஒன்றாக இருக்க, வேறுபட்ட இவ் இரண்டு கொள்கைகளும் நடக்கிறபடி எங்ஙனே?" என்ன, [1]"'என்னுடைய மாயையானது ஒருவராலும் தாண்ட முடியாதது' என்றும், 'என்னையே பற்றினவர்கள் அம் மாயையினைத் தாண்டுகிறார்கள்' என்றும் சொல்லுகிறபடியே, நல்லவர்கள் இதனுடைய தாழ்வினைக் கண்டு இதனைக் கழித்துக் கோடற்கும், மற்றையோர்கள் இதிலே இனிமை உண்டு என்று நினைத்துக் கேடு உறுகைக்கும் உடலாம்படி கர்மங்கட்குத் தகுதியாக இதனை [2]இடையெடுத்துக் காணும் ஈஸ்வரன் பண்ணிற்று" என்று அருளிச்செய்தார்.

[3]"இது கண்டாய்" என்னும் படியாய் இருக்கும் அன்றோ; நாம் நன்றாக நினைத்திருக்குமது அன்று இதன் தன்மை; ஈஸ்வரன், வெளிச்சிறப்பினைப் பிறப்பிக்க 'இது சிறிது, நிலை அற்றது' என்று அறிந்த இதுவே காண் இதற்கு நிலை நின்ற தன்மை. இப் பிறப்பு அறுக்கும் - இப்படித் தாழ்வுள்ளதாக அறியப்படுகின்ற இச் சரீர சம்பந்தத்தினை அறுக்கும். செறி பொழில் அனந்த புரத்து அண்ணலார் கமலபாதம் அணுகுவார் - செறிந்த சோலையை யுடைத்தான திருவனந்த புரத்திலே வந்து திருக்கண் வளர்ந்தருளுகிற இறைவனுடைய எல்லை இல்லாத இனிமையையுடைய திருவடிகளைக் கிட்டுமவர்கள். அப்பால் அமரர் ஆவார் - [4]இப் பிறப்பு அறுக்கும் என்ன வேண்டாத சரீரத்தை மேற்கொண்டு அடிமை செய்கிறவர்களும், திருவனந்தபுரத்திலே திருக்கண்வளர்ந்தருளுகிறவன் திருவடியை அடைந்தவர்கள். [5]ஆக, இதனால்,

---

1. தைவீ ஹி ஏஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே.
என்பது, ஸ்ரீ கீதை, 7: 14.

2. இடையெடுத்து - நிறுத்து; அறுதியிட்டு.

3. இச் சரீரம் தாழ்வினையுடையது என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "இது கண்டாய்" என்று தொடங்கி. இது, இரண்டாம் திருவந்தாதி, 66. "இது கண்டாய்" என்ற பாசுரத்தின் பொருளை அருளிச் செய்கிறார் 'நாம் நன்றாக' என்று தொடங்கி.

4. "அப்பால் அமரர் ஆனவர்களும் அனந்தபுரத்து அண்ணலார் கமல பாதம் அணுகுவார்" என்று கொண்டு கூட்டி வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'இப்பிறப்பு அறுக்கும்' என்று தொடங்கி.

5. "இப் பிறப்பு அறுக்கும்; அப்பால் அமரர் ஆவார்" என்ற இரண்டு தொடர்மொழியாலும் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'ஆக, இதனால்' என்று தொடங்கி.

விரோதியைப் போக்கும் அளவே அன்றியே விரும்பிய பொருளைப் பெறுகைக்கும் திருவனந்தபுரமே அடையத் தக்க தலம் என்கிறது. திண்ணம் - நிச்சயம். நாம் அறியச் சொன்னோம் - அவனாலே மயர்வு அற மதிநலம் அருளப்பெற்ற நாம் தேகத்தினையே ஆத்மாவாக அபிமானித்திருக்கிற நீங்களும் அறியும்படி உங்கள் கேட்டினைப் பார்த்துச் சொன்னோம். (5)

1009.

[1]அமரராய்த் திரிகின்றார்கட்கு ஆதி சேர் அனந்தபுரத்து
அமரர்கோன் அர்ச்சிக்கின்று; அங்கு அகப்பணி செய்வர் விண்ணோர்;
நமர்களோ! சொல்லக் கேண்மின்; நாமும் போய் நணுக வேண்டும்
குமரனார் தாதை துன்பம் துடைத்த கோவிந்தனாரே.

பொ-ரை :—முருகக் கடவுளுக்குத் தந்தையான சிவபெருமானுடைய துன்பத்தை நீக்கிய கோவிந்தனும், தேவர்களாகத் திரிகின்றவர்கட்கு எல்லாம் காரணனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருவனந்தபுரத்தை, நித்தியசூரிகளுக்குத் தலைவரான சேனைமுதலியார் அருச்சனை செய்கின்றார்; நித்தியசூரிகள் அந்த இடத்தில் அந்தரங்கத் தொண்டுகளைச் செய்வர்கள்; நம்முடையவர்களே! சொல்லுவதனைக் கேளுங்கோள்; தொண்டுகளைச் செய்வதற்கு நாமும் போய்ச் சேர வேண்டும் என்கிறார்.

வி - கு :—கோவிந்தனாராகிய ஆதி என்க. ஆதி - காரணனாக உள்ளவன். அனந்தபுரத்தை நாமும் போய் நணுக வேண்டும். அனந்தபுரத்தின் சிறப்பினை இரண்டாம் அடி காட்டுகிறது. அர்ச்சிக்கின்று - அருச்சிக்கிறார். இது மலையாளநாட்டு வழக்கு.

---

1. "ஸைஸைந்ய புத்ர சிஷ்ய ஸாத்ய ஸித்த பூஸுரார்ச்சனத்துக்கு முகநாபி பாதங்களை த்வார த்ரயத்தாலே காட்டும் சாம்யம் அனந்த சயனத்திலே வியக்தம்"(ஆசார்யஹ்ருதயம், பிரகரணம், 3. சூ. 34). என்ற ஸ்ரீஸூக்தி பெரும்பாலும் இத்திருப்பாசுரத்தையே உட்கொண்டதாகும். "அமரராய்த்திரிகின்றார்கட்கு ஆதி" என்கையாலே பிரமன் முதலான தேவர்கள் வந்து வணங்குவது தெரிவிக்கப்படுகிறது. இரண்டாவது அடியால் சேனைமுதலியார் தம் பரிவாரங்களோடு வந்து வணங்குவது தெரிவிக்கப்படுகிறது. மூன்றாவது அடியால் நம்மைப் போன்றவர்களும் சென்று வணங்கத் தகுந்தமை தெரிவிக்கப்படுகிறது. ஆக, இங்ஙனம், முத்திறத்தாரும் சேவிப்பதற்குத் தகுதியாக இத்தலத்தில் இறைவன் மூன்று வழிகளை அமைத்துக் கொண்டு சேவை சாதிக்கிறான். நித்திய சூரிகளுக்குச் சேவை சாதிக்க முகத்தின் பக்கம், திருநாபியில் தோன்றிய பிரமன் முதலாயினோர்க்குத் திரு நாபியின் பக்கம்; திருவடியன்றி வேறு புகல் இல்லாத மக்கட்குச் சேவை சாதிக்கத் திருவடியின் பக்கம் எனக் கொள்க.

ஈடு :—ஆரும்பாட்டு. [1]நித்தியசூரிகளும் வந்து அடிமை செய்வது இங்கே ஆகையாலே திருவனந்தபுரமே அடையத் தக்க மேலான இடம்; அங்கே நாம் அடிமை செய்ய வேண்டும் என்கிறுர்.

அமரராய்த் திரிகின்றுர்கட்கு - [2]மாம்பழத்தோடு ஒரு சம்பந்தம் இல்லாதது ஒன்றுக்கு மாம்பழஉண்ணி என்று பெயராய் இருக்குமாறு போலே, இக் கரையராய் அவ்வருகு உள்ளாரைக் காட்டிலும் நாலு நாள் எழ பிழைத்திருந்து சாகிற இவ்வளவினையே கொண்டு, தங்களுடைய ஆயுளுக்கு ஓர் எல்லை உண்டாய் இருக்கச்செய்தே, அது இல்லாதாரைப் போலே அகங்காரம் கொண்டு திரிவர்கள் ஆயிற்று. தனைக் கட்டு கனத்திருக்கச் செய்தேயும் அச்சம் அற்றவர்களாய்த் திரிவர்களாதலின் 'திரிகின்றுர்கட்கு' என்கிறுர். [3]இவன் அளவு அல்ல ஆயிற்று அவர்களுக்கு. [4]விடும்போது ஒரு சரீரத்தை மாத்திரமாதல், ஒரு பெண்பால் ஆதலாய் இருக்கும் இவனுக்கு:பிரமனுக்கு அண்டமித்தனையும் விடவேண்டி வரும் அன்றே. ஆதி சேர் அனந்தபுரம் - [5]இவர்களுக்கும் அவர்களுக்கும் ஒப்புமை அவனைக் காரணனுக உடையவர்களாக இருக்கும் தன்மையிலே ஆயிற்று. [6]அவர்களுக்கு, ஆத்மாவைப் பாதுகாத்துக் கொடுக்கும். இவர்களுக்கு, சரீரத்தையும் ஆத்மாவையும் சேர்த்து இச் சரீரம் கணம்தோறும் நசிக்க

---

1. நடு இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறுர்.

2. "ஆய்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர் 'மாம்பழத்தோடு' என்று தொடங்கி. என்றது, நித்தியசூரிகளுடைய அமரத்வம் தங்களுக்கு இல்லாதிருக்கவும், அது இருப்பதாக அபிமானித்துக் கொண்டு திரிகிறவர்கள் என்றபடி. எழ - விளம்பித்து.

3. அவர்கட்கு அங்ஙனம் தனை அதிகமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறுர் 'இவன்' என்று தொடங்கி. இவன் - மனிதன்.

4. அதனை விவரணம் செய்கிறுர் 'விடும்போது' என்று தொடங்கி.

5. பிரமன் முதலான தேவர்கட்கு அமரத்வம் இல்லையாகிலும், நித்திய சூரிகளுக்கும் பிரமன் முதலான தேவர்களுக்கும் ஈஸ்வரன் காரணமாக இருக்கும் தன்மை ஒத்ததாம் என்கிறுர் 'இவர்களுக்கும்' என்று தொடங்கி.

6. இருவர்க்கும் ஆதியாம் பிரகாரம் யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறுர் 'அவர்களுக்கு' என்று தொடங்கி. என்றது, அநுபவம் இல்லாத காலத்தில் உளராகாமை உண்டாகையாலே அநுபவிப்பித்து உளராந்தன்மையை நோக்கும் என்றபடி.

உண்டாக்கி நடத்திக் கொடுக்கும். [1] உலகத்திற்கெல்லாம் காரணனுக உள்ளவன் வந்து வசிக்கிற திருவனந்தபுரத்து.

அமரர்கோன் அர்ச்சிக்கின்று விண்ணேர் அங்கு அகப் பணி செய்வர் - ஸ்ரீ சேநாபதியாழ்வான் நித்திய கைங்கரியம் செய்கிருன்; நித்தியசூரிகள் எடுத்துக் கை நீட்டுவர். நமர்களோ சொல்லக் கேண்மின் - [2] "வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்று சொன்னதற்குள்ளே அடங்கும்படி என்னேடு காரணம்பற்றி வாராத சம்பந்தமுடையார் அடங்கலும் நான் சொல்லுகிற வார்த்தையைக் கேளுங்கோள்.[3] பந்துக்களாயிருப் பார்க்கு நல்வார்த்தை சொல்ல வேண்டுமே அன்றே. நாமும்- அடிமையிலே ருசியுடைய நாமும், நித்தியசூரிகளோடு ஒரு கோவையாகச் சென்று கிட்டி அடிமை செய்ய வேண்டும். போய் நணுக வேண்டும் - [4] இங்கே இருந்து நினைக்குமது போராது, போய்ப் புகவேண்டும்.

அவர்கள் நடுவே பிறவிகளிலே உழன்று வருகின்ற நமக் குக் கிட்ட ஒண்ணுமோ? என்னில், குமரனுர் தாதை துன்பம் துடைத்த கோவிந்தனுரே - தேவர்களுக்குச் சேனுபதியாய் முதல்வனுன சுப்பிரமணியனுக்கும்கூட தந்தையான சிவ பெருமானுக்குப் பாவத்தால் வந்த துன்பத்தினைப் போக்கின கிருஷ்ணனே. அன்றிக்கே,[5] தேவர்களும் அசுரர்களும் கூட்டுப் படையாய் எதிரிட்டு வரும் அன்றும், அவர்கள் ஆபத்தினைப் போக்கிப் பாதுகாக்குமவனுயிற்று அவன் என்னுதல்; [6] ஆன பின்பு, நமக்கு அந் நகரத்தினை அடைவதற்கு ஓர் அருமைப் பாடு உண்டோ? [7] செருக்குக் கொண்டவர்களுக்கும் துக்கத்

---

1. பதப் பொருள் அருளிச்செய்கிருர் 'உலகத்திற்கெல்லாம்' என்று தொடங்கி.

2. "வழுவிலா" என்பது, திருவாய்மொழி, 3. 3: 1.

3. நமர்களாய் இருந்தால் சொல்லவேண்டுமோ? என்ன, 'பந்துக்களா யிருப்பார்க்கு' என்று தொடங்கி விடை அருளிச்செய்கிருர்.

4. "போய்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'இங்கே' என்று தொடங்கி.

5. குமரனுர் தாதை துன்பம் துடைத்தது, வாணனைத் தலையறுக் காமல் பாதுகாத்தது என்கிருர் 'தேவர்களும்' என்று தொடங்கி. "கோவிந் தனுர்" என்று கிருஷ்ணனைச் சொல்லுகையாலே, வாணன் செய்த போரில் துன்பத்தைத் துடைத்தான் என்றபடி.

6. 'ஆனபின்பு' என்றது, அகங்காரம் கொண்டவர்களையும் காப் பாற்றுமவன் ஆனபின்பு என்றபடி.

7. 'அருமைப்பாடு உண்டோ?' என்றதனை விவரிக்கிருர் 'செருக்குக் கொண்டவர்களுக்கும்' என்று தொடங்கி.

தினைப் போக்குமவன், யான் எனது என்னும் செருக்கு அற்ற நமக்குத் தன்னைக் கிட்டுகையில் அருமைப்படுத்துமோ? [1]சிவன் முதலாயினர்க்குத் துக்கத்தினைப் போக்குமவனாக இருக்கும்; பசுக்களுக்கும் ஆயர்கட்கும் கையாளாக இருக்கும். கோவிந்தனுரை நாமும் போய் நணுக வேண்டும். (6)

1010.

துடைத்த கோவிந்தனாரே உலகு உயிர் தேவும் மற்றும்
படைத்த எம் பரம மூர்த்தி பாம்பணைப் பள்ளிகொண்டான்
மடைத்தலை வாளை பாயும் வயல் அணி அனந்தபுரம்
கடைத்தலை சீய்க்கப் பெற்றால், கடுவினை களையலாமே.

பொ - ரை :—எல்லாவற்றையும் கற்பாந்த காலத்தில் அழித்த கோவிந்தனாரேதான் உலகங்களையும் உயிர்களையும் தேவர்களையும் பிறவற்றையும் உண்டாக்கின மேலான மூர்த்தியாவான்; அவனே ஆதிசேஷசயனத்தில் பள்ளிகொண்டான்; நீர் மடைகளிலே வாளை மீன்கள் பாயும்படியான வயல்களையுடைய அழகிய அனந்தபுரத்தினது திருவாசலைத் திரு அலகிடுதலைச் செய்தால் கொடிய வினைகளை எல்லாம் போக்கலாம் என்கிறார்.

வி - கு :—பள்ளிகொண்டானுடைய அனந்தபுரத்தினது கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடு வினை களையலாம் என்க. கடைத்தலை - திருமுன்றில். சீய்த்தல் - கூட்டுதல்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [2]சர்வேஸ்வரன் திருக்கண் வளர்கின்ற திருவனந்தபுரத்திலே சென்று அடிமை செய்யப் பெறில், ஒரு தேச விசேடத்தே சென்று அடிமை செய்யப் பெற்றிலோம் என்னும் துக்கம் போம் என்கிறார்.

துடைத்த கோவிந்தனாரே உலகு உயிர் தேவும் மற்றும் படைத்த எம் பரமமூர்த்தி - துடைக்கை - அழித்தல். [3] அழித்

---

1. "துடைத்த கோவிந்தனார்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'சிவன் முதலாயினர்க்கு' என்று தொடங்கி.

2. ஈற்றடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. படைப்பிற்கு முன்னே அழித்தலைக் கூறுவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'அழித்தல்' என்று தொடங்கி.

தல் முன்னாக அன்றோ படைத்தல் இருப்பது;[1] "உலகினுடைய தோற்றமும் கிருஷ்ணன்தான்; உலகினுடைய அழிவும் கிருஷ்ணனேதான்; இது பிரசித்தம்" என்கிறபடியே. "வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே" என்கிறபடியே. உலகு உயிர் தேவும் மற்றும் படைத்த - உலகத்தையும் தேவ சாதியையும் மற்றும் உண்டான உயிர்களையும் உண்டாக்கின. என்றது, [2] இவை மிகைத்த அன்று அழித்து, பின்னர்ப் பேற்றினை அடைதற்குக் கருவியான கரணங்களைக் கொடுத்துக் காப்பாற்றினவன் என்றபடி. எம் பரமமூர்த்தி - அடியார்கட்கு எளியனான சர்வேஸ்வரன்.

பாம்பு அணைப் பள்ளிகொண்டான் - படைக்கப்பட்ட உலகத்திலே பாதுகாக்கும் பொருட்டுத் திருவனந்தாழ்வான் மேலே திருக்கண்வளர்ந்தருளுகிறவனுடைய. மடைத் தலை வாளை பாயும் வயல் அணி அனந்தபுரம் - தண்ணீர் நிறைந்திருப்பதனாலே மடைத் தலைகளிலே களித்து வாளைகள் பாயா நின்றுள்ள வயலாலே அலங்கரிக்கப்பட்டுள்ள நகரத்திலே; [3] முக்தர் சாமகானம் செய்து களித்து வசிக்குமாறு போலே ஆயிற்று, அந் நகரத்தில் திரியக்குக்களும் களித்து வசிப்பது. கடைத்தலை சீய்க்கப் பெற்றால் - திருவாசலிலே திருஅலகு திருப்பணி செய்யப்பெற்றால். கடு வினை களையலாமே - அடிமை செய்யப் பெறுமையால் உண்டான துயரம் எல்லாம் போம். [4] சேஷத்வ ஞானம் பிறந்தால், சொரூபத்திற்குத் தகுதியான தொண்டினைப் பெறுமையால் வரும் துயரம் கழுவாயால் போக்குமது அன்றே. (7)

---

1. அழிப்பது கிருஷ்ணனே என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'உலகினுடைய' என்று தொடங்கி.

கிருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திः அபி ச அப்யயः
கிருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதம் இதம் விஸ்வம் சராசரம்.

என்பது, பாரதம் வீடுமபர்வம்.

"வையமேழும்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 1. 1 : 6.

2. அழிப்பது உபகாரம் ஆகுமோ? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'இவை' என்று தொடங்கி.

3. "மடைத்தலை வாளை பாயும்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'முக்தர்' என்று தொடங்கி.

4. கைங்கரியம் செய்யப் பெறுமையால் உள்ள துன்பத்தைக் "கடுவினை" என்னலாமோ? என்ன, 'சேஷத்வஞானம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, சேஷத்வஞானம் வந்த பிறகு கடைத்தலை சீய்க்கப் பெற்றால் களையலான கடுவினை, அது பெறுமையால் வந்த துன்பமேயாகவேண்டும்; ஏனைய தீயவினைகள் ஏனின் பிராயச்சித்தத்தால் போக்கக் கூடியவை என்கை.

1011

கடுவினை களையலாகும்; காமனைப் பயந்த காளை
இடவகைகொண்டது என்பர், எழில் அணி அனந்தபுரம்;
[1]படம் உடை அரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண
நடமினோ, நமர்கள் உள்ளீர்! நாம் உமக்கு அறியச் சொன்னோம்.

பொ - ரை :—மன்மதனுக்குத் தந்தையாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தனக்கு வசிக்கும் இடமாகக் கொண்டது, அழகு பொருந்திய திருவனந்தபுரம் என்பர்; நம்முடைய பந்துக்களாக உள்ளவர்களே! நீங்கள் அறியும்படி நாம் சொன்னோம்; அங்குப் படத்தையுடைய ஆதிசேஷசயனத்திலே அறிதுயில் செய்கின்றவனுடைய திருவடிகளைத் தரிசிப்பதற்கு நடவுங்கோள்; நடந்தால், கொடிய வினைகளை எல்லாம் போக்கலாகும் என்கிறார்.

வி - கு :—நமர்கள் உள்ளீர்! நாம் உமக்கு அறியச் சொன்னோம்; பள்ளி பயின்றவன் பாதம் காண நடமினோ; கடுவினை களையலாகும். காமனைப் பயந்த காளை - கிருஷ்ணன்.

ஈடு :—எட்டாம் பாட்டு. [2] திருவனந்தபுரத்திலே திருக்கண் வளர்ந்தருளுகிற சர்வேஸ்வரனுடைய திருவடிகளைக் காணப் போருங்கோள் என்று, அநுகூலரை அழைக்கிறார்.

கடு வினை களையல் ஆகும் - [3] நம்மால் போக்க அரிதான பாவங்களையும் போக்கலாம். காமனைப் பயந்த காளை - [4] உங்களுக்கு நான் உபதேசிக்க வேண்டுவது அப் பரமனை நேரில் காணுமளவுமே! நாட்டினைத் தன் அழகாலே வெருட்டித் திரி

---

1. “குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்கென
ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு சிலர் நின் றேத்த”

என்பது, சிலப்பதி. 26 ஆம் காதை, 51 - 63.

“ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்” என்பது, ஷை. 30-ஆம் காதை, 50 - வரி.

2. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. “கடுவினை” என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் ‘நம்மால்’ என்று தொடங்கி.

4. “காமனைப் பயந்த காளை” என்று அவனுடைய அழகினைக் கூறுவதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் ‘உங்களுக்கு’ என்று தொடங்கி,

கிற காமனுக்கும் தமப்பனாய் இருப்பான். [1] இருவரையும் ஒரு சேரக் கண்டால் 'முறை கெடச் சொன்னார்களே' என்று இருக்கும். "இளமைப்பருவமானது ஒருகுழந்தையைப்பெறு கிறவரையில் தான்" என்கிறதும், இவன் விஷயத்தில் வேறு வகையாக இருக்கிறது காணும். இடவகை கொண்டது என்பர் - இவ்விடத்தை வசிக்கும் இடமாகக் கொண்டது என்று, அறிவுடையார் அடங்கலும் [2] செவி சீப்பாய்ந்து கிடப்பர்கள்; "அறிஞர்கள் பத்மநாபனை அறிகிறார்கள்" என்கிறபடியே.

எழில் அணி அனந்தபுரம் - [3] பரமபதத்தில் ஒரு புதுமை செய்ய ஒண்ணாதே அன்றே; அங்குத்தையில் காட்டில் இங்குத்தைக்குத் தன்னேற்றம் இருக்கிறபடி. படமுடை அரவில் - சர்வேஸ்வரன் சாய்ந்தருளினால் [4] அவனுக்குப் பிறக்கும் மலர்த்தி சொல்லுகிறது 'படமுடை அரவு' என்று. பள்ளி பயின்றவன் - இயற்கையிலேயே முற்றறிவினனான அப் பரமனும் உணர்த்தி அறும்படி ஆயிற்று அப் படுக்கை வாய்ப்பு. பாதம் காண நடமினோ நமர்கள் உள்ளீர் - திருவடிகளைக் காணும்படியாக, [5] "வரி வாள் அரவின் அணைப் பள்ளி கொள்கின்ற, கரியான் கழல் காணக் கருதும் கருத்து" என்று இருக்கும் என்னோடு ஒரு குடல் தொடக்குடையார் அடங்கலும் போகப் பாருங்கோள். [6] திரு அத்யயனம் பாடாநிற்க, இதனைக் கேட்டருளி, **ஆளவந்தார்** 'நமக்கு ஆழ்வாரோடே ஒரு

---

1. "காமனைப் பயந்த" என்றதன் பின் "காளை" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இருவரையும்' என்று தொடங்கி.

மாணுர்தாரி வைராணி ப்ரஸவாந்தம் ச யௌவனம்
குபிதம் ப்ரணதாந்தம்ச யாசிதாந்தம்ச கௌரவம்.

என்பது, பிரமாணம்.

"கற்றைக் குழலார் கவினெலாம் ஓர் மகவைப்
பெற்ற அக் கணத்தே பிரியுமே."

என்றார் ஒரு புலவர்.

2. 'செவி சீப்பாய்ந்து கிடப்பர்கள்' என்றது, ஈடுபட்டிருப்பர்கள் என்றபடி.

"பத்மநாபம் விதுர்ப்புதா:" என்பது, பிரமாணம்.

3. "எழில்" என்ற பதத்திற்கு, வேறுபாடு தோன்றப் பொருள் அருளிச்செய்கிறார் 'பரமபதத்தில்' என்று தொடங்கி.

4. அவனுக்கு - ஆதிசேடனுக்கு

5. "நமர்கள் நடமின்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் "வரிவாள்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 4 : 5.

6. திரு அத்யயனம் பாடாநிற்க - மார்கழி மாதத்தில் திரு அத்யயன உத்ஸவத்தில் இத் திருவாய்மொழியைப் பாடாநிற்க.

சம்பந்தம் உண்டாக வேண்டும்' என்று, அப்போதே ஸ்ரீ பாதத்தை உடையாரைக் கூட்டிக்கொண்டு எழுந்தருளினார். நாம்-[1]திருக்கண் வளர்ந்தருளுகிற அழகில் சுவடு அறிந்து, "எவரேலும் அவர், எம்மை ஆளும் பரமர்" என்னக் கடவ நாம். உமக்கு அறியச் சொன்னோம் - அவ் வடிவினைக் காண வேண்டும் என்னும் விருப்பத்தினையுடைய நீங்கள் அறியும்படி சொன்னோம். (8)

1012.

நாம் உமக்கு அறியச் சொன்ன நாள்களும் நணியவான ;
சேமம் நன்குடைத்துக் கண்டீர், செறிபொழில் அனந்தபுரம்;
தூமம் நல் விரை மலர்கள் துவள் அற ஆய்ந்துகொண்டு,
வாமனன் அடிக்கென்று ஏத்த மாய்ந்து அறும் வினைகள் தாமே.

பொ - ரை :—நாம் நீங்கள் அறியும்படி கூறின நாள்களும் குறுகின ஆயின ; செறிந்த சோலைகள் சூழ்ந்த திருவனந்தபுரம் சிறந்த பாதுகாவலை உடையதாகும் ; தூபத்தையும் சிறந்த வாசனையையுடைய மலர்களையும் குற்றம் அற ஆராய்ந்து எடுத்துக்கொண்டு ஸ்ரீ வாமனனுடைய திருவடிகளுக்கு என்று துதிக்க, பாவங்கள் எல்லாம் அழிந்து ஒழியும் என்கிறார்.

வி - கு :—தூமம் - தூபம். ஏத்த வினைகள் தாம் மாய்ந்து அறும் என்க.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [2] சரீரத்தின் முடிவு அணித்தாயிற்று ; ஈண்டெனத் திருவனந்தபுரத்திலே புக்கு அடிமை செய்ய, அடிமை செய்வதற்கு விரோதியான கர்மங்கள் தாமே அழியும் என்கிறார்.

நாம் உமக்கு அறியச் சொன்ன நாள்களும் நணிய ஆன- [3] "நாளேல் அறியேன்" என்றும், "மரணமானால்" என்றும்

---

1. "நாம்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'திருக்கண் வளர்ந்தருளுகிற' என்று தொடங்கி. "எவரேலும்" என்றது, திருவாய்மொழி, 3. 7 : 1.

2. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "நாளேல் அறியேன்" என்று வேண்டிக்கொண்ட தமக்கு "மரணமானால்" என்று ஈஸ்வரன் அவதியாகச் சொல்லிய நாட்களும் கிட்டியஆயிற்றன என்றபடி. "நாளேல்" என்பது, திருவாய்மொழி, 9. 8 : 4. "மரணமானால்" என்பது, திருவாய்மொழி, 9. 10 : 5.

சொல்லிப் போந்த நாள்களும் கிட்டிய ஆயிற்றின. [1] பிறர்க்கு அப்படித் தாம் சொன்னாரோ? என்னில், "மாலை நண்ணி" என்ற திருவாய்மொழியிலே "மரணமானால்" என்று சர்வேஸ்வரனுடைய எண்ணத்தினைத் தாம் அறிந்து, அதனைப் பிறர்க்கு உபதேசித்தாரே அன்றோ. இதிலும் பரோபதேசம் அன்றோ.

[2] "வீடுமன் முடியாநின்றான், பின்னை இவ் அர்த்தம் கேட்கலாவார் இலர்" என்று அவன் அருளிச்செய்த வார்த்தையை, இப்போது இவர்தாம் அருளிச்செய்கிறார். "அஸ்தமிதே"-[3] கண்களுக்கு வெளிச்சிறப்பினைப் பண்ணுவாரும், நெஞ்சிற்கு வெளிச் சிறப்பினைப் பண்ணுவாருமாக, சூரியர்கள் இருவர் ஆயிற்று; [4] "ஞானமாகி ஞாயிறு ஆகி" என்னக் கடவதன்றோ. "ஜ்ஞாநாநி அல்பீ பவிஷ்யந்தி"-ஆத்மாவினைப் போன்று நித்தியமாய் இருக்குமன்றோ தர்ம பூத ஞானமும்; இப்படி இருக்க "ஜ்ஞாநாநி அல்பீபவிஷ்யந்தி" என்பான் என்? எனின், [5] இதற்குத் தோன்றுதலும் மறைதலும் ஆகிற செயல்கள் ஞானம் செல்லுதற்குரிய வழியைப் பற்றியதாய் இருக்கு

---

1. ஆனால், தமக்கு அவன் அவதியாக இட்டுக் கொடுத்த நாள் அன்றோ அது; அதனைப் பிறர்க்குத் தாம் சொல்ல இல்லையே; ஆனபின்னர் "உமக்கு அறியச் சொன்ன நாள்கள்" என்றது பொருந்துமாறு யாங்ஙனம்? என்னும் வினாவை அநுவதித்து அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிறர்க்கு' என்று தொடங்கி. 'இதிலும் பரோபதேசம் அன்றோ' என்றது, பரோபதேசம் ஆகையாலே பிறர்க்கு உபதேசித்தார் என்றபடி.

2. 'தமக்குச் சரீரத்தின் முடிவெல்லை அணித்தாயிற்று' என்கிற இதனை இப்போது அருளிச்செய்வதற்குப் பிரயோசனத்தைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிறார் "வீடுமன்" என்று தொடங்கி.

தஸ்மிந் அஸ்தமிதே பீஷ்மே கௌரவாணும் துரந்தரே
ஜ்ஞாநாநி அல்பீபவிஷ்யந்தி தஸ்மாத் த்வாம் சோதயாமி அஹம்.

என்பது, பாரதம். தருமபுத்திரனைப் பார்த்துக் கிருஷ்ணன் கூறியது இது.

கேட்கலாவார் - தெரிந்துகொள்ளுமாறு வினவப்படுதற்கு உரியவர்.

3. சுலோகத்திலே ம்ருதே என்னுமல் "அஸ்தமிதே" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கண்களுக்கு' என்று தொடங்கி.

4. ஞானியைச் சூரியனாகச் சொன்னதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "ஞானமாகி ஞாயிறாகி" என்று. இது, திருச்சந்த விருத்தம், 114.

5. 'இதற்குத் தோன்றுதலும் மறைதலும்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, ஒரு மனிதனுடைய மனத்தினை விரும்பி இருக்கையாலே அல்பமாய் இருக்கும் என்பது.

மன்றே; ஆதலால் என்க. [1] வீடுமன் போனல் பின்னைக் கொள்வாரும் கொடுப்பாரும் இன்றிக்கே தொடர்ச்சி அறும். [2] இதற்கு, பட்டர் அருளிச்செய்ததாக, பரிஞை அப்பர் "ஒரு மதிப்பன் தலையில் கிடவாத அன்று கொள்வார் கொடுப்பார் இன்றியே எளிவிலையனுய்ப் போம்" என்று அருளிச்செய்வர். "தஸ்மாத் த்வாம் சோதயாமி அஹம்" - ஆகையாலேகாண் உன்னை விரைவுபடுத்தி 'அவன் பக்கலிலே போய்க் கேள்' என்று சொல்லுகிறது.

சேமம் நன்கு உடைத்துக் கண்டீர் செறிபொழில் அனந்த புரம் - எல்லை இல்லாத இனியதான அந் நகரம்தானே மரண நிலையில் பாதுகாவலாம். தூமம் நல் விரை மலர்கள் - நன்றான தூபம், நறுமணத்தினை யுடைத்தான நல்ல மலர்கள் இவற்றை. துவள் அற ஆய்ந்து கொண்டு - தனக்கும் அவனுக்கும் ஒத்த தாம்படி சிறப்புடையதாக்கிக்கொண்டு. வாமனன் அடிக்கு என்று ஏத்த - தன் உடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளனுய் இருக்குமவன் திருவடிகளுக்கு என்று ஏத்த. வினைகள்தான் மாய்ந்து அறும் - [3] இவன் தன்மைக்குத் தகுதியான தொண்டிலே சேர, விரோதிகள் அடைய அழிந்து போம். (9)

---

1. வீடுமனே வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் எற்றிற்கு? என்ன, 'வீடுமன் போனல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, ஒரு மதிப்பன் தலையிலே கிடவாமையாலே பரிமாற்றம் அறும் என்றபடி.

2. இதற்கு ஒரு பெரியாருடைய சம்வாதத்தைக் காட்டுகிறார் 'இதற்கு, பட்டர்' என்று தொடங்கி. இதற்கு - இச் சுலோகத்துக்கு. பரிஞை - ஊரின் பெயர்.

"இது காட்டாக்கால், சிற்றறிவோர் பெருநூலும், பேரறிவோர் சிறுநூலும், முத்தமிழுள் ஒரு நூற்குரியார் ஏனை இரண்டு நூலும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள் ஒன்றற்குரியார் ஏனை மூன்று நூலும் கேட்பான்புக்கு இடர்ப்பட்டு மயங்குபவாகலின், இஃது ஒரு தலையாற் காட்டல் வேண்டும் என்பது" என்பதனை ஈண்டு ஒரு புடை ஒப்பு நோக்குதல் தகும். நன்னூல்விருத்தியுரை பாயிரம்.

3. வினைகள் மாய்வதற்கு ஏத்துதலைச் சாதனமாகக் கூறுகிறுரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவன் தன்மைக்கு' என்று தொடங்கி.

1013.

மாய்ந்து அறும் வினைகள் தாமே, மாதவா! என்ன; நாளும்
ஏய்ந்த பொன் மதிள் அனந்தபுரநகர் எந்தைக்கு என்று,
[1]சாந்தொடு விளக்கம் தூபம் தாமரை மலர்கள் நல்ல
ஆய்ந்து கொண்டு, ஏத்த வல்லார் அந்தம் இல் புகழினாரே.

பொ - ரை :— திருமகள் கேள்வனே! என்று ஒருகால் கூறிய அளவில் எல்லா வினைகளும் அழிந்து போம்; அதற்கு மேல், எப்பொழுதும் பொருந்திய அழகிய மதில்களாற் சூழப்பட்ட திருவனந்தபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுக்கு என்று நினைத்துக் கொண்டு, நல்ல சாந்தமும் விளக்கும் தூபமும் தாமரை மலர்களும் ஆகிய இவற்றை ஆராய்ந்து எடுத்துக்கொண்டு ஏத்த வல்லவர்கள் எல்லை இல்லாத புகழினை உடையவர் ஆவர்.

வி - கு :— மாதவா! என்ன வினைகள் தாம் மாய்ந்து அறும் என்க. மாதவன் - திருமகள் கேள்வன். என்று ஆய்ந்து கொண்டு ஏத்த வல்லார் அந்தம் இல் புகழினர் என்க.

ஈடு :— பத்தாம் பாட்டு. [2] திருவனந்தபுரத்திலே புக்கு அடிமை செய்கிறவர்கள் பெருமை பேச நிலம் அன்று என்கிறார்.

மாதவா என்ன வினைகள் தாம் மாய்ந்து அறும் - தாய் தந்தையர்கள் பெயரைச் சொல்லப் பல காலமாக ஈட்டிய பாவங்கள் தாமே போகும். [3] அப்பா என்ன உச்சி குளிருங்

---

1. "குன்று தலை மணந்து குழூஉக்கடல் உடுத்த
மண்கெழு ஞாலத்து மாந்தர் ஓராங்குக்
கைசுமந் தலறும் பூசல் மாதிரத்து
நால் வேறு நனந்தலை ஒருங்கெழுந் தொலிப்பத்
தெள்ளுயர் வடிமணி எறியுநர் கல்லென
உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி
வண்டூது பொலிதார்த் திருஞெமர் அகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ் குரல் துழாஅய்
அலங்கல் செல்வன் சேவடி பரவி
நெஞ்சுமலி உவகையர் துஞ்சு பதிப் பெயர"

என்பது, பதிற்றுப் பத்து, செய். 31.

2. இரண்டாமடியினையும் நான்காம் அடியினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "மாதவா என்ன வினைகள் மாய்ந்தறும்" என்பதற்கு, ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'அப்பா' என்று தொடங்கி.

காணும். ஏய்ந்த பொன் மதிள் அனந்தபுரநகர் எந்தைக்கு என்று நல் சாந்தொடு விளக்கம் தூபம் தாமரை மலர்கள் ஆய்ந்து கொண்டு ஏத்த வல்லார் - அங்குத்தைக்கு ஈடான பொன்மதிளையுடைய திருவனந்தபுரத்திலே வசிக்கிற என் சுவாமிக்கு என்று மலர்கள் முதலான கருவிகளைக் கொண்டு அடைய வல்லவர்கள். அந்தம் இல் புகழினரே - "அமரர் ஆவார்" என்கிற அளவு அன்றிக்கே, [1] விண்ணுளாரிலும் சீரியர் ஆவர். (10)

1014.

அந்தம் இல் புகழ் அனந்தபுர நகர் ஆதி தன்னைக்
கொந்து அலர் பொழில் குருகூர் மாறன் சொல் ஆயிரத்துள்
ஐந்திேனாடு ஐந்தும் வல்லார் அணைவர் போய் அமர் உலகில்
பைந்தொடி மடந்தையர்தம் வேய் மரு தோள் இணையே.

பொ - ரை :—எல்லை இல்லாத புகழையுடைய திருவனந்தபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஆதியை, பூங்கொத்துக்கள் மலர்கின்ற சோலைகள் சூழ்ந்த திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களில் இந்தப் பத்துத் திருப்பாசுரங்களையும் கற்று வல்லவர்கள், தேவர் உலகில் சென்று, பசிய வளையலை அணிந்த பெண்களினுடைய மூங்கில் போன்ற தோள்களைச் சேர்வர்கள் என்பதாம்.

வி - கு :—அந்தமில் புகழ் என்பதனை ஆதிக்கு அடை ஆக்கலுமாம். ஆதி-காரணனாக உள்ளவன். வல்லார் தோள் இணை அணைவர் என்க. 'தோள் இணை அணைவர்' என்றது, அவர்களால் உபசரிக்கப் படுவர்கள் என்றவாறு.

ஈடு :—முடிவில், [2] இத் திருவாய்மொழி வல்லார் திரு நாட்டில் உள்ளார்க்கு இனியர் ஆவர் என்கிறார்.

அந்தம் இல் புகழ் அனந்த புர நகர் ஆதி தன்னை - திருவனந்த புரத்திலே எல்லை இல்லாத நற்குணங்களை யுடையனாய் உலகத்திற்கெல்லாம் காரணனாக உள்ளவனை ; [3] அடைகின்ற

---

1. "விண்ணுளாரிலும்" என்பது, திருவிருத்தம், 79.

2. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

3. மேல் திருப்பாசுரத்தில் "அந்தம் இல் புகழினரே" என்றதனையும் சேர்த்துக் கொண்டு கருத்து அருளிச்செய்கிறார் 'அடைகின்றவர்களும்' என்று தொடங்கி.

வர்களும் அந்தம் இல் புகழினர்கள்: அடையப்படுகின்றவனும் அந்தம் இல் புகழினன் காணும். [1] பரமபதத்தை விட்டுத் திருவனந்தபுரத்திலே வந்து அடியார்களுக்காகத் திருக்கண் வளர்ந்தருளுகையாலே புகழிற்கு ஒரு முடிவு இல்லை ஆயிற்று அவனுக்கு; பற்றினை விட்டு உகந்தருளின நிலத்திலே அடிமை செய்கையாலே புகழிற்கு அந்தம் இல்லை ஆயிற்று இவர்களுக்கு. [2] இவனை அடிமை கொள்ளுகையாலே புகழிற்கு எல்லை இல்லை ஆயிற்று அவனுக்கு: அவனுக்கு அடிமை செய்கையாலே புகழிற்கு அந்தம் இல்லை ஆயிற்று இவர்களுக்கு. [3] இந்த உலகத்திலே பிறப்பு இறப்புக்களிலே உழன்று திரிகிற இவனுக்குப் புகழ் உண்டாகில் ஆயிற்றுப் பரமபதத்தில் இருந்தால் அவனுக்குப் புகழ் உண்டாவது. [4] இந் நிலத்தை விட விட இவனுக்குப் புகழ் உண்டாமாறு போலே, அந் நிலத்தை விட விட அவனுக்குப் புகழ் உண்டாம். [5] இருவர்க்கும் இரண்டும் கிடைக்காத பேறு ஆமே அன்றே.

கொந்து அலர் பொழில் குருகூர் மாறன் சொல் ஆயிரத்துள் - எப்பொழுதும் மலர்களையுடைய சோலைகளாற் சூழப்பட்ட திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. ஐந்தினோடு ஐந்தும் வல்லார் - [6] இரத்தினங்களை முகம் அறிந்து கோத்துச் சேர்த்தியைக் கொண்டாடுமாறு போலே, ஐந்து ஐந்தாக ஆயிற்று அநுபவிக்கிறது. அமர் உலகில் போய் பைந்தொடி மடந்தையர் வேய் மரு தோள் இணை அணவர்-ஸ்ரீ வைகுண்

---

1. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'பரமபதத்தை விட்டு' என்று தொடங்கி.

2. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'இவனை' என்று தொடங்கி.

3. அனந்தபுரநகரிலே வந்த பின்பு "அந்தம் இல் புகழ்" என்பது என்? பரமபதத்தில் இருக்கும்போது அந்தம் இல் புகழ் இல்லையோ? என்ன, 'இந்த உலகத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'இந் நிலத்தை' என்று தொடங்கி.

5. மேலே கூறிப் போந்தவற்றால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'இருவர்க்கும்' என்று தொடங்கி.

6. பத்தும் என்னாமல் "ஐந்தினோடு ஐந்தும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இரத்தினங்களை' என்று தொடங்கி.

டத்து ஏறப் போய், [1]"நூறு பேர்கள் மாலைகளைக் கையில் உடையவர்களாய் அந்த முக்தனை எதிர்கொண்டு அழைக்கிறார்கள்" என்பது போன்றவைகளில் சொல்லுகிறபடியே, அங்குத்தை அரமகளிர்களுடைய விருப்பத்துக்குப் பொருளாக இருப்பர் என்றபடி. [2]"முடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ள" என்றதனோடு "வேய் மரு தோள் இணை அணைவர்" என்கிற இதனோடு வாசி இல்லை. [3]"மதி முக மடந்தையர் ஏந்தினர் வந்தே" என்னக் கடவதன்றோ. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

கெடும் இடர் வைகுந்தத்தைக் கிட்டினாற் போல்
தடமுடை அனந்தபுரம் தன்னில்—பட அரவில்
கண் துயில் மாற்கு ஆள்செய்யக் காதலித்தான் மாறன் உயர்
விண் தனில் உள்ளோர் வியப்பவே.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. தம் பஞ்ச ஶதாநி அப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி
ஶதம் மாலா ஹஸ்தாஃ
என்பது, கௌஷீதகி உபநிடதம்.

2. "முடியுடை" என்பது, திருவாய்மொழி, 10. 9 : 8.

3. "மதிமுக மடந்தையர்" என்பது, திருவாய்மொழி, 10. 9 ; 10.

மூன்றாந் திருவாய்மொழி—"வேய் மரு தோள்"

முன்னுரை

—:o:—

ஈடு:—[1]திருவனந்தபுரத்திலே புக்குப் பாரித்த படியே அடிமைசெய்யப் பெறாமையாலே, ஐயப்பட வேண்டும்படியாய் வந்து விழுந்தது. [2] ஸ்ரீ வைஷ்ணவர்களும் தாமுமாய் அடிமை செய்யவேண்டும் என்று பாரித்தார்; பாரித்தபடியே அந் நகரிலே போய்ப் புக்கு அடிமைசெய்யப் பெற்றிலர். அந் நகரிலே அப்போதே சென்று சேரப் பெறாமையாலும், பாரித்த படி அடிமைசெய்யப் பெறாமையாலும், [3] பல காலம் பிரிந்து போந்த வாசனையாலும் - தொன்றுதொட்டு வருகின்ற சரீரத்தின் சேர்க்கையை நினைந்து அஞ்சின அச்சத்தாலும், சர்வேஸ்வரனுடைய சுவாதந்திரியத்தை நினைந்து அஞ்சினபடியாலும் - அதாவது, [4]சிசுபாலனுக்குத் தன்னைக் கொடுத்தும் ஸ்ரீபரதாழ்வான் வளைப்புக் கிடக்க மறுத்து மீண்டு போரும்படியும் அன்றோ சுவாதந்திரியம் இருப்பது; அதனாலும், இனி, சர்வேஸ்வரன் தானே வந்து அங்கீகரிக்கைக்கு ஈடான பக்தி தமக்கு இல்லை என்று இருக்கையாலும், இன்னமும் இவ் உலகத்திலே வைக்கில் செய்வது என்? என்னும் அச்சத்தாலே துன்புற்றவராய்த் தமக்குப் பிறந்த நிலைவேறுபாட்டினை ஒரு பிராட்டி பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

---

1. மேல் திருவாய்மொழியிலே, திருவனந்தபுரத்தை அடைதலே பேறாக அறுதியிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களும் தாமுமாக அடிமைசெய்யப் பாரித்தவர், இதிலே துக்கப்படுவான் என்? என்ற சங்கையைத் திருவுள்ளம்பற்றி, அதற்கும் இதற்கும் உள்ள இயைபினைச் சுருங்க அருளிச்செய்கிறார் 'திருவனந்த புரத்திலே' என்று தொடங்கி.

2. சுருக்கமாக அருளிச்செய்த இயைபினை விரித்து அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ வைஷ்ணவர்களும் தாமுமாய்' என்று தொடங்கி.

> "பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்
> காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்"

என்னுமவராகையாலே அடிமை செய்யப் பெற்றிலர் என்றபடி.

3. 'பல காலம் பிரிந்து போந்த வாசனை' என்றது, யாதானும் பற்றி நீங்கித் திரிந்த வாசனையைத் தெரிவித்தபடி. திருவிருத்தம், 95. இதனை விவரணம் செய்கிறார் 'தொன்று தொட்டு' என்று தொடங்கி.

4. சுவாதந்திரியத்துக்கு அஞ்சக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சிசுபாலனுக்கு' என்று தொடங்கி.

[1] அச்சம் நீங்குதற்கு உடலான இவைதாமே அன்றோ இப்போது இவர்க்கு அச்சத்திற்குக் காரணங்கள் ஆகின்றன. [2] இப்போதே அந் நகரிலே சென்று சேரப் பெற்றிலோம் என்று இருக்கவேண்டா: அவனை நினைந்தால் "காலாழும் நெஞ்சு அழியும்" என்கிறபடியே, பக்தியினாலே பரவசப்பட்ட காரணத்தாலே இப்போது அடி இடமாட்டாது ஒழிகிறார் ஆகையாலே. அடிமை செய்யப் பெற்றிலோம் என்று அஞ்ச வேண்டா: "புகழும் நல் ஒருவன்" என்கிற திருவாய்மொழியின் படியே இருந்த இடத்தே இருந்து ஏதேனுமாகச் சொன்ன வற்றையே தனக்கு அடிமையாகக் கொள்ளும் தன்மையன் ஆகையாலே. [3] இன்று நினைத்தவற்றையும் செய்தவற்றையும் எல்லாம் தனக்கு அடிமையாக நினைத்திருக்குமவன் அன்றோ அவன். [4] இனித் தமப்பன் பகையாக அவனிலும் இவன் அண்ணியன் என்று வரநின்ற பிரஹ்லாதன் அன்றோ முடிவிலே வந்து எதிரிட்டான்.

[5] ஆக, மயக்கம் கொண்டவனுக்குப் பிறந்த தெளிவு போலே, இச் சரீரத்தோடு சேர்ந்திருக்கிறவனுக்குப் பிறக்கும் ஞானத்தினை நம்ப ஒண்ணாது என்றே அன்றோ, இவர் தாம் இச் சரீர சம்பந்தத்தை நினைந்து "தேறேல் என்னை" என்று அஞ்சிற்றும்; அங்ஙன் அஞ்சவேண்டா: [6] "முடியானே"

---

1. மேலே கூறிப் போந்தவையெல்லாம் அச்சம் நீங்குதற்குக் காரணங்கள் அன்றோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அச்சம் நீங்குதற்கு' என்று தொடங்கி.

2. மேலே கூறிய ஐந்தும் அச்சம் நீங்குதற்குக் காரணமா மாற்றைக் காட்டுகிறார் 'இப்போதே' என்று தொடங்கி. "காலாழும்" என்பது, பெரிய திருவந்தாதி, 34.

3. அவன் அப்படிக் கொள்ளும் தன்மையனோ? என்ன, 'இன்று நினைத்தவற்றையும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. சரீரத்தோடு சேர்ந்திருக்குமதனை நினைத்தால் அச்சத்திற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனித் தமப்பன்' என்று தொடங்கி.

5. ஆயின், ஞானம் பிறந்தது யாதாயிற்று? என்ன, 'ஆக' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "தேறேல்" என்பது, திருவாய்மொழி, 2. 9: 10.

6. இச் சரீர சம்பந்தம் அச்சம் நீங்குதற்குக் காரணமானபடி யாங்ஙனம்? என்ன, "முடியானே" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, பிரஹ்லாதாழ்வானைப் போன்று இவ் உலக இன்பத்திலே மண்டிய உறுப்புக்களை உடையவராதல் அன்றிக்கே, இவர் பகவத் விஷயத்திலே மண்டின உறுப்புக்களை உடையவர் ஆகையாலே அஞ்ச வேண்டா என்றபடி,

என்றதிருவாய்மொழியில் கூறப்பட்ட உறுப்புக்களையுடையவர் ஆகையாலே.[1] அவனுடைய சுவாதந்திரியத்தை நினைத்து அஞ்ச வேண்டா: "எல்லாப் பாவங்களினின்றும் உன்னை விடுவிக்கிறேன்; நீ துக்கப்படாதே" என்கிறபடியே, பாவங்களைத் துண்டித்துக்கொண்டு போகைக்கும் உடலா யிருக்கையாலே. பக்தி தமக்கு இல்லை என்று இருக்கவேண்டா: பிரபத்தியை உபாயமாகப் பற்றினவர் ஆகையாலே. இனி, [2]"முக்தன் மக்களால் சூழப்பட்ட சரீரமாகிய இதனை நினைத்திலன்" என்கிறபடியே, இதனை நினையாதபடியான சாக்ஷாத்காரம் இல்லாமல் படுத்துகிற பாடே அன்றோ இது.

[3]நேரே கண்கூடாகக் காண்கிற காட்சியும் பயன் இல்லாததாய், கூட இருக்கச்செய்தே 'பிரிந்தான்' என்று மயங்கும்படி பிரிவால் வந்த வாசனை மேற்கொள்ளுகிறது அன்றோ. [4]தகுதி கிடந்து, படுத்துகிற பாடே அன்றோ. [5]"மயர்வுஅற மதி நலம் அருளினன்" என்கிறபடியே, பகவானுடைய திரு அருளால் கிடைத்ததாய், பரபக்தி ரூபமாய், ருசிகாரியமாய் இருக்கிற

இனி, 'பல காலம் பிரிந்து போந்த வாசனையாலும்' என்ற மூன்றாவது காரணம், அச்சம் நீங்குதற்குக் காரணமாமாற்றை அருளிச்செய்திலரே? எனின், "முடியானே" என்று தொடங்கிக் கூறும் காரணத்தையே அதற்கும் காரணமாகக் கொள்க.

1. சுவாதந்திரியம் அச்சம் நீங்குதற்குக் காரணமாம் படியை அருளிச்செய்கிறார் 'அவனுடைய சுவாதந்திரியத்தை' என்று தொடங்கி.

ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுசஃ.

என்பது, ஸ்ரீ கீதை, 18 : 66.

2. ஆயின், எதனாலே ஐயம் கொள்ளுகிறார்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முக்தன்' என்று தொடங்கி.

ஸஃ உத்தமஃ புருஷஃ ஸதத்ரபர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாணஃ
ஸ்த்ரீபிர்வா யாநைர்வா ஜ்ஞாதிபிர்வா நோபஜநம் ஸ்மரந் இதம் ஶரீரம்.

என்பது, சாந்தோக்யம், 8. 12 : 3.

சாக்ஷாத்காரம் - நேரே கண்கூடாகக் காணும் காட்சி.

3. சாக்ஷாத்காரம் இல்லை என்கிறது என்? "கெடும் இடராய எல்லாம்" என்ற திருவாய்மொழியிலே கண்கூடாகக் காண்டலைப் போன்றது ஒரு நினைவினை மனத்தின்கண் உண்டாக்கினானே அன்றோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நேரே' என்று தொடங்கி.

4. 'மேற்கொள்ளுகிறதன்றோ' என்றதனை விவரணம் செய்கிறார் 'தகுதி கிடந்து' என்று தொடங்கி. தகுதியாவது, பிரிவிற்குக் காரணமான சரீரத்தையுடைத்தா யிருத்தல்.

5. ஐயப்படுவது மயக்கத்தின் காரியம் அன்றோ? அது விடத்தக்கது அன்றோ? என்ன, "மயர்வு அற மதி நலம்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

இருட்சி இருக்கிறபடி அன்றே இது. [1]இனி ஈஸ்வரனுக்குக் கால்நடையாடாதது ஒரு தேசத்திலே இவரை வைத்து அதனைப் போக்கலாமத்தனை.

[2]கலந்து பலநாள் பிரிந்து போந்தாள் ஒரு பிராட்டியாய், அவ் வாசனையாலே, கிருஷ்ணன் [3]கூட இருக்கச் செய்தேயும், இவன் பண்டு பிரிந்து போந்த விடியற்காலமும் வந்து அக் காலத்துக்கு அடைத்த காற்றுக்கள் அடிக்கையாலும், குயில்கள் கூவுகையாலும், மயில்கள் ஆலிக்கையாலும், காடு எங்கும் ஒக்கக் கன்றுகளும் பசுக்களும் பரக்கையாலும், "இக் காலத்தில் [4]அவன் போகை தவிரான்; [5]பசுக்களை ஒரு தலையாகக் காப்பாற்றுமவனுகையாலே அவற்றை விட்டு நம்மோடு இருப்பான் ஒருவன் அல்லன்; ஆனபின்பு அவன் போனான்" என்று, கூட இருக்கச் செய்தேயும் அவன் பிரிவினை நிச்சயித்து, "இன்னுயிர்ச் சேவல்," "மல்லிகை கமழ் தென்றல்" தொடக்கமான திருவாய்மொழிகளில் அவன் முன்னர் இல்லாமையால் பட்ட துக்கம் முழுதினையும் அவன் கண்முகப்பே படுகிறாள். எல்லாவற்றையும் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்த அவனாலும் போக்க ஒண்ணாதபடி ஆயிற்று இவ் ஆபத்து. [6]அதாவது, போனாய் வருகிறான் அல்லன், போக நினைத்தானைத் தவிருகிறான் அல்லனே என்றபடி.

---

1. இவ் ஐயம் இவர்க்கு நீங்குவது எப்போது? என்ன, 'இனி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'ஒரு பிராட்டி பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்' என்று மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'கலந்து' என்று தொடங்கி.

3. இத் திருவாய்மொழியில் வருகின்ற "நீ கண்ணா" என்றதனைத் திருவுள்ளம்பற்றிக் 'கூட இருக்கச் செய்தேயும்' என்கிறார். "அவை மேய்க்கப் போதி", "பசு நிரை மேய்ப்பு ஒழிப்பான்" என்பன போன்றவைகளால் 'விடியற் காலம்' என்பது போதரும். "வாடை தூவ" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'அக்காலத்துக்கு அடைத்த காற்றுக்கள் அடிக்கையாலும்' என்கிறார். "இன நிரை மேய்க்க" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'காடு எங்கும் ஒக்க' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. "அவை மேய்க்கப் போதி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அவன் போகை தவிரான்' என்கிறார்.

5 தவிரான் என்பதற்குரிய காரணத்தை அருளிச்செய்கிறார் 'பசுக்களை' என்று தொடங்கி.

6. அது எப்படி? என்ன, 'அதாவது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

இப்படி நோவுபட்டு, "நீ பசு மேய்க்கப் போதலை நிச்சயமாகத் தவிராய்: [1]நீ போதல் எனக்கு விருப்பம் இல்லாத காரியம்: ஆகையாலே, உன் செலவினை விலக்க வேண்டும் என்று நினையாநின்றேன்; இதற்கு நா நீர் வருகிறது இல்லை; அதற்கு மாற்றாக [2]உன் கையை என் தலையிலே வைக்க வேண்டும்: நீ பசு மேய்க்கப் போகாது ஒழியவேண்டும்; 'தீங்கினை விளைக்கக் கூடிய காட்டில் நீ பசு மேய்க்கப் போனால் அங்குள்ள அசுரர் இராக்கதர்கள் முதலியோர்களாலே என் புகுகிறதோ?' என்று அஞ்சாநின்றேன்" என்கிறாள். [3]இனி, "தாயும் தகப்பனும் உடன் பிறந்தோனும் வசிக்கும் இடமும் பாது காப்பவனும் நண்பினனும் கதியானவனும் ஆகிய அனைவரும் நாராயணனே" என்கிறபடியே, அவன் எல்லாவகையான உறவுமாக இருப்பதைப் போன்று, இத்தலைக்கும் சம்பந்த ஞானம் பிறந்தால் எல்லாப் பிரிவுகளும் உளவாய் இருக்கும் அன்றோ; [4]"எந்த எந்தக் காலங்களில் கௌசலையார் வேலைக்

1. "வெவ்வுயிர்கொண்டு எனது ஆவி வேம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நீ போதல் எனக்கு விருப்பம் இல்லாத காரியம்' என்கிறார்.

2. "அணி மிகு தாமரைக் கையை" என்பது போன்றவைகளையும், "வீவ நின் பசு நிரை மேய்க்கப் போக்கு" என்றதனையும், "அசுரர்கள் தலைப் பெய்யில் எவன் கொல்" என்றதனையும் திருவுள்ளம்பற்றி, 'உன் கையை' என்றது முதல் 'அஞ்சா நின்றேன்' என்பது முடிய அருளிச்செய்கிறார்.

3. "அஞ்சன வண்ணனை" என்கிற பெரியாழ்வார் திருமொழிப் பாசுரப்படியே "என்செயப் பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவம்" என்று தாயார் அன்றோ பரியக் கடவள்? தாய்க்கு உண்டான பரிவு இவர்க்கு உண்டாகக் கூடுமோ? என்று சுவாபதேசத்திலும், மனைவிக்கு மாதாவுக்கு உண்டான பரிவு உண்டாகக் கூடுமோ? என்று அந்யாபதேசத்திலும் வருகிற இரண்டு சங்கைகட்கும் விடை அருளிச்செய்கிறார் 'இனி' என்று தொடங்கி.

"மாதா பிதா ப்ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத்
கதி: நாராயண:" என்பது, சுபாலோபநிடதம்.

என்பது, என் சொல்லியவாறோ? எனின், அவனுடைய எல்லா உறவு முறைகளுக்குள்ளே புத்திரனாக இருக்கும் தன்மையும் ஓர் உறவு ஆகையாலே, புத்திரனிடத்திலே தாய்க்குள்ள பரிவு ஈஸ்வரனிடத்திலே இவர்க்கு நடக்கும் என்பதனைத் தெரிவித்தபடி.

4. மனைவியான ஸ்ரீ கௌசலையார்க்குச் சக்கரவர்த்தியிடத்திலே தாயினுடைய பரிவு நடந்தாற் போன்று, இவளுக்கும் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் தாயினுடைய பரிவு நடக்கும் என்பது "எந்த எந்த" என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகத்தின் கருத்து.

யதா யதா ஹி கௌஸல்யா தாஸீவச்ச ஸகீவச
பார்யாவத் பகிநீவச்ச மாத்ருவச்ச உபதிஷ்டதே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 18: 68.

காரி, தோழி, மனைவி, உடன்பிறந்தவள், தாய் ஆகிய இவர்களைப் போன்று இருந்தாரோ?" என்கிறபடியே.

ஆனபின்பு, நீ செல்லில் நான் உளளர்கமாட்டேன் என்று இப்படி நோவுபட, அவனும் இவை முழுதினையும் நினைந்து, 'நான் போகிறேன் அல்லேன்' என்று, தன் போகாமையை இவள் நெஞ்சிலே படுத்தித் [1]தரிப்பிக்கத் தரித்ததாய்த் தலைக்கட்டுகிறது இத் திருவாய்மொழியில்.

[2]இதனால், திருமந்திரத்தில் கூறிய அடிமைத் தன்மையின் எல்லை இருக்கிறபடியைத் தெரிவித்தபடி. [3]"எம் மா வீடு" என்ற திருவாய்மொழியில் "தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே" என்று அறுதியிட்டது ஒன்று உண்டே அன்றோ; அதனை அழிக்கிறதாயிற்று இங்கு. [4]என்னைக் கொள்ள வேண்டும் என்றே அன்றோ அங்குச் சொல்லிற்று; என்னோடு கலக்கவுமாம், வேறே சிலரோடே கலக்கவுமாம்; அங்குத்தைக் குறை

அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்ப்
பொன்னின் அழகும் புவிப் பொறையும்-வன்னமுலை
வேசி துயிலும் விறல் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

கார்யேஷு தாஸி கரணேஷு மந்த்ரி
ரூபேஷு லக்ஷ்மி க்ஷமயா தரித்ரி
ஸ்நேஹேச மாதா ஶயநேஷு வேஸ்யா
ஷட்கர்ம யுக்தா குலதர்ம பத்நி.

என்பன, மேற் சுலோகப் பொருளோடு நினைவு கூரத்தக்கன.

1. "செங்கனிவாய் எங்கள் ஆயர்தேவு" என்றதனைத் திருவுள்ளம் பற்றித் 'தரிப்பிக்கத் தரித்ததாய்' என்கிறார்.

2. இத் திருவாய்மொழியில் ஆழ்வாருடைய பாரதந்திரியத்தினுடைய எல்லை பிரகாசிக்கிறது என்கிறார் 'இதனால்' என்று தொடங்கி. "உன்தன் திரு உள்ளம் இடர் கெடும் தோறும்" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'அடிமைத் தன்மையின் எல்லை' என்கிறார். அடிமைத் தன்மையின் எல்லையாவது, அவனுக்கே உறுப்பாகப் பயன்படுகை.

3. இதுதான் "எம் மா வீட்டுத் திறமும்" என்ற திருவாய்மொழியிலும் கூறிற்றிலதோ? அதில் இதற்கு வேறுபாடு யாது? என்ன, 'எம் மா வீடு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, அதிலும் இது சாரமாக இருக்கும் என்றபடி.

4. சாரமாக இருக்கும் தன்மையை விவரணம் செய்கிறார் 'என்னை' என்று தொடங்கி.

திருமந்தனை வேண்டுவது என்கிறது இங்கு. [1]அங்கு "எனக்கு" என்ற இடம் புருஷார்த்தமாகைக்காகச் சொன்ன இத்தனை அன்றோ. [2]அது அறிவில் பொருளின் வேறுபாட்டிற்கு உடலாமித்தனை. [3]இவன் தான் எனக்கு என்னுதை அன்று புருஷார்த்தம் ஆகாது; அவன் தான் விரும்பி காரியத்தைச் செய்யவும் தொடங்கான்.

1015

வேய் மரு தோள் இணை மெலியும் ஆலோ!
மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்காக்
காமரு குயில்களும் கூவும் ஆலோ!
கணமயில் அவை கலந்து ஆலும் ஆலோ!
ஆ மருவு இனநிரை மேய்க்க நீ போக்கு
ஒரு பகல் ஆயிரம் ஊழி ஆலோ!
தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தி ஆலோ!
தகவிலை தகவிலையே நீ, கண்ணா!

பொ - ரை:—மூங்கில் போன்ற இரண்டு தோள்களும் மெலியா நின்றன, என்னுடைய வருத்தத்தையும் தனிமையையும் நோக்காத விரும்பத்தக்க குயில்களும் கூவாநின்றன, கூட்டமான மயில்களும் கலந்து ஆடா நின்றன, பொருந்திய இனம் ஒத்த பசுக் கூட்டங்களை மேய்ப்பதற்கு நீ செல்லுகின்ற ஒரு பகற்காலமும் ஆயிரம் ஊழிக் காலமாக இருக்கின்றது, தாமரை மலர் போன்ற கண்களைக் கொண்டு ஈராநின்றாய், கண்ணா! நீ, அருளுடையவன் அல்லை, அருளுடையவன் அல்லை என்கிறாள்.

வி - கு :—ஆல் : அசை நிலை. ஓகாரங்கள் துக்கத்தின் மிகுதியைக் காட்ட வந்தன. நோக்காத குயில்கள் என்க. போக்கு - போகின்ற. ஈர்தல் - பிளத்தல்.

---

1. ஆனால், அங்கு "எனக்கு" என்று சொல்லுவான் என்? என்ன, 'அங்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'புருஷார்த்தமாகைக்காக' என்றது, தனக்கு இன்பம் சிறிதும் இன்றிக்கே, அவன் கொடுக்கிற பேறு ரசமாகைக்காக என்றபடி. "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்றதன் உட்பொருளை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

2. "எனக்கே" என்றதற்கு, வேறும் ஒரு காரணம் அருளிச்செய்கிறார் 'அது' என்று தொடங்கி. என்றது, சேதனனுடைய வாசி தோன்ற "எனக்கு" என்கிறது என்றபடி.

3. மேலே கூறிய இரண்டனையும் விவரணம் செய்கிறார் 'இவன் தான்' என்று தொடங்கி.

ஈடு:—முதற் பாட்டு. [1]அவன் பிரிகிருன் என்கிற துக்கம் செல்லாநிற்க, அதற்கு மேலே, குயில் முதலான பொருள் களின் துன்புறுத்தும் ஒலியாலும் அவன் நோக்காலும் தனக் குப் பிறந்த துன்பத்தினைத் தோழிமார்க்குச் சொல்லுமாறு போலே அவனுக்குச் சொல்லுகிருள்.

வேய் மரு தோள் இணை மெலியும் - சுற்றுடைமையாலும் பசுமையாலும் மூங்கிலை ஒரு வகைக்குப் போலியாகச் சொல் லலாயிருக்கின்ற தோள்கள் இரண்டும் மெலியாநின்றன என்கிருள்; [2]செருக்கனாய் இருக்கும் அரசபுத்திரனுக்கு 'உன் பூந்தோட்டம் அழிகிறது' என்னுமாறு போலே. தன்னு டைய பிரிவில் இவள் ஆற்றாமை கேட்டார் வாய் கேட்கை அன்றிக்கே கைம்மேலே காணலாயிருக்கிறது காணும் இவள் மெலிவு. [3] இவளுடைய மயக்கத்தைப் பின் சென்று, கிண்ண கத்திலே அடிச்சுடுவாரைப் போலே அவன் கூட இருக்கச் செய்தேயும் மெலியா நின்றன ஆயிற்றுத் தோள்கள். [4] கூட இருந்தாலும் பயன் இல்லையே அகவாயிலே பிரிவு உண்டா னல்; அதன் காரியமான மெலிவு பிறந்தன்றி நில்லாதே. [5] தன் தோள்கள் மெலிகிற இதனை 'உன்னுடைய தோள்கள் மெலியாநின்றன' என்பாரைப் போலே சொல்லுகிருள் காணும்! [6]தேவதத்தன் என்றதோடு வாசுதேவன் என்ற

---

1. பின் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிருர்.

2. தோள்களை வருணித்து இவை மெலியாநின்றன என்று அவனுக்குச் சொல்லுவதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'செருக்கனாய் இருக்கும்' என்று தொடங்கி.

3. கூட இருக்கச்செய்தே மெலியக் கூடுமோ? என்ன, 'இவளுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். கிண்ணகம் - ஆற்றுப் பெருக்கு.

4. மேலதற்கே வேறும் ஒரு காரணம் அருளிச்செய்கிருர் 'கூட இருந் தாலும்' என்று தொடங்கி.

5. வியாக்கியாதாவின் ஈடுபாடு, 'தன் தோள்கள்' என்று தொடங்கும் வாக்கியம். ஆற்ருமையின் மிகுதியைக் குறித்தவாறு. இவள் தோள் மெலிந் தால் தனக்கு விருப்பமான பொருள் அழிகிறதே என்று வியசனப்படுகை அன்றிக்கே, இவளுக்கு வந்த மெலிவு தனக்கு வந்ததாய் இருக்கையாலும் அவனுக்கு வியசனம் இரட்டித்திருக்கும் என்பது கருத்து.

6. இவள் தோள் மெலிந்தால் வியசனம் அவனதாக இருக்கும் என்ப தற்குச் சுவாபதேசப் பொருள் அருளிச்செய்கிருர் 'தேவதத்தன்' என்று தொடங்கி.

சொல்லோடு வாசி அறும்படி அவனுக்குச் சரீரமாக அன்றோ இவ் உயிர்ப் பொருள் இருப்பது. [1] நீ கலக்கப் புக்கால் விடாய் ஆறுவது எங்கே? [2]மெல்லியல் தோள் தோய்ந்தே அன்றோ விடாய் ஆறுவது. நீ சேர்த்தி அழகு சொல்லி வாய் வெருவும் தோள்கள் படுகிற பாடு பாராய் என்பாள் 'இணை' என்கிறாள். [3]தன் அழகைத் தான் கொண்டாடுமவள் அல்லளே: அவன் சொல்லக் கேட்ட செவி ஏற்றாலே சொல்லுகிறாள். இனி, நீ வந்தாலும் உயிர் இல் பொருளுக்குச் சமம் காண் என்பாள் 'மெலியும்' என்கிறாள். ஆலோ - துக்கத்தின் மிகுதியைக் குறித்தபடி.

என் மெலிவும் என் தனிமையும் - [4]உலகத்தார் மெலிவும் தனிமையும் போல் அல்லவே என் மெலிவும் என் தனிமையும். [5] உன் மெலிவும் உன் தனிமையும் போல் அல்ல; [6]கூட இருக்கச் செய்தே வருகிற தனிமையும், பிரியாதிருக்கச்செய்தே வருகிற மெலிவுமே அன்றோ இவை. [7]"பொன் செய் பூண் மென் முலைக்கு என்று மெலியுமே" என்றும், "மிக மேனி மெலிவு

---

1. "மெலியும்" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'நீ கலக்கப் புக்கால்' என்று தொடங்கி.

2. அப்படி இவள் தோள்கள் விடாய் ஆறும் இடமோ? என்ன, 'மெல்லியல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'மெல்லியல்' என்பது, திருநெடுந்தாண்டகம், 13.

3. அவன் வாய் வெருவும் தோள் என்பான் என்? தன் தோள் அழகினைத் தானே சொல்லுகிறாள் ஆனாலோ? எனின், 'தன்னழகை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "என் மெலிவும் என் தனிமையும்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உலகத்தார்' என்று தொடங்கி. "என்" என்பதனை முன்னும் கூட்டுக.

5. மேலே உலகத்தாரை வேறுபடுத்தினார்; இப்போது ஈஸ்வரனை வேறுபடுத்திக் காட்டுகிறார் 'உன் மெலிவும்' என்று தொடங்கி.

6. உலகத்தாரும் ஈஸ்வரனும் ஆகிய இவர்களுடைய மெலிவும் தனிமையும் போன்றது அல்லாதவாறு எப்படி? என்ன, 'கூட இருக்கச்செய்தே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

7. "என் மெலிவும் என் தனிமையும்" என்பதற்கு, உலகத்தாரிலும் ஈஸ்வரனிலும் வேறுபடுத்திப் பொருள் அருளிச்செய்தார் மேல்; தனக்கு இப்பொழுது உண்டாய் இருக்கிற மெலிவு தனிமைகளின் அளவுதான், இது காறும் பட்ட மெலிவு தனிமைகளின் அளவு அன்று என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் "பொன்செய்" என்று தொடங்கி.

"பொன்செய்" என்பது, திருவாய். 4. 3 : 10.
"மிகமேனி" என்பது, திருவாய். 9. 7 : 10.

எய்தி" என்றும், [1]"தமியம் ஆலோ" என்றும் சொன்னவற்றின் அளவு அல்லவே அன்றோ. [2]அவன், தன் பக்கல் இல்லாத காலத்தில் பட்டவை அன்றோ அவை; கூட இருக்கச் செய்தே வருகின்றவை அன்றோ இவை. [3]"தாம் தம்மைக் கொண்டு அகறல் தகவு அன்று" என்கிறபடியே, தாம் போவார் தம்மை வைத்தன்றோ போகவேண்டும் என்னக் கூடிய அவளுக்கு, கூட இருக்கச் செய்தே போனான் என்று நினைக்கவுமாம்அன்றோ அன்பின்தன்மையாலே. [4]அவன்தான் போனாய் வருகிறான் அல்லன், போக நினைத்தானாய்த் தவிருகிறான் அல்லன்; அவனாலும் செய்ய இயலாத காரியம் அன்றோ இது. [5]அவன் தானும், இவள் மெலிவில் மெய்ப்பாட்டினைக் கண்டு 'நாம் பிரிந்தேமோ?' என்று மயங்கும்படி அன்றோ இருக்கிறது. [6]இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காய் ஆனால் தெளிய விரகு இல்லை. [7]இதுதான் அவனுடைய புண்ணிய பலம் இருந்தபடி அன்றோ. [8]முன்பு இவள் பிரிவு ஆற்றாமையாலே பட்டவை எல்லாம் தான் கண்டு அறியானே; தோழிமார் மற்றையார் சொல்லக் கேட்டார் வாய் கேட்குமித்தனையே.

---

1. "தமியமாலோ" என்பது, திருவாய். 9. 9 : 2.

2. அதனை விவரணம் செய்கிறார் 'அவன், தன்பக்கல்' என்று தொடங்கி.

3. கூட இருக்கச் செய்தே போனான் என்று நினைக்கலாமோ? என்ன, "தாம் தம்மை" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

"தாம் தம்மை" என்பது, திருவாய்மொழி, 9. 7 : 9. என்றது, அங்கு அசம்பாவிதத்தைக் கூறியது போன்று, இங்கு இதுவும் கூடும் என்றபடி.

4. இப்படி நினைக்கிறவளுக்கு யாதாயினும் ஒரு பரிகாரம் செய்ய ஒண்ணாதோ? என்ன, 'அவன்தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. 'அவனாலும் செய்ய இயலாத காரியம்' என்றதன் முடிவின் எல்லை 'அவன் தானும்' என்று தொடங்கும் வாக்கியம்.

6. மேலே கூறிய வாக்கியத்தால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'இருவரும்' என்று தொடங்கி.

7. இவ் ஆற்றாமையானது அவனுக்குப் பெரும் பேறாக இருக்கும் என்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி. 'இதுதான்' என்றது, துன்பத்திற்குக் காரணமான அன்புதான் என்றபடி.

8. மேற் கூறியதனை விவரணம் செய்கிறார் 'முன்பு இவள்' என்று தொடங்கி.

[1]"ஏ காற்றே! என் அன்புக்கு உரிய சீதை எங்குஇருக்கிருளோ அங்குச் சென்று அச் சீதையைத் தொட்டு மீண்டு வந்து என்னையும் தொடு" என்பது போன்று. இப்போது, தன் கண்களாலே காணப் பெற்றனே; [2]இவள்தான் தோழிமாரோடு சொல்லுமதனை இப்போது அவனோடு சொல்லுகிருள்.

யாதும் நோக்கா - ஒன்றையும் பார்க்கிறன இல்லை. என்றது, தோள்களின் மெலிவும், தனிமையும் இவை ஒன்றும் பார்க்கிறன இல்லை என்றபடி. காமரு குயில்களும் - காமருதல் - விருப்பம் உறுதல். [3] இவற்றினுடைய சேர்க்கை பிரிவிற்கு உடலாக இராமையாலே மேன்மேல் என விருப்பத்தை யுடைத்தாயிருக்கும். சேர்க்கை பிரிவோடே கூடி இருக்கும் என்னும் அச்சம் இல்லை இவற்றுக்கு. அவனே அன்றி இவையும் துன்புறுத்துகின்றன என்பாள் 'குயில்களும்' என்கிருள். என்றது, நீ துன்புறுத்த வரவிட்ட குயிலைக் காட்டிலும் இன்னமும் நீதானே நல்லை என்றபடி. கூவும் - என் நிலையைக் கண்டால் இவற்றுக்கு வாயைப் புதைக்க வேண்டாவோ? என்றது, [4]பிரிந்து நோவு படுகின்ற என்படியைக் கண்டால் 'நஞ்சு போலே நம்முடைய ஒலி இவளைத் துன்புறுத்தும்' என்று தவிர வேண்டாவோ? என்றபடி. [5]"கொல்லுதற்குத்

---

1. வாஹி வாத யதஃ காந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருஶ
த்வயி மே காத்ர ஸம்ஸ்பர்ஶஃ சந்த்ரே த்ருஷ்டி ஸமாகமஃ.

என்பது, ஸ்ரீராமா. யுத். 5 : 9.

2. அதுவும் அன்றிக்கே, இவனுக்கு இன்னமும் ஒரு பெரும் பேறு என்கிருர் 'இவள்தான்' என்று தொடங்கி. என்றது, காணப்பெற்ற மாத்திரமன்றிக்கே, வாயாலே சொல்லக் கேட்கவும் பெற்றான் என்றபடி.

3. "காமரு" என்ற சொல்லின் பொருளை விளக்குகிருர் 'இவற்றினுடைய' என்று தொடங்கி. காமரு என்பது, காமம் மரு என்ற சொல்லின் விகாரம். அதனை விவரணம் செய்கிருர் 'சேர்க்கை' என்று தொடங்கி.

4. உன் நிலையைக் கண்டால் வாயைப் புதைக்க வேண்டுமோ? என்ன, 'பிரிந்து' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

5. அநயா சித்ரயா வாசா த்ரிஸ்தாந வ்யஞ்ஜநஸ்தயா
கஸ்ய நாராத்யதே சித்தம் உத்யதாஸேஃ அரேரபி.

என்பது, ஸ்ரீராமா. கிஷ்கிந். 3 : 33.

இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி [செல்வன்
சொல்லாலே தோன்றிற் றன்றே, யார்கொல் இச் சொல்லின்?
வில்லார் தோள் இளைய வீர! விரிஞ்சனோ விடைவலானோ.

என்னும் கம்பராமாயணச் செய்யுள் இங்குக் கருதல் தகும்.

தூக்கின கத்தியையுடைய எந்தப் பகைவனுடைய மனம் தான் மகிழ்விக்கப்படுகிறதில்லை'' என்கிறபடியே, [1]உருவின வாளினை உறையிலே இடவேண்டும்படி காணும் இவளுடைய நிலை.

கணம் மயில்-[2] எதிர்த்தலையையும் தனியே வைத்து நோவு படுத்தித் தானும் தனியே இருந்து நோவு படுவாரைப் போலே அன்றிக்கே, சேர்த்தியையுடையவாய் இராநின்றன ஆயிற்று இவை. அவை - [3]திருஷ்டி விஷம் போலே இருக்கையாலே முகத்தை மாற வைத்து 'அவை' என்கிறாள்: [4] கண் கொண்டு காணப் போகாமையாலே. [5]ஒரு திரளாகத் துன்புறுத்து கின்றனவாயிற்று. கலந்து-[6]"இவ்வளவில் நாம் சேர்தல் பெண் கொலை' என்று அறிந்து மீள்கின்றன இல்லை. ஆலும்-[7]சேர்ந்த சேர்க்கையால் வந்த உவகைக்குப் போக்கு விட்டு நடனம் செய்யாநின்றன என்று கண்கூடாகக் கண்டு வைத்து, '**அவை**' என்னும்போது முகத்தை மாற வைத்துச் சொல்லு

1. சுலோகத்திலே உள்ள "உத்யதாஸே:" என்றதற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'உருவின' என்று தொடங்கி. என்றது, திருவடியின் வார்த்தை இனிமையாலே பகைவரையும் ஈடுபடுத்துமாறு போலே, இவளுடைய நிலை யும் பகைவர்களுக்கும் இரங்கும்படி இருக்கும் என்றபடி.

2. "கணமயில்" என்றதற்கு, ஆணும் பெண்ணும் சேர்ந்த மயில் என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அதற்கு மறுதலையான பொருளினை அருளிச்செய்கிறார் 'எதிர்த் தலையையும்' என்று தொடங்கி.

3. கண்கூடாகக் காணும் மயிலை "அவை" என்கிறது என்? என்ன, 'திருஷ்டிவிஷம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'திருஷ்டிவிஷம்' என்பது, கண்ணில் விடமுடையது ஒரு பாம்பு; இதன் விழிக்கு எதிர்ப்பட்டோர் இறப்பர்.

> "திட்டி விடம் உணும் செல்லுயிர் போனல்
> தீயழல் அவனொடு சேயிழை மூழ்குவை"

என்பது, மணிமேகலை, 9, 49-50.

> "திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
> விட்டிலையே இது விதியின் வண்ணமே"

என்பது, கம்பராமாயணம், கும்பகர்ணன் வதைப் படலம், 80.

4. அதனை விவரணம் செய்கிறார் 'கண் கொண்டு' என்று தொடங்கி.

5. "கணமயில்" என்பதற்கு, வேறும் ஒரு பொருள் அருளிச்செய் கிறார் 'ஒரு திரளாக' என்று தொடங்கி.

6. அம் மயில்கள் தன் தன் பேடையோடு கலத்தல் குற்றமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவ்வளவில்' என்று தொடங்கி.

7. முகத்தை மாறவைத்துச் சொல்லுகிறாள் என்று அறிந்தவாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சேர்ந்த' என்று தொடங்கி.

கிறாள் என்பது தோற்றுகிறதே அன்றோ. [1]"மயூரஸ்ய - இருவராய் இருப்பார் எல்லாரையும் பிரித்தான் என்றே இருக்கிறார். மயிலினுடைய பெண்டாட்டியை இராவணன் கொண்டு போயிற்றிலனே? வநே - திரு அயோத்யையிலே வந்து பிரித்தான் அல்லனே! இன்பத்துக்குத் தனியிடமான காட்டிலே அன்றோ. ரக்ஷஸா ந ஹ்ருதா ப்ரியா - நீர்மை கேடனான அப்படுகொலைக் காரனால் பிரிக்கப்படாதது இது ஒன்றுமே அன்றோ."

மருவு இனம் ஆ நிரை மேய்க்க - [2]இவ்வளவில் "இவள் எவ்வாறு இருப்பாளோ?" என்னவேண்டி யிருக்க, அது செய்யாதே, அவன்தான் தன்னாலே காப்பாற்றப் படுகின்ற பொருள்களைப் பாதுகாத்தலிலே ஒருப்படா நின்றான். [3]உன்னோடே சேர்ந்து திரளாக இருக்கிற ஆ நிரை உண்டு - பசுக் கூட்டம்; அதனை மேய்க்க. [4]மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர அன்றோ நிற்பன; [5]வேறு ஒன்று இன்றிக்கே இவனுடைய சேர்க்கையே அன்றோ இவற்றுக்குத் தாரகம். இனம் -

---

1. பிரிவுக் காலத்தில் மயில் துன்புறுத்தும் என்பதற்கு மேற்கோள் காட்டுகிறார் "மயூரஸ்ய" என்று தொடங்கி.

மயூரஸ்ய வநே நூநம் ரக்ஷஸா ந ஹ்ருதா ப்ரியா
தஸ்மாத் ந்ருத்யதி ரம்யேஷு வநேஷு ஸஹகாந்தயா.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1 : 40.

சுலோகத்திற்குக் கருத்து 'இருவராய்' என்று தொடங்கும் வாக்கியம். பதத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'மயிலினுடைய' என்று தொடங்கி. "வநே" என்றதற்குக் கருத்து 'திருவயோத்யையிலே' என்று தொடங்கும் வாக்கியம். "ரக்ஷஸா" என்றதற்குக் கருத்து 'நீர்மை கேடனான' என்று தொடங்கும் வாக்கியம்.

2. "ஆ மருவு இனம்" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இவ்வளவில்' என்று தொடங்கி.

"புண்டரீக விசாலாக்ஷீ கதம் ஏஷா பவிஷ்யதி"

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 30 : 10.

3. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'உன்னோடே' என்று தொடங்கி.

4. "மருவு ஆ" என்கிறாரே? இவனோடே பசுக்கள் மருவி இருக்குமோ? என்ன, 'மேய்ந்த புல்லும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "மேய்ந்த புல்லும்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 3. 6 : 9.

5. மேய்ந்த புல்லு கடைவாயிலே வழிந்தால் அவற்றுக்குத் தாரகம் வேறு யாது? என்ன, 'வேறு ஒன்று' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

[1] அவனாலே காப்பாற்றப்படுகின்ற பொருள்களிலே சேர்ந்தாலும் தனியராய் இருப்பாரைக் காப்பாற்ற நினையான்; திரளாக இருப்பாரை ஆயிற்று அவன் காப்பாற்ற நினைவது. நீ [2] போக்கு ஒரு பகல் - நீ போகிற ஒரு பகல் என்னுதல்; உன்னுடைய போக்கான ஒரு பகல் என்னுதல்; அன்றிக்கே, பசுக்களை மேய்ப்பதற்காக நீ போக விடுகிற பகல் என்னவுமாம். 'இவை எல்லாம் ஒரு பகல் அளவே அன்றோ?' என்றான். ஆயிரம் ஊழி-உன்னைப் போலே என்று இராதே கொள்ளாய் எங்களையும். என்றது, [3] இரவு ஒன்றும் பகல் ஒன்றும் உத்தேசியமாய் இருப்பார் படியாய் இராது காண், எல்லாக் காலத்திலும் ஒன்றே போது போக்காக இருப்பார்க்கு என்றபடி. [4] "அந்தக் கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தால் ஒரு கண நேரமும் கோடி வருஷம் போல் எப்படித் தோன்றுமோ" என்கிறபடியே.

[5] "போனோமல்லோம்; போக நினைத்தோம் அல்லோம்; நாம் கூட இருக்கச்செய்தே பிரிந்தோமாகக் கொண்டு நோவுபட்டுப் பார்க்கப்படும் பொருள்கள் எல்லாம் துன்புறுத்தும் படியனவாக இருப்பதே! இது ஒரு அன்பின் தன்மை இருக்கும்படி என்?" என்று கண்களாலே குளிர நோக்கினான்: தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தி ஆலோ - நீ நோக்காலே நலிவதில் இன்னம் பசு மேய்க்கப் போகையே நன்று. முன்புத்தை நோக்கு நினைவிற்கு வரச் சொல்லுகிறாள் என்பாரும் உளர். 'ஈர்தி' என்கையாலே இப்போது நலியாநின்றாய்

---

1. "இனம்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவனாலே' என்று தொடங்கி.

2. "போக்கு ஒரு பகல்" என்பதற்கு, நீ போகிற ஒரு பகல் என்றும், போக்குகிற - கழிக்கிற ஒரு பகல் என்றும், பசுக்களைப் போகவிடுகிற ஒரு பகல் என்றும் மூவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்.

3. அதனை விவரணம் செய்கிறார் 'இரவு ஒன்றும்' என்று தொடங்கி.

4. ஒரு பகல் ஆயிரம் ஊழியாகத் தோன்றும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அந்தக் கிருஷ்ணனை' என்று தொடங்கி.

ஸ ததாஸஹ கோபீ பீ ரராஸ மதுஸூதநః
யதாப்த கோடிப்ரதிமః க்ஷணஃ தேந விநாபவத்.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 13 : 59.

5. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'போனோமல்லோம்' என்று தொடங்கி.

என்றே சொல்ல அமையும். [1] இப்படிச் சொல்லச் செய்தேயும் நோக்கினை மாற வைத்திலன். தகவிலை - உலகத்தில் அருள் இல்லைகாண் என்கிறாள்; [2] அவனை விலக்குகிறாள் இல்லையே அன்றோ. [3] நம்மோடு பகைத்தவர்களை இன்னதாகிறது என், இவன் நம்மை நலியா நிற்க? [4] ஒன்றுக்கு அன்ன தோஷம் உண்டு, ஒன்றுக்குச் சேர்க்கை தோஷம் உண்டு; ஆன பின்பு, இவை நம்மோடு பகைத்தல் தகுதியே அன்றோ? [5] மயில், சுப்பிரமணியனுடைய வாகனம் ஆகையாலே சேர்க்கை தோஷம் உண்டு; குயில், பலிபுக்கினுடைய அன்னத்தை உண்கையாலே அன்ன தோஷம் உண்டு.

நீ தகவு இலை - உனக்குத் தகவு இல்லை. [6] "தகவுடையவனே" என்று கூப்பிடுமவள் கண்டீர், அவன் திருமுன்னே இப்போது 'தகவிலை' என்கிறாள். நீ தகவு உடையை அல்லை. அன்றிக்கே, இரண்டும் தகவிலை என்றேயாய், அப்போது இரட்டிப்புக்குக் கருத்து, நீ தகவுடையை அல்லை என்னுமிடத்துக்கு [7] கோடி எடுக்கிறேன் என்கிறாள் என்னுதல். "இப்ப

---

1. "தகவிலை" என்றதற்கு அவதாரிகை 'இப்படி' என்று தொடங்கும் வாக்கியம்.

2. கிருபை இல்லாமைக்குக் காரணம் யாது? என்ன, 'அவனை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, கண்கள் கொண்டு ஈராதபடி விலக்குகிறாள் இல்லை, கிருபை உண்டானால் யாரேனும் விலக்குவார்கள் அன்றோ; ஆகையாலே தகவு இல்லை என்றபடி.

3. "தகவிலை" என்பதற்கு, குயில் முதலானவற்றுக்குத் தகவில்லை என்று வேறும் ஒரு பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி "நீ கண்ணா தகவிலை" என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நம்மோடு' என்று தொடங்கி.

4. அவை, தம்மோடு பகை கொள்ளக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒன்றுக்கு' என்று தொடங்கி.

5. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'மயில்' என்று தொடங்கி. பலிபுக்கு - காகம். குயில் காகத்தாலே வளர்க்கப்படுதலால் அதன் அன்னத்தை உண்டது ஆம்.

6. வியாக்கியாதாவின் ஈடுபாடு "தகவுடையவனே" என்று தொடங்கும் வாக்கியம். இது, திருவாய்மொழி, 2. 4: 6.

7. 'கோடி எடுக்கிறேன்' என்றது, உன் பக்கல் கிருபை இல்லை என்பதற்குப் பல உதாரணங்கள் காட்டுவேன் என்றபடி.

டிப் பெண்கள் கஷ்டப்படுங்கால் யாருக்குத் தான் அருள் உண்டாக மாட்டாது" என்கிறபடியே. (1)

1016.

தகவிலை தகவிலையே நீ, கண்ணா !
    தடமுலை புணர்தொறும், புணர்ச்சிக்கு ஆராச்
சுகவெள்ளம் விசும்பு இறந்து, அறிவை மூழ்கச்
    சூழ்ந்து அது கனவு என நீங்கி, ஆங்கே
அக உயிர் அகம்அகம்தோறும் உள் புக்கு,
    ஆவியின் பரம் அல்ல வேட்கை, அந்தோ !
மிக மிக இனி உன்னைப் பிரிவை ஆமால்;
    வீவ, நின் பசு நிரை மேய்க்கப் போக்கே.

பொ - ரை :—கிருஷ்ணனே ! நீ, அருளுடையவன் அல்லை, அருளுடையவன் அல்லை, பெரிய முலைகளை நீ புணரும் தோறும் புணர்ச்சியில் அடங்காத இன்ப வெள்ளம் ஆகாசத்தையும் கடந்து, அறிவும் அமிழ்ந்தும் படியாகப் பரந்து, அது கனவினைப் போன்று நீங்க, அந்த நிலையிலேயே மனத்தின் இடம் தோறும் இடம் தோறும் உள்ளே புகுந்து, உயிரால் பொறுக்க முடியாதபடி ஆசை பெருகுகிறது; அந்தோ! மேலும் மேலும் உன்னைப் பிரிதற்குக் காரணமாக இருக்கிற பசு மேய்க்கப் போதலாகிற இது தவிர்வதாக என்கிறாள்.

வி - கு :—முதல் இரண்டு அடிகளின் திட்ப நுட்பங்களைச் சிந்தித்தல் தகும். உன்னை மிக மிகப் பிரிவை ஆம், பசு நிரை மேய்க்கப் போக்கு இனி வீவ எனக் கூட்டுக. நீங்கி என்பது, செயவென் எச்சத் திரிபு; நீங்க என்றபடி. வீதல் - சாதல் - ஒழிதல் - நீங்குதல். போக்கானது தவிர்க என்பதாம்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [2]இவள் தரிப்பதற்காகப் பலகால் அணைத்தருள, இச் சேர்க்கையால் ஆய இன்பமெல்லாம் நீ நீங்கக் கூடியவன் என்னும் இதனாலே கனக் கண்டு விழித்

1. உலகத்தில் அருள் இல்லை என்பதற்கு, மேற்கோள் காட்டுகிறார் 'இப்படி' என்று தொடங்கி.

அக்ரூர꞉ க்ரூர ஹ்ருதய꞉ ஶீக்ரம் ப்ரேரயதே ஹயாந்
ஏவம் ஆர்த்தாஸு யோஷித்ஸு க்ருபா கஸ்ய ந ஜாயதே.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 18 : 30.

2. முதல் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

தாற்போலேயாய் நோவுபடாநின்றேன் என்கிறாள். முன்னர் நிகழ்ந்த கலவியையே சொல்லிற்றாகவுமாம்.

[1] கண்ணா நீ தகவிலை தகவிலையே - கிருஷ்ணன் என்றால் பெண்களுக்கு உடைமைப் பொருளாக இருப்பான் என்பது பிரசித்தம் அன்றோ. பெண்களுக்கு உடைமைப் பொருளாக இருக்கிற நீ அருள் இல்லாதவனே ஆகாநின்றாய். [2] 'நம்மை அருள்இல்லாதவன் என்பதே! பிரிய நினைத்தோம் அல்லோம்: பிரிந்தோம் அல்லோம்' என்று இவள் தரித்திருப்பதற்காக நெருக்கி அணைத்தான். தடமுலை புணர்தொறும் - [3] நூறாயிரம் தரம் அணைக்கச்செய்தேயும் 'அணைக்கிறது பிரிதலுக்கு அன்றோ' என்று அணைத்த கை நெகிழ்த்த இடம் எங்கும் இவள் உடம்பு வெளுக்கப் புக்கவாறே, அதனைக் கண்டு இதனுடைய சமாதானத்திற்காக அணைக்க, இங்ஙனமே ஐயமும் சமாதானமுமாகச் செல்லுமத்தனை. இதுதான் முன் நிகழ்ந்த கலவியைச் சொல்லுகிறது என்பாரும் உளர். இப்போதைய கலவியையே சொல்லுகிறது. தட முலை - [4] தன்னை அறியப் புகுந்தவர்கள் படுவதனை ஆயிற்று இவற்றை நுகரப் புக்க தானும் படுவது; தொலைய நுகர்ந்து முடிக்கப்போகாதாயிற்று; என்றது, அநுபவிக்கின்றவனாலும் உண்டுஅறுக்க ஒண்ணாத இனிமையின் மிகுதியைச் சொன்னபடி.

---

1. "தகவிலை தகவிலை நீ கண்ணா" என்றது அநுவாதம்.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நம்மை' என்று தொடங்கி.

3. "புணர்தொறும்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நூறாயிரம் தரம்' என்று தொடங்கி. 'அணைத்த கை' என்று தொடங்கும் இவ்விடத்திலே, திருவாய்மொழி முதல் பத்து வியாக். பக். 198 பார்க்க.

> புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
> அள்ளிக் கொள்வற்றே பசப்பு. குறள், 1187.

> "காதலர், தொடுவுழி தொடுவுழி நீங்கி
> விடுவுழி விடுவுழிப் பரத்தலானே." குறுந்தொகை, 399.

என்பன கருதல் தகும்.

4. "தடம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன்னை' என்று தொடங்கி. 'தன்னை அறியப் புகுந்தவர்கள் படுவது' என்றது, "நேதி நேதி" என்று படுவதனை. அதனை விவரணம் செய்கிறார் 'தொலைய' என்று தொடங்கி. உண்டு அறுக்க ஒண்ணாத - அநுபவித்துத் தலைக்கட்ட ஒண்ணாத.

[1]புணர்ச்சிக்கு ஆராச் சுக வெள்ளம் - புணர்ச்சிக்கு அடங்காத இன்பக் கடல். [2]புணர்கிற இருவர்க்கும் ஈடாக அன்றோ இன்பம் இருப்பது. அவன் சொரூபம் இவ்வளவு என்று அளவிட்டு அறிய முடியாதவாறு போலே ஆயிற்று, அவனுடைய இனிமையின் மிகுதியும்: "அதனிற் பெரிய என் அவா" அன்றோ இவளது. [3]அன்றியே, புணர் தொறும் புணர்ச்சிக்கு ஆராச் சுக வெள்ளம் - அதாவது, சேர்க்கை யாதானும் ஒரு கால விசேடத்திலே உண்டாவதாய், இன்பம் எல்லை அற்று இருக்கையைத் தெரிவித்தபடி. [4]"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரளவின்றே சாரல், கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு, பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" என்னக் கடவது அன்றோ. [5]குறிஞ்சிப் பூக்கொண்டு, பெரும் தேன் இழைக்கை.

---

1. உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய்
மணந்தாழ் புரி குழலாள் அல்குல் போல வளர்கின்றதே.

ஆனந்தவெள்ளத் தழுந்து மொராருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்தவெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலம் சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழலோன் அருள் பெற்றவரின்
ஆனந்தவெள்ளம் வற்றுது முற்றுது இவ் வணி நலமே.

என்னும் செய்யுட்கள் ஈண்டு நினைத்தல் தகும். திருக்கோவையார், 9, 307.

2. புணர்ச்சியில் அடங்காமைக்குக் காரணம் அருளிச்செய்கிறார் 'புணர்கிற' என்று தொடங்கி. இருவர் படியையும் விளக்குகிறார் 'அவன் சொரூபம்' என்று தொடங்கி. "அதனில் பெரிய" என்பது, திருவாய்மொழி, 10. 10: 10.

3. "புணர்ச்சிக்கு" என்பதற்கு இரண்டு வகையில் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருள், சிறிது நேரம் புணரும் புணர்ச்சிக்கு என்பது. இரண்டாவது பொருள், யாதானும் ஒரு கால விசேடத்திலே புணரும் புணர்ச்சி என்பது. 'அன்றியே' என்று தொடங்கி அருளிச்செய்வது இரண்டாவது வகை.

4. "புணர்ச்சிக்கு" என்பதற்கு அருளிச்செய்த இருவகைப் பொருள்களில் முதற் பொருளுக்கு மேற்கோள் காட்டுகிறார் "நிலத்தினும்" என்று தொடங்கி. இது, குறுந்தொகை, 3.

5. சிறிதுநேரம் புணரும் புணர்ச்சியிலே ஆராச் சுக வெள்ளம் உண்டாம் என்று அக் குறுந்தொகைப் பாட்டிலே எங்கே சொல்லப்பட்டிருக்கிறது? என்ன, அதனை விவரணம் செய்கிறார் 'குறிஞ்சிப் பூக் கொண்டு' என்று தொடங்கி.

இவ் இன்பம் தான் எவ்வளவு போரும்? என்னில், விசும்பு இறந்து அறிவை மூழ்க்கச் சூழ்ந்து-எல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே அடக்கிக்கொண்டு இருக்குமது அன்றோ ஆகாசம்; அதனையும் குளப்படி ஆக்கி, மயர்வுஅற மதிநலம் அருளப் பெற்ற அறிவினையும் விளாக்குலை கொள்ளாநின்றதாயிற்று. [1]அன்றிக்கே, பேரின்பத்துக்குத் [2]"**தாமரைக் கண்ணன் உலகு**" என்னக் கடவது அன்றோ; ஆதலால், விசும்பு - **பரமபதமுமாம்.** [3]ஆக, பரமபதத்தையும் விஞ்சி, இரண்டு உலகங்களையும் தன்னுள்ளேயாம்படி இருக்கிற அறிவையும் மேலிடும்படி ஆயிற்று இருக்கிறது. [4]அது கனவு என நீங்கி-அது கனவினைப் போன்றதாம் என்னலாம்படி கழிந்ததாயிற்று. [5]அதன் பரப்பினைக் கண்டவாறே அதற்கு ஓர் முடிவு இல்லை என்னும்படி ஆயிற்று இருந்தது; அதுவும் வற்றின படியைக் கண்டவாறே, இது பெருக்காறு வற்றி அடி சுட்டாற் போலே ஆயிற்று. [6]அப்படிக் கலந்தவன் அன்றோ பிரிந்தானும். [7]கனவு என்றும் இந்திர ஞாலம் என்றும் முடிவு இல்

1. "விசும்பு இறந்து" என்பதற்கு, வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. "விசும்பு" என்றது, ஈண்டுப் பரமபதத்தை.

2. ஆயின், மோக்ஷ இன்பத்தைக் காட்டிலும் இச் சிற்றின்பம் விஞ்சி இருக்கும் என்று கூறலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "தாமரைக் கண்ணன் உலகு" என்று தொடங்கி. இது, திருக்குறள், 1103.

3. "விசும்பு" என்றதற்கு அருளிச்செய்த இருவகைப் பொருள்களுள் இரண்டாவது பொருளைத் திருவுள்ளத்தே கொண்டு, "விசும்பு இறந்து அறிவை மூழ்க்க" என்றதன் பொருளை நிகமிக்கிறார் 'ஆக' என்று தொடங்கி. "அதனிற் பெரிய என் அவா" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இரண்டு உலகங்களையும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. "கண்ட கனவின் பொருள் போல யாவும் பொய்; காலனென்னும்
கண்டகனை வி கவர்வதுவே மெய்"

என்பது, திருவரங்கத்தந்தாதி.

5. ஆராச் சுக வெள்ளமானது கனவு என நீங்கினவாறு என்? என்ன, 'அதன் பரப்பினை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அதன் பரப்பினை - அந்தச் சுகத்தின் பரப்பினை.

6. அதற்குக் காரணம் என்? என்ன, 'அப்படி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, அவனுடைய வேறுபட்ட சிறப்பு, பிரிவிலும் அப்படிப் பண்ணவற்று என்றபடி. 'அப்படி' என்றது, ஆராச் சுக வெள்ளம் உண்டாம்படி என்றவாறு.

7. அன்றிக்கே, முடிவு இல்லாத கலவியாகவுமாம் என்கிறார் 'கனவு' என்று தொடங்கி. கனவு - கனா.

லாத கலவியைச் சொல்லக் கடவது; [1] இதுவும் உடனே காண ஒண்ணுததாய் இருக்குமே. ஆங்கே - அந்த நிலையிலே. அகம் உயிர் - உயிர் போன்ற மனம். அகம் அகம் தோறும் - மனத்தில் உண்டான இடம் தோறும். [2]முன்பு உண்டான புணர்ச்சியாலும் பிரிவாலும் மனம் புடைபட்டே அன்றோ இருப்பது. புணர்ச்சியும் பிரிவும் இடத்தை உண்டாக்கும்; அந்த இடம் உள்ள இடம்எங்கும் ஆற்ருமை புகுந்தது.

ஆவியின் பரம் அல்ல வேட்கை - அணு அளவினதான உயிர்ப்பொருளின் அளவன்று காதல். [3]"என்தன், அளவுஅன்ருல் யானுடைய அன்பு" என்ருரே அவரும். உயிரின் அளவு அன்று ஆயிற்றுக் காதல். அந்தோ-இன்பநிலையும் துன்பநிலையும் அவை இரண்டும் இன்றிக்கே இருக்கிற நிலையும் என ஆத்மாவிற்கு மூன்று நிலைகள் உண்டே அன்றோ; அவற்றிலே இன்ப துன்பங்கள் இல்லாத நிலையிலே தான் நிற்கப் பெற்றதோ! அந்தோ - [4]இதற்கு உபதேசம் கொண்டு அறிய வேண்டுவதே! கலக்கிறபோது இருவரும் வேண்டிப் பிரிவில் வந்த ஆற்ருமைக்கு நான் சொல்ல வேண்டும்படி ஆவதே! என்றது, கலவிக்கு இருவராய் ஆற்ருமை ஒரு தலையிலே ஆவதே! என்கிருள் என்றபடி. ஆனல், செய்யவேண்டுவது என்? என்னில், நின் பசு நிரை மேய்க்க போக்கு வீவ. அது தான் தவிர வேண்டுவது என்? என்னில், மிக மிக இனி உன்னைப் பிரிவை ஆம் ஆல் - மேன்மேலென உன்னுடைய பிரிவு உண்டாம். [5]பிரிவை என்பதில் ஐகாரம் செய்யுட் பாடு. பிரிவு

1. கனவு என்பது முடிவில்லாத கலவியைச் சொல்லுமோ? என்ன, 'இதுவும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். இதுவும் - கலவியும்.

2. அணு அளவினதான மனத்திலே பல இடங்கள் உளவோ? என்ன, 'முன்பு உண்டான' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

3. உயிர்ப்பொருளின் அளவு அன்று காதல் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர் "என்தன் அளவு" என்று தொடங்கி. இது, இரண்டாம் திருவந்தாதி, 100. அவ் அடிக்குப் பொருள் அருளிச்செய்கிருர் 'உயிரின்' என்று தொடங்கி.

4. "அந்தோ" என்பதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிருர் 'இதற்கு' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிருர் 'கலக்கிறபோது' என்று தொடங்கி.

5. "பிரிவை ஆம்" என்றிருக்க, பிரிவு ஆம் என்பான் என், என்ன, 'பிரிவை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். 'செய்யுட்பாடு' என்றது, செய்யுளில் வருகின்ற அசைச்சொல் என்றபடி. "பிரிவை" என்பதில், ஈற்றிலுள்ள ஐகாரம் அசைநிலை. பிரிவு ஆம் - பிரிவு உண்டாம் என்றபடி.

உண்டாம்படி வருகிற பசுநிரை மேய்க்கப் [1]போக்கு வீவ. 'பசு வந்தன' என்னுமாறு போலே போக்குக்கள் தவிரப்படுவன வாக என்றபடி. இனி வீவ - [2]இதற்கு முன்புள்ள காலம் எல் லாம் பிரிந்து போந்தாயே யாகிலும், இனிமேல் உள்ள கால மாயினும் தவிரவேண்டும். (2)

1017.

வீவன், நின் பசுநிரை மேய்க்கப் போக்கு
வெவ்வுயிர் கொண்டு எனது ஆவி வேமால்;
யாவரும் துணை இல்லை; யான் இருந்து உன்
அஞ்சன மேனியை ஆட்டம் காணேன்;
போவது அன்று ஒரு பகல், நீ அகன்றால்;
பொரு கயல் கண்ணிணை நீரும் நில்லா;
சாவது இவ் ஆய்க் குலத்து ஆய்ச்சியோமாய்
பிறந்த இத் தொழுத்தையோம் தனிமை தானே.

பொ - ரை :— நீ நின் பசுக் கூட்டங்களை மேய்ப்பதற்குப் போகிற போக்கினால் நான் அழிவேன்; வெவ்விதாக மூச்சுவிட்டு என் உயி ரானது வேகாநின்றது; ஒருவரும் துணை இல்லை; யான் இறவாமல் இருந்து உன் அஞ்சனம் போன்ற திருமேனியினது நடையாட்டத்தைக் காண்கிறேன் இல்லை; நீ பிரிந்து போனால் இந்த ஒரு பகலும் கழிவது அன்று; தனக்குத் தானே ஒத்த கயல்மீன் போன்ற இரண்டு கண் களிலும் கண்ணீர் மேலும் மேலும் பெருகாநிற்கின்றது; இந்த ஆயர் குலத்திலே ஆயர் பெண்களாகப் பிறந்த தண்ணியோமான எங்க ளுடைய இந்தத் தனிமையானது ஒழிக. ஒழியவேண்டும் என்றபடி.

வி - கு :— நின் பசு நிரை மேய்க்கப் போக்கினாலே வீவன் என் றும், நீ அகன்றால் ஒரு பகல் போவது அன்று என்றும், இத் தொழுத் தையோம் தனிமை தான் சாவது என்றும் கூட்டுக. சாதல் - நீங்குதல்.

ஈடு :— மூன்றாம் பாட்டு. [3]நீ விரும்பாதிருக்க நாங்கள் விரும்புகிற ஒருதலைக் காமம் நசிக்கவேண்டும் என்கிறாள்.

---

1. "போக்கு வீவ" என்பது, ஒருமை பன்மை மயக்கம். போக்கு - ஒருமை; வீவ - பன்மை. ஒருமை பன்மை மயக்கம் என்பதனை விளக்குகிறார் 'பசுவந்தன' என்று தொடங்கி.

2. "இனி" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இதற்கு' என்று தொடங்கி.

3. ஈற்றடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

நின் பசுநிரை மேய்க்கப் போக்குவீவன் - உன் பசுநிரை மேய்க்கப் போக்கு நிமித்தமாக, நான் முடிவன். [1]'அது எனக்குத் தருமம் அன்றோ?' என்று இராதே, உனக்குப் பெண் கொலையாய்ப் பலிக்கக்காண் புகுகிறது. இப்போது முடியும்படி வந்தது என்? என்னில், வெவ் உயிர் கொண்டு எனது ஆவி வேம் - [2]என்னைப் பார்க்க மாட்டாயோ? உன்னுடைய போக்குக் காரணமாக நெடுமூச்சு எறிந்து, அதுவே காரணமாக உலர்ந்த என்னுடைய இதயமானது பிரிவாகிற நெருப்புப் பற்றி எரியாநின்றது; [3] இதிலே நீரைச் சொரிய வல்லையே என்கிறாள். உன்னைப் போலே என்று இராதே கொள்ளாய் அல்லாதாரையும் என்பாள் 'எனது ஆவி' என்கிறாள். யாவரும் துணை இல்லை - துணையான நீதானே போனாய்: நீ போனால் துணையான தோழிமார் தாமே இல்லை; குயில் மயில் தொடக்கமானவைதாமே [4]ஊர்ப் பகையாயிற்று.

யான் இருந்து - [5] நீ போனால் படுவுற்றைத் தான் படப் பெற்றேனோ? எல்லாம் பட்டும் நூறே பிராயமாய் இருந்தது; [6]இன்னம் ஒருகால் காணலாம் என்னும் நசை முடிய ஒட்டாதே அன்றோ. [7] பிரிந்த விஷயம்தான் முடியவும் ஒட்டாது, தரித்திருக்கவும் ஒட்டாது; அருச்சுனன் பின்பிருந்து எளிவரவு பட்டாற்போலே. உன் அஞ்சன மேனியை ஆட்டம் காணேன்-

1. "முடிவன்" என்றால் சாதிக்குரிய தருமத்தினை விடப் போமோ? என்ன, 'அது எனக்கு' என்று தொடங்கி விடை அருளிச்செய்கிறார்.

2. "வெவ் உயிர் கொண்டு எனது ஆவி வேம்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'என்னை' என்று தொடங்கி.

3. "ஆவி வேம்" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'இதிலே' என்று தொடங்கி.

4. 'ஊர்ப்பகை' என்றது 'ஊரில் உள்ள பேரெல்லாம் பகை' என்றபடி.

5. "யான் இருந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீ போனால்' என்று தொடங்கி. படுவுற்றைத்தான் படுகை - பிரிந்த அக்கணத்திலேயே முடிதல்.

6. ஆனால், முடிய ஒண்ணாதோ? என்ன, 'இன்னம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

7. ஆனால், தரித்திருந்தால் என்? என்ன, 'பிரிந்த விஷயம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அருச்சுனன்' என்று தொடங்கி.

[1]இருந்தார் அநுபவிக்கும் அநுபவத்தைத் தான் அநுபவிக்கப் பெற்றேனே? [2]"ஏழையர் ஆவி" தேட்டமாய் இருக்கிறது காணும் இப்போது இவளுக்கு. உன் - உன்னைக் கண்ணாடிப் புறத்திலே நீதான் கண்டு அறிதியே. கண்டாயாகில் 'நம்மைப் பிரிந்தவர்கள் பிழையார்கள்' என்று இருக்க வேண்டாவோ? [3]சொரூபத்திலாதல் குணத்திலாதல் இழியுமவள் அல்லள் ஆகவின் 'மேனியை' என்கிறாள். காதலி, உடம்பினை அன்றோ ஆசைப்படுவாள்! ஆட்டம் காணேன் - அவ் வடிவோடே என் முன்னே சஞ்சரிக்கக் காணப் பெறுகிறிலேன்.

இவை எல்லாம் ஒரு பகலுக்கே என்றான், போவது அன்று ஒரு பகல்-உன்னைப் போலே என்று இராதே கொள்ளாய் எங்களையும். நீ பேர நின்றால் நாழிகை முப்பது சென்றாலும் [4]மலையாளர் வளைப்புப் போலே ஓரடி பேராதாயிற்று; [5]அது பகலின் தன்மை அன்று: நீ அகன்றால் - உன் தன்மையாலே.[6]பகலின் தன்மையாகில் கூட இருக்கும்போதும் போகாதொழிய வேண்டுமன்றோ. [7]கூட இருக்கும்போது இரவு காண

---

1. அவன் பிரிந்து போனதை நிச்சயித்துச் சொல்லுகிற இடமாகையாலே "அஞ்சனமேனியை ஆட்டம் காணேன்" என்பதற்கு, உருவு வெளிப்பாடாக்கி, அவ் வெளிப்பாடுதான் தேட்டமாய் இருக்கிறது என்கிறார் 'இருந்தார்' என்று தொடங்கி. என்றது, பிரிவுக் காலத்தில் உருவு வெளிப்பாடு காமுகர்களுக்கு உஜ்ஜீவனமாய் அன்றோ இருப்பது? அதுவும் இல்லை என்றபடி.

2. ஆனால், "ஏழையர் ஆவி" என்ற திருவாய்மொழியில் உருவு வெளிப்பாடு தாரகமாக இல்லையே? என்ன, "ஏழையராவி" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. திருமேனியைச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சொரூபத்திலாதல்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'காதலி' என்று தொடங்கி.

4. 'மலையாளர் வளைப்புப் போலே' என்றது, மலையாளிகள் ஒருவன் கையிலே ஒன்றை வாங்க நினைத்தால் வாங்கிக்கொண்டல்லது போகார்கள்; அதுபோலே என்றபடி.

5. "நீ அகன்றால்" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அது' என்று தொடங்கி.

6. பகலின் தன்மை ஆனாலோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகலின்' என்று தொடங்கி. என்றது, அவனோடே சேர்ந்திருக்கும் போது ஒரு பகல் ஒரு கணமாகக் கழிகிறதே என்றபடி.

7. அதனை எதிர்மறை முகத்தால் விவரணம் செய்கிறார் 'கூட இருக்கும் போது' என்று தொடங்கி,

ஒண்ணுதவாறுபோலே ஆயிற்று, நீ அகன்றால் பகல் போகாத படி. அவன் கூட இருக்கும்போது இரவு காண ஒண்ணுதே; [1]"நாரணனைக் கண்டேன் பகற்கண்டேன்" என்கிறபடியே. [2]'போவது அன்று ஒரு பகல்' என்று இதுதானும் சொல்ல மாட்டாதே காணும் அவன்தான் இருக்கிறது; [3]கலவி செல்லா நிற்கச் செய்தே பிரிவினை நினைக்கையாவது என்? என்பதே அன்றே அவன் நினைவு; [4]"பிரியேன்' என்னவல்லன் என்றுளே பண்டே.

பொரு கயல் கண் இணை நீரும் நில்லா - உன் போக்கினை நினைத்துப் பாய்கிற கண்ணநீர் என்னால் தகையப் போகிறது இல்லை. உன்னைத் தகையிலும் நீரைத் தகையப் போகிறதில்லை என்பாள் 'நீரும் நில்லா' என்கிறாள். [5]பொருகிற கயல் போலே ஆயிற்றுப் பிரிவினை நினைத்துத் தடுமாறுகிறபடி. அதற்குச் செய்யவேண்டுவது என்? என்ன, இவ் ஆய்க்குலத்து ஆய்ச்சியோமாய்ப் பிறந்த இத் தொழுத்தையோம் தனிமை தான் சாவது - இவ் ஆயர் குலத்தில் ஆய்ப் பெண்களாகப் பிறந்த தண்ணியோமான எங்களுடைய தனிமை சாவது. [6]நீ போகிலும் போ, இருக்கிலும் இரு; இத் தனிமை நசிப்பது. [7]'இவனுக்கு நான் நூறு பிள்ளை பெறவேண்டும்' என்ற

---

1. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "நாரணனை" என்று தொடங்கி. இது, இரண்டாம் திருவந்தாதி, 81.

2. இவளைப் போன்று அவனும் "நீ அகன்றால் போவது அன்று ஒரு பகல்" என்ன வேண்டாவோ? என்ன, 'போவதன்று' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. சொல்லமாட்டாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'கலவி' என்று தொடங்கி.

4. மேலதற்கே வேறும் ஒரு காரணம் காட்டுகிறார் 'பிரியேன்' என்று தொடங்கி. என்றது, சொன்னாலும் நம்பமாட்டாள் என்றபடி.

"பேதை நின்னைப் பிரியேன் இனி என்று அகன்றான்" என்பது, பெரிய திருமொழி, 9. 3: 3.

5. "பொரு கயல்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பொருகிற' என்று தொடங்கி.

6. மேலதனை விவரணம் செய்கிறார் 'நீ போகிலும்' என்று தொடங்கி.

7. "இத் தொழுத்தையோம் தனிமை சாவது" என்றதனைத் திருஷ்டாந்த முகத்தால் விளக்குகிறார் 'இவனுக்கு' என்று தொடங்கி. இது, தன் கணவன் உயிரைக் கொண்டு சென்ற யமன் பின்னே தொடர்ந்து சென்ற சாவித்திரி, அந்த யமனைப் பார்த்துக் கூறியது. தான் தன் கணவனைச் சேர்ந்து நூறு பிள்ளைகளைப் பெற வேண்டும் என்று கேட்ட வரத்தினைக் குறித்தபடி. என்றது, நீ போகாதே என்னுடன் இருக்க வேண்டும் என்றதனை மறைத்துச் சொல்லுகிறாள் என்றபடி.

சாவித்திரியைப் போலே சொல்லுகிறாள். அன்றிக்கே, தனிமை தானே சாவது - [1] எங்களுக்குத் தனிமை என்றும் சாதல் என்றும் இரண்டு இல்லை காண்! தனிமை தானே சாக்காடு என்னவுமாம். [2] "நின்னலால் இலேன்" என்னுமவர் அன்றோ; "இறப்பதற்கே எண்ணாது" என்றாரே அவரும். அன்றிக்கே, தனிமை சாவது - இத் தனிமை [3] சாலப் பொல்லாது என்னவுமாம். இவ் ஒருதலைக் காமம் போவது, [4] கைக்கிளைத் தலைவி பொறை அழிந்தால் எல்லாம் சொல்லப் பெறுவள் அன்றே. (3)

1018.

தொழுத்தையோம் தனிமையும், துணைபிரிந்தார்
துயரமும் நினைகிலை, கோவிந்தா! நின்
தொழுத்தனில் பசுக்களையே விரும்பி,
துறந்து எம்மை இட்டு, அவை மேய்க்கப் போதி;
பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளம்
பாவியேன் மனம் அகந்தோறும் உள் புக்கு
அழுத்த, நின் செங்கனி வாயின் கள்வப்
பணிமொழி நினைதொறும் ஆவி வேமால்.

பொ - ரை :—கோவிந்தா! அடிச்சியோமாகிய எங்களுடைய தனிமையையும் துணையாகிய உன்னைப் பிரிந்தவர்களுடைய துன்பத்தை தையும் நினைக்கின்றிலை, தொழுவத்திலே உள்ள உன்னுடைய பசுக்களையே விரும்பி எம்மைத் துறந்து போகட்டு அப் பசுக்களை மேய்ப்

---

1. "சாவது" என்ற சொல்லுக்கு உள்ள இறப்பு என்ற பொருளை அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் 'எங்களுக்கு' என்று தொடங்கி.

2. தனிமையே சாதல் என்பதற்குப் பிரமாணங்கள் இரண்டு காட்டுகிறார் "நின்னலால்" என்றும், "இறப்பதற்கே" என்றும் தொடங்கி.

"நின்னலால்" என்பது, திருவாய்மொழி, 2. 3 : 7. "இறப்பதற்கே" என்பது, திருநெடுந்தாண்டகம், 1. 'அவரும்' என்றது, திருமங்கை மன்னனை.

3. 'சாலப் பொல்லாது' என்றது, இறப்புக்குச் சமமானது என்றபடி.

4. நீ போனால் நான் முடிவேன் என்று கூறுதல் பெண்களுக்கு அழகாமோ? என்ன, 'கைக்கிளை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

பதற்காகப் போகின்றாய்; பக்குவமான சிறந்த அமுதினுடைய இனிய சாற்றின் வெள்ளமானது பாவியேனாகிய என்னுடைய மனத்தின் இடம் தோறும் புகுந்து அழுந்த, நினது சிவந்த கனி போன்ற திரு வாயில் நின்றும் வருகின்ற வஞ்சகமான தாழ்ந்த வார்த்தைகளை நினையும் தோறும் உயிரானது வேகின்றது.

வி - கு :—தொழு - பசுக்களைக் கட்டும் இடம். பணிமொழி - கூறிய வார்த்தையுமாம்.

ஈடு :—நான்காம் பாட்டு. [1] இவன் போக்கினை நினைத்து நோவுபடப் புக்கவாறே உன்னைப் பிரிகைக்குக் காரணம் உண்டோ? என்று இப்புடையிலே தாழ்வோடு சில வார்த்தைகளைச் சொல்ல, இவை அன்றோ என்னை அழிக்கின்றன என்கிறாள்.

தொழுத்தையோம் தனிமையும் - [2]ஐந்து லக்ஷம் குடியிற் பெண்களும் கூடிப் படுகிற தனிமை அன்றோ. தொழுத்தையோம் என்றும், அடிச்சியோம் என்றும் தாங்கள் தோற்ற தோல்வி தோற்றச் சொல்லுகிறார்கள். துணை பிரிந்தார் துயரமும் - துணை பிரிந்தார் என்றது, உன்னைப் பிரிந்தார் என்றபடி. [3]"துணை என்றால் இருவர்களிடத்தில் இல்லாததாக அன்றோ இருப்பது" என்று பணிப்பர் ஆச்சான். இவர்களும் அவனுக்குத் துணையாய், அவனும் இவர்களுக்குத் துணையாய் அன்றோ இருப்பது; துணையாகை ஒரு தலையிலே நிலையாய் உள்ளதாயிற்று; [4]துணையாவான் அவன் ஒருவனுமே ஆயிற்று; அல்லாதார் அடங்கலும் கழுத்துக் கட்டியாய்ஆயிற்று இருப்பது; [5]வன்துணை என்னக் கடவது அன்றோ. தொழுத்தையோம்

1. ஈற்றடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "தொழுத்தையோம்" என்ற பன்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஐந்து லக்ஷம்' என்று தொடங்கி.

3. துணை என்றால் உன்னை என்ற பொருளைக் காட்டுமோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'துணை என்றால்' என்று தொடங்கி, அதனை விவரணம் செய்கிறார் 'இவர்களும்' என்று தொடங்கி.

4. அவனே துணையாக வேண்டுமோ? அல்லாதார் துணையாக ஒண்ணாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'துணையாவான் அவன் ஒருவனுமே' என்று தொடங்கி. கழுத்துக் கட்டி - கழுத்திலே எழுந்த கட்டி போன்று துன்பினைத் தருகின்றவராவர் என்பது நேர் பொருள், கழுத்திலே கட்டப்பட்ட இலிங்கம் என்பது தொனிப்பொருள்.

5. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "வன்துணை" என்று, இது பெரிய திருமொழி, 3. 7 : 6.

தனிமையும் நினைகிறிலை, துணை பிரிந்தார் துயரமும் நினைகிறிலை. [1] பிரிகிறோம் நாங்கள் என்றும் பிரிகிறது உன்னை என்றும் பார்க்கிறிலை. கோவிந்தா - [2] பசுக்களையும் ஆயர்களையும் காப்பதற்கு அன்றோ கோவிந்தாபிடேகம் பண்ணிற்று. [3] பிறவிப்பாடும் பின் தொடரும் அன்றோ. என்றது, தன் மனைவி துன்புறுமவளாக இருந்தாலும், பசுக்களை விரும்பி அவற்றுக்குப் புல்லும் நீரும் உள்ள இடம் தேடுமித்தனை அன்றோ என்றபடி.

நின் தொழுத்தனில் பசுக்களையே விரும்பி எம்மைத் துறந்து இட்டு அவை மேய்க்கப் போதி - [4] ஓர் இடத்தே வளைத்துவைத்த பசுக்களையோ காக்கலாவது? உன் கைக்குள் அகப்பட்டாரைக் காக்கலாகாதோ? [5] இவர்களை அணைத்து விட்டுப் பின்னை அன்றோ பசு மேய்க்கப் போவது. பசுக்களையே என்ற ஏகாரத்தால், நீ போனால் பிரிவுக்கு ஆற்றாமைப்பட அறியாதாரையேயோ நீ ஆதரிப்பது? என்பதனைத் தெரிவித்தபடி. விரும்பி - [6] இவர்களை அணைத்துக் கட்டிக்கொடு கிடந்தாலும், கண்ணி என்பது, கன்றுகள் விட்டுக்கொடு போகாநின்றது என்பதாய் வாய் வெருவுவது அவற்றையே ஆயிற்று. இங்கு இருக்கும்போதும் நெஞ்சு அங்கே

1. "தொழுத்தையோம் தனிமையும்" என்றவள், மீண்டும் "துணை பிரிந்தார்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பிரிகிறோம்' என்று தொடங்கி. என்றது, எங்களுடைய மிருதுத் தன்மையையும் உன்னுடைய அழகின் மேம்பாட்டினையும் நினைகின்றிலை என்றபடி.

2. "கோவிந்தா" என்றதனை, "தொழுத்தையோம் தனிமையும்" என்றதனோடும் கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'பசுக்களையும்' என்று தொடங்கி. என்றது, எங்களையும் பாதுகாக்க வேண்டாவோ? என்றபடி.

3. "கோவிந்தா" என்றதனை, மேல் வருகின்ற "பசுக்களையே விரும்பி" என்றதனோடே கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'பிறவிப்பாடும்' என்று தொடங்கி.

4. "தொழுத்தனில்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஓர் இடத்தே' என்று தொடங்கி.

5. இவர்கள் கைக்குள் அகப்பட்டார்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்களை' என்று தொடங்கி.

6. "விரும்பி" என்றதன் முடிவின் எல்லையை அருளிச்செய்கிறார் 'இவர்களை' என்று தொடங்கி.

ஆயிற்று. இங்குள்ளது பொய் ஆலிங்கனமே. [1]பிள்ளை யமுதனுர் "ஒரு பசுவின் காலிலே முட் பாய்ந்தால் ஆயன் தலை காண் சீக் கொள்வது" என்பராம். [2]சரீரத்திலே ஒன்று வந்தால் இன்பதுன்பங்கள் அநுபவிப்பது ஆத்மா அன்றே.

எம்மைத் துறந்து-[3]அவற்றை விரும்பத் தங்களைத் துறந்தான் என்று இருக்கிறார்கள். எம்மைஇட்டு-[4]அறிவு இல் பொருள்களைப் பொகடுமாறு போல எங்களைப் பொகட்டு. என்றது, [5]இவர்களுடன் இருக்கும் போதும் அவற்றை நினைப்பான்; அவற்றின் பின்னே போனால் இவர்களை நினையான் என்றபடி. அவை மேய்க்கப் போதி - அவற்றைப் பாதுகாப்பதற்காகப் போகக் கடவை. [6] அவற்றைப் பாதுகாப்பதில் வருத்தம் உண்டு, எங்களைப் பாதுகாப்பதற்கு முன் நிற்றலே அமையும்; [7]"இடற என் பிள்ளையைப் போக்கினேன்" என்றும், [8]"எற்றுக்கு என் பிள்ளையைப் போக்கினேன்" என்றும் வயிறு பிடிக்க வேண்டும்படியாய் இருக்கும் அது; எங்களைப் பாதுகாப்பதில் வருத்தம் வேண்டா, கூட இருக்க அமையும்.

பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளம் பாவியேன் மனம் அகம்தோறும் உள் புக்கு அழுத்த நின் செங்கனி வாயின் கள்வம் பணி மொழி நினைதொறும் ஆவி வேம்-

---

1. முடிவின் எல்லைக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பிள்ளையமுதனுர்' என்று தொடங்கி.

2. பசுக்களின் துன்பம் இவனது ஆனதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'சரீரத்திலே' என்று தொடங்கி.

3. "விரும்பி எம்மைத் துறந்து" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவற்றை' என்று தொடங்கி.

4. "இட்டு" என்ற பதத்திற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அறிவு இல்' என்று தொடங்கி.

5. "விரும்பி இட்டு" என்னும் இரண்டு சொற்களாலும் யோதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'இவர்களுடன்' என்று தொடங்கி.

6. "போதி" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'அவற்றை' என்று தொடங்கி.

7. "இடற" என்றது, பெரியாழ்வார் திருமொழி, 3. 2 : 6.

8. "எற்றுக்கு" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 3. 2 : 2.

[1]"நான் போகையாவது என்? போனால்தான் உங்களை மறப்பது உண்டோ? என் ஆற்றாமை உங்களுக்கு உண்டோ? நான் தாய்தந்தையர்கட்குப் பரதந்திரப்பட்டவன் ஆகையாலே அவர்கள் சொல்லிற்றுச் செய்ய வேண்டியிருத்தலின் போகிறேனித்தனையே? போனாலும் மனம் இங்கே அன்றோ?" என்பன போன்ற சில தண்ணிய சொற்களைக் கூறினான்; இவைகாண் எங்களை மறக்க ஒண்ணாதபடி பண்ணுகின்றன என்கிறார்கள். [2]பக்குவமாய் மிகச் சிறந்த அமுதத்தினுடைய இனிய சாற்று வெள்ளம்போலே இனிமையாம்படி சொல்லுகிற வார்த்தைகள் என்னுதல். அன்றிக்கே, கலவியிலே ஒரு வகையைச் சொல்லிற்றாகவுமாம். என்றது, வாய் அமுதம் என்றபடி. "வாய் அமுதம் தந்து என்னைத் தளிர்ப்பிக்கின்றான்" என்னக் கடவது அன்றோ.

பாவியேன் - [3]அமுதமே நஞ்சாம் படியான பாபத்தைப் பண்ணினேன். [4]பிரிவினை நினைத்துப் 'பிரியேன்' என்னுமிது நஞ்சுக்குச் சமம் அன்றோ. மனம் அகம் தோறும் உள்புக்கு அழுத்த நின் செம் கனி வாயின் - மனத்தின் இடம் தோறும் மறக்க ஒண்ணாதபடி அழுந்தப் பண்ண உன் சிவந்த கனி

---

1. அவர்கள் கூறியதற்குச் சமாதானம் சொல்லுகிறான் 'நான் போகையாவது' என்று தொடங்கி. "போதி" என்றதற்கு விடை 'நான் போகையாவது என்?' என்பது. "நினைகிலை" என்றதற்கு விடை 'போனால்தான்' என்று தொடங்கும் வாக்கியம். "தனிமையும் துயரமும்" என்றதற்கு விடை 'என் ஆற்றாமை' என்று தொடங்கும் வாக்கியம். "பசுக்களையே" என்றதற்கு விடை 'நான் தாய் தந்தையர்கட்கு' என்று தொடங்கும் வாக்கியம். "விரும்பி" என்றதற்கு விடை 'போனாலும்' என்று தொடங்கும் வாக்கியம்.

2. பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளமான நின் செங்கனி வாயின் கள்வப் பணிமொழி என்று கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'பக்குவமாய்' என்று தொடங்கி. நின் செங்கனி வாயின் பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளம் என்று கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. அதரத்திலே உண்டாகும் ரசத்தை அமுதம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'வாய் அமுதம்' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி, 1. 7: 4.

3. கொஞ்சுகிளி அன்னமொழி குமுத இதழ் அமுதால்
எஞ்சினன் நராதிபதி ஈதொரு வியப்போ
அஞ்சுதரு தீவினையினால் அமுது நஞ்சாம்
நஞ்சும் அமுதாம் உரிய நல்வினையின் மாதோ.

என்பது, வில்லிபாரதம்.

4. அமுதம் போன்ற மொழி நஞ்சாவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரிவினை' என்று தொடங்கி.

போலே இருக்கிற வாயினுடைய. கள்வம் பணி மொழி - [1]இச் சாற்று வெள்ளத்துக்கு ஊற்றுவாய் காணும்; எழுதிக் கொள்ளுகிற தாழ்ந்த பேச்சுக்கள். [2]பிரிவினை நினைத்துச் சொல்லுகிற வார்த்தை ஆகையாலே, மனத்தினை அழிக்கக் கூடியதாய் அன்றோ இருப்பது. [3]நினைவு ஒன்றும், சொலவு ஒன்றுமாய் இருக்கை. நினைதொறும் - [4]இவை தாரகம் ஆமோ? என்னும் நினைவாலே நினைக்கப் புகுமே; அது துன்புறுத்துவதாமே; பின்னையும் விடமாட்டாளே; இங்ஙனே உருவச் செல்லுமித்தனை. ஆவி வேம்ஆல்-தனக்குப் பற்றுக்கோடான உயிரானது வேவாநின்றது.[5]நெருப்புச்சேர்ந்தாரைக்கொல்லி ஆக அன்றோ இருப்பது.

பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளமான நின் செம்கனி வாயின் கள்வம் பணி மொழி பாவியேன் மனம் அகம் தோறும் உள்புக்கு அழுத்த, நீ மறக்க ஒண்ணாதபடி அழுந்தப் பண்ண அவற்றை நினைக்க நினைக்க ஆவி வேவாநின்றது. (4)

---

1. "பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளம்" என்பதற்கு மேலே அருளிச்செய்த இருவகைப் பொருள்களில் முதற் பொருளுக்குத் தகுதியாக ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'இச் சாற்று வெள்ளத்துக்கு' என்று தொடங்கி. "கள்வம்" என்பது, களவாய், அது மனக் கவர்ச்சியைக் காட்டுவதாகக் கொண்டு, கள்வம் என்பதற்கு 'எழுதிக்கொள்ளுகிற' என்று பொருள் அருளிச்செய்கிறார்.

2. தாழ்ந்த பேச்சுக்களால் ஆவி வேக வேண்டுமோ? என்ன, 'பிரிவினை நினைத்து' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "கள்வம்" என்பதற்கு, வஞ்சனை என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'நினைவு ஒன்றும்' என்று தொடங்கி.

4. "நினைதொறும்" என்றதிலே உள்ள "தொறும்" என்ற பன்மையைக் காட்டும் இடைச் சொல்லுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவை' என்று தொடங்கி.

5. உயிர் வேவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நெருப்பு' என்று தொடங்கி. என்றது, நெருப்புத் தனக்குப் பற்றுக்கோடான கட்டையை எரிக்குமாறு போன்று, நினைவும் தனக்குப் பற்றுக்கோடான ஆத்மாவை எரிக்கிறது என்றபடி.

> சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனம் என்னும்
> ஏமப் புணையைச் சுடும்.

என்பது, திருக்குறள்.

1019.

பணி மொழி நினைதொறும், ஆவி வேமால்;
பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா!
பிணி அவிழ் மல்லிகை வாடை தூவ,
பெரு மத மாலையும் வந்தின்று ஆலோ!
மணி மிகு மார்வினின் முல்லைப் போது என்
வன முலை கமழ்வித்து,உன் வாய் அமுதம் தந்து,
அணி மிகு தாமரைக் கையை அந்தோ!
அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்!

பொ - ரை :— பகல்காலம் எல்லாம் பசுக் கூட்டங்களை மேய்ப்பதற்காகச் சென்ற கண்ணபிரானே! உன்னாலே பணிவோடு பேசப்படுகின்ற வார்த்தைகளை நினைக்கும்போதெல்லாம் உயிரானது வேகின்றது, அரும்புகள் மலர்கின்ற மல்லிகை மலர்களின் மணத்தை வாடைக் காற்றானது வீச மாலைக்காலமும் வந்தது, கௌத்துவம் என்னும் இரத்தினமானது அலங்காரத்தைச் செய்துகொண்டிருக்கின்ற திருமார்விலே அணிந்துள்ள முல்லை மலர்களின் மணத்தினால் என்னுடைய அழகிய முலைகள் வாசனை வீசும்படியாகச் செய்து, உன் வாயிலே உள்ள அமுதத்தைக் கொடுத்து, அழகு மிகுந்த தாமரைபோன்ற திருக்கரத்தை உன் அடியவர்களாகிய எங்களுடைய தலையின்மேலே நீ அணிய வேண்டும்.

வி - கு :—தூவ மாலையும் வந்தின்று என்க. [1]வந்தின்று - வந்தது. மணி மிகு மார்வு - மணி மிகுதற்குக் காரணமான மார்பு எனலுமாம். முல்லைப்போது - கண்ணபிரான் அணிந்திருக்கும் மாலை. முல்லைப் போதுகளாலே வன முலையைக் கமழ்வித்து அமுதம் தந்து கையைத் தலைமிசை நீ அணியாய் என்க.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [2]நான் உன் முன்னர் இருந்துகொண்டிருக்க, நீ இப்படிப் படுகிறது என்? என்ன, நீ பசு

1. மன்னவன் புகழ் கிளந்து
ஒன்னார் நாடு அழிபு இரங்கின்று
என்பது, வெண்பாமாலை, 43.

2. "பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா" என்றதற்குக் காரணத்தை அருளிச்செய்யாநின்றுகொண்டு, "பிணி யவிழ் மல்லிகை" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

மேய்க்கக் கடவனுன பின்பு, நீயும் போனுய்: நீ போனுல் நலியக்கூடிய மாலைக் காலம் முதலிய பொருள்களால் நலிவு படுகிற என்னை நலிவு படாவண்ணம் செய்தருள வேண்டும் என்கிருள்.

பணிமொழி நினைதொறும் ஆவி வேம்-[1]பிரிவினை நினைத்துப் 'பிரியேன்' என்று சொல்லுகிற உன் வார்த்தை போலே உன்னைப் பிரியாமைக்காகச் சொல்லுகிற வார்த்தை அன்று; உன்னது கள்வப் பணிமொழி ஆகையாலே பொய், இது அநுபவத்துக்குப் பாசுரம் இட்டுச் சொல்லுகிறதாகையாலே மெய். "நான் போனேனே?" என்ன, பகல் நிரை **மேய்க்கிய** போய - பகல் எல்லாம் பசுமேய்க்கப் போனுய். [2]கண்ணு - என்று விளித்து, அவன் தன்னையே 'நீ போனுய்' என்கிருள் அன்றே! மேய்க்கிய-மேய்க்க. பிணி அவிழ் மல்லிகை வாடை தூவ - [3]நீ போனுல், துன்புறுத்தக் கூடியனவான மல்லிகை கமழ் தென்றல் தொடக்கமானவை மறுவல் இடுகையாலே நீ சென்றமை நிச்சயம் என்கிருள். கட்டு அவிழ்கிற மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவாநின்றது. [4]இராவணன் துறவி வேடத்தைக் கொண்டு வந்து தோற்றினுற்போல, வாடையானது குளிர்காற்ருய் வந்து நலியாநின்றது. வெக்

---

1. இப் பாசுரத்திலும் "பணிமொழி நினைதொறும் ஆவி வேமால்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'பிரிவினை' என்று தொடங்கி. என்றது, நான் போகாமைக்காக ஒன்றைச் சொன்னுயத்தனை போக்கி இது உண்மை அன்று என்று அவன் சொன்ன வார்த்தையை மனத்தே கொண்டு, தான் சொன்ன வார்த்தை சத்தியம் என்று அவன் நெஞ்சிலே படுத்துகைக்காக மீளவும் சொல்லுகிருள் என்றபடி.

2. வியாக்கியாதாவின் ஈடுபாடு, 'கண்ணு' என்று தொடங்கும் வாக்கியம். என்றது, இதொரு மயக்கம் இருந்தபடி என்? என்றபடி. 'என்கிருள் அன்றே' என்றதன்பின், "கூட இருக்கச் செய்தே பிரிவு உண்டாகுமோ? என்று ஐயப்படுவதன் ஊற்றம்!" என்னும் வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்வது.

3. முன்னே நிற்கிறவனைப் "போனுய்" என்பது என் கொண்டு? என்ன, 'நீ போனுல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. மல்லிகையின் மணத்தைத் தென்றல் ஒழியக் காலையில் வீசுகிற வாடைக் காற்று வீசக் கூடுமோ? என்ன, 'இராவணன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். குளிர் காற்று - தென்றற் காற்று. என்றது, வாடை தென்றலின் உருவத்தை ஏறிட்டுக்கொண்டு வந்தது என்றபடி.

காயம் தட்டாமல் கடக்க நின்று வீசாநின்றது. [1] "தாமரைப் பூக்களின் தாதுக்களோடு சேர்ந்ததும், மரங்களின் நடுவிலிருந்து புறப்பட்டதும், சீதையின் மூச்சுக் காற்றைப் போன்று மனத்தைக் கவர்வதுமான காற்று வீசுகிறது" என்கிறபடியே. பெரு மதம் மாலையும் வந்தின்று-[2]மதம் பிடித்த யானையானது முன்னே தலைப்பறை கொட்ட வருமாறு போலே, வாடையை முன் நடக்க விட்டுக் கொண்டாயிற்று மாலை வருகிறது. [3]இவளை மதித்தபடியாலே கூட்டுப் படையாய் வாராநின்றதாயிற்று. வந்தின்றுலோ-வந்தது காண்; [4]உடம்பிலே பட்டொழிந்தது காண். பெரிய கிளர்த்தியையுடைய மாலையானது வரும் என்று அஞ்சுகின்றது அன்று; வந்தது. [5]பகதத்தன் விட்ட வேலுக்கு அருச்சுனனைப் பின்னை இட்டு உன் மார்விலே ஏற்றாற்போலே, நடுவேபுகுந்து கட்டிக்கொள்ள வேண்டும் காண்.

ஆனால், செய்ய அடுப்பது என்? என்ன, மணி மிகு மார்வினில் - ஸ்ரீ கௌஸ்துபம் நிறம் பெறும்படியான மார்பு என்னுதல். திருமார்பு அடங்க ஸ்ரீ கௌஸ்துபத்தின் புகரேயாம்

---

1. கடக்க நின்று வீசுவதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தாமரைப் பூக்களின்' என்று தொடங்கி.

> பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்டஃ வ்ருக்ஷாந்தர விநிஸ்ஸ்ருதஃ
> நிஶ்வாஸ இவஸீதாயாஃ வாதி வாயுஃ மநோஹரஃ.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1 : 17.

2. வாடை தூவ மாலை வருவதற்கு எடுத்துக்காட்டு காட்டுகிறார் 'மதம் பிடித்த' என்று தொடங்கி.

> "நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்
> போதர விட்ட நுமரும் தவறிலர்
> நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்
> பறையறைந் தல்லது செல்லற்க என்னா
> இறையே தவறுடையான்"

என்பது, கலித்தொகை, செய். 56.

3. மாலை வாடையைக் கூட்டிக்கொண்டு வருவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவளை' என்று தொடங்கி.

4. மேலதனை விவரணம் செய்கிறார் 'உடம்பிலே' என்று தொடங்கி. "பெரு மத மாலை" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பெரிய கிளர்த்தியையுடைய' என்று தொடங்கி.

5. ஆயின், செய்ய அடுப்பது என்? என்ன, 'பகதத்தன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இங்கு,

திருவாய்மொழி 9-ஆம் பத்து வியாக்கியானம் 256-ஆம் பக். கீழ்க் குறிப்புப் பார்க்க.

படி இருக்கும் என்னுதல். [1] கலவியிலும் கழற்றவேண்டாத படியன்றோ ஸ்ரீ கௌஸ்துபம் இருப்பது; [2] "எல்லை இல்லாத இன்பத்தைக் கொடுக்கக்கூடியது" என்னக் கடவது அன்றோ. [3] இவளுடைய பெண்மைக்கு முலைபோலே ஆயிற்று, அவனுடைய ஆண்மைக்கு ஸ்ரீ கௌஸ்துபம். புருஷோத்தமனும் தன்மைக்கு இலக்கணம் அன்றோ.

முல்லைப் போது என் வன முலை கமழ்வித்து-அம் மார்வில் முல்லை மாலையாலே என்னுடைய அழகிய முலையை மணமுடையது ஆக்கி. [4] ஸ்ரீ கௌஸ்துபத்தோடு தோளில் மாலையோடு வாசி இன்றிக்கே இன்பத்திற்குக் கருவிகளாக இருக்கின்றன ஆயிற்று. தோளில் முல்லை மாலையின் மணத்தை என் முலைக்கு ஆக்கவேண்டும் என்கையாலே, மறைபொருளாகக் கலவியைக் கூறியபடி. [5] குளித்துப் பூச் சூட இருப்பாரைப் போலே ஆயிற்று இம்முலைகள். [6] இவை பிரஹ்மசாரி முலைகள் ஆகாமே, இம் மாலையின் மணத்தாலே இவை மணமுடையனவாகச் செய்வாய்; [7] அம் மாலையில் மணம் இங்கும், கோது அங்குமாகப் பண்ணவேண்டும். அம் மாலையில் மணம் முலையிலே ஆம்போது

---

1. "வனமுலை கமழ்வித்து" என்றதனால் கலவி சொல்லாநிற்க, அதற்கு முரண்பட்டதன்றோ கௌஸ்துபம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கலவியிலும்' என்று தொடங்கி.

2. அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'எல்லை இல்லாத' என்று தொடங்கி.

"ஸ்வோசித விவித விசித்ரானந்த ஆஸ்சர்ய நித்ய நிரவத்ய
நிரதிஶய ஸுகந்த நிரதிஶய ஸுகஸ்பர்ஶ - கௌஸ்துப"

என்பது, சரணாகதி கத்யம், 5.

3. அம் மணி அவனுக்கு நிருபகம் ஆகையாலும் கழற்ற ஒண்ணாது என்று வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறார் 'இவளுடைய' என்று தொடங்கி.

கல்லாதான் சொல் காமுறுதல் முலை இரண்டும்
இல்லாதாள் பெண் காமுற்றற்று.

என்பது, திருக்குறள்.

4. "மணிமிகு மார்பு, முல்லைப்போது" என்ற பதச் சேர்த்திக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ கௌஸ்துபத்தோடு' என்று தொடங்கி.

5. "வனமுலை" என்ற விசேடணத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'குளித்து' என்று தொடங்கி.

6. "கமழ்வித்து" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவை' என்று தொடங்கி.

7. அதனை விவரணம் செய்கிறார் 'அம் மாலையில்' என்று தொடங்கி.

கலவியை ஒழியக் கூடாதே; [1]"வனமாலையின் சேர்க்கைக்கு என்னவழி" என்னுமாறு போலே. [2]வாய் அமுதம் தந்து - புணர்ச்சி இன்பம் தலைக்குமேலே மிக்கவாறே தரித்திருப்பதற்காகச் சில பேச்சுக்கள் உண்டே பேசுவது, அப் பேச்சு ஆதல்; அன்றிக்கே, வாய் அமுதத்தைச் சொல்லவுமாம். சொற்கள் என்றே கூறிப் போருவது.

அணி மிகு தாமரைக் கையை அந்தோ அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய் - உன் போக்கினை நினைக்க நா நீர் வருகிறது இல்லை; ஆதலால், அதற்கு மாற்றாக உன் கையை என் தலைமேலே வைக்க வல்லையே? நா நீர் வருகைக்கு இவர்களுடைய [3]முந்திரிகைப் பழம் இருக்கிறபடி. ஆபரணங்கள் மிகுந்தனவாய் [4]அவை தாம் மிகையாம்படி[5] "எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கத் தகுந்தனவான" என்கிறபடியே, தனக்குத் தானே ஆபரணம் என்கிற கையை. [6]"பசு மேய்க்கப் போனால் வருமளவும் எனக்குத் தாரகமாக உன் கையில் ஆபரணத்தைத் தா, உன் கையில் ஆபரணத்தைத் தா" என்று அவர்களுக்கு அற்றுக் காட்டி வாங்கி இட்டு வைக்குமே; அன்றிக்கே, பசு மேய்க்கப் போதற்குத் தான் ஒப்பித்தபடியைச் சொன்னாளாகவுமாம். [7]அதனைச் செய்து, அவன்

---

1. அதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'வனமாலை' என்று தொடங்கி.

"கிம் முகம் வனமாலா ஸங்க்ரமஸ்ய"

என்பது, பிரமாணம்.

2. "வாய் அமுதம்" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருள், வாயினின்றும் வருகிற சொற்கள்.

3. முந்திரிகைப்பழம் - திராக்ஷைப்பழம்.

4. "தாமரைக் கை" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவை தாம்' என்று தொடங்கி.

5. ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பாஹவ: பரிகோபமா:
ஸர்வ பூஷண பூஷார்ஹா: கிமர்த்தம் நவிபூஷிதா:.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 3 : 14.

6. ஆபரணங்கள் மிகுந்திருப்பதற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு இரண்டு வகையில் விடை அருளிச்செய்கிறார் 'பசு மேய்க்க' என்று தொடங்கி. 'அற்றுக்காட்டி' என்றது, மிக்க பரதந்திரனாய் என்றபடி.

7. தானே ஒப்பித்தால் பசுமேய்க்கப் போவதற்கு இவள் வருந்துவான் என்? என்ன, 'அதனைச் செய்து', என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

போகப் புக்கவாறே வருந்துகிறாள் அன்றோ. [1]தாமரைக் கை-ஆபரணங்கள் மிகையாம்படியான கை.[2]சேர்ந்து குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு வாராய் என்று சொல்லவேண்டுவதே உனக்கு! அடிச்சியோம் - [3]அழகுக்குத் தோற்ற தோல்வி சொல்லுகிறாள்.

தலைமிசை நீ அணியாய் - [4]ஆபரணத்துக்கு அந்தக் கை போலே ஆயிற்று, இவள் தலைக்கு அந்தக் கை. [5]"பாத பங்கயமே தலைக்கு அணியாய்" என்பது, "அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்" என்பதாய், காலைக் கையைப் பிடித்துக் காரியம் முற்றுவிக்கப் பார்க்கிறார்கள். [6]"என்னுடைய தலையை உன் திருவடிகள் அலங்கரிக்கின்றது எப்போதோ" என்றே அன்றோ இவர்கள் இருப்பது. இந்த நிர்ப்பந்தங்கள் எல்லாம் அறிவார் ஆர்? வேண்டுமாகில் எடுத்து வைத்துக் கொள்ளாய்! என்றான்; [7]காலன் கொண்டு மோதிரம் இடுவாரைப் போலே என் பேற்றுக்கு நான் முயற்சி செய்யுமவளோ? நீயே மேல்

---

1. 'அவைதாம் மிகையாம்படி' என்று மேலே கூறியதனை, சொற்களை எடுத்துக் காட்டிச் சொற்களில் ஏறிட்டுக் காட்டுகிறார் "தாமரைக் கை" என்று தொடங்கி.

2. "தாமரைக் கையை நீ அணியாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி "அந்தோ!" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'சேர்ந்து' என்று தொடங்கி. "தாமரைக் கை" என்று கையின் குளிர்ச்சியைக் கூறிற்றே அன்றோ.

3. "அணி மிகு தாமரைக் கையை" என்றதன் பின் "அடிச்சியோம்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அழகுக்கு' என்று தொடங்கி.

4. வையாய் என்னுமல் "அணியாய்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஆபரணத்துக்கு' என்று தொடங்கி.

5. "நீ அணியாய்" என்று நிர்ப்பந்திப்பான் என்? என்ன, ரசோக்தியாக அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாத பங்கயமே' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 2 : 2.

6. "அணியாய்" என்பதற்கு, திருவடிகளை இவர்கள் ஆபரணமாக நினைத்திருப்பர்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என்னுடைய தலையை' என்று தொடங்கி.

> "த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜ த்வயம்
> மதீயம் மூர்த்தாநம் அலங்கரிஷ்யதி"

என்பது, தோத்திர ரத்நம், 31.

7. "நீ அணியாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'காலன் கொண்டு' என்று தொடங்கி, காலன் கொண்டு - கால புருஷதானம் வாங்கி,

விழுந்து தரக் கொள்ளுமவள் அன்றோ நான்? -[1] ஆற்றாமை மிக்கது என்று அல்வழக்குச் செய்யோம் காண்! நீ செய்வுற்றை நாங்கள் செய்யவோ? [2]என்றும் அத் தலையாலே பெற இருக்குமவர்கள் அன்றோ இவர்கள்தாம். (5)

1020.

அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்
ஆழி அம் கண்ணா! உன் கோலப் பாதம்;
பிடித்து அது நடுவு உனக்கு அரிவையரும்
பலர்; அது நிற்க, எம் பெண்மை ஆற்றோம்;
வடித்தடம் கண் இணை நீரும் நில்லா;
மனமும் நில்லா: எமக்கு அது தன்னாலே
வெடிப்பு நின் பசுநிரை மேய்க்கப் போக்கு;
வேம், எமது உயிர் அழல் மெழுகில் உக்கே.

பொ - ரை :—உனக்கு அடியவர்களாகிய எங்களுடைய தலையின் மேலே உன் கையினை நீ அணியவேண்டும்; கடல் போன்று விடாய் நீக்க வல்ல அழகிய திருக் கண்களை உடையவனே! நீ பசு மேய்க்கப் போகிற காரியத்துக்கு நடுவில், உன்னுடைய அழகிய திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்ட, உன் மனத்துக்கு இசைந்த பெண்களும் பலர் இருக்கின்றார்கள்; அது நிற்க; உன் பிரிவில் எம்முடைய பெண்மையை ஆற்றி அடக்கி இருக்க மாட்டுகின்றிலோம்; எங்களுக்கு, கூரிய விசாலமான இரண்டு கண்களிலும் இருந்து வருகின்ற கண்ணீரும் நிற்கின்றது இல்லை, மனமும் நிற்கிறதில்லை; ஆதலாலே, கணப்பொழுதும் பிரிவு ஆற்றகில்லாத எங்களுக்கு, உன்னுடைய பசுக்களை மேய்ப்பதற்கு நீ போகும் செலவானது விருப்பம் இல்லாத காரியமாகும்; எங்களுடைய உயிரும் நெருப்பினைச் சார்ந்த மெழுகினைப் போன்று உருகி வேகாநின்றது.

வி - கு :—ஆழி அம் கண்ணா! அது நடுவு உன் கோலம் பாதம் பிடித்த அரிவையரும் உனக்குப் பலர் என்று கூட்டுக. அது என்றது, பசு மேய்த்தலைக் குறித்தது. அன்றிக்கே, "அது" என்பதனைப் பாதம் அது என்று பாதத்தோடே கூட்டலுமாம். பிடித்து - பிடித்த

---

1. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'ஆற்றாமை' என்று தொடங்கி.

2. சுவாப தேசப் பொருள் (உள்ளுறை) அருளிச்செய்கிறார் 'என்றும்' என்று தொடங்கி.

எச்சத் திரிபு. எமக்கு வடித்தடம் கண் இணை நீரும் நில்லா, மனமும் நில்லா என்றும், அது தன்னாலே நின் பசு நிரை மேய்க்கப் போக்கு வெடிப்பு என்றும், எமது உயிர் அழல் மெழுகில் உக்கு வெம் என்றும் கூட்டுக.

ஈடு:—ஆறும் பாட்டு. [1]சென்ற சென்ற இடமெல்லாம் காதலிமார்கள் உனக்குப் பலர் உளர்; உனக்கு ஒரு குறை இல்லை; நாங்கள் உன்னைப் பிரிந்து தரிக்க மாட்டுகிறிலோம்: ஆதலால், உன் செலவினை எங்களால் பொறுக்கமுடியாது.

[2]அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய் - தோற்றுரை ஈரக் கையாலே தடவ வேண்டாவோ? ஆழி அம் கண்ணா - கடல்போன்று சிரமத்தைப் போக்குகிற காண்பதற்கு இனிய திருக்கண்களை உடையவனே! [3]'நீ அணியாய்' என்றதனை அடுத்து 'ஆழி அம் கண்ணா' என்கையாலே, திருக்கண் களாலே குளிர நோக்க வேண்டும் என்பது போதரும். [4]'உங்கள் கைகளாலே தீண்டுதல் வேண்டும்' என்று அன்றோ நான் இருப்பது? எனக்குப் போக்கு உண்டோ? போனாலும் உங்களை ஒழியப் புறம்பு விஷயம்தான் எனக்கு உண்டோ? என்ன, ஓம் காண்! இது நிற்க! உன் கோலம் பாதம் பிடித்து அது நடுவு உனக்கு அரிவையரும் பலர் - [5]உன் திருவடிகளைப் பற்றி இருப்பார் பலர்; உனக்குச் சென்ற சென்ற இடம் எங்கும் பெரிய திருநாள் அன்றோ? நடுவு - போகும் காரியம் ஒழிய நடுவே. அரிவையர் - தங்கள் பருவத்தாலே துவக்க வல்லவர்.

---

1. "உன் கோலப் பாதம் பிடித்து" என்றது முதல் "வெடிப்பு நின் பசு நிரை மேய்க்கப் போக்கு" என்றது முடியக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்" என்றது, அநுவாதம். கருத்து அருளிச்செய்கிறார் 'தோற்றுரை' என்று தொடங்கி. "அடிச்சியோம்" என்றதனை நோக்கித் 'தோற்றுரை' என்கிறார்.

3. "அம் கண்ணா!" என்று இங்கே கண்ணழகினைச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீ அணியாய்' என்று தொடங்கி. என்றது, திருக் கைகளாலே தீண்டிய அளவே அன்றித் திருக் கண்களாலே நோக்கவும் வேண்டும் என்றபடி.

4. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'உங்கள்' என்று தொடங்கி.

5. கருத்துப் பொருள் அருளிச்செய்கிறார் 'உன் திருவடிகளை' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'உனக்கு' என்று தொடங்கி.

பலர் - ஒருவர் இருவரோ? [1]"பெண்கள் பதினாறும் ஆயிரவர்", [2]"பதினாறும் ஆயிரவர் தேவிமார்" என்கிறபடியே. அது நிற்க- அது கிடக்க. [3]யானைக் கூட்டத்துக்குக் கதவிடப் புகுகிறாமோ?

எம் பெண்மை ஆற்றோம் - எங்கள் பெண் தன்மையைக் கொண்டு ஆற்ற மாட்டுகிறிலோம். என்றது, நீ சென்றால் நாங்கள் பிழைக்கமாட்டோம் என்றபடி. பெண்மை சொரூபமானால் வருமளவும் வருந்தித் தரிக்க வேண்டாவோ? என்ன, வடித் தடம் கண் இணை நீரும் நில்லா - எங்களைப் பார்க்கமாட்டாயோ? பிழைத்திருக்கின்றவர்களுடைய இலக்கணம் உண்டோ எங்கள் உடம்பில்? [4]கூர்த்துப்பெருத்து இருந்துள்ள கண்கள் நீர் மாறுகிறன இல்லை. [5]ஒரு நோக்கும் ஓர் ஆளும் நேராம்படி இது ஒரு கூர்மையே! இனிமையில் பரப்பு அநுபவிக்கின்றவர்களுடைய அளவு அன்றிக்கே இருக்கும்படியே! என்று நீ வாய்வெருவும் கண்கள் படுகிறபடி பாராய்! [6]நீ நிற்கிலும் நீர் நிற்கிறது இல்லை. உன்னைத் தகையிலும் நீரைத் தகையப் போகிறதில்லை என்பாள் 'நீரும் நில்லா' என்கிறாள்.

---

1. "பலர்" என்றதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'பெண்கள்' என்று தொடங்கி.

> ஷோடஶஸ்த்ரீ ஸஹஸ்ராணி ஶதமேகம் ததோதிகம்
> தாவந்திசக்ரே ரூபாணி பகவாந் தேவகீஸுதஃ.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 13 : 18.

2. "பதினாறும் ஆயிரவர்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 4. 9: 4.

3. "அது நிற்க" என்கிறவர்களுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'யானைக் கூட்டத்துக்கு' என்று தொடங்கி. என்றது, யானையின் சேர்க்கைக்குத் தடை செய்ய இயலாதது போன்று, இதுவும் இயலாது என்றபடி.

4. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'கூர்த்து' என்று தொடங்கி.

5. "வடித் தடம் கண் இணை" என்று கண்களை வருணிப்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு நோக்கும்' என்று தொடங்கி. என்றது, ஒரு நோக்கிற்கு ஓர் ஆள் தப்பாது என்றபடி.

6. "நீரும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நீ நிற்கிலும்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'உன்னை' என்று தொடங்கி.

நில்லாமையாவது என்? வருந்தித் தகைய வேண்டாவோ? என்ன, [1] இது நிற்கும்போது ஊற்றினைத் தகைய வேண்டுமே? என்கிறாள். ஆயின், ஊற்றான நெஞ்சினைத் தகையுமித்தனை அன்றோ? என்ன, மனமும் நில்லா - [2] தைரியக் குறைவு உண்டாகி நாங்கள் படுகிறபடி பாராயோ? வருந்தி நெஞ்சினைப் பிடித்துத் தரிக்க வேண்டாவோ? என்ன, எமக்கு - [3] நீயாக வேண்டுமே அதற்கு: பிரிகைக்கும் பிரிவில் நெஞ்சு இளையாமைக்கும். [4] யாமுடை ஆயன் தன் மனம் கல் அன்றோ. அது தன்னாலே-இப்படி மனம் நிலை கெடுவதனாலே. வெடிப்பு நின் பசுநிரை மேய்க்கப் போக்கு - நீ பசு மேய்க்கப் போகிற இது வெடிப்பு. வெடிப்பாவது என்? என்ன, எமது உயிர் அழல் மெழுகில் உக்கு வேம் - எங்களுடைய உயிரானது நெருப்பின் அருகில் இருக்கும் மெழுகிலும் காட்டில் உருகி வெந்துபோகாநின்றது. வெடிப்பு - அழிவு. (6)

1021.

வேம், எமது உயிர் அழல் மெழுகில் உக்கு;
வெள்வளை, மேகலை கழன்று வீழ,
தூ மலர்க் கண்ணிணை முத்தம் சோர,
துணை முலை பயந்து என தோள்கள் வாட,
மா மணிவண்ணா! உன் செங்கமல
வண்ண மென் மலரடி நோவ, நீ போய்
ஆ மகிழ்ந்து உகந்து, அவை மேய்க்கின்று உன்னோடு
அசுரர்கள் தலைப்பெயில் எவன்கொல் ஆங்கே?

பொ - ரை:—எம்முடைய உயிரானது நெருப்பினைச் சேர்ந்த மெழுகினைப் போன்று உருக் குலைந்து வேகாநின்றது; வெள்ளிய வளையும் மேகலையும் கழன்று விழவும், பரிசுத்தமான தாமரைமலர்

---

1. "மனமும் நில்லா" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இது' என்று தொடங்கி.

2. "மனமும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தைரியக் குறைவு' என்று தொடங்கி.

3. "எமக்கு" என்ற சொல்லிற்கு, மறுதலைப் பொருளாக, பாவம் அருளிச்செய்கிறார் 'நீயாக வேண்டுமே அதற்கு' என்று. 'அதற்கு' என்றதனை விவரணம் செய்கிறார் 'பிரிகைக்கும்' என்று தொடங்கி. இளையாமை - கடினமாக இருத்தல்.

4. அவன் மனம் கடினமாக இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "யாமுடை" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 9: 5.

போன்ற இரண்டு கண்களினின்றும் முத்துப் போன்று கண்ணீர் சோரவும், இரண்டு முலைகளும் பசலை நிறத்தை அடையவும், தோள்கள் வாடவும், மாமணி வண்ணா! உன்னுடைய செங்கமலமலர் போன்ற நிறத்தையுடைய மெல்லிய திருவடிகள் நோவும்படியாக நீ சென்று, பசுக்களை விரும்பி அவற்றின் பக்கல் உண்டான விருப்பத்தாலே அவற்றை மேய்க்கிற காலத்தில் உன்னோடு அசுரர்கள் வந்து போர் தொடுக்கில் அங்கு யாதாகுமோ?

வி - கு :—கழன்று வீழ, முத்தம் சோர, பயக்க, வாட, நீ போய் மேய்க்கின்று; அசுரர்கள் தலைப்பெய்யில் ஆங்கு எவன் கொல்? என்று எமது உயிர் அழல் மெழுகில் உக்கு வேம் என முடிக்க. பயந்து என்பதற்குப் பயக்க என்பது பொருள். மேய்க்கின்று - மேய்க்கின்ற காலத்தில்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1]நாங்கள் நோவுபட, உன் மெல்லிய திருவடிகள் நோவப் பசு மேய்க்கப் போனால், அங்கு அசுரர்கள் கிட்டினால் என்னாய் விளையும்? என்கிறாள்.

எமது உயிர் அழல் மெழுகில் உக்கு வேம் - [2] உனக்கு அன்பு இல்லாமையாலே தெரியாவிட்டால் எங்கள் உபதேசம் கொண்டு அறிந்தால் ஆகாதோ? [3] '**எமது உயிர் வேம்**' என்கையாலே, உனக்கு அது இல்லை என்று தோன்றுமே அன்றோ. வெள் வளை மேகலை கழன்று வீழ - பிரிவினால் உண்டாகிய மெலிவால் வெள்வளைகளும் மேகலைகளும் கழன்று விழும்படியாகவும். வெள் வளை - சங்குவளை. [4] பிறர் அறியாதபடி பல காலும் எடுத்து இடுவது பேணுவது ஆனாலும், அவை பற்றுக்கோடு இன்றி நில்லாவே; ஆகாசத்தில் தொங்காதே: [5] அப்படிக் காணும் உடம்பு இளைத்தபடி. தூ மலர்க் கண் இணை

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "வேம் எமது உயிர் அழல் மெழுகில் உக்கு" என்ற அநுவாதத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உனக்கு' என்று தொடங்கி.

3. அன்பு இல்லாமைக்கு அறிகுறி யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "எமது உயிர் வேம்" என்று தொடங்கி.

4. புத்தி பூர்வகமாகத் தரித்த வளையும் மேகலையும் கழன்று விழுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிறர் அறியாதபடி' என்று தொடங்கி.

5. சரீரம் இருக்க, ஆகாசம் என்பான் என்? என்ன, 'அப்படி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

முத்தம் சோர - [1] நாயகன் வார்த்தையாலே சொன்னபடி. என்? தன் கண்களை நாயகன் இப்படிச் சொன்னனோ? என்னில், "கண்களாய துணைமலர், காவியும் நீலமும் வேலும் கயலும் பல பல வென்று இருக்கும்" என்றானே அன்றோ.

தூ மலர்க் கண் இணை முத்தம் சோர-[2] இது காறும் பார்த்திராதது ஒன்று நீ காணலாம்: போகாதேகாண் என்கிறாள். [3] தாமரைப்பூவிலேமுத்துப்பட்டது; கண்ணான முத்தே அன்றோ. [4] அவனுக்குத் தோழி சொல்லச் செவி ஏறு கேட்டுச் சொல்லுகிறாள். [5] "ஞாலம் எய்தற்குரியன ஒண் மூத்தும் பைம்பொன்னும் ஏந்திற்றின" என்று கருத்து அறிந்தபடியைத்தான் சொன்னனே. துணை முலை பயந்து - [6] நீ சேர்த்தி அழகு சொல்லிக் கொண்டாடும் முலைகளானவை பசலை நிறத்தை மேற்கொண்டன; 'அவனுடைய கோயிற் கட்டணம் அழிகிறது' என்கிறாள். என தோள்கள் வாட-[7] உடல் இளைத்தால் தோள் இணை பின்னை வாடுமித்தனை அன்றோ.

---

1. தன் கண்களைத் தானே வருணிக்கலாமோ? என்ன, 'நாயகன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "கண்களாய" என்பது, திருவிருத்தம், செய். 67.

2. "தூ மலர்க் கண் இணை முத்தம் சோர" என்கிறவளுடைய மனோ பாவத்தை அருளிச்செய்கிறார் 'இதுகாறும்' என்று தொடங்கி.

3. 'பார்த்திராத தொன்று' என்றதனை விளக்குகிறார் 'தாமரைப் பூவிலே முத்துப் பட்டது' என்று. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'கண்ணான முத்தே அன்றோ' என்று. கண்ணிலே உண்டான முத்து என்றும், சிறந்த முத்து என்றும் பொருள்.

4. "முத்தம் சோர" என்பதற்குத் தன் கண்களின் அழகு தனக்குத் தெரியுமோ? என்ன, 'அவனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். செவி ஏறு கேட்டு - செவி ஏற்றாலே கேட்டு. காதாலே கேட்டு என்றபடி.

5. அதுவும் அன்றிக்கே, அவன் சொல்லவும் தான் கேட்டிருக்கும் என்கிறார் "ஞாலம்" என்று தொடங்கி. இது, திருவிருத்தம், செய். 11.

6. "துணை முலை" என்றதற்கும் மேலே கூறிய காரணமே என்கிறார் 'நீ சேர்த்தி அழகு' என்று தொடங்கி. இதனால் பலித்த பாவத்தை அருளிச் செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி. "மலராள் தனத்துள்ளான்" (மூன்றாம் திருவந். 3.) என்கையாலே 'கோயில் கட்டணம்' என்கிறார். கோயில் கட்டணம் - அந்தப்புரம்.

7. வாட்டத்துக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'உடல்' என்று தொடங்கி, மேலே "முலை பயந்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அருளிச் செய்கிறார். "முலை" என்றது, சரீரத்துக்கு உபலக்ஷணம்.

[1]பிரயோஜனம் இல்லாதனவற்றிலே நின்று பேசுகிறது என்? இதற்கு முன்பு அவன் இழவு சொன்னாள்; மேல் தன் இழவு சொல்லுகிறாள்: மா மணி வண்ணா - நீலமணி போன்ற வடிவினையுடையவனே! மா - கருமை. [2]இவ் வடிவினைக் கொண்டோ நீ போகிறது? வெயில் கானல் பொறுக்குமோ இவ் வடிவு? [3]உன்னை நீ பிரிந்து அறியாயே! உன் செங்கமல மலர் வண்ணம் மெல் அடி நோவ - [4]மலர்த்தி முதலியவைகளால் தாமரையை ஒரு போலியாகச் சொல்லலாய் இருக்கும், மென்மைக்கு ஒப்பு இல்லை. நீ போய் - [5]தன் காலாலே அவன் போக வேண்டும் என்று இருக்கிறாள் காணும். [6]"இராமா! நீ காட்டிற்குப் புறப்படுவாயேயானால் தருப்பைக் கட்டைகளையும் முட்களையும் அழித்துக் கொண்டு உனக்கு முன்பு செல்வேன்" என்னுமவள் அன்றோ. [7]போக்குத் தவிராவிட்டால் பின்னை வழிக்குக் கடவார் வழி திருத்தினால் போக வேண்டாவோ? நீ போய் - [8]குணங்களால் மேம்பட்ட சக்கரவர்த்தித்

---

1. "மா மணி வண்ணா" என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'பிரயோஜனம்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'இதற்கு முன்பு' என்று தொடங்கி.

2. "மா மணி வண்ணா" என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'இவ் வடிவினை' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'வெயில்' என்று தொடங்கி.

3. மேலே வருகின்ற "உன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உன்னை' என்று தொடங்கி.

4. "செங்கமல மலர் வண்ணம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மலர்த்தி' என்று தொடங்கி.

5. "நீ போய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன் காலாலே' என்று தொடங்கி.

6. அப்படிப் பரிவுடையவளோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராமா' என்று தொடங்கி.

> யதித்வம் ப்ரஸ்திதோ துர்க்கம் வநமத்யைவ ராகவ
> அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குஶ கண்டகாந்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 27: 9.

7. இங்ஙனம் கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'போக்கு' என்று தொடங்கி. 'பின்னை' என்பதனை, பின் வருகின்ற 'போக வேண்டாவோ' என்றதனோடு சேர்க்க.

8. "நீ போய்" என்பதற்கு, என் காலாலே போக வேண்டும் என்று மேலே பொருள் அருளிச்செய்தார்; இப்போது 'தீம்பனான நீ போய்' என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'குணங்களால்' என்று தொடங்கி.

> என் இவை அன்ன மாற்றம் இவ்வன பலவும் கூறிப்
> புனைகழல் புலவு வேல்கைப் புளிஞர்கோன் பொருவில் காதல்

திருமகனே வழியே சென்று வழியே வருகைக்கு; சென்ற சென்ற இடம் எங்கும் பூசல் விளைக்குமவன் அன்றோ.

ஆ மகிழ்ந்து - [1]எங்களை வெறுத்திருப்பது போன்று வெறுத்திருக்கிறாய் அல்லையே பசுக்களை. உகந்து அவை மேய்க்கின்று - [2]அவற்றின்பக்கல் உண்டான விருப்பத்தாலே அவற்றை உகந்து மேயாநிற்புதி. பசுக்கள் மேயாநின்ற இடத்தில் அவற்றின்பக்கல் நோக்குள்ளவனாய் இருக்கும் இடையிலே என்பார் '**மேய்க்கின்று**' என்கிறார். உன்னோடு அசுரர்கள் தலைப்பெய்யில் - [3]கருமுகை மாலையும் யுகாந்தத்தில் நெருப்பும் கூடினாற்போலே அன்றோ. ஆங்கு எவன் கொல் - அங்கு என்னாய் விளையுமோ? என்றபடி. [4]நாம் எங்குச் செல்லினும் எவர் கிட்டிலும் வெற்றி நம்மது அன்றோ என்னுமே அவன். "போரில் வெற்றியும் தோல்வியும் நிலை இல்லாதனவாகக் காணப்படுகின்றன அன்றோ" என்கிறபடியே, போரிலே வெற்றி தோல்விகள் நிலை இல்லாதன அன்றோ? அது மற்றைப்படியாகில் செய்வது என்? என்று அஞ்சாநின்றேன். அவர்கள் கிட்டில் அங்கு என்னாய் விளையுமோ? [5]அதனைத் தன் வாயாலே சொல்லமாட்டாமையாலே என்னாய் விளையும் என்கிறாள். (7)

அனையவற்கு அமைவிற் செய்தான்; ஆர் அவற்கு அன்பிலாதார்?
நினைவரும் குணம்கொடு அன்றோ இராமன்மேல் நிமிர்ந்த காதல்.

என்பது, கம்பராமாயணம்.

1. "*மகிழ்ந்து*" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் '*எங்களை*' என்று தொடங்கி.

2. "*மகிழ்ந்து உகந்து*" என்று இருமுறை கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் '*அவற்றின் பக்கல்*' என்று தொடங்கி.

3. '*உன்னோடு அசுரர்கள்*' என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் '*கருமுகை மாலையும்*' என்று தொடங்கி. என்றது, சுகுமாரனை உன்னோடே என்றபடி.

4. "*எவன்கொல்*" என்கிறவளுடைய மனோபாவத்தை இரண்டு வகையாக அருளிச்செய்கிறார் '*நாம்*' என்று தொடங்கி.

மாம்வா ஹரேயுஃ த்வத் ஹஸ்தாத் விஶஸேயுரதாபிவா
அவ்யவஸ்தௌ ஹி த்ருஶ்யேதே யுத்தே ஜயபராஜயௌ.

என்பது, ஸ்ரீராமா. சுந். 37 : 53. இங்கு,

வேலையின் னிடையே வந்து வெய்யவர்
கோலி வெஞ்சரம் நின்னொடும் கோத்தபோது
ஆல மன்னவர்க்கு அல்லை எற்கு அல்லையால்
சாலவும் தடுமாறும் தனிமையோய்.

என்ற கம்பராமாயணச் செய்யுள் ஒரு புடை ஒப்பு நோக்கலாகும்.

5. *இன்னை தீங்கு என்ன ஒன்றோதோ?* என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் '*அதனைத் தன் வாயாலே*' என்று தொடங்கி. இங்கே,

1022.

அசுரர்கள் தலைப்பெயில், எவன்கொல் ஆங்கு? என்று
ஆழும் என் ஆர் உயிர்; ஆன் பின் போகேல்;
கசிகையும் வேட்கையும் உள்கலந்து,
கலவியும் நலியும்; என்கை கழியேல்;
வசிசெய் உன் தாமரைக் கண்ணும், வாயும்,
கைகளும், பீதக உடையும் காட்டி,
ஒசிசெய் நுண் இடை இளவாய்ச்சியர், நீ
உகக்கும் நல்லவரொடும் உழிதராயே.

பொ - ரை:—பசு மேய்க்கும் அவ்விடத்தில் அசுரர்கள் வந்து சேர்வாராயின் யாதாகுமோ என்று என் அரிய உயிர் துன்பத்திலே ஆழாநிற்கும்; ஆதலால், பசுக்களின் பின்னே போகேல்; ஈடுபாடும் ஆசையும் புணர்ச்சியும் உள்ளே கலந்து என்னை வருத்தும்; ஆதலால், அணைத்த என் கைகளை விட்டு அப்பாற் செல்லாதே; வசம் செய்கின்ற உன் தாமரைக் கண்களும் திருவாயும் திருக் கைகளும் பொன்னுடையும் நான் காணும்படி காட்டிக்கொண்டு, உன்னால் விரும்பப்படுகின்ற தளர்கின்ற நுட்பமான இடையையுடைய இளமை பொருந்திய ஆய்ச்சியராகிய பெண்களோடும் சஞ்சரித்துக் கொண்டு இவ்விடத்திலேயே இரு என்கிறாள்.

வி - கு:—ஆங்கு அசுரர்கள் தலைப்பெயில் எவன் கொல் என்று என் ஆர் உயிர் ஆழும் என்க. காட்டி நீ உகக்கும் இள ஆய்ச்சியராகிய நல்லவரோடும் உழிதராய் என்க. ஆய்ச்சியர் - ஆய்க்குலத்தில் பிறந்த பெண்கள்.

ஈடு:—எட்டாம் பாட்டு. [1] நீ சென்றால் தீங்கு விளையுமோ? என்று அஞ்சா நின்றேன்; உன்னைப் பிரியவும் மாட்டேன். பசுமேய்த்தலை வியாஜமாகக் கொண்டு காதலிமார்களை நினைத்துப் போகிறாயாகில் என் கண் வட்டத்திலே உன் காதலிமார்களோடே நீ சஞ்சரிக்க வேண்டும் என்கிறாள்.

பின்னும் பகர்வாள் மகனே! இவன்பின் செல் தம்பி
என்னும்படி அன்று; அடியாரினில் ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அதன்றேல்
முன்னம் முடி என்றனள் பான்முலை சோர நின்றாள்.

என்ற கம்பராமாயணச் செய்யுள் ஒப்பு நோக்கலாகும்.

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

ஆங்கு அசுரர்கள் தலைப்பெயில் எவன் கொல் என்று ஆழும் என் ஆர் உயிர்-[1]நீ வெற்றியோடே மீண்டாலும் அதற்கு முன்னே நான் தறைப்படுவன்; [2]நான் உனக்கு வேண்டாவோ? என்கிறாள். ஆழும் - அழுந்தும். அதற்கு நம்மால் செய்யலாவது என்? என்ன, ஆன் பின் போகேல் - பசுக்களின் பின்னே போகாதே கொள்? [3]என்வழியே போகப் பார்ப்பது [4]காதலி அருகே இருக்கச் சந்தியாவந்தனம்செய்யப் போகவேண்டும் என்னக்கடவதோ? [5]தனக்கு உரிய தர்மத்தைச் செய்யப்போவது தனக்கு உரியாளை விட்டோ? [6]சாதிக்கு உரிய தர்மத்தைத் தவிரப்போமோ? வருந்தியாயினும் தரிக்க வேண்டாவோ? என்ன, பிரிவில் தரிக்கலாம்படியோ நீ கலவியில் செய்த செய்கை என்கிறாள்: கசிகையும் - சிநேகமும். வேட்கையும் - மேன்மேல் உன்னோடு புணர்ந்த புணர்ச்சியால் உண்டான ஆசையும். கலவியும் - புணர்ச்சியும். உள் கலந்து நலியும் - [7]நீ செய்யும் சிநேகமும், அருகே இருக்கச் செய்தே அகல இருந்தாரைப் போலே மேன்மேலெனப் பண்ணும் ஆசையும், தலை தடுமாறாகக் கலப்பதான கலவியும், நீ பெயர நின்றவாறே மனத்திலே புகுந்து நலியும்.

---

1. "ஆழும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீ வெற்றியோடே' என்று தொடங்கி.

2. இதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'நான் உனக்கு' என்று தொடங்கி.

3. "ஆன் பின் போகேல்" என்றதற்கு மறுதலைப் பொருளை அருளிச்செய்கிறார் 'என் வழியே' என்று தொடங்கி.

4. சாதி தருமத்தை விட்டு உன் வழியே போகப் போமோ? என்ன, 'காதலி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, சாதிக்குரிய தருமத்தைச் செய்யப்போவது காதலுக்குக் கொத்தை என்றபடி.

5. காதலியைப் பாதுகாப்பதும் தருமம் அன்றோ என்கிறாள் 'தனக்கு உரிய' என்று தொடங்கி. இதனால், காதலுக்குக் குற்றமாத்திரமே அன்றிக் காதலியைக் கோறலாகிய பாவமும் உண்டாகும் என்பது கருத்து.

6. மேலே வருகின்ற "கசிகையும்" என்பது போன்றவைகட்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'சாதிக்கு' என்று தொடங்கி.

7. "கசிகை வேட்கை ... வி" என்பதற்கு, தாங்கள் அவனிடத்தில் செய்யும் சிநேகமும் வேட்கையும் கலவியும் என்று மேலே பொருள் அருளிச்செய்து, தங்களிடத்தில் அவன் செய்யும் சிநேகமும் வேட்கையும் கலவியும் என்று பொருள் அருளிச்செய்கிறார் 'நீ செய்யும்' என்று தொடங்கி.

ஆயின், செய்ய வேண்டுவது என்? என்ன, என் கை கழியேல் - நான் அணைத்த கைக்குள் நின்று அகலாதொழிய வேண்டும். [1] சாதிக்கு உரிய தர்மங்களைச் செய்வது என்னை முடித்தோ? [2] 'போகாதொழியப்போமோ? புறம்பேயும் நமக்கு விருப்பமாய் உள்ளவர்கள் உளராய் இராரோ? அவர்களுடனும் கலக்கவேண்டி இராதோ?' என்றான், [3] இவள் மேல் சொல்லுமது கேட்கைக்காக. [4] எங்களுக்கு அந்த நிர்ப்பந்தம் உண்டோ? நீ கை கழியப் போகாதொழியுமத்தனை அன்றோ வேண்டுவது? நீ விரும்பியிருக்குமவர்களோடே என் கண் வட்டத்தே சஞ்சரிக்கப் பார் என்ன, [5] ஆனால், அவர்களை அழைத்துத் தருவார் யார்? என்ன, வசிசெய் உன் தாமரைக் கண்ணும் வாயும் கைகளும் பீதக உடையும்-உனக்குத் [6] தூது செய் கண்கள் உளவாக இருக்கப் புறம்பே பரிகரம் தேடி அழைக்கவேண்டி இருந்ததோ? இனிப் பொருந்தோம் என்று இருப்பார் மனங்களில் மறத்தை மாற்றி அவர்களை வசீகரித்துத் தரும் கண்களும், அந் நோக்கில் கருத்தினை வெளிப்படுத்தும் வாயும், அந் நோக்கிலும் முறுவலிலும் நேர்விழிக்க மாட்டாதே நாணத்தாலே கவிழ்ந்தவர்களை எடுத்துக் கொள்ளும் கைகளும், தொடுதலால் தோற்றவர்களைக் கீழே போகாதபடியாகத் தன் செல்லாமையாலே மேலே எறட்டுக் கொள்ளுகிற பொன்னுடையும். [7] "பொன்னுடையை அணிந்தவனும் மலர் மாலையை அணிந்தவனும்" என்னக்கடவது அன்றோ.

---

1. தன் சாதிக்குரிய தருமத்தை விடலாமோ? என்ன, 'சாதிக்குரிய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. மேலுக்கு எல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறார் 'போகாதொழியப் போமோ?' என்று தொடங்கி.

3. உன்னை ஒழிய, என் காதலுக்குரியவள் வேறு ஒருத்தி உளளோ? என்ன வேண்டியிருக்க, இப்படிச் சொல்லுவான் என்? என்ன, 'இவள் மேல் சொல்லுமது கேட்கைக்காக' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "உகக்கும் நல்லவரொடு உழிதராய்" என்றதனைத் திருவுள்ளம் பற்றி, அவன் கூறின வினாவிற்கு விடை அருளிச்செய்கிறார் 'எங்களுக்கு' என்று தொடங்கி.

5. "வசி செய் தாமரைக் கண்ணும்" என்பது போன்றவைகளுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'ஆனால்' என்று தொடங்கி.

6. "தூதுசெய் கண்கள்" என்றது, திருவாய்மொழி, 9. 9: 9.

7. தாஸாம் ஆவிரபூத் ஶௌரிः ஸ்மயமாந முகாம்புஜः
பீதாம்பரதரः ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மந்மத மந்மதः.

என்பது, ஸ்ரீ பாகவதம், 10: 32.

காட்டி - உனக்குப் புறம்பே அழைத்துத் தருவார் வேண்டி இருந்ததோ? [1]பிடாத்தை விழவிட்டு வடிவைக் காட்ட அமையாதோ? ஒசி செய் நுண் இடை - பண்டே தொட்டாரோடே தோஷமான இடை. அதற்கு மேலே கலவியாலே துவண்ட இடையை யுடையவர்கள். இள ஆய்ச்சியர் - உன்னோடு ஒத்த பருவத்தை உடையவர்கள். [2]வடிவழகாலும் பருவத்தாலும் உன்னைத் துவக்கவல்லார் எத்தனைவர் இருக்கிறார்கள்! [3]நீ போகாநிற்க, இடையிலே தங்கள் பருவத்தாலே துவக்க வல்லார் பலர். நீ உகக்கும் நல்லவர் - [4]வடிவழகு உண்டானாலும் பயன் இல்லையே; எங்களைப் போலே இருக்க ஒண்ணாதே, நீ விரும்புமவர்களாகவும் வேண்டுமே. [5]நீ உகக்கும்படி சிறப்பினை உடையவர்களான அவர்களோடே என் கண் வட்டத்திலே சஞ்சரிக்க அமையும். (8)

1023.

[6]உகக்கும் நல்லவரொடும் உழிதந்து உன்தன்,
திருவுள்ளம் இடர் கெடும்தோறும், நாங்கள்
வியக்க இன்புறுதும்; எம் பெண்மை ஆற்றோம்;
எம்பெருமான்! பசு மேய்க்கப் போகேல்;

---

1. பிடாத்தை விழவிட்டு - மேல் போர்வையைத் தள்ளி.

2. "ஒசி செய் நுண் இடை இள" என்றதனைச் சேர்த்துக்கொண்டு "ஆய்ச்சியர்" என்ற பன்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வடிவழகாலும்' என்று தொடங்கி.

3. ரசோக்தியாக விவரணம் செய்கிறார் 'நீ போகா நிற்க' என்று தொடங்கி.

4. "நீ உகக்கும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வடிவழகு' என்று தொடங்கி.

5. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நீ உகக்கும்படி' என்று தொடங்கி.

6. இங்கு, ஆசார்யஹ்ருதயம் மூன்றாம் பிரகரணத்தில் "மூன்றில் சுருக்கிய ஐந்தையும்" என்று தொடங்கும் சூத்திரத்தில் 'எம்மா ஒழிவில் நெடு வேய் என்கிற இருபதிலே விஶதமாக்கி" சூத். 62. என்ற பகுதி நினைத்தல் தகும். "எம் மா வீட்டுத் திறமும் செப்பம்", "ஒழிவில் காலமெல்லாம்", "நெடுமாற்கு அடிமை", "வேய்மருதோளிணை" என்னும் இந் நான்கு திருவாய்மொழிகளிலும் புருஷார்த்த சொரூபத்தை விளக்கியிருப்பதாக அறுதியிடுகிறார் இந்த ஸ்ரீ சூக்தியில். மற்றை மூன்று திருவாய்மொழிகளிலும் புருஷார்த்த

மிகப் பல அசுரர்கள் வேண்டு உருவம் கொண்டு
நின்று உழிதருவர், கஞ்சன் ஏவ;
அகப்படில், அவரொடும் நின்னொடு ஆங்கே
அவத்தங்கள் விளையும்; என்சொல் கொள், அந்தோ!

பொ - ரை :—உன்னாலே விரும்பப்படுகின்ற பெண்களோடும் கூடிச் சஞ்சரிப்பதனாலே உன்னுடைய திருவுள்ளத்தில் உண்டாகும் துன்பம் நீங்கி நீ இன்பம் அடையும்போதெல்லாம் நாங்கள் மிகவும் உகப்பு உடையோம் ஆவோம்; அதற்குக் காரணம், நீ பிறரைக் காதலிக்குமளவில் பொறாமைப் படும்படியான பெண்மையை யுடையோம் அல்லோம்; ஆதலால், எம்பெருமானே! நீ பசு மேய்ப்பதற்குப் போகேல்; அதற்கு மேலே, கம்சனுடைய ஏவலை மேற்கொண்டு பல அசுரர்கள் நீ விரும்பும் உருவங்களைக் கொண்டு மிக அதிகமாகச் சஞ்சரிப்பார்கள்; அவர்கள் கைகளிலே அகப்பட்டால் அவ்விடத்திலேயே அவர்களுக்கும் உனக்கும் மிகத் தீய போர்கள் விளையாநிற்கும்; என்னுடைய சொற்களை ஏற்றுக் கொள்ளவேண்டும்; அந்தோ! உன் பராமுகம் இருந்தபடி என்னே!

வி - கு :—உழிதந்து - உழி தருவதனால், உன் திருவுள்ளம் இடர் கெடும் என்க. கம்சன் ஏவ மிகப் பல அசுரர்கள் நின்று உழிதருவர் என்க.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [1]"உகக்கும் நல்லவரொடும் உழிதராய்" என்று நான்போகாமைக்காகச் சொன்ன வார்த்தைஇத்தனை ஒழிய, உங்கள் முன்னிலையிலே நான் வேறு பெண்கள்

சொரூபம் பேசப்பட்டிருத்தல் வெளிப்படை. "வேய்மரு" திருவாய்மொழியில் எங்ஙனம் பேசப்படுகின்றது? எனின், "வேய்மருதோள்" என்ற இத் திருவாய்மொழியில் "உகக்கும் நல்லவரொடு" என்னும் இத் திருப்பாசுரத்தில் முதல் இரண்டு அடிகளில் அப்பொருள் பேசப்படுகின்றது காண்க. ஆதலால், இத் திருவாய்மொழிக்கே இப் பாசுரம் உயிர்நிலை என்று கோடல் தகும். இதனை இப் பாசுரத்தின் வியாக்கியானத்தால் தெளிந்து கொள்க.

1. "உன் தன் திருவுள்ளம் இடர் கெடும் தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்; என் சொல் கொள்" என்றவற்றைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். 'உங்கள் முன்னிலையிலே' என்று தொடங்கும் இவ்விடத்திலே,

ஏற்றவனை வரிசிலையோன் இயம்பா முன் இகல் அரக்கி
சேர்ந்தவளை தன் கணவன் அருகு இருக்கச் சினம் திருகிச்
சூற்றவளை நீர் உழக்கும் துறை கெழு நீர் வள நாடா!
மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம் என்றாள்.

என்ற, கம்பராமாயணச் செய்யுள் ஒப்பு நோக்குக. சூர்ப்பணகைப் படலம், 122.

சிலரோடே கலந்து பழகுதல் உங்களுக்கு விருப்பம் இல்லாதது அன்றே? என்ன, எங்களோடு கலக்கும் கலவியால் உண்டாகும் இன்பத்தைக் காட்டிலும் உன் திருவுள்ளத்தில் பிரியமே எங்களுக்கு மிகப் பெரிய இன்பமாகும்; ஆனபின்பு, தீமை விளையும் இடத்திற்குப் போகாதொழிய வேண்டும் என்கிறார்கள்.

உகக்கும் நல்லவரொடு உழிதந்து - எங்களைப்போல் அன்றிக்கே நீ உகக்கும் சிறப்பினையுடையவர்களோடே எங்கள் கண் வட்டத்திலே சஞ்சரித்து. உன்தன் திருவுள்ளம் இடர் கெடும்தோறும் - [1] நாம் இன்னாளோடு கலக்கப் பெற்றிலோம் என்று உன் திருவுள்ளத்தில் வரும் இடர் கெடும் தோறும். நாங்கள் வியக்க இன்புறுதும் - புறம்புள்ளாரைப் போல் அன்றியே உன் உகப்பையே பிரயோஜனமாகக் கொண்டுள்ள நாங்கள் மிகவும் உகப்புதோம். எதனைக் காட்டிலும்? என்னில், எங்களோடு கலக்குமதிற் காட்டிலும் என்னுதல். அன்றிக்கே, நீ அவர்களோடே கலந்தால் உனக்குப் பிறக்கும் ஆனந்தத்தைக் காட்டிலும் என்னுதல். ஈண்டு, வியப்பு, ஆச்சரியத்திலே யாதல், மிகுதியிலே யாதல் கிடக்கிறது. நான் இப்படிச் செய்தால் நீங்கள் மிகவும் இன்புறுவதாகச் சொன்ன இது கூடுமோ? என்ன, எம் பெண்மை ஆற்றோம்-உன் உகப்புக்குப் புறம்பாய் வரும் பெண் தன்மை நாங்கள் வேண்டோம். [2] அன்றிக்கே, நீ உகந்தாரை ஒழிய உன்னை உகக்குமவர்கள் அல்லோம் காண் நாங்கள் என்னுதல்; [3] உன்னைத் தனித்து உகப்பாள் மூக்கறைச்சி அன்றே?

எம்பெருமான் பசு மேய்க்கப் போகேல்-உனக்கு நாங்கள் அடிமைப் படுகிறோம்; நீ பசு மேய்க்கப் போகாதொழிய வல்லையே? [4] நான்தான் போகாநின்றேனோ? எனக்குரிய

---

1. திருவுள்ளத்தில் இடரை விவரணம் செய்கிறார் 'நாம் இன்னாளோடு' என்று தொடங்கி.

2. அவன் உகப்பே புருஷார்த்தம் என்று மேலே அருளிச்செய்து, அவனும் அவன் அடியார்களுமான சேர்த்தியே புருஷார்த்தம் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

3. உகந்தாரும் நாமுமான சேர்த்தியை விட்டு, நம்மையே உகந்தாலோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உன்னை' என்று தொடங்கி. மூக்கறைச்சி - சூர்ப்பணகை.

4. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நான்தான்' என்று தொடங்கி,

தருமங்களைச் செய்வதற்குப் போனால் வருவது என்? என்ன, வருவது சொல்லுகிறாள் மேல்: மிகப் பல அசுரர்கள் வேண்டு உருவம் கொண்டு நின்று உழிதருவர் - மிகவும் பல அசுரர்கள் வேண்டின வடிவு கொண்டு மிகவும் சஞ்சரியாநிற்பர்கள். [1] ஸ்ரீ பிருந்தாவனத்தில் எழும் பூண்டுகள் அடங்க அசுர மயமாய் அன்றோ இருப்பன. வேண்டு உருவம் கொண்டு என்பதற்கு, [2] நீ உகக்கும் வடிவைக் கொண்டு என்னுதல்; உன்னை நலிகைக்கு ஈடான வடிவைக் கொண்டு என்னுதல். கஞ்சன் ஏவ - [3] கம்சனாலே ஏவப்பட்டு வருகையாலே "தோற்றுப் போகிலும் அங்குக் கொலை தப்பாது" என்று மேல் விழுவர்கள். யார் ஏவில் என்? யார் மேல் விழில் என்? நாம் புக்க போரிலே வெற்றி கொண்டு அன்றோ மீளுவது என்ன, அகப்படில் - அது மற்றைப்படி யாகில் செய்வது என்? [4] போரில் வெற்றி தோல்விகள் நிலைத்தன அன்றே? [5] ஆனால் தான் வருவது என்? என்ன, அவரோடும் நின்னோடு ஆங்கே அவத்தங்கள் விளையும் - அவர்களும் நீயுமான இடத்திலே பொல்லாங்குகள் விளையும். இப்படிச் சொன்ன இடத்திலும் [6] ஆனைக் குப்பு ஆடுவாரைப் போலே விருப்பு அற்று இருந்தான். என் சொல் கொள் - பராமுகம் செய்யாதே, நான் சொல்லுகிற வார்த்தையைப் புத்தி பண்ணுவாய். அந்தோ- [7] எங்களை அறியாவிட்டால் உன்னையும் அறியாதொழிய வேண்டுமோ? (9)

---

1. "மிகப் பல" என்பதற்கு, இங்கே அசுரர்கள் பலர் உளரோ? என்ன, 'ஸ்ரீ பிருந்தாவனத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'நீ உகக்கும் வடிவு' என்றது, கன்று, விளா, குருந்து முதலானவைகளைக் குறித்தபடி. 'உன்னை நலிகைக்கு ஈடான வடிவு' என்றது, மருது, பறவை, மலைப்பாம்பு முதலானவற்றைக் குறித்தபடி.

3. "ஏவ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கம்சனாலே' என்று தொடங்கி.

4. 'மற்றைப்படி யாகில்' என்றதனை விவரணம் செய்கிறார் 'போரில்' என்று தொடங்கி.

5. 'ஆனால்தான்' என்றது, மற்றைப்படி யானால்தான் என்? என்றபடி.

6. ஆனைக்குப்பு = சதுரங்கம்.

7. "அந்தோ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எங்களை' என்று தொடங்கி. 'எங்களை' என்றது, உன்னுடைய பிரிவினாலே வருந்துகிற எங்களை என்றபடி. 'உன்னை' என்றது, சுகுமாரனான உன்னை என்றபடி. என்றது, எங்கள் வருத்தத்தை அறியாவிட்டால் உன் மிருதுத் தன்மையையும் அறியாதொழிய வேண்டுமோ? என்றபடி.

1024.

அவத்தங்கள் விளையும்; என் சொற்கொள் அந்தோ!
அசுரர்கள் வன் கையர், கஞ்சன் ஏவ,
தவத்தவர் மறுக நின்று உழிதருவர்;
தனிமையும் பெரிது உனக்கு, இராமனையும்
உவர்த்தலே, உடன் திரிகிலேயும் என்று என்று,
ஊடுற என்னுடை ஆவி வேமால்;
திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி;
செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவே!

பொ - ரை :—சிவந்த கொவ்வைக்கனி போன்ற திரு அதரத்தையுடைய எங்கள் ஆயர் தேவே! வலிய கையினையுடையரான அசுரர்கள் கம்சனாலே ஏவப்பட்டவர்களாய், தவத்தைச் செய்கின்றவர்களான முனிவர்கள் மனம் கலங்கும்படி சஞ்சரிப்பார்கள்; நீயும் எப்பொழுதும் தன்னம் தனியாகவே இருக்கிறாய்; பலராமனையும் விரும்புகிறாயில்லை; அவனோடு கூடத் திரிவதும் செய்கின்றிலை; இந்நிலையிலே, தீமைகள் உண்டாகும் என்று பலகாலும் நினைத்து என்னுடைய மனமானது உள்ளுற வேவாநின்றது; ஐயகோ! என்னுடைய சொற்களைக் கேட்க வேண்டும் காண்; பரமபதத்தில் இருக்கும் இருப்பைக் காட்டிலும் பசுக்களை மேய்க்கும் செயலையே நீ விரும்புகின்றாய்.

வி - கு :—வன் கையராகிய அசுரர்கள் கஞ்சன் ஏவ தவத்தவர் மறுக நின்று உழிதருவர் என்க. உவர்த்தல் - வெறுத்தல். திவம் - பரமபதம். தே - தெய்வம்.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] முன் கை மிடுக்கரான அசுரர்கள் கம்சனாலே ஏவப்பட்டவர்களாய்த் திரிந்து கொண்டு இருக்கிற காட்டிலே, நம்பிமூத்தபிரானையும் நீங்கித் தனியே திரியாநிற்றி என்று மிகவும் நோவு படாநின்றேன் என்கிறாள்.

அவத்தங்கள் விளையும் என் சொல் கொள் - [2] நடந்து கொள்ளவே வேண்டும் என்று இருக்க வேண்டா; சொன்ன

1. முதல் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மீண்டும் "அவத்தங்கள் விளையும்" என்ற அநுவாதத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நடந்துகொள்ள' என்று தொடங்கி. என்றது, இவள் சொற்களைக் கேட்டால் சொன்னபடி செய்யவேண்டும் என்று ஆதரிக்காமல் இருக்க வேண்டா, கடலோசைக்குச் செவி புதைத்துக் கேட்பதைப் போன்றுவது கேட்க அமையும் என்றபடி. இதனால், கேட்கவே, அறிவுள்ளவனுகையாலே தான் படும் நோவினை நினைத்துத் திரும்புவான் என்பது இவளுடைய கருத்து.

சொற்களைக் கேட்க அமையும். அந்தோ-[1]சொன்னபடி நடந்து கோடல் இயலாத காரியம் என்று இழியாதொழிகை அன்றிக்கே என் வார்த்தையாக அமைவதே கொள்ளாமைக்கு! அசுரர் வன் கையர் கம்சன் ஏவ-[2]பிறவியால் தண்ணியருமாய், தாங்கள் பலருமாய், முன்கை மிடுக்கருமாய் இருப்பர்கள்; அதற்கு மேலே, தீயோனான கம்சன் ஏவ ஆயிற்று வருவது. [3]தவத்தவர் மறுக நின்று உழிதருவர் - என்னை அன்றோ உனக்கு விடலாவது; உனக்கு நல்லவர்களான பக்திமான்கள் குடல் மறுகும்படி சஞ்சரியாநிற்பர்கள்; ஈண்டுப் பக்திமான்கள் என்றது, ஸ்ரீ நாரதபகவான், ஸ்ரீ சுக்கிரீவ மஹாராஜர், பெரியாழ்வார், பிள்ளைஉறங்காவில்லிதாசர் தொடக்கமானார் போல்வாரைச் சொல்லுகிறது. அன்றிக்கே, தவத்தில் நிலை நின்றவர்களான முனிவர்கள் தங்கள் தவத்திற்கு வரும் இடையூறுகளால் கலங்கும்படி திரியாநிற்பர்கள் என்னுதல். அன்றிக்கே, தங்களுடைய பாதுகாத்தலுக்கு உன்கை பார்த்திருக்குமவர்கள் அந்த அசுரர்களால் உனக்கு என் வருகிறதோ என்று கலங்கும்படி திரியாநிற்பர்கள் என்னுதல்.[4]"தவத்தைத்

---

1. "அந்தோ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சொன்னபடி' என்று தொடங்கி. 'சொன்னபடி நடந்துகோடல் இயலாத காரியம் என்று இழியாதொழிகை அன்றிக்கே' என்றது, நாம் காட்டிற்குச் சென்றால் அசுரர்களாலே துன்பம் வருகையாலே பசுக்களைப் பாதுகாத்தல் முதலிய செயல்களில் கஷ்டம் உண்டாகும் என்னுமதனாலே போகாதொழிகை அன்றிக்கே என்றபடி. 'என் வார்த்தையாக அமைவதே கொள்ளாமைக்கு' என்றது, 'ஒரு பெண்ணின் வார்த்தை அன்றோ' என்று, என் வார்த்தை உனக்கு அங்கீகரியாமைக்குத் தக்கதாய் விட்டதே என்றபடி.

2. "அசுரர் வன் கையர்" என்ற சொற்களுக்கு முறையே பொருள் அருளிச்செய்கிறார் 'பிறவியால்' என்று தொடங்கி. 'பிறவியால் தண்ணியருமாய்த் தாங்கள் பலருமாய்' என்பது, "அசுரர்" என்ற சொல்லின் பொருள்.

3. "தவத்தவர் மறுக நின்று உழிதருவர்" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருளில் தவம் என்ற சொல் பக்தியைக் காட்டுகிறது. மூன்றாவது பொருளில் தவம் என்ற சொல் பிரபத்தியைக் காட்டுகிறது.

4. பின்னே கூறிய இருவகைப் பொருளுக்கும் பிரமாணங்கள் காட்டுகிறார் "தவத்தை" என்று தொடங்கியும், 'இராக்கதர்களால்' என்று தொடங்கியும்.

ந்யஸ்த தண்டாঃ வயம் ராஜந் ஜிதக்ரோதாঃ ஜிதேந்த்ரியாঃ
ரக்ஷிதவ்யாঃ த்வயா ஶஶ்வத் கர்ப்பபூதாঃ தபோதநாঃ.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 1: 20.

தனமாக உடையவர்கள், [1]கருப்பத்துக்கு ஒத்தவர்கள்" என்றும், [2] "இராக்கதர்களால் துன்புறுத்தப்பட்ட எங்கள் சரீரத்தைப் பார்ப்பதற்கு எழுந்தருள வேண்டும்" என்றும் இருக்குமவர்கள்.

நன்று; நம்மாட்டு அன்புடையவர்களுடைய துன்பத்தைப் போக்கவேண்டாவோ? என்ன, தனிமையும் உனக்குப் பெரிது - [3]உன் கால் நெடுக நெடுகத் தனிமையே மிக்கு விட்டதே உனக்கு! [4]"ஒரு முறை பலராமன் இல்லாமலே ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனம் சென்றார்" என்கிறபடியே, நம்பிமூத்தபிரானை ஒழியவே சஞ்சரிக்கும் காலம் பெரிது உனக்கு. இராமனையும் உவர்த்தலை - 'நம்பிமூத்தபிரான் முன்னே தீம்பு செய்ய ஒண்ணாது' என்று அவனுடனும் மனம் பொருந்தி வசிக்கின்றிலை. உடன் திரிகிலையும் - [5]மனத்தில் பொருத்தம் இல்லாவிட்டால், தூரத்திலே கண்ட பகைவர்களுக்கு 'இவர்கள் இருவரும் கூடித் திரியாநின்றார்கள்' என்று அஞ்சும்படி ஒக்கத் திரிவதும் செய்கின்றிலை. என்று என்று ஊடு உற என்னுடை ஆவி வேம் ஆல் - [6]நீ போகிறாய்

---

1. 'கருப்பத்துக்கு ஒத்தவர்கள்' என்றது, பெண்கள் தாங்கள் கருவுற்ற காலத்தில் உற்ற கருவிற்கு யாதொரு இடையூறும் வாராமல் அதனைப் பாதுகாப்பது போன்று, இறைவனாலே காப்பாற்றப்படுமவர்கள் என்றபடி. "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்பதே அன்றோ அவர் தம் செயல்.

2. ஏஹி பஶ்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம்
ஹதாநாம் ராக்ஷஸைः கோரைः பஹூநாம் பஹுதா வநே.
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 6 : 16.

3. "பெரிது" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'உன் கால்' என்று தொடங்கி.

4. தனிமையை விவரணம் செய்கிறார் 'ஒரு முறை' என்று தொடங்கி.

ஏகதா து விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ
விசசார வ்ருதோகோபைः வந்யபுஷ்பஸ்ரக் உஜ்வலः.
என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 5. 7 : 1.

நம்பி மூத்தபிரான் - நம்பிக்கு மூத்தவன்; பலராமன். நம்பி - கிருஷ்ண பகவான். பலராமனை நம்பிமூத்தபிரான் என்பது, பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் வழக்கு.

5. மனம் பொருத்தம் இல்லாதாரோடு கூடத் திரிவதில் பயன் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மனத்தில்' என்று தொடங்கி.

6. "என்று என்று" என்ற அடுக்கிற்கும், "ஊடு உற" என்றதற்கும் பாவம் அருளிச்செய்கிறார் 'நீ போகிறாய்' என்று தொடங்கி.

என்று அன்று; நம்பி மூத்தபிரானுடன் கூடத் திரிகிறிலை என்றாயிற்று என்னுடைய மனம் மறுபாடுருவ வேகிறது. ஊடு உற - உள்ளுற என்றபடி. என் மனமானது வேகா நின்றது.

இப்படி நிர்ப்பந்திப்பதற்கு நான் இந்த இருப்பைக் குலைத்துப் போகாநின்றேனோ? என்ன, திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி - ஆமாம்; நீ ஒவ்வொரு இருப்புக்களைக் குலைத்துக் கொண்டு போந்து அறியாயே. [1]"பரமபதத்தில் இருப்பினைக் குலைத்து அன்றோ பசுநிரை மேய்க்கப் போந்தது. [2]அங்கே இருக்கவும் பெற்றதில்லை. அங்கு நின்றும் போந்தது பொல்லாதாகச் செய்தது என்று இருக்கிறாள். [3]அங்கே இருந்தானாகில் இங்கு என் வயிறு எரிய வேண்டாவே. [4]நாம் பெறுவோம் இழப்போம்; இவனுக்கு ஒரு தீங்கு வாராதொழியுமே. அவர்களை விட்டும் பசுக்களை விரும்பக்கூடிய நீ எங்களை விரும்பா திருத்தலைச் சொல்லவேண்டுமோ? அங்கு நின்றும் போந்திலோம் என்ன ஒண்ணுதே அவனால். "இது ஒரு அன்பின் தன்மை இருந்தபடி என்!" என்று முறுவல் பூத்தான். செம் கனி வாய் எங்கள் ஆயர் தேவே - அதிலே ஈடுபடுகிறார்கள். 'அவ் இருப்புக் குலைந்து போந்தமை உண்டு; உங்களை விட்டுப் போந்தேனோ?' என்று முறுவல் செய்ய, இவர்களும் [5]வாய்க் கரையிலே அழுந்துகிறார்கள். (10)

1025.

செங்கனிவாய் எங்கள் ஆயர் தேவு அத்
திருவடி திருவடி மேல் பொருநல்
சங்கு அணி துறைவன் வண் தென் குருகூர்
வண் சடகோபன் சொல் ஆயிரத்துள்

---

1. 'ஆமாம்' என்றதனை விவரணம் செய்கிறார் 'பரமபதத்தில்' என்று தொடங்கி.

2. "திவத்திலும் பசு நிரை மேய்ப்பு உவத்தி" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'அங்கே' என்று தொடங்கி.

3. அங்கு நின்றும் போந்தது நல்லது' அன்றோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அங்கே' என்று தொடங்கி.

4. அங்கே இருந்தால் உன் விருப்பம் முற்றுப் பெறாதே? என்ன, நாம் பெறுவோம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. வாய்க்கரை - அதரம்.

மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை
அவனொடும் பிரிவதற்கு இரங்கி, தையல்
அங்கு அவன் பசு நிரை மேய்ப்பு ஒழிப்பான்
உரைத்தன இவையும் பத்து அவற்றின் சார்வே.

பொ - ரை :—சிவந்த கோவ்வைக்கனி போன்ற திரு அதரத்தினையுடைய எங்கள் ஆயர் தேவான அவ் எம்பெருமானுடைய திருவடிகளின் மேலே, தாமிரவரணியிலே சங்குகள் வந்து சேரும்படியான துறையையுடையவரும், வளப்பம் பொருந்திய அழகிய திருக்குருகூரிலே அவதரித்த வள்ளலான ஸ்ரீ சடகோபருமான நம்மாழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் பாசுரங்களுள், ஆய்ச்சியராகிய மங்கைப் பெண்கள் ஆராய்ந்த மாலையும், அந்தக் கிருஷ்ணனோடும் பிரிவதற்கு வருந்தி ஒரு பெண்ணானவள் அவ்விடத்திலே அவன் பசுக்களை மேய்ப்பதனை நீக்கும்பொருட்டு உரைத்தனவுமான இவை பத்திற்கும் மற்றைத் திருவாய்மொழிகளின் பலமே பலமாகக் கடவது.

வி - கு :—ஆய்ந்த மாலையாகிய இவையும் பத்து எனவும், மேய்ப்பு ஒழிப்பான் உரைத்தன இவையும் பத்து எனவும் தனித் தனியே கூட்டுக. அத் திருவடி - அந்த எம்பெருமான். திருவடி - திருவடிகள்.

ஈடு :—முடிவில், [1] அவனைப் 'பசு நிரை மேய்க்கப் போக வேண்டா' என்று விலக்கிய பாசுரமான இத் திருவாய்மொழியும் மற்றைத் திருவாய்மொழியைப் போன்று ஒரு திருவாய்மொழியே! என்று ஈடுபடுகிறார்.

செம் கனி வாய் எங்கள் ஆயர் தேவு - அவ் வயிர உருக்கான முறுவலாலே எங்களைத் தோற்பித்தாற் போலே, தன் பருவத்திற் பிள்ளைகளையும் தோற்பித்த, எல்லார்க்கும் ஒக்கத் தெய்வமானவன் திருவடிகளிலே சொல்லிற்று. [2] '**செம் கனி வாய் எங்கள்**' என்கையாலே, தங்களைத் தோற்பித்தபடி சொல்லிற்று; 'செங் கனி வாய் **ஆயர்** தேவு' என்கையாலே,

---

1. நான்காம் அடியினைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'ஒரு திருவாய்மொழியே என்று ஈடுபடுகிறார்' என்றது, "அவற்றின் சார்வே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. செங்கனி வாயாலே ஆயர்களையும் தோற்பித்தான் என்றபடி. இரு பாலாரையும் தோற்பித்த படியைக் காட்டுகிறார் 'செங்கனிவாய் எங்கள் என்கையாலே' என்று தொடங்கி. "தேவு" என்ற பதத்தை நோக்கித் 'தோற்பித்தபடி' என்கிறார். "திவுக்ரீடா விஜிகீஷா" என்கிற தாதுவிலே நோக்கு.

தன் பருவத்தில் உள்ளாரைத் தோற்பித்தபடி சொல்லிற்று; [1] "ஆண்களுடைய கண்களையும் மனத்தினையும் கவர்கின்றவனை" என்கிறபடியே. அத் திருவடி திருவடிமேல் - எல்லார்க்கும் தெய்வமான அவ் வெம்பெருமான் திருவடிகளிலே. அவன் சேஷியாம் தன்மையைக் காட்டிக் கொடுத்தான்; 'திருவடிமேல்' என்கையாலே இவரும் அடிமையிலே நின்றார். பொருநல் சங்கு அணி துறைவன் - தாம் இருந்த இடத்திலே மேன் மக்கள் அடங்கலும் வந்து சேருமாறு போலே ஆயிற்று, திருப்பொருநலில் சங்குகள் வந்து சேரும்படி.

மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை - அவனுடைய பிரிவு பொறுக்கமாட்டாமையாலே ஒரு பருவத்தில் ஆயர் பெண்கள் கூறிய தொடையாய். தையல் அங்கு அவன் பசுநிரை மேய்ப்பு ஒழிப்பான் உரைத்தன - [2] 'அவை போன்று எல்லாரும் திரண்டு வார்த்தை சொன்னால் செவிப்படாது' என்று பார்த்து, அவனுக்கு மறுக்க ஒண்ணாதபடி நப்பின்னைப் பிராட்டியின் தரமுடையாள் ஒருத்தி பசு மேய்க்கப் போகாமே மீட்கைக்காகச் சொன்னவை ஆயிற்று. இப்படியானால், "அடிச்சியோம்" என்றும், "தொழுத்தையோம்" என்றும், "ஆழும் என் ஆர் உயிர்" என்றும், "என் சொற்கொள்" என்றும் சொன்ன பன்மைக்கும் ஒருமைக்கும் எல்லாம் சேரும் அன்றோ.

இவையும் பத்து அவற்றின் சார்வே - 'அவை' என்கிறது மேலே போந்த திருவாய்மொழிகளையாய், "அவற்றின் அருகே இதுவும் ஒரு திருவாய்மொழியே!" என்று ஆச்சரியத்

---

1. தன் பருவத்தில் உள்ளாரைத் தோற்பித்தமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஆண்களுடைய' என்று தொடங்கி.

> சந்த்ர காந்தாநநம் ராமம் அதீவ ப்ரியதர்ஶநம்
> ரூபௌதார்ய குணை: பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 3: 27.

> "ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்
> தாடகை என்பது அச்சழக்கி நாமமே"

என்றார் கம்பநாட்டாழ்வார்.

2. "ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை, தையல் உரைத்தன" என்ற பன்மையும் ஒருமையும் சேரும்படி என்? என்ன, 'அவை போன்று' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அவை - சபை. இங்கு, "முன்னோர் மொழி பொருளே அன்றி" என்னும் நன்னூல் நூற்பாவையும் அதன் உரையையும் ஒரு புடை ஒப்பு நோக்கலாகும்.

திலே ஆக்கி ஆயிற்றுச் சீயர் அருளிச்செய்ததும் [1]வியாக்கியானம் செய்ததும். அன்றிக்கே, இவையும் பத்து அவற்றின் சார்வே-மேல் திருவாய்மொழிகளுக்குச் சொன்ன பலம் இதற்கும் பலம் என்கிறதாகவுமாம். அன்றிக்கே, 'அவை' என்கிறது, 'மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை' என்கிறவற்றையாய், இவையும் அவற்றோடு ஒக்கும் என்னுதல். என்றது, அதனுடைய பலமே இதற்கும் பலம், அது பலத்தோடு கூடியதாயின் இதற்கும் பேறு உண்டாம் என்றபடியாம். அவர்கள் 'நீ போகாதே கொள்' என்ன, அவன் தவிர்ந்து அவர்களுடனே கலந்தாற் போலே, இது கற்றாரும் அவனோடே நீங்காத கலவியைப் பெறுவர் [2] என்றவாறு.

செம் கனி வாய் எங்கள் ஆயர் தேவு, அவனோடும் பிரிவதற்கு இரங்கி, மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை, தையல் அங்கு அவன் பசுநிரை மேய்ப்பு ஒழிப்பான் உரைத்தன அத்திருவடி திருவடிமேல் பொருநல் சங்கு அணி துறைவன் வண் தென்குருகூர் வண்சடகோபன் சொல் ஆயிரத்துள் இவையும் பத்து அவற்றின் சார்வே என்று கொண்டு கூட்டுக. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

வேய்மருதோள் இந்திரை கோன் மேவுகின்ற தேசத்தைத்
தான்மருவாத் தன்மையினால் தன்னை இன்னம்—பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து மால் தெளிவிக்கத் தெளிந்த
தக்க புகழ் மாறன் எங்கள் சார்வு.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. 'வியாக்கியானம் செய்ததும்' என்றது, ஒன்பதினாயிரப்படியை. சீயர் - நஞ்சீயர்.

2. முதற் பொருளில் "சார்வே" என்றதன் ஏகாரம் வியப்புப் பொருளது. இரண்டாவது பொருளில் "சார்வு" என்ற பதத்துக்கு ஒப்பு என்பது பொருள். ஏகாரத்திற்குப் பொருள் இல்லை; இடைச்சொல். இத் திருவாய்மொழிக்கு மூன்று வகையான நிர்வாகங்களை அருளிச்செய்கிறார். முதல் நிர்வாகம் ஆச்சரியத்திலே நோக்கு. மற்றைத் திருவாய்மொழிகட்குச் சொன்ன பலமே இதற்கும் பலம் என்பது இரண்டாவது நிர்வாகம். "அவற்றின்" என் மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலையைச் சுட்டுகிறதாகக் கொண்டு, 'பசு மேய்க்கப் போக வேண்டா' என்ற அவர்களுடைய சொற்களைக் கேட்டு அவன் போக்குத் தவிர்ந்து அவர்களுடன் கூடியிருந்தாற்போலே, இது கற்றவர்களும் அக் கண்ணபிரானோடு கலந்திருத்தலாகிய பயனைப் பெறுவர் என்பது மூன்றாவது நிர்வாகம்.

நான்காம் திருவாய்மொழி — "சார்வே"

முன்னுரை

ஈடு:—[1] தம்மைப் பிரிய நினைவின்றிக்கே இருக்க ஐயத்தாலே பிரிந்தார் படும் துன்பத்தினைப் பட்டு, அதனாலே மயக்கமுற்றவரை, 'உம்மை ஒரு நாளும் பிரியேன்' என்று அவன் தெளியச் செய்ய அதனாலே தரித்து மிகவும் பிரீதரானார் மேல். [2] முதல் திருவாய்மொழியிலே, பரம்பொருள் விஷயமாகச் சொல்ல வேண்டுவன எல்லாம் சொல்லியற்றது; [3] இனி அந்தப் பரம்பொருள்தானே அடையக் கூடியதாய் இருக்கும்

---

1. மேல் திருவாய்மொழிகளோடு இத் திருவாய்மொழிக்கு இயைபு மூன்று வகையாக நிர்வகிக்கப்படுகிறது. முதல் நிர்வாஹம், எம்பெருமானாருடையது. திருக்குருகைப்பிரான்பிள்ளான் நிர்வாஹம், இரண்டாவது. மூன்றாவது, ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹம். 'தம்மைப் பிரிய நினைவின்றிக்கே இருக்க' என்றது முதல் 'பிரீதரானார் மேல்' என்றது முடிய அவதாரிகை. 'தெளியச் செய்ய' என்றது, மேல் திருவாய்மொழியின் ஈற்றுப் பாசுரத்தில் "செங்கனிவாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'முதல் திருவாய்மொழியிலே' என்றது முதல் 'அதனைச் சொல்லுகிறது இங்கு' என்றது முடிய உள்ள பகுதி, எம்பெருமானார் நிர்வாகத்தைப் பின் பற்றியது. 'இங்ஙன் அன்றிக்கே' என்றது முதல் 'ஓர் உருவிலே பணிப்பர்' என்றது முடிய, பிள்ளான் நிர்வாஹம். 'இன்னமும் முதல் திருவாய்மொழியிலே' என்றது முதல் 'அதன் அதன் பலத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்தார்' என்றது முடிய உள்ள பகுதி, ஸ்ரீஆளவந்தார் நிர்வாஹத்தினைப் பின்பற்றியது.

2. "வீடுமின்முற்றவும்", "பத்துடையடியவர்" என்ற இரண்டு திருவாய்மொழிகளிலும் சொன்ன பக்தியையும், முதல் திருவாய்மொழியில் குறிப்பாகக் கூறிப் போந்த பிரபத்தியையும் "சார்வே தவநெறி" என்ற இத் திருவாய்மொழியிலே முடிக்கிறார்; ஆகையாலே, பரம்பொருள் தன்மையைக் கூறின முதல் திருவாய்மொழியின் அர்த்தத்தினைக் "கெடும் இடராய" என்ற திருவாய்மொழியிலே முடிக்கிறார் என்கிறார் 'முதல் திருவாய்மொழியிலே' என்று தொடங்கி. முதல் திருவாய்மொழியிலே "அருளினன்" என்கையாலே பிரபத்தியாகிய உபாயமும் சொல்லப்பட்டிருந்தும் 'பரம்பொருள் விஷயமாகச் சொல்லவேண்டுவன எல்லாம் சொல்லியற்றது' என்றது, பொருந்துமாறு யாங்ஙனம்? எனின், பரம்பொருளின் தன்மை பிரதானம் ஆகையாலே, பிராதாந்யம் பற்றி அங்ஙனம் கூறினார் என்க.

3. "கெடும் இடராய" என்னும் திருவாய்மொழியில் சொல்லப்பட்டது, கைங்கரியத்திற்கு எதிர்த் தொடர்புடைய பொருளைப் பற்றியே அன்றோ? அங்ஙனம் இருக்க, இது, பரம்பொருளின் தன்மையைக் கூறிய முதல் திருவாய்மொழிக்கு முடிப்புரை (நிகமனம்) ஆகுமாறு யாங்ஙனம்? என்ன, 'இனி அந்தப் பரம்பொருள் தானே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, அப் பரம்பொருளே கைங்கரியத்திற்கு எதிர்த் தொடர்புடைய பொருள் ஆகையாலே முடிப்புரை - நிகமனம் ஆகலாம் என்றபடி.

அன்றே. [1] அடையக் கூடியதான அந்தப் பரம்பொருளின் தன்மையையும், அடைவதன் பலமான கைங்கரியத்தையும், "படமுடை அரவிற் பள்ளி பயின்றவன்" என்றும், "கடைத் தலை சீய்க்கப் பெற்றால்" என்றும் அருளிச்செய்தார் "கெடும் இடராய வெல்லாம்" என்ற திருவாய்மொழியிலே; [2] அடையக் கூடியதான அப்பொருள் அப்போதே கைபுகுரப் பெறாமை யாலும் நெடு நாள் படப் பிரிந்து போந்த வாசனையாலும் வெருவி இவர் துன்பம் உற்றவராக, இவர்க்குப் பிராசங்கிக மாகப் பிறந்த துன்பத்தினை நினைத்து அவனும் தெளிவிக்கத் தெளிந்தவராய் நின்றார் "வேய் மரு தோள் இணை" என்ற திரு வாய்மொழியிலே.

[3] ஆக, முதல் திருவாய்மொழியிலே பரம்பொருள் விஷய மாகச் சொல்ல வேண்டுவன எல்லாம் சொல்லி, அப் பரம் பொருள் தானே அடையக் கூடிய பேறு ஆக இருக்கையாலே [4] அப் பேற்றினைப் பெறுதற்கு உபாயமான பக்தி யோகத்தை

---

1. 'அடையக் கூடியதான அந்தப் பரம்பொருளின் தன்மையையும், அடைவதன் பலமான கைங்கரியத்தையும்' என்றது, அத் திருவாய்மொழி யிலே "அமரர்கள் அதிபதி", "தொழுது எழு" என்பனவற்றைத் திரு வுள்ளம்பற்றி.

2. அங்ஙனமாயின், இதற்கு மேலே உள்ள "வேய்மருதோளிணை" என்ற திருவாய்மொழி எதனுடைய முடிப்புரை? என்ன, 'அடையக் கூடிய தான' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, "வேய்மருதோளிணை" என்ற திருவாய்மொழி, பிராசங்கிகம் என்றபடி. பிராசங்கிகம் - இடையிலே வருதல்.

3. இனி, முதல் திருவாய்மொழியோடே இரண்டாம் திருவாய்மொழி யான வீடுமின் முற்றத்துக்கு இயைபு அருளிச்செய்யுமுகத்தால், "வீடுமின் முற்றவும்", "பத்துடையடியவர்" என்ற இரண்டு திருவாய்மொழிகளிலும் சொல்லப்பட்ட பொருளை அருளிச்செய்துகொண்டு, அவற்றிலே சொன்ன பக்தியையும், முதல் திருவாய்மொழியில் குறிப்பினாலே பெறப்படும் பிரபத்தி யையும் இதிலே முடிக்கிறார் என்கிறார் 'ஆக' என்றது முதல் 'தலைக்கட்டு கிறார் இதில்' என்றது முடிய.

4. "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியில் கூறிய பக்தி, சாத்திய பக்தியாக இருக்க, 'அப்பேற்றினைப் பெறுதற்கு உபாயமான பக்தி யோகத்தை' என்றது, என்? எனின், தாம் உபதேசித்த இந்தச் சாத்திய பக்தி பிரபத்தியிலே மூட்ட, பிரபத்தி உபாயமாய்த் தலைக்கட்டும் என்று திருவுள்ளம்பற்றி என்க. இங்ஙன் அன்றிக்கே, இந்தச் சாத்திய பக்தியையே பிரபத்தி என்றால் எனின், 'தம்முடைய பேற்றுக்கு உபாயமாக முதல் திருவாய்மொழியில் சொன்ன பிரபத்தியோடே தலைக் கட்டுகிறார் இதில்' என்றதனோடே சேராது. மேலும், வீடுமின் முற்றத்திலும், பத்துடை யடியவரிலும் சொன்ன பக்தி, சாத்திய பக்தி என்றே அருளிச்செய்வர்.

"வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியாலே சொல்லி, அந்தப் பக்திமான்களுக்கு அவன் சுலபனாக இருக்கும் என்று அவன் சுலபனாக இருக்கும் தன்மையைப் "பத்துடை யடியவர்க்கு" என்ற திருவாய்மொழியாலே சொல்லி, ஆக, வீடுமின் முற்றத்திலும் பத்துடை அடியவரிலும் சொன்ன பக்தியானது [1] அதன் பலத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி, அத் திருவாய்மொழிகளிலே பக்தியை வளர்ப்பனவாகச் சொன்ன [2] குணங்களை ஆதரித்துக்கொண்டு தாம் தம்முடைய பேற்றுக்கு உபாயமாக [3] முதல் திருவாய்மொழியில் சொன்ன [4] பிரபத்தியோடே தலைக் கட்டுகிறார் இதில்.

[5] இவ் இரண்டு கோடியும் இவர்க்கு உண்டாயிருக்கச் செய்தேயும், தம்முடைய பேற்றுக்கு உடலாக இவர் நினைத்திருப்பது பிரபத்தியையே ஆம். முதல் திருவாய்மொழியிலே பிரபத்தியைக் காட்டக் கூடிய சொல் உண்டோ? என்னில்,

---

1. 'அதன் பலத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி' என்றது, "தாமோதரன் தாள்கள் தவநெறிக்குச் சார்வே" என்றதனைத் திருவுள்ளம் பற்றி. அதன் பலத்தோடே பொருந்துதலாவது, பக்தி உபாயம் பலத்தோடே நிறைவுற்றிருத்தல்.

2. 'குணங்களை ஆதரித்துக் கொண்டு' என்றது, அங்கு, "உரவினோடிணைந்திருந்து" என்றதனை, இங்குத் "தாமோதரன்" என்றும், "புயல் கரு நிறத்தனன்" என்றதனைக் "கார்மேகவண்ணன்" என்றும், "அடியவர்க்கு எளியவன்", "எளிவரும் இயல்வினன்" என்றதனைச் "சார்வே" என்றும், "பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்றதனைக் "காண்டற் கருமையனே" என்றும், "அமைவுடை முதல் கெடல்" என்பது போன்றவைகளைப் "பெருமையனே வானத்திமையோர்க்கும்" என்றும், "மலர்மகள் விரும்பும்" என்றதனைத் "திரு மெய் உறைகின்ற" என்றும் இப்புடைகளிலே இத்திருவாய்மொழியில் ஆதரித்துக்கொண்டு என்றபடி.

3. 'முதல் திருவாய்மொழியிற் சொன்ன' என்றது, "அருளினன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

4. 'பிரபத்தியோடே தலைக்கட்டுகிறார் இதில்' என்றது, இத்திருவாய்மொழியில் "பண்டே பரமன் பணித்த பணிவகையே, கண்டேன் கமல மலர்ப் பாதம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

5. இவர்க்குப் பக்தி உண்டாயிருக்க, பிரபத்தியே பேற்றுக்குக் காரணமாவான் என்? என்ன, 'இவ் இரண்டு கோடியும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

[1] "அருளினன்" என்றூரே அன்றோ. [2] இனித் தான் இவருடைய பக்தி வேதாந்தங்களில் கூறப்படுகிற பக்தி அன்று. வேதாந்தங்களில் கூறப்படுகிற பக்தியாகக் கொள்ளுமிடத்து அபசூத்ர அதிகரண நியாயத்திற்கு விரோதம் உண்டாகும். [3] அதுதான் இவ் ஆழ்வாருடைய பிரபாவத்தாலே கூடாதோ? என்னில், அது இவருடைய பாசுரங்களோடு முரண்படும். [4] "அருளினன்" என்று இப் புடைகளிலே அன்றோ இவருடைய பாசுரங்கள். [5] "கர்ம ஞானங்கள் இரண்டாலும் தூய்மை செய்யப்பெற்ற மனத்தினை உடையவனுக்கு உண்டாகும் பக்தி யோகம் ஒன்றாலும் அடையத் தக்கவன் இறைவன்" என்கிறபடியே, ஞான கர்மங்கள் இரண்டாலும் தூய்மை செய்யப்பெற்ற மனத்தினையுடையவனுக்குப் பிறக்குமது அன்றோ பக்தியாகிறது; அந்த ஞான கர்மங்களினுடைய இடத்து இறைவனுடைய திரு அருள் நிற்க, அதற்குப் பின் உண்டான பரபக்தி தொடங்கிப் பிறந்ததாய் இருக்கும் இவர்க்கு. [6] இனித்தான், இவர் வழியே போய் இவருடைய பேறே பேறாக நினைத்திருந்த ஸ்ரீ பாஷ்யகாரரும், பிரபத்தி

1. "அருளினன்" என்றால் பிரபத்தியைக் காட்டுமாறு யாங்ஙனம்? எனின், "அதுவும் அவனது இன் அருளே" (திருவாய். 9. 7 : 6.) என்கிறபடியே, பிரபத்திக்கு அடி கிருபையாகையாலே, "அருளினன்" என்ற அளவில் பிரபத்தி என்பது தானே போதரும் என்க.

2. இவருடைய பேற்றுக்குப் பிரபத்தியே உபாயம் என்பான் என்? பக்திதான் ஆனாலோ? எனின், அப்படியாம் அன்று அபஶூத்ராதிகரணத்தோடும் இவருடைய ஸ்ரீ சூக்திகளோடும் முரண்படும் என்கிறார் 'இனித் தான்' என்று தொடங்கி. இங்கே, திருவாய்மொழி முதற்பத்து ஈட்டின் தமிழாக்கம் 105-ஆம் பக்கம் காண்க.

3. வேதாந்தங்களில் கூறப்படுகின்ற பக்தி ஆனாலோ? என்ன, 'அது தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அதுதான் - வேதாந்தங்களில் கூறப்படும் பக்திதான்.

4. 'முரண்படும்' என்றதனை விவரணம் செய்கிறார் "அருளினன்" என்று தொடங்கி.

5. ஆயின், இவர்க்குப் பக்தி வந்த வழிதான் யாது? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கர்ம ஞானங்கள்' என்று தொடங்கி.

> உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக
> பக்தியோகைக லப்யஃ.

என்பது, ஆத்மஸித்தி. இது, ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்ரீ சூக்தி.

6. பிரபந்நனுக்கும் பக்தி வேண்டும் என்பதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'இனித்தான்' என்று தொடங்கி. 'வேண்டிக் கொண்டாரே அன்றோ' என்றது, கத்யத்ரயத்திலே வேண்டிக்கொண்டார் என்றபடி.

யைப் பண்ணி, பின்னர் பக்தி தொடங்கி வேண்டிக் கொண்டாரே அன்றோ. [1] அவன் உபாயம் ஆனாலும் இவனுக்கு ருசி உண்டாய்ப் பேற்றினைப் பெற வேண்டுமே; இல்லையாகில் புருஷார்த்தம் ஆகாதே; [2] பெறுகிற பேறு இன்னது என்று அறுதியிட்டு அந்தப் பேற்றிலே ருசி கண்ணழிவு அற உடையவனுக்கே அன்றோ அடைவிக்கும் வழியாக அவன் இருப்பது; [3] ஆகையாலே, இவருடைய [4] பக்தி பிரபத்திகள் மாறாடலாம்படி அன்றோ இருப்பன. [5] ஆக, வீடுமின் முற்றவும் என்ற திருவாய்மொழியிலும் பத்துடை யடியவர் என்ற திருவாய்மொழியிலும் பிறர்க்கு உபதேசித்த பக்தி தம்முடைய பேற்றுக்கு உடலாய் இருந்தபடியைச் சொல்லி, [6] இதுதான் பலத்தோடே சேர்ந்தபடியைச் சொல்லி முடிக்கிறார் இதில்.

---

1. பிரபந்நனுக்கும் அநுபவ கைங்கரியங்கள் புருஷார்த்தம் ஆகைக்காகப் பக்தி வேண்டும் என்கிறார் 'அவன் உபாயம்' என்று தொடங்கி.

2. கர்ம ஞான பக்தி பிரபத்தி என்ற வரிசையிலே, பிரபத்திக்கு முன்னே பக்தி எண்ணப்படுகின்ற காரணத்தாலும் பக்தி வேண்டும் என்று காரணத்தோடு காட்டுகிறார் 'பெறுகிற பேறு' என்று தொடங்கி.

3. 'ஆகையாலே' என்றது, பிரபத்தியே அன்றிச் சாத்திய பக்தியும் இவர்க்கு உண்டு ஆகையாலே என்றபடி.

4. 'பக்தி பிரபத்திகள் மாறாடலாம்படி அன்றோ இருப்பன' என்றது, 'அவனுடைய திருவருளே உபாயம்' என்று அறுதியிட்டிருக்கும் இவருடைய சித்தாந்தத்தைப் பார்த்தால் 'பிரபத்தியே இவர்க்கு உள்ளது, பக்தி இல்லை' என்றும், ஆர்த்தியின் மிகுதியாலே பிரபத்தியைச் செய்யும் இவருடைய அநுஷ்டானத்தைப் பார்த்தால் 'பக்தியே இவர்க்கு உள்ளது, வேறு ஒன்றும் இல்லை' என்றும் விகல்பித்துச் சொல்லலாம்படி இருக்கிறது என்றபடி. இதனால், 'பக்தியாதல் பிரபத்தியாதல் ஒழிய இரண்டும் உண்டாகக் கூடுமோ?' என்னும் சங்கையும் தீர்ந்ததாயிற்று.

5. 'ஆக, வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும்' என்று தொடங்கி மேலே அருளிச்செய்ததனை முடிக்கிறார் 'ஆக, வீடுமின் முற்றவும்' என்று தொடங்கி. இதில் - "சார்வே தவ நெறிக்கு" என்ற திருவாய்மொழியில். நன்று; பிறர்க்கு உபதேசித்த பக்தி, தம்முடைய பேற்றுக்கு உடலாகக் கூடுமோ? என்னில், ஸ்ரீ விபீஷணன் முதலியோர் இராவணன் முதலியோர்கட்கு உபதேசிக்க, அதன்வழியே தங்களுக்குப் பகவானிடத்தில் ஈடுபாடு மிகுதற்கு அவ் உபதேசம் காரணமானாற் போன்று, இவருக்கும் பிறரைக் குறித்து உபதேசித்த பக்தி பகவானிடத்தில் ஈடுபாட்டினைப் பிறப்பிக்க, அதனாலே பிரபத்தியைச் செய்ய, அது தம்முடைய பேற்றுக்குக் காரணமாய் அது தன் பலத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி முடிக்கிறார்; ஆகையாலே கூடும் என்க.

6. 'தம்முடைய பேற்றுக்கு உடலாய் இருந்தபடியைச் சொல்லி' என்றதனை விவரணம் செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி. இதுதான்-பிறர்க்கு உபதேசித்த இந்தப் பக்திதான். பலத்தோடே சேர்ந்தபடியாவது, இறைவனைக் கண்கூடாக நேரே காண்டல்.

நன்று; [1]பிறர்க்கு உபதேசித்த இந்தப் பக்தியானது பலத்தோடே சேர்ந்திருப்பது இறைவனை நேரே கண்டு அநுபவித்தாலே அன்றோ? என்னில், கண்கூடாகக் காண்பது போன்றதாகத் தோற்றாமல் கண்கூடாகக் காண்பதாகவே தோற்றுகிற மனத்தின் அநுபவம் அமையும் அன்றோ இப்போது; [2]குணங்கள் அநுபவிக்கத் தக்கன ஆனால் அக் குணங்களோடு கூடியதாக இங்கே இருந்து வணங்குகிறானே அன்றோ. ஆக, வணங்குகிற வேளையிலும் அது இருக்கும்படியை நினைக்கத் தட்டு இல்லை என்க. ஆனால், [3]மேலும் எல்லாம் கண்கூடாகக் காணுதலைப் போன்று மனத்தினாலே கண்டு அநுபவிக்கும் அநுபவத்தை அன்றோ சொல்லிக் கொண்டு போந்தது? என்னில், அவற்றைப் பற்றிப் பிறந்தன சில ரச விசேடங்களைச் சொன்ன இத்தனையேயாம் அவ்விடங்

---

1. தமக்கு இன்னம் பேறு கிடையாதிருக்க, அதனுடைய பலத்தைப் பெற்றேன் என்பது யாங்ஙனம்? என்னும் சங்கையை அநுவதித்து நீக்குகிறார் 'பிறர்க்கு' என்று தொடங்கி. 'இப்போது' என்றது, இங்கு இருக்கும் காலத்திலேயே என்றபடி.

2. ஆனால், கண்கூடாகக் காணும் நிலையில் உண்டாகும் அநுபவம் போன்று, கண்கூடாகக் காணாத நிலையில் உண்டாகும் அநுபவம் இன்பமயமாக இருக்குமோ? என்ன, 'குணங்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, "ஸ: அஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா - அவன், எல்லாக் கல்யாண குணங்களையும் முற்றறிவினனான அப் பரம்பொருளோடு அநுபவிக்கிறான்" என்கிறபடியே, கண்கூடாகக் காணும் நிலையில் குணங்கள் அநுபவிக்கத் தக்கனவாக இருக்கச் செய்தேயும், இங்கே இருக்கும்போதும் குணங்களோடு கூடியிருப்பதாகப் பக்தி செலுத்துகிறானே அன்றோ குண அநுபவத்தின் இனிமையை நோக்கி என்றபடி. அது இருக்கும்படியை - குண அநுபவத்தின் இனிமை இருக்கும்படியை.

3. 'மேலும் எல்லாம்' என்றது, "கண்ணனை நான் கண்டேனே", "கண்டு கொண்டு உய்ந்தொழிந்தேன்", "கண்ட சதிர் கண்டொழிந்தேன்", "கண்டு கொண்டு என் கண்ணிணை ஆரக் களித்து" என்பன போன்று முன்னே அருளிச்செய்தனவற்றைத் திருவுள்ளம்பற்றி. 'அவற்றைப் பற்றி' என்றது, ஒவ்வோர் குணங்களைப் பற்றி என்றபடி. அவ் இடங்களில் - அந்த அந்தத் திருவாய்மொழிகளில். இதனால், மேலே போந்த திருவாய்மொழிகளைக் காட்டிலும் இத் திருவாய்மொழி "முனியே நான்முகனே" என்னும் திருவாய்மொழிக்கு அணித்து ஆகையாலே மனத்தினாலே அநுபவிக்கும் அநுபவத்திலே விசேடமான தெளிவு உண்டு இங்கு என்றபடி. மேலே எல்லாம் கண்கூடாகக் காணுதலைப் போன்று மனத்தினாலே கண்டு அநுபவிக்கும் அநுபவம் உண்டானாலும் பிரிவினாலாய துக்கம் மிகுந்திருக்கையாலே மனத்தின்

களில்; [1]தொடங்கின பொருளை முடிக்கை என்பதும் ஒன்று உண்டே; அதனைச் சொல்லுகிறது இங்கு.

[2]இங்ஙன் அன்றிக்கே, "'நீ பசு மேய்க்கப் போக வேண்டா' என்றாள்; 'ஆகில் தவிர்ந்தேன்' என்றான்; இவனைப் போன்ற சுலபன் இலன் காண், இவன் பக்தியினாலே அடையத் தக்கவன் என்னுமிடம் உறுதி" என்கிறாள் என்று ஓர் உருவிலே பணிப்பர் பிள்ளான்.

[3]இன்னமும் முதல் திருவாய்மொழியிலே, பெறக் கூடிய பேற்றினை அருளிச்செய்தார்; அந்தப் பேற்றினை அடைதற்கு உரிய வழியாக, வேதாந்தங்களிலே பக்தி என்றும் பிரபத்தி என்றும் இரண்டு வழிகள் விதிக்கப்பட்டன; அவை இரண்டிலும் பக்தி, முதல் மூன்று வருணத்தார்களே செய்யத் தக்கது; பிரபத்தி எல்லாரும் செய்யத் தக்கது. அவற்றில் எல்லாராலும் செய்யத் தக்கதுமாய்த் தாம் தம் திருவுள்ளத்தாலே தமக்கு உபாயமாக ஏற்றுக்கொண்ட பிரபத்தியை "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியிலே அருளிச்செய்தார். முதல் மூன்று வருணத்தாருக்குரிய பக்தியைப் "பத்துடை யடிவர்க்கு" என்ற திருவாய்மொழியிலே அருளிச்செய்தார். ஆக, இரண்டு திருவாய்மொழிகளிலும் அருளிச்செய்த பக்தி பிரபத்திகள் தம் பலத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்கிறார் "சார்வே தவநெறி", "கண்ணன் கழலிணை" என்னும் இரண்டு திருவாய்மொழிகளாலும்.

அநுபவம் குறைந்திருக்கும்; இங்குப் பல வேளை ஆகையாலே மனத்தின் அநுபவம் பூர்ணமாய் இருக்கும் என்பது கருத்து.

1. நன்று; "வீடுமின் முற்றவும்", "பத்துடையடியவர்" என்னும் அத் திருவாய்மொழிகளிற் கூறிய பொருளினை முடிப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தொடங்கின' என்று தொடங்கி.

2. எம்பெருமானார் நிர்வாஹத்தைத் திருவுள்ளம்பற்றி மேல் திருவாய்மொழிகளுக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபையும், அது சம்பந்தமாக வந்த விஷயங்களையும் அருளிச்செய்தார் மேலே எல்லாம். இனி, மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் பிள்ளான் அருளிச்செய்யும் நிர்வாகத்தினை - இயைபினை அருளிச்செய்கிறார் 'இங்ஙன் அன்றிக்கே' என்று தொடங்கி.

3. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாகத்தினைத் திருவுள்ளம்பற்றி மற்றும் ஒரு வகையில் இயைபு அருளிச்செய்கிறார் 'இன்னமும்' என்று தொடங்கி.

அவற்றுள், "சார்வே தவநெறி" என்ற திருவாய்மொழியால் பிரபத்தி, அதற்குரிய பலத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்கிறார். "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்று, தவம் என்னும் சொல்லால் பிரபத்தியைச் சொல்லுகிறது. [1] "ஆதலால், மேலே கூறிய தவங்களுள் பிரபத்தியை மேம்பட்டதாகச் சொல்லுகிறார்கள்" என்கிறபடியே, தவங்களிலே மிக்க தவமாகச் சொல்லிற்றே அன்றோ பிரபத்தியை. [2] "பண்டே பரமன் பணித்த பணிவகையே, கண்டேன் கமல மலர்ப் பாதம், காண்டலுமே விண்டே ஒழிந்த வினை ஆயின எல்லாம்" என்றும், "இருமை வினை கடிந்து இங்கு என்னை ஆள்கின்றான்" என்றும், "என்னையே பற்றுக் கோடாகப் பற்று; நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன்; துக்கப் படாதே" என்ற அர்த்தத்தை அருளிச்செய்தார்.

இனி, [3] ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பதாவது: "பிரபத்தி விஷயமாக ஆயிற்று 'வீடுமின் முற்றவும்' என்ற திருவாய்மொழி:" ஸ்ரீ பாஷியகாரரும் அப்படியே பிரபத்தி விஷயமாக அருளிச்செய்து கொடு போந்து, பாஷியம் அருளிச்செய்த பின்பு, இரஹஸ்ய உபாயத்தை வெளியிட ஒண்ணாது என்று "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியையும் பக்தி விஷயமாக்கி அருளிச் செய்தார்.

---

1. தவம் என்னும் சொல்லிற்குப் பிரபத்தி என்று பொருள் கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஆதலால்' என்று தொடங்கி.

> "தஸ்மாத் ந்யாஸம் எஷாம் தபஸாம் அதிரிக்தம்
> ஆஹு:" என்பது, தைத்திரீய உபநிடதம்.

2. மேலும், இத் திருவாய்மொழியால் பிரபத்தி மார்க்கம் கூறப்படுகிறது என்பதற்கு, இத் திருவாய்மொழியினின்றும் மேற்கோள் காட்டுகிறார் "பண்டே" என்றும், "இருமை வினை" என்றும் தொடங்கி. 'என்னையே பற்றுக்கோடாகப் பற்று' என்பது, சரமஸ்லோகம். ஸ்ரீ கீதை, 18 : 67.

3. "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழி, பக்தியைக் கூறுகிறது என்று முன்பு சொன்னதற்கும், பிரபத்தியைக் கூறுகிறது என்று இப்போது சொல்வதற்கும் ஆப்த சம்வாதம் காட்டுகிறார் 'ஆளவந்தார்' என்று தொடங்கி. பக்தி விஷயமாக்கி - சாத்திய பக்தி விஷயமாக்கி.

[1] ஆக, முதல் திருவாய்மொழியால் சொன்ன பரம்பொருளின் சொரூபத்தையும், அதனைக் காண்பதற்குப் பலமான கைங்கரியத்தையும் "கெடும் இடராய" என்ற திருவாய்மொழியில் "படமுடை அரவில் பள்ளி பயின்றவன்" என்றும், "கடைத்தலை சீய்க்கப் பெற்றால்" என்றும் அருளிச்செய்து, [2]"உன்தன் திருவுள்ளம் இடர் கெடும்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்" என்று அக் கைங்கரியத்தில் களைபறித்து, அதாவது, துவயத்தில் பின்வாக்கியத்திலே உள்ள "நமஃ" என்ற சொல்லின் பொருளை அருளிச்செய்து, "கெடும் இடராய" என்ற திருவாய்மொழியாலும், "வேய்மருதோளிணை" என்ற திருவாய்மொழியாலும், முதல் திருவாய்மொழியில் சொன்ன பொருளை முடித்து, "சார்வே தவநெறி" என்ற திருவாய்மொழியாலும் "கண்ணன் கழலிணை" என்ற திருவாய்மொழியாலும், "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியாலும் "பத்துடை யடியவர்" என்ற திருவாய்மொழியாலும் சொன் பக்தி பிரபத்திகள் அதன் அதன் பலத்தோடே பொருந்தின படியை அருளிச்செய்கிறார்" என்பது.

—:o:—

1. "வேய்மரு தோள் இணை" என்ற திருவாய்மொழி, முதல்திருவாய்மொழியின் நிகமனம் என்கைக்காக, மீளவும் ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாகத்தை அநுவதிக்கிறார் 'ஆக' என்று தொடங்கி. இங்கே, திருவாய்மொழி முதற் பத்து ஈட்டின் தமிழாக்கம் 104-ஆம் பக்கம் காண்க.

2. இதனால், "வேய்மரு தோளிணை" என்ற திருவாய்மொழிக்கு இரண்டு வகையான கருத்து அருளிச்செய்தபடி. ஒன்று, பிராசங்கிகமாகப் பிறந்த துன்பத்தை நினைந்து அவனும் தெளிவிக்க இவரும் தெளிவினை அடைந்தவராய் நின்றார் என்பது. இரண்டாவது, கைங்கரியத்தில் களை அறுக்கிறது என்பது.

ஆக, முதல் திருவாய்மொழியின் நிகமனம், "கெடுமிடர்" என்னும் திருவாய்மொழி; "வீடுமின் முற்றவும்", "பத்துடை யடியவர்" என்ற இரண்டு திருவாய்மொழிகளும் சாத்திய பக்தியைக் கூறுவன; அவற்றினுடைய நிகமனம், "சார்வே தவநெறி" என்ற திருவாய்மொழி; "வேய்மருதோளிணை" என்ற திருவாய்மொழி பிராசங்கிகம் என்பது எம்பெருமானாருடைய திருவுள்ளம். முதல் திருவாய்மொழியின் நிகமனம் "கெடுமிடர்", "வேய்மருதோளிணை" என்ற இரண்டு திருவாய்மொழிகளும்; "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழி பிரபத்தியைக் கூறுகிறது; "பத்துடை யடியவர்" என்ற திருவாய்மொழி சாதன பக்தியைக் கூறுவது; அவற்றினுடைய நிகமனம் "சார்வே தவநெறி", "கண்ணன்கழலிணை" என்னும் இரண்டு திருவாய்மொழிகளும் என்பது ஸ்ரீஆளவந்தார் திருவுள்ளம். "சார்வே தவநெறி", "வேய்மருதோளிணை" என்ற திருவாய்மொழியோடு நேரே இயைபுடையது என்பது பிள்ளான் திருவுள்ளம்.

1026

சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்;
கார்மேக வண்ணன், கமல நயனத்தன்,
நீர் வானம் மண் எரி காலாய் நின்ற நேமியான்,
பேர் வானவர்கள் பிதற்றும் பெருமையனே.

பொ - ரை :—கரியமேகம் போன்ற திருநிறத்தையுடையவனும், தாமரைமலர் போன்ற திருக் கண்களையுடையவனும், தண்ணீர் ஆகாயம் பூமி நெருப்புக் காற்று ஆகிய இவற்றின் வடிவமாய் நின்ற சக்கரத்தை யுடையவனும், நித்தியசூரிகளாலே பிதற்றப்படுகின்ற திருப்பெயர்களை யுடைய பெருமையனும் ஆன தாமோதரனுடைய திருவடிகள் பக்தி நெறிக்குத் துணையாகும்.

வி - கு :—தாமோதரன் தாள்கள் தவ நெறிக்குச் சார்வு என்க. தவநெறி - பக்திமார்க்கம்; பிரபத்தியுமாம். பெருமையனான தாமோதரன் என்க. பெரிய வானவர்கள் எனலுமாம்.

ஈடு :—முதற் பாட்டு. [1] இரண்டு விபூதிகளையுமுடையனாய் இருந்து வைத்து அடியார்கட்குச் சுலபனானவனுடைய திருவடிகள் பக்தி மார்க்கத்தாலே அடையத்தக்கன என்கிறார்.

தாமோதரன் தாள்கள் தவநெறிக்குச் சார்வே - [2] "பத்துடை அடியவர்க்கு எளியவன்" என்றும், "எளிவரும் இயல்வினன்" என்றும் சொல்லப்பட்ட அவன் திருவடிகள் சார்வு என்கிறார். சார்வு - பேறு. தவநெறி என்றது, பக்தி மார்க்கத்தை. [3] மேலே "வணக்குடைத் தவநெறி" என்றாரே; அதனைச் சொல்லுகிறார். [4] "தவநெறி" என்ற அளவில் பக்தி

1. பின் இரண்டு அடிகளையும் முதல் அடியையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார் "நீர் வானம் மண் எரி காலாய் நின்ற" என்றதனால் லீலாவிபூதியையும், "நேமியான்" என்றதனால் நித்திய விபூதியையும் கொள்க.

2. இப் பாசுரத்திற்குப் பக்தி பரமாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'பத்துடையடியவர்க்கு' என்று தொடங்கி. "பத்துடை" என்பது, திருவாய். 1. 3 : 1. "எளிவரும்" என்பது, திருவாய். 1. 3 : 2.

3. "தவநெறி" என்ற சொல், "பத்துடையடியவர்க்கு" என்ற திருவாய்மொழியில் இருக்கிறதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி. "வணக்குடைத் தவநெறி" என்றது, திருவாய். 1. 3 : 5.

4. அத் திருவாய்மொழியில் இது சொல்லுமாறு யாங்ஙனம்? எனச் சங்கித்து, அதற்கு இரண்டு வகையாக விடை அருளிச்செய்கிறார் "தவநெறி" என்று தொடங்கி.

யைச் சொல்லிற்றுமோ? என்னில், [1] "என்னை வணங்கு கிறுர்கள்" என்கிறபடியே, வணக்கத்தை அங்கமாக உடைத்தாய் இருக்குமே அன்றே பக்தி; ஆகையாலே, [2] இவன் ஒரு வணக்கத்தைச் செய்தால் 'இவன் நம்மை நோக்கிக் குவாலாக வருந்தினுன்' என்று இதனைப் பெரிய காயக்கிலேசமாக நினைத்திருக்கும் அவன் கருத்தால் சொல்லுகிறது. [3] அன்றிக்கே, "எவனுக்கு ஞானமயமான தவம்" என்கிறபடியே, ஞான விசேஷமான பக்தியைத் தவம் என்று சொல்லிற்றுகவுமாம். தாமோதரன் தாள்கள்-[4] "உரலினேடு இணைந்திருந்து ஏங்கிய எளிவு" என்றதனைச் சொல்லுகிறுர் இங்கு. யசோதை முதலாயினர் கைகளிலே கட்டுண்டு தழும்பு சுமந்ததுவே திருநாமமாக இருக்குமவன் அன்றே; [5] யசோதை முதலாயினர் கைகளிலே கட்டுண்பான் ஒருவன் ஆனபின்பு, அவனை உகப்பார் அவன் காலைக் கட்டிக் கொள்ளு மித்தனை அன்றே.

---

1. ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா꞉
நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே.

என்பது, ஸ்ரீ கீதை, 9 : 14.

2. அங்கமாக இருக்கிற வணக்கத்தைத் 'தவம்' என்பான் என்? என்ன, 'இவன் ஒரு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர். என்றது, அங்கமாக இருக்கிற வணக்கத்தை ஈஶ்வரனுடைய அபிப்பிராயத்தாலே தவம் என்கிறுர் என்றபடி. அங்கமான வணக்கத்தை இட்டு அங்கியான பக்தியைத் தவம் என்ற சொல்லால் சொல்லுகிறது என்க.

3. தவம் என்ற சொல்லுக்கு ஞானம் என்பதும் பொருள் ஆதலால், ஞானம் என்னும் பொருளையுடைய தவம் என்ற சொல்லால் ஞானத்தின் விசேடமான பக்தியைச் சொல்லுகிறது என்று இரண்டாவதாக வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறுர் 'அன்றிக்கே' என்று தொடங்கி. தவம் என்ற சொல் ஞானம் என்னும் பொருளைக் காட்டுவதற்குப் பிரமாணம் காட்டுகிறுர் 'எவனுக்கு' என்று தொடங்கி.

"யஸ்ஸர்வஜ்ஞஃ ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநம் அயம் தப꞉"

என்பது, முண்டோபநிடதம்.

4. "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியின் நிகமனம் இத்திருவாய்மொழி என்பதற்குச் சான்று காட்டுகிறுர் 'உரலினேடு' என்று தொடங்கி. "தாமோதரன்" என்ற சொல்லுக்குப் பொருள் அருளிச்செய்கிறுர் 'யசோதை' என்று தொடங்கி.

5. "தாமோதரன் தாள்கள் சார்வு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'யசோதை முதலாயினர்' என்று தொடங்கி.

[1]எப்படிப்பட்டவன் சுலபன் ஆகிறான் என்னில், மிகச் சிறந்த திருமேனியை யுடையனாய் இரண்டு உலகங்களோடும் கூடினவன்காண்! என்கிறார் மேல்: கார் மேக வண்ணன் - நீர் கொண்டு எழுந்த காளமேகம் போலே சிரமத்தைப் போக்கக் கூடிய வடிவினையுடையவன். [2] பக்திக்கு இவன் தான் முயற்சி செய்ய வேண்டா, ருசியைத் தோற்றுவிப்பதாய்ப் பின்பு அதனை வளர்த்து அது பக்குவமானால் தானே பேறு ஆகின்ற வடிவினை உடையவன். [3]காதல் கடல் புரைய விளைவித்த கார் அமர் மேனி அன்றோ. [4]கார் காலத்தில் மேகம் என்னுதல்; கறுத்த மேகம் என்னுதல். [5] மேலே "புயல் கரு நிறத்தனன்" என்றாரே அதனைச் சொல்லுகிறார். கமல நயனத்தன் - அகவாயில் குணங்களுக்கு விளக்கமாக இருக்கிற திருக்கண்கள்.[6]திருவருள் முழுதும் தோற்றுவது கண்வழியே அன்றோ. [7] வாத்சல்ய குணத்துக்கு விளக்கமான திருக்கண்களை யுடையவன்.

[8]வடிவழகு கண்டு மேல் விழுகை அன்றிக்கே, மேன்மையாலும் மேலே விழவேண்டுமவனாயிற்று. நீர் வானம் மண் எரி கால் ஆய் நின்ற - [9]திருமேனியின் சிறப்பு அன்றிக்கே, சொரூபத்தின் சிறப்பினைச் சொல்லுகிறது. [10]"யாவையும் எவரும்

---

1. மேலுக்கெல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறார் 'எப்படிப்பட்டவன்' என்று தொடங்கி.

2. இங்கு வடிவழகினைச்சொல்லுவதற்குப் பிரயோஜனத்தை அருளிச்செய்கிறார் 'பக்திக்கு' என்று தொடங்கி.

3. திருமேனி, பக்தியை வளர்க்குமோ? என்ன, "காதல்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, திருவாய்மொழி, 5. 3: 4.

4. கார் என்பதற்கு, கார்காலம் என்றும், கருமை என்றும் இரு பொருள் அருளிச்செய்கிறார் 'கார் காலத்தில்' என்று தொடங்கி.

5. "கார் மேக வண்ணன்" என்பது, "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியில் உண்டோ? என்ன, 'மேலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. திருக்கண்கள் குணங்களுக்கு விளக்கமாக இருக்கும் என்பதனை விவரணம் செய்கிறார் 'திருவருள்' என்று தொடங்கி.

7. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வாத்சல்ய குணத்துக்கு' என்று தொடங்கி.

8. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'வடிவழகு' என்று தொடங்கி.

9. மேலே கூறிய அவதாரிகையை விவரணம் செய்கிறார் 'திருமேனியின் சிறப்பு அன்றிக்கே' என்று தொடங்கி.

10. "நீர் வானம் மண் எரி காலாய் நின்ற" என்பது "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியில் உண்டோ? என்ன, உண்டு என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார் "யாவையும்" என்று தொடங்கி.

தானும் அமைவுடை நாரணன்" என்று மேலே கூறியதனை முடித்துக் காட்டுகிறார். [1] மண் முதலான ஐம்பெரும் பூதங்களையும் கூறிய இதனால் அவற்றின் காரியமான தேவர் முதலான பொருள்களையும் தெரிவிக்கின்றது. இதனால், இந்த உலகத்தைச் (லீலாவிபூதியை) சொல்லுகிறது. நேமியான் - [2] கையும் திருவாழியுமாய்ப் பரமபதத்திலே இருக்கும் இருப்பினைச் சொல்லுகிறது. பேர் வானவர்கள் பிதற்றும் பெருமையன் - [3] இவ்வருகில் உண்டாக்கப்பட்ட தேவர்கள் அன்றிக்கே அவ்வருகில் பெருமக்கள் ஏத்தும்படியான பெருமையை யுடையவன். அன்றிக்கே, வானவர்கள் திருப் பெயர்களைச் சொல்லிக் கொண்டிருக்கும்படியான பெருமையன் என்னலுமாம். [4] இங்கே ருசியுடையாரும் பிதற்றுமித்தனை. பேறு கை புகுந்து அவ்வருகு பட்டாராயிருக்கிறவர்களும் பிதற்றுமத்தனை.

கார்மேகவண்ணனாய், கமலநயனத்தனாய், நீர் வானம் மண் எரி கால் ஆய் நின்ற நேமியானாய், பேர் வானவர்கள் பிதற்றும் பெருமையனாய் இருந்துவைத்து, தாமோதரனனவன் திருவடிகள், தவநெறிக்குச் சார்வே; இது நிச்சயம் என்பதாம். (1)

1027.

பெருமையனே, வானத்து இமையோர்க்கும் காண்டற்கு;
அருமையனே, ஆகத்து அணையாதார்க்கு; என்றும்
திரு மெய் உறைகின்ற செங்கண் மால், நாளும்
இருமை வினை கடிந்து, இங்கு என்னை ஆள்கின்றானே.

---

1. ஐம்பெரும் பூதங்களையும் கூறினால் எல்லாவற்றையும் சொன்னவாறு யாங்ஙனம்? என்ன, 'மண் முதலான' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. தமஸஃ பரமஃ தாதா ஶங்க சக்ர கதா தரஃ
ஸ்ரீ வத்ஸ வக்ஷாஃ நித்யஸ்ரீஃ அஜய்யஃ ஶாஶ்வதஃ த்ருவஃ.

என்ற பிரமாணத்தைத் திருவுள்ளம்பற்றி 'கையும் திருவாழியுமாய்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். ஸ்ரீராமா. யுத். 114 : 15. மண்டோதரி கூற்று.

3. "பேர் வானவர்கள்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவ்வருகில்' என்று தொடங்கி.

4. அறிவில்லாதவர்களான இவ்வருகுள்ளவர்கள் அன்றோ பிதற்றுவார்கள்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இங்கே' என்று தொடங்கி.

பொ - ரை:—தெய்வலோகங்களில் வசிக்கின்ற பிரமன் முதலான தேவர்களைக் காட்டிலும் பெருமையையுடையவனும், மனத்தினாலே நினையாதார்க்குப் பார்ப்பதற்கு முடியாதவனும், பெரிய பிராட்டியார் எப்பொழுதும் நித்தியவாசம் செய்கின்ற திருமார்பினையுடைய செங்கண்மாலும் ஆன எம்பெருமான் இரண்டு வினைகளையும் நீக்கி இவ்வுலகத்திலேயே என்னை நாள்தோறும் ஆள்கிறான் என்கிறார்.

வி - கு :—வானத்து இமையோர்க்கும் பெருமையனே, ஆகத்து அணையாதார்க்குக் காண்டற்கு அருமையனே என்று கூட்டுக. ஆகம் - அகம்-மனம். திரு என்றும் உறைகின்ற மெய் செம் கண் மால் என்க. 'இருமை' என்பது ஈண்டு எண்ணின்கண் நின்றது; 'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்' என்புழிப் போன்று. (குறள். 23).

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] சர்வேஸ்வரனைத் திருமகள் கேள்வனையிருந்துவைத்துஎன் இருவினைகளைப் போக்கி என்னை இங்கே அடிமை கொள்ளாநின்றான் என்று, மேலே கூறிய சௌலப்யம் தமக்குப் பலித்தபடியை அருளிச்செய்கிறார்.

வானத்து இமையோர்க்கும் பெருமையனே-[2]"அமைவுடை முதல் கெடல் ஒடிவிடை அற நிலம் அதுவாம் அமைவுடை அமரர்" என்றதனைச் சொல்லுகிறது. அல்லாதார் கீழே இருக்கத் தாங்கள் மேலான உலகங்களிலே இருக்கிறார்களாய், படைத்தல் முதலானவற்றுக்கும் தாங்களே கடவர்களாக நினைத்துத் தங்களைக் குவாலாக நினைத்திருக்கும் பிரமன் முதலாயினார்க்கும் தன்னை அடைந்து சொரூபம் பெற வேண்டும்படியான பெருமையையுடையவன். [3]அவ் வாசியே அவர்களுக்கு உள்ளது என்பார் 'வானத்து' என்கிறார். [4]இவ் உலக விவகாரத்தில் நம்மிலும் கனவியராய் இருப்பர்கள். [5]நாம் பற்

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "பெருமையனே வானத்து இமையோர்க்கும்" என்றதன் பொருள், "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியில் இருக்குமிடத்தினைக் காட்டுகிறார் "அமைவுடை" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 1. 3 : 3.

3. "வானத்து" என்ற அடைமொழிக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவ்வாசியே' என்று தொடங்கி.

4. நம்மை நோக்க அவர்களுக்கு வேற்றுமை இல்லையோ? என்ன, 'இவ் உலக விவகாரத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, இவ்வுலக விவகாரத்தில் ஆதிக்கியம் உண்டு என்றபடி.

5. நம்மிலும் கனவியராய் இருப்பர் என்றதனை விவரணம் செய்கிறார் 'நாம்' என்று தொடங்கி.

றின அளவே அன்றோ விட வேண்டுவது, அவர்கள் மூன்று உலகங்களையும் விட வேண்டுமே. ஆகத்து அணையாதார்க்குக் காண்டற்கு அருமையனே-தானே வந்து மேல் விழாநின்றால் விலக்குகிறவர்களுக்குக் காண அரியனாக இருக்கும். [1]சம்பந்தம் இன்று தேடவேண்டா; பெற வேண்டும் என்கையும் வேண்டா என்கையும் அன்றோ உள்ளது அவனைப் பெறுவதற்கும் இழப்பதற்கும். [2]"பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்றதனைச் சொல்லுகிறது.

என்றும் திருமெய் உறைகின்ற - [3]துவயத்திலே நித்திய சம்பந்தத்தைச் சொல்லுகிறதே அன்றோ. [4]"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பன்" அன்றோ. [5]"மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறல் அடிகள்" என்றதனைச் சொல்லுகிறார். [6]என்றும் ஒக்கப் பெரிய பிராட்டியார் வசிக்கின்ற திருமேனியை யுடையவன். செம் கண் - [7]அவளுடைய என்றும் உள்ள சேர்த்தியாலே நீர் பாய்ந்த பயிர் போலே செவ்வி பெற்ற திருக்கண்களையுடையவன். மால் - [8]"எவன் சீதாபிராட்டிக்குக் கணவனாக இருக்கிறானோ அவ

1. அவனைக் காண்டற்கு விலக்காமை ஒன்று இருந்தால் மாத்திரம் போதியதாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சம்பந்தம்' என்று தொடங்கி.

2. "ஆகத்து அணையாதார்க்குக் காண்டற்கு அருமையனே" என்பது, "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியிலே எங்கே சொல்லப்பட்டுள்ளது? என்ன, 'பிறர்களுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'துவயத்திலே நித்திய சம்பந்தம்' என்றது, "ஸ்ரீமத்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

4. "உறைகின்ற" என்னும் நிகழ்காலச்சொல்லின் பொருளை விவரணம் செய்கின்றார் "அகலகில்லேன்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 6. 10 : 10.

5. இது, "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியில் சொல்லிற்றே? என்ன, "மலர்மகள்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. பதப் பொருள் அருளிச்செய்கிறார் 'என்றும்' என்று தொடங்கி.

7. "திரு உறைகின்ற செம்கண் மால்" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவளுடைய' என்று தொடங்கி.

8. "திரு உறைகின்ற மால்" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எவன்' என்று தொடங்கி.

அப்ரமேயம் ஹி தத்தேஜঃ யஸ்ய ஸா ஜநகாத்மஜா
நத்வம் ஸமர்த்தঃ தாம் ஹர்த்தும் ராம சாபாஸ்ரயாம் வநே.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 37 : 18.

னுடைய பெருமை அளவிடற்கு அரியது" என்கிறபடியே, வந்த பெருமையைச் சொல்லுகிறது. [1]"அரும்பெறல் அடிகள்" என்றாரே மேல்; அதனைச் சொல்லுகிறார் இங்கு. இருமை வினை கடிந்து நாளும் இங்கு என்னை ஆள்கின்றான் - நல்வினை தீவினைகளைப் போக்கி, இதனை விட்டு ஒரு தேச விசேடத்திலே போனால் கொள்ளக் கடவ அடிமையை இந்த உலகத்திலே நாள்தோறும் கொள்ளாநின்றான். [2]அங்குப் போனால் குண அநுபவத்தாலே ஆத்மாவை நிர்வகிக்கும்; இங்குக் குண ஞானத்தாலே தரிப்பியாநிற்கும். (2)

1028.

ஆள்கின்றான் ஆழியான்; ஆரால் குறைவு உடையம்?
மீள்கின்றது இல்லை; பிறவித் துயர் கடிந்தோம்;
வாள் கெண்டை ஒண்கண் மடம் பின்னை தன் கேள்வன்
தாள் கண்டுகொண்டு, என் தலைமேல் புனைந்தேனே.

பொ - ரை :—சக்கராயுதத்தைத் தரித்த எம்பெருமான் என்னை ஆள்கின்றான்; அதனாலே துக்கத்திற்குக் காரணமான பிறப்பினையும் போக்கினோம்; அப் பிறவி இனி மீளாது; ஆதலால், வேறு ஒருவரால் ஒரு காரியத்தையுடையோம் அல்லோம்; வாளினையும் கெண்டை மீனையும் போன்ற அழகிய கண்களையும் மடப்பத்தினையுமுடைய நப்பின்னைப் பிராட்டியின் கணவனான ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருவடிகளைக் கண்டுகொண்டு என் தலைமேலே தரித்துக் கொண்டேன்.

ஈடு :—மூன்றும் பாட்டு. [3]மறுவல் இடாதபடி பிறவிப் பிணியைப் போக்கி, நப்பின்னைப் பிராட்டிக்குக் கேள்வனானவனுடைய திருவடிகளைத் தலைக்கு அணியாகப் பெற்றேன் என்கிறார்.

---

1. "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியில் சொல்லப் பட்டுள்ள இடத்தைக் காட்டுகிறார் "அரும்பெறல் அடிகள்" என்று தொடங்கி.

2. தேச விசேடத்திலே கொள்ளும் அடிமையை இங்கே கொள்ளும்படி என்? என்ன, 'அங்குப் போனால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. பின் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

[1]ஆழியான் ஆள்கின்றான்-ஆசிலே வைத்த கையும் தானுமாய்ப் பிறவிப் பிணியைப் போக்கி அடிமை கொள்ளாநின்றான். அன்றிக்கே, வகுத்த சர்வேஸ்வரன் அடிமை கொள்ளாநின்றான் என்னுதல். [2]பின்னையும் அவன் கை பார்த்திருக்க வேண்டும்படி அறிவு இல்லாத கர்மங்களின் கூட்டங்களைப் பூண்கட்டாநிற்பார்கள் சிலர்; "கூர் அம்பன் அல்லால்" என்று அம்பின் கூர்மையையும் "சுடர் வட்ட வாய் நுதி நேமீயீர்" என்று திரு ஆழியில் கூர்மையையும் கொண்டு பெற இருப்பார்கள் சிலர்; [3]ஆற்றல் இல்லாத தன்னாலே செய்யப்பட்ட கர்மங்களின் கூட்டத்தைப் பற்றிப் பெற இருப்பார்கள் சிலர்; என்றும் உள்ள சொரூபத்தையுடைய சர்வ சக்தியான இறைவனைப் பற்றிப் பெற இருப்பார்கள் சிலர். [5]கர்மங்களின் கூட்டத்தை நெகிழச் சொல்லி, 'கெடுவாய், என்னை அன்றோ பற்ற அடுப்பது' என்றான் அன்றோ அவன்.

---

1. "ஆழியான் ஆள்கின்றான்" என்பதற்கு இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். ஆழியைக்கொண்டு ஆள்கின்றான் என்பது முதற் பொருள். பரம்பொருள் ஆள்கின்றான் என்பது, இரண்டாவது பொருள். ஆழி, பரத்துவத்திற்கு அடையாளமாகையாலே "ஆழியான்" என்பதற்கு வகுத்த சர்வேஸ்வரன் என்று பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருளை 'ஆசிலே வைத்த' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. தம்மை "ஆழியான் ஆள்கின்றான்" என்கையாலே அதற்கு மறுதலையாக இருப்பனவற்றையும் கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'பின்னையும்' என்று தொடங்கி. 'பின்னையும்' என்றது, வேறு சாதனங்களை மேற்கொண்டு செய்த பின்பும் என்றபடி. "கூர் அம்பன்" என்பது, நான்முகன் திருவந்தாதி, செய். 8. "சுடர் வட்ட வாய்" என்பது, திருவாய்மொழி, 2. 4: 6.

3. மேலே கூறப்பட்ட இரண்டனையும் முறையே விவரணம் செய்கிறார் 'ஆற்றல் இல்லாத' என்று தொடங்கியும், 'என்றுமுள்ள' என்று தொடங்கியும். 'பின்னையும்' என்று தொடங்கும் வாக்கியத்தால் காரியசித்தியில் ஈஸ்வராபேக்ஷயும், 'ஆற்றல் இல்லாத' என்று தொடங்கும் வாக்கியத்தால் சொரூபசித்தியில் இவனுடைய அபேக்ஷையும் சொல்லப்படுகிறது.

4. சாஸ்திரங்களால் விதிக்கப்படுகின்ற உபாயங்களை விட்டு அவனைப் பற்றுதல் கூடுமோ? என்ன, 'கர்மங்களின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'என்றான் அன்றோ அவன்' என்றது, சரமஶ்லோகத்தில் கூறினான் அன்றோ என்றபடி.

ஆரால் குறைவு உடையம்-[1]என்னாலே இழக்க வேண்டுதல், ஆராயக்கூடிய யமன் முதலாயினார்க்கும் வந்து கிட்டலாதல், அவன் தன் அளவும் சென்றால் பின்னையும் ஒன்றைப் பார்த்திருத்தல் செய்யவேண்டும்படியாய் இருப்பது ஒன்றனையோ நான் பற்றிற்று? [2]'ஆரால்' என்கிறார் காணும், என்றும் ஒரு சேதநனாலே பேறு என்று இருக்குமவர் ஆகையாலே. மீள்கின்றது இல்லை- இனி மறுவல் இடுகிறது இல்லை. பிறவித் துயர் கடிந்தோம்-பிறவித் துன்பத்தினை ஓட்டினோம். என்றது, [3]பரமபதத்தில் புகச் செய்தேயும் ருசி முன்னாகப் பேறு இல்லாமையாலே கடலில் புக்க துரும்பு போலே மீளப் போந்தார்களே அன்றோ வைதிகனுடைய பிள்ளைகள். "மயர்வு அற மதி நலம் அருளினன்" என்று ருசி முன்னாக அவன் தரப் பெற இருக்கிற நமக்கு மீண்டு வருதல் என்பது ஒன்று இல்லை என்றபடி. [4]'கடிந்தோம்' என்கிறார் காணும்: அவன் செய்வானாக ஏறட்டுக் கொண்ட காரியத்துக்கு "நிலையாகப் பெற்றேன்" என்ன வேண்டும்படி இருக்குமன்றோ.

---

1. "ஆரால் குறைவு உடையம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என்னாலே' என்று தொடங்கி. யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்கையாலே என்னால் இழக்கவேண்டுதல் இல்லை என்றபடி. 'ஆராயக் கூடிய யமன் முதலாயினார்க்கும் வந்து கிட்டலாதல்' என்றது, உலக மக்கள் நிலையில் நில்லாமையை நோக்கி. 'பின்னையும் ஒன்றைப் பார்த்திருத்தல்' என்றது, அவன் விஷயமான பக்தி முதலானவற்றைச் செய்தும் அவன் திருவருளைப் பார்த்திருத்தல் என்றபடி.

2. ஆயின், எதனால் என்னாமல், "ஆரால்" என்கிறது என்? என்ன, 'ஆரால் என்கிறார் காணும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. பிறவித் துயர் கடிந்தால் மீளாமை சித்தமாக இருக்க, மீண்டும் "மீள்கின்றது இல்லை" என்கைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பரமபதத்தில்' என்று தொடங்கி. இங்கே,

> தாளால் சகம் கொண்ட தார் அரங்கா! பண்டு சாந்திபன் சொல்
> கேளா, கடல் புக்க சேயினை மீட்டதும், கேதமுடன்
> மாளாப் பதம் புக்க மைந்தரை மீட்டதும், மாறு அலவே
> மீளாப் பதம் புக்க பாலரை நீ, அன்று, மீட்டதற்கே.

என்ற செய்யுள் நினைத்தல் தகும். திருவரங்கத்து மாலை, செய். 72.

4. திருமேனியோடே இருக்க, "கடிந்தோம்" என்று இறந்த காலமாகச் சொல்லுவான் என்? என்ன, 'கடிந்தோம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

> "ஸ்திதஃ அஸ்மி கத ஸந்தேஹஃ கரிஷ்யே வசநம் தவ"

என்பது, ஸ்ரீ கீதை, 18: 73.

[1]வாள் கெண்டை ஒண்கண் மடம் பின்னை தன் கேள்வன்- அவனுடைய சுவாதந்திரியம் தலை எடுத்ததாகில் அடுகுவளம் தடைப்படும் போலே காணும். [2]இனி என்னாலே தான் விடப் போமோ? அவனாலேதான் விடப்போமோ? [3]என்னுடைய பாரதந்திரியம் போலே அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் அவனுடைய தன்மைக்கும் ஏதேனும் கண்ணழிவு உண்டோ? [4]அவன் சுவாதந்திரியம் தலை எடுத்ததாகில் தன் ஊணை இழக்கிறான். [5]மண நோக்கம் உண்டவன் அன்றோ அவன். [6]ஒளியை யுடைத்தான கெண்டை போலே இளமையாய், வைத்த கண் வாங்காதே கண்டுகொண்டு இருக்க வேண்டும்படியான அழகிய கண்களையுடையளாய், ஆத்ம குணங்களை உடையளான நப்பின்னைப் பிராட்டிக்குக் கேள்வன். தாள் கண்டு கொண்டு - காட்சிக்குக் [7]காரணம் சொல்

---

1. "மீள்கின்றதில்லை" என்பான் என்? சுவதந்திரனான சர்வேஸ்வரன் தள்ளினாலோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "வாள் கெண்டை" என்று தொடங்கி. அடுகுவளம் தடைபடுதலாவது, நப்பின்னைப் பிராட்டியின் கடாக்ஷம் பெறுமை. அடுகுவளம் - அடுகு என்று பெட்டிமேல் பெட்டியாய், வளம் என்று இனிய பொருளாய்; பெட்டிமேல் பெட்டியாக வைத்திருக்கிற இனியபொருள்: போனகப்பெட்டி என்பர் அரும்பத உரைகாரர்.

2. நப்பின்னைப் பிராட்டியின் புருஷகாரம் சொன்னதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இனி என்னாலேதான்' என்று தொடங்கி. 'இனி' என்றது, என்னை அங்கீகரித்த அங்கீகாரம் நப்பின்னைப் பிராட்டி காரணமாக வந்த பின்பு என்றபடி.

3. அவனாலே விடப் போகாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

4. மேலே 'அவனுடைய சுவாதந்திரியம் தலை எடுத்ததாகில்' என்று தொடங்கும் வாக்கியத்தின் விவரணம் 'அவன் சுவாதந்திரியம்' என்று தொடங்கும் வாக்கியம்.

5. நப்பின்னைப் பிராட்டியின் கடாக்ஷம் உணவு என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'மணநோக்கமுண்டவன் அன்றோ அவன்' என்று. இது, பெரிய திருமொழி, 8. 10: 1.

6. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஒளியை யுடைத்தான' என்று தொடங்கி.

7. 'காரணம் சொல்லிற்றே அன்றோ' என்றது, நப்பின்னைப் பிராட்டியின் புருஷகாரத்தை.

விற்றே அன்றோ. என் தலைமேல் புனைந்தேன் - [1]"துயர் அறு சுடர் அடி தொழுது எழு" என்றும், "பாதபங்கயமே தலைக்கு அணியாய்" என்றும், "கோலமாம் என் சென்னிக்கு" என்றும் சொல்லுகிறபடியே, [2]மயிர் கழுவிப் பூச் சூட இருப்பாரைப் போலே இருக்கிற இனிமை சொல்லுகிறது. [3]"நின் செம் மா பாத பற்புத் தலை சேர்த்து" என்று வேண்டிக்கொண்ட அதனைத் தலையாகப் பெற்றுக் கிருதக்கிருத்யன் ஆனேன். (3)

1029.

தலைமேல் புனைந்தேன் சரணங்கள்; ஆலின்
இலைமேல் துயின்றான், இமையோர் வணங்க
மலைமேல் தான் நின்று, என் மனத்துள் இருந்தானை,
நிலை பேர்க்கல் ஆகாமை நிச்சித்து இருந்தேனே.

பொ - ரை :—அவன் திருவடிகளை என் தலைமேலே தரித்துக் கொண்டேன், பிரளய காலத்தில் ஆலின் இலைமேலே அறிதுயில் செய்தவன், நித்தியசூரிகள் வணங்கும்படி திருமலைமேல் நின்று என் மனத்தின்கண் தங்கி இருப்பவன், அங்ஙனம் இருக்கின்ற அவனை அந் நிலையினின்றும் குலைக்க ஒண்ணாமையை நிச்சயித்து அச்சம் அற்று இருந்தேன் என்கிறார்.

வி - கு :—சரணங்கள் தலைமேல் புனைந்தேன் என்க. வணங்க நின்று இருந்தான் என்க. இருந்தான் : பெயர். இருந்தானை நிலை பேர்க்கலாகாமை நிச்சித்து இருந்தேன் என்க.

ஈடு :—நாலாம் பாட்டு. [4]என் மனத்திலே இருக்கிற சர்வேஶ்வரனை ஒருவராலும் பிரிக்க ஒண்ணாது என்று அறுதியிட்டு, அதனாலே கிருதக்கிருத்யனாய் இருந்தேன் என்கிறார்.

---

1. "என்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் "துயர்அறு" என்று தொடங்கி.
"துயர் அறு" என்பது, திருவாய்மொழி, 1. 1 : 1.
"பாதபங்கயமே" என்பது, திருவாய்மொழி, 9. 2 : 2.
"கோலமாம்" என்பது, திருவாய்மொழி, 4. 3 : 6.

2. "புனைந்தேன்" என்ற பதத்தாலே 'மயிர் கழுவிப் பூச் சூட இருப்பாரைப் போலே' என்கிறார்.

3. "தலைமேல் புனைந்தேன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் "நின் செம் மா பாதப் பற்பு" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 9 : 1.
கிருதக் கிருத்யன் - செய்யவேண்டுமவற்றை எல்லாம் செய்து முடித்தவன்.

4. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

தலை மேல் புனைந்தேன் சரணங்கள் - [1]அமரர் சென்னிப் பூச் சூடப் பெற்றேன். [2]வேண்டிக் கோடலே அன்றி அத் திருவடிகளை என் தலைமேலே வைத்துக்கொள்ளப்பெற்றேன். [3]இவர் இப் பேறு பெறுகைக்கு அவன் முயற்சி பண்ணின படி சொல்லுகிறது மேல்: [4] அவன் வண் தடத்தினுள் கிடந்து தவம் பண்ணிற்று, இவர் இப் பேறு பெறுகைக்கு. ஆலின் இலை மேல் துயின்றான்-[5]தன்னைக் கொண்டு காரிய முடையார் சிலரைக் கண்டிலன்; எல்லார்க்கும் ஆராய்ச்சி படும்படியான செயலைச் செய்வோம் என்று பார்த்தான்; வேண்டா என்பாரைக் கண்டது இல்லை. இமையோர் வணங்க மலைமேல் தான் நின்று - அது பொறுத்தவாறே நித்தியசூரிகளும் தானுமாக வந்து திருமலையிலே நின்றான். என் மனத்துள் இருந்தானை-அதுவும் பொறுத்தவாறே இவருடைய மனத்திலே வந்து புகுந்தான்; [6] இங்கு விலக்குவார் இல்லாமையாலே நிலையியற் பொருள் போன்று இருந்தான்.

[7]பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் காணும் இவர் நெஞ்சிலே புகுந்திருந்தது.[8]பனிக்கடலில் பள்ளிகோளைப்

---

1. "தலைமேல் புனைந்தேன் சரணங்கள்" என்றது, அநுவாதம். "புனைந்தேன்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அமரர்' என்று தொடங்கி. புனைந்தேன் - சூடினேன். சூடுவது மலரை ஆதலின் 'அமரர் சென்னிப் பூ' என்கிறார்.

2. "புனைந்தேன்" என்ற இறந்த காலத்துக்குக் கருத்து அருளிச் செய்கிறார் 'வேண்டிக் கோடலே அன்றி' என்று தொடங்கி.

3. மேலுக்கு எல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இவர் இப்பேறு' என்று தொடங்கி.

4. 'அவன்' என்று தொடங்கும் வாக்கியம், "ஆலின் இலை மேல் துயின்றான்" என்றதற்கு மட்டும் அவதாரிகை. வண் தடம் - ஏகார்ணவம்; மகாப் பிரளயம். இது, பெரிய திருமடல், 14.

5. இவையெல்லாம் செய்ய வேண்டுமோ இவரை அங்கீகரிப்பதற்கு? என்னும் சங்கையிலே "ஆலின் இலை மேல் துயின்றான்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன்னைக் கொண்டு' என்று தொடங்கி. ஆராய்ச்சிப் படும்படியான - பிரசித்தமாம்படியான. அதாவது, 'ஆபத்துக் காலத்திலே சகாயமாக இருப்பவனும் அகடிதகடநாசமர்த்தனும் இவனே என்று பிரசித்த மான செயலை' என்றபடி.

6. "இருந்தான்" என்றதற்கு, பாவம் 'இங்கு' என்று தொடங்கும் வாக்கியம்.

7. மேலே கூறியவற்றுக்கெல்லாம் ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'பொருப்பிடையே' என்று தொடங்கி. இது, மூன்றாந் திருவந்தாதி, 76.

8. அப்படிக் கடலில் நின்றும் இவர் நெஞ்சிலே புகுந்தானோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பனிக்கடலில்' என்று தொடங்கி. "பனிக் கடலில்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 5. 4: 9.

பழக விட்டு ஓடி வந்து இவருடைய மனக்கடலிலே வாழப் புக்கான்: இப்படி இருந்தவனே.

நிலை பேர்க்கலாமை -[1] இவன் போகைக்கு உறுப்பாக என்னால் ஆவன எல்லாம் செய்தேன், அதற்கும் கேட்பானாய் இருந்திலன். நிச்சித்து இருந்தேன் -[2] "அச்சம் அடைகிறான் இல்லை" என்கிறபடியே, இருந்தேன். [3]அவன் படியை நினைந்தால் இவன் அச்சம் அற்றவனாய் இருக்கத் தட்டு இல்லை அன்றோ.[4]"ஆநந்தம் பிரஹ்மணோ வித்வான் நபிபேதி குதஶ்சந - தன் சோகம் மறுநனையும்படியான ஆனந்தம் இவன் பக்கலிலே உண்டு என்று அறிந்தால், பின்னை இவன் சோகம் போகைக்குக் குறை இல்லை அன்றோ. குதஶ்சந - பின்னர்ப் புத்தி பூர்வகமாகப் பண்ணின பாபத்துக்கும் அஞ்ச வேண்டா." (4)

1030.

நிச்சித்து இருந்தேன் என் நெஞ்சம் கழியாமை;
கைச் சக்கரத்து அண்ணல் கள்வம் பெரிது உடையன்;
மெய்ச்சப்படான் பிறர்க்கு; மெய்போலும் பொய்வல்லன்;
நச்சப்படும் நமக்கு; நாகத்து அணையானே.

பொ - ரை :—என் மனத்தினை விட்டுப் போகான் என்னுமதனை அறுதியிட்டு இருந்தேன், திருக்கையிலே சக்கரத்தையுடையனான நம் இறைவன் கள்வம் பெரிதும் உடையன், அடியார் அல்லாதாரால் புகழப்பட ஒண்ணாதவன், அடியார்களுக்கு மெய்யனாய் இருக்குமாறு போலே அடியர் அல்லாதார்க்குப் பொய்யனாக இருப்பவன், ஆதிசேஷ சயனத்தையுடைய எம்பெருமான் நம்மால் விரும்பப்படுமவன் ஆவான்.

---

1. "நிலை பேர்க்கலாமை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவன்' என்று தொடங்கி.

2. "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் நபிபேதி குதஶ்சந இதி" என்பது, தைத்திரீய. 9: 1.

3. "அச்சம் அடைகிறான் இல்லை" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவன் படியை' என்று தொடங்கி.

4. 'அவன் படியை' என்றதற்குச் சொல் எங்கே? என்ன, "ஆநந்தம்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். மேற்கோளாக எடுத்த உபநிடத வாக்கியத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தன் சோகம்' என்று தொடங்கி.

வி - கு :—என் நெஞ்சம் கழியாமை நிச்சித்திருந்தேன் என்க. கள்வம் - பிறர் அறியாமல் செய்யப்படும் காரியம். நாகத்து அணையான் நமக்கு நச்சப்படும் என்க.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [1]அவன் என் திறத்தில் செய்ய நினைக்கிறவை ஒருவர்க்கும் அறிய நிலம் அன்று என்கிறார்.

என் நெஞ்சம் கழியாமை நிச்சித்திருந்தேன் - [2] நீரிலே கிடந்தும் மலையின் உச்சியிலே நின்றும் தன் பேறாகத் தவம் செய்து வந்து என் நெஞ்சிலே இருக்கையாலே, இனி ஒரு காலமும் விட்டுப் போகான் என்று நிச்சயித்திருந்தேன். கைச் சக்கரத்து அண்ணல் - கையிலே திருஆழியையுடைய சர்வேஸ்வரன். [3] தன்னைப் பற்றினவர்களை ஒருகாலும் கைவிடாதவன்; "எப்போதும் கை கழலா நேமியான்" என்னக் கடவது அன்றோ. கள்வம் பெரிதுடையன் - மனத்தினைக் கைவிடாமையே அன்றிக்கே, இங்கே இருந்து நாம் அறியா திருக்கத் தான் அறிந்ததாகக்கொண்டு அவ்வருகே குவாலைப் பாரியாநின்றான். என்றது, [4] பரமபதத்து ஏறக்கொடுபோக ஒருப்படுவது, அமாநவனை இடுவித்துத் தீண்ட நினைப்பது, மதி முக மடந்தையரை வரக் காட்டி எதிர்கொள்ளப் பார்ப்பதாய்க் குவாலைப் பாரியாநின்றான் என்றபடி.

[5] இதுதான் எல்லார்க்கும் பொது ஆகில் செய்வது என்? என்று அஞ்ச வேண்டா: பிறர்க்கு மெய்ச்சப் படான் - நான் தன் குணங்களைப் பேசிப் புகழ்வது போலே, பிறர் தன் குணங்களைப் பேசிப் புகழலாம்படி இரான்; அவர்களுக்கு அடைய முடியாதவனாக இருப்பான். மெய் போலும் பொய்

---

1. "கள்வம் பெரிதுடையன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அநுவாதத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நீரிலே' என்று தொடங்கி.

3. "கைச் சக்கரத்து அண்ணல்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தன்னைப் பற்றினவர்களை' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "எப்போதும்" என்று தொடங்கி. இது, பெரிய திருவந்தாதி, 87.

4. 'குவாலைப் பாரியாநின்றான்' என்றதனை விவரணம் செய்கிறார் 'பரமபதத்து' என்று தொடங்கி.

5. "மெச்சப்படான்" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி.

வல்லன் - அருச்சுனன் முதலாயினர் பக்கல் இருக்குமாறு போலேயோ துரியோதனன் முதலாயினர்கள் பக்கலிலும் இருப்பது; காரியத்தில் வந்தால் மெய் செய்வாரைப் போலே பொய் செய்து தலைக்கட்டுவான். [1] இதுதான் நம் அளவிலும் ஏறின் செய்வது என்? என்று அஞ்ச வேண்டா. நமக்கு நச்சப்படும் - உகவாதார் பக்கல் செய்யுமவற்றை நம் பக்கல் செய்யான். அதற்கு நம்பிக்கை என்? என்னில், நாகத்து அணையானே - நம்மோடு வேறுபட்டவர்கள்பக்கல் செய்வது கொண்டு நமக்குக் காரியம் என்? [2] நம்மோடு ஒத்தவர்கள் பக்கல் செய்தது அன்றோ நமக்கு எடுத்துக்காட்டு. [3] நம்முடைய பேற்றுக்கு அடியுமாய் நம்மோடு ஒத்தவர்களுமானரோடு செய்யும்படி இது அன்றோ? (5)

1031.

நாகத்து அணையானை, நாள்தோறும் ஞானத்தால்
ஆகத்து அணைப்பார்க்கு அருள்செய்யும் அம்மானை,
மாகத்து இள மதியம் சேரும் சடையானைப்
பாகத்து வைத்தான் தன் பாதம் பணிந்தேனே.

பொ - ரை :—ஆதிசேஷ சயனத்தை யுடையவனும், பக்தியாக வடிவெடுத்த ஞானத்தாலே மனத்திலே வைத்துத் தியானிப்பவர்கட்கு எப்பொழுதும் திருவருள்செய்யும் தலைவனும், ஆகாயத்திலே உள்ள பிறைச்சந்திரன் சேர்ந்திருக்கின்ற சடையையுடைய சிவபெருமானைத் தன் வலப்பாகத்தில் வைத்து அருள்செய்தவனும் ஆன எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கப் பெற்றேன் என்கிறார்.

வி - கு :—ஞானத்தால் ஆகத்து அணைப்பார்க்கு நாள்தோறும் அருள் செய்யும் அம்மானை என்க. மாகம் - ஆகாயம். சடையான் - சிவன். அணையானை, அம்மானை என்பவற்றிலுள்ள ஐகாரம் இடைச்சொல்.

---

1. "நச்சப்படும் நமக்கு" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி.

2. 'நம்மோடு ஒத்தவர்கள்' என்றது, வேறு பிரயோஜனங்களைக் கருதாத வகையில் ஒத்தவர்கள் என்றபடி.

3. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'நம்முடைய' என்று தொடங்கி.

ஈடு :—ஆறும் பாட்டு. [1] இன்று வந்து பற்றுமவரையும் எப்பொழுதும் தன்னைப்பற்றி நிற்குமவர்களைப்போலே அங்கீகரிக்குமவன் திருவடிகளிலே செருக்கு அற்றவனாய் விழப்பெற்றேன் என்கிறார்.

நாகத்து அணையானை - உகந்தாரைப் படுக்கையாகக் கொள்ளுமவனாயிற்று. நாள்தோறும் ஞானத்தால் ஆகத்து அணைப்பார்க்கு அருள்செய்யும் அம்மானை - ஞானத்தால் ஆகத்து அணைப்பார்க்கு நாள்தோறும் அருள்செய்யுமவன் ஆயிற்று. ஞானம் - பக்தி. [2] இவனால் எப்போதும் நினைக்கப் போகாதே! அக் குறை தீர ஒரே தன்மையனான தான் நாள்தோறும் அருள் செய்யுமாயிற்று. மாகத்து இள மதியம் சேரும் சடையானைப் பாகத்து வைத்தான்-[3] சுகத்தை அநுபவிப்பதில் முதன்மை பெற்றவன் என்று தோற்றும்படி சந்திரனைச் சூடித் தவ வேடத்திற்கு அறிகுறியான சடையையுமுடையனான சிவனுக்குத் திருமேனியில் ஒரு பக்கத்தில் இடம் கொடுத்தவன். தன் பாதம் பணிந்தேன் - அவனுடைய திருவடிகளை அடைந்தேன்; இனி எனக்கு ஒரு குறை உண்டோ? (6)

1032.

பணி நெஞ்சே! நாளும் பரம பரம்பரனை ;
பிணி ஒன்றும் சாரா; பிறவி கெடுத்து ஆளும்;
மணி நின்ற சோதி, மதுசூதன், என் அம்மான்,
அணி நின்ற செம்பொன் அடல் ஆழியானே.

பொ - ரை :—நீல மணியை ஒத்த நிலை பெற்ற ஒளி உருவமானவனும், மது என்னும் அரக்கனை அழித்தவனும், என் அம்மானும், அழகு குடி கொண்டிருக்கிற சிவந்த பொன்மயமான, பகைவர்களைக் கொல்லுகின்ற சக்கரத்தை யுடையவனும் ஆன எம்பெருமான், பிறவியினைப் போக்கி நம்மைக் காப்பாற்றுவான் ; ஒரு நோயும் நம்மைச் சாராமாட்

---

1. பின் இரண்டு அடிகளையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். "ஞானத்தால் ஆகத்து அணைப்பார்" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'இன்று வந்து பற்றுமவரையும்' என்கிறார்.

2. "நாள்தோறும்" என்றதனை "அருள்செய்யும் அம்மானை" என்றதனோடு கூட்டிப் பொருள் அருளிச்செய்வதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இவனால்' என்று தொடங்கி. அக் குறை தீர-அவன் நினைக்கமாட்டாத குறை தீர.

3. மதியையும் சடையையும் சொல்லியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சுகத்தை' என்று தொடங்கி.

டாது; ஆதலால், மேலானவர்களுக்கும் மேலானவர்களான நித்திய சூரிகளுக்குத் தலைவனை மனமே! நாள்தோறும் வணங்குவாய் என்கிறார்.

வி - கு :—நெஞ்சே! பரம பரம்பரனை நாளும் பணி என்க. பரமர்-பிரமன் முதலான தேவர்கள்; அவர்களுக்குப் பரமர்-நித்தியசூரிகள்; அவர்களுக்கும் பரமன் - திருமால். இதனையே 'பரம பரம் பரன்' என்று குறிக்கிறார்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1] நம் தடைகளை எல்லாம் தானே போக்கி அடிமை கொள்ளுமவனை நாள்தோறும் அநுபவி என்று தம் திருவுள்ளத்தை நோக்கி அருளிச்செய்கிறார்.

நெஞ்சே நாளும் பணி-நாள்தோறும் அநுபவிக்கப் பார். [2] நல்ல வாய்ப்பாக இருந்தது. பரம பரம் பரனை - இந்திரன் முதலாயினோர்கட்கும் முதல்வரான பிரமன் முதலாயினோர்கட்கும் முதல்வரான நித்தியசூரிகளுக்குத் தலைவனை. பிணி ஒன்றும் சாரா - துன்பங்களில் ஒன்றும் நம்மைத் தீண்டாது. பிறவி கெடுத்து ஆளும் - அந்தத் துன்பங்களுக்கு அடியான பிறவியை அடி வேரோடே போக்கி நம்மை நித்திய கைங்கரியத்தைக் கொள்ளுமவன். மணி நின்ற சோதி - [3] பிறவியை உண்டாக்கினாலும் விடும்படியாகவோ வடிவின் அழகு இருக்கிற படி. நீல மணியின் ஒளியை வடிவாக வகுத்தாற் போலே இருக்கிற வடிவையுடையவன். மது சூதன் - அவ் வடிவு அழகினை அநுபவிப்பார்க்கு வரும் தடைகளை, மதுவைப் போக்கினாற் போலே தள்ளிக் கொடுக்குமவன்.

என் அம்மான் - இப்படி என் துன்பங்களை எல்லாம் போக்கி முகம் தந்தவன். அணி நின்ற செம் பொன் அடல் ஆழியான் - அநுபவிப்பார்க்கு விரோதிகளையும் போக்கி, திருக் கைக்குத் தானே ஆபரணமாய், அநுபவிப்பார்க்கு விரும்பத் தக்கதான வடிவையுடைய திரு ஆழியைக் கையிலேயுடை

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "பரம பரம் பரனை" என்று அவன் பெருமையைக் கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நல்ல வாய்ப்பாக இருந்தது' என்று. என்றது, பரம பரம் பரனாகையாலே எல்லாராலும் மேல்விழும்படி பெருமையினை உடையனாய் இருக்கிறவன் தானே வந்து மேல் விழுகையாலே நல்ல வாய்ப்பாக இருந்தது என்றபடி.

3. மேலே உள்ள பதங்களையும் கூட்டிக்கொண்டு, "மணி நின்ற சோதி" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிறவியை' என்று தொடங்கி.

யவன். என்றது, [1] அநுபவத்துக்கும் தானேயாய் விரோதி களை அழிப்பதற்கும் தானேயான கருவியை உடையவன் என்றபடி. (7)

1033

ஆழியான், ஆழி அமரர்க்கும் அப்பாலான்,
ஊழியான், ஊழிபடைத்தான், நிரை மேய்த்தான்,
பாழி அம் தோளால் வரை எடுத்தான் பாதங்கள்
வாழி என் நெஞ்சே! மறவாது வாழ் கண்டாய்.

பொ - ரை :—சக்கரத்தை யுடையவனும், பெருமிதத்தையுடைய நித்தியசூரிகளுக்கும் அப்பாற்பட்ட மேன்மையை யுடையவனும், கற்பாந்த காலத்திலே தான் ஒருவனுமேயாக உள்ளவனும், ஊழிக் காலத்திலே அழிக்கப்பட்ட பொருள்கள் எல்லாவற்றையும் படைத்தவனும், பசுக்களை மேய்த்தவனும், வலிய அழகிய தோளாலே கோவர்த்தனம் என்னும் மலையைத் தூக்கிப் பிடித்தவனுமான எம்பெருமானுடைய திருவடிகளை என் நெஞ்சே! மறவாமல் வாழ்வாயாக; இவ் வாழ்வு என்று என்றும் நிலைத்திருக்கக் கடவது.

வி - கு :—ஆழியான் - திருப்பாற்கடலையுடையவன் என்னலுமாம். ஆழி - பெருமிதம். மறவாது வாழ் கண்டாய்; அவ்வாறு வாழ்வது வாழ்க.

ஈடு :—எட்டாம் பாட்டு. [2] 'அவனை அநுபவிப்பாய்' என்றவாறே உகந்த நெஞ்சினைக் கொண்டாடி, 'அவனை இடைவிடாதே அநுபவி' என்கிறார்.

ஆழியான் - இறைமைத் தன்மைக்கு அறிகுறியான திரு ஆழியைக் கையிலே உடையவன். ஆழி அமரர்க்கும் அப்பாலான் - அத் திருவாழிஆழ்வானைப் போன்று [3]பெருமிதத்தையுடைய நித்தியசூரிகளுடைய சொரூபம் இருப்பு முதலானவைகள் தனக்கு உரிமைப்பட்டவைகளாம்படி இருக்குமவன்.

---

1. " அணி நின்ற செம்பொன் அடல் " என்ற விசேடணங்களுக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அநுபவத்துக்கும்' என்று தொடங்கி.

2. ஈற்றடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. ஆழி என்பதற்குக் கடல் என்பது பொருள்; அதனாலே காம்பீர்யத்தைச் சொல்வதாகக் கொண்டு, ஆழி என்பதற்குப் பெருமிதம் என்று பொருள் அருளிச்செய்கிறார்.

ஊழியான் - [1] நித்தியசூரிகளும் தானுமாய்ப் பரமபதத்திலே பேரோலக்கமாக இருப்பவன். இங்கு உண்டான காரியப் பொருள்களின் கூட்டம் அடங்கலும் அழிந்து காலமாத்திரம் இருக்கும் காலத்திலே தான் வந்து தோற்றுமவன். ஊழி படைத்தான் - காலத்தாலே அழிக்கப்பட்ட எல்லாப் பொருள் களையும் "பலவாக ஆகிறேன்" என்கிற நினைவாலே உண் டாக்கினவன். நிரை மேய்த்தான்-[2] இப்படி எல்லாப் பொருள் களையும் தான் படைத்து, 'தன்னை வேறு சிலர் படைத்தார் கள்' என்னலாம்படி வந்து அவதரித்து, பசுக்களைப் பாது காப்பவன். என்றது, [3] தங்களைக் காத்துக்கொள்வதில் சம்பந்த மின்றிக்கே அவன் பண்ணும் பாதுகாவலை விலக்காத பசுக் களைக் காத்தவன் என்றவாறு.

பாழிஅம் தோளால்வரை எடுத்தான்-இவன் இவற்றை இப் படி நோக்காநிற்க, இந்திரன் பசியின் கொடுமையாலே இவை நோவு படும்படியாகக் கல் மழையினைப் பெய்விக்க, அத்தை மலையை எடுத்து நோக்குமவன். பாழி - வலி. [4] புறம்பு எங்கும் மழையினாலே நோவுபடாநிற்க, இவன் தோள் நிழலிலே ஒதுங்கினவர்களுக்கு மதிலுக்குள்ளே இருப்பாரைப் போலே அச்சம் கெட்டு இருக்கலாம்படியான வலியைச் சொல்லுகிறது **'பாழி அம் தோள்'** என்று. அன்றிக்கே, பாழி-இடமுடைமை ஆகலுமாம். என்றது, [5] ஐந்து லக்ஷம் குடியில் உள்ளாரும் இத் தோள் நிழலிலே ஒதுங்கினாலும் திருவாய்ப் பாடி அள வன்றிக்கே இன்னமும் பத்துத் திருவாய்ப்பாடிக்கு இடம் போரும் என்னும்படியான காக்கும் தன்மையின் துடிப்பு இருக்கும்படியைச் சொல்லுகிறது என்றபடி. [6] "மஹாத்மா

---

1. "அமரர்க்கும் அப்பாலான்" என்றதன்பின் "ஊழியான்" என்ற தற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நித்தியசூரிகளும்' என்று தொடங்கி.

2. "ஊழிபடைத்தான்" என்றதனோடே கூட்டி, "நிரை மேய்த்தான்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

3. "நிரை மேய்த்தான்" என்றதனால் போதரும் பொருளை அருளிச் செய்கிறார் 'தங்களை' என்று தொடங்கி.

4. அவ் வலியினை விவரணம் செய்கிறார் 'புறம்பு எங்கும்' என்று தொடங்கி.

5. இடமுடைமையாதலை விவரணம் செய்கிறார் 'ஐந்துலக்ஷம்' என்று தொடங்கி.

6. இடமுடைமை என்ற பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'மஹாத்மாவான' என்று தொடங்கி.

வான ஸ்ரீராமபிரானுடைய தோள்களின் நிழலிலே எல்லா உலகங்களும் ஒதுங்கி உள்ளன" என்கிறபடியே, ஒதுங்கினவர்கள் குறைய நிற்க நிழலே விஞ்சி இருக்கும் என்றவாறு. அம் தோள் - அழகிய தோள். [1]"திண்தோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருகாப்பு" என்று மங்களாசாசனம் செய்யும்படி ஆயிற்றுத் தோள் அழகு இருப்பது; [2] சுந்தரத் தோள் அன்றோ.

பாதங்கள் - கோவர்த்தனகிரியை எடுத்துத் துன்பத்தினைப் போக்கினவனுடைய திருவடிகளை. வாழி - [3] மேலே சொல்லப் புகுகிற அர்த்தத்தை நினைப்பதற்காக நடுவே மங்களாசாசனம் செய்கிறார் மனத்தினை. [4] "சீதையை அரு மருந்து போல் பெருங்காட்டில் தேடி வருகிற நீங்கள் நீண்ட ஆயுளைப் பெறுவீர்களாக" என்னுமாறு போலே, [5] உனக்கு இந்த நிறைவு மாறாதே சென்றிடுக என்கிறார். என் நெஞ்சே-

பாஹூச் சாயாம் அவஷ்டப்தோ யஸ்ய லோகோ மஹாத்மந:
அபக்ருஷ்ய ஆஶ்ரமபதாத் ம்ருக ரூபேண ராகவம்.

என்பது. ஸ்ரீராமா. சுந். 14 : 31. சுலோகத்திலே உள்ள "அவஷ்டப்த:" என்ற பதத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஒதுங்கினவர்கள்' என்று தொடங்கி.

1. அழகினை விவரணம் செய்கிறார் "திண்தோள்" என்று தொடங்கி. இது, திருப்பல்லாண்டு, 1.

2. அழகிய தோள் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சுந்தரத் தோள் அன்றோ' என்று. இது, நாய்ச்சியார் திருமொழி, 9 : 1.

3. பாதங்கள் மறவாது என்ன வேண்டியிருக்க, நடுவே "வாழி" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி.

4. இப்படி மங்களாசாசனம் செய்த பேர் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சீதையை' என்று தொடங்கி.

"யாம் ஓஷதிம் இவ ஆயுஷ்மந் அந்வேஷவி மஹாவநே"

என்றது, ஸ்ரீராமா. ஆரண். 67 : 15. "ஸா ஸீதா மமச ப்ராணா ராவணேந உபயம் ஹ்ருதம் - சீதையினுடைய உயிரும் என்னுடைய உயிரும் இராவணனால் கவரப்பட்டது" என்று மேலே கூறப்போகும் பொருளைத் தரித்துக் கேட்பதற்காக முதலிலே "யாம் ஓஷதிம் இவ ஆயுஷ்மந்" என்று சடாயு மங்களாசாசனம் செய்தாற்போலே, மேலே "மறவாது" என்றதனைக் கேட்பதற்காக "வாழி" என்கிறார் என்றபடி.

5. "வாழி" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'உனக்கு' என்று தொடங்கி.

[1]புறம்பு எங்கும் ஆத்மாவிற்கு உரிமைப்பட்டுள்ள மனமானது தான் சுமை எடுத்தாநிற்க, என் வழியிலே போந்து முறையிலே நிற்கிற மனமே! என்றது, ஆத்மாவின் உறுப்புக்களிலே சேர்ந்ததான மனம்தானே பிறவிக்குக் காரணமாக நின்றதே அன்றோ புறம்புள்ளார்க்கு. அங்ஙன் அன்றிக்கே, என் வழியே போந்து எனக்கு மோக்ஷத்திற்குக் காரணமான மனமே! என்றபடி. மறவாது - [2]கைபுகுந்தது என்று மற்றை விஷயங்களிலே செய்வுற்றைச் செய்யாதே காண். வாழ் கண்டாய் - [3]உன்னுடைய வாழ்ச்சிக்கு நான் கால்பிடிக்க வேண்டுகிறது என்? பால் குடிக்கக் கால் பிடிக்கிறேனே அன்றோ.

மறவாது வாழ் கண்டாய் என்கையன்றோ உள்ளது, [4]மேலே கூறிய விசேடணங்களுக்குப் பயன் என்? என்னில், புறம்பு போய் மணலை முக்க ஒண்ணாதே! பாதுகாக்க வல்லவனைப் [5]பற்ற வேண்டுமே. [6]பாதுகாப்பதற்கு வேண்டிய சாதனங்களையுடையவன் பாதுகாப்பவனாக வேண்டும்; வேறு ஒன்றனையும் விரும்பாதவர்களுடைய சொரூபம் இருப்பு முதலானவைகளுக்கும் நிர்வாஹகனானவன் பாதுகாக்குமவனாக வேண்டும்; ஒருக்கால் உளனாவது இலனாவது ஆகாநிற்கிறவனுக்கு என்றும் உளனானவன் பாதுகாக்குமவனாக வேண்டும்; இவை இல்லாத அன்று உண்டாக்கினவன் பாதுகாக்குமவனாக வேண்டும்; உண்டான அன்று பாதுகாப்பவனாகைக்குத்

---

1. "என்" என்ற விசேடணத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'புறம்பு எங்கும்' என்று தொடங்கி. 'தான் சுமை எடுத்தாநிற்க' என்பது, 'தான் சுமை எடுத்து ஆளாநிற்க' என்றிருக்கலாம். "புறம்புள்ளாரைச் சுமை எடுத்துத் தன்வழியே கொடுபோகாநிற்க" என்பது இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்.

2. மறக்கக் காரணம் யாது? "மறவாது" என்கிறாரே? என்ன, அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'கை புகுந்தது' என்று தொடங்கி.

3. வாழ் என்னுமல், "வாழ்கண்டாய்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'உன்னுடைய' என்று தொடங்கி.

4. 'மேலே கூறிய விசேடணங்கள்' என்றது, "ஆழியான், அமரர்க்கும் அப்பாலான், ஊழியான், ஊழி படைத்தான், நிரை மேய்த்தான்" என்பனவற்றை.

5. 'பற்றவேண்டுமே' அதற்காகச் சொல்லுகிறது என்றபடி.

6. பாதுகாக்க வல்லவனைப் பற்றவேண்டுமே என்றதனைக் காட்டுகிறார் 'பாதுகாப்பதற்கு' என்று தொடங்கி. இக் கருத்துக்கள், "ஆழியான்" என்றது முதல் "நிரை மேய்த்தான்" என்றது முடிய உள்ளனவற்றைத் திருவுள்ளம்பற்றி எழுதியவை. இவை, பாதுகாக்கும் ஒருவனுக்கு வேண்டிய குணங்கள் என்றபடி.

தம்மைப் பாதுகாப்பதில் குறைய நின்றனவற்றையும் நோக்கு மவன் பாதுகாக்குமவனாக வேண்டும்; [1]இருந்தபடி யாமாகில் மறந்து காண்! (8)

1034.

கண்டேன் கமல மலர்ப் பாதம் ; காண்டலுமே,
விண்டே ஒழிந்த வினையாயின எல்லாம்:
தொண்டே செய்து, என்றும் தொழுது வழி ஒழுக,
பண்டே பரமன் பணித்த பணி வகையே.

பொ - ரை:—எப்பொழுதும் தொழுது, தொண்டுகளைச் செய்து, அந்த வழியிலேயே நடக்கும்படியாக முன்பே பரமன் அருளிச்செய்த கட்டளையின்படியே நின்று, தாமரைமலர் போன்ற திருவடிகளைக் கண்டேன்; கண்ட அளவிலே நல்வினை தீவினை என்று பேர் பெற்றவை எல்லாம் விட்டு நீங்கின என்றபடி.

வி - கு:—கமல மலர்ப் பாதம் கண்டேன், காண்டலும் வினை ஆயின எல்லாம் விண்டே ஒழிந்த என்க. பரமன் - மேலானவன்; கிருஷ்ணன். பணித்த பணி வகை - அவன் பகவத் கீதையிற் கூறிய படியே.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [2]"பல ஆயிரக் கணக்கான பிறவிகளில் செய்த கர்மம் ஞானம் பக்தி என்னும் இவை களால் அழிந்த பாபத்தையுடைய மனிதர்களுக்குக் கிருஷ்ண னிடத்தில் பக்தியானது உண்டாகிறது" என்கிறபடியே, பல காலங்களிலே சம்பாதிக்கப்பட்ட பக்தியாலே அடையப்படு மவனை அவன் திருவருளாலேயே காணப்பெற்றேன் என் கிறார். இத் திருப்பாசுரத்தில் சொல்லப்படுகிற பிரபத்தியோடு மாறும் படியாக இருக்கிற பக்தியைச் சொல்லிக்கொண்டு

---

1. 'இருந்தபடி யாமாகில்' என்றது, இருந்த படியாலே என்றபடி. 'மறந்து காண்' என்றது, உன்னாலே மறக்கப் போகாது என்றபடி.

2. "பண்டே பரமன் பணித்த பணிவகையே-கண்டேன்" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'பல ஆயிரக் கணக்கான' என்று தொடங்கி.

ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபிஃ
நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்திஃ ப்ரஜாயதே.

என்பது, பிரமாணம்.

போந்தார் மேல்; [1]அதற்கும் அடி அவனுகையாலே சொல்லு கிருராதல். [2]வேறு சாதனங்களை விரும்பாத அவனது அருளையே சொல்லுகிருராதல், தாம் பெற்ற வழியே சொல்லுகிருராதல்.

கண்டேன் - [3]என்றும் கேட்டே போகக் கூடிய பொருளினைக் கண்களாலே காணப் பெற்றேன். [4]தம்முடைய பிரபத்தி அதன் பலத்தோடு பொருந்தினபடியை அதாவது, நேராகக் கண்ட படியைச் சொல்லுகிருர். [5] இதனுல், புறக் கண்களால் கண்டது போன்று ஞானக் கண்களால் கண்ட படியைச் சொன்னபடி. கமல மலர்ப் பாதம் - [6]பெறுகிற பேறு வேண்டாதபடி ஞான லாபமே அமையும்படி ஆயிற்று இனிமை இருக்கும்படி. காண்டலுமே - கண்ட அளவிலே. வினை ஆயின எல்லாம் விண்டே ஒழிந்த - [7]"எல்லாப் பாவங்

1. 'அதற்கும் அடி அவனுகையாலே' என்றது, "மயர்வு அற மதி நலம் அருளினன்" என்கிறபடியே அந்தச் சாத்திய பக்திக்கும் அடி அவனுகையாலே என்றபடி. சாத்திய பக்தி-பக்தியே பலனுக இருப்பது. 'சொல்லு கிருராதல்' என்றது, அந்தச் சாத்திய பக்திக்குக் காரணமான திருவருளைச் சொல்லுகிருராதல் என்றபடி.

2. இத் திருப் பாசுரத்துக்கு இரண்டு வகையில் அவதாரிகை அருளிச் செய்கிருர். முதல் அவதாரிகை, மோக்ஷத்திற்குக் காரணமான அவன் திருவருளாலே காணப்பெற்றேன் என்பது. இரண்டாவது அவதாரிகை, "மதிநலம் அருளினன்" என்கிறபடியே சாத்திய பக்திக்குக் காரணமான அவன் திருவருளால் காணப்பெற்றேன் என்பது. இந்த இரண்டு அவதாரிகைகளையும் முறையே விவரணம் செய்கிருர் 'வேறு சாதனங்களை' என்று தொடங்கியும், 'தாம் பெற்ற' என்று தொடங்கியும்.

3. "கண்டேன்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'என்றும்' என்று தொடங்கி.

4. இத் திருவாய்மொழியின் முன்னுரையில் 'பிரபத்தியோடே தலைக் கட்டுகிருர்' என்றதனை முடிக்கிருர் 'தம்முடைய' என்று தொடங்கி.

5. ஆனுல் கண்டாரோ? எனின், 'இதனுல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

6. "கமல மலர்ப் பாதம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'பெறுகிற பேறு' என்று தொடங்கி. என்றது, பரமபதத்தில் சென்று கண்டால் இனியதாய் இருக்கை அன்றிக்கே, மனத்தினுல் அறியுமளவில் இருந்தே இனியதாய் இருக்கும்படி ஆயிற்றுத் திருவடிகளின் இனிமை என்றபடி.

7. கண்ட அளவில் வினையெல்லாம் போகக் கூடுமோ? என்ன, 'எல்லாப் பாவங்களினின்றும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

"ஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி மாஶுச:."

என்பது, ஸ்ரீகீதை, 18: 66.

களினின்றும் விடுவிக்கிறேன்" என்கிறபடியே, அவன் அடியாக வருகிறதே அன்றோ. [1] வினை ஆயின அடங்கலும் 'இவர் கேவலர் அல்லர், அடியுடையராய் இருந்தார்' என்று விட்டுப் போயிற்றின.

தொண்டே செய்து என்றும் தொழுது வழி ஒழுக - [2] அந்தச் சரமச் சுலோகத்திற்கு இதுவும் கருத்து என்கிறார் இவர். [3] வந்தேறியான விரோதியானது போகக் கடவதே. அன்றிக்கே, உபாயத்துக்குப் பலத்தைக் கொடுக்கும் தன்மை உண்டே என்னுதல். [4] 'இனி அடிமை நிலை நின்றதாய் இருக்குமே, அடிமை நிலை நின்றதாய் இருந்தால், அவ் அடிமைக்குத் தகுதியான தொண்டும் நித்தியமாய் இருக்கும் என்பது அங்குப் போதருமே' என்று அங்குப் போதரும் பொருளையே இங்கே வாய்விடுகிறார். [5] அடிமை நித்தியமான பின்பு அதற்குத் தக்கதான தொண்டும் நித்தியமாகச் செல்லும்படியாக. பண்டே பரமன் பணித்த பணி வகையே கண்டேன் கமல மலர்ப் பாதம் - [6] அவன் "என் ஒருவனையே புகலிடமாகப் பற்று" என்கிறபடியாலே நான் அவன் திருவடிகளைக் காணப்பெற்றேன். (9)

---

1. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வினையாயின அடங்கலும்' என்று தொடங்கி. அடி : சிலேடை.

2. பண்டே பரமன் பணித்த வகையானால், அவன் பணித்த வகையில் "தொண்டே செய்து" என்று இஷ்டப் பிராப்தி சொல்லவில்லையே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அந்தச் சரமச் சுலோகத்துக்கு' என்று தொடங்கி.

3. அந்தச் சுலோகத்தில் இஷ்டப் பிராப்தி சொல்லாமைக்கு அடியாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வந்தேறியான' என்று தொடங்கி.

4. வந்தேறியான விரோதி போனால் சித்திப்பது என்? என்ன, 'இனி, அடிமை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. "தொண்டே செய்து என்றும் தொழுது வழி ஒழுக" என்றதற்குப் பதப் பொருள் அருளிச்செய்கிறார் 'அடிமை' என்று தொடங்கி.

6. 'வேறு சாதனங்களை விரும்பாத அவன் அருளையே சொல்லுகிறாராதல்' என்று மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

"மாமேகம் ஶரணம் வ்ரஜ"

என்பது, ஸ்ரீகீதை, 18 : 66.

1035.

வகையால் மனம் ஒன்றி, மாதவனை நாளும்,
புகையால், விளக்கால், புதுமலரால், நீரால்,
திசைதோறு அமரர்கள் சென்று, இறைஞ்ச நின்ற
தகையான் சரணம் தமர்கட்கு ஓர் பற்றே.

பொ - ரை :—சாத்திரங்களில் கூறிய வகையாலே மனமானது பொருந்தி, திருமகள்கேள்வனை நாள்தோறும் புகையாலும் விளக்காலும் புதிய மலர்களாலும் நன்னீராலும் தேவர்கள் திசைகள் தோறும் சென்று இறைஞ்சும்படி நிற்கின்ற தன்மையனுடைய திருவடிகள் அடியார்கட்கு ஒப்பற்ற புகலிடமாகும்.

வி - கு :—ஒன்றுதல் - ஒருமித்தலுமாம். அமரர்கள் திசை தோறு சென்று புகையால் விளக்கால் புது மலரால் நீரால் இறைஞ்ச நின்ற தகையானாகிய மாதவன் என்க. மாதவனை : ஐகாரம் சாரியை இடைச்சொல். பற்று - புகலிடம்.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1]வேறு பிரயோஜனங்களை விரும்புகின்றவர்களோடு பக்திமான்களோடு பிரபத்திமான்களோடு வேற்றுமை அற அவனே உபாயம் என்று மேலே கூறியவற்றை எல்லாம் முடிக்கிறார்.

வகையால் மனம் ஒன்றி - [2]சாத்திரங்களில் சொல்லுகிற வழியே மனம் ஒருமைப்பட்டு. மாதவனை - [3]விதிகளை மீறுவதற்

1. பின் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார். "அமரர்கள்" என்றதனால் வேறு பிரயோஜனங்களை விரும்புகின்றவர்கள் என்பதும், "தமர்கள்" என்றதனால், பக்திமான்களும் பிரபத்திமான்களும் பெறுதும்.

2. 'சாத்திரங்கள்' என்றது, பக்தி சாஸ்திரங்களையும் பிரபத்தி சாஸ்திரங்களையும். ஒருமைப் படுகையாவது, பக்திமான்களைச் சொல்லும்போது, சாத்திரம் கூறுகின்ற வழியிலே வந்து, மனத்தினை வேறு ஒரு பாவ காரியத்திலே போகாதபடி ஒருமைப் படுத்திக் கொண்டிருக்கிற தமர்கள் என்று கொள்க. பிரபந்நரைச் சொல்லும்போது, சரமஸ்லோகத்திலே சொல்லுகிற முறையிலே வந்து, மனத்தினை வேறு சாதனங்களிலும் வேறு விஷயங்களிலும் போகாதபடி ஒருமைப்படுத்திக் கொண்டிருக்கிற தமர்கள் என்று கொள்க.

3. பிரபந்நன் வேறு சாதனங்களையும் வேறு விஷயங்களையும் விட்டிருந்தானேயாகிலும், உலகப் பழியை நீக்குவதற்காகச் செய்யும் கர்மாநுஷ்டானங்களும், தன்னை அறியாமலே வரும் விஷயப் பிராவண்யம் முதலானவைகளும் உளவாக இருக்குமே? என்ன, "மாதவன்" என்று பிராட்டி புருஷகாரம் சொல்லுகையாலே அவற்றுக்கு அஞ்ச வேண்டா என்கிறார் 'விதிகளை' என்று தொடங்கி.

கும் குறிக்கோளின்மைக்கும் அஞ்ச வேண்டா ; [1] உலகத்தார் கூறும் பழி பாவங்கட்கு அஞ்சி இவன் செய்தவை எல்லாம் என் ஆவன, அங்ஙனம் செய்தவற்றுக்கும் பலம் இவனை வந்து கிட்டாது. [2] 'இவன் வழி போராமையும் மனம் ஒருமைப்படாமையும் இவன் தலையிலே எறட்டுக் கைவிடலாமோ?' என்பாரும் அருகே உண்டு. [3] இதனால், அந்தச் சுலோகத்தில் லக்ஷ்மீ சம்பந்தமும் சொல்லிற்றாயிற்று. [4]சொரூபத்தோடு கூடி இருக்கிற தர்மங்கள்சொல்லவுமாம்,சொல்லாதொழியவுமாம். [5]ஆகையாலே அன்றோ, துவயத்தாலே பிரித்து நினைக்கவுமாய், திருமந்திரத்தில் ஒன்றாக அநுசந்திக்கவுமாய் இருக்கிறது. [6]"சொரூபத்தில் மறைந்திருக்கிற குணங்களையுடைய தெய்வத்தையே வணங்குகிறான்" என்று சொல்லாநின்றதே

---

1. இவன் அஞ்சாதபடி புருஷகாரம் செய்யும்படியைக் காட்டுகிறார் 'உலகத்தார்' என்று தொடங்கி.

2. மேலே கூறியனவற்றையும் திருவுள்ளம்பற்றி, பக்திமான் விஷயத்தில் புருஷகாரம் செய்யும்படியைக் காட்டுகிறார் 'இவன் வழி' என்று தொடங்கி. இவன் - பக்திமான். வழிபோராமை - சாஸ்திரம் கூறிய வழியிலே செல்லாமை.

3. சரமஶ்லோகத்தின் பொருள் சொல்லுகிற இடத்திலே "மாதவன்" என்று விசேடிக்கையாலே திருமகள் கேள்வனும் தன்மையும் அந்தச் சுலோகத்திலே சொல்லப்படுகிறது என்கிறார் 'இதனால்' என்று தொடங்கி.

4. அந்தச் சுலோகத்திலே "மாம்" என்றதனால் இறைவனை மாத்திரம் அன்றோ சொல்லிற்று, திருமகள் சம்பந்தம் சொல்லப்படவில்லையே ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சொரூபத்தோடு' என்று தொடங்கி. என்றது, சொரூபத்தோடு சேர்ந்து அழிதல் இல்லாமல் இருக்கிற தர்மங்களைப் பிரித்துச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், சொரூபத்தைச் சொன்ன போதே அத் தர்மங்களும் தன்னடையே வரும் என்றபடி.

5. மேலே கூறியதனை முடித்துக் காட்டுகிறார் 'ஆகையாலே அன்றோ' என்று தொடங்கி.

6. சொரூபத்தைச் சொன்ன அளவிலே, சொரூபத்தோடு சேர்ந்திருக்கிற தர்மங்கள் சொல்லாவிட்டாலும் தன்னடையே வருமோ? என்ன, வரும் என்று அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சொரூபத்தில்' என்று தொடங்கி.

> " அந்தர்க்கதகுணம் - ஸ்வரூபாந்தர்ப் பூதகுணம்,
> தேவதாமேவ, ப்ஜதே - த்யாயதி "

என்பது, திரிமிட பாஷியம்.

அன்றோ;[1] அந்தத் தெய்வத்தின் சொரூபத்திலே பாபமின்மை முதலான குணங்களையும் சொல்லுகையாலே.

நாளும் புகையால் விளக்கால் புது மலரால் நீரால் திசை தோறு அமரர்கள் சென்று இறைஞ்ச நின்ற தகையான் சரணம் - கால வரையறை இல்லாமலே, ஆராதிப்பதற்குரிய பொருள்களுக்கும் வரையறை இன்றியே, தங்களுக்குக் கிடைத்த பொருள்களைக் கொண்டு, [2] பெரிய திருநாளைக்கு எல்லாத் திசைகளிலும் உள்ள மக்கள் வந்து ஏறுமாறுபோல, பிரமன் முதலான தேவர்கள் வந்து அடையும்படியான தன்மையை உடையவனுடைய திருவடிகள். ஓர் பற்று - [3] தன் திருவடிகளைப் பற்றினர்கட்கு, பின்னையும் புறம்பு போய் ஒரு பற்றுத் தேட வேண்டாதபடியான பற்று. [4]வேறு ஒரு பிரயோஜனத்தைக் கருதாத பக்திமான்களுக்கும் பலத்தைக் கொடுப்பவனாய் உபாயமாக இருக்கும்; தன்னையே பற்றினர்க்கும் நேரே உபாயமாக இருக்கும். (10)

---

1. குணங்களோடு கூடியிருத்தலை, சத்வித்தையிலே சொல்லாதிருக்க, குணத்தோடு கூடியிருக்கிற சொரூபம் உபாசிக்கத் தக்கது என்கைக்குக் காரணம் யாது? என்ன, 'அந்தத் தெய்வத்தின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'அந்தத் தெய்வத்தின் சொரூபத்திலே' என்றது, ஸத்வித்யாநிஷ்டனுக்கு உபாசிக்கத் தகுந்த தெய்வத்தினுடைய சொரூபத்திலே என்றபடி. 'சொல்லுகையாலே' என்றது, தஹர வித்தையிலே சொல்லுகையாலே என்றபடி. என்றது, சத்வித்தையிலே சொரூபமாத்திரத்தையே உபாசிக்கத் தக்கதாகச் சொல்லிக் குணங்களைச் சொல்லாவிட்டாலும், குணங்கள் சொரூபத்தை விட்டிராமையாலே சொரூபத்தைச் சொன்னபோதே சொரூபத்தோடு சேர்ந்திருக்கிற குணங்கள் தன்னடையே வருமாறுபோலே, சரமஸ்லோகத்திலும் திருமகள் சம்பந்தமும் தன்னடையே வரும் என்றபடி.

2. 'பெரிய திருநாள்' என்றது, திருவரங்கத்திலே மார்கழி மாதத்தில் நடக்கும் திருவத்யயன உத்சவத்தை.

3. "ஓர் பற்று" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன் திருவடிகளை' என்று தொடங்கி.

4. "தமர்கள்" என்ற சொல், பக்திமான்களுக்கும் பிரபத்திமான்களுக்கும் பொதுவாக இருப்பதனாலே அவ்விருவரையும் குறிக்கிறது என்று திருவுள்ளம்பற்றி, அவ்விருவர்க்கும் பற்றாகு மாற்றினை விளக்குகிறார் 'வேறு ஒரு பிரயோஜனத்தை' என்று தொடங்கி.

1036.

பற்று என்று பற்றி, பரம பரம்பரனை
மல் திண் தோள் மாலை வழுதி வள நாடன்
சொல் தொடை அந்தாதி ஓர் ஆயிரத்துள் இப் பத்தும்
கற்றார்க்கு ஓர் பற்றாகும் கண்ணன் கழலிணையே.

பொ - ரை :—மல்லர்களைக் கொன்ற வலிய தோள்களையுடைய திருமாலாகிய பரம பரம்பரனையே புகலிடம் என்று பற்றி, வளப்பத்தையுடைய வழுதி நாட்டிற்கு உரியவரான நம்மாழ்வாரால் சொற்களாலே தொடுக்கப்பட்ட அந்தாதியாக இருக்கிற ஒப்பற்ற ஆயிரம் பாசுரங்களுள் இந்தப் பத்துப் பாசுரங்களையும் கற்றவர்கட்குக் கண்ணபிரானுடைய திருவடிகள் ஒப்பற்ற புகலிடமாகும்.

வி - கு:—மல் திண் தோள் மாலை பரம பரம்பரனைப் பற்று என்று பற்றி வழுதி நாடன் சொல் தொடை அந்தாதி ஓர் ஆயிரத்துள் இப் பத்து என்க. மல் - மற்போருமாம். மாலை என்பதிலுள்ள ஐகாரம் அசைநிலை.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழி கற்றார்க்குக் கிருஷ்ணனுடைய திருவடிகள் சுலபம் ஆம் என்கிறார்.

பரம பரம்பரனை மல் திண் தோள் மாலைப் பற்று என்று பற்றி - சர்வேஸ்வரனைப் [2]பிராப்ய பிராபகம் என்று பற்றி இவன் பிரபத்தியைச் செய்து உறுதியுடையவனாய் இருக்குமத்தனையே வேண்டுவது ; காப்பாற்றுவதில் அவனிடத்தில் ஒரு குறையும் இல்லை. [3]இவர்கள் விரோதிகளைப் போக்குகைக்குத் தகுதியான மிடுக்கையும் அன்பினையும் உடையவன் என்பார் 'மல் திண் தோள் மால்' என்கிறார். வழுதி வள நாடன் சொல் தொடை அந்தாதி ஓர் ஆயிரத்துள் இப் பத்தும் கற்றார்க்கு - [4] "மூன்று வகையான பிரமாணங்களோடு கூடின

---

1. நான்காம் அடியினைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. "பரம பரம்பரனை" என்றதனால் பிராப்பியமும், "மல் திண் தோள் மாலை" என்றதனால் பிராபகமும் பெறுதும். பிராப்பியம் - பேறு. பிராபகம் - அதனை அடைதற்குரிய வழி.

3. குறை இல்லாமையை விளக்குகிறார் 'இவர்கள்' என்று தொடங்கி.

4. "பாட்யே கேயேச மதுரம் ப்ரமாணை: த்ரிபி: அந்விதம்" என்பது, ஸ்ரீராமா. பால. 4 : 3.

தாயும் பாடத்திலும் கானத்திலும் இனிமை பொருந்தியதாயும்" என்கிறபடியே, அழகிய சொற்களாலே தொடுக்கப்பட்ட அந்தாதியான ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இந்தப் பத்தும் கற்றூர்க்கு. கண்ணன் கழல் இணை ஓர் பற்று ஆகும் - [1]"தாமோதரன் தாள்கள் தவ நெறிக்குச் சார்வே" என்கிற படியே ஸ்ரீகிருஷ்ணன் திருவடிகளே, இனி அவ்வருகு போய் ஒன்று தேடிப் பற்ற வேண்டாதபடியான பற்றாகும். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

சார்வாகவே அடியில் தான் உரைத்த பத்திதான்
சீரார் பலத்துடனே சேர்ந்ததனைச் — சோராமல்
கண்டு உரைத்த மாறன் கழலிணையே நாடோறும்
கண்டு உகக்கும் என்னுடைய கண்.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. முதல் பாசுரத்தில் உள்ள தொடக்கத்தை இங்கே முடித்துக் காட்டுகிறார் "தாமோதரன்" என்று தொடங்கி.

ஐந்தாம் திருவாய்மொழி—“ கண்ணன் கழலிணை ”

முன்னுரை

—:o:—

ஈடு :—[1]பக்தியானது தன் பலத்தோடே பொருந்தின படியை அருளிச்செய்தார் மேல்; அத்துணை முறையைப் பொறுக்கமாட்டாமல் ஈஸ்வரன் தம்மைக் கொடு போகையிலே விரைகிற படியைக் கண்டு; [2] என்றது, “மரணமானல்” என்றது அவனுக்குப் பல நாட்களாய், அத்துணையும் பொறுக்க மாட்டாமல் அவன் கொடு போகையிலே விரைகிற படியைக் கண்டு என்றபடி. “நமக்குப் போக்குத் தவிராத பின்பு இனி இவர்களுக்குப் பக்திமான்களுடைய செயல்கள் இருக்கும் படியும் அறிய வேண்டுவது ஒன்ருகையாலே அதனை உபதேசிப்போம்” என்று பார்த்தார். [3] இவர் தாம் எம்பெருமானுரைப் போலே பேரருளை உடையவர் காணும்.

[4] “இதுதான் ஒன்று இவர்களுக்குக் குறை கிடந்ததாகிறது என் ?” என்று அது இருக்கும்படியை உபதேசிப்போம் என்று பார்த்துப் பரோபதேசத்திலே ஒருப்பட்டு, [5] அவன் தம்மைப் பரமபதத்திற்குக் கொடு போவதாக விரைகிறபடியாலும் கேட்கிற இவர்களுடைய அறிவிற்குப் புலனுக வேண்டும் என்னுமதனுலும் பாசுரப் பரப்பு அறும்படி சுருங்கக் கொண்டு; [6]அந்தப் பக்திக்குப் பற்றுக்கோடான திருப்

---

1. எம்பெருமானுர் நிர்வாகத்துக்குச் சேர இத்திருவாய்மொழி பக்திமான்களுடைய செயல்களைச் சொல்லுகிறது என்கிருர் ‘பக்தியானது’ என்று தொடங்கி. பக்தியானது - சாத்யபக்தியானது. சாத்யபக்தி - பக்தியே பலமாக இருப்பது.

2. ‘அத்துணை முறையைப் பொறுக்கமாட்டாமல்’ என்றதனை விவரணம் செய்கிருர் ‘என்றது’ என்று தொடங்கி.

3. பக்தி உபதேசம் மாத்திரம் போராதோ? பக்திமான்களுடைய செயல்களையும் உபதேசிக்க வேண்டுமோ? என்ன, ‘இவர்தாம்’ என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. ‘உபதேசிப்போம் என்று பார்த்தார்’ என்றதனையும் கூட்டிக் கொண்டு அருளிச்செய்கிருர் ‘இதுதான்’ என்று தொடங்கி.

5. பரோபதேசத்தை, பா இனமான வஞ்சித்துறையிலே உபதேசிப்பதற்குக் காரணத்தை அருளிச்செய்கிருர் ‘அவன் தம்மை’ என்று தொடங்கி.

6. இத் திருவாய்மொழியில் வருகிற “எண்ணும் திருநாமம்” என்பதனைத் திருவுள்ளம்பற்றி ‘அந்தப் பக்திக்கு’ என்று தொடங்கியும், “நாரணம்”

பெயரைச் சொல்லி, இதில் இழிவார்க்கு நினைக்கத் தகும் மந்திரம் இன்னது என்றும், அதனுடைய பொருள் நினைவே மோக்ஷத்திற்குச் சாதனம் என்றும், அவ்வழியாலே பக்தியைப் பண்ணுங்கோள் என்றும், முக்கரணங்களாலும் அவனைப் பற்றுங்கோள் என்றும், இப்படிப் பற்றுவார்க்கு அவன் தான் சுலபன் என்றும், திருமகள் கேள்வன் ஆகையாலே எளிதில் ஆராதிக்கத் தக்கவன் என்றும், இவனை இடுவித்துப் பற்றச் செய்து இதனையே அவன் திருவுள்ளத்திலே படுத்திக் குவால் ஆக்குவாரும் அருகே உண்டு என்றும், பற்றுமிடத்தில் அதிகாரிகளுக்குச் சொன்ன முறைகள் வேண்டா, ருசியுடையார் எல்லாரும் இதற்கு அதிகாரிகள் என்றும், மலர் முதலான சாதனங்களைக் கொண்டு அடையுங்கோள் என்றும், இதிலே இழிய விரோதிகள் தன்னடையே போம் என்றும், இப் புடைகளிலே சொல்லி, நாம் இன்னமும் சில நாட்கள் இங்கே இருக்கிறோம் அன்றிக்கே போக்கு அணித்தான பின்பு எல்லாரும் இதனைக் கொள்ளுங்கோள் என்று உபதேசித்து, அதனோடே, தொடங்கின பரோபதேசத்தைத் தலைக்கட்டுகிறார்.

என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இதில் இழிவார்க்கு' என்று தொடங்கியும், இரண்டு மூன்று ஆம் பாசுரங்களைத் திருவுள்ளம்பற்றி 'அதனுடைய' என்று தொடங்கியும், "தாள்வாய் மலரிட்டு நாள்வாய் நாடீர்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அவ்வழியாலே பக்தியைப் பண்ணுங்கோள்' என்றும், "நாடீர் நாடோறும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'முக் கரணங்களாலும்' என்று தொடங்கியும், "மேயான் வேங்கடம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இப்படிப் பற்றுவார்க்கு' என்று தொடங்கியும், "மாதவன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'திருமகள் கேள்வன்' என்று தொடங்கியும், "மாதவன் என்று என்று" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இவனை இடுவித்து' என்று தொடங்கியும், "பேர் ஆர் ஓதுவார்", "மனமுடையீர்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றிப் 'பற்றுமிடத்தில்' என்று தொடங்கியும், "சுனை நன் மலரிட்டு" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'மலர் முதலான' என்று தொடங்கியும், "அமரா வினைகள்", "வினை வல் இருள்" என்பனவற்றைத் திருவுள்ளம் பற்றி 'இதிலே இழிய' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

"வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழியிலே "எண் பெருக்கு அந் நலத்து, ஒண்பொருள் ஈறில, வண்புகழ் நாரணன்" என்று வணங்குவதற்குப் பற்றுக்கோடாகச் சொல்லப்பட்ட மந்திரத்தை "எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே" என்று காட்டுகிறார் இங்கு.

1037

கண்ணன் கழல்இணை, நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே.

பொ - ரை :—கண்ணபிரானுடைய திருவடிகளை அடைய வேண்டும் என்ற மனத்தினை உடையவர்களே! நீங்கள் எண்ணத்தக்க திருப்பெயர் நாரணன் என்ற பெயரேயாம்; வேறு ஒன்று இல்லை; இதனை உறுதியாக நம்புங்கோள்.

ஈடு :—முதற் பாட்டு. [1]பக்தியை உடையராய்க் கொண்டு அவனை நினைப்பார்க்குப் பற்றுக்கோடான திருமந்திரம் இன்னது என்கிறார்.

கண்ணன் கழல் இணை நண்ணும் மனம் உடையீர்-[2]மேலே சொன்னதனையே திரியவும் ஒருக்கால் சொல்லுகிறார், இவர்கள் கேட்க வேண்டுவதனைச் சொல்லுகைக்கு உறுப்பாக. [3]"சார்வே தவ நெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்றாரே: அதனை இங்கே "கண்ணன் கழல் இணை" என்கிறார். கிருஷ்ணன் திருவடிகளைக் கிட்டவேண்டும் என்று இருப்பீர். [4]பரமபதத்திலே சென்று காண வேண்டும்படி இருக்கை அன்றிக்கே, எல்லா வகையாலும் சுலபனானவனுடைய திருவடிகள் என்பார் 'கண்ணன் கழல் இணை' என்கிறார். [5]அடியார்கட்காகத் தூது போதல், தேரோட்டுதல் செய்யும் திருவடிகள். [6]பிரிந்து கூடினாரைப் போலே இருக்கிறது காணும்;

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கண்ணன் கழலிணை" என்றது அநுவாதம் என்கிறார் 'மேலே சொன்னதனையே' என்று தொடங்கி.

3. மேலே பக்திக்குப் பலமாகச் சொன்னதுவே அருச்சனை முதலியன செய்வதற்கும் விஷயம் என்கிறார் "சார்வே தவ நெறிக்கு" என்று தொடங்கி.

4. "கண்ணன்" என்று விதந்து சொன்னதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பரமபதத்திலே' என்று தொடங்கி. கண்ணன் என்றது, கண்களுக்கு விஷயமானவன் என்றபடி.

5. 'சுலபன்' என்றதனை விவரணம் செய்கிறார் 'அடியார்கட்காக' என்று தொடங்கி.

6. "நண்ணும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரிந்து' என்று தொடங்கி.

ஆதலின் '**நண்ணும்**' என்கிறார். [1]"வந்தான்" என்பது போலே. '**மனமுடையீர்**' என்கிறார் '**நிதியுடையீர்**' என்னு மாறு போன்று இதனையே குவாலாக நினைத்திருத்தலின். இதனால், [2] இதற்கு அதிகாரம் தேட வேண்டா, ருசியுடையார் எல்லாரும் அதிகாரிகள் என்பது போதரும். சுவர்க்கம் அடைவதற்கு இன்னார் இனியார் என்ற வரையறையும் கழுவாயும் (பிராயச்சித்தம்) வேண்டாநின்றது; மீண்டு வருதல் இல்லாத தன்மையையுடைய மோக்ஷத்திற்கு அது வேண்டாதொழிகிறது: பெறும் பேற்றிற்குத் தக்கதான அதிகாரம் இவனால் சம்பாதிக்க முடியாமையாலே.

[3] எண்ணும் திருநாமம் - நினைக்கப்படும் திருப்பெயர். அன்றிக்கே, பக்திமான்களைச் சொல்லுகையாலே அது தான் 'அது, அது' என்னும்படியாய் இருக்கையாலே சொல்லுதல் என்னுதல். எண்ணும் திருமந்திரம் என்னாமல், '**நாமம்**' என்கிறது, இதற்கு ஓர் அதிகாரி நியதி, அங்க நியதி வேண்டா; குழந்தை தாயின் பேரைச் சொல்லுமாறு போன்று அமையும்

---

1. அதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'வந்தான்' என்று தொடங்கி. அதாவது, ஸ்ரீ விபீஷணாழ்வான் இராவணனை நீங்கிப் பெருமாள் பக்கலில் போனான் என்ன அமைந்திருக்க, 'வந்தான்' என்கிறார், பிரிந்தவன் வந்து கூடினாற்போலே இருக்கையாலே என்றபடி.

> இத்யுக்த்வா பருஷம் வாக்யம் ராவணம் ராவணாநுஜ:
> ஆஜகாம முஹூர்த்தேந யத்ர ராம: ஸலக்ஷ்மண:.

என்பது, ஸ்ரீராமா. யுத். 17: 1.

> கரங்கள் மீச் சுமந்து செல்லும் கதிர்மணி முடியன், கல்லும்
> மரங்களும் உருக நோக்கும் காதலான், கருணை வள்ளல்
> இரங்கினன் நோக்குந்தோறும் இருநிலத்து இறைஞ்சுகின்றான்
> வரங்களின் வாரி யன்ன தாளிணை வந்து வீழ்ந்தான்.

என்ற கம்பராமாயணச் செய்யுள் ஈண்டு ஒப்பு நோக்குக.

2. "மனமுடையீர்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதற்கு' என்று தொடங்கி.

"தோல்புரையே போமதுக்குப் பழுதிலா யோக்யதை வேணும்; 'மனமுடையீர்' என்கிற ச்ரத்தையே அமைந்த மர்ம ஸ்பர்சித்து 'நானும் நமரும்' என்னும்படி ஸர்வரும் அதிகாரிகள்" என்னும் ஆசார்ய ஹ்ருதய சூத்திரத்தையும் அதன் வியாக்கியானத்தையும் காணல் தகும் இங்கு.

3. "எண்ணும் திருநாமம்" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதல் வகை, எளிமையிலே நோக்கு. இரண்டாவது வகை, இனிமையிலே நோக்கு. 'அது அது என்னும்படி' என்றது, "தேனும் பாலும் அமுதும் ஆய திருமால் திருநாமம்" என்கிறபடியே, இனிமையாலே வாய்புலற்றும்படி இருக்கையாலே எப்பொழுதும் சொல்லப்படுவது என்றபடி.

என்கைக்காக. [1] அதுதான் எது? என்னில், நாரணம் - இதுதான் இறைவன் திருப்பெயர்ஆகையால் ' **அம்மே** ' என்பாரைப் போலே இருக்கிறதாயிற்று. இதுவும் இன்னம் எதுவும் வேண்டும் என்றால், இத்துணையே அமையும் என்பார் ' **நாரணமே** ' எனத் தேற்றேகாரம் கொடுத்து ஓதுகிறார்.

கனத்த பேற்றுக்கு இவ்வளவு போருமோ? என்னில், திண்ணம்-நிச்சிதம். [2]" சத்தியம், சத்தியம், மீண்டும் சத்தியம், கையை மேலே உயர்த்திச் சொல்லுகிறேன்; வேதமாகிற சாஸ்திரத்தைக் காட்டிலும் மேலான பிரமாணம் கிடையாது; கேசவனைக்காட்டிலும்மேலான தெய்வம் கிடையாது" என்னுமாறு போலே, ' **திண்ணம்** ' என்கிறார். நாரணமே என்ற ஏகாரத்தாலே, [3] பிரணவத்தை ஒழியவும் நமஸ்ஸை ஒழியவும் நான்காம் வேற்றுமையை ஒழியவும் இத் துணையே நிறைந்தது என்கை. [4] 'நாரணம்' என்று இல்லாத மகரத்தையும் கூட்டி உள்ளவற்றைக் குறைத்துச் சொல்லுகையாலே, அளத்திற் பட்டன எல்லாம் உப்பு ஆமாறு போன்று, இதனோடே கூடியவெல்லாம் உத்தேசியம் என்றும், குறைந்தாலும் 'அங்கம் தப்பிற்று, ஸ்வரம் தப்பிற்று' என்று [5] பிரஹ்ம ரக்ஷஸ்ஸாகப் போக வேண்டுமவற்றைக் காட்டிலும் இதற்கு உண்டான பெருமையும் சொல்லுகிறதாயிற்று. (1)

---

1. ' தாய் ' என்பதற்கு, தக்க சொல் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ' அதுதான் ' என்று தொடங்கி.

2. இதற்கு ஒரு மேற்கோள் காட்டுகிறார் ' சத்தியம் ' என்று தொடங்கி. இந்தச் சுலோகத்தை மேலே காண்க. பக். 45.

3. " நாரணமே " என்ற ஏகாரத்துக்கு வேறும் ஒரு வகையாகக் கருத்து அருளிச்செய்கிறார் ' பிரணவத்தை ' என்று தொடங்கி. நான்காம் வேற்றுமை,நாராயணாய என்பதில் உள்ள ' ஆய ' என்பது.

4. பிரணவம் முதலானவற்றைக் குறைத்து, இல்லாத மகரத்தைக் கூட்டுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ' நாரணம் ' என்று தொடங்கி. " எண்பெருக்கில் எண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி' என்பது ஆசார்யஹ்ருதய ஸ்ரீ ஸூக்தி. பிரகரணம், 3. சூத். 27. இத் திருப்பாசுரத்தில் " நாராயணன் " என்னும் திருப்பெயரை " நாரணம் " என்று சுருக்கினார் என்க. மேலே உள்ள நான்கு திருப்பாசுரங்களிலும் பொருளைச் சுருக்கி அருளிச்செய்கிறார்.

5. பிரஹ்மரக்ஷஸ்ஸாகப் போகவேண்டும் என்னும் இவ்விடத்தில் நம்பாடுவான் சரிதம் நினைவு கூர்க.

1038.

நாரணன் எம்மான், பாரணங்கு ஆளன்
வாரணம் தொலைத்த, காரணன் தானே.

பொ - ரை :—நாராயணனும் எனக்குத் தலைவனும் பூமிப் பிராட்டிக்குக் கேள்வனும் குவலயாபீடம் என்னும் யானையைக் கொன்றவனும் உலகத்திற்கெல்லாம் காரணனாக உள்ளவனும் அந்தக் கிருஷ்ணனே யாவன்.

வி - கு :—வாரணம் - யானை.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1]இரண்டாம் பாட்டிலும் மூன்றாம் பாட்டிலும் நாராயணன் என்னும் திருப்பெயரினுடைய பொருளினை அருளிச்செய்கிறார். ஏதேனுமாகத் திருமந்திரத்தைச் சொல்ல நேர்பட்டவாறே, முன்னே அர்த்தத்தைச் சொல்லிப் பின்பு பெயரினைச் சொல்லுதல், முன்னே திருப்பெயரினைச் சொல்லிப் பின்பு அர்த்தத்தைச் சொல்லுதல் செய்யக் கடவதாய் இருப்பது ஒரு நிர்ப்பந்தம் உண்டு இவர்க்கு. [2]"எண் பெருக்கு அந் நலத்து ஒண் பொருள் ஈறில வண் புகழ் நாரணன்" என்னுதல், "யாவையும் எவரும் தானும் அமைவுடை நாரணன்" என்னுதல். "நாரணன் முழுவேழ் உலகுக்கும் நாதன்" என்னுதல், "நாராயணன் நங்கள் பிரான் அவனே" என்று "அவனே அகல் ஞாலம் படைத்து இடந்தான்" என்னுதல் செய்வர்.

நாரணன்-[3]மேலே பொருளினை அருளிச்செய்ய நினைத்து, பெயரினை எடுத்துச் சொல்லுகிறார். எம்மான் - எனக்கு

---

1. இயைபு அருளிச்செய்கிறார் 'இரண்டாம் பாட்டிலும்' என்று தொடங்கி. நாராயணன் என்ற பெயரைச் சொன்னால் அமையாதோ? பொருளையும் சொல்லுவது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஏதேனுமாக' என்று தொடங்கி.

2. அப்படி இவர் அருளிச்செய்தது உண்டோ? என்ன, "எண்பெருக்கு" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "எண்பெருக்கு" என்பதும் "யாவையும்" என்பதும் முன்னே பொருளைக் கூறிப் பின்னே மந்திரத்தைக் கூறுவதற்கு மேற்கோள். "நாரணன்" என்பதும், "நாராயணன்" என்பதும் முன்னே மந்திரத்தைச் சொல்லிப் பின்னே பொருளைக் கூறுதற்கு மேற்கோள். இங்கே, திருவாய்மொழி முதற்பத்து ஈட்டின் தமிழாக்கம் பக். 129. காண்க.

3. "நாரணன்" என்ற அநுவாதத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி. "நாராயணன் என்றது, நாரங்களுக்கு அயநம் என்றபடி. நாரங்களாவன, நித்யவஸ்துக்களினுடைய திரள். அவையாவன,

ஸ்வாமியானவன். பாரணங்கு ஆளன் - பாரணங்கு உண்டு - ஸ்ரீ பூமிப் பிராட்டி, அவளுக்குத் தலைவன். பூமிக்கு உரியவள் ஆதலின் 'பாரணங்கு' என்கிறார். [1]'பாரணங்கு' என்கையாலே பரமபதத்துக்கு உரியவன் என்கிறது; எம்மான் - இது லீலா விபூதிக்கு உபலக்ஷணம். ஆக, இரண்டு உலகங்களையும் உடையவன் என்றபடி. [2] குற்றம் செய்தது பொறுக்கைக்கு ஓர் உலகமும், பொறுப்பிக்கைக்கு ஓர் உலகமும் ஆயிற்று. [3] க்ருதாகஸ: - குற்றம் தலை நிரம்பிப் புறம்பு புகல் இல்லாதாரைக் காக்கும் ஈஸ்வரன்; குற்றம் நிரம்பி அநுதாபம் இல்லாதாரைப் பொறுப்பிக்கும் பிராட்டி; "தலை அறுக்கச் சொல்லுகிறது என்? கொடுக்கச் சொல்லுகிறது என்? நம்முடைய தண்டனையாகில் அதற்கு மூலம் தண்டனை பலிக்கும்படி பண்ணிப் பின்பு அநுக்ரஹத்தைச் செய்ய வேண்டுமோ?" என்றிருக்கும் ஸ்ரீ பூமிப்பிராட்டி. வாரணம் தொலைத்த - [4]தன்னைப் பெற வேண்டும் என்று இருப்பார் அடைவதற்குத் தடை

ஜ்ஞாநாநந்த அமலத்வாதிகளும், ஜ்ஞாநசக்தியாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யர்திகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்ய பூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாய்ச்சிமார்களும், நித்ய சூரிகளும், சத்ர சாமராதிகளும், திருவாசற்காக்கும் முதலிகளும், கணதிபரும், முக்தரும், பரமாகாசமும், பிரகிருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்" என்னும் முமுட்சுப்படி ஸ்ரீ சூக்திகளை இங்கு ஓர்தல் தகும். திருமந்திரம், சூத். 95, 96, 97.

1. "எம்மான் பாரணங்காளன்" என்ற இது, நாராயணன் என்ற திருப்பெயருக்குப் பொருளாமாறு யாங்ஙனம்? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாரணங்கு என்கையாலே' என்று தொடங்கி. ஸ்ரீ பூமிப் பிராட்டியைச் சொன்னது, நித்தியசூரிகளுக்கும் உபலக்ஷணமாய் நித்திய விபூதியைச் சொல்லுகிறது.

2. "எம்மான் பாரணங்காளன்" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'குற்றம்' என்று தொடங்கி. 'பொறுக்கைக்கு ஓர் உலகம்' என்றது, பொறுக்கைக்கு விஷயம் ஓர் உலகம் என்றபடி.

3. பொறுப்பிக்கைக்கு அடியான இவளுடைய அருள் சர்வேஶ்வரன், பிராட்டி என்னும் இவர்களுடைய அருளைக் காட்டிலும் பெரிது என்கிறார் "க்ருதாகஸ:" என்று தொடங்கி. க்ருதாகஸ: க்ஷாம்யதி - பாவம் செய்தவர்களைக் காப்பாற்றுகிற.

'தலை அறுக்கச் சொல்லுகிறது என்? கொடுக்கச் சொல்லுகிறது என்? என்றது, காகாசுரன் விஷயத்தில் பிராட்டி அருளிச்செய்ததைத் திருவுள்ளம் பற்றி.

4. "வாரணம் தொலைத்த" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன்னை' என்று தொடங்கி.

களாக உள்ள அவர் கர்மங்கள் குவலயாபீடம் பட்டது படும். பகையை அழித்தல் இந்தத் திருமந்திரத்தின் பொருளாமோ? என்னில், [1] முதலிலே தொடங்கி அதில் சொல்லிக்கொண்டு போருகிறது பாதுகாத்தலே அன்றோ; [2] அதற்குக் கண்ணை பிடுங்கி நோக்க வேண்டுமே. [3]“அவரக்ஷணே” என்னக்கடவது அன்றோ. [4]காரணன் தானே - இவற்றினுடைய சொரூபம்; இருத்தல் முதலானவைகள் தன் அதீனமாக உடையனாய் இருக்கையும் அதற்குப் பொருளே அன்றோ. (2)

---

1. முதலிலே - அகாரத்திலே. அதில் - திருமந்திரத்தில்.

2. காப்பாற்ற வேண்டுமேயானால் பகை போக்குதலைச் சொல்ல வேண்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ‘அதற்கு’ என்று தொடங்கி. அதற்கு - பாதுகாப்பதற்கு. ‘நோக்க வேண்டுமே’ என்றதன் பின் ‘ஆகையாலே இதுவும் திருமந்திரத்தின் பொருள் என்றபடி’ என்பதனைச் சேர்த்துக் கொள்க. “இதில் அகாரம் ஸகல சப்தத்துக்கும் காரணமாய், நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாய் இருக்கையாலே, ஸகல ஜகத்துக்கும் காரணமாய் ஸர்வ ரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது. ரக்ஷிக்கையாவது, விரோதியைப் போக்குகையும், அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும். இவை இரண்டும் சேதநர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும். ஸம்சாரிகளுக்கு விரோதி - சத்ரு பீடாதிகள்; அபேக்ஷிதம் அந்நபாநாதிகள். முமுக்ஷுக்களுக்கு விரோதி - ஸம்ஸார சம்பந்தம்; அபேக்ஷிதம் - பரமபத ப்ராப்தி. முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி - கைங்கர்ய ஹாநி; அபேக்ஷிதம் - கைங்கர்ய விருத்தி” என்பன முமுட்சுப்படி ஸ்ரீ சூக்திகள். திருமந்திரம், சூத். 35, 36, 37, 38.

3. நன்று; அகாரத்தாலே பாதுகாத்தல் சொல்லுமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் “அவ ரக்ஷணே” என்று தொடங்கி. பாதுகாத்தல் என்ற பொருளையுடைய ‘அவ’ என்ற தாதுவினின்றும் ‘அ’ என்பது பிறந்தது ஆகையாலே அகாரம் பாதுகாத்தல் என்ற பொருளைச் சொல்லும் என்றபடி. “அதில் பிரதமாக்ஷரமான அகாரம்-(அவ ரக்ஷணே) என்கிற தாதுவிலே பதமாய் நிஷ்பந்நமாகையாலே, ரக்ஷகனான ஈஸ்வரனுக்கு வாசகமாகக் கடவது. தாத்வர்த்தம் ரக்ஷணமாகையாலே, ரக்ஷணமாகிற தர்மம் ஸாஸ்ரயமுமாய் ஸவிஷயமுமாயல்லது இராமையாலே, அதுக்கு ஆஸ்ரயதயா பகவத் ஸ்வரூபம் தானே வந்து புகுந்தது” என்பது, பரந்தபடி - திருமந்திரப் பிரகரணம்.

4. நாராயண பதத்துக்கு அன்மொழித் தொகையில் பொருள் கூறுமிடத்து எல்லாப் பொருள்களிலும் அந்தரியாமியாக இருத்தல் என்ற கருத்துப் போதருமே அன்றோ? அவ் அந்தரியாமித்வத்தால் இவற்றினுடைய சொரூபம் இருத்தல் முதலானவைகளுக்குக் காரணனாக இருக்கும் தன்மை பெறப்படும். அங்ஙனம் பெறப்படுகின்ற காரணத்வத்தைக் “காரணன் தானே” என்ற சொல்லால் கூறுகிறார் என்றபடி. இதனையே, ‘இவற்றினுடைய’ என்று தொடங்கி அருளிச்செய்கிறார். அதற்கு - அம் மந்திரத்துக்கு. “அயநம் என்றது - இவற்றுக்கு ஆஸ்ரயம் என்றபடி. அங்ஙன் அன்றிக்கே, இவை தன்னை ஆஸ்ரயமாக வுடையன் என்னவுமாம். இவை இரண்டாலும் பலித்தது பரத்வ ஸௌலப்யங்கள். அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமும் ஆகவுமாம்” என்பது முமுட்சுப்படி, சூத். 98-101.

1039.

தானே உலகு எல்லாம், தானே படைத்து இடந்து
தானே உண்டு உமிழ்ந்து, தானே ஆள்வானே.

பொ - ரை:—உலகங்கள் எல்லாம் தானே, தானே உலகங்களை எல்லாம் உண்டாக்கி, பிரளயத்தில் நின்று இடந்து எடுத்து, தானே பிரளய காலத்தில் உண்டு, பிரளயம் நீங்கியவுடன் வெளி நாடு காண உமிழ்ந்து, தானே ஆள்கின்றான் என்பதாம்.

வி - கு:—தானே என்ற சொல், ஒவ்வொரு செயலைச் செய்கின்ற காலத்தும் துணைக்காரணம் வேறு இன்மையைத் தெரிவிக்க வந்தது.

ஈடு:—மூன்றாம் பாட்டு. [1] இறைமைத் தன்மைக்குரியதான பலவகைப்பட்ட பாதுகாத்தல்களைச் செய்யுமதனைச் சொல்லுகிறார்.

தானே உலகு எல்லாம்-[2]"எல்லாப் பொருள்களும் பிரஹ்மமாகவே இருக்கின்றன" என்றும், "அது நீ ஆகின்றாய்" என்றும் சொல்லக்கடவது அன்றோ. [3] தானே படைத்து இடந்து தானே உண்டு உமிழ்ந்து தானே ஆள்வான் ஆகையாலே, தானே உலகு எல்லாம் என்கிறது. [4]"தஜ்ஜலாந்" என்

---

1. பின் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். என்றது, நாராயண மந்திரத்துக்குப் பொருளாக மேல் பாசுரத்திலே சொல்லிப் போந்த இரக்ஷகத்வம் விவரிக்கப்படுகிறது இப்பாசுரத்தில் என்றபடி.

2. "தானே உலகெல்லாம்" என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'எல்லாப் பொருள்களும்' என்று தொடங்கி.

"ஸர்வம் கலு இதம் பிரஹ்ம", "தத் த்வம் அஸி"
என்பன சாந்தோக்கியம், 3: 4., 6: 12.

3. "தானே உலகெல்லாம்" என்றதற்குக் காரணத்தைக் காட்டுகிறார் "தானே படைத்து" என்று தொடங்கி.

4, தாம் கூறிய பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார் "தஜ்ஜலாந்" என்று. இது, "ஸர்வம் கலு இதம் பிரஹ்ம தஜ்ஜலாந்" என்ற சாந்தோக்ய உபநிடதத்திலுள்ள வாக்கியம். இந்த வாக்கியத்தை, தஜ்ஜத்வ தல்லத்வ ததநத்வங்களாலே இதம் ஸர்வம் பிரஹ்ம கலு என்று பிரித்துக் கூட்டிப் பொருள் காணல்வேண்டும். ஆக, தஜ்ஜத்வ தல்லத்வ ததநத்வை: இதம் ஸர்வம் பிரஹ்ம கலு என்றாற்போலே இருக்கிறது இத் திருப்பாசுரம் என்றபடி. தஜ்ஜத்வ - அந்தப் பரம்பொருளிடத்திருந்து உண்டாவதாலும், தல்லத்வ - அந்தப் பரம் பொருளில் லயம் அடைவதாலும், ததநத்வ-அந்தப் பரம்பொருளால் காப்பாற்றப் படுவதாலும், இதம் ஸர்வம் - காணப்படுகின்ற இவை எல்லாம், பிரஹ்ம கலு - அந்தப் பரம்பொருள் அல்லவா என்பது அச் சுருதி வாக்கியத்துக்குப் பிண்டப் பொருள். தத்அநத்வம் என்பதில் "அந" என்ற தாதுக்கு, உயிர்ப்

கிற சுருதியைப் போலே. [1] இங்குச் சொல்லுகிற தாதாத்மியம் சொருபத்தால் ஐக்கியம் சொல்லுகிறது அன்று; சரீர ஆத்ம பாவத்தாலே சொல்லுகிறது. [2] காரணமாக இருக்கும் தன்மையைச் சொல்லில் வேறுபடுகின்ற விகாரங்களுக்கு இடமாம் என்று சங்கித்து, சரீர ஆத்ம பாவத்தாலே சொல்லுகிறது. [3] சரீரத்திற்கு உளதாகும் பால்யம் யௌவனம் முதலானவைகள் ஆத்மாவினை அடையாதது போன்று, இவற்றைப் பற்றி வரும் விகாரங்கள் அவனுக்கு வாராது என்று குற்றம் தீண்டாமை சொல்லுகைக்காகச் சொல்லுகிறது. தானே படைத்து-[4] "மூலப் பகுதியானது பரம்பொருளில் ஒன்றுகிறது" என்கிறபடியே சூக்கும சித்து அசித்துக்களைச் சரீரமாக

பித்தல் - காப்பாற்றுதல் என்பது பொருள். "தஜ்ஜத்வ தல்லத்வங்களில், தச்சப்தம்–சூக்ஷ்ம சித் அசித் விசிஷ்ட ப்ரஹ்ம பரம்; ததநத்வத்தில், தச்சப்தம் - கேவல ஸ்வரூப மாத்ர பரம்; ஸ்வேந ரூபேண நின்று ஸ்த்திதிப்பிக்க வேண்டுகையாலே" என்ற சுருதப்பிரகாசிகை இங்குக் கருதல் தகும். இத் திருப்பாசுரத்தில் அழித்தல் சொல்லப்படவில்லையே? எனின், படைத்தலைக் கூறியவதனால் அழித்தல் பெறுதும். என்னை? எனின், படைத்தல் என்பது, அழித்தலை முன்னாகக் கொண்டுள்ளது ஒன்று ஆகையாலே.

> " அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
> ஏமம் ஆர்ந்த நிற் பிரிந்து
> மேவல் சான்றன எல்லாம்
> சேவலோங்கு உயர் கொடியோயே "

என்ற பரிபாடற் பகுதியானும் முத்தொழிலும் திருமாலுக்கே உரியது என்பதனை உணர்ந்து கொள்க. பரிபாடல், 4, 33 - 36.

1. "தானே உலகு எல்லாம்" என்பது, சொரூப ஐக்யம் சொல்லுகிறதோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இங்குச் சொல்லுகிற' என்று தொடங்கி. தாதாத்மியம் - ஒன்றுபட்டு இருத்தல்.

2. சரீர ஆத்ம பாவத்தாலே சொல்லுகிறது என்பது என்? "படைத்தான்" என்கையாலே, இச் சாமாநாதிகரண்யம் காரிய காரண பாவ நிபந்தனம் ஆனாலோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'காரணமாக இருக்கும்' என்று தொடங்கி. என்றது, காரியத்தில் உண்டாகும் விகாரங்கள் காரணமாக இருக்கும் இறைவனிடத்திலும் உண்டாகும் என்று சங்கித்து என்றபடி.

3. சரீர ஆத்ம பாவத்தாலே ஐக்யம் சொன்னால், விகாரம் முதலான குற்றங்கள் வாராதோ? எனின், 'சரீரத்திற்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. சூக்கும சித்து அசித்துக்களைச் சரீரமாகக் கொண்டு இருப்பதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் "மூலப்பகுதியானது" என்று தொடங்கி.

> " தமஃ பரேதேவ ஏகீபவதி "

என்பது, சுபால உபநிடதம்.

வுடைய தானே எல்லா உலகங்களையும் உண்டாக்கி. [1]அசித்தினும் வேறுபடாத நிலையுடைத்தாகையாலே, விரும்புவாரும் இன்றிக்கே அருளுடையவனாய்த் தானே உண்டாக்கினான். தானே இடந்து-பிரளயத்தால் மூடப்பட்ட பூமி 'என்னை எடுக்க வேண்டும்' என்று விரும்பியதால் அன்று, அழிந்த உலகத்தை நிறுத்தியது. தானே உண்டு-பிரளயம் வரப் புகுகின்றது என்று அறிவார் இலரே. உமிழ்ந்து-உள்ளே கிடந்து நோவுபடுமித்தனை அல்லது, 'எங்களை வெளி நாடு காணப் புறப்பட விட வேண்டும்' என்று இரவாதிருக்க, தானே உமிழ்ந்து. இப்படிப் பல விதமான பாதுகாத்தலைப் பண்ணுகையாலே தானே உலகு எல்லாம். "எல்லாப் பொருள்களும் பிரஹ்மமாகவே இருக்கின்றன." (3)

1040.

ஆள்வான் ஆழி நீர்க், கோள்வாய் அரவு அணையான்
தாள்வாய் மலர் இட்டு, நாள்வாய் நாடீரே.

பொ - ரை :—உலகத்திற்கெல்லாம் காரணமான தண்ணீரில் சயனித்துக்கொண்டு எல்லா உயிர்களையும் காப்பாற்றுமவன், வலிய வாயினையுடைய ஆதிசேஷ சயனத்திலே அறிதுயில் செய்யுமவன், அவனுடைய திருவடிகளில் மலர்களைக் கொண்டு அருச்சித்து நாள்தோறும் வணங்குங்கோள்.

ஈடு :—நாலாம் பாட்டு. [2]"தண்ணீரானது நரன் என்ற பரம்பொருளிடத்திருந்து உண்டாயிற்று, ஆதலால், தண்ணீர் நாரம் என்று சொல்லப்படுகிறது" என்னும் ஒரு நிர்வசனம் உண்டே அன்றோ இதற்கு; அவ்வழியாலே திருமந்திரத்திற்குப் பொருள் கொண்டு திருமந்திரத்தைச் சொல்லிக்கொண்டு

---

1. "தானே" என்றதிலுள்ள ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அசித்தினும்' என்று தொடங்கி. அசித்து - மூலப்பகுதி.

2. இப் பாசுரமும் திருமந்திரத்தின் பொருள் என்று அருளிச்செய்யா நின்று கொண்டு, பின் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

ஆபோ நாரா இதி ப்ரோக்தாஃ ஆபோவை நர ஸூநவஃ
அயநம் தஸ்ய தாஃ பூர்வம் தேந நாராயணஃ ஸ்ம்ருதஃ.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 4 : 6.

"நின் தோற்றமும் அகலமும் நீரின் உள"

என்பது, பரிபாடல், 4 : 30. "நாராயணன் நீரின்கட் காணப்படுதலாகிய இக் காரணம் பற்றி வந்தது" என்பது, பரிமேலழகருரை.

மலர்களைக்கொண்டு கைகூப்பி வணங்கி அடையுங்கோள் என்கிறார்.

ஆள்வான் - இவற்றை முழுதும் அடிமை கொள்ளுமவன். ஆழி நீர் ஆள்வான் - அடிமை கொள்ளும் வகை இருக்கும்படி. காரணமான தண்ணீரிலே படைத்தலில் நோக்குள்ளவனுய்த் திருக்கண்வளர்ந்தருளி, அந்நிலையிலே ஆத்மாக்களைக் காப்பாற்றியவன். கோள்வாய் - மிடுக்கையுடைய வாய் என்னுதல், பகைவர்கட்கு யமனுன வாய் என்னுதல். அரவு அணையான் தாள்வாய் மலர் இட்டு - [1] எளிதில் ஆராதிக்கத் தக்கவன் என்றபடி. ஆதிசேஷனைப் படுக்கையாகவுடையவன் திருவடிகளிலே செவ்விப் பூவினைப் பணிமாறி. நாள்வாய் நாடீரே - நாள் தோறும் வணங்குங்கோள். [2] அத் திருவனந்தாழ்வானுடைய பேறு நீங்களும் பெறலாம். (4)

1041.

நாடீர் நாள்தோறும், வாடா மலர் கொண்டு
பாடீர் அவன் நாமம், வீடே பெறலாமே.

பொ - ரை :—அன்று மலர்ந்த மலர்களைக் கொண்டு அருச்சித்து நாள்தோறும் வணங்குங்கோள், அவன் திருப்பெயர்களைக் கூறிப் பாடுங்கோள் ; அங்ஙனம் செய்யின் மோக்ஷத்தைப் பெறலாம் என்கிறார்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [3] இப்படிச் செவ்வி மாருத மலர்களைக் கொண்டு அவன் திருப்பெயரை உவகைக்குப் போக்கு வீடாகச் சொல்லுங்கோள்; அப்படிச் செய்யவே ஆத்மாவிற்கு ஒத்ததான கைங்கரியத்தைப் பெறலாம் என்கிறார்.

நாடீர் நாள்தோறும் - பசித்தபோது எல்லாம் உண்ணுமாறு போலே. வாடா மலர் கொண்டு - [4] உங்களுடைய பக்திக்

1. திருமந்திரத்தின் பொருளைச் சொல்லுகிறாராகில் "ஆழி நீர் ஆள்வான்" என்ன அமைந்திருக்க, "அரவணையான்" என்பதற்குக் காரணம் என் ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எளிதில் ஆராதிக்கத் தக்கவன்' என்று தொடங்கி.

2. "அரவணையான்" என்றதற்கு வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறார் 'அத் திருவனந்தாழ்வான்' என்று தொடங்கி.

3. பின் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

4. 'உங்களுடைய பக்திக்குத் தகுதியான மலர்களைக் கொண்டு' என்றது, "மார்வம் என்பதோர் கோயிலமைத்து, மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி ஆர்வம் என்பது ஓர் பூ இட வல்லார்க்கு" என்பதனுல் அன்பாகிய மலர் என்ன

குத் தகுதியான மலர்களைக் கொண்டு. பாடீர் அவன் நாமம் - [1]"அந்தச் சாமவேதத்தைப் பாடிக்கொண்டிருக்கிறான்" என்கிறபடியே முக்தர் சாமகானம் பண்ணுமாறு போலே, அவனுடைய திருப்பெயர்களைப் பக்தி முன்னாகப் பாடுங்கோள். [2]'நாடீர்' என்றதனால் மனத்தின் தொழிலைச் சொல்லிற்று. 'வாடா மலர் கொண்டு' என்கையாலே உடலின் தொழிலைச் சொல்லிற்று. 'பாடீர்' என்கையாலே வாக்கின் தொழிலைச் சொல்லிற்று. வீடே பெறலாமே - [3] உயிருக்கு உரியதான கைங்கரியத்தைச் செய்யவே [4] "தனது உருவத்தோடு தோன்றுகிறான்" என்றதனைப் பெறலாம். இனியதனைச் செய்யப் பெரியதனைப் பெறலாம். (5)

1042.

மேயான் வேங்கடம், காயாமலர் வண்ணன்
பேயார் முலை உண்ட, வாயான் மாதவனே.

பொ - ரை :—காயா மலர் போன்ற திருநிறத்தினையுடையவனும் பூதனையின் முலைப் பாலினை உண்ட திருவாயினை உடையவனும் திருமகள் கேள்வனும் ஆன எம்பெருமான் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கிறான் என்கிறார்.

வி - கு :—பேயார்-இகழ்ச்சியின் கண் வந்தது. மாதவன்-மேயான் என்க.

வுமாம். அன்றிக்கே, ஆன்மாவாகிய மலர் என்னவுமாம். அன்றிக்கே, "கந்தமார் மலர் எட்டும் இட்டு" எனவும், "இன மலர் எட்டும் இட்டு" எனவும் ஆழ்வார்கள் அருளிச்செய்வதனால் அந்த எட்டு மலர்கள் என்னவுமாம். மலர் எட்டாவன: செங்கழுநீர், செண்பகம், இருவாட்சி, பாதிரி, புன்னை, குருக்கத்தி, கருமுகை, தாமரை என்பன.

1. "ஏதத் ஸாம காயந் ஆஸ்தே"
என்பது, தைத்திரீய உபநிடதம்.

2. இத் திருவாய்மொழியின் அவதாரிகையில் 'முக்கரணங்களாலும் அவனைப் பற்றுங்கோள்' என்று அருளிச்செய்தது, இப் பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றியே என்க.

3. ஆனால், வீடு பெறுகைக்கு முக்கரணங்களாலும் பற்றுதல் சாதனமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உயிருக்கு' என்று தொடங்கி.

4. "ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே"
என்பது, சாந்தோக்கிய உபநிடதம்.

ஈடு:—ஆறும் பாட்டு. [1] நீர் சொன்னபடியே செய்யலாவது அடையத் தக்க இறைவனைக் கண்டால் அன்றோ? கண்டு அன்றோ அடைய வேண்டும்; என்ன, பிற்பாடரான நமக்காகத் திருமலையில் நின்றருளினான், அவனை அடையுங்கோள் என்கிறார்.

மேயான் வேங்கடம் - நீங்கள் சென்று அடையும் படியாகத் திருமலையிலே பொருந்தி வசிக்கிறவன். கண்ட அளவிலேயே வணங்கக் கூடியதாக இருக்குமோ? என்னில், காயா மலர் வண்ணன் - துரும்பும் எழுந்து ஆடி அடிமையிலே மீண்டல்லது நிற்க ஒண்ணாதபடியான வடிவு படைத்தவன். நம்மைச் சூழ்ந்துள்ள தீவினைகள் செய்வன என்? என்னில், பேயார் முலை உண்ட வாயான் - பூதனை பட்டது படுமத்தனை. மாதவனே - [2] நம்முடைய செயலைப் பாராதே அங்கீகரிப்பித்தற்கு அருகே இருப்பாரும் உண்டு. (6)

1043.

மாதவன் என்று என்று, ஓத வல்லீரேல்
தீது ஒன்றும் அடையா, ஏதம் சாராவே.

பொ - ரை:—திருமகள் கேள்வன் என்பதாகச் சொல்ல வல்லீர்கோளாகில் முன்பு செய்த பாவ கர்மங்கள் உங்களை வந்து அடைய மாட்டா; இனிமேல் உண்டாகும் தீய செயல்களும் உங்களை வந்து சாரமாட்டா.

வி - கு:—தீது - முன் செய்தவை. ஏதம் - பின் செய்பவை.

ஈடு:—ஏழாம் பாட்டு. [3] பிரீதியினாலே தூண்டப்பட்டவர்களாகி அடையவும், இனிமையோடே திருநாமம் சொல்லவும் மாட்டாதார் அந்தப்புர பரிகரமானார் வார்த்தையைச் சொல்

---

1. முதல் அடியினைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். என்றது, மேல் திருப்பாசுரத்தில் "நாடீர்" என்றதற்கு, நாடுதற்குரிய இடத்தினைக் காட்டுகிறார் இப் பாசுரத்தில் என்றபடி.

2. ஆனாலும், அவன் சுவதந்திரன் அன்றோ? எங்களுடைய முன்னைய நிலையினை நினைந்து "க்ஷிபாமி - தள்ளுகிறேன்" என்றானே? என்ன, 'நம்முடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "மாதவன் என்று என்று ஓத வல்லீரேல்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். "எண்ணும் திருநாமம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'பிரீதியினாலே தூண்டப்பட்டவர்களாகி' என்றும், "பாடீர் அவன் நாமம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி "இனிமையோடே திருநாமம் சொல்லவும்" என்றும் அருளிச்செய்கிறார். அந்தப்புர பரிகரமானார்

லவே, பக்தியைச் செய்தார் அடையும் பலத்தை நீங்களும் அடையலாம் என்கிறார்.

மாதவன் என்று என்று ஓத வல்லீரேல்-[1]நாராயண நாமத்தோடே இதனைச் சேர்த்துச் சொல்லப் பாருங்கோள். "நாரணமே" என்றாரே மேல். [2]உங்களுக்கு ருசி இல்லையாகிலும் பிறராலே தூண்டப்பட்டவராகி எப்பொழுதும் சொல்லவல்லீர்கோளாகில் என்பார் 'ஓத வல்லீரேல்' என்கிறார். [3]தீது ஒன்றும் அடையா-முன்செய்தவை எல்லாம் அழிந்து விடும். ஏதம் சாரா - இனித் தீய செயல் அடையாது. என்றது, முன்செய்த இருவினைகளையும் மறந்துவிடும். இனிச்செய்வனவற்றில் தனது நெஞ்சு செல்லாது. [4]மேலே கூறிய திருமந்திரமும் இப் பாசுரத்திற் சொன்ன ஸ்ரீமத் பதமும் தனித் தனியே பேற்றுக்

வார்த்தையாவது, "மாதவன்" என்பது. என்றது, வாடா மலர் கொண்டு நாடோறும் நாட முடியாமலும், வேங்கடம் மேயானை அடிதொழ முடியாமலும் இருப்பார்க்கும் ஒரு வழியினை அருளிச்செய்கிறார் இத் திருப்பாசுரத்தில் என்றபடி.

1. மேலே "நாரணமே" என்று சொன்னவர், இங்கு "மாதவன்" என்று வேறு ஒரு திருப் பெயரைச் சொல்லச் சொல்லுகிறாரோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாராயண நாமத்தோடே' என்று தொடங்கி. 'மேல்' என்றது, இத் திருவாய்மொழியில் முதல் திருப் பாசுரத்தை.

2. "ஓத" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'உங்களுக்கு' என்று தொடங்கி. என்றது, ஒருவர் முன்னே சொல்ல மற்றொருவர் பின்னே சொல்லுவதற்கு ஓதல் என்று பெயர். இதனால், நீங்கள் ருசி முன்னாகச் சொல்லாதொழியினும் ஒருவருடைய தூண்டுதலினாலாவது சொல்லவல்லீர்கோளாகில் என்கிறார் என்றபடி.

3. "தீது ஒன்றும் அடையா" என்னும் இவ்விடத்தில் "போய பிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசாகும் செப்பு" என்ற திருப்பாவைப் பாசுரம் நினைத்தல் தகும்.

4. "மாதவன்" என்ற திருப்பெயரை 'நாராயண நாமத்தோடே கூட்டிச் சொல்லுங்கோள்' என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'மேலே கூறிய' என்று தொடங்கி. 'ஸ்ரீமத் பதம்' என்றது "மாதவன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. மாதவன் என்று என்னாமல் "மாதவன் என்று என்று" என்று இரட்டித்துச் சொன்னதனால் திருமகள் சம்பந்தத்தை இருமுறை அநுசந்திக்க வேண்டும் என்று நியமிக்கின்றமை விளங்கும். இரண்டு பாகமாக உள்ள துவயம் என்னும் மந்திர ரத்தினத்தில் முன் வாக்கியத்திலும் பின் வாக்கியத்திலுமாக இரண்டு இடங்களில் திருமகள் சம்பந்தம் விளக்கமாக இருப்பதனால் இத் திருப்பாசுரத்தால் துவய அநுசந்தானம் செய்ய நியமிக்கிறார் ஆழ்வார் என்று கொள்ளவேண்டும். "எண்பெருக்கில் எண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி, **மாதவன் என்று த்வயமாக்கி**" என்பது, ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீ சூக்தி. பிரகரணம், 4. சூத். 10. இரண்டு இடத்திலும் திருமகள் சம்பந்தம் சொன்னதற்குக் கருத்தினை நம் பெரியோர்கள்

குப் போதியதாய பின்பு, இரண்டினையும் சேர்த்துச் சொன்னவர்களுக்குப் பேறு சொல்லவேண்டாவே அன்றே. (7)

1044.

சாரா ஏதங்கள், நீரார் முகில்வண்ணன்
பேர்ஆர் ஓதுவார், ஆரார் அமரரே.

பொ - ரை :—துன்பங்கள் கிட்ட மாட்டா; நீர் நிறைந்த மேகம் போன்ற திருநிறத்தினை யுடையவனுடைய திருப்பெயரைச் சொல்லுகின்றவர்கள் யாவர், அவர்கள் யாரேனுமாம், அவர்கள் தாம் நித்திய சூரிகள்.

வி - கு :—பேர் ஓதுவார் ஆர்? ஆர் ஆர் அமரர் என்க.

ஈடு :—எட்டாம் பாட்டு. [1] அதிகாரி நியதி இல்லை, யாரேனுமாகத் திருப் பெயரை எப்பொழுதும் சொல்லுவார் நித்திய சூரிகளோடு ஒப்பர்கள் என்கிறார்.

ஏதங்கள் சாரா - எந்த விதமான பொல்லாங்குகளும் வந்து கிட்ட மாட்டா. நீரார் முகில் வண்ணன் - நீராலே நிறைந்த மேகம் போலே இருக்கிற நிறத்தினையுடையவன். பேர் ஆர் ஓதுவார் - அவன் திருப் பெயரை எப்பொழுதும் சொல்லுவார் யாவர் சிலர். [2] ஆர் ஆர் அமரரே - அவர்கள் பிறவிகளிலே தாழ்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் இருந்த படியே நித்தியசூரிகளோடு ஒப்பர். [3] அந்த அந்தப் பிறவிகளோடு இருக்கும் போதே நித்திய சூரிகளோடு ஒப்பார்கள். (8)

விளக்கியுள்ளார்கள் : "இதில் முற் கூற்றால், பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈஸ்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது ; பிற் கூற்றால், அச்சேர்த்தியில் அடிமை இரக்கிறது" என்பது, முமுட்சுப்படி, சூத். 122. ஆக, திருவட்டாக்ஷர மகாமந்திரத்தின் அநுசந்தானத்தோடு மாத்திரம் நில்லாது, துவய அநுசந்தானமும் செய்யவல்லீர்களாகில் என்கிறார் என்றபடி.

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். "ஆர்ஆர்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அதிகாரி நியதி இல்லை' என்கிறார். என்றது, நாராயண மந்திரத்தையோ அதனோடு 'ஸ்ரீமத்' பதத்தைச் சேர்த்தோ சொல்லுகைக்கு நாங்கள் அதிகாரிகளோ? நீசரான எங்களுக்கு அத்துணை அதிகாரம் உண்டோ? என்று சங்கை கொள்வாரைப் பார்த்து இத் திருப்பாசுரம் சொல்லப்படுகிறது என்றபடி.

2. "ஆரார்" என்றது, அவர்கள் யாரேனும் ஆகிலும் என்றபடி.

3. 'இருந்தபடியே' என்றதனை விவரணம் செய்கிறார் 'அந்த அந்த' என்று தொடங்கி.

1045.

அமரர்க்கு அரியானை, தமர்கட்கு எளியானை
அமரத் தொழுவார்கட்கு, அமரா வினைகளே.

பொ - ரை :—பிரமன் முதலான தேவர்கள் காண அரியவனும், அடியார்கட்கு எளியவனும் ஆன இறைவனைப் பொருந்தி வணங்குகிறவர்கட்குப் பாவங்கள் வந்து சார மாட்டா என்கிறார்.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [1]பிறவி தொடக்கமானவைகள் காரணங்கள் ஆகாமற் போனாலும் வேறு பிரயோஜனங்களைக் கருதுவதற்குக் காரணமான பாவங்கள் செய்வன என்? என்னில், ஒரு பிரயோஜனத்தையும் கருதாதவராய்க் கொண்டு பற்றவே அவை தாமே போம் என்கிறார்.

அமரர்க்கு அரியானை - எத்துணையேனும் மேலான ஞானத்தை யுடையவரான பிரமன் முதலாயினோர்கட்கும் தங்கள் முயற்சியால் அடைய முடியாதவனை. [2]"எந்தப் பரமபத நாதனை அப்படிப்பட்ட பிரமனும் அறியமாட்டானோ" என்கிறபடியே. தமர்கட்கு எளியானை - வேறு பிரயோஜனங்களைக் கருதாதவர்கட்குச் சுலபன் ஆனவனை. என்றது, ஒரு குரங்காகவுமாம், ஒரு வேடுவிச்சியாகவுமாம், இருடிகளாகவுமாம், அவர்களுக்கு எளியனாக இருக்கும் என்றபடி.[3] "அந்தத் தசரத சக்கரவர்த்தியினுடைய புத்திரரான ஸ்ரீ ராமன் அந்தச் சுக்கிரீவனைச் சரணமாக அடைந்தார்" என்றும், [4]"மிகப் பெரிய ஒளியைப் பெற்றவரும் பகைவர்களைக் கொல்லுபவருமான அந்த இராமபிரான் சபரியை அடைந்தார்" என்றும்,

---

1. "அமரத் தொழுவார்கட்கு அமரா வினைகளே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பிரமன் முதலாயினோர்கட்கும் அறியப் போகாமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'எந்தப் பரமபத நாதனை' என்று தொடங்கி.

"யந்நாயம் பகவான் ப்ரஹ்மா ஜாநாதி புருஷோத்தமம்"

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 9: 59.

3. பிதா யஸ்ய புராஹ்ய ஆஸீத் சரண்யஃ தர்மவத்ஸலஃ
தஸ்ய புத்ரஃ ஶரண்யஃ ச ஸுக்ரீவம் ஶரணம் கதஃ.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 3: 20.

4. ஸஃ அப்யகச்சத் மஹாதேஜாஃ ஶபரீம் ஶத்ரு ஸூதநஃ
ஶபர்யா பூஜிதஃ ஸம்யக் ராமஃ தஶரதாத்மஜஃ.

என்பது. சங்க்ஷேப ராமாயணம்.

[1] "முனிவர்களுக்குள் சிறந்தவரே! இதற்கு முன் கட்டளையிட்ட காரியங்களை எல்லாம் முடித்து வந்தவர்களான நாங்கள் வேலைக்காரர்களாய்க் கிட்டினவர்களாய் இருக்கிறோம்" என்றும் சொல்லுகிறபடியே. [2] அமரத் தொழுவார்கட்கு - ஒரு பயனைக் கணிசியாதே அநந்யப் பிரயோஜனராய்க் கொண்டு தொழுமவர்க்கு. வினைகள் அமரா - வேறு பயன்களை விரும்புவதற்கு அடியான தீவினைகள் வந்து கிட்டமாட்டா. (9)

1046.

வினை வல் இருள் என்னும், முனைகள் வெருவிப்போம்
சுனை நல் மலர் இட்டு, நினைமின் நெடியானே.

பொ - ரை :— இருவினைகளும் கொடிய அறிவின்மையும் என்னும் கூட்டங்கள் அஞ்சி ஓடிப் போய்விடும்; நெடியானை நீர்ச்சுனைகளில் மலர்கின்ற சிறந்த பூக்களைக் கொண்டு அருச்சித்து நினையுங்கோள்.

வி - கு :— நெடியானை மலர் இட்டு நினைமின்; நினையின், வினை வல் இருள் என்னும் முனைகள் வெருவிப் போம் என்க. முனை - கூட்டம்.

ஈடு :— பத்தாம் பாட்டு. [3] அவ்வளவே அன்றிக்கே கைங்கரியங்களுக்குத் தடைகளாக உள்ளவைகளும் போம்; ஆனபின்பு, அவனை அடையுங்கோள் என்கிறார்.

வினை - கர்மம், வல் இருள் - பிரபலமான அஞ்ஞானம்; [4] அதற்கு அடியான தேக சம்பந்தம், இவற்றைப் பற்றி வருகிற ருசி வாசனைகளாகிற இத் திரள்கள். முனை - திரள்.

---

1. இமௌ ஸ்ம முநிஶார்த்தூல கிங்கரௌ ஸம் உபஸ்திதௌ
   ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை ஶாஸநம் கரவாவ கிம்.

என்பது, ஸ்ரீராமா. பால. 31 : 4.

2. அமரத் தொழுகின்றவர்களை "மிக்க சீர்த் தொண்டர்" என்பர் திருமங்கை மன்னன்.

3. திருப்பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி, மேல் திருப்பாசுரத்தைக் காட்டிலும் இத் திருப்பாசுரத்தில் சொன்ன "வினை வல் இருள் என்னும், முனைகள் வெருவிப் போம்" என்றதற்கு வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறார் 'அவ்வளவே அன்றிக்கே' என்று தொடங்கி. 'அவ்வளவே அன்றிக்கே' என்றது, வேறு பயன்களை விரும்புவதற்கு அடியான தீவினைகள் வந்து கிட்டாமை அன்றிக்கே என்றபடி.

4. "வினை வல்இருள்" என்று அவித்யை கர்மம் இவற்றைச் சொன்னது, வாசனை ருசி சரீர சம்பந்தங்களுக்கும் உபலக்ஷணம் என்று கொண்டு பொருள் அருளிச்செய்கிறார் 'அதற்கு அடியான' என்று தொடங்கி.

வெருவிப் போம்-'நமக்கு இது நிலம் அன்று' என்று அஞ்சிப் போம். அன்றிக்கே, முனே என்று முகமாய், முகம் கெட்டுப் போம் என்றுமாம். சுனை நல் மலர் இட்டு - விண்ணுலகில் உள்ள பொருள்களைத் தேடி இட வேண்டும் என்ன வேண்டா. நினைமின் - [1] சிந்திப்பே அமையும். உங்கள் மனம் நல்ல நிலையில் இருக்கும் சமயத்தில் ஒரு கால் நினையுங்கோள். [2] "நினைக்கிறேனே" என்கிறபடியே. நெடியானே - [3] நீங்கள் ஒருகால் நினைத்துவிட்டால், பின்னை அவன் தானே [4] "நானே நினைக்கிறேன்" என்கிறபடியே. உங்களை நினைத்தபடியே இருக்கும்; [5] ஒருகால் நினைத்து இவனைப் போல் கலங்க வேண்டுவது இல்லை அன்றோ அவனுக்கு. எல்லாக் குணங்களாலும் நிறைந்தவனுக்க் கர்மங்கட்கு வசப் படாதவனும் ஆகையாலே உருவ நினைத்தபடியே இருக்கும் அன்றோ அவன். (10)

1047.

நெடியான் அருள் சூடும், படியான் சடகோபன்
நொடி ஆயிரத்து இப் பத்து, அடியார்க்கு அருள் பேறே.

பொ - ரை :— நெடியவனாகிய எம்பெருமானுடைய திருவருளை அநுபவிக்கும் தன்மையரான ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப் பட்ட ஆயிரம் பாசுரங்களிலே இப் பத்துத் திருப்பாசுரங்களும் அடியார்களுக்குத் திருவருள் புரிகின்ற பேறாக இருக்கும்.

வி - கு :— சூடுதல் - தரித்தலாய், அருள் பெறுதலைக் குறிக்கின்றது.

---

1. "சிந்திப்பே அமையும்" என்றது, திருவாய்மொழி, 9. 1 : 7.

2. ஒருகால் நினைத்தால் போதியதாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நினைக்கிறேனே' என்று.

ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஶரீரே ஸதியோ நர:
தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஶ்வரூபம்ச மாமஜம்.

என்பது, ஸ்ரீவராகசரமம்.

3. "நினைமின்" என்றதற்குத் தகுதியாக, "நெடியான்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நீங்கள்' என்று தொடங்கி.

4. "நானே நினைக்கிறேன்" என்ற பொருள் அமைந்த சுலோகத்தை மேலே 19, ஆம் பக். காண்க. அந்தச் சுலோகத்திலே உள்ள "ஸ்மராமி" என்னும் நிகழ்காலச் சொல்லுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நினைத்தபடியே இருக்கும்' என்று.

5. அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'ஒருகால்' என்று தொடங்கி.

ஈடு:—முடிவில், [1] இப் பத்தும், கற்றவர்களை ஆழ்வார்தம்மைப்போலே பகவானுடைய திருவருளுக்குப் பாத்திரமாக்கும் என்கிறார்.

நெடியான் அருள் சூடும் படியான் சடகோபன்-சர்வேஸ்வரன் திரு அருளுக்குப் பாத்திரமாகும் தன்மையரான ஆழ்வார். [2] என்றது, "ஆற்ற நல்ல வகை காட்டும் அம்மான்" என்று தன் குணங்களையும் செயல்களையும் பொறுக்கப் பொறுக்க அநுபவிப்பித்துக்கொண்டு போந்தபடியை நினைத்து ஈடுபட்டார் மேல்; இப்போது அவன் கொடுத்த அருள் எல்லாம் உண்டு அறுக்க வல்லர் ஆனார் ஆயிற்று என்றபடி. நொடிதல் - சொல்லுதல். இப் பத்து அடியார்க்கு அருள் பேறே-இப் பத்துத்தானே, இதனைக் கற்றார்க்கு 'நெடியான் அருள் சூடும் படியான்' என்றதுவே பேறாக்கும். [3] ஈஸ்வரன் கொடுத்த பேறு ஆழ்வாரால் கொடுக்கமாட்டாமை இல்லையன்றோ.

திருவாய்மொழி நூற்றந்தாதி

கண்ணன் அடி இணையில் காதல் உறுவார் செயலைத்
திண்ணமுறவே சுருங்கச் செப்பியே—மண்ணவர்க்குத்
தான் உபதேசிக்கைத் தலைக்கட்டினான் மாறன்
ஆனபுகழ் சேர் தன் அருள்.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. ஈற்றடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஆற்ற நல்ல வகை காட்டும்" என்றவர் "அருள் சூடும் படியான்" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என்றது' என்று தொடங்கி. உண்டறுக்கவல்லரானார்; ஆதலால் சொல்லுகிறார் என்றபடி. "ஆற்ற நல்ல வகை" என்பது, திருவாய்மொழி, 4. 5 : 5.

3. "பேறே" என்ற ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஈஸ்வரன்' என்று தொடங்கி.

ஆறும் திருவாய்மொழி - "அருள் பெறுவார்"

முன்னுரை

—:o:—

ஈடு:—[1] பொய்ந்நின்ற ஞானம் தொடங்கி இவ்வளவும் வர, சர்வேஸ்வரனை ஆழ்வார் பின் தொடர்ந்தபடி சொல்லிற்று; இது தொடங்கி, ஆழ்வாரைச் சர்வேஸ்வரன் பின் தொடருகிறபடி சொல்லுகிறது.

[2] இப்படிப் பக்தியின் தன்மையை உபதேசித்துக் கை ஒழிந்தபின் தன் பக்கலிலே இவர்க்கு விடாய் பெருகுகிறபடியைக் கண்டு, இவர்க்கு முன்பே விடாய்த்துத் திருவாட்டாற்றிலே தங்குவேட்டையாக வந்து நிற்கிறவன் ஆகையாலே இவரைக் கொண்டு போகையிலே அவன் விரைவு மிக்கவன் ஆனான். [3] இவர் விடாயின் அளவு அன்றே அவனுடைய விடாயின் அளவு; [4] "ஒருகணமும் நான் உயிர் தரித்திருக்க மாட்டேன்" என்னும் ஏற்றம் உண்டே அன்றோ அவன் விடாய்க்கு.

---

1. பொதுவாக இயைபு அருளிச்செய்கிறார் 'பொய்ந்நின்ற' என்று தொடங்கி. "பொய்ந்நின்ற" என்றது, திருவிருத்தத்தில் முதல் திருப்பாசுரம். 'தொடர்ந்த படி சொல்லிற்று' என்றது, அவனைப் பார்த்துத் தம் குறைகளைச் சொல்லி இரந்தபடி சொல்லிற்று என்றபடி. 'இது தொடங்கி' என்றதன்பின் 'முனியே நான்முகனே என்னும் திருவாய்மொழி முடிய' என்றதனைச் சேர்த்துக்கொள்க.

2. மேல் திருவாய்மொழியோடே இத் திருவாய்மொழிக்கு இயைபு அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. தங்கு வேட்டை - பரஸ்தானம் செய்தல். 'விரைவு மிக்கவன் ஆனான்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என வரும் பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

3. விரைவு மிக்கவன்ஆதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இவர் விடாயின் அளவு' என்று தொடங்கி.

4. இதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'ஒரு கணமும்' என்று தொடங்கி.

> சிரம் ஜீவதி வைதேஹீ யதிமாஸம் தரிஷ்யதி
> நஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 66 : 10.

> "வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று
> ஆர்வுற்ற என்னை ஒழிய என்னின் முன்னம்
> பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்"

என்பது, இங்கு நினைத்தல் தகும். திருவாய்மொழி; 9. 6 : 10.

[1] 'ஆழ்வாரும் நாமுமாய் அநுபவிக்க வேண்டும்' என்று பாரித்து, 'அது செய்யுமிடத்தில், அநுபவத்துக்கு ஒரு பிரிவு வாராதபடி தன்னந் தனியே இருப்பது ஒரு தேச விசேடத்திலே கொடுபோய் வைத்து அநுபவிக்க வேண்டும்' என்று பாரித்து, 'அங்ஙனம் செய்யுமிடத்தில், இவர்க்குப் பரதந்திரனாய் இவர் ஏவுகிறபடி செய்தோமாக வேண்டும்' என்று இவர் அநுமதி ஒழியச் செய்ய மாட்டாதவனாய் நின்றான்; [2] சர்வேஸ்வரனைத் தாம் ஏவ மாட்டாரே தம்முடைய பாரதந்திரியத்தாலே.

[3] இப்படித் தம் பக்கலிலே மிக்க காதலைச் செய்கிறவனுடைய மேன்மையையும், அப்படிப்பட்ட மேன்மையை யுடையவன் தம் பக்கல் பரதந்திரனாய்த் தாழ நிற்கிறபடியையும் நினைந்து, [4] இதற்கு உசாத் துணையாக இவ் உலக மக்களைப் பார்த்த இடத்து, அவர்கள் ஐம்புல இன்பங்களுக்கு வசப்பட்டவர்களாய் அவற்றோடே பணி போந்திருந்தார்கள்: அவனைப் பார்த்த இடத்தில், மிக்க காதலையுடையவனாய் முன்னடி

---

1. விரைந்தவன் ஆனால் கொடு போக ஒண்ணாதோ? விளம்பத்திற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆழ்வாரும்' என்று தொடங்கி. 'இவர்க்குப் பரதந்திரனாய்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகிற "அது நமது விதிவகையே" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

2. அவன் அப்படி நின்றானாயின், இவர் அவனைக் கட்டளையிடலாகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரனை' என்று தொடங்கி.

3. நன்று; இப்படி அவன் பரதந்திரனாய்த் தாழநிற்கிற படியைத் தாமே அநுபவியாமல் நெஞ்சுக்குச் சொல்லுவான் என்? என்ன, 'இப்படி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'மிக்க காதலைச் செய்கிறவனுடைய' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "குடிகொண்டான் - மெய்ந்நின்று கமழும்", "நிலைபேரான்" என்பன போன்று வருகின்ற பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி. "ஆழியான்", "கைந்நின்ற சக்கரத்தன்", "புள்ளூர்தி" என்பன போன்று வருகிற பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி 'மேன்மையையும்' என்கிறார். 'பரதந்திரனாய்த் தாழ நிற்கிற படியையும்' என்றது, "அது நமது விதிவகையே" என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

4. திருப் பாசுரங்கள்தோறும் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்வதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இதற்கு' என்று தொடங்கி. இதற்கு - இந்த அநுசந்தானத்துக்கு. "நாட்டாரோடு இயல்வு ஒழிந்து" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'இவ் உலகமக்களைப் பார்த்து' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். பணிபோந்திருந்தார்கள் - அதுவே தொழிலாக இருந்தார்கள்.

தோற்றுதே இருக்கிறவன் ஆகையாலே அவன் இதற்கு ஆளாக மாட்டிற்றிலன்; இனி அவன் திருவருளுக்கு இலக்கான தாமும் தம்மோடு [1] உடன் கேடான நெஞ்சுமேயாய் இருந்தது; 'அந் நெஞ்சினைக் குறித்து, அவனுடைய மேன்மை இருந்தபடியும், அப்படி மேன்மையை யுடையவன் நம்பக்கல் தாழ நின்ற நிலையும், [2] நாம் பெற்ற பேற்றின் கனம் இருந்த படியும் எல்லாம் கண்டாயே! நம் காரியம் விழுந்தபடி கண்டாயே!!' என்று இதனைத் தம் திருவுள்ளத்தோடே கூட்டி இனியர் ஆகிறார்.

[3] இதற்கு முன்பெல்லாம், சர்வேஸ்வரன் ஆகிறான் எல்லாரையும் ஏவுகின்றவனாய்ச் சுவதந்திரனாய் இருப்பான் ஒருவன் என்று இருந்தார்; இப்போது அங்ஙன் அன்று; அடியார்கட்குப் பரதந்திரப்பட்டு இருப்பதுவே அவனுடைய தன்மை என்கிறார். [4] முன்பு எல்லாம், தம்மாலே பாரதந்திரியத்தை இழந்தார்; இப்போது, 'அவனாலே பாரதந்திரியத்தை இழக்கிறார். [5] அதுதான், "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் சொல்லிற்றிலையோ? என்னில், அதைக்காட்டிலும் இதற்கு வாசி உண்டு; [6] "அடியார் தம் அடியனேன்" என்று காரணத்தோடே சொல்லுகிறார்.

---

1. உடன்கேடான - இன்ப துன்பங்களுக்கு உட்பட்டிருக்கிற.

2. 'நாம் பெற்ற பேற்றின் கனம் இருந்த படியும்' என்றது, "நாராயணனை நண்ணினம்", "பெறுத பயன் பெறுமாறு", "காட்டித் தன் கனை கழல்கள்" என்பன போன்ற பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி. கூட்டி - அநுசந்தித்து.

3. இத் திருவாய்மொழிக்கு முதலில் 'பொய்ந்நின்ற' என்று தொடங்கிப் பொதுவாக அருளிச்செய்த அவதாரிகையை விவரணம் செய்கிறார் 'இதற்கு முன்பெல்லாம்' என்று தொடங்கி. இதற்கு முன்பெல்லாம் - இத் திருவாய்மொழிக்கு முன்னர் எல்லாம்.

4. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'முன்பெல்லாம்' என்று தொடங்கி. முன்பெல்லாம் - மயர்வு அற மதி நலம் அருளுவதற்கு முன்பு எல்லாம் என்றபடி.

5. அதுதான் - அந்தப் பாரதந்திரியம் தான்.

6. அந்த வேற்றுமையை அருளிச்செய்கிறார் "அடியார்" என்று தொடங்கி. என்றது, பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் ஆகிற காரணத்தோடே சொல்லுகிறார் என்றபடி. தாம் அடியார்க்கு அடிமையாகிற சேஷத்வத்திலே நிற்கையாலே அவன் பரதந்திரனானான் என்று அந்தக் காரணத்தோடே சொல்லுகிறார் என்றவாறு.

1048.

அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு ஆழியான்
அருள் தருவான் அமைகின்றான்; அது நமது விதிவகையே;
இருள் தரு மா ஞாலத்துள் இனிப் பிறவி யான் வேண்டேன்;
மருள் ஒழி நீ, மடநெஞ்சே! வாட்டாற்றான் அடி வணங்கே.

பொ - ரை :—தனது திருவருளைப் பெறுதற்கு உரியவரான அடியவர்களுக்கு அடிமைப்பட்டிருக்கின்ற எனக்கு, சக்கராயுதத்தைத் தரித்த எம்பெருமான் திருவருளைச் செய்வதற்குச் சமைந்திருக்கிறான்; அங்ஙனம் அவன் திருவருளைச் செய்வதும் நாம் விதித்த கட்டளையின் படியே யாம்; ஆதலால், அறிவின்மையை உண்டு பண்ணுகின்ற பெரிய இந்த உலகத்தில் இனிப் பிறவியை யான் விரும்பேன்; அறியாமை பொருந்திய மனமே! நீ மயக்கம் நீங்கு; திருவாட்டாற்றில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கு என்கிறார்.

வி - கு :—அடியனேற்கு ஆழியான் அருள் தருவான் அமைகின்றான்; அது நமது விதிவகையே; ஆதலால், இனிப் பிறவி யான் வேண்டேன், மடம் நெஞ்சே! மருள் ஒழி, வாட்டாற்றான் அடி வணங்கு என்கிறார்.

ஈடு :—முதற்பாட்டு. [1] ஈஸ்வரன் நம்மை ஏற்றுக் கொள்கையிலே ஒருப்படாநின்றான்; அது தானும் நாம் விதித்தபடி செய்வானாய் இராநின்றான் என்கிறார்.

அருள் பெறுவார் அடியார் தம் அடியனேற்கு - [2] காரணம் தான் இருக்கிறபடி. [3] சர்வேஸ்வரன் செய்யும் மிக்க அருளுக்குப் பாத்திரமாக இருப்பவர்கள் சிலர் உளர்; அவர்கள் நமக்கு ஸ்வாமிகள். [4] அவர்கள் பக்கலிலே அவன் செய்த அருள்

---

1. முன் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மேலே 185-ஆம் பக். அவதாரிகையில் 'காரணத்தோடே சொல்லுகிறார்' என்றதனைக் காட்டுகிறார் 'காரணம் தான் இருக்கிறபடி' என்று. என்றது, அடியார் தம் அடியன் ஆகையாலே நமது விதி வகையே அருள் தருவான் அமைகின்றான் என்றபடி.

3. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி.

4. 'காரணம் தான் இருக்கிறபடி' என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'அவர்கள் பக்கலிலே' என்று தொடங்கி. எட்டாம்பத்தில் "நெடுமாற்கு அடிமை" என்ற திருவாய்மொழி பாடியதன் பயனை இன்று பெற்றேன் என்கிறார் போலும்.

நம்மளவும் வர வெள்ளம் கோத்தது காண் என்கிறார். [1]"என்னை வைகின்றவர்களையும் வெறுக்கிறவர்களையும் கொடிய தன்மையுள்ளவர்களையும் பரிசுத்தம் இல்லாதவர்களையும் மனிதர்களில் தாழ்ந்தவர்களையும் என்னை அடைதற்குத் தடைகளாக உள்ள பிறவிகளிலே சம்சாரத்திலே நான் போடுகிறேன்" என்கிறபடியே, குழந்தைதீம்பிலே கை வளர்ந்தால் மாற்றைக்கொண்டு "வாய் வாய்" என்பாரைப் போலே, அவனாலே சீறப்படுவார் சிலர் உளர்; அவர்களைப் போல் அன்றியே, [2]"என்னை அடைவதற்குரிய புத்தி யோகத்தை அவர்களுக்கு நான் கொடுக்கிறேன்" என்கிறபடியே, அவனுடைய அருளுக்குப் பாத்திரமாய் இருப்பார் சிலர் உளர்; அவர்கள் பக்கல் செய்யும் அருளை நம் பக்கலிலே செய்தான். அன்றிக்கே, [3]அரசனுக்குப் புறம்பு ஒரு முறையிலே செல்லாநின்றாலும், தன் ஐஸ்வர்யத்தையும் கொடுத்துத் தன் உடம்பையும் கொடுக்குமே அன்றோ மனைவி விஷயத்தில்; அப்படியே அவன் தன்னை முற்றாட்டாகக் கொடுத்து அநுபவித்துத் தான் பரதந்திரனாக இருக்கும்படி இருப்பார் சிலர் உளர்; அவர்கள் பக்கல் செய்யும் அருளை என் பக்கலிலே செய்தான் என்னுதல்.

அருள் பெறுவார் அடியார்தம் அடியனேற்கு - [4]இருவர்க்கும் நிரூபகம் இருக்கிறபடி. [5]இவர் அருள் பெறுவார் அடியார் தம் அடியார்; அவன் ஆழியான்; இருவர்க்கும் நிரூபகர்

---

1. "அடியார்" என்று மாத்திரம் கூறாமல் "அருள்பெறுவார்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என்னை' என்று தொடங்கி.

> தாந் அஹம் த்விஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
> க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு.

என்பது, ஸ்ரீ கீதை, 16 : 19.

2. தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம்
> ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே.

என்பது, ஸ்ரீ கீதை, 10 : 10.

3. "அருள்" என்பதற்கு, கொடை என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அப் பொருளைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிறார் 'அரசனுக்கு' என்று தொடங்கி. அருள்தல் - கொடுத்தல்.

4. "அருள்பெறுவார் அடியார் தம் அடியனேற்கு" என்றதனோடு "ஆழியான்" என்றதனையும் கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'இருவர்க்கும் நிரூபகம் இருக்கிறபடி' என்று.

5. அதனை விவரணம் செய்கிறார் 'இவர்' என்று தொடங்கி.

அடியார்களே காணும். அடியனேற்கு-[1] "விடுமாறு என்பது என்" என்றும், "நீக்கம் இல்லா அடியார் தம் அடியார் அடியார் அடியார் எம் கோக்கள்" என்றும், "தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்க" என்றும் நான் சொன்ன அவ்வார்த்தையையே நினைத்திருந்தான் காண் அவன்; [2] "அடிகள் அடியே நினையும் அடியவர்கள் தம் அடியான்" என்கிறபடியே, இதனை ஆயிற்று இவர் தமக்குச் சொரூபமாக நினைத்திருப்பது.

ஆழியான் அருள் தருவான் அமைகின்றான் - [3] சர்வேஸ்வரன் நம் பக்கல் முழுநோக்காக நோக்கி மிக்க அருளைச் செய்வானாகப் பாரியாநின்றான். [4] திரு ஆழியை ஒரு கண்ணாலே பார்ப்பது, இவரை ஒரு கண்ணாலே பார்ப்பது ஆகாநின்றான்; "விடல் இல் சக்கரத்து அண்ணலை மேவல் விடல் இல்" என்கிறபடியே, கையில் திரு ஆழியை விடில் அன்றோ உம்மை விடுவது என்னாநின்றான். [5] அவர்களை இட்டுத் தன்னை நிரூபிக்க வேண்டும்படி இருத்தலின் 'ஆழியான்' என்கிறார். [6] "எங்களோடு ஒத்தவராக ஆகக் கடவர்" என்கிறபடியே, அவர்கள்

1. உம்மை அடியார் தம் அடியராக அவன் அறிந்தபடி யாங்ஙனம்? என்ன, 'விடுமாறு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'விடுமாறு' என்று தொடங்கி அருளிச்செய்யும் மூன்று மேற்கோள்களும் திருவாய்மொழி எட்டாம்பத்து பத்தாம் திருவாய்மொழியில் உள்ளவை.

2. இவர்தாம் தம்மை அடியார்தம் அடியனாக நினைத்திருப்பரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடிகள்' என்று தொடங்கி. "அடிகள்" என்பது, பெரிய திருமொழி, 2. 6 : 10.

3. மேலே, அடியாரை இட்டு நிரூபிக்கும்படி இருக்கும் என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்யாநின்றுகொண்டு, சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி.

4. "ஆழியான்" என்பதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'திரு ஆழியை' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'விடலில் சக்கரத்து' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2 9 : 11.

5. 'இருவர்க்கும் நிரூபகர்' என்று மேலே அருளிச்செய்ததனை விவரணம் செய்கிறார் 'அவர்களை இட்டு' என்று தொடங்கி.

6. "அடியார், அடியனேன்" என்ற பன்மை ஒருமைகளுக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'எங்களோடு' என்று தொடங்கி. என்றது, எங்கள் எல்லாரிடத்திலும் உண்டான தேவர் திருவருளுக்கு விபீஷணன் ஒருவனுமே விஷயமாவன் என்றபடி.

தஸ்மாத் க்ஷிப்ரம் ஸஹ அஸ்மாபி: துல்யோபவது ராகவ
விபீஷணோ மஹாப்ராஜ்ஞ: ஸகித்வம் சாப்யுபைது ந:

என்பது, ஸ்ரீராமா. யுத். 19 : 38. சுக்கிரீவன் கூற்று.

எல்லார் பக்கலிலும் செய்யும் அருளை என் ஒருவன் பக்கலிலும் செய்யாநின்றான். [1] அவர்கள் அருள்பெறுவார் அடியாரான அடியாராயிற்று; இவனும் அருள் தருவான் அமைகின்றான் ஆயிற்று. அமைகின்றான் - [2] பாதி உடன்பாடு குறை அற்றது. அருளைக் குறை அறத் தருவதாகப் பாரியாநின்றான். அவன் மிக்க அருளைச் செய்வதாகப் பாரியாநின்றானாகில் அவன் தான் சர்வேஸ்வரனாகில் பின்னைக் [3]கண்ணழிவு என்? என்னில்,

அது நமது விதி வகையே - அது செய்யுமிடத்தில் நான் சொன்னபடி செய்தானாக வேண்டி இராநின்றான். அது நமது விதி வகையே என்பதற்கு, 'அது நமது புண்ணியத்திற்குத் தகுதியாக அன்றோ' என்று முன்னைய பெரியோர்கள் நிர் வஹிப்பர்கள். [4]இதனை எம்பெருமானார் கேட்டருளி, "இத் திரு வாய்மொழியில் மேல் ஓடுகிற ரசத்தோடு சேராது, நாம் விதித்த படியே செய்வானாய் இருந்தான் என்கிறார்" என்று அருளிச் செய்வர். [5]"நான் எல்லா அடிமைகளையும் எப்போதும் செய் வேன்" என்று பாரித்துப் போந்தவர்தாமே [6] "தேவரீரே மனத்திற்குப் பிடித்தது ஒரு இடத்தினைப் பார்த்து இந்த

---

1. அடியாரும் அவனுமான இருவருடைய தகுதிகளையும் அருளிச் செய்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி.

2. "அமைகின்றான்" என்றதன்பின் "அது நமது விதி வகையே" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'பாதி உடன்பாடு' என்று தொடங்கி. 'பாதி உடன்பாடு குறை அற்றது' என்றது, அவனுடைய பாரிப்பு மாத்திரமேயாய், இவருடைய அநுமதி இல்லாமை இருக்கை அன் றிக்கே இவரும் உடன்படப் பெற்றார் என்றபடி.

3. 'கண்ணழிவு என் என்னில்' என்றது, அவனுக்குக் கண்ணழிவு என்? என்னில் என்றபடி. கண்ணழிவு - விளம்பமும், குறையும்.

4. "அது நமது விதிவகையே" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதல் வகையில் விதி என்பதற்கு, சொல் என்பது பொருள். விதிவகை - சொன்னபடி. இரண்டாவது வகையில் விதி என்பதற்கு, புண்ணியம் என்பது பொருள். இவற்றுள் தமது திருவுள்ளம் முதல் வகையேயாம். தமது கருத்துக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'இதனை எம் பெருமானார்' என்று தொடங்கி.

5. எம்பெருமானார் நிர்வாகத்தைத் திருஷ்டாந்தத்தோடு விவரணம் செய்கிறார் 'நான் எல்லா அடிமைகளையும்' என்று தொடங்கி.

பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஸ்ச தே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31: 25.

6. பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஸதம் ஸ்திதே
ஸ்வயந்து ருசிரே தேஸே க்ரியதாம் இதி மாம் வத.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15: 7.

இடத்தில் கட்டுக என்று என்னை நியமித்தருள வேண்டும்" என்று பார்த்திருந்தாற் போலே, இவர் சொன்னபடி செய்வானாய் இராநின்றான். [1] நமது சொல் வகையே என்னுமல் "நமது விதி வகையே" என்பான் என்? என்னில், விதியை மீறுவதில் பாபத்துக்கு அஞ்சுவாரைப் போலே அஞ்சாநின்றான். தான் சுதந்திரனாய் நினைத்தபடி செய்கைக்குத் [2] தன் பக்கல் குறை வற்றாலும் இத்தலையில் இச்சை ஒழியக் கொடு போகானே அவன்; [3] புருடோத்தமன் ஆண்மையில் குறை வரும்படி செய்யானே. நமது விதி வகையே. [4] "சேனை முதலியாராலே எந்தக் காரியம் எந்தப்படி விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்தக் காரியத்தை அப்படியே நிறைந்த அருளாலே அநுமதி செய்கின்றவனான உன்னை" என்கிறபடியே.

[5] இது பட்டர் தாமே அருளிச் செய்ய நான் கேட்டேன் என்று அருளிச்செய்தார். [6] **சேனை முதலியார்** சட்டையும்

---

1. "விதிவகையே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நமது சொல்வகையே' என்று தொடங்கி.

2. மேலே, இவரிடத்துள்ள காதலாலே இவர் நியமித்தபடி செய்வானாய் இராநின்றான் என்று அருளிச்செய்தார்; பொருளின் உண்மை நிலை பார்க்கும்போதும் இத் தலையில் இசைவும் வேண்டும் என்கிறார் 'தன்பக்கல்' என்று தொடங்கி. என்றது, புருஷார்த்தம் ஆகைக்காக என்றபடி.

3. இவர் இசைந்த பின்னரே கொடுபோக வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் எற்றிற்கு? என்ன, 'புருடோத்தமன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, இவர் விரும்பாமலே கொடுத்தால் அவனுடைய உயர்வற உயர்ந்த உயர்விற்குத் தாழ்வாம் என்றபடி.

4. அவன் அடியார்கட்குப் பரதந்திரனாய் இருப்பன் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சேனைமுதலியாராலே' என்று தொடங்கி.

த்வதீய புக்தோஜ்ஜித ஶேஷ போஜிநா
த்வயா நிஸ்ருஷ்டாத்ம பரேண யத் யதா
ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத்
ததா அநுஜாநந்தம் உதார வீக்ஷணை:.

என்பது, தோத்திரரத்நம், 42.

5. இச் சுலோகத்தின் பொருளை ஒரு பெரியாருடைய சம்வாதத்தாலே விளக்குகிறார் 'இது, பட்டர்தாமே' என்று தொடங்கி. அருளிச்செய்தார்' என்றது, நஞ்சீயரை.

6. சர்வேஶ்வரன் தான் செய்யும் படைப்பு முதலான காரியங்களை எல்லாம் சேனைமுதலியார் பக்கலிலே வைத்து, தானும் பிராட்டிமாருமாக இருக்கிற அளவிலே, சேனைமுதலியார் அறிவித்ததனைத் திருக்கண்களாலே அநுமதி தருவன் என்பதே இச் சுலோகத்துக்குக் கருத்து. இவர் அந்தப்புரத்துக்குப் போதற்குக் காரணத்தையும், இவர் அங்குப் போனால் இவரைப் பார்ப்பது அவனுக்கு உகப்பு ஆகையாலே இன்பத்துக்கு இடையூறு ஆகாது என்னுமதனை

மயிர்க்கட்டும் கையும் பிரம்புமாய் வந்து புகுரப் புக்கவாறே, நாய்ச்சிமாரும் தானுமாய் விருப்பின்படி இருக்குமது தவிர்ந்து, நாய்ச்சிமாரும் சிங்காதனத்திலே ஒரு மூலையிலே ஒதுங்கத் தானும் விநயத்தோடு இருக்குமாயிற்று. வயது சென்ற சேனாபதிகளைக் கண்ட அரசர்களைப் போலே. [1]இவர் தாமும் 'இவ் இருப்புக்குத் தண்ணீர்த்துரும்பாக ஒண்ணாது' என்று உலகினை நிர்வாகம் செய்வதற்கு வேண்டுமவற்றைப் பாசுரப் பரப்பு அற விண்ணப்பம் செய்வார் ஒருவர் ஆயிற்று. [2]பிராட்டிமாரோடு இருக்குமதிலும் இனிதாய் இருக்குமே அன்றோ அவனுக்கு இவர் தம்மைக் காண; [3]"பிரியத்தாலே" அன்றோ. [4]"இன்னானைப் பிரமன் ஆக்க வேண்டும், இன்னானை மாற்ற வேண்டும்' என்று வேண்டுமவற்றைச் சுருங்க விண்ணப்பம் செய்வர்; [5]'ஐயர் யாதொன்று சொல்லிற்று அவை எல்லாம் அப்படியே' என்று கண்களாலே மேலெழுத் திட்டுக் கொடுக்கும்.

யும், "யத்யதா" என்று ஒருமையாக அருளிச்செய்ததற்குக் காரணத்தையும் அருளிச்செய்கிறார் 'சேனைமுதலியார்' என்று தொடங்கி. 'வயது சென்ற சேனாபதிகள்' என்கிற இது, போகைக்குக் காரணம். 'யாநி' என்னாமல் "யத்" என்றது ஒருமை ஆகையாலே 'பாசுரப் பரப்பு அற' என்றது. 'வயது சென்ற சேனாபதிகளைக் கண்ட அரசர்களைப் போலே' என்னும் இவ்விடத்தில் "வான் இள அரசு", "விண்ணாட்டவர் மூதுவர்" என்பனவற்றை நினைப்பது.

1. பாசுரப் பரப்பு அற விண்ணப்பம் செய்கைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இவர் தாமும்' என்று தொடங்கி.

2. இவர் அடக்கத்தாலே தண்ணீர்த்துரும்பு ஆகாமல் பாசுரப் பரப்பு அறச் சொன்னாலும் அவன் இவரைக் கண்டால் இருக்கும்படி என்? என்ன, 'பிராட்டிமாரோடு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'பிரியத்தாலே' என்று. 40-ஆம் பக்கத்திலுள்ள கீழ்க்குறிப்பு சுலோகம் காண்க.

4. 'பாசுரப் பரப்பு அற விண்ணப்பம் செய்வார்' என்றதனை விவரணம் செய்கிறார் 'இன்னானை' என்று தொடங்கி.

தவம்புரிந்த சேதநரைச் சந்திரன் ஆதித்தன்
சிவன் பிரமன் இந்திரனாச் செய்கை—உவந்து
திருப் பாடக மருவும் செங்கண்மால் தன் மார்பு
இருப்பாள் தக வுரையாலே.

என்ற திவ்ய கவியின் திருப்பாசுரம் இங்கு ஒருபுடை ஒப்பு நோக்கலாகும்.

5. சுலோகத்திலே உள்ள "உதார வீக்ஷணை: ததாநுஜாநந்தம் - நிறைந்த திரு அருளாலே அப்படியே அநுமதி செய்வன்" என்றதற்கு, 'வயது சென்ற சேனாபதியைக் கண்ட அரசர்களைப் போலே' என்றதற்குத் தகுதியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'ஐயர்' என்று தொடங்கி.

இவ் வார்த்தை அருளிச்செய்தபோது [1] **கிடாம்பி ஆச்சானோடு** அல்லாதாரோடு வாசி அறக் குமிழி நீர் உண்டது; ஆச்சான் தான் பட்டரிடத்தில் மிகுந்த அன்பினை வைத்திருப்பர். [2] **இளையாழ்வான், ஆச்சானைப்** பார்த்துப் 'பட்டரை அடைந்த அடியவர்கள் எல்லாரைக் காட்டிலும் நீர் மிகத் தாழ நின்று பழகுவது என்?' என்று கேட்க, [3] 'நீ அன்று கண்டிலைகாண், **எம்பெருமானார்**, பட்டர்கையிலே புத்தகத்தைக் கொடுத்துத் திரு முன்பே ஒரு சுலோகத்தை விண்ணப்பம் செய்வித்துத் திருப் பிரம்புக்குப் புறம்பாகக் கொண்டு புறப்பட்டுச் சுற்றும் பார்த்தருளி, நம்முடையார் அடங்கலும் நம்மை நினைத்திருக்குமாறு போலே இவனை நினைத்திருங்கோள்' என்று அருளிச் செய்தார்.

[4] அருளுகிறான் சர்வேஸ்வரனாகில் அதுதான் நாம் விதித்தபடி செய்வானாய் இருந்தானாகில் இனிக் கண்ணழிவு என்? என்ன, இருள் தரும் மா ஞாலத்தே - இனி, நீயும் இசையும் இத்தனையே வேண்டுவது; இதுவே கண்ணழிவு. [5] நான் அவன் வழியே போவதாகப் பார்த்தேன், நீயும் அவன் வழியே போகப் பாராய்! [6] நீர்தான் அவன் வழியே போக வேண்டுகிறது என்? என்ன, இருள் தரும் மா ஞாலமாக இருந்ததே. இவ் உலகமானது இருக்க இருக்க அறிவின்மையைத் தருவது ஒன்று

---

1. 'கிடாம்பி ஆச்சானோடு' என்றது, பட்டருக்குப் பிரியரான கிடாம்பி ஆச்சானோடு என்றபடி. அல்லாதாரோடு - பட்டருடைய சிஷ்யர்களான அல்லாதாரோடு. குமிழி நீர் உண்ணல் - ஆழங்கால் படுதல்.

2. இளையாழ்வான் ஆச்சானைப் பார்த்துக் கேட்க என்று கூட்டுக. இளையாழ்வான் - கிடாம்பி ஆச்சானுடைய சிஷ்யர்.

3. அதற்கு ஆச்சான் விடை அருளிச்செய்கிறார் 'நீ அன்று' என்று தொடங்கி. எம்பெருமானார் அருளிச்செய்தார் என்று கூட்டுக. ஆகையாலே போர அன்பு செலுத்துகிறேன் என்றபடி.

4. மேலுக்கெல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அருளுகிறான்' என்று தொடங்கி. "மருள் ஒழி நீ மடநெஞ்சே" என்னுமளவும் கடாக்ஷித்து, 'இனி நீயும்' என்று தொடங்கிக் கருத்து அருளிச்செய்கிறார்.

5. அதனை விவரணம் செய்கிறார் 'நான் அவன் வழியே' என்று தொடங்கி.

6. "பிறவி யான் வேண்டேன்" என்றதனோடு அமையாது, "இருள் தரும் மா ஞாலத்தே" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீர்தான்' என்று தொடங்கி.

யிற்று. [1] ஸ்ரீ பிரஹ்லாதாழ்வானையும் அன்றோ எதிரிடப் பண்ணிற்று. [2]"வான் உயர் இன்பம் எய்தில் என் மற்றை நரகமே எய்தில் என்?" என்று நினைத்திருந்தது ஒரு மயக்கம் உண்டு முன்பு; இப்போது அது தவிர்ந்தேன் என்பார் 'இனி' என்கிறார். [3]அது தவிர வேண்டுவான் என்? என்னில், ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய சேர்க்கைக்கு உடலாக இருக்கையாலும் உகந்தருளின நிலங்களில் உண்டான அன்பின் மிகுதியாலுமாக, 'அங்கே இருக்கில் என்? இங்கே இருக்கில் என்' அவன் எல்லைக்குள்ளே கிடக்குமத்தனை அன்றோ வேண்டுவது என்று இருந்தோம்; [4] அதுவேயாகப் பெறாதே, மற்றைப்படிக்கு உடலாக இருந்தது. [5]இச் சரீரத்துக்கு வசப்பட்டவன் ஆக்கி ஐம்புல இன்பங்களிலே கொடுபோய் மூட்டும் இவ் உலகத்தின் தன்மையை நினைந்த பின்பு விடுவதாகவே துணிந்தேன்.

யான் வேண்டேன் - [6]என் புத்தியால் விட்டேன்; அவன் இருத்தில் செய்யலாவது இல்லை. ஆனால், செய்ய வேண்டுவது என்? என்ன, [7]மருள் ஒழி நீ - உன்னது ஒரு நினைவு உண்டு, அதனைத் தவிரப் பார். என்றது, "தீவினை உள்ளத்தின் சார்வு அல்லவாகித் தெளிவிசும்பு ஏறல் உற்றால், திருவாறன்விளை யதனைமேவி வலம் செய்து கை தொழக் கூடுங்கொல் என்னும்

1. இவ் உலகம் அறிவிலிகட்கு இருள் தரும், ஞானிகட்கும் இருளைத் தருமோ? என்ன, 'ஸ்ரீ பிரஹ்லாதாழ்வானையும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "இனி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வான் உயர் இன்பம்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 8. 1: 9.

3. 'அது தவிர வேண்டுவான் என்? என்னில்' என்றது, அப்போது அப்படி நினைத்திருந்து, இப்போது அதனைத் தவிர வேண்டுவான் என்? என்னில் என்றபடி.

4. 'அதுவே' என்றது, ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய சேர்க்கைக்கு உடலாக இருக்கை முதலானவற்றிற்குக் காரணமாகையைத் தெரிவித்தபடி. மற்றைப்படிக்கு - இவ் உலக இன்பத்துக்கு.

5. 'மற்றைப்படிக்கு உடலாக இருந்தது' என்றதனை விவரணம் செய்கிறார் 'இச் சரீரத்துக்கு' என்று தொடங்கி.

6. "யான்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'என் புத்தியால்' என்று தொடங்கி.

7. "மருள் ஒழி" என்றதற்குப் பொருள், உகந்தருளின திவ்ய தேசங்களில் உள்ள ஈடுபாட்டினை நீக்கு என்பது. 'ஒரு நினைவு உண்டு' என்றதனை விவரணம் செய்கிறார் "தீவினை" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 7. 10: 9.

என் சிந்தனை" என்கிறபடியே, விரோதி கழிந்து போம் வழி எல்லாம் போய், 'இது பரமபதத்துக்குப் போம் வழி, இது திருவாறன் விளக்குப் போம் வழி என்றால், 'அடையத்தக்க அப்பரம்பொருள்தான் இங்கே வந்து கிட்டிற்றாகில் இனி இங்கே அடிமை செய்ய அமையாதோ?' என்று மயங்கி இருப்பது ஒன்று உண்டு, அதனைத் தவிரப் பார் என்றபடி. மருள்-அறிவின்மை. மட நெஞ்சே - 'நாம் அடைய விரும்பிய அப் பரம்பொருள் அண்மையில் இருக்கிறது' என்று இதனையே பார்க்கிறாயித்தனை போக்கி, [1]நம்மையும் பார்க்க வேண்டாவோ? வாட்டாற்றான் அடி வணங்கு-[2]நம்முடைய நலத்தையே விரும்புகிறவன் வழியே போய் அவனை அநுபவிக்கப் பாராய். [3]உகந்தருளின நிலங்களிலே வந்து நிற்கிறது நம்மை அவ்வருகே கொடு போகைக்காக இருக்கும், நீயும் அவன் நினைவிலே போகப் பாராய். [4]அடிவணங்குகையாவது, ஈர் அரசு தவிர்கை அன்றோ. (1)

1049.

வாட்டாற்றான் அடி வணங்கி, மா ஞாலம் பிறப்பு அறுப்பான்
கேட்டாயே மடம் நெஞ்சே! கேசவன் எம்பெருமானைப்
பாட்டாய பல பாடிப் பழவினைகள் பற்று அறுத்து,
நாட்டாரோடு இயல்வு ஒழிந்து, நாரணனை நண்ணினமே.

---

1. 'நம்மையும் பார்க்க வேண்டாவோ' என்றது, மயக்கத்திற்கு இருப்பிடமான இவ் உலகத்தில் இருக்கிற நம்மையும் பார்க்க வேண்டாவோ? என்றபடி.

2. "மருள் ஒழி நீ" என்று கூறினவர் "வாட்டாற்றான் அடி வணங்கு" என்கை பொருந்துமோ? பரமபதநாதன் அடி வணங்கு என்று அன்றோ கூறல் வேண்டும்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நம்முடைய' என்று தொடங்கி. என்றது, நம்மைக் கொடுபோக வந்திருப்பவனைப் பின் செல்லப் பாராய் என்றபடி. வாட்டாற்றான் என்பதற்கு, நமக்கு நன்மையைச் செய்வானாய் நம்மைப் பரமபதத்தே கொண்டுபோக இங்கே வந்திருப்பவன் என்றே பொருள். அடி வணங்கு என்பதற்கு அவனுடைய கருத்துக்கு இணங்கி இரு என்பதுவே பொருள். நமஸ்காரத்தைச் செய் என்பது பொருள் அன்று.

3. 'நம்முடைய' என்று தொடங்கி மேலே அருளிச்செய்ததனை விவரணம் செய்கிறார் 'உகந்தருளின' என்று தொடங்கி.

4. "அடி வணங்கு" என்றால் அவன் நினைவிலே போகை என்ற பொருளைத் தருமோ? என்ன, 'அடி வணங்குகையாவது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

பொ - ரை :—பெரிய இப் பூ உலகத்திலே நமது பிறப்பினை அறுக்கும் பொருட்டுத் திருவாட்டாற்றில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கி, கேசவனாகிய இறைவனைப் பல வாய பாட்டுகளைப் பாடி, பழமையான இரு வினைகளையும் அடியோடு அறுத்து, இவ் உலகத்தாரோடு சம்பந்தம் நீங்கி, நாராயணனைச் சேர்ந்தோம்; அறியாமை பொருந்திய மனமே! இந்தப் பயன்கள் இருந்தபடி கேட்டாயே!

வி - கு :—பிறப்பு அறுப்பான் வாட்டாற்றான் அடி வணங்கிப் பல பாடிப் பற்று அறுத்து இயல்வு ஒழிந்து நாரணனை நண்ணினம்; மடம் நெஞ்சே! கேட்டாயே! என முடிக்க.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1]"விதிவகையே" என்று, கேவலம் பகவானுடைய கிருபையாலே வந்ததாகச் சொல்லுகிறது என்? அடியிலே "இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை என்றிலேமோ நாம்?" என்ன, நாம் விரும்பிய அளவோ பெற்றது? என்கிறார்.

[2]மா ஞாலம் பிறப்பு அறுப்பான் வாட்டாற்றான் அடி வணங்கிக் கேசவன் எம்பெருமானைப் பாட்டாய பல பாடிப் பழ வினைகள் பற்று அறுத்து நாட்டாரோடு இயல்வு ஒழிந்து நாரணனை நண்ணினம்; கேட்டாயே மடம் நெஞ்சே - [3]இவை எல்லாம் அவன் அருளாலே வந்தனவாக இருந்தனவோ? நாம் இரந்து பெற்றனவாக இருந்தனவோ? [4]இப் பிறவி நீங்க வேண்டும் என்னும் இவ்வளவே அன்றோ நாம் விரும்பியது; கெடுவாய், நாம் விரும்பிய அளவு அறிதியே. [5]மா ஞாலம் பிறப்பு அறுப்பான் வாட்டாற்றான் அடி வணங்கி - 'இந்த உடலின் சம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேண்டும்'

---

1. முன் திருப்பாசுரத்திலே "விதிவகையே" என்றதற்கு அருளிச்செய்த இருவகை நிர்வாஹங்களுள் முன்னையோர் நிர்வாஹத்தை அடி ஒற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். விதி - பகவானுடைய அருள். 'அடியிலே' என்றது, திருவிருத்தத்தில் முதலிலே என்றபடி.

2. 'நாம் விரும்பிய அளவோ பெற்றது' என்றதற்குத் தகுதியாகப் பாட்டிற்கு அந்வயம் அருளிச்செய்கிறார் 'மா ஞாலம்' என்று தொடங்கி.

3. சொற்களைக் கொண்டு கூட்டியதற்குத் தகுதியாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவை எல்லாம்' என்று தொடங்கி.

4. இரந்ததுதான் யாது? என்ன, 'இப் பிறவி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. இவ்வளவேயோ நாம் விரும்பியது? என்ன, "மா ஞாலம்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

என்று அன்றோ நாம் சர்வேஸ்வரன் திருவடிகளைப் பற்றியது. [1] அதற்கு மேலே நம்மை அவன் அடிமையும் கொண்டான் கண்டாயே. வாக்கினாலாய அடிமை அன்றோ கொண்டது. கேசவன் எம்பெருமானை - கேசி என்னும் அசுரனைக் கொன்ற சர்வேஸ்வரனை. என்றது, [2] கேசியைக் கொன்றாற்போலே நம் விரோதியினை நீக்கி நம்முடைய அடிமைத் தன்மையை நிலை நிறுத்தி நமக்குச் சுவாமியாய் உள்ளவனை என்றபடி. அன்றிக்கே, நீண்ட மயிர்முடியை உடையவன் தன் அழகினைக் காட்டி நம்மை அடிமை கொண்டவன் என்றுமாம்.

[3] அவ்வளவேயோ, பாட்டு ஆய பல பாடி - [4] பால் ஏய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும்படி அன்றோ நம்மைக் கொண்டு கவி பாடுவித்துக் கொண்டபடி. [5] 'இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை செய்து அடிமை கொள்ளவேண்டும்' என்று நாம் விரும்ப, அதுவுங் கிடக்கச்செய்தே, அடிமை கொண்டான் கண்டாயே. பாடிப் பழ வினைகள் பற்று அறுத்து - [6] நாம் அடிமை செய்ய, அடைவதற்குத் தடைகளாய்ப் பல காலமாக ஈட்டப்பட்ட அவித்யை முதலியவைகள் எல்லாம் போகப் பெற்றபடி கண்டாயே.[7] இவர் வினை அறுக்கக் குடித்த வேப்பம்

---

1. "பாட்டாய பல பாடி" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அதற்கு மேலே' என்று தொடங்கி. கொண்ட அடிமையை விவரணம் செய்கிறார் 'வாக்கினாலாய' என்று தொடங்கி. வாக்கினாலாய அடிமை - பாட்டாய பல பாடுதல்.

2. "மா ஞாலப் பிறப்பு அறுப்பான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி "கேசவன்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கேசியை' என்று தொடங்கி. ஈண்டு 'விரோதி' என்றது, அடிமையாக இருப்பதற்குத் தடையான தன்மானத்தை.

3. 'அவ்வளவேயோ' என்றது, அடிமையின் எல்லையிலே நிறுத்தின அவ்வளவேயோ என்றபடி.

4. திருவாய்மொழி பாடுவித்தது ஓர் ஆச்சரியமோ? என்ன, 'பால் ஏய் தமிழர்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, திருவாய்மொழி, 1. 5 : 11.

5. "பாட்டாய பல பாடி" என்றதன்பின் "பழவினைகள் பற்று அறுத்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இந்நின்ற' என்று தொடங்கி. அதுவும் கிடக்கச் செய்தே - இந்நின்ற நீர்மையும் கிடக்கச் செய்தே.

6. பாடுதல் பழவினைகள் பற்று அறுப்பதற்குக் கருவியோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாம் அடிமை செய்ய' என்று தொடங்கி.

7. 'இவர் வினை அறுக்க' என்று தொடங்கும் வாக்கியம், குறிப்புப் பொருளது.

குடி நீர் இது காணும். [1]"கேசவனாகிய மருந்துவனை".[2] இவன் பல காலமாக ஈட்டின இவை, எல்லாவற்றையும் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்த இறைவன் போக்கப் புக்கால் ஒருகாலே போகலாய் இருக்குமன்றே. நாட்டாரோடு இயல்வு ஒழிந்து - [3] உண்டியே உடையே என உகந்து ஓடும் இம் மண்டலத்தாரோடு தொற்று அறப் பெற்றபடி கண்டாயே. [4] "யானே என் தனதே" என்று, யான் எனது என்னும் செருக்குக்களுக்கு வசப்பட்டவர்களாய் இருப்பவர்களோடே சம்பந்தம் அறப் பெற்றேம். [5]"ஒ ஒ உலகினது இயல்பே", "இவை என்ன உலகு இயற்கை", "கொடு உலகம் காட்டேலே" என்னப் பண்ணினபடி கண்டாயே; "உங்களோடு எங்களிடை இல்லை" என்று கழிந்தவரே அன்றே.

நாரணனை நண்ணினம் - ஒரு காரணம் பற்றி வந்த பந்துக்களை விட்ட அளவேயோ? ஒரு காரணமும் இல்லாமலே பந்துவாக இருக்கும் சர்வேஸ்வரனைப் பற்றவும் பெற்றேம். [6]விட்டவர்கள் தம்மை வேறு ஓர் தன்மையாலே பற்றுகிறார் காணும்.

---

1. வினையைப் போக்குவதற்கு அவன் வைத்தியனோ? என்ன, 'கேசவனாகிய மருத்துவனை' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

மேருமந்தர மாத்ரோபி ராஶிஃ பாபஸ்ய கர்மணஃ
கேஶவம் வைத்யம் ஆஸாத்ய துர்வ்யாதிரிவ நஶ்யதி.

என்பது, விஷ்ணு தர்மம்.

2. "வினைகள்" என்ற பன்மையை நோக்கி, வினைகள் எல்லாம் பற்று அறக் கூடுமோ? என்ற சங்கையிலே "கேஶவம் வைத்யம்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவன்' என்று தொடங்கி.

3. "உண்டியே உடையே" என்பது, பெருமாள் திருமொழி, 3: 4.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் "யானே" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 9: 9.

5. ஆனால், இவர் சம்பந்தம் அறப் பெற்றாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "ஒ ஒ உலகினது இயல்பே" என்று தொடங்கி.

இது, திருவாசிரியம், 6.

"இவை என்ன" என்பது, திருவாய்மொழி, 4. 9: 1.

"கொடு உலகம்" என்பது, திருவாய்மொழி, 4. 9: 7.

"உங்களோடு" என்பது, திருவாய்மொழி, 8. 2: 7.

6. வேறு திருப்பெயர்களைக் கூறாது, "நாரணனை" என்று விசேடித்துச் சொல்லுகையாலே, உலகமக்கள் 'அவனுடைய உடைமைப்பொருள்' என்னும் ஆகாரத்தாலே உத்தேசியர் என்று தோற்றுகிறது என்று கொண்டு அருளிச்செய்கிறார் 'விட்டவர்கள் தம்மை' என்று தொடங்கி. என்றது, சரீர சம்பந்தம்பற்றி விலக்கினவர்களை 'அவன் உடைமைப் பொருள்' என்னும் தன்மையாலே பற்றுகிறார் என்றபடி.

[1]முக்தனுக்கு 'இவை எல்லாம் சர்வேஸ்வரன் உடைமைப் பொருள்' என்னும் தன்மையாலே உத்தேசியமாகின்றன அன்றோ இவைதாம். [2]தானே ஆக்கி உண்டு களித்தல் தவிர்ந்து, தந்தையோடே ஒன்றாக உண்டு களித்து ஜீவிப்பாரைப் போலே காணும். [3]படுக்கைக் கீழே மிகப் பெரிய நிதி கிடக்கப் புறங்கால் வீங்கிச் சாவாரைப்போலே அன்றோ நாராயணனாக இருக்கச் செய்தேயும் நண்ணாது இருந்தபடி. கேட்டாயே மடம் நெஞ்சே-[4]பெற்ற பேற்றின் கனத்தை நினைந்து, வகாதது வகுத்தது என்று திமிர்த்திருக்கிறாயோ? இதனை அநுபவியாநின்றாயோ; [5]"சுமித்திரையின் மகனே! நீ விரும்பிய இன்பங்களை நுகர்வாய்" என்றும், "ஜனக குலத்தில் பிறந்தவளே! நீ முக்கரணங்களையும் ஒருமைப் படுத்தினவளாய்ப் பல விதமான பொருள்களையும் பார்த்துக்கொண்டு என்னோடு

---

1. அவன் உடைமைப் பொருள் என்னும் தன்மையாலே இவ் உலகப் பொருள்கள் உத்தேசியம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'முக்தனுக்கு' என்று தொடங்கி. இப் பொருள் அமைந்த சுலோகத்தை மேலே 69-ஆம் பக்கம் குறிப்பிற் காண்க.

2. நாட்டாரோடு இயல்வு ஒழிந்து நாரணனை நண்ணினதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'தானே ஆக்கி' என்று தொடங்கி. என்றது, இல்லம் வயல் முதலான செல்வங்களை எல்லாம் தன்னது என்று தனியே அநுபவித்தவன், தந்தைக்கு அநுகூலனாய் எல்லாம் அவனது என்று அறிந்து அவனோடே கூட அநுபவிக்குமாறு போலே, தன்னது என்று இருக்குமது தவிர்ந்து,அவன் உடைமைப்பொருள் என்று அறிந்து அநுபவித்தல் என்றபடி.

3. நாராயண பதத்துக்கு, கரந்த சில் இடம் தொறும் இடம் திகழ் பொருள் தொறும் கரந்து எங்கும் பரந்து உறைதலும் (சர்வஅந்தரியாமித்வம்) பொருள் ஆகையாலே, அப் பொருளையும் கூறத் திருவுள்ளம்பற்றி, அந்தரியாமித்வத்தால் போதரும் பொருள் சுலபன் என்பது ஆகையாலே, இப்படிச் சுலபனாய் இருக்கிறவனை கிட்டாதிருக்கிறது அவனை அறியாமையாலே என்னுமதனைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிறார் 'படுக்கைக் கீழே' என்று தொடங்கி.

4. அருகே இருக்கும் நெஞ்சினைக் "கேட்டாயே" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பெற்ற பேற்றின்' என்று தொடங்கி. வகாதது வகுத்தது - கிடையாதது கிடைத்தது.

5. கிடையாதது கிடைத்தது என்றதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'சுமித்திரையின் மகனே' என்றும், 'ஜனக குலத்தில் பிறந்தவளே' என்றும் தொடங்கி.

"ஸௌமித்ரே புங்க்ஷ்வ போகாந் த்வம்"

என்பது, ஸ்ரீராமா. அயோத்.

வைதேஹி ரமஸே கச்சித் சித்ரகூடே மயா ஸஹ
பஶ்யந்தீ விவிதாந் பாவாந் மநோவாக்காய ஸம்யதாந்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 94 ; 18.

கூடச் சித்திரகூடப் பர்வதத்தில் களிக்கிருயா ?'' என்றும் வருமாறு போலே. மா ஞாலம் பிறப்பு அறுப்பான் கேசவன் எம்பெருமானுன வாட்டாற்ருன் அடி வணங்கிப் பாட்டாய பல பாடிப் பழவினைகள் பற்று அறுத்து நாட்டாரோடு இயல்வு ஒழிந்து நாரணனை நண்ணினம்; கேட்டாயே மடம் நெஞ்சே! என்று கூட்டுக. (2)

1050.

[1]நண்ணினம் நாராயணனை நாமங்கள் பல சொல்லி;
மண்ணுலகில் வளம் மிக்க வாட்டாற்ருன் வந்து, இன்று
விண்ணுலகம் தருவானுய் விரைகின்ருன், விதிவகையே;
எண்ணினவாறு ஆகா இக் கருமங்கள் என் நெஞ்சே !

பொ - ரை :—என் மனமே! திருப்பெயர்கள் பலவற்றையும் சொல்லிக்கொண்டு நாராயணனைக் கிட்டினேம்; இப் பூஉலகில் வளப்பம் மிக்க திருவாட்டாற்றில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் வந்து, இன்று நமது அநுமதிகொண்டு பரமபதம் கொடுப்பவனுய் விரைகின்ருன்; இக் காரியங்கள் நாம் நினைத்தபடியே முடிபவைகள் அல்ல. மேற்பட்டு விட்டனவே என்றபடி.

வி - கு :—சொல்லி நாராயணனை நண்ணினம்; நமது விதிவகையே வாட்டாற்ருன் வந்து இன்று விண்ணுலகம் தருவானுய் விரைகின்ருன்; ஆதலால், இக் கருமங்கள் எண்ணினவாறு ஆகா என்க.

ஈடு :—மூன்ரும் பாட்டு. [2] நெஞ்சே! நம்மை அங்கீகரிக்க வல்லனே என்று நாம் இருக்க, அவ்வளவு அன்றிக்கே பலிக்கிறபடி என்? என்கிருர்.

நாராயணனை நாமங்கள் பல சொல்லி நண்ணினம்-[3] அடையத் தக்க சம்பந்தத்தை உடையவனுன சர்வேஸ்வரனைக் கிட்டப் பெற்றேம். [4]"நமோ நாராயணுய என்னும் இம்மந்திர

---

1. "மோக்ஷதானத்திலே ப்ரணத பாரதந்த்ர்யம் வளம் மிக்க நதியிலே கரைபுரளும்" என்னும் ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீ ஸூக்தி இங்கு நினைத்தல் தகும். திருதீயப்பிரகாரணம், சூத். 35.

2. நான்காம் அடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

3. நாராயண பதத்திற்கு அருளிச்செய்யும் பொருள்வகை இரண்டனுள், நான்காம் வேற்றுமைத் தொகையில் பொருள் அருளிச்செய்கிருர் 'அடையத் தக்க சம்பந்தத்தை யுடையவனுன' என்று தொடங்கி.

4. ஒன்று அமையாதோ, பல வேண்டுமோ? என்ன, 'நம:' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

கிம் தத்ர பஹுபி: மந்த்ரை: கிம் தத்ர பஹுபி: வ்ரதை:
நமோ நாராயணுயேதி மந்த்ர: ஸர்வார்த்த ஸாதக:.

என்பது; பிரமாணம்.

மானது எல்லா விருப்பங்களையும் முடித்துக் கொடுக்கும்; அந்த மோக்ஷத்தினைப் பெறுவதற்குப் பலவான மற்றைய மந்திரங்கள் என்ன உதவியைச் செய்யும்" என்கிறபடியே, மோக்ஷமாகிற பலத்தை விரும்பினால் இதுவே அமையும்; பிரீதியினாலே தூண்டப்பட்டவர்களாகித் திருநாமங்கள் பல வற்றையும் சொல்லி என்பார் '**நாமங்கள் பல சொல்லி**' என்கிறார். மண் உலகில் வளம் மிக்க வாட்டாற்றான் - [1] பரமபதத்தைக் காட்டிலும் செல்வம் மிக்கிருந்துள்ள திருவாட்டாற்றினைத் தனக்கு நிரூபகமாக உடையவன். வளம் - செல்வம். [2] காக்கப்படுகின்ற பொருள் குறைவற்ற தேசமாகையாலே காக்கிறவனுக்குச் செல்வம் மிக்கிருக்கும் இங்கு; கைங்கரியத்துக்கு இடையீடு இல்லாமையாலே அடியவனுக்குச் செல்வம் மிக்கிருக்கும் அங்கு. வந்து - [3] நாம் செல்ல வேண்டும் தேசமடங்கத் தானே வந்து. இன்று-[4] நம்பக்கல் இதற்கு அடியாக இருப்பது ஒன்று நென்னேற்று இல்லை; இன்று இங்ஙனே விடியக் கண்டதித்தனை.

விண் உலகம் தருவானாய் - [5] அங்கே ஒரு குடியிருப்பு மாத்திரமே கொடுத்து விடுவானாய் இருக்கின்றிலன். [6] "வானவர் நாடு", "ஆண்மின்கள் வானகம்" என்கிற பொதுவினை அறுத்து நமக்கே தருவானாக விரையாநின்றான். [7] ஆவது அழிவது ஆகிற இந்த உலகம் இவர்க்குத் தரம் அன்று என்று

---

1. "வளம் மிக்க" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பரமபதத்தைக் காட்டிலும்' என்று தொடங்கி.

2. பரமபதத்தைக் காட்டிலும் மண் உலகில் செல்வம் மிகக் கூடுமோ? என்ன, 'காக்கப்படுகின்ற' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "வந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நாம் செல்ல வேண்டும்' என்று தொடங்கி.

4. "இன்று" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நம் பக்கல்' என்று தொடங்கி. நென்னேற்று - நேற்று; முதல் நாள்.

5. "விண்ணுலகம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அங்கே' என்று தொடங்கி.

6. இங்ஙனம் கூறியதனால் போந்த பொருளை அருளிச்செய்கிறார் 'வானவர் நாடு' என்று தொடங்கி. "வானவர் நாடு" என்பது, திருவாய்மொழி, 3. 9: 9. "ஆண்மின்கள்" என்பது, திருவாய்மொழி, 10. 9: 6.

7. இந்த உலகத்தையும் கொடாதொழிவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆவது அழிவதாகிற' என்று தொடங்கி.

காணும் அவன் நினைவு. [1] இவர்க்கே கொடுக்கையாவது, இவர் வேண்டிக் கொண்டவாறே வழுவு இலா அடிமையைக் கொடுக்கையே அன்றோ. நம்மைப் போல் ஆறி இருக்கின்றிலன் என்பார் 'விரைகின்றான்' என்கிறார். [2] "சிறப்பில் வீடு இறப்பில் எய்துக எய்தற்க" என்று ஒரு ஆற்றல் உண்டே அன்றோ நமக்கு. [3] தான் முற்பாடனாய்ச் சரக்குக் கட்டிப் புறப்பட்டு நிற்பது, இவர் தாழ்த்தார் என்று மீளாப் போய்ப் புக்கு 'ஆழ்வீர்! போரீரோ போரீரோ' என்று பதறாநின்றான். [4]ஒரு காரியப்பாட்டாலே வைத்தானாய், அக் காரியம் முடியுமளவு ஆனவாறே விரையாநின்றான். [5] சர்வ சக்திமானானை தனக்கும் முறையிலே செய்தல் பற்றாதபடி ஆயிற்று விரைவு இருக்கிறபடி. [6]நினைத்த காரியம் செய்யுமளவும் பொறுக்கிலனாயிற்று. இப்படிச் செய்ய நினையாநின்றானாகில் நினைக்கிறான்: தான் சர்வ சக்திமானான சர்வேஸ்வரனாகில் பின்னை அங்ஙன் [7] விரைய வேண்டுகிறது என்? என்னில், விதி வகையே-நாம் சொல்லப் பரமபதம் தந்தானாக வேண்டும் என்று இராநின்றான். [8]"எம் மா வீட்டுத் திறமும் செப்பம்" என்றாரே, அது

---

1. இவர்க்கே விண்ணுலகம் தருகையாவது என்? என்ன, 'இவர்க்கே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. இவர் அப்படி ஆறியிருந்தாரோ? என்ன, "சிறப்பில் வீடு" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, திருவாய்மொழி, 2. 9 : 5. ஆற்றல் - பொறை.

3. "விரைகின்றான்" என்றதற்கு, விரைவினுடைய முடிவெல்லையை அருளிச்செய்கிறார் 'தான் முற்பாடனாய்' என்று தொடங்கி.

4. இத்துணை நாளும் வாளா இருந்து இப்பொழுது விரைவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒரு காரியப் பாட்டாலே' என்று தொடங்கி. காரியமாவது, தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலை சொல்விக்கை - திருவாய்மொழியைத் தலைக்கட்டுகை.

5. முறையிலே வருகிறார் என்று இருக்க ஒண்ணாதோ? என்ன, 'சர்வ சக்திமானான' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. "விரைகின்றான்" என்ற நிகழ்காலத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நினைத்த காரியம்' என்று தொடங்கி. நினைத்த காரியம் - திருவாய்மொழி பாடுவிக்கவேண்டும் என்று நினைத்த காரியம்.

7. 'விரைய வேண்டுகிறது என்? என்னில்' என்றது, கொடுபோதலாகிற காரியத்தைச் செய்தற்கு என்? என்னில் என்றபடி.

8. நாம் சொல்ல என்கைக்கு, இவர் பரமபதம் வேண்டா என்றாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "எம் மா வீட்டுத் திறமும்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 9 : 1. இது, வேண்டா என்ற மாத்திரத்துக்கே பிரமாணம்.

தவிர்ந்து [1] "உண்டிட்டாய் இனி உண்டொழியாய்", "திரு ஆணை நின் ஆணை" என்று தடுத்தும் வளைத்தும் செய்தால் பின்பு கொடுப்பதாக இராநின்றான்.

விதி வகையே விண் உலகம் தருவானாய் விரைகின்றான் - [2] இவர்க்கு ருசி பிறப்பதற்கு முன்பு தான் எதிர்சூழல் புக்கு விரைந்து திரிந்தான்; ருசி பிறந்த பின்பு இவர் விரையத் தொடங்கினர்; அது கண்டு அவனும் இவர் அளவு அல்லாதபடி விரைகின்றான்; அது கண்டு இவர் ஆச்சரியப்படுகிறார். [3] இவனுக்கு ருசி பிறக்குமளவும் அன்றே அவன் ஆறி இருப்பது? இவனுக்கு அது உண்டானால் பின்னை பேற்றளவும் செல்ல விரைவான் அவன் ஆயிற்று. [4] உடையவன் அன்றோ உடைமையைப் பெறுகைக்கு விரைவான்? [5] எண்ணினவாறு ஆகா - [6] "இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை" என்று இவ்வளவு அன்றோ நாம் எண்ணிற்று? அவன் 'விரைய வேண்டும்' என்று எண்ணினோமோ? [7] இக் கருமங்கள் - பகவத் விஷயத்தில் தாம் தாம் எண்ணி இருந்த அளவு அன்றுகாண் காரியம் பலிக்கும்படி. உலக மக்களிலே சிலரை 'என் காரியத்துக்கு நீ கடவை' என்று சொன்னாலும், பின்னையும் பேற்றளவும் செல்லத் தானே முயற்சி செய்ய வேண்டுமே; அப்படியே நினைத்திராதேகொள் இவ் விஷயத்திலும். என் நெஞ்சே -

---

1. "உண்டிட்டாய்" என்பது, திருவாய்மொழி, 10. 10 : 6. "திரு ஆணை" என்பது, திருவாய்மொழி, 10. 10 : 2.

2. "விரைகின்றான்" என்ற ஈடுபாட்டுக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவர்க்கு ருசி' என்று தொடங்கி.

3. அவன் ஆறியிருக்க, இவர் அன்றோ விரையவேண்டும்? என்ன, 'இவனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'உடையவன்' என்று தொடங்கி.

5. எண்ணினவாறு ஆகா - நாம் எண்ணின அளவு அன்று; எண்ணத்துக்கு மேலே பலிக்கும் என்பது கருத்து.

6. "எண்ணினவாறு ஆகா" என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'இந் நின்ற நீர்மை' என்று தொடங்கி. இது, திருவிருத்தம், செய். 1.

7. இக் கருமங்கள்-பகவத் விஷயத்தில் பலிக்கும் காரியங்கள். "கருமங்கள்" என்ற பன்மைக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பகவத் விஷயத்தில்' என்று தொடங்கி. இ' என்ற சுட்டிற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'உலக மக்களிலே' என்று தொடங்கி.

[1]அவன் முறையிலே விரைய நாம் பெற்றது, நீ முறையிலே நிற்கையால் அன்றோ? [2]பிறவிக்குக் காரணமாகை தவிர்ந்து மோக்ஷத்திற்குக் காரணமாகை அன்றோ? உன்னாலே வந்த நிறைவு அன்றோ இவை யெல்லாம்? (3)

1051.

என்நெஞ்சத்து உள்இருந்து இங்கு இரும் தமிழ்நூல் இவை மொழிந்து
வன்நெஞ்சத்து இரணியனை மார்வு இடந்தவாட்டாற்றான்
மன் அஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்காப் படைதொட்டான்
நல்நெஞ்சே! நம்பெருமான் நமக்கு அருள்தான் செய்வானே.

பொ - ரை —நல்ல மனமே! வலிய நெஞ்சினையுடைய இரணியனுடைய மார்பினைப் பிளந்த திருவாட்டாற்றானும், மன்னர்கள் எல்லாரும் அஞ்சும்படியாகப் பாரதப் போரிலே தன்னை அடைந்த பாண்டவர்களுக்காகப் படையைக் கையிலே தொட்டவனுமான நம்பெருமான் என் நெஞ்சிற்குள்ளே எழுந்தருளியிருந்து, இந்த உலகத்திலே பெருமை பொருந்திய தமிழ் நூலாகிய இத் திருவாய்மொழியினை அருளிச்செய்து, நமக்கு மேன் மேலும் திருவருள் செய்வதற்குப் பாரியா நின்றான் என்க.

வி - கு :—வாட்டாற்றானும் படை தொட்டானுமான நம்பெருமான் நெஞ்சத்துள் இருந்து இங்குத் தமிழ்நூல் இவை மொழிந்து நமக்கு அருள் தான் செய்வான் என்க.

ஈடு :—நான்காம் பாட்டு. [3]சர்வேஸ்வரன் நாம் விதித்தபடியே செய்வானாகச் சொன்ன இது நடக்கக் கூடியதாமோ? என்னில், அவன் அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மையை நினைக்கும்போது கூடாதது இல்லை காண் என்கிறார்.

---

1. "என் நெஞ்சு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் முறையிலே' என்று தொடங்கி.

2. அதனை விவரணம் செய்கிறார் 'பிறவிக்கு' என்று தொடங்கி. இதற்கு, "மனிதர்களுக்கு, பிறவிக்கும் மோக்ஷத்திற்கும் காரணம் மனமே" என்றதிலே நோக்கு; ஸ்ரீ விஷ்ணு புராணம், 6, 7 : 28.

3. இப் பாசுரத்தில் இரண்டாம் அடியும் மூன்றாம் அடியும் உயிர் நிலையாக இருக்கும் என்பர். மேலே "விதிவகையே" என்றதனை இரண்டு சரிதங்கள் மூலமாக விளக்குகிறபடி.

இரண்டாம் அடி மூன்றாம் அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

என் நெஞ்சத்து - [1] பலகாலம் இவ் உலகத்திலே தன்னை ஒழிந்த ஐம்புல இன்பங்களை உகந்து போந்தது என்றாயிற்று இவர் 'என் நெஞ்சு' என்று இருக்கிறது. [2] இதில் குணமும் குற்றமும் கிடந்தபடி கிடக்க, இவர் 'என்னது' என்றதுவே காரணமாக அவன் மேல் விழாநின்றான். [3] இவர் என் நெஞ்சு என்று புறம்பே கால் வாங்காநின்றார்; அவன் அதுவே காரணமாக உள்ளே போக அடி இடாநின்றான். [4] விடாயர் மேலில் நீரை நீக்கி உள்ளே ஆழ முழுகிக் கிடக்குமாறுபோலே நெஞ்சின் உள்ளே புகுந்தான் என்பார் 'உள்' என்கிறார். இருந்து-[5] தனக்கு அவ்வருகு ஒரு விபூதி உண்டாகவும், அங்கே போவானாகவும் நினைத்திருக்கிறிலன்; நிலையியற்பொருள் போலே இருந்து. இங்கு - [6] அங்கு இல்லாத செல்வத்தையும் இங்கே உண்டாக்கினான். இரும் தமிழ் - அந்தப் பரமபதத்துக்கும் அடங்காதபடி ஆயிற்று இவற்றின் பெருமை. [7] "கேட்டு ஆரார்" என்னக் கடவது அன்றோ. [8] நூல் - பின்புள்ளார்க்கும் இது கொண்டு இலக்கணம் கட்டலாம்படி ஆயிற்று இவை இருப்பது. [9] இவர் ஆற்றாமையாலே சொல்லச்செய்தேயும், அது எல்லா இலக்கணங்களோடும் கூடும்படி சொல்லுவித்தானு

1. "என்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பலகாலம்' என்று தொடங்கி.

2. இப்படிப்பட்ட இவர் நெஞ்சிலே அவன் மேல் விழுகைக்குக் காரணம் என்? என்ன, காதலே காரணம் என்கிறார் 'இதில் குணமும்' என்று தொடங்கி. "உள் இருந்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'மேல் விழா நின்றான்' என்கிறார்.

3. அதனை விவரணம் செய்கிறார் 'இவர்' என்று தொடங்கி.

4. "உள்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'விடாயர்' என்று தொடங்கி.

5. "இருந்து" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தனக்கு' என்று தொடங்கி.

6. "இங்கு" என்ற சொல், பரமபதத்தை நீக்குகிறது.

7. இத் திருவாய்மொழியின் பெருமை அப்படி இருக்குமோ? என்ன, இருக்கும் என்பதற்குக் "கேட்டு ஆரார்" என்று பிரமாணம் காட்டுகிறார். இது, திருவாய்மொழி, 10. 6 : 11.

8. நூல் - சாஸ்திரம். "நூல்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பின்புள்ளார்க்கும்' என்று தொடங்கி.

9. ஆற்றாமைக்குப் பாசுரம் இட்டுச் சொன்ன இது, இலக்கணங்களோடு கூடியவாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்' என்று தொடங்கி.

யிற்று. இவை - [1]'இன்னது செய்தான்' என்னப் புக்கு நடுவே 'இவை' என்று அநுபவிக்கிறாராயிற்று. மொழிந்து-[2]ஒருவன் பாடின கவியைக் கற்றுச் சொன்னவனும், தனக்கு அதிலே குவாலாகச் சம்பந்தம் உண்டாகத் தருக்கி இருப்பான்; அதுவும் நினைத்திருக்கிறிலர் காணும் இவர். [3]"என் முன் சொல்லும்" என்றவற்றையும் ஒன்றாக நினைத்திருக்கிறிலர் என்றபடி.

வல்நெஞ்சத்து இரணியனை மார்வு இடந்த வாட்டாற்றான் - பகவான் என்றால் அதிர்ந்திருக்கும்படி திண்ணிதான நெஞ்சினையுடைய இரணியனுடைய முருட்டு நெஞ்சினை வருத்தம் இன்றியே இடந்த திருவாட்டாற்றான். [4]முன்பு தமப்பன்பகையாகச் சிறுக்கனுக்கு உதவினவன் நமக்கு உதவானோ என்பது கருத்து. [5]செருக்குக் கிடந்த இடத்தினைக் குட்டமிட்டு இடந்தான் காணும். வாட்டாற்றான் - பிற்பாடர்க்கு உதவுகைக்காகத் திருவாட்டாற்றிலே வசிக்கிறவன். [6] அவன் நெஞ்சில் குறை தீர்த்தாற் போலே நம் நெஞ்சில் குறை தீர்க்க வந்து நிற்கிறவன். [7]மன் அஞ்ச - அதிரதர் மஹாரதர் என்று பேர் பெற்றவர்கள் அடங்கலும், சிங்கத்தினைக் கண்ட நரி போலே குலையும்படியாக. என்றது, அரசர் கூட்டம் அடங்கலும் அஞ்சும்படியாக என்றபடி. பாண்டவர்க்கு ஆ-[8]"இன்னார்

---

1. 'தமிழ் நூல் மொழிந்து' என்னுமல், நடுவே "இவை" என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இன்னது' என்று தொடங்கி.

2. மொழிவித்து என்னுமல் "மொழிந்து" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஒருவன்' என்று தொடங்கி.

3. "என்முன் சொல்லும்" என்று, முன் பிரயோஜனத்திற்குத் தலைவனாகச் சொன்னாரே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "என்முன் சொல்லும்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 7. 9: 2.

4. "இரணியனை மார்விடந்த வாட்டாற்றான்" என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'முன்பு' என்று தொடங்கி.

5. "மார்வு இடந்த" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'செருக்கு' என்று தொடங்கி. குட்டமிட்டு - பள்ளம் எடுத்து.

6. "மார்விடந்த வாட்டாற்றான்" என்று சேர்த்து, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் நெஞ்சில்' என்று தொடங்கி. அவன் - பிரஹ்லாதன். நம் நெஞ்சில் குறை - பரமபதத்திற்குக் கொடுபோகாமையாலே "ஏகம் எண்ணும்" என்னும் குறை.

7. "மன்" என்பது, சாதி ஒருமை.

8. "ஆக" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் "இன்னார் தூதன்" என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 2. 2: 3.

தூதன்" என்னும்படி அவர்க்குக் கையாளாய். படை தொட்டான் - படை எடுத்தான், படைவிட்டான் என்னப் பெற்றது இல்லை: தான் மேற்கொண்ட குறிக்கோளைக் குலைத்தானித்தனையே; காரியம் கொள்ளப் பெற்றதில்லை. சத்திய சங்கல்பன் என்றது, [1] அடியார்களை ஒழிந்த இடத்திலே அன்றோ; [2]விடா விட்டது, அருச்சுனன் 'நீ ஆயுதம் விடுகை எனக்குத் தாழ்வு' என்கையாலே. ஆகில் தவிரலாகாதோ என்று தவிர்ந்தான்.

[3]"மன்னர் மறுக" - அருச்சுனன் குதிரைகள் இளைத்த அளவிலே, கடினமான இடத்திலே நீர் நரம்பு அறியுமவன் ஆகையாலே வாருணாஸ்திரத்தை விட்டு அங்கே நீரை உண்டாக்கிக் குதிரைகளை விட்டு நீர் ஊட்டிப் புரட்டி எழுப்பிக் கொடு போந்து பூட்டிக்கொண்டு வந்து முன்னே நிறுத்தின இதனைக் கண்ட அரசர்கள் கூட்டம் அடைய, 'இவனுடைய பக்ஷபாதம் இருந்தபடியால் நாம் இவனை வெல்லுகை என்று ஒன்று உண்டோ?' என்று குடல் மறுகிற்று ஆயிற்று. "முன் அங்கு நின்று மோழை எழுவித்த" - எல்லாரும் காணக் குமிழி நீர் எழும்படி செய்தான். அவன் அடியார்கட்குப் பரதந்திரப் பட்டிருக்கும் தன்மையை நினைந்தவாறே நெஞ்சு துணையாய் நின்றது. நல் நெஞ்சே - [4]அல்லேன் என்னுமைக்கு நீ உண்டு, ஆவோம் என்கைக்கு அவன் உண்டு, அவனைத் தூண்டுதற்குக் கிருபை உண்டு. நம் பெருமான் நமக்கு அருள்தான் செய்வானே - நமக்குச் சுவாமியான தான், நமக்கு அருள் செய்தே

---

1. ஆயின், சத்தியசங்கல்பன் என்றதற்கு முரண் ஆகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடியார்களை' என்று தொடங்கி.

2. எடுத்தவன் அதனைப் பகைவர்மேல் ஏவாதொழிவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'விடா விட்டது' என்று தொடங்கி. வில்லிபாரதம் வீடுமபருவம் 3-ஆம் போர்ச் சருக்கம், செய். 14 முதல் 20 முடிய காண்க.

3. அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருப்பவன் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "மன்னர் மறுக" என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி, 4. 2: 7. இப் பாசுரத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அருச்சுனன்' என்று தொடங்கி. இதனை வில்லிபாரதம் துரோணபர்வம் 14-ஆம் போர்ச் சருக்கம், செய். 50 முதல் 55 முடிய காண்க.

4. "நல் நெஞ்சே", "நம்பெருமான்", "நமக்கு அருள்தான்" என்பனவற்றிற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அல்லேன்' என்று தொடங்கி.

விடுவான். [1] ' 'விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்' என்கிற பேற்றினைக் கொடுத்தே விடுவான்; இது நிச்சயம். [2] இசைகைக்கு நீ உண்டு, இசைவிப்பிக்கைக்கு அவன் உண்டு, இசைவினைக் கொண்டு காரியம் செய்கைக்குச் சம்பந்தம் உண்டு; இனி நம் பேற்றுக்குக் குறை உண்டோ? (4)

1052.

வான் ஏற வழி தந்த வாட்டாற்றான் பணி வகையே
நான் ஏறப் பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே!
தேன் ஏறு மலர்த் துளவம் திகழ் பாதன், செழும் பறவை
தான் ஏறித் திரிவான தாளிணை என் தலைமேலே.

பொ - ரை :—பரமபதத்திற்குச் செல்ல அர்ச்சிராதி நெறியை உண்டாக்கித் தந்த திருவாட்டாற்றில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் பணித்த வகையே நான் பரமபதத்திற்குச் செல்லப் போகின்றேன்; தேன் பொருந்தி யிருக்கின்ற மலர்களையுடைய திருத்துழாயானது விளங்குகின்ற திருவடிகளையுடையவனாய்ச் செழுமை பொருந்திய கருடப்பறவையின் மேல் ஏறி உலாவுகின்றவனான எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளும் என் தலைமேலே இருக்கின்றன; ஆதலால், நெஞ்சே! நரகத்தைப் பார்த்துச் சிரிப்பாய் என்கிறார்.

வி - கு :—வாட்டாற்றான் பணி வகையே நான் ஏறப் பெறுகின்றேன்; பறவை தான் ஏறித் திரிவான தாள் இணை என் தலைமேல; நெஞ்சே! நரகத்தை நகு என்க. [3] வான் ஏற வழி - அர்ச்சிராதிகதி.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [4] அவன் பரமபதத்துக்குப் போக அடியார்கட்கு வைத்த அர்ச்சிராதி கதியாலே போகப் பெறு

1. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'விண்ணுலகம்' என்று தொடங்கி.

2. 'அல்லேன் என்னுமைக்கு நீ உண்டு' என்று தொடங்கி மேலே அருளிச்செய்த மூன்று வாக்கியங்களையும் விவரணம் செய்கிறார் 'இசைகைக்கு' என்று தொடங்கி.

3. அர்ச்சிராதி நெறியைக் கீழ்வரும் திருப்பாசுரத்தால் உணர்க :

நடைபெற அங்கிப் பகல் ஒளி நாள் உத்தராயணம் ஆண்டு
இடைவரு காற்று இரவி இரவின்பதி மின் வருணன்
குடையுடை வானவர் கோமான் பிரசாபதி என்றிவரால்
இடைஇடை போகங்கள் எய்தி எழிற்பதம் ஏறுவரே.

என்பது தேசிகப் பிரபந்தம், அதிகார சங்கிரஹம், 28.

4. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

நின்றேன்; எப்போதும் அடைந்துள்ளவர்களைப் போலே நான் அங்கீகரிக்கவும் பெற்றேன் என்கிறார்.

வான் ஏற வழி தந்த - பரமபதத்திலே போய்ப் புகுகைக்கு அர்ச்சிராதி நெறியைத் தந்த. [1] பரமபதத்தைப் பெறுவதைக் காட்டிலும் அவ்வருகே ஒரு பெரும் பேறு என்னும்படி அன்றோ அர்ச்சிராதி நெறியை அடைதல். [2] "போம் வழியைத் தரும்" என்று ஈடுபடும்படி அன்றோ அதனுடைய சிறப்பு இருப்பது. வாட்டாற்றான் - இப் பேற்றுக்குக் கிருஷி செய்த இடம். பணிவகையே - அவன் திருவுள்ளமானபடியே. என்றது, [3] "என் ஒருவனையே பற்றுக்கோடாகப் பற்று" என்றதனைச் சொல்லுகிறார்; [4] "பண்டே பரமன் பணித்த பணிவகையே" என்றாரே அன்றோ. அன்றிக்கே, [5] "மரணமானல்" என்றதனைச் சொல்லிற்றாகவுமாம். நான் ஏறப் பெறுகின்றேன் - [6] "கண்ணன் வைகுந்தனோடு என் நெஞ்சினாரைக் கண்டால்" என்று தூது விட்டுப் பார்த்திருக்கக் கூடிய நான் உனக்குச் சொல்ல வேண்டும்படி ஆவதே! [7] நான் பரமபதத்திலே ஏறப் பெறுகின்றேன். ஆனல், செய்ய வேண்டுவது என்? என்ன, நரகத்தை நகு நெஞ்சே - ப்ரமபதம் கிட்டிற்று என்னுக் கடுகக் கால் வாங்கிப் போகப் பாராதே காண்! பல நாட்கள் நம்மைக் குடி மக்கள் ஆக்கி எளிவரவு படுத்தின இவ் உலக வாழ்க்கையைப் புரிந்து பார்த்துச் சிரித்துப் போரு

1. வானைத் தந்த என்னுமல், "வழி தந்த" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பரமபதத்தை' என்று தொடங்கி.

2. அப்படி அவ்வழி பெறாப் பேறாக இருக்குமோ? என்ன, 'போம் வழியை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "போம்வழி" என்பது, திருவாய்மொழி, 3. 9: 3.

3. "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம்ஏகம் ஶரணம் வ்ரஜ" என்பது, ஸ்ரீ கீதை, 18: 66.

4. "பணிவகையே" என்றால், "மாம்ஏகம் ஶரணம் விரஜ" என்றதனைக் காட்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "பண்டே" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 10. 4: 9.

5. "மரணமானல்" என்பது, திருவாய்மொழி, 9. 10: 5.

6. "நான்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் "கண்ணன்" என்று தொடங்கி. இது, திருவிருத்தம், செய், 30.

7. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நான் பரமபதத்திலே' என்று தொடங்கி.

காண். [1]'உன்னை வென்றோம் அன்றோ' என்று புரிந்து பார்த்துச் சிரித்துப் போரு. [2] **பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் கிரந்தியைப் பார்த்துச் சிரித்துச் சொன்ன வார்த்தையை நினைப்பது.**

[3] "பின்பு வானரரில் சிறந்தவனான சுக்கிரீவன் போருக்காக அறை கூவினான்; வானரங்களுக்கு அரசனான வாலி அவ் அறை கூவுதலாலே வெளியே புறப்பட்டான்" என்கிறபடியே, மஹாராஜர் வந்து அறை கூவ, 'முன் கணத்திலே மானம் கெட்டு ஓடினவன் இப்போது வந்து அறை கூவும் போது, இது வெறுமன் அன்று; போது அல்லாப் போதிலே நீ புறப்படக் கடவை அல்லை' என்று தாரை கால் கட்டச் செய்தேயும், க்ஷத்திரியன் ஆகையாலே மானக் கேட்டிற்குப் பொறுக்க மாட்டாமல் புறப்பட்டு, 'மிடற்று ஓசை இருந்தபடி என்? பழைய கோழைத்தனம் அற்றுத் தெளிந்த முழக்கு ஓசையாய் இருந்தது: இதற்கு ஓர் அடி உண்டாக வேண்டும்: உண்டாயிற்றாகில் நமக்கு இரை போருகிறது' என்றானே அன்றோ. "ஹரீஸ்வரஃ" - இதற்கு முன்பு இப்படிப் பிறர் கூவக் கேட்டிருந்தவன் அல்லன். [4] அப்படியே அவனை அண்டை கொண்ட பலத்தாலே, இவ் உலக வாழ்க்கையைப் பார்த்து 'உன்னை வென்றோமே அன்றோ' என்று கையைத்

---

1. சிரிக்கும் விதத்தை அருளிச்செய்கிறார் 'உன்னை' என்று தொடங்கி.

2. சிரித்துப் போந்தமைக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர்' என்று தொடங்கி. என்றது, பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் ஒரு நோயால் வருந்தாநிற்க, திருவரங்கநாதன் அவருக்குப் பரமபதம் கொடுக்கத் திருவுள்ளம்பற்றித் திருமாலை திருப்பரிவட்டம் முதலான வரிசைகளை வரவிட்டருள, அதனைக் கண்டு "நான்ஏறப் பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே" என்று இவ் அடியைச் சொல்லி நோயினைப் பார்த்துச் சிரித்தார் என்றபடி. கிரந்தி - கட்டி.

3. சம்சாரத்தைப் பார்த்துச் சிரிப்பதற்குக் காரணம் அவனை அண்டை கொண்ட பலமேயாம் என்று திருவுள்ளம்பற்றி, அதனைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிறார் 'பின்பு' என்று தொடங்கி.

ததஃ அகர்ஜத் ஹரிவரஃ ஸுக்ரீவஃ ஹேமபிங்கலஃ
தேந நாதேந மஹதா நிர்ஜகாம ஹரீஸ்வரஃ.

என்பது, சங்க்ஷேப ராமாயணம், 68.

4. இதனால் இங்கே சொல்லப்பட்டது யாது? என்ன, 'அப்படியே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

தட்டிச் சிரித்துக் காண் போருவது. [1] அறிவு கேடர்க்கு, நரகம் என்று யமன் முதலாயினோர் குடி இருப்பினைச் சொல்லிற்றாகவுமாம். இங்கு "மற்றை நரகம்" என்கிற இவ் உலக வாழ்க்கையினைச் சொல்லுகிறது; [2] வான் உயர் இன்பத்துக்கு எதிர்த்தட்டே அன்றோ.

நாம் இப்படி இவ் உலக வாழ்க்கையினைக் கைதட்டிச் சிரிக்கைக்கு நாம் நினைத்த பொருள்தான் நமக்குக் கைபுகுந்ததோ? என்ன, தேன் ஏறு மலர்த் துளவம் திகழ் பாதன் - [3] கிண்ணகப் பெருக்குப் போலே நாட்செல்ல நாட்செல்லத் தேன் ஏறி வாராநிற்பதாய் மலரையுடைத்தான திருத்துழாயானது விளங்காநின்றுள்ள திருவடிகளையுடையவன். செழும் பறவை - அவனுடைய சேர்க்கையாலே குளிர்ந்து காட்சிக்கு இனிய தன்மையையுடைய திருவடியை. இதனால், சர்வேஸ்வரனுடைய பரிசம் இவனுக்கு இருக்கும்படி சொல்லிற்று. தான் ஏறித் திரிவான- [4] அவனுக்காகவும் அன்றிக்கே அவன் தோளில் இருப்புச் சுகத்திற்குக் காரணமாய் இருக்கையாலே அவனை மேற்கொண்டு சஞ்சரியாநிற்கும் ஆயிற்று. தான் ஏறித் திரிவான தாள் இணை என் தலைமேலே - [5] திருவடி திருத்தோளிலும் என் தலையிலுமான இது தவிர்ந்து, என் தலையிலே ஆயிற்று. [6] அவன் இழவுக்கு வெறுக்க வேண்டா அன்றோ; அவன் தானே கொடு வந்து கொடுக்கப் பெற்றவர் ஆகையாலே. [7] ஆகையாலே அன்றோ ஒரு பழு ஏறப் பெற்றது. (5)

---

1. "நரகம்" என்ற சொல், இவ் உலக வாழ்க்கையைச் சொல்லுமோ? என்ன, 'அறிவு கேடர்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "மற்றை நரகம்" என்பது, திருவாய்மொழி, 8. 1: 9.

2. மற்றை நரகம் என்பது, இவ் உலக வாழ்க்கையைச் சொல்லுமோ? என்ன, 'வான் உயர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "தேன் ஏறு மலர்த் துளவம்" என்ற வினைத் தொகைக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கிண்ணகப் பெருக்குப் போலே' என்று தொடங்கி.

4. "தான் ஏறி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனுக்காகவும்' என்று தொடங்கி.

5. "தலைமேலே" என்ற ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'திருவடி திருத்தோளிலும்' என்று தொடங்கி.

6. ஆனால், பெரிய திருவடி துக்கப்பட மாட்டாரோ? பிறர் நலத்தினையே விரும்பும் இவர் அவன் இழவிற்கு வெறுக்காமல் "என் தலைமேலே" என்று உகப்பது தகுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் இழவுக்கு' என்று தொடங்கி.

7. அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'ஆகையாலே அன்றோ' என்று தொடங்கி. என்றது, அவன் புருஷகாரமாகக் கொண்டு வருகையாலே அன்றோ, அவனைப் போன்று தோளில் அன்றிக்கே தலைமேலே ஆகப் பெற்றது என்றபடி. பழு - படி.

1053.

தலைமேல தாள்இணைகள் ; தாமரைக்கண் என் அம்மான்
நிலைபேரான் என் நெஞ்சத்து, எப்பொழுதும்; எம்பெருமான்,
மலைமாடத்து அரவணைமேல் வாட்டாற்றான், மதம் மிக்க
கொலையானைமருப்பு ஒசித்தான்,குரைகழல்கள் குறுகினமே.

பொ - ரை :— இரண்டு திருவடிகளும் என் தலையின் மேலே இருக்கின்றன ; தாமரை மலர் போன்ற திருக் கண்களையுடைய என் அம்மானும், என் மனத்திலே எப்பொழுதும் நிலைபேராமல் இருப்பவனும், எம்பெருமானும், மலைகள் போல் உயர்ந்த மாடங்களையுடைய திருவாட்டாற்றிலே அரவணைமேல் அறிதுயில் செய்கின்றவனும், மதத்தாலே மேம்பட்ட கொல்லும் தொழிலையுடைய குவலயாபீடம் என்னும் யானையினது தந்தங்களை முறித்தவனுமான எம்பெருமானுடைய ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடிகளைக் கிட்டினோம்.

வி - கு :— கொலையானை - குவலயாபீடம் என்னும் யானை.

ஈடு :— ஆறும்பாட்டு. [1] திருவாட்டாற்றிலே எழுந்தருளியிருந்து எல்லா வகையாலும் என்னை விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் கிட்டப்பெற்றோம் என்கிறார்.

தாள் இணைகள் தலை மேல-[2]"நின் செம் மா பாத பற்புத் தலை சேர்த்து" என்றும், "பாத பங்கயமே தலைக்கு அணியாய்" என்றும் நான் வேண்டிக் கொண்டபடியே அழகிய திருவடிகளாலே தலை அலங்காரமாகப் பண்ணினான். தாமரைக் கண் என் அம்மான் - என் முன்னே நின்று குளிர நோக்கித் "தோற்றோம்" என்னப் பண்ணினான். என் நெஞ்சத்து நிலை பேரான் - மனத்தினை விட்டுப் போகாதே நின்றாயிற்று இவை எல்லாம் செய்கிறது. [3] சௌபரி ஐம்பது வடிவு கொண்டாற்

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'எல்லா வகையாலும் என்னை விடமாட்டாதவன்' என்னும் இதிலே முதன் முன்னம் "தலைமேல தாள் இணைகள்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் "நின் செம் மா பாத பற்பு" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 9 : 1. "பாத பங்கயமே" என்பது, திருவாய்மொழி, 9. 2 : 2.

3. நெஞ்சில் இருந்து கொண்டே ஒரே காலத்தில் இத்தனைக் காரியங்களையும் செய்யக் கூடுமோ? என்ன, 'சௌபரி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, இறைவன் பல சரீரங்களை மேற்கொள்ளுகையாலே கூடும் என்றபடி. சௌபரியைப் பற்றிய செய்தியைத் திருவாய்மொழி முதற் பத்து, 42. பக். கீழ்க் குறிப்புப் பார்க்கவும்.

போலே, முக்தன் இறைவனை அநுபவிக்கப் பல வடிவுகள் கொள்ளுமாறு போலே, இறைவன்தான் இவரை அநுபவிக்கப் பல வடிவுகள் கொள்ளாநின்றான். எப்பொழுதும் - [1]"எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழி" என்று தன்னை அநுபவிக்கைக்கு நான் பாரித்த துறைகள் அடையக் கைக்கொண்டான். [2] தனது ஆற்றல்கள் எல்லாவற்றையும் காட்டாநின்றான். [3]என் நெஞ்சிலே நிற்பது, அப்படியே கண்களுக்கு இலக்காம்படி முன்னே நிற்பது, திருவடிகளைத் தலைமேலே வைப்பது ஆகிற இவை எல்லாம் ஒருகாலே செய்யாநின்றான்.

எம்பெருமான் - [4] உடைமை உடையவனைப் பெற்றால் இருக்குமாறு போல் அன்றே, உடையவன் உடைமையைப் பெற்றால் இருக்கும்படி. மலை மாடத்து அரவு அணை மேல் வாட்டாற்றான் - மலைகளைப் புடைபடத் துளைத்து நெருங்க வைத்தாற்போலே இருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான் மேலே திருக்கண்வளர்ந்தருளுகிறவன். [5] இதனால், பெறத்தக்க பரம்பொருளைச் சொல்லுகிறது, பரியங்க வித்தையிற் சொல்லுகிறபடியே. மதம் மிக்க கொலை யானை மருப்பு ஒசித்தான் - [6] அநுபவத்திற்குத் தடைகளாக உள்ளவை அடங்கலும் குவலயாபீடம் பட்டது படும் இத்தனை. [7]அவன் இவன் விரோதியைப் போக்க இவன் அநு

---

1. 'எப்பொழுதும்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, நான் தன்னை அநுபவிக்கப் பாரித்தவை எல்லாம் தான் என்னை அநுபவிக்கப் பாரியாநின்றான் என்பது. "எப்பொழுதும்" என்பது, திருவாய்மொழி, 2. 5 : 4.

2. 'இவரை அநுபவிக்கப் பல வடிவுகள் கொள்ளாநின்றான்' என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'தனது' என்று தொடங்கி.

3. எதிர் நிரல் நிறையாக அந்த ஆற்றல்களைக் காட்டுகிறார் 'என் நெஞ்சிலே' என்று தொடங்கி.

4. இவ் ஆத்மா, பரமாத்மாவை அநுபவிக்கும்போது பல வடிவுகளைக் கோடல் தகும்; இறைவன் கொள்ளுகைக்குக் காரணம் யாது? என்ன, 'உடைமை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. "அரவுஅணைமேல்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி. பரியங்க வித்தையின் தன்மையைத் திருவாய்மொழி இரண்டாம்பத்து "அணைவது அரவணை" என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில் காண்க.

6. "கொலை யானை மருப்பு ஒசித்தான்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அநுபவத்திற்கு' என்று தொடங்கி.

7. "குரை கழல்கள் குறுகினம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் இவன்' என்று தொடங்கி.

பவத்திலே சேர்தல் தகும். குரை கழல்கள் குறுகினம் - [1]ஆப ரணத்தின் ஒலி செவிப்படாநின்றது. [2]"தடம் தாமரைகட்கே கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" என்று வேண்டிக்கொண்டது பெற்றோம். (6)

1054.

குரை கழல்கள் குறுகினம்; நம் கோவிந்தன் குடிகொண்டான்;
திரைகுழுவு கடல்புடைசூழ் தென்னாட்டுத் திலதம் அன்ன
வரை குழுவு மணி மாடம் வாட்டாற்றான் மலர்அடிமேல்
விரை குழுவு நறும் துளவம் மெய்ந்நின்று கமழுமே.

பொ - ரை :—ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடிகளைக் கிட்டப்பெற்றோம்; நம்முடைய கோவிந்தன் என் மனத்தினையே குடி இருப்பாகக் கொண்டான்; அங்ஙனம் கொண்டதனால், அலைகள் திரளுகின்ற கடலால் பக்கங்களில் சூழப்பட்ட தென் நாட்டிற்குத் திலகம் போன்ற, மலைகள் திரண்டாற் போன்ற அழகிய மாடங்களையுடைய திருவாட்டாற்றில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளின்மேலே உள்ள வாசனை சூழ்ந்து வீசுகின்ற நல்ல திருத்துழாயானது என் சரீரத்திலே நிலைபெற்று வாசனை வீசாநின்றது.

வி - கு :—திலதம் அன்ன வாட்டாறு என்க. வாட்டாற்றான் மலரடிமேல் உள்ள நறும் துளபம் மெய்யிலே நின்று கமழும் என்க.

ஈடு :—ஏழாம் பாட்டு. [3]"குறுகினம்" என்ற இது என் கொண்டு அறிவது என்னில், 'பார்க்கலாகாதோ உடம்பு கோயிற் சாந்து நாறுகிறபடி?' என்கிறார்.

குரை கழல்கள் குறுகினம்-[4]அணித்து என்னும் இதனைப் பற்றச் சொல்லுகிறேன் அல்லேன், கிட்டினேம். நம் கோவிந்தன் - [5] அடியார்கட்குச் செல்வமாகப் பாராட்டப்பட்ட கிருஷ்

---

1. குறுகினதற்கு அடையாளம் என்? என்ன, 'ஆபரணத்தின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "குறுகினம்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் "தடம் தாமரைகட்கே" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 6. 9 : 9.

3. நான்காம் அடியினைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

4. "குரை கழல்கள் குறுகினம்" என்ற அநுவாதத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அணித்து' என்று தொடங்கி.

5. "நம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அடியார்கட்கு' என்று தொடங்கி.

ணன். கோவிந்தன் குடி கொண்டான் - [1]"அரவத்து அமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து" என்கிறபடியே, திருவாய்ப்பாடியில் ஐந்து லக்ஷம் குடிகளோடும் கூடக்காணும் இவர் நெஞ்சிலே புகுந்தது. திரை குழுவு கடல் புடை சூழ் தென் நாட்டுத் திலதம் அன்ன வரை குழுவு மணி மாடம் வாட்டாற்றான் - திரை மிக்கிருந்துள்ள கடலாலே சுற்றும் சூழப்பட்டிருப்பதாய், தென் நாட்டுக்கு ஒரு திலகம் போலேயாய், மலைகளை நெருங்க வைத்தாற் போலே மணி மயமான மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றினைக் கலவிருக்கையாகவுடைய சர்வேஸ்வரனுடைய.

விரை குழுவு மலர் அடிமேல் நறும் துளவம் - செவ்வி, குளிர்த்தி, வாசனைகளையுடைத்தான திருவடிகளின்மேலே வாசனை மிக்கிருந்துள்ள திருத்துழாயானது. மெய் நின்று கமழுமே - என் உடம்பு எப்பொழுதும் நாறுகின்றது. [2]"அன்றி மற்றோர் உபாயம் என்?" என்று தோழி சொல்லியும், "வெறி கொள் துழாய் மலர் நாறும்" என்று தாயார் சொல்லியும் போந்த இது, தன் வாயாலே சொல்லும்படி ஆயிற்று. [3]என் வார்த்தை அறிய வேண்டுமாகில் என் உடம்பை மோந்து பார்க்க மாட்டீர்களோ? என்பாள் '**மெய் நின்று கமழுமே**' என்கிறாள். (7)

1055.

மெய்ந்நின்று கமழ் துளவ விரை ஏறு திருமுடியன்,
கைந்நின்ற சக்கரத்தன் கருதும் இடம் பொருது, புனல்
மைந்நின்ற வரை போலும் திரு உருவ வாட்டாற்றற்கு
[4] எந் நன்றி செய்தேனா என் நெஞ்சில் திகழ்வதுவே?

---

1. "கோவிந்தன் குடி கொண்டான்" என்றதற்குத் திருஷ்டாந்தத்தோடு பாவம் அருளிச்செய்கிறார் 'அரவத்து' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி, 5. 2 : 10.

2. "மெய் நின்று கமழும்" என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் "அன்றி மற்றோர்" என்று தொடங்கி.
"அன்றி மற்றோர்" என்பது, திருவாய்மொழி, 8. 9 : 10.
"வெறி கொள்" என்பது, திருவாய்மொழி, 4. 4 : 3.

3. மெய்ந்நின்று கமழுமாறு அறியும் வகை யாங்ஙனம்? என்ன, 'என் வார்த்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "செய்த நன்றி தேடிக் காணாதே கெடுத்தாய் தந்தாய் என்ற அத்வேஷ ஆபிமுக்யங்களும் ஸத் கர்மத்தால் அல்ல" என்ற ஸ்ரீ ஸூக்தி இங்கு நினைத்தல் தகும். ஆசார்ய ஹ்ருதயம், பிரகரணம், 2. சூத். 22.

போ - ரை :—திருமேனி முழுதிலும் நின்று கமழ்கின்ற திருத் துழாயினது வாசனை ஏறுகின்ற திருமுடியையுடையவனும், நினைக்கும் இடத்திற்குச் சென்று போரைச் செய்து மீண்டு வந்து திருக்கரத்திலே நிற்கும் சக்கரத்தையுடையவனும், கடல் நீர் போன்றும் மேகங்கள் தங்கியிருக்கின்ற மலையினைப் போன்றும் அழகிய நிறத்தினையுடைய திருவாட்டாற்றில் எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமானுக்கு என்ன நன்மையைச் செய்தேனாகக் கொண்டு அவன் என் மனத்திலே நிலைபெற்று விளங்குவது?

வி - கு :—திருமுடியனும் சக்கரத்தனும் ஆன திரு உருவ வாட்டாற்றான் என்க. கருதும் இடம் சென்று பொருது மீண்டு வந்து கைந் நின்ற சக்கரத்தன் என்க. புனல்போலும் வரைபோலும் திரு உருவம் என்க. 'மைந்நின்ற' என்றது, வரைக்கு அடைமொழி. அன்றிக்கே, [1] புனல் போலும் மை போலும் நின்ற வரை போலும் திரு உருவம் என்னலுமாம். உருவம் - நிறம்.

ஈடு :—எட்டாம் பாட்டு. [2] மிக உயர்ந்த மேன்மையினை உடையனான எம்பெருமான் திருவாட்டாற்றிலே வந்து சுலபனாய் என் மனத்திலே வந்து புகுந்து பேரொளியன் ஆகைக்கு நான் என்ன நன்மை செய்தேன் என்கிறார்.

மெய் நின்று கமழ் துளவம் விரை ஏறு திருமுடியன் - திருமேனியிலே நின்று கமழாநின்றுள்ள திருத்துழாயின் வாசனையானது கொழித்து ஏறடாநின்றுள்ள திருமுடியையுடையவன். [3] கடலில் நீர் மலையில் ஏறக் கொழித்தாற்போலே காணும் மலர் அடி மேல் திருத்துழாயின் வாசனையானது மெய் எல்லாம் கொண்டு தலைக்கு மேலே போனபடி. கருதும் இடம் பொருது கைந் நின்ற சக்கரத்தன் - குறிப்பினை அறிகின்றவன் ஆகையாலே சர்வேஸ்வரன் திருவுள்ளத்தின் கருத்து அறிந்து போரிலே புக்கு எதிரிகளை அழியச் செய்து வெற்றி

---

1. "மய்யோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
அய்யோ இவன் வடிவு என்பதொர் அழியா அழகுடையான்"
என்றார் கம்பநாடரும்.

2. பின் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. மேற் பாசுரத்திலே உள்ள "மலர்அடி மேல்" என்றதனையும் கூட்டித் "திருமுடியன்" என்னுமளவும் கடாக்ஷித்து ரசோக்தியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'கடலில் நீர்" என்று தொடங்கி.

கொண்டு [1]"மீண்டு வந்து அம்பருத்தூணியை அடைந்தது" என்கிறபடியே, கையிலே வந்து இருக்குமாயிற்று; [2]"ஸ்ரீராம பிரானது பக்கத்திலே வந்து நின்றார்" என்றாற் போலே.

[3]"அத ஹரி வர நாதః - ஒரு முத்தின் குடை நிழலிலே பையல் பெருமாளுக்கு எதிராக வந்து தோன்றினவாறே பொறுக்கமாட்டாமை மேல் விழுந்து, நெடும்போது பொருது இளைப்பித்து, அவன் மாயப்போர் செய்யத் தொடங்கின அளவானவாறே, 'இனி நமக்கும் அது வேண்டிவரும்; அது நமக்குத் தக்கது அன்று; பெருமாள் செய்த சூளுறவை நாம் அழிக்க ஒண்ணாது' என்று மீண்டார். [4]ராமேண ஹி ப்ரதிஜ்ஞாதம் - சத்திய சங்கல்பரான பெருமாள் சூளுறவு செய்தார். ஹர்ய்ருக்ஷகண ஸந்நிதௌ - வீரர்கள் திரள் நடுவே சூளுறவு செய்ததும். ஆனபின்பு இவர்க்குப் போர் செய்தற்கு இடம் இல்லாமல் ஆக்க ஒண்ணாது என்று பார்த்தார். ஹரி வர நாதః - [5]தாம் செய்த இக் காரியம் தம் சேனையில் செய்வார் இல்லாமல் செய்தார் அல்லர்; பொறுக்கமாட்டாமையாலே செய்தாரித்தனை. பிராப்ய ஸங்க்ராம கீர்த்திம்-[6]பூசல் புண்ணியம் என்று

---

1. ஸஶரோ ராவணம் ஹத்வா ருதிராக்தః க்ருதச்சவிః
க்ருதகர்மா நிஶிதவத் ஸ்வதூணீம் புநராவிஶத்.

என்பது, ஸ்ரீ ராமா. யுத். 111 : 20.

2. கையிலே வந்து இருத்தலுக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'ஸ்ரீ ராம பிரானது' என்று தொடங்கி.

அதஹரி வரநாதః ப்ராப்ய ஸங்க்ராம கீர்த்திம்
நிஶிசர பதிம் ஆஜௌ யோஜயித்வா ஶ்ரமேண
ககநமதி விஶாலம் லங்கயித்வா அர்க்க ஸூநுః
ஹரிவர கணமத்யே ராம பார்ஶ்வம் ஜகாம.

என்பது, ஸ்ரீராமா. யுத். 40 : 29.

3. எடுத்த சுலோகத்துக்குப் பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம் பற்றிப் பதத்தை எடுக்கிறார் "அதஹரி" என்று தொடங்கி. சுலோகத்துக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'ஒரு முத்தின்' என்று தொடங்கி.

4. அப்படிப் பெருமாள் சூளுறவு செய்தாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "ராமேண" என்று தொடங்கி.

ராமேண ஹி ப்ரதிஜ்ஞாதம் ஹர்ய்ர்க்ஷகண ஸந்நிதௌ
உத்ஸாதநம் அமித்ராணாம் ஸீதாயைః பரிவஞ்சிதா.

என்பது, ஸ்ரீராமா. சுந். 51 : 32. இது, இராவணனைப் பார்த்துத் திருவடி கூறியது.

5. ஹரிநாதః என்னாமல் "ஹரிவரநாதః" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தாம் செய்த' என்று தொடங்கி.

6. பூசல் புண்ணியம் - போரிலே வெற்றி; வீரஸ்ரீ.

தனியே ஒன்று உண்டே அன்றோ; அதனால் வந்த புகழினைத் தாம் படைத்தார். நிஶிசரபதிம் - [1]களவுபூசல் செய்வார்க்கு ஒதுங்க நிழலான பையலை; [2] இராஜபுத்திரர்களை அகற்றித் தனி இடத்திலே பிராட்டியைப் பிரித்த பையலே அன்றோ. ஆஜௌ - அவர்களுக்கு நிலம் அல்லாததான செவ்வைப் பூசலிலே. யோஜயித்வா ஶ்ரமேண - அவனை இளைப்போடே கூட்டினார்; [3]தாம் புகழோடே கூடினார். ககந மதி விஶாலம் லங்கயித்வா - நடு இடைவெளி பெருத்திருக்கிற ஆகாயத்தை வருத்தம் அறக் கடந்தார். அர்க்க ஸூநு: - அது செய்தபடி சூரியபுத்திரன் என்று தோற்றும்படியாய் இருந்தது. [4] உதய கிரியிலே தோன்றினால் பின்பு மறைந்து நிற்கக் காணு மித்தனை அன்றோ. ராம பார்ஶ்வம் ஜகாம - பெருமாளைப் பிரிந்தபடியாலே[5]வந்து கிட்டுவதும் செய்தோம் என்று தோற் றும்படி மதிக்கத் தக்கது ஒன்று செய்து வாராமையாலே, நேர் கொடுநேர் முன் நிற்க மாட்டாதே பெருமாள் அருகே போய் நின்றார். [6]பையல் தலையைப் பிடுங்கிக் கொடு வந்து திருவடி களிலே இடப்பெறுதநாம் என்சொல்லி முன்பே நிற்பதென்று பெருமாளருகே வந்து நின்றார்.

---

1. ராக்ஷஸம் என்னுமல் "நிஶி சர பதிம்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'களவு பூசல்' என்று தொடங்கி.

2. அவன் செய்த களவு பூசலைக் காட்டுகிறார் 'இராஜபுத்திரர்களை' என்று தொடங்கி.

3 மேலே காட்டிய சுலோகத்திலுள்ள "கீர்த்திம் - பிராப்ய" என்ற தனைத் திருவுள்ளம்பற்றித் 'தாம் புகழோடே கூடினார்' என்கிறார்.

4. சூரியன் அங்ஙனம் வருத்தம் அறக் கடப்பனோ? என்ன, 'உதய கிரியிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. 'வந்து கிட்டுவதும் செய்தோம்' என்றது, வந்து கிட்டுமிடத்தில் இன்னது செய்தோம் என்று தோற்றும்படி என்றவாறு.

6. 'மதிக்கத் தக்கது ஒன்று செய்து வாராமையாலே' என்றதனை விவரணம் செய்கிறார் 'பையல் தலையை' என்று தொடங்கி.

மேலே காட்டிய சுலோகப் பொருளோடு,

கொழுமணி முடிகள் தோறும் கொண்டன குழுவின் கூட்டம்
அழுதயர் உறுகின்றான் தன் அடித்தல மதனிற் சூட்டித்
தொழுது அயல் நாணி நின்றான் தூயவர் இருவரோடும்
எழுபது வெள்ள யாக்கைக்கு ஓர் உயிர் எய்திற் றன்றே.

என்ற செய்யுள் ஒப்பு நோக்கலாகும். கம்பராமா. உயுத். மகுடபங்கப் படலம், 27.

புனல் மைந் நின்ற வரை போலும் திரு உருவ வாட்டாற்றார்க்கு-புனல் போலவும் மைபோலவும் நின்ற வரை போலவும் இருக்கிற திருநிறத்தை யுடைய திருவாட்டாற்றானுக்கு. அன்றிக்கே, மை மாறாத வரை போலே என்னுதல். [1] வாட்டாற்றார்க்கு என்றது - உயர்வுப் பன்மை அன்று; வாட்டாற்றானுக்கு என்றபடி. எந் நன்றி செய்தேனோ - என்ன நன்மை செய்தேனாக. [2] பெரியவுடையாரைப் போலே தடையோடே முடிந்தேனோ? திருவடியைப் போலே "காணப்பட்டாள் சீதை" என்று வந்தேனோ? அன்றியே, தன்னுடைய ஆணையைப் பின்பற்றினவன் ஆம்படி விதித்த கர்மங்களைச் செய்து போந்தேனோ? என்ன நன்மை செய்தேனாக என் நெஞ்சிலே புகுந்த பின்பு பெறாப் பேறு பெற்றாற் போலே விளங்கா நின்றான்? [3] இறைமைத் தன்மைக்கு அறிகுறியான தார் அது, நினைத்தது செய்து முடிக்கவல்ல கருவி அது, வடிவழகு அது, இப்படித் துறைதோறும் தலைமை பெறும்படி இருக்கிறவன் என் நெஞ்சிலே புகுந்து பெறாப் பேறு பெற்றானாய் இரா நின்றான். (8)

1056.

திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்
திகழ்கின்ற திருமாலார் சேர்விடம் தண் வாட்டாறு;
புகழ் நின்ற புள்ளூர்தி, போர் அரக்கர் குலம் கெடுத்தான்,
இகழ்வுஇன்றி, என்நெஞ்சத்து, எப்பொழுதும் பிரியானே.

---

1. வியாக்கியானத்தைப் பார்க்கும்போது "வாட்டாற்றார்க்கு" என்ற பாடம் இருத்தல் வேண்டும். மேலே "திருமுடியன்", "சக்கரத்தன்" என்று ஒருமை இருப்பதனாலே அதற்கு இயைய 'வாட்டாற்றானுக்கு என்றபடி' என்று பொருள் அருளிச்செய்கிறார்.

2. பெரிய உடையார் - சடாயு. திருவடி - அநுமான்.

> தத்ர த்ருஷ்டா மயா ஸீதா ராவணாந்தஃபுரே ஸதீ
> ஸந்ந்யஸ்ய த்வயி ஜீவந்தீ ராமா ராம மநோரதம்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 65: 10.

> கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்;
> தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்;
> அண்டர் நாயக! இனித் துறத்தி ஐயமும்,
> பண்டுள துயரும்; என்று அநுமன் பன்னுவான்.

என்பது கம்பராமாயணம்.

3. மேலே கூறியவற்றை யெல்லாம் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'இறைமைத் தன்மைக்கு' என்று தொடங்கி.

பொ - ரை :—விளங்குகின்ற திருமார்பிலே பெரிய பிராட்டியாரோடும் விளங்குகின்ற திருமாலார் சேர்ந்து வசிக்கின்ற இடம் குளிர்ந்த திருவாட்டாறு என்னும் திவ்வியதேசமே யாகும்; நிலைபெற்ற புகழினையுடைய கருடப் பறவையை வாகனமாகவுடையவன்; போரினைச் செய்கின்ற அரக்கர் குலத்தினை அழித்தவன்; வெறுப்பு இல்லாமல் எப்பொழுதும் என் மனத்தின்கண் பிரியாமல் இருக்கிறான் என்கிறார்.

வி - கு :—புகழ் நின்ற என்பது, ஊர்திக்கு அடைமொழி; ஊர்தி - ஊர்கின்றவன். புள்ளிற்கு அடை ஆக்கலுமாம். இகழ்வின்றிப் பிரியான் என்க.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [1] எல்லாப் பொருள்களாலும் நிறைவு பெற்றிருக்கின்ற தான் இகழாதே என் மனத்தினை எக்காலத்திலும் விடுகின்றிலன்: ஒருவனுடைய காதல் இருந்தபடி என்! என்று பிரீதர் ஆகிறார்.

திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார் - வெறும் புறத்திலே விளங்காநின்றுள்ள திருமார்விலே எழுந்தருளியிருக்கின்ற பெரியபிராட்டியாருடைய சேர்த்தி அழகாலும் விளங்காநின்றுள்ள திருமகள் கேள்வன் ஆனவன். [2] ஏனையோரும் '**ஸ்ரீமான்கள்**' என்று சொல்லப்படுவர்கள் அன்றோ உபசார வழக்காக; அப்படி அன்று இங்கு; **திருமங்கைதன்னோடும் திகழ்கையாலே ஸ்ரியஃபதி** என்று பேரையுடையவன். "திருமாலார்" என்ற [3] இந்தப் பன்மைக்கும் ஒரு பயனும் இன்று; திருமாலானவன் என்றபடி; [4] **புள்ளூர்தி** என்றதனைப் போன்று. சேர்வுஇடம்

---

1. பின் மூன்று அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "பிரியானே" என்றதனை நோக்கிப் 'பிரீதர் ஆகிறார்' என்கிறார்.

2. "திருமாலார் என்னாநிற்க, "திருமங்கை தன்னோடும்" என்றதற்குக் கருத்து என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஏனையோரும்' என்று தொடங்கி.

"திருவும் ஆரமும் அணிந்தனன் சிரீதர மூர்த்தி"

என்றதும் இது பற்றியே என்க. கம்பராமாயணம் பால காண்டம் அகலிகைப் படலம், செய். 26.

3. 'இந்தப் பன்மைக்கும்' என்ற உம்மை மேல் திருப்பாசுரத்தில் "வாட்டாற்றார்க்கு" என்ற பன்மையைத் தழுவுகிறது.

4. புள்ளூர்தி என்ற திருப் பெயரைப் போன்று திருமால் என்ற திருப்பெயரும் முக்கியம் என்றபடி.

தண் வாட்டாறு - [1] திருமகள்கேள்வன் என்றதனைப் போன்ற தாயிற்று அவ் ஊரை இருப்பிடமாக உடையனாய் இருக்கிற அதுவும்.

புகழ் நின்ற புள் ஊர்தி - புகழ் எல்லாம் தன் பக்கவிலே கிடக்கும்படி இருக்கிற பெரிய திருவடியை வாகனமாகவுடையவன். [2]புகழ் அடங்கலும் கிடப்பதும் அவன் பக்கலிலே; அதனை உடையவன் என்கிற இதுவே இவனுக்கு ஏற்றம். போர் அரக்கர் குலம் கெடுத்தான் - செவ்வைப் பூசலிலே அரக்கர் குலத்தை அடியோடு முடித்தான். இகழ்வு இன்றி என் நெஞ்சத்து எப்பொழுதும் பிரியானே - [3]பிறப்பு இறப்புக்களிலே உழலுகின்றவன் என்று பிற்காலியாதே, ஒரு காரியப் பாட்டாலே செய்தானாய், பின்பு விட்டுக் கைப்பிடிக்கை அன்றிக்கே எல்லாக் காலத்திலும் விடுகின்றிலன். [4] பித்தத்தினாலே பீடிக்கப் பட்டவர்கள் சந்தனச் சேற்றினின்றும் கை வாங்கமாட்டாதாற் போலே கணநேரமும் பிரியமாட்டுகிறிலன். (9)

1057.

பிரியாது ஆட்செய் என்று, பிறப்பறுத்து, ஆள்அறக் கொண்டான்;
அரியாகி, இரணியனை ஆகம் கீண்டான், அன்று;
[5]பெரியார்க்கு ஆட்பட்டக்கால், பெறாத பயன் பெறுமாறு,
வரிவாள்வாய் அரவணைமேல் வாட்டாற்றான் காட்டினனே.

பொ - ரை :—நம்மை விட்டுப் பிரியாமலே நமக்கு அடிமை செய்வாய் என்று நம்முடைய பிறப்பையும் அறுத்து அவனுக்கே அடிமையாகக் கொண்டான். அக் காலத்தில் நரசிங்கமாகி இரணியனுடைய

1. "திருமாலார்" என்றதனையும் சேர்த்துக் கொண்டு "சேர்விடம் தண் வாட்டாறு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'திருமகள்கேள்வன்' என்று தொடங்கி.

2. புகழ் நிற்பது அவன் பக்கலிலே யானால் இறைவனுக்கு ஏற்றம் என்? என்ன, 'புகழ் அடங்கலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "இகழ்வின்றி" என்றதற்கும், "எப்பொழுதும்" என்றதற்கும் பாவம் அருளிச்செய்கிறார் 'பிறப்பு' என்று தொடங்கி.

4. மேலே கூறியதனைத் திருஷ்டாந்தத்தோடு விவரணம் செய்கிறார் 'பித்தத்தினாலே' என்று தொடங்கி.

5. பொலந்தார் இராமன் துணையாகப் போதந்து
இலங்கைக்கு இறைவற்கு இளையான்—இலங்கைக்கே
பேர்ந்து இறை யாயதூஉம் பெற்றான்; பெரியாரைச்
சார்ந்து கெழீஇயார் இல்.

என்பது, பழமொழி நானூறு.

மார்பினைப் பிளந்தான்; பெரியார்கட்கு அடிமைப்பட்டால் அரிய பெரிய பயனைப் பெறுமாறு, வரிகளையுடைய ஒளி பொருந்திய வாயினையுடைய ஆதிசேஷனைப் படுக்கையாகவுடைய வாட்டாற்றான் கண்கூடாகக் காட்டினான் என்கிறார்.

வி-கு :—பெறாத பயன் பெறுமாறு வாட்டாற்றான் காட்டினன் என்க.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1]பெரியோரை அடைந்தால் எதிர்த் தலையைப் பாராதே தங்கள் தரத்தைக் கொடுப்பார்கள் என்னும் இவ்விஷயத்தை, திருவாட்டாற்றில் **நாயனார்** என் பக்கலிலே காட்டினார் என்கிறார்.

பிரியாது ஆள் செய் என்று பிறப்பு அறுத்து ஆள் அறக் கொண்டான் - 'நம்மைப் பிரியாதே நமக்கு அடிமை செய்' என்று அருளிச்செய்து, பிறப்பினையும் போக்கி, நித்தியமாகச் செய்யப்படுகின்ற தொண்டினையும் எனக்குக் கொடுத்தான்; [2] "எனக்கே ஆட் செய்" என்னவேண்டும் என்று நாம் "எம் மா வீடு" என்ற திருவாய்மொழியிலே வேண்டிக் கொண்டபடியே செய்தான். "இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை" என்று 'பொய்ந் நின்ற ஞானமும்' என்ற பாசுரத்தில் விரும்பியபடியே பிறப்பினை அறுத்தான். "தனக்கே யாக" என்று "எம் மா வீடு" என்ற திருவாய்மொழியிலே வேண்டிக் கொண்டபடியே ஆள் அறக் கொண்டான். அரியாகி இரணியனை ஆகம் கீண்டான் - இதனால், [3] இதற்கு முன்னரே தமக்குச் செய்தது ஓர் உபகாரத்தினைச் சொல்லுகிறார். ஸ்ரீ நரசிங்கமாய் இரணியனுடைய முருட்டு உடலை வருத்தம் இன்றியே கிழித்தான். அன்று - [4] அன்று அப்படிச் செய்தான்; இன்று இப்படிச்

---

1. பின் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் "எனக்கே ஆட்செய்" என்று தொடங்கி.

3. 'இதற்கு முன்னரே தமக்குச் செய்தது ஓர் உபகாரத்தைச் சொல்லுகிறார்' என்றதற்குக் கருத்து, தாம் அநுபவிப்பதற்காகவே அவதாரங்களைச் செய்தான் இறைவன் என்பது.

4. "அன்று" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அன்று அப் படிச் செய்தான்' என்று தொடங்கி.

செய்தான். [1]"இதனைச் செய்யவேண்டும் என்று என்னை நியமிக்கவேண்டும்" என்கிறபடியே, என் பிறப்பினை அறுத்து நித்தியமான தொண்டினைச் செய்யச் செய்தான். [2]"முகப்பே கூவிப் பணி கொள்ளாய்" என்றே அன்றோ இவர் வேண்டிக் கொண்டது.

பெரியார்க்கு ஆள் பட்டக்கால் பெறுத பயன் பெறுமாறு வரி வாள் வாய் அரவு அணைமேல் வாட்டாற்றான் காட்டினன்-பெரியோர்களைச் சார்வதனாலே அரிய பெரிய பிரயோஜனத்தைப் பெறுவர்கள் என்னும் இவ் அர்த்தத்தை, வரி வாள் வாய் அரிவணைமேல் வாட்டாற்றான் என் பக்கலிலே காட்டினான். [3]"விஷ்ணுவே! நான் மிக்க துன்பமுற்றவன் அடியேனுக்குக் கருணை செய்க; மிக்க வறியனும் பெரியோர்களை அடைந்தவனுமாய் இருக்கிற ஒருவன் ஒருக்காலும் குறைவு அடையமாட்டான்" என்கிறபடியே, [4]பெரியோர்களை அடைந்தால், பின்னர் அவர்கள் கொள்ளுகிறவன் சிறுமை பார்த்தல், கொடுக்கிறவன் பெருமை பார்த்தல் செய்யாதே கொடுப்பர்கள் என்று இங்ஙனே நாட்டிலே ஒன்று உண்டு; அதனை என் பக்கலிலே காட்டினான். [5]பிரஹ்லாதன் முதலாயினார்களைக் கொண்டு கவி பாடுவித்துக் கொண்டானே? (10)

---

1. இன்று செய்தது யாது? என்ன, 'இதனைச் செய்யவேண்டும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே
ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாம் இதி மாம் வத.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15 : 7.

2. 'இதனைச் செய்யவேண்டும் என்று என்னை நியமிக்கவேண்டும்' என்னும் இது, "எம் மா வீடு" என்னும் திருவாய்மொழியில் சொல்லப்படவில்லையே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "முகப்பே" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 8. 5 : 7.

3. பெரியோர்கள் தன்னை அடைந்தவர்கட்கு அரிய பெரிய பயனைக் கொடுப்பர்கள் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'விஷ்ணுவே' என்று தொடங்கி.

ஸஃ அஹம் ப்ருஶார்த்தஃ கருணம் குரு த்வம்
ஸம்ஸார கர்த்தே பதிதஸ்ய விஷ்ணோ
மஹாத்மநாம் ஸம்ஶ்ரயம் அப் யுபேதஃ
நைவாவஸீததி அதி துர்க்கதோ பி."

என்பது, விஷ்ணு தர்மம், கத்திரபந்து உபாக்யாநம்.

4. சுலோகத்தின் பொருளை விவரணம் செய்கிறார் 'பெரியோர்களை' என்று தொடங்கி.

5. இது, பிரஹ்லாதன் முதலாயினார்கட்கும் இல்லையோ? அவர்களைக் காட்டிலும் இவர் பெற்ற சிறப்பு யாது? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'பிரஹ்லாதன்' என்று தொடங்கி.

1058.

காட்டித் தன் கனை கழல்கள் கடு நரகம் புகல் ஒழித்த
வாட்டாற்று எம்பெருமானை வளம் குருகூர்ச் சடகோபன்
பாட்டாய தமிழ்மாலை ஆயிரத்துள் இப் பத்தும்
கேட்டு ஆரார் வானவர்கள் செவிக்கு இனிய செஞ்சொல்லே.

பொ - ரை :—ஒலிக்கின்ற வீரக்கழலைக் கட்டிய தன் திருவடிகளை எனக்குக் காண்பித்துக் கொடிய நரகத்திலே புகுதலை நீக்கிய திருவாட்டாற்றில் எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமானை, வளப்பம் மிக்க திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட பாட்டுக்களாகிய தமிழ்மாலை ஆயிரத்துள் செவிகளுக்கு இனிய செஞ்சொல்லாகிய இப் பத்துத் திருப் பாசுரங்களையும் நித்தியசூரிகள் கேட்டு மனம் நிறைவுறுர்கள் ; மேலும் மேலும் கேட்க விரும்புவர் என்றபடி.

வி - கு :—செவிக்கு இனிய செம் சொல்லாகிய இப் பத்தும் வானவர்கள் கேட்டு ஆரார் என்க. நரகம் புகல் ஒழித்த எம்பெருமான் என்க.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழியைக் கற்க உரியவர்கள் நித்தியசூரிகள் என்கிறுர்.

தன் கனை கழல்கள் காட்டி - [2]காரணம் இன்றிச் சொரூப ரூப குண விபூதிகளைக் காட்டி. கடு நரகம் புகல் ஒழித்த - "இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை" என்று விரும்பியவாறே செய்தானாயிற்று. [3] அறிவுடையார்க்குப் பொறுக்கமுடியாத நரகம் இவ் உலக வாழ்வே அன்றோ. வளம் குருகூர்ச் சடகோபன் - அழகியதான திருநகரியைத் தம்மதாக உடையரான ஆழ்வார். [4] பாட்டாய தமிழ் மாலை ஆயிரத்துள் இப் பத்தும் கேட்டு - "பாடத்திலும் இசையிலும் இனியதான" என்கிற படியே, இசையிலே புணர்ப்புண்ட திருவாய்மொழி ஆயிரத்திலும் இப் பத்தினையும் கேட்டு. ஆரார் வானவர்கள் - [5] இதனைச்

---

1. நான்காம் அடியினைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறுர்.

2. "காட்டித் தன் கனை கழல்கள்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'காரணம் இன்றி' என்று தொடங்கி. "கழல்" என்றது, திருமேனிக்கு உபலக்ஷணம்.

3. "கடுநரகம்" என்றதில் 'கடு' என்ற அடைமொழிக்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'அறிவுடையார்க்கு' என்று தொடங்கி.

4. "பாட்யே கேயேச மதுரம்"
என்பது, ஸ்ரீராமா, பால. 4 : 8. பாட்டு - இசை.

5. "ஆரார்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'இதனைச் சொல்ல' என்று தொடங்கி. 'இதனைச் சொல்ல' என்றது, இங்கு இருந்து சென்ற முக்தர்கள் சொல்ல என்றபடி.

சொல்லக் கேளாநின்றால் 'இன்னம் சொல், இன்னம் சொல்' என்னுமித்தனை போக்கி, கேட்டவற்றைக் கொண்டு மனம் நிறைவு பெறார்கள் ஆயிற்று.[1]பகவானுடைய குணங்களை அநுபவித்து, அதற்குப் போக்கு விடுகைக்குப் பாசுரம் இன்றிக்கே விம்மல் பொருமலாய்ப் படுமவர்கள், இப் பாசுரம் கேட்டால் விடார்களே அன்றோ.

[2]அதற்குக் காரணம் என்? அவனுடைய சீல குணங்களை அநுபவித்தோ? என்னில், இப் பாசுரத்துக்குத் தோற்று என்கிறார். செவிக்கு இனிய - [3]"கேட்டபோதே இனிமை பயப்பது" என்கிறபடியே, செவிவழியே புக்கு நெஞ்சுக்கு இனிதாகை அன்றிக்கே, செவியில் பட்டபோதே பிடித்து இனிதாய் இருக்கையாலே. அதற்குக் காரணம் என்? என்னில், **செஞ்சொல்லே** - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப் பட்டிருக்கையாலே. [4]"சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே" என்னு "செந்தமிழ் பத்தும்" என்றாரன்றோ இவர்தாமே. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

அருளால் அடியில் எடுத்த மால் அன்பால்
இருள் ஆர்ந்த தம் உடம்பை இச்சித்து—இரு விசும்பில்
இத்துடன் கொண்டு ஏக இவர் இசைவு பார்த்திருந்த
சுத்தி சொல்லும் மாறன் செஞ்சொல்.

—: o :—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. ஆராமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'பகவானுடைய' என்று தொடங்கி.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அதற்குக் காரணம்' என்று தொடங்கி.

3. ஏவம் பஹுவிதாம் சிந்தாம் சிந்தயித்வா மஹாகபி:
ஸம்ஶ்ரவே மதுரம் வாக்யம் வைதேஹ்யா வ்யாஜஹார ஹ.
என்பது, ஸ்ரீராமா. சுந். 31 : 1.

4. "செஞ்சொல்" என்றால் மனம் வாக்குக் காயம் என்னும் முக்கரணங்களிலும் மாறுபாடில்லாத சொல் என்பதனைக் காட்டுமோ? எனின், "சிந்தையாலும்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "சிந்தையாலும்" என்றது, திருவாய்மொழி, 6. 5 : 11.

ஏழாந் திருவாய்மொழி — "செஞ்சொல்"

முன்னுரை

ஈடு :—[1] "விதி வகையே" என்கிறபடியே அவன் தம்மிடத்தில் பரதந்திரனாக நிற்கிறபடியை அருளிச்செய்தார். அவ் வழியாலே "விரை குழுவு நறும் துளவம் மெய்ந் நின்று கமழுமே" என்றும், "தலை மேல தாள் இணைகள்" என்றும் அவன் தன் திருமேனியோடே புகுந்து கலந்தபடியை அருளிச்செய்தார். [2] தம்மோடே வந்து கலந்து தம்மிடத்தில் பரதந்திரனாய்த் திருமேனியை விடமாட்டாதே அவன் செய்கிற காதற் பெருக்கினைக் கண்டார்; கண்டவர், [3] "இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை" என்று நாம் அடியிலே வேண்டிக் கொள்ளச் செய்தேயும் இங்கு நம்மை வைத்தது ஒரு காரியத்திற்காக என்று இருந்தோம்; அதாவது, இப் பிரபந்தத்தைத் தலைக்கட்டுவித்துக் கொள்ளுகை என்றபடி; அது அவ்வளவில் அன்றிக்கே நம் உடம்பினை விரும்பி விடமாட்டாமையாலேயாய் இருந்தது; இவன் வெறும் உடம்பனாய் இருந்தான்; [4] "கவி பாடுவித்துக் கொள்ளுகை என்பது ஒரு வியாஜமாத்திரம்: அது பிரதானம் அன்று; இதுவே இவனுக்கு நினைவு" என்று நினைந்தார்.

நினைந்தவர், [5] 'இவன் இவ் உடம்பினை விரும்புகிறது நம்மிடத்துள்ள காதலாலே அன்றோ; இப்படி நம்மை விரும்பின

1. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி மேல் திருவாய்மொழியிற் கூறியனவற்றை அநுவதிக்கிறார் "விதிவகையே" என்று தொடங்கி. 'அவன் தன் திருமேனியோடே புகுந்து கலந்தபடியை அருளிச்செய்தார்' என்றது முடிய அநுவாதம்.

2. 'தம்மோடே வந்து' என்று தொடங்கி இயைபு அருளிச்செய்கிறார்.

3. "என்றைக்கும்" என்ற திருவாய்மொழியில் அவன் தம்மை இங்கு வைத்ததற்குக் காரணம் கவிபாடுகைக்கு என்று அருளிச்செய்யாநிற்க, இத் திருவாய்மொழியில் தம் உடம்பில் அவன் வைத்த காதலாலே என்று அருளிச்செய்வது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "இந் நின்ற" என்று தொடங்கி. 'வெறும் உடம்பனாய் இருந்தான்' என்றது, கேவலம் சரீரத்திலே வைத்த ஆசையினனாயிருந்தான் என்றபடி.

4. ஆயின், பிரபந்தம் பாடுவிக்கவில்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கவிபாடுவித்து' என்று தொடங்கி. இதுவே - சரீரத்தினை விரும்பி விடமாட்டாத இதுவே.

5. இங்ஙனம் விரும்புகிறவனைத் தவிரவேண்டும் என்றால் தவிர்வானோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவன்' என்று தொடங்கி.

இவ்வளவிலே நம்முடைய விருப்பத்தை முடித்துக் கொள்ளு வோம்' என்று பார்த்துத் 'தேவர் திருவுள்ளத்தில் ஓடுகிறது என்?' என்றார். 'நான் உடம்பனையே வேறு ஒன்று அறியாமல் படுகிற பாடு அன்றோ, மற்று உண்டோ?' என்றான். 'அங்ஙன் ஒண்ணாது; தேவர் [1] இச் சரீரத்தில் செய்தருளும் விருப்பத் தைத் தவிரவேண்டும்' என்று விண்ணப்பம் செய்தார். [2] இவர் விலக்கினது அவனுடைய காதல் பெருகுவதற்கு உடலா யிற்று; [3] தந்தாமைக் கொண்டு அருமைப் படுத்துவார்கள் அன்றோ மேல் விழுகைக்காக; அது போலே ஆயிற்று. இப் படி இவன் இவ் உடம்பிலே செய்கிற ஆதரத்தினைக் கண்டு, [4] 'இவனுடைய காதற் பெருக்கு இருந்தபடியைக் காணின் இவ் உடம்போடே நம்மைக் கொடு போக நினைத்திருக்கிறான் போலே இருக்கிறது; அப்படிச் செய்யும்போது இவ் உலக வாழ்க்கை நமக்கு என்றும் உள்ளதாய் விடும்; இங்கே இருந்து இதற்கு ஒரு முடிவு கண்ட தாமத்தை இழந்தோமாவோ மித்தனை; இதனைக் கழித்துக்கொள்ள வேண்டும்' என்று பார்த்தார்.

[5] பார்த்தவர், 'தேவர் இச் சரீரத்தை விரும்புகைக்கு அடி என்னிடத்தில் செலுத்தும் காதற் பெருக்கே அன்றோ, நான் இதனை விரும்ப வில்லை; தேவரும் இவ் உடம்பில் செய்கிற விருப்பத்தினைத் தவிரவேண்டும்' என்ன, [6] 'நீர் உம்முடைய விருப்பத்தை விடாதவாறு போன்று நாமும் நம் விருப்பத்தை

1. இத் திருவாய்மொழியில் வருகிற "மங்க ஒட்டு உன் மா மாயை" என்னும் பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி 'இச் சரீரத்தில் செய்தருளும் விருப் பத்தைத் தவிரவேண்டும்' என்கிறார்.

2. "நன்கு என் உடலம் கைவிடான்" என்னும் பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'இவர் விலக்கினது' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. அதனை விவரணம் செய்கிறார் 'தந்தாமைக் கொண்டு' என்று தொடங்கி.

4. "ஒரு மா நொடியும் பிரியான்" என்பது போன்றவைகளைத் திரு வுள்ளம்பற்றி 'இவனுடைய' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

5. இத் திருவாய்மொழியில் "மங்க ஒட்டே" என்றும், "மங்க ஒட்டு உன் மா மாயை" என்றும், "பொங்கு ஐம் புலனும்" என்றும் வருகின்ற பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி, ஈஸ்வரன் மும்முறை விரும்புவதாகவும் மும் முறையும் இவர் தவிரச் சொல்வதாகவும் அருளிச்செய்கிறார் 'பார்த்தவர்' என்று தொடங்கி.

6. "அம் தண் திருமாலிருஞ்சோலை, வாழி மனமே கைவிடேல்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'நீர் உம்முடைய' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

விடுவுதோமோ?' என்றான். 'இவன் இப்படி விரும்புகிறது இவ் உடம்பினுடைய இழிவுகளைக் காணாமையால் அன்றோ, இவனுக்கு இதனுடைய தாழ்வுகளைக் காட்டுவோம்' என்று பார்த்து [1]'இவ் உடம்பாகிறது பருத்தல் சிறுத்தல் - வளர்தல் குறைதல்களையுடையதாய், விடத் தக்கதாய் இருப்பது ஒன்று; விரும்பப்படும் ஆத்மாவினைப் போன்று ஒரே தன்மையதாய், வேறுபட்ட சிறப்பினையுடையதாய் இருப்பது ஒன்றுஅன்று; இதனை வெறுத்தருளவேண்டும்' என்றார்; அவ் வார்த்தைகளே இவன் மேல் மேலும் விரும்புவதற்குக் காரணங்கள் ஆயின; மனைவியினது அழுக்கு உகப்பாரைப் போலே எல்லாக் காலத்திலும் இவன் விடமாட்டாதவனாய் இருந்தான்; இவனைக் காற்கட்டியாகிலும்[2] இக் காற்கட்டினை அவிழ்த்துக்கொள்ளுவோம் என்று பார்த்து 'இதில் செய்கிற விருப்பத்தினைத் தேவர் [3]தவிரவேண்டும்' என்று [4]சரணம் புக்கார்.

[5] இவர் சொன்னபடியே செய்ய இழிந்தவன் ஆகையாலே தனக்கு இவ் உடம்பிலே மேன்மேல் விருப்பம் செல்லச் செய்தேயும் இவர் இதனை விரும்பாத பின்பு நாமும் இனி இதனை வருந்தியாவது வெறுப்போம் என்று பார்த்தான் இவரிடத்து அவன் காட்டும் பாரதந்திரியத்தாலே. [6]இவ் உடம்பு ஒழிய அவன் கொடு போவானாய் இருந்தான். ஆக, இப்படியாலே [7]தொடங்கின பாரதந்திரியத்தை முடித்து, 'எல்லாப் பொருள்

---

1. "பொங்கு ஐம்புலனும்" என்னும் பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி 'இவ் உடம்பாகிறது' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. இக் கால் கட்டினை - விரோதியான இந்த உடம்பினை.

3. "மங்க ஒட்டு" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தவிரவேண்டும்' என்கிறார்.

4. "நங்கள் கோனே" என்று சேஷத்வத்தைக் கூறுகையாலும், "மங்க ஒட்டு" என்று பிரார்த்திக்கையாலும், "பிரார்த்தநாமதிঃ - ஶரணாகதிঃ" என்று இருக்கையாலே 'சரணம்புக்கார்' என்கிறார்.

5. இவர் பிரார்த்தித்தால் கழிபெருங்காதலனான அவன் தவிருமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர் சொன்னபடியே' என்று தொடங்கி.

6. 'இவ் உடம்பு ஒழிய அவன் கொடு போவானாய் இருந்தான்' என்றது, "மான் ஆங்கார மனம் கெட" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி.

7. 'தொடங்கின பாரதந்திரியத்தை முடித்து' என்றது, "அருள் பெறுவார்" என்ற திருவாய்மொழியிலே தொடங்கின பாரதந்திரியத்தை முடித்து என்றபடி.

களையும் ஏவுகின்றவனாய் எல்லாப் பொருள்களுக்கும் தலைவனான சர்வேஸ்வரன், தனக்கு இவ் உடம்பிலே விருப்பமும் செல்லாநிற்கச்செய்தே, நாம் 'இதனைத் தவிரவேண்டும்' என்னத் தவிருவதே! இது ஒரு சீல குணம் இருக்கும்படியே!! [1] இவ்விஷயத்தில் ஒருவரும் இழியாதீர்கள்; இழிந்து நான் பட்டதுவே அமையும்' என்று மிகுந்த பிரீதியாலே பிறர்க்குச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

1059.

செஞ்சொற் கவிகாள்! உயிர்காத்து ஆட்
　　செய்ம்மின்; திருமாலிருஞ் சோலை
வஞ்சக் கள்வன், மா மாயன்,
　　மாயக் கவியாய் வந்து, என்
நெஞ்சும் உயிரும் உள் கலந்து,
　　நின்றார் அறியா வண்ணம், என்
நெஞ்சும் உயிரும் அவை உண்டு,
　　தானேயாகி, நிறைந்தானே.

பொ-ரை:—செவ்விய சொற்களையுடைய புலவர்களே! உங்களைப் பாதுகாத்துக்கொண்டு கவிபாடுதலாகிற அடிமையைச் செய்யுங்கோள்; திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற வஞ்சக் கள்வனும் மா மாயனுமான எம்பெருமான் (ஆழ்வாரே! உம்மைக்கொண்டு கவி பாடுவித்துக் கொள்ளப் பாராநின்றேன்) என்று ஒரு மாயம் செய்து வந்து, என் மனத்தினுள்ளும் உயிரினுள்ளும் ஒரு நீராகக் கலந்து, நிற்கின்ற பெரிய பிராட்டியார் முதலாயினாரும் அறியாதபடி, என் மனத்தையும் உயிரையும் அநுபவித்து, என்னைக் காண இடமின்றித் தானேயாகி நிறைந்தவன் ஆனான். ஆதலால், உயிர்காத்து ஆட்செய்ம்மின் என்கிறார் என்க.

வி-கு:—வஞ்சக் கள்வன் வந்து கலந்து உண்டு தானேயாகி நிறைந்தான் என்க. நின்றார் - எப்பொழுதும் நீங்காமல் இருக்கிற பெரிய பிராட்டியார், திருவடி, ஆதிசேஷன் முதலாயினார். நிறைந்தான்; ஆதலால், உயிர் காத்து ஆள் செய்மின் என்க.

---

1. "உயிர் காத்து ஆட்செய்ம்மின்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'இவ் விஷயத்தில் ஒருவரும் இழியாதீர்கள்' என்கிறார்.

ஈடு :—முதற் பாட்டு. [1]'திருவாய்மொழி பாடுவிக்க' என்ற ஒரு வியாஜத்தாலே புகுந்து தம்மிடத்தில் அவன் செய்த காதற் பெருக்கினைக் கண்டு, அவனுக்கு அடிமைசெய்வார் அவனுடைய சீலம் முதலான குணங்களிலே அகப்படாதீர்கள் என்கிறார்.

செம் சொல் கவிகாள்-செவ்விய சொற்களையுடைய புலவீர்காள்! **கவிக்குச் செவ்வையாவது, வேறு ஒரு பிரயோஜனத்தை விரும்பாமல் இருத்தல். பிரயோஜனத்தை விரும்புதல் கவிக்குக் குடிலமாம்.** [2]"இன் கவி பாடும் பரம கவிகள்" என்றும், "செந்தமிழ் பாடுவார்" என்றும் சொல்லுகிறவர்களை ஆயிற்று நினைக்கிறது. [3]"பெருந் தமிழன் நல்லேன்" என்று "வாய் அவனை அல்லது வாழ்த்தாது" என்றவர்கள் அன்றோ வேறு பிரயோஜனத்தைக் கருதாதவர்கள். உயிர் காத்து ஆள் செய்மின் - உங்களை நோக்கிக் கொண்டு நின்று கவிபாடப் பாருங்கோள். [4]நீங்கள் உளராய்க் கவி பாட வேண்டுமே. இத் தலை உண்டானால் அன்றோ அத் தலைக்கு மங்களாசாசனம் செய்யலாவது. [5]'ஆட்செய்ம்மின்' என்கிறார், கவிபாடுதல் வாக்கினால் செய்யப்படுகின்ற அடிமை ஆகையாலே. [6]ஆட்கொள்வான்

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "கவியாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'ஒரு வியாஜத்தாலே புகுந்து' என்கிறார்.

2. "செஞ்சொற் கவிகாள்" என்று விளிப்பது, இன்னாரை என விளக்குகிறார் "இன் கவி பாடும்" என்று தொடங்கி. என்றது, முதலாழ்வார்களைக் குறிக்கிறார் என்றபடி. "இன்கவி" என்பது, திருவாய்மொழி, 7. 9: 6. "செந்தமிழ் பாடுவார்" என்பது, பெரிய திருமொழி, 2. 8: 2.

3. அவர்கள் வேறு பிரயோஜனத்தைக் கருதாதவர்களோ? என்ன, "பெருந்தமிழன்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இதனால், பாடுதற்கு உரியர் அல்லாதாரைப் பாடி எச்சில் வாய் சுத்தி செய்த ஸ்ரீ வால்மீகிபகவான், வியாசபகவான் இவர்களை வேறுபடுத்துகிறது. "பெருந்தமிழன்" என்பது, இரண்டாந் திருவந்தாதி, 74. "வாயவனை" என்பது, முதல் திருவந்தாதி, 11.

4. எங்களை நோக்குவது என்? என்ன, 'நீங்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. பாடுமின் என்னாமல் "ஆட்செய்ம்மின்" என்றது, என்? என்ன, 'ஆட்செய்ம்மின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. உயிர் காப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆட்கொள்வான்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9.6: 7. இதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அடிமை கொள்வாரைப் போலே' என்று தொடங்கி.

ஒத்து என் உயிர் உண்ட மாயன் அன்றோ. அடிமை கொள் வாரைப் போலே புகுந்து மற்றைப் படியேயாய் இருக்கும் பலிப்பது, பாதுகாத்துக் கொள்ளுங்கோள். [1]'ஆழங்காலிலே இழிந்து அமிழ்வார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டு மாறு போலே, கொண்டைக்கோல் நாட்டுகிறார் ஆழ்வார்' என்று **சிற்றாள் கொண்டான்** பணிப்பர். 'இவ்விடம் பரப்புத் துறை, இவ்விடம் மடு' என்று நிலவர் எல்லை குறிக்குமாறு போலே.

[2] **உடையவர்** 'இன்னார் உயிர் என்னுமையாலே அவன் உயிரைக் காத்து ஆள்செய்யுங்கோள்' என்று அருளிச்செய் வர். என்றது, [3] அவன் மேல்விழத் தாங்கள் இருய்க்கையாவது அவனை இழத்தலே அன்றோ; அவன் உயிரைக் காத்தலைச் செய்யுங்கோள் என்றபடி. [4]"வம்மின் புலவீர்" என்று முதலிலே ருசி இல்லாதாரையும் இரந்து அழைக்கிறஇவர், சீலம்முதலான குணங்களிலே இழிகிறவர்களையும் விலக்குகிறார் **பிரீதியின்**

---

1. "உயிர் காத்து ஆட்செய்ம்மின்" என்று ஈடுபட்டுச் சொன்னதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'ஆழங்காலிலே' என்று தொடங்கி. என்றது, எம்பெரு மானுடைய குணங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் சீலகுணம் என்ற ஒன்று மிக மிக ஆற்ற ஒண்ணாதது, இதற்குத் தப்பிப் பிழைப்பது அரிது என்றபடி. கொண் டைக் கோலாவது, நிலவராய் இருப்பார் ஆறுகளிலும் மடுக்களிலும் மேடு பள்ளங்களுக்கு அடையாளமாக நடுகிற கோல்.

2. "உயிர்காத்து ஆட்செய்ம்மின்" என்பதற்கு எம்பெருமானார் நிர் வாகத்தை அருளிச்செய்கிறார் 'உடையவர்' என்று தொடங்கி.

3. அதனை விவரணம் செய்கிறார் 'அவன் மேல் விழ' என்று தொடங்கி. என்றது, என் சரீரத்திலே அவன் காதலைச் செலுத்த, அதனை நான் தடுக்க, பின்னரும் அவன் மேல்விழுந்து காதலைச் செலுத்த, இறைவனே! உன் னுடைய பாரதந்திரியம் நிலைபெறவேண்டுமே என்று அவனைச் சிறையிட்டாற் போன்று வார்த்தை சொல்ல, அதன்மேலே என் விதிவழியே நின்ற அவ னுடைய சீல குணத்திலே மன முருகும்படியான நிலை எனக்கு உண்டாயிற்று; நீங்களும் என்னைப் போன்று, அவன் மேல் விழும்போது அவனை விலக்கத் தொடங்கினீர்களாகில் அவனை இழக்கவே நேரிடும்; பின்னர் யாரைக் குறித் துக் கவிபாடுவீர்கள்? ஆகவே, அவன் உயிரைக் காத்து ஆட்செய்ம்மின்கள்; அவன் விரும்பிய இன்பத்தை நான் குலைத்தேனேயாகிலும் நீங்களாயினும் குலைக்காதபடி அவன் வழியே ஒழுகி அநுபவிக்கப் பாருங்கோள் என்றபடி.

4. விருப்பம் இல்லாதாரையும் அழைக்கிறவர் விருப்பமுள்ளவர்களை விலக்குவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வம்மின்' என்று தொடங்கி. 'வம்மின்' என்பது, திருவாய்மொழி, 3. 9 : 6.

மிகுதியினலே. [1] "நினைதொறும் சொல்லும்தொறும் நெஞ்சு இடிந்து உகும்", "வல்வினையேனை ஈர்கின்ற குணங்களை யுடையாய்" என்று சீலம் முதலான குணங்களிலே புண்பட்டு அன்றோ இவர் இருப்பது. [2] உங்களை இழத்தற்கு வேண்டிய காரியத்தைச் செய்யாதே, அவனுடைய இறைமைத் தன்மையிலே இழிந்து கவிபாடப் பாருங்கோள். சீல குணத்திலே இழிய நினையாதீர்கோள். [3] "**கவிகாள்**' என்றால், உயிர் காத்துக் கவிபாடுங்கோள்' என்ன அன்றோ அடுப்பது; அங்ஙன் சொல்லாதே '**ஆள் செய்ம்மின்**' என்கிறார் ஆயிற்று; ஆள் செய்கையாவது, கவிபாடுதல் என்று இருக்கும் "புகழும் நல் ஒருவன்" என்கிற திருவாய்மொழியில் தம் வாசனையாலே.

இச் சீல குணத்தில் இழியாதீர்கோள் என்று அறுதியிட்டு உரைப்பதற்குக் காரணம் என் ? என்னில், காரணம் சொல்லுகிறார் மேல்: 'தானேயாகி நிறைந்தானே' என்று தம்மைக் காண்கிலர் காணும். திருமால் இரும் சோலை - [4] திருமலையில் நிற்கிற நிலையும் சீலத்துக்கு உடல் அன்றோ. வஞ்சக் கள்வன் - [5] களவு தானும் மெய் என்னக் களவுகாணுமாயிற்று. [6] "என் கண்ணன் கள்வம் எனக்குச் செம்மாய் நிற்கும்" என்னுமாறு போலே, களவு காணநிற்கச்செய்தேயும் செவ்விது என்று தோற்றும்படி இருக்கும். களவுதன்னைக் களவு காணுமாயிற்று

---

1. இவர்தாம் அப்படிச் சீல குணத்திலே ஈடுபட்டு இருப்பவரோ? என்ன, ஆம் என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார் "நினைதொறும்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 6 : 2. "வல்வினையேனை" என்பது, திருவாய்மொழி, 8. 1 : 8.

2. ஆயின், செய்ய அடுப்பது என் ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உங்களை' என்று தொடங்கி.

3. மேலே (பக். 229.) "ஆட்செய்ம்மின் என்கிறார்" என்று தொடங்கி அருளிச்செய்த வாக்கியங்களை விவரணம் செய்கிறார் "கவிகாள்" என்று தொடங்கி.

4. சீல குணத்தைச் சொல்லுகிற இவ்விடத்திலே "திருமாலிருஞ்சோலை" என்று திருமலையில் நிலையைச் சொல்லுவான் என் ? என்னில், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திருமலையில்' என்று தொடங்கி.

5. "வஞ்சக் கள்வன்" என்பதற்கு, களவிலே வஞ்சனை யாது ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'களவுதானும்' என்று தொடங்கி.

6. அப்படி இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "என் கண்ணன்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 6: 6. இதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'களவு காணநிற்கச்செய்தேயும்' என்று தொடங்கி. இதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'களவுதன்னை' என்று தொடங்கி.

[1]இத்தலையில் அடிமையை நிலைநிறுத்துவாரைப் போலே புகுந்து, தான் அதனை ஏறட்டுக்கொண்டு, தலைவனும் தன்மையை இத்தலையிலே வைத்துத் தலைமேல் கொள்வான் ஆயிற்று.

இப்படி அவன் களவை நீர் அறிந்தீராகில் தப்பாதொழி வான் என்? என்னில், மா மாயன்-அப்படி அறியச்செய்தேயும் தப்பஒண்ணுதபடியான ஆச்சரியமான குணங்களையும் செயல் களையுமுடையவன். [2]"மையல் ஏற்றி மயக்க உன் முகம் மாய மந்திரம் தான் கொலோ" என்கிறபடியே. நன்று; குணங் களாலும் செயல்களாலும் அவன் உம்மை அகப்படுத்தின வழிதான் யாது? என்ன, மாயம் கவியாய் - [3] ஆழ்வீர்! உம் மைக் கொண்டு உலகத்தில் நடையாடாதன சில கவிகளைப் பாடுவித்துக் கொள்ளப் பாராநின்றோம். "அப்படிச் செய் வோம்" என்று ஆயிற்றுப் புகுந்தது. [4] கவி என்று ஒரு கார ணத்தை இட்டுக்கொண்டு வந்தான்; காதலி இருக்குமிடத்தில் தண்ணீர் என்று புகுமாறுபோலே. வந்து-வந்தவனும் தானே ஆயிற்று.[5] நான், தான் இருந்த இடத்தே சென்று'என்னை இட் டுச் சில கவி பாடுவித்துக் கொள்ள வேண்டும்' என்று சொல்லச்

---

1. களவுதன்னைக் களவுகாணும் வகை யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இத்தலையில்' என்று தொடங்கி.

2. தப்ப ஒண்ணுதவாறு குணங்களையும் செயல்களையும் உடையனு யிருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "மையல் ஏற்றி" என்று தொடங்கி. இது, நாய்ச்சியார் திருமொழி, 2 : 4.

3. "கவியாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஆழ்வீர்' என்று தொடங்கி.

4. அதனை விவரணம் செய்கிறார் 'கவி என்று' என்று தொடங்கி. 'காதலி இருக்குமிடத்தில் தண்ணீர் என்று புகுமாறு போலே' என்னு மிவ்விடத்தில் "சுடர்த்தொடீஇ கேளாய்" என்னும் கலித்தொகைச் செய்யுள் நினைவு கோடல் தகும்:

"அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டி வா என்றாள் என யானும்
தன்னை அறியாது சென்றேன் மற்றென்னை
வளை முன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் இவன் ஒருவன் செய்ததுகாண் என்றேனு" செய். 51.

5. வந்தவனும் தானே ஆயிற்று என்றதனை விவரணம் செய்கிறார் 'நான், தான்' என்று தொடங்கி.

செய்கை அன்றிக்கே, தானே வந்தான். [1]அடையத் தகுந்தவனை தானே ஆயிற்று வந்தான். இதுவன்றோ சீலமாவது!

வந்த இடத்தில் அவன் உமக்கு நலிவாகச் செய்தது என்? என்னில், என் நெஞ்சும் உயிரும் - நெஞ்சினைக் கூறியது உடலுக்கு உபலக்ஷணம். உயிர் - ஆத்மா. உள் கலந்து - ஒரு நீராகக் கலந்து. சரீரத்தோடு ஆத்மாவோடு வாசி அற அநுபவிக்கிறான். நின்றார் அறியா வண்ணம் - இச் செயலுக்குத் தலைவர்களான பிராட்டி, திருவனந்தாழ்வான், திருவடி முதலானோர்க்கும் அறிய முடியாதபடி ஆயிற்று என்னோடு கலந்தது. [2]இப்படிப்பட்ட செயல்களில் நிற்பார் அவர்களே அன்றோ, அவர்களுக்கும் தெரியாதபடி; [3]"ஆர் உயிர் பட்டது எனது உயிர்பட்டது" என்னுமாறுபோலே. என் நெஞ்சும் உயிரும் அவை உண்டு - சரீரம் வேறு, உயிர் வேறு என்று நினைத்திலன்; [4]"உருவமும் ஆர் உயிரும் உடனே உண்டான்" என்னுமாறு போலே, சரீரத்தையும் உயிரையும் ஒருசேர அநுபவித்தான்.

தானேயாகி-[5]தம்மைக் காண்கிறிலர் காணும். இருவருமாக அநுபவிப்பாரைப் போலே புகுந்து அநுபவிக்கிறவன் தானேயானான். [6]"என்னை முற்றப் பருகினான்" என்னுமாறு போலே, இத்தலை இனிய பொருளாய் அற்றதாயிற்று. [7]இத்தலை ஓர் அறிவுகூடப் பொருள் என்று தோற்றாதபடி ஆயிற்றுச் செயல்

1. தானே வந்தான் என்றதனை விவரணம் செய்கிறார் 'அடையத் தகுந்தவனை' என்று தொடங்கி.

2. "நின்றார்" என்றால் பிராட்டி முதலாயினோரைக் காட்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இப்படிப்பட்ட' என்று தொடங்கி. இப்படிப்பட்ட செயல்களில் - இப்படிப்பட்ட காதலோடு கூடிய செயல்களில்.

3. அவர்களுக்கும் தெரியாதபடி என்றதனை விவரணம் செய்கிறார் "ஆருயிர்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 6 : 9.

4. "உருவமும்" என்றது, திருவாய்மொழி, 9. 6 : 5.

5. "தானே" என்ற ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தம்மைக் காண்கிறிலர் காணும்' என்று. அதனை விவரணம் செய்கிறார் 'இருவருமாக' என்று தொடங்கி.

6. அவனே அநுபவிக்கிறவன் ஆனால் நீர் என்ன ஆயினீர்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "என்னை" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 6 : 10.

7. "தானே" என்றதனால், பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'இத்தலை' என்று தொடங்கி. இதனை விவரணம் செய்கிறார் 'பிறர்க்கு உறுப்பாய்' என்று தொடங்கி.

செய்தபடி; பிறர்க்கு உறுப்பாய் இருக்குமதொழியத் தனக்கென்ன ஒரு தகுதி இல்லாத அறிவில்லாத பொருளைப் போன்று செய்தான். [1] "தனக்கேயாக" என்கிறபடியே கொண்டான். [2] இனிய பொருள்களிலும் சொரூபபேதங்கள் உண்டாகாநின்றதன்றோ, அதைப்போன்றதாய்விட்டது அறிவுடைப் பொருளும். [3] ஈர் அரசு தவிர்த்தான் என்பார் 'தானேயாகி' என்கிறார். இத் தலையைப் புற்கவ்வப் பண்ணித் தானே தலைவனாய் நின்றான் என்றபடி. நிறைந்தானே - [4] எல்லாவற்றாலும் நிறைவுபெற்றவன் (அவாப்த சமஸ்தகாமன்) என்பது இதுகாறும் பெயர் மாத்திரமேயாய், இவரைப் பெற்ற பின்பாயிற்று நிறைந்தவனாயிற்று. இங்ஙனே இருப்பதன்றோ சீலமாவது. என்றது, **பெரியவன் சிறியவனோடே வந்து கலக்குமிடத்தில் தன் பெருமையும் அவன் சிறுமையும் தோற்றாதபடி.**

---

1. இப்படிச்செய்தது தான் தன் காதலால் செய்தது அன்றிக்கே இவர் வேண்டி விரும்பச் செய்ததும் ஆகும் என்கிறார் "தனக்கேயாக" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 9 : 4.

2. யாங்ஙனமாயினும் அறிவுடைப் பொருளுக்கு வேறுபாடு இன்றோ, அறிவில் பொருளைப் போன்றதாகக் கூறலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனிய பொருள்களிலும்' என்று தொடங்கி. 'சொரூபபேதங்கள்' என்றது, வேறுபட்ட வாசனை ரசம் முதலியவற்றோடு கூடிய சாந்து மலர் முதலிய பேதங்கள் என்றபடி. இதனால், அறிவு முதலானவைகளும், பொருள்களிலே இருக்கிற ரசம் முதலானவற்றைப் போன்று அநுபவிக்கின்றவனுக்கே உறுப்பாய்விட்டது என்றபடி.

"ஸூக்ஷ்ம வொட்டும் நீரிலே கழுவிப் பைந்தொடி மடந்தையரைக் கொண்டு ஷட்குண ரஸாங்கமாக்கி" என்பது ஆசாரிய ஹ்ருதய ஸ்ரீ சூக்தி.

3. மேலே, 'தம்மைக் காண்கிலர் காணும்' என்றதனை விவரணம் செய்கிறார் 'ஈர் அரசு' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'இத் தலையை' என்று தொடங்கி. புற்கவ்வப் பண்ணுதல் - செருக்கு அற்றவனாகச் செய்தல்.

விற்கவ்வு வாளி அடலவர் மீது விடலஞ்சி வீரர் எதிரே
புற்கவ்வுமாகில் விரைவோடு கங்குல் புலராமுன் வந்து பொருவேன்;
சொற்கவ்வையாக நினையற்க கொன்று சுரர் நாடளிப்பன்; இனி உன்
சிற்கவ்வை தீர அவருக்கும் நின்ற திருமாலினுக்கு மெனவே.

என்பது, வில்லிபாரதம் ஒன்பதாம் போர்ச்சருக். 4.

4. அவாப்த சமஸ்தகாமனை (எல்லாவற்றாலும் எப்பொழுதும் நிறைந்திருப்பவன்) இப்போது நிறைந்தவன் ஆனான் என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எல்லாவற்றாலும்' என்று தொடங்கி.

புரை அறக் கலக்கை அன்றே; [1]"பின் அந்த ஸ்ரீராமன் செய்யத்தக்க காரியங்களை எல்லாம் செய்து முடித்தவனானன்" என்னுமாறுபோலே. (1)

1060.

தானே ஆகி, நிறைந்து, எல்லா
உலகும் உயிரும் தானேயாய்,
தானே யான் என்பான் ஆகி,
தன்னைத் தானே துதித்து, எனக்குத்
தேனே, பாலே, கன்னலே,
அமுதே, திருமாலிருஞ் சோலைக்
கோனே யாகி, நின்றொழிந்தான்
என்னை முற்றும் உயிர் உண்டே.

பொ - ரை :—என்னுடைய உயிர் முழுதினையும் நுகர்ந்து, தான் ஒருவனே நிறைவுபெற்று, எல்லா உலகங்களும் எல்லா உயிர்களும் தானே என்னலாம்படி அவற்றுக்குள் உயிராகி, நான் என்னும் பொருளும் தானேயாகி, தன்னைத் தானே துதித்துக்கொண்டு, தேனும் பாலும் கருப்பஞ்சாறும் அமுதும் ஆகிய இனிய பொருள்கள் எல்லாம் திருமாலிருஞ்சோலை மலையிலே நிற்கிற எம்பெருமான் தானே ஆகிவிட்டான் என்பதாம்.

வி - கு :—என்னை உயிர் முற்றும் உண்டு தானேயாகி நிறைந்து என்று கூட்டுக. என்னை என்பது, உருபு மயக்கம். நின்றொழிந்தான் என்பது, ஒரு சொல்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [2]தம்மோடு கலந்த பின்பு அவனுக்குப் பிறந்த நிறைவினைக் கண்டு இனியர் ஆகிறார்.

---

1. தாம் கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பின் அந்த ஸ்ரீராமன்' என்று தொடங்கி.

அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்
க்ருத க்ருதய: ததா ராம: விஜ்வர: ப்ரமுமோத ஹ.

என்பது, சங்க்ஷேப ராமாயணம், 85.

2. என்னை முற்றும் உயிர் உண்டு, தானேயாகி நிறைந்து, தானேயாய், தானே யான் என்பானாகி, தன்னைத் தானே துதித்து, 'தேனே பாலே கன்னலே அமுதே திருமாலிரும்சோலைக் கோனேயாகி நின்றொழிந்தான் என்று கொண்டு கூட்டி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

தானேயாகி நிறைந்து - [1] இருவரும் சேர்ந்து செயல் செய்யப் புகுந்து தானே பெற்றானாய் இராநின்றான். எல்லா உலகும் உயிரும் தானேயாய் - எல்லா உலகங்களும் அந்த அந்த உலகங்களில் உண்டான மனிதர்கள் முதலானவர்களும் தானேயாய் நின்றான். [2] சர்வேஸ்வரன் ஆனான் என்றபடி. சர்வேஸ்வரன் ஆனதும் இப்போதேயோ? என்னில், [3] ஓம்; அப்படியே. [4] பாதுகாப்பவனாக இருப்பதனால் அன்றோ அவனுக்குச் சொரூபம் நிலைத்திருப்பது. [5] பாதுகாக்கப்படுகின்ற பொருள்களைப் பாதுகாத்தால் அல்லது ஏவுகின்றவன் ஆக ஒண்ணாதே. [6] இவரைப் பெறுவதற்கு முன்பு தன்னுடைய ஏவுகின்ற தன்மை அடையக் கண்ணோந்தார் அகம் போலே காணும் கிடந்தது. [7] ஆத்மா தான் என்றும் உள்ளவனாக இருக்கச்செய்தே

---

1. "தானே" என்ற ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இருவரும்' என்று தொடங்கி.

2. "எல்லா உலகும் உயிரும் தானேயாய்" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன் ஆனான்' என்று. ஆழ்வாரைப் பெற்ற பின்பு சர்வேஸ்வரன் ஆனான் என்றபடி. "எல்லா உலகும் உயிரும்" என்றதிலே இவரும் அடங்கியவரே அன்றோ.

3. 'ஓம்' என்பது, உடன்பாட்டினை உணர்த்தும் சொல்.

என்று என்று இறைஞ்சி இருதாமரைத் தாளில்
ஒன்றும் கதிர் முடியாற்கு ஓம் என்றுரைத்தருளி
இன்று இங்கு இருவேமும் இப்போ துரைத்த மொழி
ஒன்றும் பிறர் அறிய ஓதாது ஒழிக என்றான்.

என்பது, வில்லிபாரதம் கிருஷ்ணன் தூது, செய். 40.

4. 'அப்படியே' என்றதனை விளக்குகிறார் 'பாதுகாப்பவனாக' என்று தொடங்கி.

5. மேற் கூறியதனையே எதிர்மறைமுகத்தால் விவரணம் செய்கிறார் 'பாதுகாக்கப் படுகின்ற' என்று தொடங்கி.

6. மேலே கூறிய வாக்கியப் பொருளையே விவரணம் செய்கிறார் 'இவரை' என்று தொடங்கி. 'கண்ணோந்தார் அகம் போலே' என்றது, கண் நோய் உள்ளவன் மனம் போலே என்றபடி. கண் நோய் உள்ளவன் விளக்கினைக் காணான்; அதனால், இரவில் விளக்கின் உதவியைக் கொண்டு காண்கிற பொருள்களை அவனால் காண முடியாதவாறு போன்று, ஈஸ்வரனுடைய தன்மையும் காணமுடியாதவாறு கிடந்தது என்றவாறு.

7. இவரைப் பெறுதற்கு முன்பு ஈஸ்வரத் தன்மை அசத்துக்குச் சமமாக இருந்தது, இவரைப் பெற்ற பின்பு சர்வேஸ்வரன் ஆனான் என்னுமதனைத் திருஷ்டாந்தத்தோடு காட்டுகிறார் 'ஆத்மா' என்று தொடங்கி.

அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்ம இதி வேத சேத்
அஸ்தி ப்ரஹ்ம இதிசேத் வேத ஸந்தமேநம் ததஃ விதுஃ இதி.

என்பது, தைத்திரீய உபநிடதம்.

பகவானைப் பற்றிய ஞானம் பிறவாதபோது "இல்லாதவனாக இருக்கிறான்" என்னலாய், அதுபிறந்தபோது "அவனை உள்ளவனாக அறிகிறார்கள்" என்னலாம்படி இருப்பது போலே காணும் அவனும் இருப்பது. [1]எதிர்த் தலையைப் பற்றி நிற்றல் இரண்டு தலைக்கும் ஒக்கும்; [2]"நான் உன்னை அன்றி இலேன், நீ என்னை அன்றி இலை" என்கிறபடியே, இவன் அடியவனைக் கொண்டு உளனும், அவன் தலைவனைக் கொண்டு உளனும்.

யான் என்பான் தானே யாகி-[3]"எல்லாரிடத்திலும் நிற்கும் நிலை ஒழிய இவருடைய திருமேனியிலே நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. [4]நான் என்று பெயர் அளவேயாய் நிற்கிற நான், தான் என்னலாம்படி ஆனேன். [5]தம்மைத் தடவிப் பார்த்த இடத்தில் காண்கிறிலர், அவன் தலையாலே சுமக்கக் காண்கிற இத்தனை. [6]அவனும் தன் தலையிலே பாரதந்திரியத்தை ஏறட்டுக்கொண்டு இவர் தலையிலே அகங்காரத்தை உண்டாக்குகிற முதன்மையை வைக்கையாலே இவரையே காண்கிற இத்தனை. [7]சேர்ந்திருக்கிற பொருளிலே விசேடியத்தின் முதன்மையாலே விசேடமாத்திரமான தம்மைக்

---

1. 'இல்லாதவனாக இருக்கிறான்' என்றும், 'அவனை உள்ளவனாக அறிகின்றார்கள்' என்றும் சேதனனைச் சொன்னதுபோன்று சர்வேஶ்வரனைச் சொல்லலாமோ? என்ன, 'எதிர்த்தலையை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. இரண்டு தலைக்கும் ஒக்கும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'நான் உன்னை அன்றி' என்று தொடங்கி. இது, நான்முகன் திருவந்தாதி, செய். 7.

3. "யான் என்பான் தானே ஆகி" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'எல்லாரிடத்திலும்' என்று தொடங்கி.

4. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நான் என்று' என்று தொடங்கி. அடியவன் என்று பெயர் மாத்திரமுடைய நான் தலைவன் என்னலாம்படி ஆனேன் என்றபடி.

5. "யான் என்பான் தானேயாகி" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'தம்மை' என்று தொடங்கி. காண்கிறிலர் - தம்மை அடியவனாகக் காண்கிறிலர்.

6. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'அவனும்' என்று தொடங்கி. இவரையே காண்கிற இத்தனை - இவரைத் தலைவராகக் காண்கிற இத்தனை.

7. "தானே யான் என்பான் ஆகி" என்றதற்கு, கழி பெரும் காதலைக் காரணமாகக் கொண்டு கருத்து அருளிச்செய்தார் மேல். இனி, சரீர சரீரி பாவத்தை இட்டுக் கருத்து அருளிச்செய்கிறார் 'சேர்ந்திருக்கிற' என்று தொடங்கி. சேர்ந்திருக்கிற பொருளில் - விசிஷ்ட வஸ்துவில். விசேடியத்தின் முதன்மையாலே - விசேஷ்யப் பிராதாந்யத்தாலே. விசேஷ்யம் - அடைகொளி; பிரகாரி. விசேஷணம் - அடை; பிரகாரம்.

காண்கிறிலர் ஆயிற்று. [1] காரிய நிலையோடு காரண நிலையோடு வாசி அறப்பொருள்சேர்ந்தே இருக்கச்செய்தேயும், பிரஹ்மமே முதற் காரணம் என்னக் கடவோம் அன்றோ. [2] அவற்றிற்கு வரும் விகாரம் முதலானவைகள் வரும் என்று சங்கித்து, அவற்றை விசேடணத்திலே ஒதுக்குகிறதும் அவனுக்குக் குற்றம் வாராமைக்காக. [3] ஆனாலும், பொருள்தான் ஒன்று என்னலாய் இருக்கும் அன்றோ. இயல்பாக உள்ள சம்பந்தம் கண்ணழிவு அற்று இருக்கையாலே. [4] குடம் வஸ்திரம் முதலானவைகளைப் போன்று பிரிந்து இருத்தல் உண்டாய் இருக்கிறது அன்றே. பிரகார பிரகாரித் தன்மையாலே சொல்லுகிறது; [5] ஜாதி குணங்கள் பொருளைப் பற்றிக் கிடக்குமாறு போலே ஆயிற்று.

[6] இப்படிப் பொருள் இருக்கையாலே, தன்னைத் தானே துதித்து - [7] "வார்த்தைகளுக்கு முக்கியமான பொருளாயும்"

---

1. விசிஷ்ட வஸ்துவில் விசேடியப் பிராதாந்யத்துக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'காரிய நிலையோடு' என்று தொடங்கி. 'சேர்ந்தே இருக்கச் செய்தேயும்' என்றது, சித்து அசித்துக்களோடு சேர்ந்தே இருக்கச்செய்தேயும் என்றபடி. பிரஹ்மமே - விசேடியமான பிரஹ்மமே.

2. விசேடியப் பிராதாந்யத்தாலே பிரஹ்மமே முதற் காரணமாகில் சேர்ந்திருத்தலை (விசிஷ்டத்தை)க் காரணம் என்றும், விகாரம் முதலானவைகள் விசேடணத்தைச் சார்ந்தவைகள் என்றும் கொள்ளுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவற்றிற்கு' என்று தொடங்கி. அவற்றிற்கு - சித்து அசித்துக்களுக்கு. 'ஒதுக்குகிறதும்' என்றதிலே உள்ள உம்மை, 'சேர்ந்திருத்தலை (விசிஷ்டத்தை)க் காரணம் என்றும்' என்று மேலே கூறியதனைத் தழுவுகிறது.

3. எல்லாம் என்றாலே சேதனன் வேறு, ஈஸ்வரன் வேறு என்னும் வேற்றுமை போதரா நிற்க, "தானே" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆனாலும்' என்று தொடங்கி. 'ஆனாலும்' என்றது, வேற்றுமை உண்டானாலும் என்றபடி.

4. 'இயல்பாக உள்ள சம்பந்தம் கண்ணழிவற்று இருக்கையாலே' என்றதனைத் திருஷ்டாந்தத்தோடு விவரணம் செய்கிறார் 'குடம் வஸ்திரம்' என்று தொடங்கி.

5. பிரிந்து இருத்தல் இல்லாமைக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'ஜாதி குணங்கள்' என்று தொடங்கி.

6. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

7. கவி பாடியது தாமாக இருக்க, "தன்னைத் தானே துதித்து" என்றது, என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வார்த்தைகளுக்கு' என்று தொடங்கி.

என்கிறபடியே, அஹம் என்னும் சொல்லின் பொருள் அவன் அளவும் சென்று காட்டக் கடவதாய், அஹம் என்னும் சொல்லும் அவன் அளவும் சென்று காட்டக் கடவதாய் அன்றோ இருப்பது. [1] இவர் பக்கலிலே பிறக்கச் செய்தேயும் அவன் செய்தான் என்று அவன் தலையிலே ஏறிடலாம் அன்றோ. [2] நான் துதிக்கப்படுகின்றவனுகில்காண் துதித்தவன் நானுவது. எனக்குத் தேனே பாலே கன்னலே அமுதே- [3] "ஸர்வ ரஸஃ" என்கிற பொதுவான நிலை அன்றிக்கே எனக்கு எல்லை இல்லாத இனியன் ஆனவனே! [4] "கொடியேன் பருகு இன் அமுதே" என்கிற படியே. [5] 'தன்னைத் தானே துதித்து' என்கிற இடத்தில் தம்மைக் கண்டிலர்; இங்குத் தாம் உளராகவும் தமக்கு இனியதாகவும் தொடங்கிற்று. [6] தாம் பாடின கவி கேட்டு அவன் இனியனுய் இருக்கிற இருப்பு தமக்கு இனியதாய் இருக்கிறபடி.

திருமாலிருஞ்சோலைக் கோனே - மேலே கூறிய இனிய பொருள்களைப் போலே ஆயிற்றுத் திருமலையில் நிற்கிற நிலையும்.

காரியாணும் காரணம் பூர்வம் வசஸாம் வாச்யம் உத்தமம்
யோகாநாம் பரமாம்ஸித்திம் பரமம் தே பதம் விதுஃ.

என்பது, ஜிதந்தா. இது, அஹம் என்னும் சொல்லின் பொருள் அவன் அளவும் சென்று காட்டுவதற்குப் பிரமாணம். அஹம் என்னும் சொல்லின் பொருள் அவன் அளவும் சென்று காட்டுதலாவது, அவனுக்குப் பரதந்திரப் பட்டிருத்தல். 'அஹம் என்னும் சொல்லும் அவன் அளவும் சென்று காட்டக் கடவதாய் அன்றோ இருப்பது' என்றது, பொருள் ஆற்றலால் போந்த பொருள்.

1. மேலே கூறியவற்ருல் போதரும் கருத்தினை அருளிச்செய்கிருர் 'இவர் பக்கலிலே' என்று தொடங்கி.

2. தானே துதித்து என்னுமல் "தன்னை" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'நான் துதிக்கப் படுகின்றவனுகில் காண்" என்று தொடங்கி. என்றது, துதிக்கப்படுகின்றவன் தான் ஆனதைப் போன்று துதிப்பவனும் தானே என்பது கருத்து.

3. "எனக்கு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் "ஸர்வரஸஃ" என்று தொடங்கி.

4. தமக்கு இனிமையாக இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர் "கொடியேன்" என்று தொடங்கி.

5. "தன்னைத் தானே துதித்து" என்றவர், இங்கு "எனக்கு" என்றல் பொருந்துமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் 'தன்னைத் தானே' என்று தொடங்கி. என்றது, திருவாய்மொழி செய்ததில் தமக்குச் சம்பந்தம் இல்லை, அத் திருவாய்மொழி அவனுக்கு இனிமையாக இருக்கிறபடியைக் கண்டு தாம் உகக்கிருர் என்றபடி.

6. இதனுல் போதரும் பொருளை அருளிச்செய்கிருர் 'தாம் பாடின' என்று தொடங்கி.

[1]"திருமால் இருஞ் சோலை அம் கட்டியைக் கரும்பு ஈன்ற இன் சாற்றை" என்னக் கடவது அன்றே. திருமாலிருஞ்சோலைக் கோனே ஆகி - [2]இரண்டு உலகங்களையும் உடையனாய் இருத்தலால் வந்த ஏற்றத்துக்கும் அவ்வருகே ஓர் ஏற்றம் போலே ஆயிற்று, திருமலையையுடையனாய் இருக்கையால் வந்த ஏற்றமும். [3]இவரைப் பெற்ற பின்பே காக்கும் தன்மை நிறைந்ததாயிற்று. [4]இல்லையாகில், ஸ்ரீ வைகுண்டத்தில் இருப்போடு திருமலையில் நிலையோடு வாசி அற்றுப் போமே அன்றே. நின்றொழிந்தான்- [5]இங்கே நின்ற பின்பு ஆயிற்றுப் பரகு பரகு அற்றது. [6]கிருதக் கிருத்யனாய் இராநின்றான். என்னை முற்றும் உயிர் உண்டே - என் உயிரை முற்றும் உண்டே. [7]எங்கும் பரந்திருக்கிற தான் அணு அளவினதான ஆத்மாவினை நுகர்தல் தனக்கு ஏற்ற மாம்படியாக ஆயிற்று இத் தலையானபடி. (2)

1061.

என்னை முற்றும் உயிர் உண்டு, என்
மாய ஆக்கை இதனுள் புக்கு,
என்னை முற்றும் தானே யாய்
நின்ற, மாய அம்மான் சேர்

---

1. திருமலையில் நிற்கிற நிலை இனிமையாக இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'திருமாலிருஞ்சோலை' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 7. 3: 6.

2. "எல்லா உலகும் உயிரும் தானே" என்றதனோடே கூட்டி வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'இரண்டு உலகங்களையும்' என்று தொடங்கி.

3. "கோனே ஆகி" என்ற ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவரைப் பெற்ற பின்பு' என்று தொடங்கி.

4. இதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இல்லையாகில்' என்று தொடங்கி.

5. "நின்றொழிந்தான்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இங்கே நின்ற பின்பு' என்று தொடங்கி. பரகுபரகு - வியாகுலம்.

6. 'பரகுபரகு அற்றது' என்றதனை விவரணம் செய்கிறார் 'கிருதக் கிருத்யனாய்' என்று தொடங்கி. கிருதக் கிருத்யன்-செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்து முடித்தவன்.

7. அணு அளவினதான ஆத்மாவை "முற்றும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எங்கும்' என்று தொடங்கி. 'இத் தலையான படி' என்றது, அவன் தன் அபிப்பிராயத்தாலே மதித்திருந்தபடி என்றவாறு.

தென்னன் திருமாலிருஞ் சோலைத்
திசை கைகூப்பிச் சேர்ந்த யான்
இன்னும் போவேனே கொலோ?
என்கொல் அம்மான் திருவருளே?

பொ - ரை:—என்னுடைய உயிரை முழுதும் நுகர்ந்து, அவ்வளவோடு நில்லாது அழியக்கூடிய இந்த என் சரீரத்தினுள் புகுந்து, என் உயிரும் உடம்பும் தானேயாகி நின்ற, ஆச்சரியமான குணங்களையும் செயல்களையுமுடைய எம்பெருமான் சேர்ந்து எழுந்தருளி யிருக்கின்ற, தெற்குத் திக்கிலே உள்ள சிறந்த திருமாலிருஞ்சோலைமலை நிற்கின்ற திக்கினை நோக்கிக் கையினைக் குவித்துக்கொண்டு அடிமைப்பட்ட நான் இன்னம் இதற்கு அப்பால் வேறோர் இடம் தேடிச் செல்லுவேனோ? இதற்குமேல் சிறந்தது ஒரு பேறு உண்டோ? என்றபடி. என் பெம்மானுடைய திருவருள் யாதாகுங்கொல்? இதனைக் காட்டிலும் வேறு உயர்ந்த பேறு இருப்பதாகவும் அதனை எனக்குக் கொடுக்க வேண்டும் என்றும் பாரிக்கிறானே இது என்னே! என்றபடி.

வி-கு :—என் மாய ஆக்கை இதனுள் புக்கு என் உயிரை முற்றும் உண்டு என மாற்றுக. ஆக்கை - சரீரம். தென்னன் - பாண்டியனுமாம். அம்மான் திரு அருள் என்கொல்? என்க. அருள் என்றது, அவனது எண்ணத்தினைக் குறிக்கின்றது.

ஈடு :—மூன்றாம் பாட்டு. [1] அவனுக்குத் தம்பக்கல் உண்டான காதல் எல்லை கடந்து இருத்தலை அருளிச்செய்கிறார்.

என் உயிரை முற்றும் உண்டு-[2] "எவருக்கு ஜநகனுடைய புத்திரியான சீதை மனைவியாக இருக்கிறாளோ? அத்தகைய அவருடைய ஒளி பராக்கிரமம் முதலியன அளவிடற்கு அரியன" என்கிற ஏற்றத்தைப் போலும் போருமாயிற்று இவர்

---

1. நான்காம் அடியினைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. உயிர் அணு அளவினதாக இருக்க, "முற்றும்" என்றது என்? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் "எவருக்கு" என்று தொடங்கி. என்றது, இறைவனுக்குத் திருமகள் சம்பந்தத்தால் எவ்வளவு ஏற்றம் உண்டாயிற்றோ அவ்வளவு ஏற்றம் ஆழ்வாரை அநுபவிப்பதனாலும் உண்டாயிற்று என்றபடி.

அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா
ந த்வம் ஸமர்தஸ்தாம் ஹர்த்தும் ராம சாபாஸ்ரயாம் வநே.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 37 : 108.

உயிரை எங்கும் புக்கு அநுபவிக்கப் பெறுகையால் வந்த ஏற்றம். என் மாயம் ஆக்கை - என்னுடைய உயிரை அநுபவித்து அவ்வளவிலே தான் தவிருவானாய் இருந்தானோ? [1]"அழுக்கு உடம்பு" என்றும், "பொல்லா ஆக்கை" என்றும், "புண்ணை மறையவரிந்து" என்றும் சொல்லுகிறபடியே, இவர் 'இது தண்ணிது' என்று தாம் அருவருத்துப் புறப்பட்டு நில்லாநின்றார்; [2]இவர் இகழாநிற்கச்செய்தே அவன் இது உத்தேசியம் என்று மேல் விழாநின்றான் என்பார் உள்புக்கு என்கிறார். புகுந்து என்னாதே 'புக்கு' என்கிறது, அதனோடு தமக்குத் தொற்று அற்று இருக்கிறபடி தோற்றுகைக்காக. [3]தம் நெஞ்சாலே இதனை இவர் அருவருத்துப் புறப்பட்டு நின்றார். [4]அவன் தலை துலுக்குப் பெறுமளவும் பார்த்தாயிற்று இவர் இருக்கிறது. [5]"மங்க ஒட்டு" என்னுமளவும் அவன் இதனை விடமாட்டாமையாலே உள்ளே புகுராநின்றான். இதனுள் புக்கு-[6]தொன்று தொட்டு இவ் உடம்போடே முகம் பழகிப் போந்தவன் அன்றோ இவன்; உயிர் வழியாகக் குந்தி அடி இட்டு நிற்குமவன் அன்றோ அவன்; அவன்மேல் விழாநின்றான். [7]தனக்குப் பிரகாரமான உயி

---

1. "மாய ஆக்கை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் "அழுக்குடம்பு" என்று தொடங்கி. "அழுக்குடம்பு" என்பது, திருவிருத்தம், செய். 1. "பொல்லா ஆக்கை" என்பது, திருவாய்மொழி, 3. 2: 3. "புண்ணை மறைய" என்பது, திருவாய்மொழி, 5. 1: 5.

2. "உள்புக்கு" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவர்' என்று தொடங்கி.

3. ஆயின், இவர் இதனை விட்டுப் புறப்பட்டாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தம் நெஞ்சாலே' என்று தொடங்கி.

4. தாமே புறப்படாமல் நெஞ்சாலே புறப்படுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

5. ஆயின், இறைவன் இவர்க்குப் பாதந்திரப் பட்டவன்தானே? தலை துலுக்குவதற்குத் தடை என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "மங்க ஒட்டு" என்று தொடங்கி.

6. "இதனுள் புக்கு" என்பதற்கு, வியாக்கியாதாவின் ஈடுபாடு, 'தொன்று தொட்டு' என்றது முதல் 'மேல் விழாநின்றான்' என்றது முடிய.

7. அப்படிச் சேதனன் மூலமாகக் குந்தி அடியிட்டிருக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தனக்கு' என்று தொடங்கி. தனக்கு - இறைவனுக்கு.

ருக்குப் பிரகாரமாயிருந்துகொண்டு தனக்குப் பிரகாரமாமது அன்றோ இது. [1] "இந்த உயிரைச் சரீரமாகவுடைய என்னால் அந்தர்யாமியாகப் பிரவேசிக்கப்பட்டு நாம ரூபங்கள் உண்டு பண்ணப்படுகின்றன" என்னக் கடவதன்றோ.

என்னை முற்றும் தானே ஆய் - [2] "இப்படி உயிரோடு உடலோடு வாசி அற எங்கும் புக்குப் பரந்திருக்கையாலே '**தானே**' என்னத் தட்டு இல்லை. [3] இவர் நான் என்னுமதனையும் கொண்டான்; இவர் எனது என்னுமதனையும் கொண்டான். அன்றிக்கே, [4] ஈஸ்வரனுக்கும் கூட விளாக்குலை கொண்டு அநுபவிக்க ஒண்ணாதபடி ஆனார் ஆயிற்று என்னுதல். நின்ற - [5] "உள்ளும் புறம்பும் ஆன எல்லா இடங்களிலும் நாராயணன் பரந்திருக்கிறான்" என்னும் பொதுவான நிலை அன்றிக்கே.

---

1. சேதனன் மூலமாகச் சரீரத்திலே பிரவேசித்திருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'இந்த உயிரை' என்று தொடங்கி.

"அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிஸ்ய
நாம ரூபே வ்யாகரவாணி"

என்பது, சாந்தோக்கிய உபநிடதம், 6: 3.

2. "என்னை முற்றும் உயிர் உண்டு என் மாய ஆக்கை இதனுள்புக்கு" என்றவர், மீண்டும் "என்னை முற்றும் தானேஆய்" என்னலாமோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. என்றது, காரண காரிய பாவமாகையாலே முரண்பாடு இல்லை என்றபடி.

3. அதனை விவரணம் செய்கிறார் 'இவர்' என்று தொடங்கி. என்றது, நான் என்னும்படியான உயிர்ப் பொருளையும், எனது என்னும்படியான சரீரத்தையும் தனித்துக் காண முடியாதபடி அவனே என்னும்படி நின்றான் என்றவாறு. "உயிர் உண்டு" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நான் என்னுமதனையும் கொண்டான்' என்றும், "மாய ஆக்கை" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'எனது என்னுமதனையும் கொண்டான்' என்றும் அருளிச்செய்கிறார்.

4. "என்னை" என்பதற்கு உயிராகவும், "முற்றும்" என்பதற்கு உடலாகவும் பொருள் அருளிச்செய்தார் மேல். இப்பொழுது "என்னை முற்றும்" என்பதற்கு என் ஆத்மாவை முழுதும் என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம் பற்றி, அப் பொருளின் பாவத்தை அருளிச்செய்கிறார் 'ஈஸ்வரனுக்கும்' என்று தொடங்கி. விளாக்குலை கொள்ளுதல் - கபளீகரித்தல்.

5. "நின்ற" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் "உள்ளும்" என்று தொடங்கி. என்றது, "நின்ற" என்றதனால் இறைவனுக்கு அடியார் பக்கல் விசேஷமான பக்ஷபாதம் தோற்றுகிறது என்றபடி.

"அந்தః பஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணః ஸ்த்திதః"

என்பது, தைத்திரீய நாராயண உபநிடதம், 11: 8.

மாய அம்மான் சேர் - ஆச்சரியமான குணங்களையும் செயல்களையுமுடைய சர்வேஸ்வரனும் கூட [1]"தண்ணீர், தண்ணீர்' என்று கிட்டும்படியான தேசமாயிற்று. தென்னன் திருமாலிருஞ்சோலை - தென்னன் என்று அங்குத்தை அரசனைச் சொல்லி, அவனதான திருமலை என்னுதல். அன்றிக்கே, தெற்குத் திக்கிலேயாய் நன்றான திருமலை என்னுதல்.

திசை கைகூப்பிச் சேர்ந்த யான் - [2]அவன் விரும்பின திக்கினைவிரும்பினாராயிற்று இவரும்.[3]ஒரு திக்குப்பட அன்றோ இவர் விரும்புவது. [4]என்றது, அவனை உகந்து, அவ்வழியாலே அவன் விரும்பின தேசத்தினை உகந்து, அதனோடு சம்பந்தமுடைய திக்கினை உகந்து, இப்படி அவனோடு சம்பந்தமுடைய சம்பந்திகள் அளவும் உகக்கும்படி கைகழியப் போந்த நான் என்றபடி. [5]அவன்தான் இவரை உகந்து இவரோடு சம்பந்தமுடைய உடம்பினை விரும்புவது போலே ஆயிற்று; [6]"என் எண் தான் ஆனானே" என்றார் அன்றோ அடியிலே.

---

1. "சேர்" என்றதன் பொருள் 'தண்ணீர் தண்ணீர் என்று கிட்டும் படியான' என்பது. என்றது, உண்ணுநீர் வேட்டவன் 'தண்ணீர், தண்ணீர்' என்று நீரைத் தேடிக்கொண்டு வருமாறு போன்று, இனிமையின் மிகுதியாலே காதலோடே சேர்ந்திருக்கும்படியான என்றபடி.

2. திசையினை அஞ்சலி செய்வதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'அவன் விரும்பின' என்று தொடங்கி.

"ஒன்னார்க் கடந்தட்டான் கேழ் இருங் குன்று
....
தெய்வம் பேணித் திசை தொழுதனிர் சென்மின்"

என்பது, பரிபாடல், 15, 44-48.

நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான் அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடம் தலைநின்றான்
துன்பம் ஒரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்.

என்பது, கம்பராமாயணம்.

"திசைநோக்கி, மெய்ப் பூசனை புரியும் வேங்கடமே"

என்பது, திருவேங்கடமாலை, 13.

3. மேலே கூறியதனை ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'ஒரு திக்குப்பட' என்று தொடங்கி. திக்குப்பட - அடைவுபட.

4. திக்குப்பட விரும்புகையை விவரணம் செய்கிறார் 'என்றது' என்று தொடங்கி.

5. இதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அவன்தான்' என்று தொடங்கி.

6. இறைவன், இவரையும் இவரோடு சம்பந்தமுடைய தேகத்தையும் விரும்புவதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "என் எண்தான் ஆனானே" என்று. இது, திருவாய்மொழி, 1. 8 : 7.

இன்னம் போவேனேகொலோ - [1]எனக்கு இத் திசைக்கு அவ்வருகு ஒரு போக்கிடம் உண்டோ? ஒரு திக்குப்பட்ட நான் இனி அவ்வருகு போவேனே, இவன் இப்படிக் கிடந்து படுகைக்கு? [2] இனி அவ்வருகு போகையாவது, திருமலையில் சம்பந்தத்தை அறுத்துக் கொள்ளுகை அன்றோ. அம்மான் திரு அருள் என்கொல்-[3]சர்வேஸ்வரனைப்பற்றி வரும்போது விஷயம் இல்லாமலேயே மயக்கம் உண்டாகுமே அன்றோ? அன்றிக்கே, [4]'என் செய்யாதானுய்த்தான் இவன் இங்ஙன் கிடந்து படுகிறது? [5]இவர் திறத்தில் எல்லாம் செய்தும், ஒன்றும் செய்யாதாரைப் போலே 'எதனைச் செய்வோம்' என்று இராநின்றானுயிற்று. (3)

1062.

என்கொல் அம்மான் திரு அருள்கள்
உலகும் உயிரும் தானே ஆய்,
நன்கு என் உடலம் கைவிடான்,
ஞாலத் தூடே நடந்து, உழக்கி,
தென்கொள் திசைக்குத் திலதமாய்
நின்ற திருமாலிருஞ் சோலை
நங்கள் குன்றம் கைவிடான்,
நண்ணா அசுரர் நலியவே?

---

1. "இன்னம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எனக்கு' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'ஒரு திக்குப்பட்ட' என்று தொடங்கி.

2. அவ்வருகு போனால் வரும் தீது யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனி அவ்வருகு' என்று தொடங்கி.

3. "அருள்" என்ற சொல்லுக்கு அன்பு என்ற பொருளில் வியாக்கியானம் அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரனை' என்று தொடங்கி. என்றது, நான் முடிவின் எல்லைக்கு உறுப்பு ஆகையாலே தன்னை விடுவதற்குக் காரணம் இன்றிக்கே இருக்க, விடில் செய்வது என்? என்று அதிசங்கை கொள்ளுதற்குக் காரணமான அன்பு இருந்தபடி என்? என்றபடி.

4. இனி, "அருள்" என்பதற்குக் கொடை என்ற பொருளில் வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'என் செய்யாதானுய்த்தான்' என்று தொடங்கி. என்றது, அவனை விரும்பி, அவன் உகந்த தேசத்தை விரும்பி, அதனோடு சேர்ந்த திசையை விரும்பும்படி சேஷத்வத்தின் எல்லை நிலத்திலே நிலை நிற்கும்படி உபகரித்தும் ஒன்றும் செய்யாதவனைப் போன்று பரகு பரகு என்பதற்கு அவதி என்னோ? என்றபடி.

5. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'இவர் திறத்தில்' என்று தொடங்கி.

பொ - ரை :—எல்லா உலகங்களும் எல்லா உயிர்களும் தானே என்னலாம்படி அந்தர்யாமியாகி, தன்னை வந்து சேராத அசுரத்தன்மை வாய்ந்தவர்கள் வருந்தும்படியாக, இந்தப் பூ உலகில் எங்கும் நடந்து, திரிந்து, அழகு கொண்டிருக்கின்ற தெற்குத் திசைக்குத் திலகம் போன்று விளங்குகின்ற திருமாலிருஞ் சோலையாகிய நம்முடைய திரு மலையை விட்டு நீங்காதவனாகி, என் உடம்பினையும் சிறிதும் கைவிட்டு நீங்குகிறான் இல்லை; எம்பெருமானுடைய காதற்பெருக்கு இருந்தவாறு என்னே!

வி - கு :—தானேஆகி அசுரர் நலிய நடந்து உழக்கி நம் குன்றம் கைவிடானாகி என் உடலம் கைவிடான் என்க. 'நங்கள்' என்பதில் கள் அசைநிலை.

ஈடு:—நான்காம் பாட்டு. [1]தம்முடைய திருமேனியைக் காட்டிலும் தம்மோடே கலந்து பழகுவதற்குத் தக்க நிலம் என்று திருமலையில் அவன் வைத்திருக்கும் காதற்பெருக்கினை அருளிச் செய்கிறார்.

என்கொல் அம்மான் திரு அருள்கள் - [2]சர்வேஸ்வரனுக்கு ஒரு விஷயம் இல்லாமலே மயக்கம் உண்டாவதே! உலகும்

---

1. "நன்கு என் உடலம் கைவிடான், திருமாலிருஞ்சோலை நங்கள் குன்றம் கைவிடான்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய் கிறார்.

இறைவனுக்குத் தம்மிடத்தில் உண்டான காதலின் மிகுதியைச் சொல்லிக்கொண்டு வந்த ஆழ்வார், இப் பாசுரத்தில் அப்பெருமானுக்குத் திரு மாலிருஞ்சோலை மலையில் உண்டான காதலைப் பேசுதல் பொருந்துமோ இவ் விடத்துக்கு? எனின், அதற்குச் சமாதானமாக ஆறாயிரப்படி கூறுவதனைப் படித்து அறிதல் தகும்: "இப்படி என்னோடுள்ள ஸம்ஶ்லேஷம் பெறுகைக்கு ஈடான தேசம் ஏதோ என்று தேடிக்கொண்டு திருமலையிலே வந்து புகுந்து தான் கருதினபடியே அங்கே ஸம்ஶ்லேஷித்துப் பிரீதனாய் 'இந்த ஸம்ருத்தி எல்லாம் விளைவித்தது திருமலையீறே' என்று கொண்டு திருமலையையும் என் உயிரும் உடலும் போலே தனக்குப் போக்யமாகக் கொண்டு கைவிடு கிறிலன்; என்னுயிரையும் உடலையும் திருமலையையும் அநுபவித்துப் பிரீத னானான், பிரதிகூலர் இந்த ஸம்ருத்தி கண்டு பொறுக்கமாட்டாதே தறைப் படும்படி பிரீதனானான்" என்பது. 248-ஆம் பக். வியாக். பார்க்கவும்.

2. "என்கொல் அம்மான் திரு அருள்கள்" என்றது, அநுவாதம் என்கிறார் 'சர்வேஶ்வரனுக்கு' என்று தொடங்கி. என்றது, உலகில் ஒருவன் கயிற்றைப் பார்த்துப் பாம்பு என்று மயங்குகிறான், முத்துச் சிப்பியைப் பார்த்து வெள்ளி என்று மயங்குகின்றான்; அங்ஙனம் யாதேனும் ஒரு பொருள் இருந்து மயக்கம் உண்டாகிறதே அன்றி; ஒரு பற்றுக்கோடும் இன்றிக்கே மயக்கம் உண்டாகிறதில்லை; ஒரு விஷயமும் இல்லாமலே மயக்கம் எப்படி உண்டாகும்? சர்வேஶ்வரனுக்காகில் இதுவும் உண்டாகும் போலும் என்றபடி. "நன்கு என் உடலம் கைவிடான்" என்றதனை நோக்கி இது அருளிச்செய்த படி.

உயிரும் தானே ஆய் - [1] என்ன குறை உண்டாய்த்தான் இப்படிக் கிடந்து படுகிறான். நன்கு என் உடலம் கைவிடான் - [2]செருக்கனாய் இருக்கும் அரசபுத்திரன் இழிகுலப் பெண்ணின் காற்கடையிலே துவளுமாறு போலே. நன்கு என் உடலம் - [3]சர்வேஸ்வரன் தன்னைக்கேட்டார்க்குச் சொல்லுகிறவார்த்தை இருக்கிறபடி. ஆழ்வாரை 'நமக்குத் தந்த திருமேனி அன்றோ' என்னாநின்றானாயிற்று. அன்றிக்கே, நன்கு-[4] நன்றாக. மிகவும் என்றபடி. என் உடலம் - [5] 'எனது என்னும் செருக்குடன் கூடிய இவர் உடலம் அன்றோ நமக்கு உத்தேசியம்' என்னா நின்றான். [6]என்னுடைய அடங்கெழில் சம்பத்தில் ஏதேனும் பாம்பு செத்ததோ என்னாநின்றான். ஞாலத்தூடே நடந்து உழக்கி - [7] எத்தனைகாலம் உண்டு அவன் இப் பேறு பெறுகைக்கு உழன்று திரிகின்றது. [8]எல்லார்க்கும் பொதுவானவ

1. தம்முடைய சரீரத்தில் அவன் வைத்திருக்கும் காதலைச் சொல்லுமிடத்து "உலகும் உயிரும் தானே ஆய்" என்று இறைமைத் தன்மை சொல்லுவதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என்ன குறை உண்டாய்த் தான்' என்று தொடங்கி. 'இப்படிக் கிடந்து படுகிறான்' என்றது, காதலைச் செலுத்துகிறான் என்றபடி.

2. "என் உடலம்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'செருக்கனாயிருக்கும்' என்று தொடங்கி.

3. "நன்கு" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி. சர்வேஸ்வரன் சொல்லுகிற வார்த்தையைக் காட்டுகிறார் 'ஆழ்வாரை' என்று தொடங்கி. என்றது, சர்வேஸ்வரனுடைய அபிப்பிராயத்தாலே "நன்கு" என்கிறார் என்றபடி. நன்றான உடலம் என்றபடி.

4. "நன்கு" என்பதற்கு, வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'நன்றாக' என்று. இப் பொருளில் "நன்கு" என்பது "கைவிடான்" என்பதற்கு அடைமொழி. "நன்கு கைவிடான்" என்றபடி. முதற் பொருளில் உடலுக்கு அடைமொழி. நன்றான உடலம் என்றபடி.

5. "என்" என்னும் மமகாரத்துக்கு உரியதான சரீரத்தை "நன்கு" என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எனது என்னும்' என்று தொடங்கி.

6. அப்பொருளால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி. என்றது, விடத்தக்கதான லீலாவிபூதி 'அவன் உடைமை' என்னும் தன்மையாலே இவர்க்கு உத்தேசியமானாற் போன்று, தண்ணியதான இவர் திருமேனியும் இவர் சம்பந்தத்தாலே உத்தேசியம் என்னாநின்றான் என்றபடி. "அடங்கெழில்" என்பது, திருவாய்மொழி, 1. 2 : 7. 'பாம்பு செத்ததோ' என்றது, விடத்தக்கது உண்டோ! என்றபடி.

7. இப்போது திருஉலகு அளந்த செயலைக் கூறுவதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எத்தனைகாலம்' என்று தொடங்கி.

8. ஞாலத்தூடே நடந்து உழக்கியது இவர்க்காகவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

னுடைய செயல் எல்லாம், எனக்கு எனக்கு என்று சொல்லலாம் அன்றோ அடியர் ஆனோர்க்கு. [1] இந்திரனுக்கு 'இழந்த அரசினைப் பெற்றேன்' என்னவுமாய், மஹாபலிக்கு 'வள்ளல் என்னும் பெயர் பெற்றேன்' என்னவுமாய், சிலர்க்குப் 'பொன்பயந் தேன்' என்னவுமாய், இவர்க்கு 'எனக்காகச் செய்தான்' என்னவுமாய் இருக்கிறது காணும்.

தென் கொள் திசைக்குத் [2] திலதமாய் நின்ற திருமாலிருஞ் சோலை - தெற்கில் திக்கிற்கு ஓர் ஆபரணமான திருமாலிருஞ் சோலை. நங்கள் குன்றம் - அடியார்கள் அநுபவிக்கும் மலை. நங்கள் குன்றம் கைவிடான் நன்கு என் உடலம் கைவிடான் - [3] திருமலையைப் பிராபகமாகவும் ஆழ்வார் திருமேனியைப் பிராப் பியமாகவும் நினைத்திராநின்றான். என்றது, உத்தேசியம் ஆழ் வார் திருமேனியாய், அது பெறுகைக்கு ஆயிற்றுத் திருமலையில் நிலை என்றபடி. நண்ணா அசுரர் நலியவே - [4] "நெடும் பகை தற் செய்யத் தானே கெடும்" என்னுமாறு போலே, இவன்

1. 'எனக்கு எனக்கு என்று சொல்லலாம்' என்றதனை விவரணம் செய்கிறார் 'இந்திரனுக்கு' என்று தொடங்கி. 'சிலர்க்கு' என்றது, திருமங்கை மன்னனை.

" முன்னம் குறள் உருவாய் மூவடி மண் கொண்டு அளந்த
மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன் பயந்தேன் "

என்பது, இவர் திருவாக்கு. 9. 4 : 2.

2. " திலதமாய் நின்ற திருமாலிருஞ்சோலை " என்னும் இவ்விடத்தில், " புலவரை அறியாப் புகழொடு பொலிந்து " என்று தொடங்கும் பரிபாடலை யும், அதன் உரையையும் உளம் கொண்டு மகிழ்தல் தகும்.

3. இவரிடத்தில் அவன் வைத்துள்ள காதலைச் சொல்லும் இவ்விடத் தில் " நங்கள் குன்றம் கைவிடான் " என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திருமலையை' என்று தொடங்கி. பிராபகம் - வழி. பிராப்பியம் - அந்த வழியால் பெறும் பேறு.

" அங்குத்தை வாசம் சாதனம், இங்குத்தை வாசம் சாத்யம் " என்பது, ஸ்ரீ வசன பூஷண ஸ்ரீ ஸூக்தி.

4. திருமலையில் நிலை இவர்க்காக ஆகில், நண்ணா அசுரர் நலியுமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நெடும்பகை' என்று தொடங்கி.

" நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும் "

என்பது, பழமொழி நானூறு.

இவ்விடத்தினை விடாதே வசிக்க, [1]அசுரக்கூட்டம் முடிந்து போயிற்று.[2]உலகும் உயிரும் தானேயாய், ஞாலத்தூடே நடந்து உழக்கி, தென் கொள் திசைக்குத் திலதமாய் நின்ற திரு மாலிருஞ்சோலை நங்கள் குன்றம், நண்ணா அசுரர் நலிய கை விடான், நன்கு என் உடலம் கைவிடான், அம்மான் திருவருள்கள் என்கொல்? என்று கூட்டுக. (4)

1063.

நண்ணா அசுரர் நலிவு எய்த,
நல்ல அமரர் பொலிவு எய்த,
எண்ணாதனகள் எண்ணும் நன்
முனிவர் இன்பம் தலை சிறப்ப,
பண்ணார் பாடல் இன் கவிகள்
யானாய்த் தன்னைத் தான் பாடி,
தென்னா என்னும் என் அம்மான்
திருமாலிருஞ் சோலையானே.

பொ - ரை :—கிட்டக் கடவோம் அல்லோம் என்று இருக்கிற அசுரக் கூட்டங்கள் அழியும்படியாகவும், சிறந்த குணங்களையுடையரான தேவர்கள் மேன்மையினை அடையும்படியாகவும், மற்றை மக்கள் எண்ணாதனவற்றை எண்ணுகின்ற சிறந்த முனிவர்களுக்கு இன்பம் மேலும் மேலும் ஓங்கும்படியாகவும், பண்ணோடு கூடிய இசையையுடைய இனிய பாட்டுக்களைத் தானே யானாகித் தன்னையே தான் பாடித் தென்னாதெனா என்று ஆளத்தி வையாநிற்கும் எம்பெருமான் திருமாலிருஞ்சோலை மலையிலே உள்ளவன் ஆவான் என்க.

வி - கு :—நலிவு எய்த, பொலிவு எய்த, இன்பம் தலை சிறப்ப, தன்னைத் தான் பாடித் தென்னா என்னும் என் அம்மான் திருமாலிருஞ் சோலையான் என்க. பாடல் - இசை. இங்கு, அசுரர் என்றது, பகவத்

1. ‘அசுரக் கூட்டம் முடிந்து போயிற்று’ என்றது, சர்வேஸ்வரனுக்குத் திவ்யமங்கள விக்கிரகம் இல்லை, திருக் கல்யாண குணங்கள் இல்லை என்று இப்படிப் பிதற்றும் அசுரக் கூட்டம் எல்லாம் திருமாலிருஞ்சோலையில் எம்பெருமான் நின்ற நிலை கண்டவாறே தொலைந்தனர்; அப்படியே, இறைவன் ஆழ்வார் திருமேனியில் பண்ணும் காதல் இப்படிப்பட்டது என்று அறிந்தவாறே ஆழ்வாரிடத்தில் குறைகளை எண்ணுகின்ற அசுரக்கூட்டம் அழிந்தது என்றபடி.

2. திருமலை சாதனமும் ஆழ்வார் திருமேனி சாத்யமும் என்னுமிடம் தோன்றப் பாசுரத்துக்கு அந்வயம் காட்டுகிறார் ‘உலகும் உயிரும்’ என்று தொடங்கி.

பக்தி இல்லாதாரை. அமரர் என்றது, பாகவதர்களை. முனிவர் என்றது, முமுக்ஷுக்களை.

ஈடு:—ஐந்தாம் பாட்டு. [1]அவன், தம்மோடே கலந்து தம் திருவாயாலே திருவாய்மொழி கேட்ட பிரீதி உள் அடங்காமல் மகிழ்ந்து ஆளத்திவையாநின்றான் என்கிறார். அன்றிக்கே, "நன்கு என் உடலம் கைவிடான்" என்னும் அளவு அன்றிக்கே, என் வார்த்தை அளவிலே களியாநின்றான் என்கிறார் என்னவுமாம்.

நண்ணா அசுரர் நலிவு எய்த நல்ல அமரர் பொலிவு எய்த எண்ணாதனகள் எண்ணும் நன் முனிவர் இன்பம் தலை சிறப்ப ஆயிற்றுத் திருவாய்மொழி அவதரித்தது. [2] இதில் பேசப் படுகின்ற பரம்பொருளினுடைய அவதாரம் போலே ஆயிற்றுத் துதிப்பாடலாகிய இதனுடைய அவதாரமும்; [3] "சாதுக்களைப் பாதுகாக்கும் பொருட்டும் துஷ்டர்கள் அழியும் பொருட்டும் எல்லா அறங்களையும் நிலைநிறுத்தும் பொருட்டும் ஒவ்வொரு

1. இவர்மேல் இறைவன் வைத்துள்ள காதலைச் சொல்லிக்கொண்டு வரும் இவ்விடத்திலே திருவாய்மொழியைக் கேட்டு இனியன்ஆகிறான் என்று சொல்லுகிறது என்? என்ன, அதற்கு இரண்டு வகையாக விடை அருளிச்செய்கிறார் 'அவன், தம்மோடே' என்று தொடங்கியும், 'நன்கு என் உடலம்' என்று தொடங்கியும். இத் திருவாய்மொழியின் முதல் பாசுரத்தில் "மாயக் கவியாய் வந்து" என்றும், இரண்டாம் பாசுரத்தில் "தன்னைத் தானே துதித்து" என்றும் சொல்லிப் போந்தார் ஆகையாலே அருளிச்செய்கிறார் என்றபடி. "நன்கு என் உடலம் கைவிடான்" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'அவன், தம்மோடே கலந்து' என்கிறார். இரண்டாவது அவதாரிகையில், "நன்கு என் உடலம்" என்றது, திருமேனி முழுதும் வேண்டாமல் சொல் அளவிலேயே களியாநின்றான் என்றபடி. ஆளத்தியாவது, இசைக்குப் பூர்வாங்கமான ஆலாபம்.

2. அதனாலே போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'இதில் பேசப் படுகின்ற' என்று தொடங்கி.

3. இதில் பேசப்படுகின்ற பரம்பொருளின் அவதாரம், அடியார்கள் உய்வதற்கும் விரோதிகள் அழிவதற்கும் காரணமாக இருக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "சாதுக்களை" என்று தொடங்கியும், "எல்லா உலகங்களாகிற" என்று தொடங்கியும்.

> பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்
> தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

என்பது, ஸ்ரீ கீதை, 4 : 8.

> தத: அகில ஜகத்பத்மபோதாய அச்யுத பாநுநா
> தேவகீபூர்வ ஸந்த்யாயாம் ஆவிர்பூதம் மஹாத்மநா.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 3 : 2.

யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்" என்றும், "எல்லா உலகங்கள் ஆகிற தாமரையை அலர்த்துவதற்காகத் தேவகி யாகிற கிழக்குத் திக்கில் மிக்க ஒளியையுடைய கிருஷ்ணனாகிற சூரியனானவன் தோன்றினான்" என்றும் சொல்லப்படுமாறு போலே. பகைவர்களை அழிப்பதற்கும் வேறு ஒரு கருவி எடுக்கவும் வேண்டாதே, அடியார்களைப் பாதுகாப்பதற்கும் வேறு ஒன்று தேடவும்வேண்டாதே, வேறு பிரயோஜனத்தை விரும்பாதார்க்குத் தானே பிரயோஜனமுமாய் இருக்குமாயிற்று.

நண்ணா அசுரர் நலிவு எய்த-[1]அவ்யபதேஶ்யனுக்கு அநந்தரத்திலவன், தமப்பன் செய்ததனைக்கேட்டு "இவன் என் செய்தானானான்" என்று சிரித்தான், "ஒரு மதிளை வாங்குங் காட்டில் அத் தரிசனம் குலைந்ததோ, திருவாய்மொழி என்றும் ஸ்ரீராமாயணம் என்றும் வலியன இரண்டு மஹாப் பிரபந்தங்கள் உளவாக இருக்க" என்றான் ஆயிற்று; இப்படி உகவாதார் நெஞ்சு உளுக்கும்படியான பிரபந்தமாயிற்று. [2]"உலகத்

1. திருவாய்மொழி விரோதிகள் அழிவதற்குக் காரணம் என்பதற்கு ஒரு சம்வாதம் காட்டுகிறார் 'அவ்யபதேஶ்யன்' என்று தொடங்கி. அவ்யபதேஶ்யன் - கிருமிகண்டன். இவன் பதினோராம் நூற்றாண்டில் (கி. பி. 1070-1116.) இருந்த முதற் குலோத்துங்கன் என்பர். இவன், தத்துவஞானிகளான பெரியநம்பி, கூரத்தாழ்வான் என்னும் பெரியார்கள் இருவருடைய திருக் கண்கள் போதற்குக் காரணமாக இருந்த மஹாபாதகன். ஆகையாலே அவன் பெயரைச் சொல்லுவதற்கும் வாய் வாராமல் 'அவ்யபதேஶ்யன்' என்கிறார். அவ்யபதேஶ்யன் - எடுத்துப் பேசுவதற்குத் தகாதவன்; நீசன் என்றபடி.

அவத்தப் புன் சமயச் சொல் பொய்யை மெய் என்று
அணி மிடறு பழுத்தான் தன் அவையின் மேவி
சிவத்துக்கு மேல் பதக்கு உண்டு என்று நீட்டும்
திருக்கூர வேதியர் கோன் செவ்வி பாடப்
பவத் துக்கம் பிணி நீங்க நரகம் தூரப்
பரமபதம் குடிமலியப் பள்ளிகொள்ளும்
நவத் துப்புச் செங்கனிவாய்க் கரிய மேனி
நம்பெருமாள் அரங்கேசர் ஆடிர் ஊசல்.

என்றார் திவ்ய கவியும். சீரங்க நாயகர் ஊசல், 20.

அநந்தரத்திலவன் - அவன் மகன். அவனுக்குப் பின்னே பட்டத்துக்கு வந்தவன் என்றபடி. மகன் - விக்கிரம சோழன். இவன் காலம், கி. பி. 1116-1134. தமப்பன் செய்தது - திருக் கண்ணபுரத்தின் திருமதிள்களை இடித்துத் தள்ளியது. அத் தரிசனம் - எம்பெருமானார் தரிசனம்; வைஷ்ணவமதம்.

2. நன்று; அச்சோழனும் அவன் மகனும் அசுரனோ? என்ன, ஆம் என்று அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'உலகத்தில்' என்று தொடங்கி. என்

தில் தெய்வப்பிறவி என்றும் அசுரப்பிறவி என்றும் உயிர்களின் படைப்பு இரண்டு விதம்; விஷ்ணு பக்தியோடு கூடியது **தெய்வப் பிறவி;** விஷ்ணு பக்தி இல்லாதது **அசுரப் பிறவி"** என்னக்கடவது அன்றே. [1] பொருந்தாமையையுடைய அசுரர் கூட்டமானது மண் உண்ணும்படியாக. [2] சம்பந்தம் இல்லை என்ன ஒண்ணாதே, 'பொருந்தோம்' என்கை அன்றே உள்ளது.

[3] நல்ல அமரர் பொலிவு எய்த - அநுகூலரானவர்கள் உண்ணாதே தடிக்க. இவர்களுக்கு நன்மையாவது, பகவானிடத்தில் பக்தி யுடையராயிருக்கை. [4] "தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்னக் கடவதன்றே. எண்ணாதனகள் எண்ணும் நன்முனிவர் - புறம்பு ஒருவர் எண்ணாதன சிலவற்றை எண்ணுவார் சிலர் உண்டாயிற்று. அவர்கள் ஆவார்: "சர்வேஸ்வரன் காப்பாற்றுமவன், அவனை ஒழிந்தவை அடங்கலும் அவனாலே பாதுகாக்கப்படுகின்ற பொருள்கள்" என்று இருக்கை அன்றிக்கே, இரண்டு உலகங்களையுமுடைய சர்வேஸ்வரனுக்கு இன்னமும் சில உலகங்கள்வேண்டும், எல்லாக் குணங்களும் நிறைந்தவனுக்கு இன்னமும் சில குணங்கள் வேண்டும் என்று இப்புடைகளிலே எண்ணுவார் சிலர் உண்டாயிற்று; அவர்கள் என்றபடி. இன்

றது, விஷ்ணுவினிடத்தில் பக்தியுள்ளவர்கள் எல்லாரையும் அமரர்களாகவும், அவனிடத்தில் பக்தி இல்லாதவர்கள் எல்லாரையும் அசுரர்களாகவும் சாஸ்திரங்கள் கூறுவதால் அங்ஙனம் அருளிச்செய்கிறார் என்றபடி.

த்வௌ பூத ஸர்கௌ லோகேஷு தைவ ஆஸுர ஏவச
விஷ்ணு பக்தி பரோதேவ: விபரீத: ததாஸுர:.

என்பது, ஸ்ரீ கீதை, 16: 6.

"தேவர் செய்கையன் அங்ஙனம் உரைசெயத் தீயோன்" என்று விஷ்ணு பக்தி நிறைந்த பிரஹ்லாதனைத் தேவர் செய்கையன் என்றார் கம்பநாட்டாழ்வாரும். கம்பரா. இரணியன் வதைப். 41.

1. "நண்ணா அசுரர் நலிவு எய்த" என்ற தொடருக்குப் பதப் பொருள் அருளிச்செய்கிறார் 'பொருந்தாமையையுடைய' என்று தொடங்கி.

2. அசுரர் என்னாதே "நண்ணா அசுரர்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சம்பந்தம்' என்று தொடங்கி.

3. "நல்ல அமரர்" என்பதில் "நல்ல" என்னும் அடைமொழி இனம் விலக்க வந்ததன்று; அவர்களுடைய இயற்கைப் பண்பினை விளக்க வந்தது. அமரர் - அநுபவபரர்.

4. அமரர் உண்ணாமலே தடிப்பதற்கு, இத் திருவாய்மொழி தாரகமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "தொண்டர்க்கு" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 4: 9.

பம் தலை சிறப்ப - [1]திருவாய்மொழி அவதரித்த பின்பு "அவனுக்கு இந்தக் குணங்களும் இந்த உலகங்களும் போராது" என்று, இருந்த இழவு தீர்ந்து, அதனால் எல்லை இல்லாத ஆனந்தத்தை அடைந்தவர்களாக. அவனுடைய செல்வ நிறைவினை நினைந்து கொண்டே இருக்கும் தன்மையர் ஆகையாலே 'நன் முனிவர்' என்கிறது. அன்றிக்கே, 'திருவாய்மொழியை ஒழிய வேறு ஒரு செல்வம் வேண்டார்' என்று இதுவே நினைந்து பேருவகையராம் தன்மையர் ஆகையாலே 'நன் முனிவர்' என்கிறது என்னுதல்.

பண்ணார் பாடல் - [2]பண்ணோடு சேர்ந்த பாடல். அன்றிக்கே, மலரானது மணத்தோடே மலருமாறு போன்று, பண்ணும் இசையும் மிகுந்திருக்கும் பாடல் என்னுதல். இன் கவிகள் - இசையும் பண்ணும் ஒழியவே, [3]"தொக்குக் கழிந்த சுளை போலே கவிதானே இனிதாய் இருக்குமாயிற்று. யானாய்த் தன்னைத் தான் பாடி - [4]தந்தையானவன் மகனுக்குப் பசுவினை நீர் வார்த்துக் கொடுத்து அவன் பக்கலிலே தான் மீள நீர் ஏற்றுப் பசுவினைப் பெறுமாறு போலே; [5]மகனுக்குச் சொற்களைக் கற்பித்து அவன் சொல்லக் கேட்டுத்

---

1. 'திருவாய்மொழி அவதரித்த பின்பு' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்பு 'எம்பெருமானுக்குள்ள குண விபூதிகளைக் கூறுதற்குத் தக்க பிரபந்தம் ஒன்று அவதரிக்கவில்லையே' என்று இழவுபட்டிருந்தார்கள்; திருவாய்மொழி அவதரித்த பின்பு அந்த இழவு தீர்ந்து, 'எம்பெருமானுக்குக் குணவிபூதிகள் போராது இன்னம் வேண்டும்' என்று இழவு உற்றார்கள் என்பது. 'இருந்த இழவு தீர்ந்து' என்றது, திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்பு இருந்த இழவு தீர்ந்து என்றபடி.

2. "பண் ஆர் பாடல்" என்பதிலுள்ள "ஆர்தல்" என்ற சொல்லுக்கு, சேர்தல் என்றும், மிகுதல் என்றும் இருபொருள். இவ் இரண்டு பொருளையும் முறையே அருளிச்செய்கிறார் 'பண்ணோடு' என்று தொடங்கியும், 'மலரானது' என்று தொடங்கியும். பண் - ஸ்வரம். இசை - ராகம்.

3. தொக்கு - மேல்தோல்.

4. "யானாய்த் தன்னைத் தான் பாடி" என்பதனை ஒரு திருஷ்டாந்த மூலம் விளக்குகிறார் 'தந்தையானவன்' என்று தொடங்கி.

5. யானாய்த் தன்னைத் தான் பாடினால் உகக்குமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மகனுக்கு' என்று தொடங்கி.

மக்கள் மெய்தீண்டல் உடற்கு இன்பம் மற்றவர்
சொற் கேட்டல் இன்பம் செவிக்கு.

என்பது, திருக்குறள்.

தந்தை இனியன் ஆமாறு போலே. [1] தான் பாடினான் ஆகில் ஸ்ரீ கீதையோடு ஒத்துப் போம். [2]**நம்பி திருவழுதிநாடு தாசர்,** "அருள் கொண்டாடும்" என்கிற பாட்டிலே, "ஸ்ரீகீதையைக் கற்றான் ஒருவன் காலை நேரத்திலே ஒரு சபைக்குச் சென்றால், பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து நம்ப மாட்டாமையாலே 'புறத் திண்ணையிலே கிட' என்பர்கள். **திருவாய்மொழி கற்றான் ஒரு விண்ணப்பம் செய்வான்** சென்றால், சர்வேஸ்வரன் அகப்படப் புறப்பட்டு எதிர்கொண்டு அகம் ஒழித்துக் கொடுத்து அமுது படியும் எடுத்துவிட்டு உபசரிப்பர்கள்" என்றாராம். [3]"பண்டே பரமன் பணித்த" என்று இவர் அங்கீகரிக்கையாலே அந்த ஸ்ரீகீதை தானும் வீறு பெற்றது அன்றோ.

தென்னா என்னும் - செருக்காலே 'தென்னா, தென்னா' என்று ஆளத்தி வையாநிற்குமாயிற்று. [4]பிறப்பு இறப்புக்களிலே உழலுகின்ற ஒருவன் பகவானைப் பெற்றால் "மேலே சொல்லப் போகிற சாமத்தைப் பாடிக் கொண்டிருக்கிறான்" என்கிறபடியே சாமகானம் பண்ணுமாறு போலே; [5]"வார்த்தை ஆடாதவன் விருப்பம் இல்லாதவன்" என்னப்படுமவன், அத்

"யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருள்அறி வாரா வாயினும் தந்தையர்க்கு
அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லும் அன்ன"

என்பது, புறநானூறு, 92.

"அத்தத்தா என்னும் நின், தேமொழி கேட்டல் இனிது"
என்பது, கலித். 80. 14-5.

"அவர் மழலை கேட்டல் அமிழ்தினும் இனிது"
என்பது, இனியது நாற். 15.

1. தான் பாடாமல் இவரையிட்டுப் பாடுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தான் பாடினானாகில்' என்று தொடங்கி.

2. ஸ்ரீ கீதையைக் காட்டிலும் இது உயர்ந்தது என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'நம்பி திருவழுதிநாடு தாசர்' என்று தொடங்கி. "அருள் கொண்டாடும்" என்பது, கண்ணிநுண் சிறுத்தாம்பு, செய். 8.

3. ஆயினும், ஸ்ரீ கீதைக்குச் சிறப்பு இல்லையோ? என்ன, "பண்டே" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, திருவாய்மொழி, 10. 4 : 9.

4. இறைவன் ஆளத்தி வைப்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பிறப்பு இறப்பு' என்று தொடங்கி. 'மேலே சொல்லப் போகிற' என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகத்தை மேலே காண்க.

5. "அவாக்யநாதர:" என்பது, உபநிடதம்.

தன்மை நீங்கிப் பாடாநிற்பான் ஆயிற்று. என் அம்மான் - குழந்தையின் வார்த்தை இனிதாம்போது சம்பந்தம் உண்டாக வேண்டும் அன்றோ; அதற்கு அடியான சம்பந்தத்தைச் சொல்லுகிறது. திருமாலிரும் சோலையானே - [1]இவரைப் பாடுவித்த முக்கோட்டை. [2]"பாட்டினால் உன்னை என் நெஞ்சத்து இருந்தமை காட்டினாய், கண்ணபுரத்துறை அம்மானே" என்று அவரைப் பாடுவித்த முக்கோட்டை அன்றோ அது. [3]தாம் பாடின கவிகளின் இனிமையை நினைந்தார், இவை, தாம் அடியாகப் பிறந்தன என்று சொல்லலாயிருந்தன இல்லை, இதற்கு அடி என்? என்று பார்த்தார்; அவன் தன் நெஞ்சிலே புகுந்திருந்து பாடுவித்தானாய் இருந்தது."கண்ணபுரத்து உறை அம்மான்" என்று கவி பாடுவித்த முக்கோட்டையைச் சொல்லுகிறார். (5)

1064.

திருமாலிருஞ் சோலையானே
ஆகி, செழு மூ உலகும் தன்
ஒரு மா வயிற்றின் உள்ளே வைத்து,
ஊழி ஊழி தலையளிக்கும்
திருமால், என்னை ஆளும் மால்,
சிவனும் பிரமனும் காணாது,
அரு மால் எய்தி அடி பரவ,
அருளை ஈந்த அம்மானே!

பொ - ரை :—சிவபிரானும் பிரமதேவனும் காண மாட்டாது, அரிய பெரிய பக்தியை மேற்கொண்டு திருவடிகளைத் துதிக்க அவர்களுக்குத் திருவருளைச் செய்த அம்மானும், செழுமையான மூன்று உலகங்களையும் தனது மிகச் சிறிய வயிற்றினுள்ளே கற்பாந்த காலத்து

1. "யானாய்த் தன்னைத் தான் பாடித் திருமாலிருஞ்சோலையான்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவரை' என்று தொடங்கி. 'முக்கோட்டை - வழிபட்டோர்க்குக் கவி இயற்றும் சக்தியைக் கொடுக்கும் துர்க்கையின் கோயில்.

2. இதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் "பாட்டினால்" என்று தொடங்கி. அவரை - திருமங்கை மன்னனை. அது - திருக்கண்ணபுரம். 'பாட்டினால்' என்பது, பெரிய திருமொழி, 8. 10 : 9.

3. எடுத்த பாசுரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தாம் பாடின' என்று தொடங்கி.

வைத்துக் கல்பம் தோறும் பாதுகாக்கின்றவனுமான திருமால், திருமாலிருஞ்சோலை மலையில் வந்து நிற்பவனாகி என்னை அடிமை கொண்டு ஆளுகின்ற தன்மையில் மாலாக இருக்கிறான் என்பதாம்.

வி - கு :—சிவனும் பிரமனும் காணாது மால் எய்தி அடி பரவ அருளை ஈந்த அம்மான் ஊழி ஊழி தலையளிக்கும் திருமால் திருமாலிருஞ்சோலையானே ஆகி என்னை ஆளும் மால் ஆவான் என்க. ஆளும் - ஆளுகைக்காக. தலையளித்தல் - ஒரு சொல்; காப்பாற்றுதல் என்பது பொருள்.

ஈடு :—ஆறும் பாட்டு. [1] திருமகள் கேள்வன் ஆனவன் திருமலையிலே நின்றருளி என்னை ஆளுகையிலே பெருங்காதலன் ஆனான் என்கிறார்.

திருமாலிருஞ்சோலையானே ஆகி என்னை ஆளும் மால் - [2] திருமலையைத் தனக்கு வசிக்குமிடமாகக்கொண்டுநிற்கிறவன், என்னை அடிமை கொள்ளுகைக்காக என் பக்கல் [3] காதலே ஒரு வடிவு கொண்டாற் போன்று இருக்கிறவன். செழு மூ உலகும் - கட்டளைப்பட்ட மூன்று உலகங்களையும். ஒரு [4] மா வயிற்றினுள்ளே வைத்து ஊழி ஊழி தலையளிக்கும் - ஒப்பற்றதான மிகச் சிறிய வயிற்றிலே வைத்து, கல்பந்தோறும் கல்பந்தோறும் தலையாகப் பாதுகாக்கும். என்றது, [5] பிரளய ஆபத்தில் உலகத்திற்குத் தன்னை ஒழியச் செல்லாதவாறு போன்று, என்னை ஒழியத் தான் செல்லாதானாய் இருக்கையைத் தெரிவித்தபடி. திருமால் - திருமகள் கேள்வன். என்னை ஆளும் மால் - என்னை அடிமை கொள்ளுகைக்காகப் பிச்சுத்தான் ஒரு வடிவு கொண்டாற்போலே இருக்குமவன். சிவனும் பிரமனும் காணாது அரு மால் எய்தி அடி பரவ அருளை ஈந்த அம்

---

1. "திருமால் திருமாலிருஞ்சோலையானே ஆகி என்னை ஆளும் மால்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. சிவனும் பிரமனும் காணாது அரு மால் எய்தி அடி பரவ அருளை ஈந்த அம்மான் திருமாலிருஞ்சோலையானே யாகி என்னை ஆளும் மால் என்று கொண்டு கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'திருமலையைத் தனக்கு' என்று தொடங்கி.

3. மாலையுடையவன் என்னுமல் "மால்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'காதலே' என்று தொடங்கி.

4. "மா" விபரீதலக்ஷணை. சிறிய என்பது பொருள்.

5. "ஊழி ஊழி தலையளிக்கும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரளய ஆபத்தில்' என்று தொடங்கி.

மான் - பிரமன் சிவன் முதலான தேவர்கள், காணப் பெருமை யாலே, எல்லை இல்லாத பக்தியினை யுடையராய்த் திருவடிகளை அடைவு கெட ஏத்த, அவர்களுக்கு முகம் தோற்றுமே கடக்க நின்று அருள் செய்கின்ற சர்வேஸ்வரன், எனக்குக் கண்களுக்கு இலக்காம்படி திருமலையிலே வந்து நின்று என்னை அடிமை கொள்ளுகையிலே பெரும் பித்தன் ஆனான். (6)

1065.

அருளை ஈ,என் அம்மானே! என்னும் முக்கண் அம்மானும்,
தெருள்கொள் பிரமன் அம்மானும் தேவர்கோனும், தேவரும்,
இருள்கள் கடியும் முனிவரும், ஏத்தும் அம்மான் திருமலை
மருள்கள் கடியும் மணிமலை திருமாலிருஞ் சோலைமலையே.

பொ - ரை :—என்னுடைய சுவாமியே! திருவருள் செய்தல் வேண்டும் என்னும் சிவபெருமானும், ஞானத்தை யுடைய பிரமனும், இந்திரனும், மற்றைத் தேவர்களும், அறிவின்மையை நீக்குகின்ற முனிவர்களும் துதிக்கின்ற அம்மானுடைய திருமலை யாது? எனின், அறிவின்மையை நீக்குகின்ற அழகிய மலையாகிய திருமாலிருஞ்சோலைமலையே யாகும் என்க.

வி - கு :—'ஈ' என்பது, இழிந்தோன் உயர்ந்தோனிடத்துக் கூறும் இரப்புரை. இருள்கள் கடியும் என்பதற்கு, உலகத்தாருடைய அறிவின்மையை நீக்குகின்ற என்றும், தங்கள் அறிவின்மையைப் போக்குகின்ற என்றும் இருவகையாகவும் பொருள் கொள்ளலாம். இருள்கள், மருள்கள் என்பனவற்றிலுள்ள 'கள்' அசைநிலை. பன்மை விகுதியுமாம்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1]தம்முடைய இச் செல்வ நிறைவிற் கெல்லாம் அடி திருமலை ஆன பின்பு, இம் மலையேதான், நாம் அடையத் தக்க பேறு என்று திருமலையைக் கொண்டாடுகிறார்.

அருளை ஈ என்பர்கள் - திருவருளைச் செய்தருளாய் என்பர்கள். என் அம்மானே - [2] நீ அருளாதொழிந்தால் புறம்பு எங்களுக்குப் புகல் உளதோ? சம்பந்தமுள்ளவனான நீ அருள

1. "மணி மலை திருமாலிருஞ்சோலை மலையே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "அம்மானே" என்று இறைமைத் தன்மையைச் சொல்லிக் கூப்பிடுகின்றவர்களுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'நீ அருளாதொழிந் தால்' என்று தொடங்கி.

வேண்டாவோ? என்பர்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் தாம் யார்? என்னில், முக்கண் அம்மானும் தெருள்கொள் பிரமன் அம்மானும் தேவர்கோனும் தேவரும் மருள்கள்கடியும் முனிவரும்-நெற்றியில் கண்ணையுடையனாய்த் தன்னைத் தானே ஈஸ்வரனாக நினைத்திருக்கிற சிவன், அவனுக்கும் கூட ஞானத்தினை உபதேசித்தவனாய் அவனுக்குத் தந்தையாகையால் வந்த ஏற்றத்தினையுடைய நான்முகன், தேவர் கூட்டத்தைச் சனியும் புதனும் மெய்க்காட்டுக் கொள்ளுகின்ற இந்திரன், தங்களை உடையனாகை அவனுக்கு ஏற்றமாம்படி இருக்கிற தேவர்கள், அறிவின்மையாகிற இருட்டினை வாசனையோடே போக்கி இருக்கும் ஸ்மிருதி கர்த்தாக்களான இருடிகள், இவர்கள் அடங்கலும் ஒரு மிடறுசெய்து ஏத்தும்படியாகச் சர்வேஸ்வரன் தான் விரும்பி வந்து மேல் விழுந்து [1]படுகாடு கிடக்கும் தேசமாயிற்று.

[2]மருள்கள் கடியும் மணி மலை - பேற்றினை அடைதற்குத் தடைகளாக உள்ளனவற்றை அடையப் போக்கும் தேசம் ஆயிற்று. அன்றிக்கே, திருமலையை ஒழிந்தது ஒன்றே பெறத் தக்க பேறு என்று பிறக்கும் புத்தியைத் தவிர்த்துத் தருமாயிற்று என்னலுமாம். அது எதுதான்? என்னில், மற்றும் உண்டோ? திருமாலிருஞ்சோலை மலையே. (7)

1066.

திருமாலிருஞ் சோலை மலையே,
திருப்பாற்கடலே, என் தலையே,
திருமால் வைகுந்தமே, தண்
திருவேங்கடமே, எனது உடலே,
அரு மா மாயத்து எனது உயிரே,
மனமே, வாக்கே, கருமமே,
ஒரு மா நொடியும் பிரியான் என்
ஊழி முதல்வன், ஒருவனே.

---

1. படுகாடு கிடத்தல் - வெட்டி வீழ்த்திய காடு போலே கிடத்தல்.

2. "மருள்கள் கடியும் மணி மலை" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். ஒன்று, 'பேற்றினை' என்று தொடங்குவது. 'திருமலையை ஒழிந்தது' என்று தொடங்குவது இரண்டாவது பொருள். கைங்கரியத்துக்கு விரோதிகளான அவித்யை முதலானவற்றைப் போக்கித் தானே புருஷார்த்தமாக இருப்பது திருமலை என்பது முதற் பொருளின் கருத்து. திருமலையை ஒழியவும் வேறே ஒரு பேறு உண்டு என்று இருக்கும் நினைவினைப் போக்குவது என்பது இரண்டாம் வகைக்குக் கருத்து.

பொ - ரை :—என் ஊழி முதல்வனான ஒருவன், திருமாலிருஞ்சோலை மலையோடு திருப்பாற்கடலோடு என் தலையையும், திருமால் எழுந்தருளியிருக்கின்ற பரமபதத்தோடு குளிர்ந்த திருவேங்கடத்தோடு என் உடலையும், கடத்தற்கு அரிய பெரிய பிரகிருதியோடு கலந்திருக்கிற என் உயிரையும், மனத்தையும், வாக்கையும் ஒரு நொடிப் பொழுதில் ஒருமாப்பொழுதும் பிரிந்து நிற்கிறான் இலன்.

வி - கு :—"ஒரு மா நொடியும் பிரியான்" என்பதனை, "உடலே" என்பது முதலாயினவற்றோடு தனித் தனியே கூட்டுக. நொடி - நொடித்தல்; இரண்டு விரல் நுனிகளையும் சேர்த்து அடித்தல். அது, ஆகுபெயராய் அடித்தலுக்கு வேண்டிய காலத்தை உணர்த்துகிறது. [1] மா - மிகச் சிறிய எண்; 1/20. இதுவும் அவ்வளவினைக் கொண்ட காலத்தை உணர்த்துகிறது.

ஈடு :—எட்டாம் பாட்டு. [2] திருமலை தொடக்கமான கோயில்கள் எல்லாவற்றிலும் செலுத்தும் ஆசையை என் உறுப்புக்களிலே செலுத்தி ஒரு கணநேரமும் பிரிகிறிலன்; இவன்படி இருந்தபடி என்! என்கிறார்.

திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே என் தலையே - தெற்கில் திருமலையையும் திருப்பாற்கடலையும் இவருடைய தலையையும் ஒக்க விரும்பினான். திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே எனது உடலே - ஸ்ரீ வைகுண்டத்தையும் வடக்கில் திருமலையையும் இவர் திருமேனியையும் ஒக்கவிரும்பாநின்றான். [3] "பிராட்டியோடு கூட உலகங்கட்கு எல்லாம் தலைவன் எழுந்தருளியுள்ளான்" என்கிறபடியே, இருப்பது ஒன்றாதலின் '**திருமால் வைகுந்தம்**' என்கிறார். [4] ஆக, இரண்டு திருமலைகளிலும் பரத்துவத்திலும் வியூகத்திலும் பண்ணும் விருப்ப முழுதினையும் இவர் திருமேனி ஒன்றிலும் பண்ணாநின்றான் என்றபடி. அரு மா மாயத்து எனது உயிரே மனமே

---

1. எட்டு ஒருமா எண்காணி மீதே இருந்த கலை
பட்டு ஒருமா நான்மாவிற் பாய்ந்ததே - சிட்டர்தொழும்
தேவாதி தேவன் திருவத்தியூர் வரதன்
மாவேறி வீதிவரக் கண்டு.

என்பது, தனிப் பாடல்.

2. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதிஃ" என்பது, பிரமாணம்.

4. முன் இரண்டு அடிகளாலும் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி. இவற்றைக் கூறியது, மற்றைய திவ்யதேசங்களுக்கும் உபலக்ஷணம்.

வாக்கே - இவருடைய ஆத்மாவிலும் மனம் வாக்குக் காயங்களிலும் ஒக்க விரும்பாநின்றான். 'உயிரே, மனமே, வாக்கே, கருமமே' என்பனவற்றில் உள்ள ஏகாரத்தால், அவற்றிலும் முறையால் அன்றியே கணநேரமும் இடைவிடாதே, [1]சௌபரியைப் போலே பல வடிவுகொண்டு நில்லாநின்றான் என்பதனைத் தெரிவித்தபடி. ஆத்மா என்று ஒரு பெயர் மாத்திரமேயாய், அநாதிகாலம் மூலப் பகுதியிலே கலந்து அதனாலே அசித்தினைப் போன்று இருப்பது ஒன்று ஆகையாலே அதனை 'அரு மா மாயத்து எனது உயிர்' என்கிறார். [2] "என்னுடைய மாயை ஒருவராலும் தாண்ட முடியாதது" என்கிறபடியே, ஒருவரால் கடக்க அரிதாய் இருந்துள்ள அசித்தோடே கலசிக் கிடக்கிற ஆத்மாவிலும் என்றபடி.

மனமே வாக்கே கருமமே - மேல், இவற்றை ஒன்றாக விரும்பினபடி சொன்னார்; இங்குத் தனித் தனியே எல்லாவற்றிலும் ஒக்க ஒரே காலத்திலே விருப்பத்தைச் செய்தபடியைச் சொல்லுகிறார். ஒரு மா நொடியும் பிரியான் - ஒரு கண நேரத்தில் ஒரு கூற்றிலும் பிரிகிறிலன். என்றது, ஒன்றில் நின்றும் ஒன்றில் கால்வாங்கிப் போய் அநுபவிக்கிறிலன் என்றபடி. என் ஊழி முதல்வன் ஒருவனே - என்னிடத்தில் காதலை உடையவன் ஆகைக்காகக் காலத்தாலே அறியப்படுகின்ற எல்லாப் பொருள்கட்கும் காரணனான ஒப்பற்றவன். அழிவு காலத்தில் அறிவுடைப் பொருள் அறிவில் பொருள்கள் எல்லாவற்றிற்கும் தன்னை ஒழியச் செல்லாதவாறு போலே ஆயிற்று, இவர் திருமேனி ஒழியத் தான் செல்லாதே இருக்கிறபடி. காரிய காரணம் என்னும் இரண்டு நிலைகளையுடைய சித்து அசித்துக்களுடைய இருப்புத் தன் அதீனமாம்படி இருக்கிறவன், தன்னுடைய இருப்பு என் சரீரத்தின் அதீன

1. 'சௌபரியைப் போலே பல வடிவு கொண்டு நில்லாநின்றான்' என்றது, சௌபரி என்னும் முனிவர் மாந்தாதாவின் ஐம்பது பெண்களையும் மணம்புணர்ந்து தனித் தனியே ஐம்பது வடிவுகள் எடுத்து அப் பெண்களோடு தனித் தனியே கலந்து வாழ்கையில், தன்னிடத்திலேயே தன் கணவன் தங்கியிருப்பதாக ஒவ்வொருவரும் நினைத்தது போன்று, எம்பெருமானும் இப் பாசுரத்தில் சொல்லப்படுகிற இடங்களில் ஒன்றில் இருக்கும்போது மற்றோர் அவயவத்தில் இல்லை என்று நினைக்கலாம்படி இருந்தான் என்றபடி.

2. "அரு மா மாயத்து எனது உயிர்" என்பதற்குப் பொருள் அருளிச் செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

"தைவீ ஹி ஏஷா குணமயீ மம மாயா துரத்யயா"

என்பது, ஸ்ரீ கீதை, 7 : 14.

மாம்படி இராநின்றான். ஊழி முதல்வன் ஒருவனே-[1] இங்ஙனம் ஆசையுள்ளவனையே பெரிய ஈஸ்வரன் என்கிறது; [2] இவனும் ஒருவனே! என்கிறார். (8)

1067.

ஊழி முதல்வன் ஒருவனே
என்னும் ஒருவன், உலகு எல்லாம்
ஊழிதோறும் தன்னுள்ளே
படைத்து, காத்து, கெடுத்து, உழலும்
ஆழி வண்ணன், என் அம்மான்,
அம் தண் திருமாலிருஞ் சோலை
வாழி, மனமே! கைவிடேல்;
உடலும் உயிரும் மங்க ஒட்டே.

பொ - ரை:—கற்பாந்த காலத்தில் ஒருவனே காரணனாக இருக்கிறான் என்று சொல்லப்படுகின்ற ஒருவனும், எல்லா உலகங்களையும் கற்பந்தோறும் கற்பந்தோறும் தன்னுள்ளே உண்டாக்கிப் பாதுகாத்து அழித்து அதுவே விளையாட்டாகத் திரிகின்ற கடல்போன்ற திருநிறத்தை யுடையவனும் ஆன என் அம்மான் எழுந்தருளியிருக்கின்ற அழகிய குளிர்ந்த திருமாலிருஞ்சோலை மலையை, மனமே! கைவிடேல்; இதனைக் கொண்டு வாழ்ந்திருப்பாயாக; எம்பெருமானே! இந்த உடலும் உயிரும் அழிவதற்கு நீ திருவுள்ளம்பற்ற வேண்டும்.

வி - கு:—ஒருவனே முதல்வன் என்னும் ஒருவன் என்க. ஆழி வண்ணன் - கடல் போன்ற தன்மையன் என்னலுமாம். 'மங்க ஒட்டு' என்றது, இறைவனை நோக்கிய வேண்டுகோள்.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [3] 'நமக்கு இந்தச் செல்வம் எல்லாம் திருமலையாலே வந்ததாயிற்று; ஆதலால், திருமலையைக் கைவிடாதே கொள்' என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

---

1. "என் ஊழி முதல்வன்" என்றதற்குப் பொருள், 'இங்ஙனம்' என்று தொடங்கும் வாக்கியம்.

2. "ஒருவனே" என்பதற்குப் பொருள், 'இவனும் ஒருவனே' என்பது.

3. "அம் தண் திருமாலிருஞ்சோலை கைவிடேல்; மனமே! வாழி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

ஊழி முதல்வன் ஒருவனே [1] என்னும் ஒருவன் - காலத்தாலே அறியப்படுகின்ற எல்லாப் பொருள்களுக்கும் காரணமாக இருப்பவன் ஒருவனுமே என்று "ஸத் என்ற ஒன்றே" என்பதுபோன்ற பிரமாணங்களால்சொல்லப்படுகிற ஒருவன். [2] காரியமான தன்மையையுடைய இவை முழுதும் அழிந்த அன்று இவற்றைத் தன்மேலே ஏறட்டுக்கொண்டு நிற்கிறவன் காண், இப்போது என் உடம்பிலே வந்து தங்குகிறுன். [3] காரண நிலையில் சித்து அசித்துக்களினுடைய நிலை தன் அதீனமாம்படி இருக்குமவன் தன்னுடைய நிலை என் அதீனமாம்படி இருக்கிறுன். உலகு எல்லாம் ஊழிதோறும் தன்னுள்ளே படைத்து-[4]காரண நிலையில் இவற்றினுடைய நிலையை நோக்கிவிட்டால் பின்னையோதான் இவை தம்மைத் தாம் நோக்கிக் கொள்ளுகிறது.

காத்துக் கெடுத்து உழலும் - பெயர்களையும் உருவங்களையும் கொடுத்துவிட்டால், பின்னைத்தான் தங்கள் காரியம் தாங்கள் செய்கிறுர்களோ? இதனுல் சொல்லிற்றுயிற்று என்? என்னில், எல்லாநிலைகளிலும் இவரை ஒழியத் தரிப்பானுய் இருக்கின்றிலன். [5]பிரளய ஆபத்துக்களில் இவற்றுக்குத் தன்னை ஒழிய நிலைத்திருத்தல் இல்லாதவாறு போலே, தான் இவரை ஒழியில் தரிக்கமாட்டானுய் இராநின்றுன். ஆழி வண்ணன்-கம்பீரமான தன்மையையுடையவன். அன்றிக்கே, கடல்போலே சிரமத்தைப் போக்கக்கூடிய வடிவுடையவன் என்னுதல். என் அம்மான் - அவ் வடிவைக் காட்டி என்னைச் சம்சாரப் பிரளயத்தில் நின்றும் எடுத்தவன். அம் தண் திருமாலிருஞ்சோலை - அவனுக்கும் கூடக் காட்சிக்கு இனிய தாய்ச் சிரமத்தைப் போக்குகிற தேசம்.

---

1. "என்னும்" என்பது, பிரமாண பிரசித்தியைக் காட்டுகிறது.

2. "ஊழி முதல்வன் ஒருவனே என்னும் ஒருவன்" என்கிறவருடைய மனேபாவத்தை அருளிச்செய்கிறுர் 'காரியமான' என்று தொடங்கி.

3. 'காரியமான தன்மையை யுடைய' என்று தொடங்கி மேலே கூறிப் போந்தவற்றுல் போதரும் பொருளை அருளிச்செய்கிறுர் 'காரண நிலையில்' என்று தொடங்கி.

4. "தன்னுள்ளே படைத்து" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறுர் 'காரண நிலையில்' என்று தொடங்கி.

5. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறுர் 'பிரளய ஆபத்துக்களில்' என்று தொடங்கி.

வாழி மனமே கைவிடேல் - மனமே! நாம் சொல்லுகிற இந் நன்மை உனக்கு மாறுதிடுக. [1] அவன் இப்படி நம் பக்கலிலே மேல் விழுந்து விரும்புகையாகிற நன்மைக்கு எல்லாம் காரணம் திருமலை ஆயிற்று. இதனை ஒருகாலும் கைவிட நினையாதேகாண் என்கிறார், தம் திருவுள்ளத்தைப் பார்த்து. [2] அவனும் தன் திருவுள்ளத்தைக் குறித்து 'ஆழ்வாரைத் தந்தது அவருடைய திருமேனியாய் இருக்கும், நீயும் அதனை ஒருகாலும் விடாதேகாண்' என்றான். 'பிரானே! அங்ஙன் ஒண்ணாது, இதனைத் தவிர வேண்டும்' என்று நிர்ப்பந்திக்கிறார்: உடலும் உயிரும் மங்க ஒட்டு - உடலும் உயிரும் மங்கும்படி இசையவேண்டும். [3] இது அத் திருமலை போன்று பற்றத் தகுந்தது ஒன்று அன்று; சாலவும் விடத் தக்கதாய் இருப்பது ஒன்று; இதனை மங்க இசைய வேண்டும். 'மங்க ஒட்டு' என்கையாலே, இதற்கு முன்புத்தை ஆழ்வாருடைய இருப்பு, பிராரப்த வினையால் அன்று, 'பகவானுடைய அபிப்பிராயத்தாலே' என்னுமிடம் தோற்றுகிறது. [4] ஈஸ்வரன் பற்றி விடேன் என்று இருக்கையாலே இருந்தார் என்கிறது; [5] "உடலம் கைவிடான்" என்றாரே அன்றோ. (9)

1068.

மங்க ஒட்டு உன் மா மாயை; திருமாலிருஞ்சோலை மேய
நங்கள் கோனே! யானே நீ ஆகி, என்னை அளித்தானே!
பொங்கு ஐம்புலனும், பொறி ஐந்தும், கருமேந்திரியம், ஐம்பூதம்,
இங்கு இவ் உயிர் ஏய் பிரகிருதி, மான், ஆங்காரம், மனங்களே.

பொ - ரை:— திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற எம் கோனே! என் விருப்பத்தினை நீ உடையையாகி என்னைக் காப்பாற்றியவனே! கிளர்ந்து விளங்குகின்ற ஐம்புலன்களும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும், ஐம்பெரும் பூதங்களும்,

1. "கைவிடேல்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவன் இப்படி' என்று தொடங்கி.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அவனும்' என்று தொடங்கி.

3. "உடலும் உயிரும் மங்க ஒட்டு" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'இது' என்று தொடங்கி.

4. 'பகவானுடைய அபிப்பிராயத்தாலே' என்றதனை விவரணம் செய்கிறார் 'ஈஸ்வரன்' என்று தொடங்கி.

5. ஈஸ்வரன் பற்றி விடாமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் "உடலம் கைவிடான்" என்று.

இவ் உலக வாழ்க்கையில் உழன்று வருகின்ற இந்த உயிரோடு பொருந்திய மூலப் பகுதியும், மஹானும், அகங்காரமும், மனமும் ஆகிய இவற்றாலாய இச் சரீரத்துடன் பெரிய மாயையினைக் கழித்துத் தருதற்கு நீ உடன்படல் வேண்டும்.

வி - கு :—இத் திருப்பாசுரத்தில் தத்துவங்கள் இருபத்து நான்கினையும் காண்க. உயிர் இருபத்தைந்தாவது தத்துவம். இறைவன் இருபத்தாறாவது தத்துவம் என்க. நங்கள் என்பதில் கள் : அசை நிலை.

ஈடு:—பத்தாம் பாட்டு. [1]இப்படி இவர் நிர்ப்பந்திக்கச் செய்தேயும் ஆனைக்குப்பு ஆடுவாரைப் போலே கேளாதிருந்தான்; அதற்கு அடி, 'சாந்து பூசுவார் பரணியை உடைத்தோ பூசுவது? இது என் சொன்னீர் ஆனீர்!' என்ன, திரியவும் மங்க ஒட்டு என்கிறார்.

உன் [2]மா மாயை மங்க ஒட்டு-ஒருவராலும் தப்ப ஒண்ணாதபடி நீ கட்டிய இந்தச் சரீரம் மங்குவதற்கு இசை. [3]'விடத்தக்கது என்று அறிந்த பின்பு உம்முடைய சரீரத்தினை நீரே விடவேண்டியதத்தனை அன்றோ. நாம் இசைய வேண்டுகிறது என்?' என்ன, எல்லாவற்றையும் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவனான நீ பிணைத்த பிணையை ஆற்றல் சிறிதும் இல்லாதவனான நான் விடவோ? [4]"என்னுடைய மாயை ஒருவராலும் தாண்ட முடியாதது" என்றிலையோ? திருமாலிருஞ்சோலை மேய நங்கள் கோனே - [5]பரமபதம் கலவிருக்கையாய் இருக்க அவ்விடத்தை விட்டு, நீ [6]திருமலையிலே வந்து முற்பாட

1. மீண்டும் இப் பாசுரத்தில் "மங்க ஒட்டு" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. ஆனைக்குப்பு - சதுரங்கம். அதற்கு அடி - கேளாதிருந்தமைக்குக் காரணம்.

2. "மா" என்பதற்குப் பொருள் பெரிய என்பது. 'ஒருவராலும் தப்ப ஒண்ணாதபடி' என்பது கருத்துப் பொருள்.

3. "உன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'விடத்தக்கது' என்று தொடங்கி.

4. அப்படி விடப் போகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி. இப் பொருள் அமைந்த சுலோகத்தை மேலே காண்க. பக். 260.

5. இச் சரீரத்தை விடுதற்கு நீ இசையவேண்டும் என்று பிரார்த்திக்கிற இவ்விடத்தில் "திருமாலிருஞ்சோலை மேய நங்கள் கோனே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பரமபதம்' என்று தொடங்கி.

6. "திருமாலிருஞ்சோலை மேய நங்கள் கோனே" என்றதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'திருமலையிலே' என்று தொடங்கி. என்றது, திருமலையிலே வந்து நின்று உன் சேஷித்வத்தை அறிவித்த நீ பேற்றினையும் தரவேண்டும் என்றபடி.

னுய் நிற்கிறது நான் சொன்னபடி காரியம் செய்வதற்காக அன்றே? நீ நினைத்தபடி காரியம் செய்யப் பார்த்தாயாகில் பின்னை அவ் இருப்பிலே என்னை அழைத்துக் கொள்ளாயோ? திருமலையிலே வந்து நின்று என்னுடைய அடிமையையும் உன்னுடைய தலைமையையும் எனக்கு அறிவித்தவனே!

யானே நீ ஆகி என்னை அளித்தானே - [1]என்னுடைய நினைவினை நீ உடையையாய் என் காரியம் செய்யக் கூடிய நீ, இப்போது நான் இரக்க இருக்கிறது என்? [2] நான் விரும்பாமல் இருக்க இதற்கு முன்பெல்லாம் நீயே அன்றே எனக்கு வேண்டியனவற்றைச் செய்து போந்தாய்.

[3] இப்படிச் சொல்லச் செய்தேயும், இதனைத் தவிர்த்துக் கொடுக்க நினையாமையாலே பேசாதிருந்தான்; நான் நிர்ப்பந்திக்கச் செய்தேயும் கேளாதாரைப் போலே பேசாதே இருக்கிறது என்? என்ன, 'நான் பேசாதிருக்கிறேன் அல்லேன்: நீர் விடத்தக்கது என்று சொல்லுகிற இதுதான் நாம் விரும்பி மேற்கொள்ளத் தக்கதாக இருக்கின்றது; ஆகையாலே, இது விடத்தக்கது; இது கொள்ளத் தக்கது என்னும் வேறுபாட்டினை நாம் அறியகில்லோம்; அறிந்த நீர் விடத்தக்கது என்பதனை எனக்கு இன்னது என்று சொல்லிக் காணீர் நான் கழித்துத் தர' என்றான்; ஆகில், கேட்கலாகாதோ என்று சொல்லுகிறார்:

பொங்கு ஐம்புலனும் பொறி ஐந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கு இவ் உயிர் ஏய் பிரகிருதி மான் ஆங்காரம் மனங்கள் - [4] "உணர்வும் உயிரும் உடம்பும் மற்று உலப்பிலனவும்

---

1. 'என்னுடைய நினைவினை நீ உடையையாய்' என்றது, நான் எனக்கு நன்மை பார்க்கும் நினைவினை நீ உடையையாய் என்றபடி.

2. அதனை விவரணம் செய்கிறார் 'நான் விரும்பாமல்' என்று தொடங்கி.

3. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. 'இப்படிச் சொல்லச் செய்தேயும்' என்றது, "மங்க ஒட்டு" என்று வேண்டிக்கொள்ளச் செய்தேயும் என்றபடி.

4. இவருடைய தெளிந்த ஞானத்திலே வியாக்கியாதா ஈடுபடுகிறார் 'உணர்வும்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 8. 8 : 3. என்றது, மேலே "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழியிலே ஜீவாத்மாவின் சீர்மையை எம்பெருமான் ஆழ்வார்க்கு உணர்த்தினன்; இப்போது ஆழ்வார் எம்பெருமானுக்குச் சரீரத்தின் தன்மையை உணர்த்துகிறார்; குரு சிஷ்ய கிரமம் மாறினதாயிற்று என்றபடி.

பழுதேயாம் உணர்வைப் பெற ஊர்ந்து" என்று அவன் தான் இவர் பக்கல் செய்ததனை இப்போது அவனுக்கு இவர்தாம் அறிவிக்கிறார். [1]ஒரு கர்மம் செய்தது செய்யமாட்டாமை இல்லை அன்றோ கழி பெரும் காதல்; [2]அது போலும் அன்றிக்கே, இது நிலை நிற்குமது அன்றோ. உயிர்களைத் தந்தாமுக்கு உரியன அல்லாதபடி வேறுபாட்டினை யடையும்படி பண்ண வல்ல சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் புலன்கள் ஐந்தும், வறுநாற்றத்தினைக் காட்டிச் சில பொருள்களைத் தப்பாதபடி அகப்படுத்துமாறு போலே இந்த உயிரை அவ் விஷயங்களிலே கொடு போய் மூட்டி முடிக்கவற்றான மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக்கு கால் கை பாயு உபத்தம் என்னும் கர்மேந்திரியங்கள் ஐந்தும், நிலம் நீர் தீ கால் விண் என்கிற ஐம்பெரும் பூதங்களும், காரிய நிலையினை அடைந்த உயிர்ப்பொருளைப் பற்றிக் கிடக்கிற மூலப்பகுதி, மஹான், அஹங்காரம், மனம் என்னும் இவைகளும் ஆகிய உன்னுடைய மா மாயையை மங்க ஒட்டு. [3]காரண நிலையை அடைந்ததுதானே வேறு ஓர் நிலையை அடைதல் அன்றோ காரியமாகை ஆகிறது. (10)

1069.

மான் ஆங்கார மனம் கெட,
ஐவர் வன்கையர் மங்க,
தான் ஆங்காரமாய்ப் புக்கு,
தானே தானே ஆனேனைத்

---

1. கர்மங்கட்குக் கட்டுப்பட்டவர் ஆகையாலே இவர்க்கு அவன் அறிவிக்கலாம்; முற்றறிவினனுக்கு இவர் அறிவிக்க வேண்டுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒரு கர்மம்' என்று தொடங்கி.

2. கர்மங்கட்கு மீட்சி உண்டு; காதலுக்கு மீட்சி இல்லை என்று கர்மங்களைக் காட்டிலும் காதலுக்கு ஏற்றத்தை அருளிச்செய்கிறார் 'அதுபோலும்' என்று தொடங்கி. என்றது, இவர்மேல் வைத்த காதலாலே அவன் அறியாதிருக்க, இவர் அறிவிக்கலானார் என்றபடி.

3. "மா மாயை" என்ற சொல், மூலப் பகுதியைச் சொல்லுமே ஒழிய, சரீரத்தைச் சொல்லுமாறு யாங்ஙனம்? என்ன, 'காரண நிலையை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். காரியமாகை ஆகிறது; ஆதலால், சொல்லலாம் என்றபடி. "இவ் உயிரேய் பிரகிருதி" என்ற இடத்தில் மூலப் பகுதி என்பது பொருள். "மா மாயை" என்ற இடத்தில் சரீரம் என்பது பொருள்.

தேன் ஆங்காரப் பொழில் குருகூர்ச்
சடகோபன் சொல் ஆயிரத்துள்
மான் ஆங்காரத்து இவை பத்தும்
திருமாலிருஞ்சோலை மலைக்கே.

பொ - ரை :—மஹான் அகங்காரம் மனம் இவைகள் கெடும்படியாகவும், பெருமிடுக்கரான ஐம்பொறிகளும் மங்கும்படியாகவும், தானே அபிமானத்தை உடையவனுப் கொண்டு புகுந்து, தானே தானே ஆனுனே, வண்டுகள் செருக்கோடு தங்கியிருக்கிற சோலைகள் சூழ்ந்த திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள் மஹான் அகங்காரம் இவற்ருலாய இச் சரீரம் அழியும்பொருட்டு அருளிச்செய்த இப் பத்துத் திருப்பாசுரங்களும் திருமாலிருஞ்சோலைமலைக்கே யாம்.

வி - கு :—கெட மங்கப் புக்கு ஆனுனைச் சடகோபன் சொல் ஆயிரத்துள் இவை பத்து என்க. "மான் ஆங்காரம் மனம் கெட" என்றது, மூலப்பகுதிக்கும் உபலக்ஷணம். "ஐவர் வன்கையர் மங்க" என்றது, மேல் திருப்பாசுரத்தில் ஐயைந்தாகச் சொன்ன எல்லாவற்றுக்கும் உபலக்ஷணம்.

ஈடு :—முடிவில், [1]மஹான் அகங்காரம் இவை முதலானவற்றின் விஷயமான இத் திருவாய்மொழி திருமாலிருஞ்சோலை மலையிலே சொல்லிற்று என்கிருர்.

மான் ஆங்காரம் மனம் கெட - மஹான், அஹங்காரம், மனம் என்று சொல்லுகிற இவை கெடும்படியாக. இவற்றைக் கூறியது, மூலப் பகுதிக்கும் உபலக்ஷணம். வன்கையர் ஐவர் மங்க - இவற்றைக் கூறியது, கர்மேந்திரியங்கட்கும் ஐம்புலன்கட்கும் ஐம்பெரும்பூதங்கட்கும் உபலக்ஷணம். [2] பின்னை, அவன் இதற்குச் சொல்லிற்று என்? என்னில், இச் சரீரத்

1. ஈற்றடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிருர். 'மஹான் அகங்காரம் இவை...விஷயமான' என்றது, மஹான் அகங்காரம் முதலானவற்றின் குற்றங்களை எடுத்துப் பேசப்பட்ட என்றபடி.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிருர் 'பின்னை' என்று தொடங்கி. பின்னை - இவர் "மங்க ஒட்டு" என்று பிரார்த்தித்த பின்பு. 'இதற்குச் சொல்லிற்று' என்றது, "மங்க ஒட்டு" என்று பிரார்த்தித்ததற்கு அவன் கூறியது என்? என்றபடி.

தில் செய்கிற விருப்பத்தினைத் தவிருகிறோம் என்னத் தீருமே அன்றோ. 'அவன் செய்கிறோம்' என்று தலைதுலுக்கினால் பின்னைப் பெற்றதாக இருக்கத் தட்டு இல்லையே. தான் ஆங்காரமாய்ப் புக்கு - தான் என்னிடத்தில் ஆசையுடையவனாய்ப் புக்கு என்னுதல். [1]பெரிய செருக்கோடே புக்கு என்னுதல். தானே தானே ஆனானை - ஆத்மாவிலும் ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களிலும் எனக்கு உண்டான ஆசையினைத் தவிர்த்துத் தானே அபிமானத்துக்கு விஷயமானவனை. அன்றிக்கே, இத் தலையில் இரக்கும் தன்மை ஒழியத் தானே இரப்பாளனுமாய், இதனை விரும்புகின்றவனும் தானே ஆனான் என்னுதல்.

தேன் ஆங்காரம் பொழில் குருகூர்ச் சடகோபன் சொல் ஆயிரத்துள் மான் ஆங்காரத்து இவை பத்தும் - வண்டுகளினுடைய செருக்கேயான பொழிலையுடைய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும் மகத்து முதலானவற்றின் உருவமான இச் சரீரத்தினை ஒழித்தருளல் வேண்டும் என்று சொன்ன இப் பத்தும். அன்றிக்கே, [2]மான் ஆங்காரத்து இவை பத்தும் என்பதற்கு,பெரிய செருக்கோடே சொன்ன இப் பத்தும் என்னுதல். திருமாலிருஞ்சோலை மலைக்கே-[3]திருமலை விஷயமாக ஆயிற்றுச் சொல்லிற்று ; [4]அழகரைச் சொன்ன இடம் உண்டாகில் அதில் கல்பக தருவினைச் சொன்னதைப் போன்று. [5]திருமலையில் உள்ளன அடங்க

---

1. 'பெரிய செருக்கோடே புக்கு' என்றது, இவர்க்கு விரோதமான சரீரத்தைப் போக்குகிறோம் என்ற கர்வத்தோடே புக்கு என்றபடி. புகுதல் - இசைதல்.

2. "மான்" என்பது, ஆங்காரத்துக்கு அடைமொழி ; பெரிய செருக்கு என்பது பொருள். பெரிய செருக்காவது, சரீரத்தைப் போக்கிக் கொள்ளுகிறோம் என்ற செருக்கு.

3. "மலைக்கே" என்றதிலுள்ள ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'திருமலை' என்று தொடங்கி.

4. திருமலை விஷயமாக என்பான் என்? அழகரைச் சொல்லவில்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அழகரை' என்று தொடங்கி.

5. இப்படியாகிலும் சொல்லுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திருமலையில்' என்று தொடங்கி.

உத்தேசியமாகக் கடவன அன்றோ; [1]"எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனும் ஆவேனே" என்றும் சொன்னார்கள் அன்றோ. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

செஞ்சொற் பரன் தனது சீராரும் மேனிதனில்
வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனின் — விஞ்சுதலைக்
கண்டு அவனைக் காற்கட்டிக் கைவிடுவித்துக் கொண்ட
திண்திறல் மாறன் நம் திரு.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. திருமலையிலுள்ளன எல்லாம் உத்தேசியம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'எம்பெருமான்' என்று தொடங்கி. இது, பெருமாள் திருமொழி, 4: 10.

எட்டாந் திருவாய்மொழி—"திருமாலிருஞ்சோலை"

முன்னுரை

—:o:—

[1] "அருள்பெறுவார்" என்ற திருவாய்மொழியிலே, தம்மைக் குறித்துச் சர்வேஸ்வரனுக்கு உண்டான பாரதந்திரியத்தைப் பேசினர்; அந்தப் பாரதந்திரியத்தை முடிய நடத்தினபடி சொன்னர் "செஞ்சொற் கவிகாள்" என்ற திருவாய்மொழியில்; [2] 'நீர் சொன்னபடியே செய்யக்கடவோம்' என்று தலைதுலுக்கினன் அன்றே. [3] இவரைத் திருமேனியோடே கொடுபோவதாகத் தேங்கின தேக்கம் அன்றே நடுவே உள்ள பாசுரங்கள்; அது ஒழியக் கொடு போவதாக அற்ற அன்றே பதறத் தொடங்கினன்; [4] "செழும் பறவை தான் ஏறித் திரிவான்" என்று திருவடி திருத்தோளிலே ஏறி வந்து அன்றே இவரை அங்கீகரித்தது; அத் திருவடி திருத்தோளிலே வந்து இவரைக் கொடு போவதாகப் பார்த்தான். [5] சிலரை ஆதிவாஹிக கர்த்தாக்களை வரவிட்டுக் கொடுபோம்; சிலரைப் பெரிய திருவடியை வரக் காட்டிக் கொடு போம்; திருவடி திருத்தோளிலே வந்து தானே கொடு போகத் தக்கவர் அன்றே இவர்; [6] "என்னுடைய அடியவனை இறுதிக் காலத்தில் நானே

---

1. இயைபு அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி மேல் திருவாய்மொழிகளில் சொல்லப்பட்டனவற்றை அநுவதிக்கிறர் 'அருள்பெறுவார்' என்று தொடங்கி.

2. திருமேனியோடே இங்கே இருக்க, முடிய நடத்தினபடி யாங்ஙனம்? என்ன, 'நீர் சொன்னபடியே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறர்.

3. நன்று; "மான் ஆங்காரம் மனம் கெட" என்ற சாற்றுப் பாட்டிலே அன்றே தலைதுலுக்கினது, நடுவே உள்ள ஒன்பது பாட்டுக்களிலும் செய்தது என்? என்ன, 'இவரை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறர். அது ஒழிய - திருமேனி ஒழிய. அற்ற அன்றே - அறுதியிட்ட அன்றே.

4. பதறுகிற பிரகாரத்தைக் காட்டுகிறர் 'செழும்பறவை' என்று தொடங்கி. 'செழும்பறவை' என்பது, திருவாய்மொழி, 10. 6 : 5.

5. ஆதிவாஹிகரை வரவிட்டுஅன்றே கொடுபோவது? என்ன, 'சிலரை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறர். ஆதிவாஹிகர் - அதிவஹந கர்மத்துக்குக் கர்த்தாக்கள். அதிவஹநகர்மம் - சுமந்து செல்லல்.

6. திருவடி திருத்தோளிலே வந்து தானே கொடுபோம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறர் 'என்னுடைய' என்று தொடங்கி. இப் பொருளையுடைய சுலோகத்தை மேலே 19-ஆம் பக். காண்க. சுலோகத்திலே உள்ள "நயாமி" என்ற பதத்திலே நோக்கு.

நினைக்கிறேன்; கொண்டு போகிறேன்" என்கிறபடியே. [1]"கள்வன் கொல்" என்ற திருமொழியில் பிராட்டியை ஆளிட்டுக் கொடு போகுமன்றே அன்றோ இவரையும் ஆள் இட்டுக்கொடு போவது! [2]"'நானிலம்' என்ற திருப்பாசுரத்திற் கூறிய படியே, இவ் உலக வாழ்க்கையாகிற பாலை நிலத்தைக் கழித்துப் போந்தோம்: 'மீண்டு வருகிறான் இல்லை' என்கிற தேசத்திலே புகுந்தோம்" என்று தானே சொல்லித் தேற்றிக் கொண்டே அன்றோ போவது.

[3] ஆக, இப்படித் தம்மை அவ்வருகே கொடு போகையிலே பதறுகிறபடியை அருளிச்செய்தார்; 'இவன் இப்படி நம் பக்கல் பதறுகைக்கு அடி என்?' என்று பார்த்தார். தம் பக்கல் ஒன்றும் கண்டிலர். என்றது, [4] முதலிலே தம் பக்கலிலே வெறுப்பின்மையையும் பிறப்பித்து, அது அடியாக விசேடமான திருவருளைச் செய்து, தம் பக்கலிலே இச்சையையும்

---

1. இவரையும் ஆளிட்டுக் கொடுபோக ஒண்ணுதோ ? என்ன, 'கள்வன் கொல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'கள்வன் கொல்' என்பது, பெரிய திருமொழி, 3. 7 : 1.

2. அப்படித் தானே கொண்டு போனானோ? என்ன, 'நானிலம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இந்தப் பாசுரத்திற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவ் உலக வாழ்க்கையாகிற' என்று தொடங்கி.

நானிலம் வாய்க் கொண்டு நன்னீர் அற மென்று கோது கொண்ட
வேனிலம் செல்வன் சுவைத்து உமிழ்பாலை கடந்த பொன்னே!
கால்நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகா உது, அம் பூந்
தேனிளம் சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே.

என்பது, திருவிருத்தம், செய். 26. இங்கு,

முன்னம் எழ் புரவியார் இரவி காய் வெயிலினால்
முத் தரும்பிய கலா முழுமதித் திருமுகத்து
அன்னமே இன்னமோர் காவதம் போதுமேல்
அகலும் இப்பாலை; அப்பால் அரைக் காவதம்
என்னையாள் உடையவன் துயில் அரா அமளியும்
இலகு பொற் கோயிலும் இந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரப்
பூவிரித் துறையும் அக் காவிரித் துறையுமே.

என்ற திருப்பாசுரம் சிந்திக்கத் தகும். திருவரங்கக்கலம்பகம், செய். 50.

3. மேலே கூறியவற்றை அநுவதிக்கிறார் 'ஆக, இப்படி' என்று தொடங்கி.

4. வெறுப்பின்மை முதலானவைகள் தம் பக்கல் உளவாக இருக்க, 'ஒன்றும் கண்டிலர்' என்பது என்? என்ன, 'முதலிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "என்னைத் தீமனம் கெடுத்தாய்", "அமலங்களாக விழிக்கும்", "மருவித் தொழும் மனமே தந்தாய்", "நின்

பிறப்பித்து, 'தானே உபாயம் என்னும் புத்தியையும் பிறப்பித்து,[1] அஸஹ்ய அபசாரத்திலே மிக்காராய் இருக்கிற இவர் தம்முடைய அபசாரங்கள் அனைத்தையும் பொறுத்து, ஐம்புல இன்பங்களிலே ஆசை உள்ளவராய்ப் போந்த தம்மைப் "பல நீ காட்டிப் படுப்பாயோ" என்று தாமே சொல்லும்படி செய்து, தன்னால் அல்லது செல்லாமையைப் பிறப்பித்து, தானே வந்து அவ்வருகே கொடு போவானாக விரைகிறபடியை நினைந்து, [2]'இன்று இப்படி நம்மை விரும்புகிற இவன், பல காலமாக நம்மை விட்டு ஆறி இருந்தபடி எங்ஙனே? இன்று இப்படி நம்மை விரும்புகைக்குத்தான் காரணம் என்?' என்று பார்த்தார்; தம் பக்கல் ஒரு காரணத்தையும் கண்டிலர்; [3]இப் பேறு தாம் அடியாக வந்தது ஒன்று அல்லாமையாலே தம் பக்கல் ஒருவாசி கண்டிலர்; [4]முன்புத்தையிற் காட்டில் இப்போது தமக்கு ஓர் ஏற்றம் உண்டாக நினைத்திருக்குமவர் அன்றே.

[5]முன்பே தொடங்கிப் பல காலம் இவரைப் பெற வேண்டும் என்று இருக்கிறவன் இவர்க்கு இப்போது ஒன்ற

பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்", "விண்டே ஒழிந்த வினையாயின எல்லாம்" "நின்னலால் இலேன் காண்", "விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்பன போன்று மேலே அருளிச்செய்து போந்த திருப்பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி 'வெறுப்பின்மையையும் பிறப்பித்து' என்றது முதல் 'விரைகிறபடியை நினைந்து' என்றது முடிய அருளிச்செய்கிறார்.

1. அஸஹ்ய அபசாரமாவது: "அஸஹ்ய அபசாரமாவது, நிர்நிபந்தனமாகப் பகவத் பாகவத விஷயம் என்றால் அஸஹமாநனாயிருக்கையும், ஆசார்ய அபசாரமும், தத்பக்த அபசாரமும்" என்பது, ஸ்ரீவசனபூஷண ஸ்ரீஸூக்தி, 3-வது பிரகரணம், சூத். 305.

2. இத் திருவாய்மொழியில் வருகிற "இன்று என்னைப் பொருளாக்கி" என்ற திருப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி 'இன்று இப்படி' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. காணாமைக்கு அடியை அருளிச்செய்கிறார் 'இப்பேறு' என்று தொடங்கி.

4. வாசி கண்டிலர் என்கிறது என்? இறைவனிடத்தில் ஈடுபாடு உண்டே? என்ன, 'முன்புத்தையில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. இவர் நினைவால் இல்லாவிட்டாலும் அவன் நினைவாலே ஒரு புண்ணிய விசேடம் இல்லையோ? என்ன, 'முன்பே தொடங்கி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'ஒன்றைச் செய்தானாக' என்றது, இவர் செய்த நல்வினை அடியாக ஒன்றைச் செய்தானாக என்றபடி.

னைச் செய்தானாக நினைத்திரானே. [1]"இனி முற்றறிவினனாகிலும் இதற்கு ஒரு போக்குச் சொல்லுமாகில் அவனைக் கேட்போம்" என்று பார்த்து, 'இன்று இப்படி இதனைத் தலையாகத் தாங்கும் தேவர் முன்பு பல காலம் இதனைக் கைவிட்டு இருப்பான் என்? இப்போது இதனை விரும்புவான் என்?' என்று கேட்டார்; 'உம் பக்கல் உண்டான வெறுப்பின்மை அடியாகச் செய்தோம்' என்ன மாட்டானே; தான் அறிய அதுவும் தன்னாலே வந்தது ஆகையாலும், அதுதான் பேற்றுக்கு ஈடான சாதனமாகப் போராமையாலும். [2]இனி, பாதுகாக்கின்றவனுக்குப் பாதுகாக்கப்படுகின்ற பொருள்களைப் பல காலம் விட்டிருந்த இதற்குச் சொல்லலாவது ஒன்று இல்லையே, பிற்பாடன் ஆனதற்கு நாணம் உறுதற்கு மேற்பட; ஆகையாலே, சொல்லலாவது ஒரு மறு மாற்றம் காணாமையாலே [3]கவிழ்ந்து நின்று காலாலே தரையைக் கீறினான்.

[4]முதலிலே உலகத்தைப் படைத்தல் முதலானவைகளைச் செய்து, தன் பக்கலிலே இச்சையைப் பிறப்பிக்கைக்கு வழி

---

1. இத் திருவாய்மொழியில் வருகின்ற "ஒன்று எனக்கு அருள் செய்ய உணர்த்தல் உற்றேனே" என்பதனைக் கடாக்ஷித்து 'இனி, முற்றறிவினனாகிலும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. மறுமாற்றம் கூற முடியாதவன் ஆனமைக்கு வேறும் ஒரு காரணம் அருளிச்செய்கிறார் 'இனி, பாதுகாக்கின்றவனுக்கு' என்று தொடங்கி.

3. 'கவிழ்ந்து நின்று காலாலே தரையைக் கீறினான்' என்பது எற்றால் பெறுதும் எனின், "உணர்த்தலுற்றேன்" என்ற ஒன்பதாவது திருப் பாசுரத்துக்குப் பின் இறைவன் வார்த்தையாக ஒன்றும் இல்லாமையாலும், பத்தாவது திருப் பாசுரத்தில் "உற்றேன் உகந்து பணிசெய்து" என்று தாமே சமாதானத்தை அடைகிறாராதலாலும் 'அவன் மறுமாற்றம் கூறாதவனாகித் தரையைக் கீறினான்' என்பது பெறுதும்.

"களவு உடம்படுநரின் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்றோள் நிலை கண்டு யானும்
பேணினேன் அல்லனோ, மகிழ்ந! வானத்து
அணங்கருங் கடவுள் அன்னோள் நின்
மகன் தாய்ஆதல் புரைவதாங் கெனவே"

என்பது, அகம். களிற்றியானை நிரை, செய். 16.

அறம்கடந்தவர் செயல் இது என்று உலகெலாம் ஆர்ப்ப
நிறம் கரிந்திட நிலம் விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆல்அன்ன மெய்யன.

என்பது, கம்பராமா. யுத். முதற்போர்ப்பட. செய். 250.

4. அவன் மறுமாற்றம் கூறாதவனான பின்பு தாமே சமாதானத்தை அடைந்தபடியைக் காட்டுகிறார் 'முதலிலே' என்று தொடங்கி.

இட்டு வைத்தான்; அவ் வழியாலே இச்சையைப் பிறப்பித்தான்; தன்னிடத்திலே உபாயத் தன்மையை ஏறட்டுக் கொண்டு "பொய்ந்நின்ற ஞானம்" தொடங்கி இவ்வளவாகத் தன் பக்கலிலே வர நிறுத்தினன்; பரபக்தி தொடங்கிப் பரம பக்தி முடிய உள்ள நிலை விசேடங்களைப் பிறப்பித்தான். 'இதனை முன்பே செய்யா விட்டது என்?' என்ன, 'இதற்குச் சொல்லலாவது ஒன்று இல்லாமையாலே செயல் அற்றவனாய் நிற்கிறானித்தனை' என்று பார்த்து, இப்படி [1]அவன் தம் பக்கல் செய்த அங்கீகாரத்தையும் அதற்கு அடியான அவனுடைய கிருபை முதலான குணங்களையும் நினைந்து, 'இது ஒரு காரணம் இல்லாமலே அங்கீகரிக்கும் அங்கீகாரம் இருக்கும்படியே!' என்று அதிலே ஆழங்கால் பட்டு ஆச்சரியத்தை உடையராய் உவகை மீதூர்ந்தவராய்க் களிக்கிறார்.

1070.

திருமாலிருஞ்சோலை மலை என்றேன்; என்ன,
திருமால் வந்து, என் நெஞ்சு நிறையப் புகுந்தான்;
குரு மா மணி உந்து புனல் பொன்னித் தென்பால்
திருமால் சென்று சேர்விடம் தென் திருப்பேரே.

பொ - ரை :— திருமாலிருஞ்சோலை மலை என்று ஒருகால் சொன்னேன்; சொன்ன அதனையே காரணமாகக் கொண்டு திருமால் வந்து என்னுடைய மனம் நிறைய உள்ளே புகுந்தான்; இத்தகைய எம்பெருமான் சென்று வாழும் இடம் யாது? எனின், நிறத்தையுடைய பெரிய மாணிக்கங்களைத் தள்ளிக்கொண்டு வருகின்ற தண்ணீர் நிறைந்த காவேரியின் தென் பாகத்தில் இருக்கின்ற அழகிய திருப்பேரை என்னும் நகரமேயாம்.

---

1. "என் நெஞ்சு நிறையப் புகுந்தான்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'அவன் தம் பக்கல் செய்த' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். "காரேழ் கடலேழ் மலை ஏழ் உலகுண்டும், ஆரா வயிற்றானை" என்ற பகுதியில் பாதுகாத்தல் சொல்லப்படுவதால் கிருபை முதலான குணங்கள் போதரும். "இன்று என்னைப் பொருள் ஆக்கி" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'இது ஒரு காரணம் இல்லாமலே அங்கீகரிக்கும் அங்கீகாரம் இருக்கும்படியே!' என்கிறார். "அமுதம் உண்டு களித்தேனே" என்றதனைக் கடாக்ஷித்து 'உவகை மீதூர்ந்தவராய்க் களிக்கின்றார்' என்கிறார்.

வி - கு :—நெஞ்சு நிறையப் புகுந்தவனாகிய திருமால் சென்று சேர்விடம் பொன்னித் தென்பால் தென் திருப்பேரே ஆகும் என்க.

ஈடு :—முதற்பாட்டு. [1] நான் அறியாமலே திருமலையைச் சொன்ன அளவில், ஒன்றனையும் விரும்பாத தான் பிராட்டியோடே கூட வந்து என்னுள்ளே புகுந்தருளினான் என்கிறார்.

திருமாலிருஞ்சோலை மலை என்றேன் - [2] முன்பு பல காலம் ஈஸ்வரனுக்குத் தம் பக்கல் பேரிட்டுக்கொள்ளலாவது ஒன்று இன்றிக்கே இருக்க, இப்போது அவனுக்குப் பேரிட்டுக் கைக்கொள்ளுகைக்கு அடியானது இன்னது என்கிறார். [3] ஒரோ இடங்களிலே மலைகளைச் சொல்லாநின்றால் ஒவ்வோர் அடைமொழிகளை இட்டுச் சொல்லக்கடவதாய் இருக்குமன்றே; அப்படியே, திருமாலிருஞ்சோலை மலை என்றேன். என்ன - [4] மனத்தின் துணையும் இல்லை காண், வார்த்தை மாத்திரமே என் பக்கல் உள்ளது. [5] 'இவன் அடியவனாக இருந்தானாகில், உபாயமாகும் தன்மை நம் பக்கலிலேயாய் இருந்ததாகில், இவருடைய பேறு நம் பேறாக இருந்ததாகில், அறிவுடையவன் என்கிற வேறுபாட்டிற்கு வார்த்தை மாத்திரம் உண்டாயிற்றாகில், இதற்கு அவ்வருகு கொண்டு காரியம் என்?' என்று இருக்குமவன் அன்றோ. [6] இதுதான் ஒரு மலை அன்றோ அவனுக்கு.

---

1. முன் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. " திருமாலிருஞ்சோலை மலை என்றேன் " என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் ' முன்பு பல காலம் ' என்று தொடங்கி.

3. ' பேரிட்டுக் கைக் கொள்ளுகைக்கு ' என்பான் என்? " திருமாலிருஞ்சோலை " என்று விசேடிக்கையாலே புத்தி பூர்வகமாய் அன்றோ இருக்கிறது? என்ன, ' ஒரோ இடங்களிலே ' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, இதனால் வாசி அறிந்து சொன்னேன் அல்லேன் என்றபடி.

4. " என்ன " என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் ' மனத்தின் துணையும் ' என்று தொடங்கி.

5. மனத்தொடு படாமல் வார்த்தை சொன்ன அளவிலேயே அவன் வந்து புகுதக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ' இவன் ' என்று தொடங்கி.

6. அவன் குணாதிகன் ஆகையாலே இவன் பக்கல் உள்ளதனைப் போரப் பொலியக் கொள்ளும் என்னுமதனை ரசோக்தியாக அருளிச்செய்கிறார் ' இதுதான் ' என்று தொடங்கி.

[1] வார்த்தையை இல்லை என்ன ஒண்ணாதே; [2] இதற்கு அடி ஆராயுமவன் அல்லனே. [3] இராவணன் தம்பிக்கு நண்பன் என்ற சொல்லே அமையும் என்னுமவன், இதற்கு அவ்வருகு ஒன்று வேண்டும்என்று இரானே. [4] மலைகளிலே உள்ள பொது வான தன்மைகள் கிடக்க, இந்தச் சிறப்புத் தன்மையைச் சொல்லிற்று, இதில் உண்டான மிக்க விருப்பம் அன்றோ என்று இராநின்றானாயிற்று அவன். [5] ஆக, இவர்க்கு ஒன்று இல்லை என்னவுமாய், அவனுக்கு இது ஒன்று உண்டு என்னவு மாம்படி இருக்கிறது இதுதானே.

[6] மனத்தொடு படாமல் சொன்னது தன்னை மனத்தொடு பட்டதாக்கிக் கொடுப்பாரும் அருகே உண்டு என்பார் 'திரு மால்' என்கிறார். வந்து - [7] 'அவன் வருவதே!' என்று இவர் ஆச்சரியப்படாநிற்க, 'நீர் வேட்கை கொண்டவன் தண்ணீர் இருந்த இடத்தே வரும் அத்தனை அன்றோ' என்றாயிற்று அவன் வார்த்தை. [8] கிருபணனாயிருப்பான் வள்ளலாய் இருப் பார் இருந்த இடத்தே வரும் இத்தனை அன்றோ என்று இரா நின்றான். [9] எல்லார்க்கும் அடையத் தக்கவனாக இருப்பவ

---

1. மனத்தொடு படாத சொல்லையும் மலையைப் போன்று பாரமாகக் கொள்ளுகிறான் என்னுமதனை விவரணம் செய்கிறார் 'வார்த்தையை' என்று தொடங்கி.

2. ஆனாலும், மனத்தொடு படாததனை மனத்தொடு பட்டதாக நிரூபித்துக் கொள்ளவேண்டாவோ? என்ன, 'இதற்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அடியாவது - மனத்தின் துணை.

3. அதற்குக் காரணம் என்? என்ன, 'இராவணன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'இதுதான் ஒருமலை அன்றோ அவனுக்கு' என்று மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'மலைகளிலே' என்று தொடங்கி. இது, "திருமாலிருஞ்சோலை" என்ற விசேடணத்திலே நோக்கு.

5. மேலே கூறிப் போந்தவற்றால் போதரும் பொருளை அருளிச் செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி.

6. "திருமாலிருஞ்சோலைமலை என்றேன்" என்றதன்பின் "திருமால்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மனத்தொடு' என்று தொடங்கி.

7. "வந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

8. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'கிருபணனாயிருப்பான்' என்று தொடங்கி. கிருபணன் - உலோபி.

9. மேல் வாக்கியத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

னுக்கு நான் அடையத் தக்கவன் ஆனேன்! [1]"சபரியைச் சென்று அடைந்தார்" என்னுமாறு போலே. என் நெஞ்சம்- அந்த வார்த்தையோடு கூடின என் நெஞ்சிலே. நிறையப் புகுந்தான் - [2] ஐம்புல இன்பங்களுக்கு இடம் இல்லாதபடி புகுந்தான்; [3]**அத்திரி பகவான்** ஆஸ்ரமத்தில், 'நான் இராமன், இவள் மைதிலி, இவன் இலக்குமணன்' என்று வணங்கி நின்றாற் போலே; [4] அக் காட்டில் பாழ் அடையத் தீரும்படி புக்காற் போலே என் நெஞ்சிலே பாழ் தீரப் புகுந்தான்.

திருமால் சென்று சேர்விடம் குரு மா மணி உந்து புனல் பொன்னித் தென்பால் தென் திருப் பேரே - [5] தான் விரும்பிச் சென்று சேரும் இடம் அதுவாய் இருக்கக்காண் என் நெஞ்சிலே வந்து புகுந்தது என்கிறார். [6] எல்லார்க்கும் அடையப் படுமவனாக இருப்பவன்காண் என்னை அடையத் தக்கவனாகக் கொள்ளுகிறான். [7] பெரு விலையனாய்க் காட்சிக்கு இனிதாய் இருக்கின்ற அரதனங்களைக் கொண்டு வந்து தள்ளா நின்றுள்ள புனலையுடைய காவிரியின் தென் கரையிலே. [8]சிறப்பு வாய்ந்த நகரம் என்றபடி. [9]"பாற்கடல் தந்தை, நான் தாய், இலக்குமி மகள், அரங்கநாதன் நாயகன்" என்பது போல. புனல் - [10] சிரமத்தினைப் போக்கக் கூடிய இடத்தினை

---

1. அப்படி அவன் நடந்த இடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சபரியை' என்று தொடங்கி.

ஸஃ அப்யகச்சத் மஹாதேஜாஃ ஶபரீம் ஶத்ருஸூதநஃ
ஶபர்யா பூஜிதஃ ஸம்யக் ராமஃ தஶரதாத்மஜஃ.

என்பது, சங்க்ஷேப ராமாயணம், 58.

2. "நிறைய" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஐம்புல இன்பங்களுக்கு' என்று தொடங்கி.

3. "புகுந்தான்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அத்திரி பகவான்' என்று தொடங்கி. என்றது, விநயத்தோடு புகுந்தான் என்றபடி.

4. மேலே, 'ஐம்புல இன்பங்களுக்கு' என்று தொடங்கி அருளிச்செய்ததனை விவரணம் செய்கிறார் 'அக் காட்டில்' என்று தொடங்கி.

5. பின் இரண்டு அடிகட்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தான் விரும்பி' என்று தொடங்கி.

6. "திருமால்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

7. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பெருவிலையனாய்' என்று தொடங்கி.

8. "குரு மா மணி உந்து புனல்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'சிறப்பு' என்று தொடங்கி.

9. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம், பூர்வசதகம், 21.

10. "புனல் பொன்னி" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சிரமத்தினை' என்று தொடங்கி.

யுடையவன் காண் இங்கே வந்து புகுகிறான். திருமால் சென்று சேர்விடம் - சால இன்பம் துய்ப்பவனானவன், தானும் பிராட்டியுமாய் விரும்பிச் சென்று சேரும் தேசம் அதுவாய் இருக்கச் செய்தே, அது கிடக்க, திருமாலிருஞ்சோலை மலை என்றேன்; அந்த மனத்தோடு படாத வார்த்தை மாத்திரத்தைக் கொண்டு என்னுடைய மனத்திலே வந்து புகுந்தான். [1]இரண்டாமடியில் '**திருமால்**' என்றது, புருஷகாரத்தின் தன்மை சொல்லிற்று; நான்காமடியில் '**திருமால்**' என்றது, துவயத்தில் பின் பாகத்தில் கூறப்படுகிற திருமகள் சம்பந்தத்தைச் சொல்லுகிறது. (1)

1071.

பேரே உறைகின்ற பிரான் இன்று வந்து,
பேரேன் என்று, என் நெஞ்சு நிறையப் புகுந்தான்,
கார் ஏழ், கடல் ஏழ், மலை ஏழ், உலகு உண்டும்
ஆரா வயிற்றானை அடங்கப் பிடித்தேனே.

பொ - ரை :—திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான், இன்று வந்து, போகேன் என்று என் நெஞ்சிலே அவன் நிறைவாளனாம்படி புகுந்தான்; ஏழு மேகங்களையும், ஏழு கடல்களையும், ஏழு மலைகளையுமுடைய உலகத்தை எல்லாம் உண்டும் நிறையாத வயிற்றையுடைய எம்பெருமானை என் நெஞ்சிலே அடங்கும்படி இறுகப் பிடித்தேன் என்கிறார்.

வி - கு :—புகுந்தானாகிய ஆரா வயிற்றானை அடங்கப் பிடித்தேன் என்க. 'கார் ஏழ், கடல் ஏழ், மலை ஏழ்' என்பது உலகிற்கு அடைமொழி.

ஈடு:—இரண்டாம் பாட்டு. [2]தான் சர்வேஸ்வரனாய் வைத்து என்னோடு கலக்கப் பெறுமையாலே குறைவாளனானவன், இன்று வந்து காரணம் இல்லாமலே என் மனத்தின்கண் புகுந்து நிறைவாளன் ஆனான் என்கிறார்.

பேரே உறைகின்ற பிரான் - திருப்பேரிலே வந்து எழுந்தருளியிருக்கிற சர்வேஸ்வரன். இன்று வந்து - [3]இது உண்டா

1. திருமால் என்ற பெயரை இரண்டு முறை வைத்திருப்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இரண்டாமடியில்' என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "இன்று" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இது உண்டாகும்' என்று தொடங்கி. நென்னேற்று - முதல் நாள்.

கும் என்று நெஞ்ஞேற்று அறிவது, தாம் ஒரு சாதனத்தைச் செய்திருந்தாராகில் அன்றோ. பேரேன் என்று - 'பேரேன், பேரேன்' என்னுநின்ருன் ஆயிற்று, [1]''நீ போவுதியோ, இருப்புதியோ?'' என்று கேட்பாரும் இன்றிக்கே இருக்கச்செய்தே, இங்குப் பிராட்டி, தன் விஷயத்தில் சொல்லும் வார்த்தையைத் தான் என் விஷயத்திலே சொல்லாநின்ருன். [2]'நான் போகேன், போகேன்' என்று சூழ்த்துக் கொடாநின்ருன் ஆயிற்று, தன்னை ஐயப்படுவாரும் இன்றிக்கே இருக்க; [3]''அந்தத் தம்பிமார் மூவருடன், இராவணனைக் கொல்லாமல் அயோத்திக்கு மீளேன்'' என்கிறபடியே. என் நெஞ்சு - [4]'இவன் பேரில் என், இருக்கில் என்?' என்று இருக்கிற என் நெஞ்சு. நிறையப் புகுந்தான் - நிறையும்படி புகுந்தான்.

கார் ஏழ் கடல் ஏழ் மலை ஏழ் உலகு உண்டும் ஆரா வயிற்ருனை - புஷ்கலாவர்த்தம் முதலான மேகங்கள் ஏழும், கடல் ஏழும், மலைகள் ஏழும் ஆன உலகத்தை எல்லாம் திருவயிற்றிலே வைத்து, [5]பின்னையும், தன்னை நம்பி உடன் கிடந்தவனை மடி தடவினவனைப் போலே ''நாம் என் செய்தோமானேம்'' என்றிருக்குமவனை. என்றது, [6]படைத்தல் தொடக்கமாக

1. யாரைக் குறித்துப் ''பேரேன்'' என்கிருன்? என்ன, 'நீ போவுதியோ' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். இங்கு - இவ் அர்த்தவிஷயமாக. சொல்லும் வார்த்தை - ''அகலகில்லேன் இறையும்'' என்று சொல்லும் வார்த்தையை.

2. மேலே கூறியதனை விவரணம் செய்கிருர் 'நான் போகேன்' என்று தொடங்கி. சூழ்த்துக் கொடுக்கை - ஆணையிட்டுக் கொடுக்கை.

3. ஆணையிட்டுக் கொடுத்ததற்குப் பிரமாணம் காட்டுகிருர் 'அந்தத் தம்பிமார்' என்று தொடங்கி.

அஹத்வா ராவணம் ஸங்க்யே ஸபுத்ர ஜநபாந்தவம்
அயோத்யாம் நப்ரவேக்ஷ்யாமி த்ரிபிஸ்தைஃ ப்ராத்ருபிஃ ஸஹ.

என்பது, ஸ்ரீராமா. யுத். 19: 21.

4. ''என் நெஞ்சு'' என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'இவன்' என்று தொடங்கி. என்றது, அவன் பக்கல் விருப்பம் இல்லாதிருக்கிற மனம் என்றபடி.

5. ஆராமைக்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'பின்னையும்' என்று தொடங்கி. மடிதடவுதல் - மடியில் உள்ள செல்வத்தைக் கவர்தல்.

6. மேலே அருளிச்செய்தவற்ருல் போதரும் பொருளை அருளிச்செய்கிருர் 'படைத்தல்' என்று தொடங்கி. அதாவது, ''உலகு உண்டும்'' என்றது, பரமபதத்தளவும் ரக்ஷிப்பதற்கு உபலக்ஷணமாய், ''ஆரா வயிற்ருனை'' என்றது, ''உன் அடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி'' (பெரிய திருவந்தாதி, 53.) என்கிறபடியே அவன் குணமாய், ''அடங்கப் பிடித்தேன்'' என்றது, அவனுடைய நிறைந்த அங்கீகாரத்துக்குப் பாத்திரன் ஆனேன் என்றபடி.

மோக்ஷம் இறுதியாகக் காக்கப்படுகின்ற பொருள்களினுடைய எல்லாவிதமான பாதுகாவலையும் செய்து, பின்னையும் 'ஒன்றும் செய்யப் பெற்றிலோம்' என்று இருக்குமவனை என்றபடி. அடங்கப் பிடித்தேனே - அவனுடைய நிறைந்த அங்கீகாரத்துக்குப் பாத்திரன் ஆனேன். [1]பிரளயத்தில் அகப்பட்ட உலகத்தை எடுக்கையாவது, பின்னையும் இவ்வுலக வாழ்வினைப் பூண் கட்டுகை அன்றோ; பரமபதத்து அளவும் செல்ல நடத்தப் பெறுமையாலே குறைபட்டு அன்றோ கிடப்பது; [2]'நாம் எல்லாம் செய்தோம்' என்று அவன் தெகுட்டும்படி செய்து கொண்டேன். அவன் என்னை அவ்வளவும் கொண்டு போம்படி நான் உடன்படுகையாலே அவனுடைய பெருங்காதல் தீர்ந்ததாயிற்று. (2)

1072.

பிடித்தேன்; பிறவி கெடுத்தேன்; பிணி சாரேன்;
மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை;
கொடிக் கோபுர மாடங்கள் சூழ் திருப்பேரான்
அடிச் சேர்வது எனக்கு எளிது ஆயின வாறே!

பொ - ரை :—கொடிகள் கட்டிய கோபுரங்களும் மாடங்களும் சூழ்ந்த திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடிகளை அடைவது எனக்கு எளிதாக இருந்த வகை என்னே! திருவடிகளைத் துணையாகப் பிடித்தேன்; பிறவியினை அழித்தேன்; நோயினை அடையேன்; மனை வாழ்க்கையுள் நிற்பதற்குக் காரணமான மூலப்பகுதியை அழித்தேன்.

வி - கு :—மனை வாழ்க்கையுள் நிற்பது ஓர் மாயையை மடித்தேன் என்க. மாயை - மூலப் பகுதி. எளிதாயினவாறு என்னே! என்க.

ஈடு :—மூன்றும் பாட்டு. [3]அவன், தம்மோடே காரணம் இல்லாமலே வந்து கலந்தபடியை நினைந்து, இவன் திருவடிகள் எனக்கு இங்ஙனே எளிது ஆவதே! என்கிறார்.

---

1. "ஆரா வயிற்றானை" என்றதற்கு, பரமபதத்திற்குக் கொடுபோகப் பெறுமையாலே குறைவுபட்டிருக்கிறவனை என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'பிரளயத்தில்' என்று தொடங்கி.

2. "ஆரா வயிற்றானை" என்பதற்கு அருளிச்செய்த இரண்டாவது பொருளுக்கு ஏற்ப, "அடங்கப் பிடித்தேன்" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நாம் எல்லாம்' என்று தொடங்கி.

3. நான்காம் அடியினைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

பிடித்தேன் - [1] "தலை மேல தாள் இணைகள்" என்று அவன் திருவடிகளைத் தலைமேலே கொண்டு வந்து வைக்கையாலே அவற்றை உரக்கப் பிடித்துக்கொண்டேன். பிறவி கெடுத்தேன் - பிறவியை மறுவல் இடாதபடி போக்கினேன். [2] "காணே ஒருங்கிற்றும் கண்டிலம்" என்கிறபடியே, எங்கே போயிற்றுக் கண்டிலன். பிணி சாரேன் - பிறவி புக்க இடத்தே புகக்கூடிய பிணியைக் கிட்டேன். [3] மனை வாழ்க்கையுள் நிற்பது ஓர் மாயையை மடித்தேன் - இவ் உலக வாழ்க்கையிலே நிற்கைக்கு அடியான மாயை உண்டு - மூலப்பகுதி, அதனைத் திரிய விடுவித்தேன்; [4] தொடருகிற பாம்பினைத் திரிய விடுவிப்பாரைப் போலே. [5] எம்பெருமானர், உலாவியருளுகிறவர் முடியப் போகாதே நடுவே மீண்டருள, எம்பார் கதவினை ஒருச்சரித்துத் "திருமாலிருஞ்சோலை ஆகாதே திருவுள்ளத்தில் ஓடுகிறது" என்ன, "ஆம், அப்படியே" என்று அருளிச்செய்தார்.

கொடிக் கோபுரம் மாடங்கள் சூழ் திருப்பேரான் அடிச் சேர்வது எனக்கு எளிது ஆயினவாறே - கொடிகளையுடைத்தான கோபுரங்களையும் மாடங்களையும் உடைத்தான திருப்பேரிலே நிற்கிறவன் அடிசேருகையாகிறது எனக்கு எளிது ஆயினவாறே! [6] "அறுகம்புல்லை யிட்டுக் கண்ணைப் புதைத்துக் கொள்,

1. நீர் அவன் திருவடிகளைப் பிடிக்க வல்லீரானபடி யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "தலை மேல" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 10. 6: 6.

2. மறுவல் இடாதபடி போக்கினமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் "காணே" என்று தொடங்கி. இது, பெரிய திருவந்தாதி, செய். 54. எடுத்த பாசுரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'எங்கே' என்று தொடங்கி.

3. மேலே, "பிறவி கெடுத்தேன்" என்றது, ஸ்தூல சரீரத்தின் நாசத்தைச் சொல்லுகிறது; இங்கு, "மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை" என்றது, சூக்ஷ்ம சரீரத்தின் நாசத்தைக் கூறியபடி.

4. 'தொடருகிற பாம்பினைத் திரிய விடுவிப்பாரைப் போலே' என்றது, அருச்சுனன் முடியை எடுத்துக்கொண்டு போய்ப் பின்னையும் தொடர்ந்து வருகிற நாகாஸ்திரத்தைக் கிருஷ்ணன் நியமனத்தாலே திரியவிட்டாற்போலே என்றபடி.

5. இப் பாசுரத்துக்கு, ஓர் ஐதிஹ்யம் காட்டுகிறார் 'எம்பெருமானர்' என்று தொடங்கி. 'உலாவியருளுகிறவர்' என்றது, "உண்டபின் நூறு அடி உலாவவேண்டும்" என்ற சாஸ்திர விதிப்படியே, திரு அமுது செய்த பின்பு நூறடி உலாவ வேண்டுகையாலே, அதற்கு உறுப்பாக உலாவியருளுகிறவர் என்றபடி. 'மீண்டருள' என்றது, "மடித்தேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. ஒருச்சரித்து - ஒரு பக்கமாகச் சாய்த்து.

6. "எளிதாயினவாறே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அறுகம்புல்லை' என்று தொடங்கி.

சாணகச் சாற்றைக் குடி, தலையைக் கீழே நடு, காலை மேலே எடு" என்று அரும் தேவைகளைச் சாஸ்திரம் சொல்லாநிற்க, எனக்கு இங்ஙனே இருப்பதொரு மூலை அடி வழி உண்டாவதே! [1] ஐம்புல இன்பங்களின் காற்கடையிலே துவண்டு போந்தவர் அவன் திருவடிகளிலே கிட்டிக்கொடு நிற்கக் கண்ட இத்தனை. (3)

1073.

எளிது ஆயினவாறு என்று, என் கண்கள் களிப்பக்
களிது ஆகிய சிந்தையனாய்க் களிக்கின்றேன்;
கிளி தாவிய சோலைகள் சூழ் திருப்பேரான்
தெளிது ஆகிய சேண் விசும்பு தருவானே.

பொ-ரை:—என் கண்களாலே கண்டு களிக்கும்படியாக எளிதாய் இருந்தவகை எங்ஙனே என்று களிப்பினை உடையதாகிய மனத்தினை உடையேனாய்க் களிக்கின்றேன்; கிளிகள் தாவிப் பரந்து திரிகின்ற சோலைகள் சூழ்ந்த திருப்பேரில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் தெளிவோடு கூடிய பரமபதத்தைத் தருவான் ஆனான்.

வி - கு :—திருப்பேரான் சேண் விசும்பு தருவான் என் கண்கள் களிப்ப எளிது ஆயினவாறு என்று களிது ஆகிய சிந்தையனாய்க் களிக்கின்றேன் என்க.

ஈடு :—நாலாம் பாட்டு. [2] தமக்குப் பரமபதத்தினைத் தருவானாய் இருக்கிறவனுடைய நீர்மையை நினைந்து, என் உறுப்புக்களும் களிக்க, நானும் களியாநின்றேன் என்கிறார்.

எளிது ஆயின வாறு-[3] "அரியது எளிது ஆகும்" - [4] பெறுதற்கு அரியனான பகவானைப் பெறுதலும் எளிது ஆகும். எங்கே கண்டோம்? என்றால், கரியது ஓர் வெண் கோட்டு மால் யானை வென்றி முடித்தன்றே தண் கோட்டு மாமலரால்

---

1. "எனக்கு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஐம்புல இன்பங்களின்' என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "எளிதாயினவாறு" என்றதனால் பகவத் விஷயம் எளிதாக இருக்கும் என்பதற்குப் பிரமாணம், "அரியது எளிதாகும்" என்பது. இது, இரண்டாந் திருவந்தாதி, செய். 22.

4. மேற்கோளாக எடுத்த பாசுரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பெறுதற்கு' என்று தொடங்கி.

தாழ்ந்து - அவன் தானே அரை குலையத் தலை குலைய மடுவின் கரையிலே விழ அன்றோ யானை பெற்றது. எளிது ஆயின வாறு என்று என் கண்கள் களிப்ப - காண்பதற்கு அரிய விஷயம் இங்ஙனே எளிது ஆவதே! என்று [1] "காணக் கருதும் என் கண்ணே" என்கிறபடியே, விடாய்த்த கண்கள் களிக்கும்படி. களிது ஆகிய சிந்தையனாய் - களித்த மனத்தினையுடையனாய். என்றது, [2]"நெடியானே என்று கிடக்கும்" என் மனம் களிக்கப் பெற்றது என்றபடி. களிக்கின்றேன் - [3] "கூவியும் காணப் பெறேன்" என்ற நானும் களியாநின்றேன். உறுப்புக்களும் தாமும் ஒக்க விடாய்த்தவர், [4]உறுப்புக்களும் தாமும் ஒக்கக் களிக்கப்பெற்றார்.

கிளி தாவிய சோலைகள் சூழ் திருப்பேரான் - எப்பொழுதும் மலர்களோடே கூடியிருக்கிற சோலைகளாலே சூழப்பட்ட திருப்பேரான். தெளிது ஆகிய சேண் விசும்பு தருவான் - இருள் தரு மா ஞாலம் போல் அன்றிக்கே நாட் செல்ல நாட் செல்லத் தெளிவினைச் செய்யக் கூடியதாய், மீண்டு வருதல் இல்லாததாய் இருக்கிற சேண் விசும்பு உண்டு-பிரமன் சிவன் முதலாயினோர்கள் குடி இருப்புக்கும் அவ்வருகான பரமபதம்: அதனை எனக்குத் தருகையிலே துணிந்திருந்தான். (4)

1074.

வானே தருவான் எனக்காய், என்னோடு ஒட்டி,
ஊனேய் குரம்பை இதனுள் புகுந்து இன்று,
தானே தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்
தேன் ஏய் பொழில் தென் திருப்பேர் நகரானே.

பொ - ரை :—தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த அழகிய திருப்பேர் நகரில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன், எனக்குப் பரமபதத்தைக் கொடுப்பதற்காக என்னோடு சூளுறவு செய்து, தசை பொருந்தி இருக்கின்ற இச் சரீரமாகிற இதனுள் இன்று புகுந்து தடுமாற்றத்தை உண்டுபண்ணுகிற இரு வினைகளையும் தானே தவிர்த்தான் என்க.

---

1. "காணக் கருதும்" என்றது, திருவாய்மொழி, 9. 4 : 1.
2. "நெடியானே" என்பது, திருவாய்மொழி, 3. 8 : 1.
3. "கூவியும்" என்பது, திருவாய்மொழி, 3. 8 : 7.
4. வியாக்கியாதாவின் ஈடுபாடு, 'உறுப்புக்களும்' என்று தொடங்கும் வாக்கியம்.

வி - கு:—எனக்காய் என்பதிலுள்ள ஆய் என்பதனைப் பிரித்துத தருவான் என்பதனோடு கூட்டுக. ஒட்டி - சபதம் செய்து. பொருந்தி என்னலுமாம். தென் திருப்பேர் நகரான் ஒட்டிப் புகுந்து தவிர்த்தான் என்க. தென் - தென் திசையுமாம்.

ஈடு:—ஐந்தாம் பாட்டு. [1]திருப்பேர் நகரான் பரமபதத்தை எனக்குத் தருவானாக என்னோடே பூணித்து, தானே இருவினைகளையும் போக்கினான் என்கிறார்.

எனக்கு வானே தருவானாய் - [2] இங்கே வைத்துக் காரியம் கொள்ளுமதனையும் தவிர்த்தான்; 'பிரமன் முதலாயினோர்கள் குடி இருப்பு இவர்க்குத் தரம் அன்று' என்று அதனையும் தவிர்த்தான்; இவ் உலக வாழ்விலே உழன்று திரிகின்ற எனக்கு நித்தியசூரிகள் இருப்பைத் தருவானாக. என்னோடு ஒட்டி -என்னோடே பூணித்து. [3]நான் விரும்பாதிருக்க, "இராவணன் இல்லாததாக, அல்லது இராமன் இல்லாததாக இந்த உலகத்தைப் பார்க்கப் போகிறீர்கள்; உங்களுக்குச் சத்தியமாகச் சொல்லுகிறேன்" என்கிறபடியே, என்னோடு சூளுறவு செய்து. என்றது, [4]"எம் மா விட்டுத் திறமும் செப்பம்" என்ற என்னோடே உமக்கு "எம் மா வீடே" தரக் கடவேன் என்று ஒட்டி என்றபடி. ஊன் ஏய் குரம்பை இதனுள் இன்று புகுந்து -'இவ் உடம்போடே உம்மைக் கொடுபோக வேண்டும்' என்று விளம்பித்தோமாகில், இதனை ஒழியக் கொடுபோகப் பார்த்தபின்பு இனி ஆறி இருப்பனோ? என்னாநின்றான்.

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். பூணித்தல் - சூளுறவு செய்தல்.

2. "வான்" என்பதற்குப் பொருள் 'இங்கே வைத்து' என்று தொடங்கும் வாக்கியம். 'காரியம் கொள்ளுமதனையும்' என்றது, இன்னம் ஒரு பிரபந்தம் இடுவித்துக் கொள்ளுகையையும் என்றபடி. "வானே" என்ற ஏகாரத்துக்குப் பொருள் 'பிரமன்' என்று தொடங்கும் வாக்கியம். சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவ் உலகவாழ்விலே' என்று தொடங்கி.

3. அதனை விவரணம் செய்கிறார் 'நான் விரும்பாதிருக்க' என்று தொடங்கி.

> அஸ்மிந் முஹூர்த்தே ந சிராத் ஸத்யம் ப்ரதிஸ்ருணோமி வ:
> அராவணம் அராமம்வா ஜகத் த்ரக்ஷ்யத வாநரா:

என்பது, ஸ்ரீராமா. யுத். 21.

4. ஆயின், இவர் விரும்பாதிருந்தாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "எம் மா வீட்டு" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 9: 1.

[1] தசைகள் மிக்கிருப்பதாய் ஆத்மாவுக்கு இருப்பிடமாய் இருக்கிற இச் சரீரத்திலே, மேலெழக் கலக்கை அன்றிக்கே விடாயர் மடுவினுள்ளே புகுமாறு போலே புகாநின்றான். [2] எனது உடலே அரு மா மாயத்து எனது உயிரே மனமே வாக்கே கருமமே ஒரு மா நொடியும் பிரியாதே இதனுள் புகுந்து நின்றான்.

இன்று - நேற்று ஒரு நினைவு இல்லை. தானே - கர்மங்கட்குக் கட்டுப் படாதவனை தானே. [3] இவர் பல காலம் தேகத்தினை விரும்பி விடமாட்டாதே போந்தார்; இப்போது இவர்க்குத் தன் பக்கலிலே ருசி பிறந்தவாறே இதனோடு தொற்று இல்லாத தானே இதிலே வந்து புகுராநின்றான். [4] அவனைப் போலே முன்னடி தோற்றாதொழியில் அன்றோ இவர் இச் சரீரத்தின் தண்மையைக் காணாது ஒழிவது? இதன் தண்மையை நினைந்து 'இதனுள்' என்கிறார். தானே - [5] புகுகிறபோது தானேயாய், பின்னர் நானும் அவன் செய்யும் காரியத்துக்கு அநுகூலமாக இருந்தேனே? தடுமாற்றம் [6] வினைகள் தவிர்த்தான் - தன் பக்கல் நின்றும் என்னைப் பிரித்துத் தடுமாறும்படி செய்ய வல்ல பாவங்களைப் போக்கினான். அவை யாவன: பொங்கு ஐம்புலனும், பொறி ஐந்தும், கருமேந்திரியம், ஐம்பூதம், இங்கு இவ் உயிர் ஏய் பிரகிருதி, மான், ஆங்காரம், மனங்கள்.

---

1. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தசைகள்' என்று தொடங்கி.

2. இது, "செஞ்சொற் கவிகாள்" என்ற திருவாய்மொழியில் "திருமாலிருஞ்சோலை மலையே" என்ற திருப்பாசுரத்தில் "எனது உடலே" என்று தொடங்கிச் சொல்லப்பட்ட பொருளை அநுவதிக்கிறது என்கிறார் 'எனது உடலே' என்று தொடங்கி.

3. "தானே ஊன் ஏய் குரம்பை இதனுள் புகுந்து" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'இவர் பலகாலம்' என்று தொடங்கி.

4. அவன் இனிய பொருளாகக் கொண்டு உள்ளே புகுர, இவர் "இதனுள்" என்று தண்ணிமையைக் கூறுவது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனைப் போலே' என்று தொடங்கி.

5. "தானே" என்றதிலுள்ள ஏகாரத்திலே நோக்காகக் கருத்து அருளிச்செய்கிறார் 'புகுகிறபோது' என்று தொடங்கி. 'பின்னர்' என்றது, வினைகளைத் தவிர்க்கும்போது என்றபடி.

6. "வினைகள் தவிர்த்தான்" என்றது, "மங்க ஒட்டு" என்ற திருப்பாசுரத்தில் பின் இரண்டு அடிகளின் அநுவாதம். இதனையே, 'அவையாவன' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

தேன் ஏய் பொழில் தென் திருப்பேர் நகரானே - [1]தேன் மிக்க பொழிலையுடைத்தான திருப்பேர் நகரை உடையவன் காண் என்னுடைய சரீரத்திலே புகுந்து கண நேரமும் விட மாட்டாது ஒழிகிறான்; என்ன குறை உண்டாய் இப்படிப் பட்டான்? (5)

1075.

திருப்பேர் நகரான், திருமாலிருஞ் சோலைப்
பொருப்பே உறைகின்ற பிரான், இன்று வந்து,
இருப்பேன் என்று என் நெஞ்சு நிறையப் புகுந்தான்;
விருப்பே பெற்று, அமுதம் உண்டு களித்தேனே.

பொ - ரை :—திருப்பேர் நகரில் எழுந்தருளி இருப்பவனும், திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற உபகாரகனுமான எம்பெருமான், இன்று என்பால் எழுந்தருளி உம்முடைய மனத்திலே இருப்பேன் என்று சொல்லி என் மனம் நிறையும்படி புகுந்தான்; எம்பெருமானுடைய அபிமானத்தினைப் பெற்றுக் குணங்களாகிய அமுதினைப் பருகிக் களியாநின்றேன் என்கிறார்.

வி - கு :—வந்து புகுந்தான்; ஆதலால், விருப்பே பெற்று அமுதம் உண்டு களித்தேன் என்க. இரண்டு திவ்ய தேசங்களைச் சொன்னது, மற்றைத் திவ்ய தேசங்களுக்கும் உபலக்ஷணம்.

ஈடு :—ஆறும் பாட்டு. [2]தனக்கு இருப்பிடமான கோயில்கள் பல உளவாக இருக்க, ஓர் இடம் இல்லாதாரைப் போலே என் மனத்திலே ஒரு காரணமும் இல்லாமல் வேண்டிக் கொண்டு வந்து புகுந்தான் என்று பிரீதர் ஆகிறார்.

திருப் பேர் நகரான் - [3] திரு அயோத்தியையைப் போலே ஆயிற்று. திருமாலிருஞ்சோலைப் [4] பொருப்பே உறைகின்ற

1. "தேன் ஏய் பொழில் தென் திருப்பேர் நகரான்" என்று விசேடித்துக் கூறுகின்றவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'தேன்மிக்க' என்று தொடங்கி.

2. முதல் மூன்று அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "இன்று" என்ற சொல்லை நோக்கி 'ஒரு காரணமும் இல்லாமல்' என்கிறார். "இருப்பேன் என்று" என்றதனை நோக்கி 'வேண்டிக் கொண்டு' என்கிறார்.

3. ஊரையும் மலையையும் சொன்னதற்கு ஸ்வாரஸ்யமாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'திருவயோத்தியையைப் போலே ஆயிற்று' என்று.

4. "பொருப்பே உறைகின்ற" என்ற ஏகாரத்தாலும், "உறைகின்ற" என்ற நிகழ்காலத்தாலும் திருப்பேர் நகரைக் காட்டிலும் திருமாலிருஞ்சோலை மலையில் இருப்பு இனிமையாய் இருக்கும் என்றபடி.

பிரான் - [1]"சித்திரகூடமலையில் வசிப்பது அயோத்யையயில் வசிப்பதைக்காட்டிலும் மேலானது ஆக எண்ணுகின்றேன்" என்னுமாறு போலே; [2]"மால்யவதி என்னும் நதியைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்; அயோத்யையை நீங்கி வனத்திற்கு வந்ததனால் உண்டான துக்கத்தையும் விட்டார்." திருச்சித்திரகூடத்திற் போலே ஆயிற்று. [3]"நந்தன வனத்தில் குபேரன் சஞ்சரிப்பது போன்று" என்கிறபடியே, [4]குறைவு அற்றவன் நந்தனவனத்திலே வசிக்குமாறு போலே ஆயிற்று. [5]எல்லாவகையாலும் குறைவு அற்றவனுக்கு அன்றோ லீலாரசத்தில் தொடர்புள்ளது. இன்று வந்து-இவ் வரவுக்கு நேற்று ஒரு நினைவின்றிக்கே இருக்க வந்து கொடு நிற்கக் கண்ட இத்தனை. இருப்பேன் என்று - 'இருப்பேன், இருப்பேன்' என்னு நின்றான் ஆயிற்று. [6]"பழிப்பு அற்றவளே! இவ்விடத்திலேயே பலவருடங்கள் உன்னுடன்வசிப்பேன்",[7]"இலக்ஷ்மணா! இங்கு இந்த ஜடாயு பறவையோடு கூடவே வசிக்கப் போகிறேன்."

---

1. இதற்குத்திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'சித்திரகூட மலையில்' என்று தொடங்கி. இப் பொருள் அமைந்த சுலோகத்தை மேலே 48-ஆம் பக். குறிப்பிற் காண்க.

2. ஸுரம்யம் ஆஸாத்யது சித்ரகூடம்
நதீஞ்ச தாம் மால்யவதீம் ஸுதீர்த்தாம்
நநந்த ராமஃ ம்ருகபக்ஷி ஜுஷ்டாம்
ஜஹௌச துக்கம் புரவிப்ரவாஸாத்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 57 : 38.

3. ஸுபகஃ சித்ரகூடஃ அயம் கிரிராஜோபமோ கிரிஃ
யஸ்மிந் வஸதி காகுத்ஸ்தஃ குபேர இவ நந்தநே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 99 : 12.

4. இச் சுலோகத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'குறைவு அற்றவன்' என்று தொடங்கி.

5. 'குறைவற்றவன்' என்பதற்குச் சுலோகத்தில் சொல் இல்லையே? எனின், 'எல்லாவகையாலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. 'இருப்பேன்' என்றதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பழிப்பு அற்றவளே!' என்று தொடங்கி.

யதீஹ ஶரத அநேகா த்வயா ஸார்த்தம் அநிந்திதே
லக்ஷ்மணேந ச வத்ஸயாமி ந மாம் ஶோகஃ ப்ரதக்ஷ்யதி.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 94 : 15.

7. இதம் புண்யம் இதம் மேத்யம் இதம் பஹு ம்ருகத்விஜம்
இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தம் ஏதேந பக்ஷிணா.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15 : 19.

[1]"ஐயர் கோற் கீழே வசிக்க வேண்டும் என்று நினைத்திருந்தோம்; நடுவில் ஆய்ச்சிக்குப் பிரியம் இல்லாமையாலே போந்தோம்; இனிமேல் உள்ள காலமெல்லாம் இவர் சிறகின் கீழே வசிக்கப் பாராநின்றோம்" என்றான் அன்றோ.

என் நெஞ்சு நிறையப் புகுந்தான் - 'இருந்திடுவானுக்கு' என்று இராத என் நெஞ்சிலே நிறையப் புகுந்தான். விருப்பே பெற்று - [2]ஆணையைப் பின்பற்றாமையால் உண்டான வெறுப்பின் காரியமாக அன்றிக்கே. [3]"அந்தப் பகைவர்களான கொடியவர்களை அசுரப் பிறவியில் தள்ளுகிறேன்" என்று இருப்பதும் ஓர் இருப்பு உண்டு அன்றோ; அங்ஙன் அன்றிக்கே, அவனுடைய விருப்பத்தையுடையனாய். அமுதம் உண்டு களித்தேன் - [4]விஷ உணவினை உண்டு நரகத்துக்குப் போகாநிற்க, [5]நடுவே நின்று களிக்கை அன்றிக்கே, அமுதம் உண்டு களித்தேனே; அவனுடைய கொண்டாட்டமாகிற அமுதத்தை உண்டு களித்தேனே என்னுதல்; அவனுடைய குணங்களாகிய அமுதத்தை உண்டு களித்தேன் என்னுதல். [6]ஐம்புல இன்பங்களில் ஆசை உள்ளவனாய் நரகத்துக்குக் கிருஷியைப் பண்ணிவைத்துக் களிக்குமது அன்றோ அது. [7]அதாவது, "அணி மென் குழலார் இன்பக் கலவி அமுது

---

1. சுலோகத்திலேயுள்ள "பக்ஷிணும்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஐயர் கோற் கீழே' என்று தொடங்கி. நடுவில் ஆய்ச்சி - கைகேயி. கோல் - ஆணை.

2. "விருப்பே" என்ற ஏகாரத்தின் பொருளை அருளிச்செய்கிறார் 'ஆணையை' என்று தொடங்கி.

3. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'அந்தப் பகைவர்களான' என்று தொடங்கி.

தாந் அஹம் த்விஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு.

என்பது, ஸ்ரீ கீதை, 16 : 19.

4. "அமுதம் உண்டு" என்றதற்கு மறுதலைப் பொருளை அருளிச்செய்கிறார் 'விஷ உணவினை' என்று தொடங்கி.

5. 'நடுவே நின்று களிக்கை அன்றிக்கே' என்றது, பகவானுடைய அநுபவத்தால் களிக்கப்பெற்றேன் என்றபடி.

6. 'நடுவே நின்று களிக்கை அன்றிக்கே' என்றதனை விவரணம் செய்கிறார் 'ஐம்புல இன்பங்களில்' என்று தொடங்கி.

7. 'நரகத்துக்குக் கிருஷிபண்ணிக் களிக்குமது' என்றதனை விவரணம் செய்கிறார் 'அதாவது' என்று தொடங்கி. "அணி மென் குழலார் இன்பக் கலவி யமுது" என்கையாலே, அதுவும் சிறிய மகிழ்ச்சிக்குக் காரணம் என்றபடி. "அணிமென் குழலார்" என்றது, திருவாய்மொழி, 4. 1 : 5.

உண்டார்" என்றபடி. களித்தேனே - [1]"நாவல் இட்டு உழி தருகின்றோம்" என்கிறபடியே செருக்காலே களிக்கிற களிப்பே அன்றோ இது. நமன் முதலானோர் தலைகளிலே அடியிட்டுக் களிக்கப் பெற்றேன். (6)

1076.

உண்டு களித்தேற்கு உம்பர் என் குறை? மேலைத்
தொண்டு உகளித்து, அந்தி தொழும் சொல்லுப் பெற்றேன்;
வண்டு களிக்கும் பொழில் சூழ் திருப்பேரான்
கண்டு களிப்ப, கண்ணுள் நின்று அகலானே.

பொ - ரை:—வண்டுகள் களிக்கின்ற பொழில் சூழ்ந்த திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன், நான் கண்டு களிக்கும்படி கண்களில் நின்றும் நீங்குகிறான் இலன்; இப்படிப் பட்ட அநுபவம் பெற்றுக் களித்த எனக்கு மேல் உலகத்தில் சென்று அநுபவிக்க வேண்டிய குறை உண்டோ? மேலான தொண்டினால் ஆய பயன் மேம்பட்டு, முடிவிலே சொல்லக் கூடியதான சொல்லையும் சொல்லப் பெற்றேன்.

வி - கு:—உம்பர் - மேல். மேலைத் தொண்டு உகளித்து-மேலான தொண்டு - திருவாய்மொழி பாடுகை; அதனால் உண்டான உகப்பானது தலை மண்டையிட்டு. குறை - பெறவேண்டிய இன்றியமையாத பொருள். மேலை - மேன்மை. உகளித்து - மிகுந்து. அந்தி - முடிவு. சொல் - நமஃ என்னும் சொல்.

ஈடு:—ஏழாம் பாட்டு. [2]அவனுடைய ஆதரத்தால் தமக்குக் குறை இல்லாமையை அருளிச்செய்கிறார்.

உண்டு களித்தேற்கு உம்பர் என் குறை - [3] இப்படி அநுபவித்துக் களிக்கப் பெற்ற எனக்கு ஒரு குறை உண்டோ?

---

1. பகவானுடைய அநுபவத்தால் வந்த களிப்பு இருக்கும்படி என்? என்ன, "நாவல் இட்டு" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். எடுத்த பாசுரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நமன் முதலானோர்' என்று தொடங்கி. நாவலிட்டு - அறைகூவி; நாவல் என்பதும், அறையோ என்பதும் வென்றவன் சொல்லும் வார்த்தை என்பர்.

2. மேல் பாசுரத்தில் "விருப்பே பெற்று" என்றதனால் சொல்லப் பட்ட பொருளை மீண்டும் எடுத்துக் கொண்டு, இப் பாசுரத்தில் உள்ள முன்னிரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. 'இப்படி அநுபவித்து' என்றது, "கண்ணுள் நின்றகலான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

மயர்வு அற மதி நலம் அருளப் பெற்று [1]அவனுடைய குணங்களை அநுபவித்த எனக்கு மேலே வேண்டுவது ஒன்று உண்டோ? என்கிறார். [2]ஞானத்தை அடைந்த பிறகு 'அவ்வருகில் உள்ள பரமபதத்தைப் பெற்றிலோம்' என்று வருவது ஒரு குறை உண்டோ? உம்பர் என்றது மேல் என்றபடி. மேலைத் தொண்டு உகளித்து - மேலான அடிமை இன்பம் மிகுந்து. [3]"பரம்பொருள் எந்த எந்த வழியில் செல்கிறானோ, அவ்வவ் வழியிலே உயிரும் செல்கிறது" என்கிற இன்பத்தை அநுபவித்து. [4]"ஒருவனுக்கு அடிமையாக இருப்பது இழிந்த தொழில்" என்றது போல் அன்றே, சொரூபத்திற்குத் தகுதியாக உள்ளதன்றோ இது. தொண்டு உகளித்து-தொண்டாலே உகப்புத் தலை மண்டை இட்டு. [5]அந்தி தொழும் சொல்லுப் பெற்றேன் - அதனுடைய முடிவிலே [6]"நமஃ என்றே சொல்லுகின்றவர்கள்" என்று மனம் அறியச் சொல்லுவது ஒன்று உண்டு, அப் பாசுரத்தைச் சொல்லப் பெற்றேன். [7]அதாவது, பிரீதி வழிந்த சொல்லாலே திருவாய்மொழி பாடி அடிமை செய்யப் பெறுகையைத் தெரிவித்தபடி.

---

1. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

2. மயர்வற மதிநலம் அருளப்பெற்ற அளவே போதியதாமோ? பேறும் பெற வேண்டாவோ? என்ன, 'ஞானத்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'பரம்பொருள்' என்று தொடங்கி.

யேநயேந தாதா கச்சதி தேந தேந ஸஹ கச்சதி.

என்பது, பரம ஸம்ஹிதை.

4. பிறருக்குத் தொண்டு செய்தல் தாழ்வே அன்றோ? "மேலைத் தொண்டு" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒருவனுக்கு' என்று தொடங்கி.

"ஸேவா ஶ்வவ்ருத்திঃ ஆக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்"

என்பது, மநு ஸ்மிருதி, 4· 4 : 6.

5. "அந்தி தொழும் சொல் என்கையாலே பலம் சொல்லிற்று" என்ற முமுக்ஷுப்படி ஸ்ரீ சூக்தி இங்கு நினைவு கூர்தல் தகும். கைங்கரியத்தாலாய இன்பம் மிகுந்தால் அதனுடைய எல்லையான நிலைமையிலே சொல்லக் கூடிய தான தொழுஞ்சொல் - நமச் சப்தம்; இதுதான் முடிவான பேறு; அதனையும் இங்குப் பெற்றேன் என்கிறார்.

6. முக்தாநாம் லக்ஷணம் ஹி ஏதத் ஶ்வேத த்வீபநிவாஸிநாம்
பத்தாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா நம இதி ஏவ வாதிநঃ.

என்பது, பாரதம்மோக்ஷம்.

7. "மேலைத் தொண்டு" இன்னது என விவரணம் செய்கிறார் 'அதாவது' என்று தொடங்கி.

வண்டு களிக்கும் பொழில் சூழ் திருப்பேரான் - வண்டுகள் தேனைக் குடித்துக் களிக்கிற பொழிலாலே சூழப்பட்ட திருப்பேரிலே வசிக்கிறவன். என்றது, [1] ஞானத்தாலே மேம்பட்டவர்களோடு திரியக்குக்களோடு வாசி அறக் களிக்கும் தேசம் என்றபடி. கண்டு களிப்ப - [2] "மெய் கொள்ளக் காண விரும்பும் என் கண்கள்" என்று விடாய்த்த கண்கள் கண்டு களிக்கும்படியாக. கண்ணுள் நின்று அகலானே - நான் போகச் சொல்லிலும் கண் வட்டத்தில் நின்றும் அகலுகிறிலன். [3] ஐம்புல இன்பங்களில் ஆசையுள்ளவர்கள் போகச் சொன்னாலும் தூணைக் கட்டிக்கொண்டு போகாதவாறு போலே. [4] இப்படி அவனை அநுபவித்துக் களிக்கப் பெற்ற எனக்கு மேல் ஒரு குறை உண்டோ? (7)

1077.

கண்ணுள் நின்று அகலான்; கருத்தின்கண் பெரியன்;
எண்ணில் நுண் பொருள்; ஏழிசையின் சுவைதானே;
வண்ண நல் மணி மாடங்கள் சூழ் திருப்பேரான்
திண்ணம் என் மனத்துப் புகுந்தான் செறிந்து இன்றே.

பொ - ரை:—கண்களாலே எப்பொழுதும் பார்க்கப்படுதற்கு விஷயமாகாநின்றான், என்னைத் திருநாட்டுக்குக் கொண்டு போவதில் மிகப் பெரிய பாரிப்பையுடையவனாயிருக்கிறான், எண்ணுமிடத்து நுண் பொருளாக இருக்கிறான், ஏழிசையின் சுவை தானேயாக இருக்கிறான், அழகிய சிறந்த மாணிக்கங்களால் கட்டப்பட்ட மாடங்கள் சூழ்ந்திருக்கிற திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருப்பவன், இன்று மீளாதவாறு என் மனத்திலே புகுந்தான்; இது உறுதி.

வி - கு:—திருப்பேரான் இன்று செறிந்து என் மனத்துப் புகுந்தான் திண்ணம் என்க. கருத்து - எண்ணம்.

---

1. "உண்டு களித்தேற்கு" என்றதனைக் கடாக்ஷித்து 'வண்டு களிக்கும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஞானத்தாலே' என்று தொடங்கி.

2. "மெய் கொள்ள" என்பது, திருவாய்மொழி, 3. 8: 4.

3. போகச் சொன்னாலும் போகாததற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'ஐம்புல இன்பங்களில்' என்று தொடங்கி.

4. அந்வய மூலமாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

ஈடு:—எட்டாம் பாட்டு. [1]எல்லை இல்லாத இனியனை திருப்பேர் நகரான் என் பக்கலிலே காதலை வைத்து ஒரு நாளும் போகாதபடி என் நெஞ்சிலே வந்து புகுந்தான் என்கிறார்.

கண்ணுள் நின்று அகலான் - எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருப்பதற்கு விஷயம் ஆகாநின்றான். என்றது, எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருப்பதற்கு வேறு தனக்கு ஓர் உலகம் உண்டு என்று இருக்கிறிலன் என்றபடி. கருத்தின் கண் பெரியன் - [2] இரண்டு உலகங்களையுமுடையவனாக இருத்தலால் வரும் வேறு ஒன்றிலே நோக்குள்ளவனாக இருத்தல் முழுதும் தீர்ந்து, இவரை அவ்வருகே கொண்டு போகையிலும், ஆதிவாஹிகரை ஏவுகையிலும், தான் முற்பாடனாய்க் கொண்டு போகையிலும் பாரியாநின்றான். அன்றிக்கே, [3] நம் காரியத்தில் இவன் விரைகிறபடி நம்மால் எண்ணி முடியும் அளவு அன்று என்னுதல்; என்றது, இவ்வளவினன் என்று எண்ண முடியாதவன் என்றபடி. [4] இதுதான், "எவனுக்கு அறியப்படாதது" என்கிற பொது நோக்கால் அன்று, [5] நம் காரியத்தில் இங்ஙனே இருக்கும்; [6] "என் மனத்துப்

---

1. "எழிசையின் சுவைதானே, திருப்பேரான், கண்ணுள்நின்றகலான், கருத்தின்கண் பெரியன், என் மனத்துச் செறிந்து புகுந்தான்" என்பனவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கருத்தின்கண் பெரியன்" என்றதற்குப் பலவிதமான எண்ணங்களை நினையாநின்றான் என்பது கருத்து. பலவிதமான எண்ணங்களை விவரணம் செய்கிறார் 'இரண்டு உலகங்களையும்' என்று தொடங்கி.

3. "கருத்தின்கண் பெரியன்" என்பதற்கு, என்னுடைய நினைவில் பெரியவன் என்று கொண்டு, அவன் பாரிக்கிற பாரிப்பு நம்மால் எண்ணி முடிக்கப் போகாது என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'நம் காரியத்தில்' என்று தொடங்கி.

4. "கருத்தின்கண் பெரியன்" என்பதற்கு, நினையும் நினைவுகளாலே பெரியன் என்று பொருள் கூறவேண்டுமோ? அளவிட்டு அறியமுடியாத சொரூபத்தை யுடையவன் என்று பொருள் கூறினால் என்னை? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி. இதுதான் என்றது, இவ்வளவினன் என்று எண்ணமுடியாதவன் என்றதுதான் என்றபடி.

"யஸ்யாமதம் தஸ்யமதம்......அவிஜ்ஞாதம் விஜாநதாம்"

என்பது, கௌஷீதகி உபநிடதம்.

5. பின்னர் எதிலே? என்ன, 'நம் காரியத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. இங்ஙனம் கூறுவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'என் மனத்து' என்று தொடங்கி.

புகுந்தான்" என்றதனோடு சேர வேண்டு மன்றோ "கருத்தின் கண்பெரியன்" என்கிற இதுவும்.

எண்ணில் நுண் பொருள் - [1] அவன் தானே இப்படி மேல் விழில் விழுமித்தனை போக்கித் தாம் தாமே அறியப் பார்ப்பார்க்கு அறியப் போகாது. [2] அறிய அரியன் என்று கைவாங்கி இருக்கலாம் பொருள் அன்று. ஏழ் இசையின் சுவைதானே - [3] வருந்தியும் மேல் விழ வேண்டும் பொருளா யிற்று. இது இனிமை இருந்தபடி. வண்ணம் நல் மணி மாடங்கள் சூழ் திருப்பேரான் - [4] இது மேன்மை இருந்தபடி. என் மனத்து இன்று செறிந்து புகுந்தான் - [5] "நான் இராமனை விட்டு வேறுகாதவள்" என்கிற பொருளைப் போன்று பிரிக்க ஒண்ணுதபடி புகுந்தான்; [6] "எனது ஆவியுள் கலந்த" என்னுமாறு போலே. [7] 'அறப் பெரியன் ஆனவன் இப்படி நம்பக்கல் மேல் விழக் கூடுமோ?' என்று தாமும் ஐயம் கொண்டார்; அதற்கு வேறு போக்கடி கண்டிலர். திண்ணம் - நிச்சயம், இதில் கண்ணழிவு இல்லை என்கிறார். (8)

---

1. "எண்ணில் நுண்பொருள்" என்பதற்கு, எண்ணிக்கையில் வந்தால் சூக்குமமான பொருள் என்பது பொருள். இப் பொருளையே விவரணம் செய்கிறார் 'அவன் தானே' என்று தொடங்கி.

2. "எண்ணில் நுண்பொருள்" என்றதனையும் சேர்த்துக்கொண்டு "ஏழிசையின் சுவைதானே" என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அறிய அரியன்' என்று தொடங்கி.

3. "ஏழ் இசையின் சுவைதானே" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'வருந்தியும்' என்று தொடங்கி.

4. ஊரினுடைய இனிமையை வருணித்து, இப்படிப்பட்ட ஊரை உடையவன் என்கையாலே 'இது மேன்மை இருந்தபடி' என்கிறார்.

5. "செறிந்து" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நான்' என்று தொடங்கி.

> ஶக்யா லோபயிதும் ந அஹம் ஐஶ்வர்யேண தநேநவா
> அநந்யா ராகவேண அஹம் பாஸ்கரேண ப்ரபா யதா.

என்பது, ஸ்ரீராமா. சுந். 21 : 15. "செறிந்து" என்பதற்குப் பிரிக்க ஒண்ணுத படி என்பது பொருள்.

6. பிரிக்க ஒண்ணுதபடி புகுந்தான் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "எனதாவியுள் கலந்த" என்று. இது, திருவாய்மொழி, 2. 3 : 4.

7. "திண்ணம்" என்று நிச்சயிக்கவேண்டுமானால் முன்பு ஐயப்பாடு இருந்திருக்க வேண்டுமே? வந்த ஐயம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அறப் பெரியன்' என்று தொடங்கி.

1078.

இன்று என்னைப் பொருளாக்கி, தன்னை என்னுள் வைத்தான்;
அன்று என்னைப் புறம்போகப் புணர்த்தது என் செய்வான்?
குன்று என்னத் திகழ் மாடங்கள் சூழ் திருப்பேரான்
ஒன்று எனக்கு அருள்செய்ய, உணர்த்தலுற்றேனே.

பொ - ரை :—இன்று என்னைப் பொருள் ஆக்கித் தன்னை என் மனத்தின் கண்ணே இருத்தினான், அன்று ஐம்புல இன்பங்களிலே நான் அலையும்படியாகச் செய்து பராமுகம் பண்ணி இருந்தது எதற்காக? மலைகளைப் போன்று விளங்குகிற மாடங்கள் சூழ்ந்த திருப்பேர் என்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் தக்கது ஒரு விடையைச் சொல்லவேண்டும் என்று விண்ணப்பிக்கின்றேன்.

வி - கு :—திருப்பேரான் அன்று புறம் போகப் புணர்த்தது என் செய்வானாக, ஒன்று எனக்கு அருள்செய்ய உணர்த்தல்உற்றேன் என்க. ஒன்று என்றது, இத்துணை நாள் கைவிட்டிருந்ததற்குக் காரணம் சொல்லுதல்; அன்றி இன்று கைக் கொண்டதற்குக் காரணம் சொல்லுதல் என்னும் இரண்டில் ஒன்றனை என்றபடி. அருள் செய்தல் - விடை கூறுதல். புணர்த்தல் - மாயையை இட்டு மயக்குதல்.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [1]இன்று என்னை அங்கீகரிக்கைக்கும் முன்பு என்னைப் பராமுகம் செய்தமைக்கும் காரணம் என்? என்று கேட்க வேண்டி இருந்தேன் என்கிறார். அன்றிக்கே, சர்வேஸ்வரன் தம்மைப் பரமபதத்திற்குக் கொடு போகையிலே விரைகிறபடியைக் கண்டு 'இன்று என் அளவு அல்லாதபடி விரைகிற தேவர் இதற்கு முன்பு பல காலம் விட்டு ஆறி இருந்தமை எங்ஙனே?' என்று அவனைக் கேட்

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். இப் பாசுரத்திற்கு மூன்று வகையில் அவதாரிகை அருளிச்செய்கிறார். முதல் அவதாரிகை, தனக்குத் தானே சிந்தித்தலில் நோக்கு. இரண்டாவது அவதாரிகை, இறைவனைக் குறித்துக் கேட்டலில் நோக்கு. மூன்றாவது அவதாரிகை, அதிசங்கையிலே நோக்கு. மேலே "விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்றாரே; அப்படி விரையத்தொடங்கின நாளை "இன்று" என்கிறார் இப்பாட்டில்: "கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" என்றும், "கண்ணாளா! கடல் கடைந்தாய்! உன கழற்கே வரும் பரிசு, தண்ணாவாது அடியேனைப் பணிகண்டாய் சாமாறே" என்றும் தாம் கதறிய காலத்தை "அன்று" என்கிறார். அன்றிக்கே, "மயர்வற மதிநலம் அருளினன்" என்று தம் திருவாயால் பேசும்படி அங்கீகரித்த நாள் தொடங்கி உள்ள காலத்தை "இன்று" என்றும், அதற்கு முற்பட்ட காலத்தை "அன்று" என்றும் அருளிச்செய்கிறார் என்றலும் பொருந்தும்.

கிறார் என்னவுமாம். அன்றிக்கே, இன்று இப்படி விரைகிறமை மெய்யாகில் முன்பு விட்டு ஆறியிருக்கக் கூடாது என்கிறார் என்னுதல்.

[1] நத்வாம் இஹஸ்த்தாம் ஜாநீதே - தேவரீர் இங்கிருப்பதனைப் பெருமாள் அறியவில்லை - என்கிறபடியே நடுவே சிலர் சொல்லவேண்டும்படி ஆயிற்று: [2]எழுந்தருளியிருந்த இடம் அறியாமையாலே ஆறியிருந்தாரித்தனை போக்கி, அறிந்தால் ஒரு கணம் ஆறியிருப்பரோ? [3] இதுதான் என் வார்த்தை கொண்டு அறிய வேண்டுமோ? கமல லோசநே - உம்முடைய கண் அழகே அன்றோ இதில் பிரமாணம்? ராமஃ-[4]அவரை அறியாதொழிய வேண்டுமோ? [5] "கறுத்த கண்களையுடைய சீதையைப் பிரிந்து ஒரு கணம்கூட நான் உயிர் வாழேன்" என்றே அன்றோ அவர் இருப்பது. ராமஃ கமல லோசநே - [6]அவரை அறியாமையும் இல்லை; உம்மை நீர் கண்ணாடிப் புறத்திலும் கண்டு அறியாமையும் இல்லை. கமல லோசநே - [7]அன்

1. "உணர்த்தலுற்றேன்" என்றதற்கு விடை யாது? என்ன, "நத்வாம்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

நத்வாம் இஹஸ்த்தாம் ஜாநீதே ராமஃ கமல லோசநே
தேநத்வாம் நாநயதி ஆஶு ஶசீமிவ புரந்தரஃ.

என்பது. ஸ்ரீராமா. சுந். 36: 33. இது, திருவடி பிராட்டியைப் பார்த்துக் கூறியது.

2. இச் சுலோகத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எழுந்தருளியிருந்த' என்று தொடங்கி.

3. "கமலலோசநே" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இது தான்' என்று தொடங்கி. 'இது தான்' என்றது, அறிந்தால் ஒரு கண நேரமும் ஆறி இரார் என்னும் இதுதான் என்றபடி. இதில் பிரமாணம் - ஆறியிரான் என்னுமதற்குப் பிரமாணம். பிரமாணம் - காரணம்.

4. ராமஃ என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவரை' என்று தொடங்கி.

5. அவர் எப்படி இருப்பார்? என்ன, 'கறுத்த கண்களையுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சிரம் ஜீவதி வைதேஹீ யதிமாஸம் தரிஷ்யதி
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 66: 10. "அஸிதேக்ஷணாம் விநா" என்கையாலே உம்முடைய தாமரை போன்ற கண்களை விட்டிருக்க வல்லரோ என்றபடி.

6. "ராமஃ கமலலோசநே" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவரை' என்று தொடங்கி.

7. "கமலலோசநே" என்றதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. இந்தக் கருத்து, பிரணய ரோஷத்திலே நோக்கு. கமலம் என்பதற்கு முதற் பொருள், கருநெய்தல் என்பது. இரண்டாவது பொருள், செந்தாமரை என்பது.

றிக்கே, யார் எதிராகத்தான் இக் கண் சிவப்பும் சீற்றமும் எல்லாம் என்னுதல்.

இன்று என்னைப் பொருள் ஆக்கி - அறிவு இல்லாத பொருளைப் போன்று இருந்த என்னை இன்று ஒரு பொருள் ஆம்படி செய்து; [1] "பொருள் அல்லாத என்னை" என்றாரே அன்றோ. தன்னை - [2] பெருமக்களால் விரும்பத் தக்கவனான தன்னை. என்னுள் வைத்தான் - பிறர்க்கு இடம் இல்லாதபடி தன்னை முற்றாட்டாக என்னுள்ளே கொடுவந்து வைத்தான். அன்று - என்று அவன் திருவருளைப் பெறுதற்கு முன்புள்ள நாட்கள் எல்லாவற்றையும் சொல்லுகிறார். இன்று என்கிறது, மயர்வு அற மதி நலம் அருளப் பெற்ற அதற்குப் பின்புள்ள காலத்தை. என்னைப் புறம் போகப் புணர்த்தது என் செய்வான் - பரதந்திரனான என்னைப் புறம் போகப் பண்ணிற்று என் செய்கைக்காக? புறம் போகப் பண்ணுகையாவது, பராமுகம் செய்தல். [3] 'இழந்த நாள் இழந்ததும் அவனாலே, பெற்ற இன்று பெற்றதும் அவனாலே' என்று இருக்கிறார். [4] சுவதந்திரம் இல்லாத பொருள் செல்ல நிற்கவற்றோ? வர நிற்க வற்றோ?

குன்று என்னத் திகழ் மாடங்கள்சூழ் திருப்பேரான்-இப்படி மதிப்பனானவன், மலைகளைச் சேர வைத்தாற் போலே விளங்காநின்றுள்ள மாடங்கள்சூழ்ந்த திருப்பேரான். ஒன்று எனக்கு அருள் செய்ய - [5] முன்பு கைவிட்டதற்குக் காரணம் சொல்லவுமாம், இன்று என்னை அங்கீகரித்ததற்குக் காரணம் சொல்லவுமாம். உணர்த்தல் உற்றேன்-இதற்கு ஒரு மறு மாற்றம் அருளிச்செய்ய வேண்டும் என்று திருவுள்ளத்திலே படும்

1. "அறிவு இல்லாத பொருளைப் போன்று" என்பதற்கு இங்குச் சொல் இல்லையே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பொருள் அல்லாத' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 5. 7 : 3.

2. "எழிசையின் சுவைதானே" என்றதற்குத் தகுதியாகத் "தன்னை" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பெருமக்களால்' என்று தொடங்கி.

3. மேலே கூறியவற்றுக்கு எல்லாம் பாவம் அருளிச்செய்கிறார் 'இழந்த நாள்' என்று தொடங்கி.

4. இரண்டும் அவனாலே என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சுவதந்திரம்' என்று தொடங்கி.

5. "ஒன்று" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'முன்பு' என்று தொடங்கி.

படி விண்ணப்பம் செய்ய வேண்டியிராநின்றேன். [1] 'இது நாம் சொல்ல வேண்டுமோ? நீரே அறியீரோ?' என்றான்; 'அடியேன் அறியேன்: முற்றறிவினனான நீயே அருளிச் செய்ய வேண்டும்' என்றார். 'ஆனால், நாம் உம்முடைய நெஞ்சிலே புகுந்த காலத்தில் உடன்பட்டு இருந்தீர்; அதனாலே காணும்' என்றான்; "ஓம், அதுதான் உண்டோ? 'யான் ஒட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்'" என்றார்; 'அது இல்லையாகிலும் புகுந்த பின்பு நம்மை விரும்பினீரே' என்றான்; "'மருவித் தொழும் மனமே தந்தாய்' என்கிறபடியே அதுவும் தேவர் செய்த இத்தனை" என்றார்; 'ஓம் காணும்: அது இல்லையாகிலும் நம்மை விரும்பும்போது நம்மோடுகூட வேறு விஷயங்களை விரும்பாதிருந்தீரே' என்றான்; "'என்னைத் தீ மனம் கெடுத்தாய்' என்கிறபடியே அதுவும் தேவரே அன்றோ செய்தது" என்றார்; 'இவை ஒன்று இன்றேயாகிலும் நாம் தந்த மதிநலத்தை வளர்த்துப் போந்தீரே' என்றான்; "'காதல் கடல் புரைய விளைவித்த கார்அமர் மேனி கண்ணன்' என்கிறபடியே அதுவும் தேவர் அன்றோ செய்தது" என்றார்; இப்படி இவர் முடியத்தொடர்ந்தவாறே **பெருங் கடல் மண்டி னுரைப் போலே** போக்கற்றான்.

[2] இதற்கு ஈஸ்வரன் சொன்ன விடை என்? என்று **நஞ்சீயர் பட்டரைக்** கேட்க, 'இவர் தலையிலே ஒரு பழியினை ஏறட்டுப் பலகாலம் இழந்திருந்த நாம் சொல்லுவது என்? என்று நாணம் உற்றவனாய்க் காலாலே தரையைக் கீறி நிற்கு மித்தனை போக்கி வேறு விடை உண்டோ?' என்று அருளிச்

1. "உணர்த்தலுற்றேன்" என்ற இவரே, அடுத்த பாசுரத்தில் "உற்றேன் உகந்து பணிசெய்து" என்று சமாதானத்தை அடைகிறார் ஆகையாலே அவன் விடை கூறுதொழிந்தது போதருதலால், அவன் விடை கூறு தொழிந்ததனை விரிவாக எடுத்துப் பேசுகிறார் 'இது நாம் சொல்ல' என்று தொடங்கி.

"யான் ஒட்டி" என்றது, திருவாய்மொழி, 1. 7: 7.
"மருவித் தொழும்" என்றது, திருவாய்மொழி, 2. 7: 7.
"என்னைத்தீமனம்" என்றது, திருவாய்மொழி, 2. 7: 8.
"காதல்" என்றது, திருவாய்மொழி, 5. 3: 4.

2. மேலே கண்டவாறு காரணங்கள் சிலவற்றை அவன் சொல்ல, இவர் அவற்றிற்கெல்லாம் வேறு ஒரு காரணம் சொல்ல, அதற்குமேல் விடை கூற முடியாதவனாய் நின்றான் என்று அருளிச்செய்தார் இதுகாறும். இங்ஙன் அன்றிக்கே, பலகாலம் இவரைக் கைவிட்டிருந்த குற்றம் தன்மேலேயாய் இருக்க, அவ் வழியாலும் அவன் விடை கூற முடியாதவனான தன்மையை ஆப்த சம்வாதத்தாலே விளக்குகிறார் 'இதற்கு' என்று தொடங்கி.

செய்தார். [1] அதாவது, 'முன்பு ருசி இல்லாமையாலே' என்ன மாட்டான்: இப்பொழுது சாதனங்களைச் செய்கையாலே என்ன மாட்டான். ஆனால், பின்னை ஈஸ்வரனுக்கு உயர்வு தாழ்வுகளுடன் படைத்தல் அருள் அற்றிருத்தல் முதலிய குற்றங்கள் வருதல், எல்லார்க்கும் மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டி வருதல் செய்யாதோ? என்னில், அது செய்யாது, அடியிலே வெறுப்பின்மையும் இச்சையும் பிறப்பதற்குத் தான் கிருஷிபண்ணி அது பக்குவமாம் அளவும் பார்த்திருப்பவன் ஆகையாலே.

[2] கேட்டதற்கு அவன் ஒரு மறுமாற்றம் சொல்லக் காணாமையாலே 'அறிந்தோம்: இதற்குக் காரணம் இங்ஙனே ஆகவேண்டும்' என்று பார்த்தார்: 'தன்னுடைய ரக்ஷணம் வெறுப்பிற்கு விஷயமாகை தவிர்ந்து விலக்காத சமயம் பார்த்திருந்தானாதல், தன்னை ஒழிந்தவற்றில் சாதனபுத்தி தவிருமளவும் பார்த்திருந்தானாதல் ஆக அடுக்கும்' என்று பார்த்தார். ஆனால், [3] இதனை அவன் உத்தரமாக அருளிச் செய்யாதது என்? என்னில், 'அறிவு காரணமாக வருகிற வெறுப்பின்மையைச் சாதனம் என்னமாட்டானே: உபாயமாக இருக்கும் தன்மை தன் தலையிலே ஆயிற்றே: பல காலம் இவர் தலையிலே பழியிட்டு இழந்திருந்த நாம் எதனைச் சொல்லுவது?' என்று பேசாதே இருந்தான். [4] "என்னால் அடையத் தக்கவர்களான இப்படிப்பட்ட அந்தணர்களால் நான் அடையப் பட்டேன் என்பது எனக்கு மிக்க நாணமாக இருக்கிறது" என்கிறபடியே பிற்பாட்டுக்கு நாணமுற்று நிற்குமவன் அன்றோ;

---

1. அது என்? முன்பு ருசி முதலானவைகள் இல்லாமையாலே என்ன ஒண்ணாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அதாவது' என்று தொடங்கி. அதாவது - விடை இல்லாமையாவது. 'மாட்டான்' என்கையாலே, நிர்ஹேதுகம்-காரணம் இல்லாமலே என்றபடி.

2. இறைவன் இப்படிப் பதில் சொல்ல முடியாதவன் ஆனான் ஆனால், கேட்ட சங்கைக்குச் சமாதானம் சொன்னார் யார்? என்ன, தாமே சமாதானம் செய்துகொண்டு போகிறார் என்கிறார் 'கேட்டதற்கு' என்று தொடங்கி.

3. 'இதனை' என்றது, வெறுப்பின்மையையும் தன்னை ஒழிந்தனவற்றில் சாதனபுத்தி தவிர்தலையும் என்றபடி.

4. 'இவர் தலையிலே பழி இட்டு இழந்திருந்த நாம்' என்கைக்கு, இழந்திருந்ததனை இறைவன் தன்னுடைய குறையாக நினைத்திருப்பனோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என்னால்' என்று தொடங்கி.

ப்ரஸீதந்து பவந்த: மே ஹ்ரீ: ஏஷா ஹி மமாதுலா
யத் ஈத்ருஸை: அஹம் விப்ரை: உபஸ்தேயை: உபஸ்தித:.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 10: 9.

இவர்தாம் எடுத்து வைத்து வார்த்தை சொல்லும்படி ஆயிற்று அவன் நிலே. [2]அறிவு பற்றி வருகின்ற ருசிதான் சொரூபத்தின் வேறு பட்டது ஆகாதே. [3]'நீர் பெற வேண்டிய பேற்றினைப் பெற்றீராகில் அதுவே அமையாதோ?' என்ன, அதுவே அமையும் என்கிறார்; [4]தேங்காய்க்கு இளநீர் புக்க வழி ஆராய்ந்தோ விடாய்த்தவன் இளநீர் குடிப்பது? (9)

1079.

உற்றேன்; உகந்து பணி செய்து, உன பாதம்
பெற்றேன்; ஈதே இன்னம் வேண்டுவது, எந்தாய்!
கற்றார் மறைவாணர்கள் வாழ் திருப்பேராற்கு
அற்றார் அடியார் தமக்கு அல்லல் நில்லாவே.

பொ - ரை :— என் தந்தையே! உன் திருவடிகளைக் கிட்டப் பெற்றேன், திருவாய்மொழி பாடுகையாகிற தொண்டினை விருப்பத்துடன் செய்து உன்னுடைய திருவடிகளைப் பெற்றேன், மேலும் விரும்புவதும் இதுவேயாகும். கற்க வேண்டியவற்றைக் கற்ற அந்தணர்கள் வாழ்கின்ற திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்த அடியவர்களுக்கு யாதொரு துன்பமும் நில்லாது என்பதாம்.

வி - கு :— அற்றார் - அவனுக்கே தீர்ந்தவர்கள். அல்லல் நில்லா : ஒருமை பன்மை மயக்கம்.

ஈடு :— பத்தாம் பாட்டு. [5]இவர் கேட்ட இதற்கு ஒரு காரணம் காணுமையாலே விடை அளித்தல் அற்றவனாய், 'உமக்கு மேல் செய்ய வேண்டுவது என்?' என்ன, 'பிரீதி முன்னாக

1. அவன் நாணமுற்றவனாகி நின்ற தன்மையின் எல்லையை அருளிச்செய்கிறார் 'இவர்தாம்' என்று தொடங்கி. 'எடுத்து வைத்து' என்றது, நாணத்தாலே கவிழ்ந்திருந்தவனை எடுத்துப் பிடித்து என்றபடி.

2. இவருக்கு வெறுப்பின்மையே அன்றி ருசியும் உண்டே; அது சாதனம் ஆகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அறிவு பற்றி' என்று தொடங்கி.

3. அடியில் கேட்ட வினாவிற்கு விடை அருளிச்செய்கிறார் 'நீர் பெற வேண்டிய' என்று தொடங்கி.

4. பெறவேண்டிய பேற்றினைப் பெற்றால் வந்த வழி ஆராய வேண்டா என்னுமதற்கு, திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'தேங்காய்க்கு' என்று தொடங்கி.

5. முன் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து, அதற்குத் தகுதியாக வினா விடை மூலமாக இயைபு அருளிச்செய்கிறார் 'இவர் கேட்ட இதற்கு' என்று தொடங்கி.

அடிமை செய்யப் பெற்றேன் : இதுவே இன்னம் வேண்டுவது என்கிறார். [1] 'அவன்தானே செய்நான்' என்னுமன்று, அவனுக்கு உயர்வு தாழ்வு காண்டலும், அருள் அற்ற தன்மையும், எல்லார்க்கும் மோக்ஷம் கொடுத்தலும் என்னுமிவை வாராதோ? என்னில், இத் தலையில் ருசியை விரும்பிச் செய்கையாலே அவனுக்கு அவை உண்டாக மாட்டா. [2] அதுவே காரணம் என்று ஈஸ்வரன் அதனைச் சொன்னுலோ? என்னில், அது உபாயம் ஆகமாட்டாது. [3] பலத்தோடு கூடியிருப்பது அன்றோ உபாயமாவது; [4] இந்த ருசி அதிகாரியினுடைய சொரூபமாகையாலே அவனுக்கு விசேஷணமாமித்தனை. [5]உபாயம் வேறு ஒரு துணையை விரும்பாததாகையாலும், இந்த ருசி உபாயம் ஆகமாட்டாது. ஆக, இது உபாயம் ஆகாமையாலே இவர்க்கு இல்லை என்னவுமாம், ஸர்வமுக்தி பிரசங்கம் நீங்குவதற்காக அவனுக்கு உண்டு என்னவுமாம்.

உற்றேன் - கெடுமரக்கலம் கரை சேர்ந்தாற்போலே கிட்டிக் கொடு நின்றேன். உகந்து பணி செய்து உன பாதம் பெற்றேன் - [6] பிரீதியினாலே தூண்டப்பட்டவனாய்க் கொண்டு திருவாய்மொழி பாடி உன் திருவடிகளை அநுபவிக்கப் பெற்றேன். [7] உகந்து பணி செய்கை சாதனமாக, மேல் சாதனத்தால் அடையக்கூடிய பேற்றினைச் சொல்லுகிறது அன்று; இரண்டும் ஒரே காலத்திலே உள்ளன. ஆகையாலே. ஈதே

---

1. மேல் பாசுரத்தில் சொல்லப்பட்ட சங்கையையும் பரிஹாரத்தையும் ஸ்தூணாநிகநந நியாயத்தாலே அறுதியிடுகிறார் 'அவன்தானே' என்று தொடங்கி.

2. அது - அந்த ருசி.

3. மாட்டாதபடி யாங்ஙனம்? என்ன, 'பலத்தோடு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. இந்த ருசி உபாயகோடியில் சேரவில்லையானால், பின்னர் இந்த ருசி எதனைச் சார்ந்தது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இந்த ருசி' என்று தொடங்கி.

5. மேலதற்கே வேறும் ஒரு காரணம் அருளிச்செய்கிறார் 'உபாயம்' என்று தொடங்கி.

6. பணி செய்கையாவது, வாக்கினாலே அடிமை செய்தல்; அதாவது, திருவாய்மொழி பாடுதல்; இதனை அருளிச்செய்கிறார் 'பிரீதியினாலே' என்று தொடங்கி.

7. உகந்து பணிசெய்கை, பாதம் பெறுகைக்குச் சாதனமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உகந்து' என்று தொடங்கி. என்றது, இரண்டும் பலம் என்றபடி. 'இரண்டும் ஒரே காலத்திலே உள்ளன ஆகையாலே' என்றது, திருவாய்மொழி பாடுகையும் அவன் திருவடிகளைப் பெறுகையும் இங்கே இருக்கச்செய்தே உள்ளவை ஆகையாலே என்றபடி.

இன்னம் வேண்டுவது எந்தாய் - [1] இதுதானே மாறி மாறி உயிர் உள்ள வரையிலும் செல்லுகையே அன்றே வேண்டுவது. [2] மீண்டு வருகை இன்றிக்கே ஒழிகையாவது, மீளா தொழிகை. சம்பந்தம் இல்லாததாக இருக்கிறதோ? என்னில், எந்தாய் - இவ் அநுபவம் ஆத்மாவோடு கூடியது என்கிறது. [3] இத் தலைக்கு அடிமையும், தேவர்க்கு ஏவும் தன்மையை யுடைய தலைமையும் அன்றோ சொரூபம். [4] 'இவர் விரும்பிய போது அவனும் செய்கிறோம்' என்ன, பிரீதராய் அருளிச் செய்கிறார்.

கற்றார் - ஓர் ஆசனத்தின் கீழே இருந்து கற்றவர்கள். மறைவாணர்கள் வாழ் - வேதத்துக்கு வியாசபதம் செலுத்த வல்லவர்கள் அநுபவித்து வசிக்கிற நகரம். திருப்பேராற்கு- [5] பிரீதியின் மிகுதியினாலே முகத்தை மாற்றித் தனக்குத் தானே சொல்லுகிறார் என்னுதல்; [6] அன்றிக்கே, திருப் பேரானான உனக்கு என்கிறார் என்னுதல். அற்றார் அடியார் - திருப்பேர் நகரானுக்கு அற்றாரான அடியார் என்னுதல். அவனுக்கு அற்றவர்களுக்கு அடியார் என்னுதல். அல்லல் நில்லா - ஒரு துக்கமும் இவர்கள் பக்கல் நில்லாது. (10)

---

1. மீண்டு வருதல் இல்லாத பரமபதத்திற்கு எல்லாரும் போக ஆசைப் படாநிற்க, நீர் "ஈதே இன்னம் வேண்டுவது" என்பான் என்? என்ன, 'இதுதானே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. இது மாறி மாறிச் செல்லுகை உயிர் உள்ளவரையிலும் இருப்பதாகக் கூடுமோ? மீண்டு வருதல் இல்லாமை அன்றோ வேண்டுவது? என்ன, 'மீண்டு வருகை இன்றிக்கே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். மீளாதொழிகையாவது, இடையீடு இன்றிக்கே மாறி மாறி வருதல். அதனையே "ஈதே இன்னம் வேண்டுவது" என்கிறது என்றபடி.

3. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'இத் தலைக்கு' என்று தொடங்கி.

4. மேலுக்கெல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இவர் விரும்பிய போது' என்று தொடங்கி.

5. மேல் அடிகளிலே "உன பாதம்" என்றும், "எந்தாய்" என்றும், முன்னிலையாக விளித்தவர், இங்கே, "திருப் பேராற்கு" என்று படர்க்கையாகக் கூறுவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'பிரீதியின்' என்று தொடங்கி.

6. "திருப் பேராற்கு" என்பதனைப் படர்க்கையாகக் கொள்ளாது, முன்னிலையாகவே கோடலுமாம் என்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

1080.

நில்லா அல்லல்; நீள் வயல் சூழ் திருப்பேர்மேல்
நல்லார் பலர் வாழ் குருகூர்ச் சடகோபன்
சொல்லார் தமிழ் ஆயிரத்துள் இவைபத்தும்
வல்லார் தொண்டர்; ஆள்வது சூழ் பொன் விசும்பே.

பொ - ரை :—நில்லாத துன்பத்தையுடைய நீண்ட வயல்கள் சூழ்ந்த திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தின்மேல், மேன் மக்கள் பலர் வாழ்கின்ற திருக்குருகூரிலே அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப் பத்துத் திருப் பாசுரங்களையும் கற்று வல்லவர்கள் தொண்டர் ஆவர்; அவர்கள் ஆட்சி புரிவது எல்லாவற்றையும் சூழ்ந்து கொண்டுள்ள பரமபதமே யாகும்.

வி - கு :—நில்லா அல்லல் என்பது திருப்பேர்க்கு அடைமொழி. அல்லல் நில்லாத என்பது பொருள்.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழியைக் கற்க வல்லவர்கள் இட்ட வழக்கு பரமபதம் என்கிறார்.

அல்லல் நில்லா - துக்கங்களானவை 'இது நமக்கு இடம் அன்று' என்று தானே விட்டுப் போம். நீள் வயல் சூழ் திருப் பேர் மேல் - பெருத்த வயல்கள் சூழ்ந்துள்ள திருப்பேர் மேலே ஆயிற்றுச் சொல்லிற்று. நல்லார் பலர் வாழ் குருகூர்ச் சட கோபன் - பெரியார் பலரும் தம்மை அநுபவித்து இனியராய் இருக்கும் திருநகரியையுடையராய் இருக்கும் ஆழ்வார் அருளிச் செய்தது. [2]நல்லார் நவில் குருகூர் அன்றோ. [3] "நதிகளால் அடையப்படுகின்ற கடல் போன்று சத்புருஷர்களாகிய பெரி யோர்களால் அடையப்படுகின்றவர்" என்கிறபடியே. சொல் ஆர் தமிழ் ஆயிரத்துள் - சொற்கள் தாமே வந்து சேர்ந்த தமிழான ஆயிரம் என்னுதல். அன்றிக்கே, இனிமைக்குச் சொல்லே அமைந்த தமிழான ஆயிரம் என்னுதல். இப் பத்தும்

---

1. நான்காம் அடியினைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. திருநகரியிலே பெரியார் பலரும் உளர் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "நல்லார்" என்று தொடங்கி. இது, திருவிருத்தம், 100.

3. தாம் கூறிய பொருளுக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'நதிகளால்' என்று தொடங்கி.

ஸர்வதா அபிகதஃ ஸத்பிஃ ஸமுத்ர இவ ஸிந்துபிஃ
ஆர்யஃ ஸர்வ ஸமஸ்சைவ ஸதைக ப்ரியதர்ஸநஃ.

என்பது, சங்க்ஷேப ராமாயணம்.

வல்லார் தொண்டர்-இப் பத்தினைக் கற்க வல்லவர்கள், [1]"செஞ் சொற் கவிகள்" என்கிறபடியே வாக்காலே அடிமை செய்யும் ஸ்ரீ வைஷ்ணவர்கள். ஆள்வது சூழ் பொன் விசும்பே - எல்லை இல்லாத ஒளிப்பிழம்பான பரமபதத்தை ஆயிற்று ஆளுவது? [2]இத் திருவாய்மொழி கற்றவர்கள் சென்றால், "ஆண்மின்கள் வானகம்" என்றாயிற்று அங்குள்ளார் சொல்லுவது. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

திருமால் தம்பால் விருப்பம் செய்கின்ற நேர் கண்டு
அருமாயத்து அன்றகல்விப்பான் என்?—பெருமால்! நீ
இன்று என்பாற் செய்வான் என்? என்ன, இடர் உற்று
துன்னு புகழ் மாறனைத் தான் சூழ்ந்து. [நின்றான்

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. "செஞ்சொற்கவிகள்" என்பது, திருவாய்மொழி, 10. 7: 1.

2. ஆள்வது சூழ்பொன் விசும்பே" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'இத் திருவாய்மொழி' என்று தொடங்கி. "ஆண்மின்கள்" என்பது, திருவாய்மொழி, 10. 9: 6.

ஒன்பதாம் திருவாய்மொழி - "சூழ் விசும்பு"

முன்னுரை

—:o:—

ஈடு :—[1] மேலான யோகிகளுக்குப் பிறக்கக் கூடியதான பரபக்தி இவர்க்குப் பிறக்க, அதனால் உளவாகும் தன்மைகளை இத் திருவாய்மொழி அளவும் வர அநுபவித்து, இனி இங்கிருந்து அநுபவிக்குமது ஒன்று இல்லாமையாலே 'பரமபதத்து ஏறப்போக வேண்டும்' என்று எண்ணுகிற இவரைத் தம்மிற்காட்டிலும் சடக்கெனக் கொடுபோக வேண்டும் என்று விரைகின்ற ஈஸ்வரன், அங்குத்தை அநுபவத்துக்கு ஈடாம்படி மிக்க விடாய் பிறக்கைக்காகத் தன்னுடைய சொரூப ரூப குண விபூதிகளைக் கண்களாலே கண்டாற் போன்று தெளிவாக விளங்கும்படி செய்தருளினன்.

[2] அதாவது, வேதாந்தங்களில் பிரசித்தமான அர்ச்சிராதி நெறியையும், சரீரம் பிரியும்போது வரும் துக்கம் எல்லாம் ஆறும்படி தான் வந்து முகங் காட்டும்படியையும், [3] போகும் நெறியில் உள்ளவர்களான தேவர்கள் செய்யும் உபசாரங்களையும், அந் நெறியாலே சென்று புகக்கூடிய பரமபதத்தையும், நித்தியசூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், [4] பிராட்டி

---

1. திருவிருத்தம் தொடங்கி இத் திருவாய்மொழியளவும் இவர்க்கு உண்டான தன்மைகள் பரபக்தி நிலையில் உண்டானவை என்று அருளிச்செய்யா நின்றுகொண்டு, இத் திருவாய்மொழியில் இவர்க்கு உண்டான தன்மை பரஞான நிலையில் விளையுமது என்று அருளிச்செய்கிறார் 'மேலான யோகிகளுக்கு' என்று தொடங்கி.

2. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'அதாவது' என்று தொடங்கி. 'அதாவது' என்றது, 'தெளிவாக விளங்கும்படி செய்தருளுகை யாவது என்றபடி.

3. இத் திருவாய்மொழியில் வருகின்ற "தொழுதனர் உலகர்கள்" என்றது முதல் "வாசலில் வானவர் - எமதிடம் புகுதுக" என்றது முடிய உள்ள பாசுரங்களைக் கடாக்ஷித்துப் 'போகும் நெறியில்' என்று தொடங்கியும், "மாதவன் வைகுந்தம் புகவே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அந் நெறியாலே' என்று தொடங்கியும், "முடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ள" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நித்திய சூரிகள்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

4. "வந்தவர் எதிர்கொள்ள" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'பிராட்டிமாரும்' என்று தொடங்கியும், "மா மணி மண்டபத்து அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நித்திய சூரிகள் சேவிக்க' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

மாரும் ஸ்ரீ வைண்டநாதனும் எதிரே வந்து ஆதரிக்கும்படியை யும், நித்தியசூரிகள் சேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந் தருளுகிறபடியையும், அடையத்தகுந்தவர்களிலே மேலான வர்களான நித்தியசூரிகள் நடுவே தாம் பாரம் அற்றவராய் ஆனந்தத்தையுடையவராய் இருக்கும்படியையும் காட்டி யருளக் கண்டு பிரீதராய், அதனை அந்யாபதேசத்தாலே பேசி அநுபவிக்கிறார்.

[1]தமக்கு அவன் செய்து கொடுத்த பேற்றினை வைஷ்ணவர் கள் எல்லாரும் பெற்றார்களாகப் பேசின இது, அந்யாபதேச மாவது; அதற்குப் பிரயோஜனம், [2]இங்குள்ளார் 'நமக்கும் ஆழ்வார் பேறு தப்பாது' என்று இருக்கை.

1081.

சூழ் விசும்பு அணி முகில் தூரியம் முழக்கின;
ஆழ் கடல் அலை திரைக் கைஎடுத்து ஆடின;
ஏழ் பொழிலும் வளம் ஏந்திய; என் அப்பன்,
வாழ் புகழ் நாரணன் தமரைக் கண்டு, உகந்தே.

பொ - ரை :—என் அப்பனாகிய, அடியார்களை வாழும்படி செய் கின்ற புகழோடு கூடிய நாராயணனுடைய அடியார்களைக் கண்டு, மகிழ்ந்து, எல்லாவற்றையும் சூழ்ந்து கொண்டுள்ள ஆகாயத்திலே அழகிய மேகங்கள் முரச ஒலியைச் செய்தன; ஆழ்ந்த கடலானது அலைகின்ற அலையாகிற கைகளை எடுத்து ஆரவாரித்தன; ஏழ் உலகங் களும் புதுக் கணித்தன என்பதாம்.

---

1. அந்யாபதேசமாவது ஈண்டு இன்னது என விவரணம் செய்கிறார் 'தமக்கு' என்று தொடங்கி. என்றது, இத் திருவாய்மொழியில் "நாரணன் தமரைக் கண்டு உகந்து" என்றும், "மாதவன் தமர்க்கே" என்றும், "ஆழி யான் தமர்" என்றும், "குடந்தை எம் கோவலன் குடி அடியார்க்கே" என்றும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அர்ச்சிராதிகதியும், அங்கங்கே செய்யப்படுகின்ற உபசாரங்களும் கிடைத்ததாக வைத்துச் சொல்லுகிற முகத்தால் தமக்குக் கிடைக்கப் போகும் பேற்றினைப் பேசுகிறார் ஆகையாலே 'அந்யாபதேசத் தாலே பேசி அநுபவிக்கிறார்' என்கிறார் என்றபடி.

2. அந்யாபதேசத்தாலே பேசுவதற்குப் பிரயோஜனத்தை அருளிச் செய்கிறார் 'இங்குள்ளார்' என்று தொடங்கி. என்றது, இங்குள்ள வைஷ்ண வர்கள் எல்லாரும் 'ஆழ்வார் பெற்ற பேறு நமக்கும் தப்பாது' என்று நம்பி யிருத்தற்காக இப்படி அருளிச்செய்கிறார் என்றபடி.

வி - கு :—என் அப்பனுகிய நாரணன் என்க. அவனுடைய தமரைக் கண்டு உகந்து முழக்கின ஆடின ஏந்திய என்க. தூரியம் என்பது, ஒரு வாத்திய விசேடம். அலைதிரை : வினைத் தொகை. திரை - அலை.

ஈடு :—முதற் பாட்டு. [1] பரமபதத்துக்குப் போகத் தொடங்குகிற ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்ட பிரீதியின் மிகுதியாலே தாவர சங்கமங்களுக்கு உண்டான வேறு பாட்டினை அருளிச்செய்கிறார்.

சூழ் விசும்பு - பூமியைச் சூழும்படி இடமுடைத்தான ஆகாசத்திலே. அணி முகில் - ஆபரணமான முகில் என்னுதல். ஆகாசப் பரப்பு அடங்கலும் [2] அணியப்பட்ட முகில் என்னுதல். தூரியம் முழக்கின - தூரிய ஒலியைப் பண்ணிற்றின. கந்தர்வர்கள் ஒப்பித்து நின்று பெரிய மண்டபங்களிலே நின்று கொட்டுமாறு போலே காணும் இவை இருக்கின்றன: [3] "நடு இரவில் அவதரிக்கும்போது மலர்மழை பெய்கின்ற மேகங்கள் மெதுவாக ஒலித்தன" என்னக் கடவது அன்றோ. [4] இவன் போக்குக்கு அடியான அவன் வரவிலே பிறந்த வேறுபாடே அன்றோ இது ; இவன்தான் போகப் புக்கால் சொல்ல வேண்டாவே. அன்றிக்கே, அவற்றுக்கு உரியவர்களான [5] இந்திரன், பர்ஜந்யன், வருணன் இவர்களைச் சொல்லிற்றாகவுமாம். ஆழ் கடல் அலை திரை கை எடுத்து ஆடின - எல்லாவற்றையும் தனக்குள்ளே அடக்கவற்றான அளவுடைய கடல் தைரியம் குறைந்து அலையாநின்றுள்ள திரையாகிற கையை எடுத்துக் கூத்தாடிற்றின.

ஏழ் பொழிலும் வளம் ஏந்திய - ஏழு தீவுகளும் புதுக் கணித்தன : உபகாரங்களைத் தரித்தன என்றுமாம். இவை

---

1. முதல் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். தாவரம் - கடல். சங்கமம் - முகில்.

2. அணியப்பட்ட - பரந்திருக்கின்ற.

3. ஒரு சேதனன் போகும்போது இவையெல்லாம் நிகழக் கூடுமோ? என்ன, 'நடு இரவில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

மத்யராத்ரே அகிலாதாரே ஜாயமாநே ஜநார்த்தநே
மந்தம் ஜகர்ஜு: ஜலதா: புஷ்பவ்ருஷ்டிமுச: த்விஜ.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 3 : 7.

4. சேதனன் போகும்போது இவை எல்லாம் கூடும் என்னுமதனை இசைவிக்கிறார் 'இவன் போக்குக்கு' என்று தொடங்கி.

5. கடலுக்கு உரியவன், வருணன். "முகில்" என்றதனாலே இந்திரனையும் பர்ஜந்யனையும் சொல்லுகிறது.

எல்லாம் யாரைக் கண்டு? என்னில், என் அப்பன் - எனக்குப் பரம பந்துவானவன். [1] இவர்களோடு ஒரு காரணம் பற்றாத சம்பந்தம் அவனுக்கு உண்டானால் அவனோடு சம்பந்தம் உள்ளவை எல்லாவற்றுக்கும் ஆதரிக்க வேண்டு மன்றே; [2] அரசபுத்திரன் போகாநின்றால் அரசனோடு சம்பந்தமுடையார்க்கு எல்லாம் அங்கீகரிக்க வேண்டுமாறு போலே. வாழ் புகழ் நாரணன்-அடியார்கள் வாழும்படி பண்ணவற்றான நற்குணங்களையுடைய சர்வேஸ்வரன். அவனைக் கண்டோ? என்னில், அவன் தமரைக் கண்டு - அவன் கேட்பானோ என்னும் அச்சத்தாலேயோ? என்னில், உகந்து - பிரீதியாலே தூண்டப்பட்டவர்களாய். (1)

1082.

நாரணன் தமரைக் கண்டு உகந்து, நல் நீர் முகில்
பூரண பொற்குடம் பூரித்தது, உயர் விண்ணில்;
நீர்அணி கடல்கள் நின்று ஆர்த்தன; நெடுவரைத்
தோரணம் நிரைத்து எங்கும் தொழுதனர் உலகே.

பொ - ரை :— நல்ல தண்ணீரையுடைய மேகம் நாராயணனுடைய அடியார்களைக் கண்டு மகிழ்ந்து பூரண பொற்குடங்களாக உயர்ந்த ஆகாசத்திலே சமைந்தது; நீராலே அணியப்பட்ட கடல்களானவை நிலை பெற்று ஒலித்தன; அவ் அவ் உலகத்திலே உள்ளவர்கள் நீண்ட மலை போன்று இருக்கின்ற தோரணங்களை எங்கும் நட்டுத் தாங்களும் தொழுதார்கள்.

வி - கு :— முகில் உகந்து உயர் விண்ணில் பொற்குடமாகப் பூரித்தது; கடல்கள் ஆர்த்தன; உலகு எங்கும் நிரைத்துத் தொழுதனர். உலகு-உலகினர். "உலகம் என்பது ஈண்டு மக்கள் தொகுதியை. உலகம் என்பது இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ் பொருளாகிய மக்கட்டொகுதியையும் உணர்த்து மாகலான், இருதிணைக் கண்ணும் சென்றதன்றே? எனின், அற்றன்று; வட நூலுள் உலகம் என்பது இரு பொருட்கும் உரித்தாக ஓதப்பட்டமையின், மக்கட்டொகுதியை உணர்த்தும் வழியும் உரிய பெயரேயாகலின் ஆகுபெயர் அன்று" என்பது சேனாவரையர் உரை. சூ. 57.

---

1. முதல் மூன்று அடிகட்கும் பாவம் அருளிச்செய்கிறார் 'இவர்களோடு' என்று தொடங்கி.

2. இதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அரசபுத்திரன்' என்று தொடங்கி.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1]மேலே உள்ள உலகங்கள் செய்த உபசாரங்களை அருளிச்செய்கிறார்.

நாரணன் தமரைக் கண்டு நல் நீர் முகில் உகந்து உயர் விண்ணில் பூரண பொன் குடம் பூரித்தது-ஒரு காரணம் இன்றியே சேஷியாக இருக்கின்றவனுடைய அடியார்களைக் கண்டு நல்ல நீரையுடைத்தான மேகங்களானவை, உகப்பாலே, உயர்ந்த ஆகாசத்திலே பூரண கும்பங்களாகச் சமைந்தன. [2]முற்படக் கண்டு உகந்தன; பின்பு அவை தாமே பூரண கும்பங்கள் ஆயிற்றின என்கை. [3]'ஒருகால் வாத்திய ஒலியைச் செய்தோம்' என்று இருக்கிறன இல்லை. [4] அன்றிக்கே, ஆகாசத்திலே சஞ்சரிக்கின்றவர்களான தேவர்களாலே ஆகாசம் எல்லாம் பூரணகும்பம் வைக்கப்பட்டன என்றுமாம். நீர் அணி கடல்கள் நின்று ஆர்த்தன - நீராலே அணியப்பட்ட கடல்கள், [5] 'ஒருகால் ஆடினோம்' என்று இராமல், உவகையாலே எப்பொழுதும் ஆர்த்துக் கொண்டன. உலகு நெடு வரைத்தோரணம் நிரைத்து எங்கும் தொழுதனர் - அவ் அவ் உலகங்களில் உள்ளார், நெடிய வரை போலே இருந்துள்ள தோரணங்களை நட்டுத் தாங்களும் தொழுதார்கள். [6] உலகம் என்பது உயர்ந்தோரை அன்றோ. அன்றிக்கே, அங்குள்ளாரைச் சொன்னபடியுமாம்.[7] "இலக்குமணர் குடை சாமரம் இவற்றைக் கையிலே

1. "நெடுவரைத் தோரணம் நிரைத்து எங்கும் தொழுதனர் உலகே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "உகந்து" என்பதற்கு வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'முற்படக் கண்டு உகந்தன' என்று. இப் பொருளில், உகந்து என்பது முற்று.

3. மேல் பாசுரத்தில் "சூழ் விசும்பு அணி முகில் தூரியம் முழக்கின" என்றாரே? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒருகால்' என்று தொடங்கி.

4. "பூரண பொற்குடம் பூரித்தது" என்பதற்கு வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

5. 'ஒருகால் ஆடினோம்' என்றது, மேல் திருப்பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி.

6. "தொழுதனர்" என்றதற்குச் சேர "உலகினர்" என்ன வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உலகம் என்பது' என்று தொடங்கி. அங்குள்ளாரை - அந்த உலகத்தில் உள்ளாரை.

7. "தோரணம் நிரைத்துத் தொழுதனர்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இலக்குமணர்' என்று தொடங்கி.

சத்ர சாமர பாணிஸ்து லக்ஷ்மண: அநுஜகாம ஹ
ஜுகோப ப்ராதரம் ப்ராதா ரதம் ஆஸ்தாய ப்ருஷ்டத:

என்பது, ஸ்ரீராமா. அயோத். 16 : 32.

உடையவராய்த் தமையனாரோடு தேரில் ஏறிக்கொண்டு தமையனாரைக் காத்து வந்தார்" என்கிறபடியே உவகையாலே எல்லா அடிமைகளும் செய்யாநின்றார்கள். (2)

1083.

தொழுதனர் உலகர்கள் தூப நல் மலர்மழை
பொழிவனர், பூமி அன்று அளந்தவன் தமர் முன்னே:
எழுமின் என்று, இருமருங்கு இசைத்தனர், முனிவர்கள்;
வழி இது வைகுந்தர்க்கு என்று, வந்து எதிரே.

பொ - ரை :—அந்த அந்த உலகத்திலே உள்ளவர்கள், அன்று பூலோகத்தை இரண்டு அடிகளால் அளந்த எம்பெருமானுடைய அடியார்களுக்கு முன்னே வந்து தூபத்தை ஏந்தி நல்ல மலர் மழையைப் பொழிந்தவர்களாகித் தொழுதார்கள்; முனிவர்கள் வைகுந்தம் செல்லுகின்றவர்களுக்கு வழி இதுவாகும் என்று எதிரே வந்து எழுந்தருள வேண்டும் எழுந்தருள வேண்டும் என்று எச்சரிக்கை இட்டு இரண்டு பக்கங்களிலும் நின்று கொண்டு கூறினார்கள்.

வி - கு :—உலகர்கள் தமர் முன்னே வந்து தூபம் ஏந்தி மலர் மழை பொழிந்து தொழுதனர், முனிவர்கள் எதிரே வந்து வைகுந்தர்க்கு வழி இது என்று எழுமின் என்று இருமருங்கு இசைத்தனர் என்க. பொழிவனர்: முற்றெச்சம்.

ஈடு :—மூன்றும் பாட்டு. [1]ஆதிவாஹிக லோகங்களில் உள்ளார் எதிரே வந்து மலர் மழையைப் பொழிந்து கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார்.

உலகர்கள் தூப நல் மலர் மழை பொழிவனர் தொழுதனர்- ஆதிவாஹிக லோகங்களிலுள்ளார், கைபடைத்த பிரயோஜனம் பெற்றோம் என்று, தூபத்தையும் நல்ல மலர் மழையையும் பொழிந்து தொழாநின்றார்கள். அன்று பூமி அளந்தவன் தமர் முன்னே - ஸ்ரீ வாமனனாய்த் திரு உலகு அளந்தருளின செயலுக்குத் தோற்று அடிமை புக்கவர்கள் என்று

1. முதல் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். ஆதிவாஹிக லோகங்கள் என்று சில உலகங்கள் உண்டு; அவ்வுலகங்களில் உள்ளவர்கள், வழி நடத்துகிறவர்கள் ஆவார்கள்; அவர்கள் எதிரே வந்து மலர்மாரி பொழிந்து கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார் இப் பாசுரத்தில்.

ஆயிற்று அவர்கள் ஆதரிக்கிறது. [1]"மூ அடி மண் கொண்டு அளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன் பயந்தேன்" என்னுமவர் போல்வார் உண்டே. [2] அவன் திரு உலகு அளந்தருளின நினைவைப் பயனுடைத்தாக ஆக்கினவர்கள் என்று ஆயிற்று அவர்கள் ஆதரிக்கிறது. எழுமின் என்று இருமருங்கு இசைத்தனர் முனிவர்கள் - இங்கே எழுந்தருளவேண்டும் என்று இரண்டு அருகும் நின்று சொன்னார்கள். [3]'**முனிவர்கள்**' என்றது, பேசலாகாது என்றிருந்தமை தவிர்ந்தமைக்கு அறிகுறி; [4]'மௌனத்துக்கு விஷயம் புறம்பே அன்றோ என்று இருந்தார்கள்.

வழி இது வைகுந்தர்க்கு என்று வந்து எதிரே - பரமபதம் செல்வார்க்கு வழி இது என்று எதிரே வந்து சொன்னார்கள். [5]"உலகத்திற்குப் பழமையானவை" என்கிறபடியே, குறித்தவர்கள் எல்லாரும் போகக்கூடியதாய்க் கிடக்கிற வழி, இன்று இது உண்டாகிறது அன்றே. "பாகவதர்கள் விஷயத்தில் தொண்டு செய்து நாம் நிலைபெற வேண்டும்" என்று எதிரே தந்தாமுடைய எல்லைகளைக் கடந்து வந்து ஆதரித்தார்கள். வைகுந்தர்க்கு - [6] வேறு தேசத்திற்குச் சென்றிருந்த அரசன்

1. திருஉலகு அளந்த செயலுக்குத் தோற்றிருப்பார் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "மூவடி மண்" என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 9. 4 : 2.

2. இங்ஙனம் கூறியதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி. என்றது, திருஉலகு அளக்கும் இச்செயலுக்குத் தோற்று யாரேனும் அடிமை புக்கு உஜ்ஜீவிப்பார்களோ என்னும் நினைவாலே ஆயிற்று, அவன் திரு உலகு அளந்தருளிற்று; இவர்கள் அப்படிச் செய்தால் அவன் நினைவு பிரயோஜனத்தோடு கூடியதாயிற்று என்றபடி.

3. "முனிவர்கள்" என்று விசேடித்து, "இசைத்தனர்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'முனிவர்கள்' என்று தொடங்கி.

4. முனிவர்கள் மௌனவிரதத்தைத் தவிரலாமோ? என்ன, 'மௌனத்துக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. எல்லார்க்கும் பிரசித்தமான வழியை இவர்கள் சொல்லுகிறது என்? என்ன, 'உலகத்திற்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

> ஶுக்ல க்ருஷ்ண கதீஹ்யேதே ஜகதஃ ஶாஶ்வதே மதே
> ஏகயா யாதி அநாவ்ருத்திம் அந்யயாவர்த்ததே புநஃ.

என்பது, ஸ்ரீ கீதை, 8 : 26.

6. "வைகுந்தர்க்கு" என்பதற்கு, வைகுந்தம் போவார்க்கு என்று பொருள் அருளிச்செய்தார் மேல். இப்பொழுது, வைகுந்தத்திலுள்ளவர்கள் என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, இங்கு நின்றும் போமவர்களை இங்ஙனம் சொல்லுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வேறு தேசத்திற்கு' என்று தொடங்கி.

தன் தேசத்திலே புகுமாறு போலே, அங்கு நின்றும் பிறி கதிர்ப்பட்டுப் போந்தாராய் இருக்கிறபடி. பூமி அன்று அளந்தவன் தமர் முன்னே - தூப நன் மலர் மழை பொழிவனராய்க் கொண்டு முனிவரான உலகர்கள் தொழுதனர்; வைகுந்தர்க்கு வழி இது என்று எதிரே வந்து எழுமின் என்று இரு மருங்கு இசைத்தனர் என்க. (3)

1084.

எதிர் எதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர்;
கதிரவர் அவர் அவர் கைந்நிரை காட்டினர்;
அதிர் குரல் முரசங்கள் அலை கடல் முழக்கு ஒத்த;
மது விரி துழாய் முடி மாதவன் தமர்க்கே.

பொ - ரை :—தேனோடு மலர்கின்ற திருத் துழாயினைத் தரித்த திருமுடியையுடைய மாதவனுடைய அடியார்களுக்கு, தேவர்கள் முன்னே முன்னே தங்கி இருப்பதற்கு இடம் வகுத்தார்கள், பன்னிரண்டு சூரியர்களும் பார்க்க வேண்டும் பார்க்க வேண்டும் என்று கைகளைக் காட்டிக்கொண்டே சென்றார்கள்; அவர்களால் அடிக்கப்பட்டு ஒலிக்கின்ற முரச வாத்தியங்கள் அலைகளையுடைய கடலின் முழக்கத்தினை ஒத்திருந்தன.

வி - கு :—மாதவன் தமர்க்கு இமையவர் எதிர் எதிர் இருப்பிடம் வகுத்தனர், கதிரவர் கைந்நிரை நீட்டினர், முரசங்கள் முழக்கு ஒத்த என்க.

ஈடு :—நான்காம் பாட்டு. [1] மேலே உள்ள உலகங்களில் தேவர்கள், இவர்கள் போகிற வழிகளிலே தங்குகைக்குத் தோப்புக்கள் சமைத்தும் வாத்தியம் முதலானவற்றால் ஒலியை உண்டாக்கியும் கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார்.

எதிர் எதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர் - [2] பார்த்த பார்த்த இடம் எங்கும், [3] 'இவர்கள் இங்கே தங்கிப் போவர்

1. முதல் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "எதிர் எதிர்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பார்த்த பார்த்த இடமெங்கும்' என்று தொடங்கி.

3. இருப்பிடம் வகுப்பதற்குப் பிரயோஜனத்தை அருளிச்செய்கிறார் 'இவர்கள்' என்று தொடங்கி.

களோ? இங்கே தங்கிப் போவர்களோ?' என்னும் நசையாலே தேவர்கள் தோப்புச் சமைத்தார்கள். [1] இமையவர் என்றது, இயற்கையைச் சொன்னது அன்று; தோப்புச் சமைக்கையில் உண்டான விரைவாலே கண்விழித்திருக்கிறபடியைச் சொல்லு கிறது. [2] இளையபெருமாள் அடிமை செய்கைக்கு உறுப்பாக உறங்காதிருந்தது போன்று. [3] இவர்கள் அங்கே புக்குத் தங்கு கிறார்கள் அன்று; தங்கள் தங்களுடைய சொரூப லாபத்திற்குத் தொண்டு செய்கிறபடி அன்றோ இது; [4] அரசர்கள் ஒருகால் கண்டு சிரித்து 'அழகிது' என்று போகைக்காக மாநாவி சமைப்பாரைப் போலே. கதிரவர் அவர் அவர் கை நிரை காட்டி னர் - [5] சூரியர்கள் நிலைவிளக்குப் போலே 'இங்ஙனே எழுந் தருள, இங்ஙனே எழுந்தருள, பார்த்தருள, பார்த்தருள' என்று கைகளை நிரையே காட்டினார்கள். அன்றிக்கே, அர்ச்சி ராதிகளான ஆதிவாஹிக கூட்டங்களாகவுமாம்.

அதிர் குரல் முரசங்கள் அலைகடல் முழக்கு ஒத்த-[6] அங்கே கால் தாழ்வர்கள் என்று, அது கேளாதபடி, அதிராநின் றுள்ள ஒலியையுடைய முரசங்கள், அலையையுடைய கடல் போலே முழங்கிற்றின; அன்றியே, [7] இங்கே தங்குகையில் உண்டான ஆசையின் மிகுதி தோற்ற வாத்தியங்களை ஒலிக்கச் செய்தார்கள் என்றுமாம். மது விரி துழாய் முடி மாதவன்

---

1. "இமையவர்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இமையவர்' என்று தொடங்கி.

2. அதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'இளையபெருமாள்' என்று தொடங்கி.

3. போகும் இவர்கள் அங்குத் தங்குவர்களோ? என்ன, 'இவர்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. இதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அரசர்கள்' என்று தொடங்கி. மாநாவி சமைக்கை - மஹா நவமி உத்சவத்துக்கு அரண்மனை வாசல்களிலே அலங்காரம் செய்தல்.

5. "கதிரவர்" என்று ஒளியைக் கொண்டு விசேடித்துக் கூறுவதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சூரியர்கள்' என்று தொடங்கி. 'நிலை விளக்குப் போலே' என்றது, "கதிரவர்" என்ற சொல்லை நோக்கி.

6. 'அங்கே கால் தாழ்வர்' என்றது, இமையவர்கள் வகுத்த இருப் பிடத்தே தங்குவார்கள் என்று நினைத்து என்றபடி.

7. 'இங்கே தங்குகையில்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, இருப்பிடம் வகுத்த இமையவர்களே முரசங்களையும் ஒலிப்பித்தார்கள் என்பது.

தமர்க்கே - [1] கொட்டு ஓசையாலும், ஆள்கள் எதிரே சென்று சொல்லுகையாலும், சென்ற இவர்களுக்கு ஒப்பித்தபடியே கொடுக்கைக்காகப் பிராட்டியோடே கூட அழித்து அழித்து ஒப்பிக்கிறபடி. மாதவன் தமர்க்கே - [2] பிராட்டியினுடைய புருஷகார மூலமாகப் பற்றினவர்கள் பிராட்டி முன்னாக அடிமைசெய்கைக்கு வாராநின்றார்கள் என்று ஒப்பிக்கிறபடி. திருமகள்கேள்வனுடையஒப்பனை அழகிலே அகப்பட்டுஅடிமை புக்கவர்களுக்கு என்னுதல்.

[3] இங்கு '**வைஷ்ணவர்கள்**' என்றதுவே காரணமாகப் பங்கு பெறாதே திரியுண்ட வைஷ்ணவர்களை அங்குள்ளார் எதிர் கொண்டு இருப்பிடங்கள் கொடுக்கிறபடி! மிளகாழ்வான் படை வீட்டிலே அகரத்துக்குச் செல்ல, '**நீ ஆந்தராளிகன்; உனக்குப் பங்கு இல்லை**' என்ன, 'நன்மையில் குறை உண்டாய்ச் சொல்லுகிறீர்களோ, அன்றோ' என்ன, 'நன்மையில் குறை இல்லை, இது அன்றோ காரணம்' என்ன, 'நம் நெஞ்சில் இல்லையாகிலும் இவர்களால் வைஷ்ணவன் என்று கைவிடப் பெற்றோம் அன்றோ' என்று புடைவையை முடிந்து எறட்டுக் கூத்தாடினார். (4)

---

1. "மது விரி துழாய் முடி" என்ற விசேஷணத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கொட்டோசையாலும்' என்று தொடங்கி.

2. மேலே பிராட்டியும் தானுமாக ஒப்பித்தபடியைச் சொல்லி, தானே ஒப்பனை செய்கிறான் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'பிராட்டியினுடைய' என்று தொடங்கி.

3. மனிதர்களுக்கு மேலான தேவர்கள் வைணவர்களுடைய சீர்மையினை அறிந்து உபசரிக்கிறபடியையும், இங்கே எத்தனை தண்ணியராயிருப்பவரும் வைணவர்களை அவமானம் செய்கிறபடியையும் அநுசந்தித்து வியாக்யாதா ஈடுபடுகிறார் 'இங்கு' என்று தொடங்கி. என்றது, மிளகாழ்வான் என்னும் பெரியார் ஒருவர், அரசன் புலவர்களுக்கு எல்லாம் கிராம பூமிகள் தானம் வழங்குகிறான் என்று கேள்விப்பட்டு, தாமும் வித்வானாகையாலே தமக்கும் அவை கிடைக்கக் கூடும் என்று எண்ணி அவ் அரசனிடம் சென்றார்; அரசன் சைவப் பற்றுடையவனாகையாலே உமக்கு ஒன்றும் தாரேன் என்றான்; 'தாரேன் என்பது என்? எனக்குத் தர்க்கம் தெரியாதா? மீமாம்சை தெரியாதா? வியாகரணம் தெரியாதா? எந்தச் சாஸ்திரம் வேண்டுமாகிலும் பரீட்சை செய்துகொள்' என்றார்; அரசன், 'உமக்குப் பாண்டித்தியத்தில் ஒன்றும் குறையில்லை, மஹாவித்வான் என்பது அறிவேன், ஆயின், நீர் வைஷ்ணவராகையாலே தரமாட்டேன்' என்றான்; அது கேட்டு மிளகாழ்வான் 'உண்மையில் நமக்கு வைஷ்ணவத்வம் இல்லையாகிலும் இவன் எண்ணத்தினாலாவது வைஷ்ணத்வம் நமக்கு உண்டாகப் பெற்றதே' என்று ஆனந்தக் கூத்தாடினார் என்பதனைத் தெரிவித்தபடி. அகரம் - அக்கிரகாரம். ஆந்தராளிகன் - நடுவே இருப்பவன்; சம்சாரிகளிலும் சேராது முக்தர்களிலும் சேராது நடு நிலையில் இருக்கிற முமுக்ஷு என்றபடி.

1085.

மாதவன் தமர் என்று, வாசலில் வானவர்
போதுமின், எமது இடம் புகுதுக என்றலும்,
கீதங்கள் பாடினர் கின்னரர், கெருடர்கள் ;
வேத நல் வாயவர் வேள்வியுள் மடுத்தே.

பொ - ரை :—திருமகள்கேள்வனுடைய அடியார்கள் என்று போகும் வழியிலே தேவர்கள் எங்கள் இடத்திற்கு எழுந்தருள வேண்டும், எங்கள் அதிகாரத்தைக் கைக் கொள்ளுதல் வேண்டும் என்ற அளவிலே, வேதங்களை ஓதுகின்ற நல் வாயினையுடைய முனிவர்கள் யாகத்தைச் செய்ததனாலாய பயனை அவர்கள் திருவடிகளில் சமர்ப்பிக்க, கின்னரர்களும் கெருடர்களும் கீதங்களைப் பாடினார்கள்.

வி - கு :—வானவர் புகுதுக என்றலும், வேத நல் வாயவர் வேள்வியுள் மடுக்கக் கின்னரர் கெருடர்கள் கீதங்கள் பாடினர் என்க. வாசல் - முற்றமும் ஆம். மடுத்து : எச்சத் திரிபு; மடுக்க என்பது பொருள்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [1] ஆதிவாஹிக தலைவர்களான வருணன் இந்திரன் முதலானவர்களும் மற்றும் உள்ளாரும் இவர்களுக்குச் செய்யும் உபசாரங்களை அருளிச்செய்கிறார்.

மாதவன் தமர் என்று - பிராட்டி புருஷகாரமாகப் பற்றின அந்தப்புரத்திற்கு உரியவர்கள்அன்றோ என்று ஆயிற்று அவர்கள் சொல்லுவது ; பிரஹ்மசாரி எம்பெருமானைப் பற்றினவர்கள் அன்றே. [2] வாசலில் வானவர் - வழியில் தேவர்கள்; வாசல் - வழி. அவர்கள் ஆவார் : - வருண் இந்திர பிரஜாபதிகள். போதுமின் எமது இடம் புகுதுக என்றலும் - ‘இங்ஙனே எழுந்தருள வேண்டும், எங்கள் அதிகாரங்களைக் கைக்கொள்ள வேண்டும்’ என்று வேண்டிக் கொள்கிற அளவிலே. கின்னரர் கெருடர்கள் கீதங்கள் பாடினர் - கிந்நரர்களும் கெருடர்களும் பாட்டுக்களைப் பாடினார்கள். [3] கிந்நர தேசத்தில்

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். ‘முதலானவர்கள்’ என்றது, கின்னரர் கெருடர்களை.

2. “வாசலில் வானவர்” என்றது, இந்திரன் முதலாயினோர்களைக் குறிக்குமாறு யாங்ஙனம்? என்ன, மேலே “எமதிடம் புகுதுக” என்று எங்கள் அதிகாரங்களைக் கைக் கொள்ளவேண்டும் என்கையாலே, அதிகாரத்தைச் செலுத்துமவர்கள் அவர்கள் ஆகையாலே என்க.

3. கின்னரதேசம் என்றும், கெருடதேசம் என்றும் மேலே சில நாடுகள் உளவாம்.

உள்ளாரும் கௌட தேசத்தில் உள்ளாரும் பாடினார்கள். வேத நல் வாயவர் வேள்வியுள் மடுத்தே-மேலே உள்ள உலகங்களில் வைதிகராய்க் கொண்டு யாகங்களைச் செய்கின்றவர்கள் தங்கள் யாகங்களின் பலன்களை இவர்கள் திருவடிகளிலே சமர்ப்பித்தார்கள். [1] விருப்பம் இல்லாதவராகப் போகின்ற இவர்களுக்குத் தம் தம் அதிகாரங்களைக் கொடுப்பார், பாடுவார், யாகத்தின் பலன்களைச் சமர்ப்பிப்பார் ஆகிறார்கள் தங்கள் தங்கள் விருப்பத்தாலே. அதனைக் கேட்டு [2] "ஒரு முனிவர் மகிழ்ந்து அவர்களுக்குக் கலசத்தைக் கொடுத்தார், புகழ்பெற்ற மற்றொரு முனிவர் எதிரே வந்து மரவுரியைக் கொடுத்தார்" என்கிறபடியே தங்கள் தங்களுக்கு உள்ளனவற்றைக் கொடுக்குமத்தனை அன்றோ. (5)

1086.

வேள்வி உள்மடுத்தலும், விரை கமழ் நறும் புகை,
காளங்கள், வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர் ;
ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமர் என்று,
வாள் ஒண் கண் மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே.

பொ - ரை :—வைதிகர்கள் தம் தம் யாகத்தால் ஆய பயனைச் சமர்ப்பித்த அளவில், ஒரு சிலர் வாசனை வீசுகின்ற நல்ல புகையை எங்கும் பரவும்படி செய்தார்கள் ; வேறு சிலர், காளங்களையும் வலம்புரிச் சங்கங்களையும் எல்லா இடங்களிலும் ஒலிக்கச் செய்தனர் ; வாள் போன்று ஒள்ளிய கண்களையுடைய பெண்கள் மகிழ்ந்து சர்வேஸ்வரனுடைய அடியார்களாகிய நீங்கள் வானகத்தை ஆளுங்கோள் என்று வாழ்த்துக் கூறினார்கள்.

---

1 மோக்ஷ பலத்தைப் பெறப் போகிறவர்களுக்குச் சிறிய பலத்தைக் கொடுத்தால் அங்கீகரிப்பர்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'விருப்பமில்லாதவராக' என்று தொடங்கி. என்றது, முத்திக்குச் செல்லுமவர்கள் ஒன்றையும் விரும்பாராயினும், அங்கே கொடுப்பாரும் பாடுவாரும் சமர்ப்பிப்பாருமாக அவர்கள் நிற்பது அவரவர்கள் சத்தை பெறுவதற்காக என்றபடி.

2. அப்ராக்ருதமான பரமபதத்தை விரும்பிப் போகிறவர்களுக்கு ஆபாசமான இவை தக்கன ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒரு முனிவர்' என்று தொடங்கி.

ப்ரீத: கஶ்சித்முநி: தாப்யாம் ஸம்ஸ்தித: கலஶம் ததௌ
ப்ரஸந்த: வல்கலாம் கஶ்சித் ததௌ தாப்யாம் மஹாயஶா:.

என்பது, ஸ்ரீராமா. பால. 4 : 20.

வி - கு :—மடுத்தலும் சிலர் இசைத்தனர், மடந்தையர் மகிழ்ந்து வானகம் ஆண்மின்கள் என்று வாழ்த்தினர் என்க.

ஈடு :—ஆறும் பாட்டு. [1] உபசரித்தல் முன்னாகத் தெய்வப் பெண்கள் உகந்து இவர்களை வாழ்த்தினார்கள் என்கிறார்.

[2]வேள்வி உள்மடுத்தலும்-அவர்கள் தம்முடைய யாகத்தின் பலன்களைச் சமர்ப்பித்த அளவிலே, வேறே சிலர், விரை கமழ் நறும் புகை - வாசனை மிக்கிருந்துள்ளமையால் விரும்பத் தக்கனவான அகில் தொடக்கமான பொருள்களைக் கொண்டு நல்ல புகைகளை உண்டாக்கினார்கள். காளங்கள் வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர் - அவர்கள் கொடுக்கிறவற்றை இவர்கள் கைக்கொள்ளுகிற அளவிலே, வேறே சிலர், காளங்களையும் வலம்புரிகளையும் கலந்து ஒலிக்கச் செய்தார்கள். கலந்து எங்கும் இசைத்தலாவது, மாறி மாறி எங்கும் ஒக்க ஒலிக்கச்செய்தல். ஆழியான் தமர் ஆண்மின்கள் வானகம்- 'சர்வேஸ்வரனுக்கு அடியவர்களான நீங்கள் இவ்விடத்தை ஆளீர்கோள்' என்றாயிற்றுத் துதிப்பது. [3]அவன் தானும் தன் விபூதியைப் "பக்தர்களுக்காகவே" என்றே அன்றோ எண்ணி இருப்பது. ஆளுகைக்குக் குறை என்? என்பர்கள். வாள் ஒண் கண் மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே - ஆதிவாஹிக தலைவர்களுடைய மனைவிமார்கள் வாழ்த்தினார்கள். [4] வேறு தேசத்துக்குப் போன குழந்தையைத் தாய்மார் குளிரப் பார்க்குமாறு போலே, ஒளியையுடைத்தாய் அழகிய கண்களாலே குளிர நோக்கினபடி. கணவன்மார்கள் பணி செய்கையாலே நாமும் செய்யத் தகும் என்று கருதிச் செய்கிறார்கள் அன்று, பிரீதியாலே செய்கிறார்களாதலின் 'மகிழ்ந்து' என்கிறார். [5]இங்குப் பகவானுடைய சம்பந்தமே காரணமாக நீசராலே பரி

1. ஈற்றடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "வேள்வி உள்மடுத்தலும்" என்ற இது, அநுவாதம்.

3. ஈஸ்வரனுடைய உலகத்தை இவர்கள் கொடுக்கலாமோ? என்ன, 'அவன் தானும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

நதேரூபம் நசாகாரః நாயுதாநி ந சாஸ்பதம்
ததாபி புருஷாகாரః பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே.

என்பது, ஜிதந்தா. 5.

4. "வாள் ஒண் கண் மடந்தையர்" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'வேறு தேசத்துக்கு' என்று தொடங்கி.

5. வியாக்யாதாவின் ஈடுபாடு, 'இங்கு' என்று தொடங்கும் வாக்கியம்.

பவம் செய்யப்பட்டவன், சரீரத்தைவிட்டுப் பிரிந்த காலத்தில் தங்களுக்கு மேலே ஒருவர் இல்லாதாரான தேவர்கள் கொண்டாடும்படி அன்றோ இவன் பேறு. (6)

1087.

மடந்தையர் வாழ்த்தலும், மருதரும் வசுக்களும்
தொடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர்; தொடுகடல்
கிடந்த எம் கேசவன் கிளர் ஒளி மணி முடி
குடந்தை எம் கோவலன் குடி அடியார்க்கே.

பொ - ரை :—பெண்கள் வாழ்த்திய அளவிலே, தோண்டப்பட்ட கடலிலே சயனித்திருக்கிற எம் கேசவனும், கும்பகோணத்தில் சயனித்திருக்கின்ற கிளர்ந்து விளங்குகின்ற மாணிக்கங்கள் பதித்த கிரீடத்தைத் தரித்த எம் கோவலனுமான எம்பெருமானுடைய குடி அடியவர்களுக்குத் தெய்வப் பெண்கள் பல்லாண்டு பாடின அளவிலே, மருதரும் வசுக்களும் எல்லா இடங்களிலும் தொடர்ந்து வந்து தோத்திரத்தைப் பாடினார்கள் என்கிறார்.

வி - கு :—தொடுதல்-தோண்டுதல்; சகரரால் தோண்டப்பட்டது என்றபடி. கோவலன் - கோபாலன் என்ற சொல்லின் சிதைவு என்பர் அடியார்க்கு நல்லார். குடி அடியார் - ஏழாட்காலும் பழிப்பிலாத தொண்டக் குலத்தில் பிறந்தவர்கள்.

ஈடு ;—ஏழாம் பாட்டு. [1]மருத்துக் கணங்களும் வசுக் கணங்களும் தங்கள் எல்லைக்கு இப்பாலும் தொடர்ந்து சென்று இவர்களைத் துதிசெய்தார்கள் என்கிறார்.

மடந்தையர் வாழ்த்தலும் - அத் தெய்வப் பெண்கள் புகழ்ந்த அளவிலே. மருதரும் வசுக்களும் - மருத்துக் கணங்களும் வசுக் கணங்களும். எங்கும் தொடர்ந்து-[2]தங்கள் எல்லைக்கு அப்பால் செல்லலாம் இடம் எங்கும் சென்று. தோத்திரம்

---

1. "மருதரும் வசுக்களும் தொடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். மீண்டும் "மடந்தையர் வாழ்த்தலும்" என்றது, அந்த வாழ்த்துதலில் உண்டான ஆதரத்தின் மிகுதியைக் காட்டுகிறது.

2. "எங்கும் தொடர்ந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தங்கள் எல்லைக்கு' என்று தொடங்கி.

சொல்லினர் - புகழ்ந்தார்கள். [1] ஒரு கண நேரத்தில் ஓர் உலகத்தில் நின்றும் வேறு உலகத்து ஏறப் போமவர்கள் ஆகையாலே, தங்கள் எல்லைக்குள்ளில் புகழ்ந்த அளவால் மனம் நிறைவு பிறவாமையாலே தொடர்ந்து புகழ்கின்றார்கள் ஆதலின் '**எங்கும் தொடர்ந்து**' என்கிறார். அவர்கள்தாம் சடக்கு எனப் போகிற இதற்கு அடி என்? என்னில், [2] தாங்கள், "கண்ணன் விண்ணூர் தொழவே சரிகின்றன சங்கம்" என்றும், "காண்பது எஞ்ஞான்று கொலோ" என்றும், "மாக வைகுந்தம் காண்பதற்கு என் மனம் ஏகம் எண்ணும்" என்றும், "உடன் கூடுவது என்று கொலோ" என்றும் இருக்கையாலும், [3] "நான் பிராட்டியைப் பிரிந்து கண நேரமும் உயிர் வாழேன்" என்று இருக்குமவன் கருத்து அறியுமவர்கள் ஆகையாலும் ஆம்.

தொடு கடல் கிடந்த - பரமபதத்தைக் கலவிருக்கையாக வுடையவன், அதனைவிட்டு, பிரமன் முதலாயினோர்கட்கு முகம் கொடுக்கைக்காகத் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளினபடி. தொடு கடல் - தோண்டப்பட்ட கடல்; [4] ஆழ்ந்த கடல் என்றபடி. எம் கேசவன் [5] குடந்தை எம் கோவலன் -

---

1. தொடர்ந்து தோத்திரம் செய்வதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'ஒரு கணநேரத்தில்' என்று தொடங்கி.

2. 'தாங்கள்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து என்? என்னில், அவனையும் பரமபதத்தையும் நித்தியசூரிகளையும் காணவேண்டும் என்ற வேட்கை மிகுதியாலும், அவன் கருத்து அறியுமவர்கள் ஆகையாலும் விரைந்து செல்கின்றார்கள் என்பது.

"கண்ணன்" என்பது, திருவிருத்தம், செய். 47.
"காண்பது" என்பது, திருவாய்மொழி, 5. 9 : 6.
"மாக வைகுந்தம்" என்பது, திருவாய்மொழி, 9. 3 : 7.
"உடன் கூடுவது" என்பது, திருவாய்மொழி, 2. 3 : 10.

3. சிரம் ஜீவதி வைதேஹீ யதி மாஸம் தரிஷ்யதி
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்.
என்பது, ஸ்ரீராமா. சுந். 66 : 10.

4. "தொடு கடல்" என்றதனால் போந்த பொருளை அருளிச்செய்கிறார் 'ஆழ்ந்த கடல்' என்று.

5. "குடந்தை எம் கோவலன் குடி அடியார்க்கே" என்னும் இதனால், அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதத்திற்குச் செல்லும் காலத்திலும் மறக்க முடியாதபடி திருக் குடந்தையின் அநுபவம் செல்லாநின்றது ஆழ்வார்க்கு என்பது அறிதல் தகும். ஸ்ரீமந் நாதமுனிகள் திவ்யப்பிரபந்தத்தைப் பெறுதற்குத் திருக் குடந்தை விஷயமான "ஆராவமுதே" என்ற திருவாய்மொழியே மூலகாரணமாக இருந்தது என்பது சரிதவரலாறு. திருமங்கை

அடியார்களுக்காகக் கிருஷ்ணனாய் வந்து அவதரித்துப் பாது காத்தவன். அவதாரத்துக்குப் பிற்பாடர் இழவாதபடி திருக் குடந்தையிலே திருக் கண்வளர்கிறவன். கிருஷ்ணன் தானே வந்து திருக் குடந்தையிலே திருக்கண் வளர்கிறான் என்கிறது. கிளர் ஒளி மணி முடி - மிக்க ஒளியையுடைத்தாய், ஆதி ராஜ்ய சூசகமான திருமுடி. மருதரும் வசுக்களும், அவன் சென்று செய்த கிருஷியின் பலம் அன்றோ என்று கொண்டாடாநிற் பர்கள். வியூக விபவங்களின் அளவு அன்றிக்கே திருக் குடந் தையிலே திருக் கண் வளர்கிற நீர்மையிலே தோற்றுப் பரம் பரையாக எழுதிக் கொடுத்தவர்கள் அன்றோ இவர்கள் என்று ஆயிற்று அவர்கள் ஆதரிப்பது. (7)

1088.

குடி அடியார் இவர் கோவிந்தன் தனக்கு என்று,
முடி யுடை வானவர் முறை முறை எதிர்கொள்ள,
கொடி அணி நெடு மதிள் கோபுரம் குறுகினர்;
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே.

பொ - ரை :—இவர்கள், கிருஷ்ணனுக்குக் குடி குடியாக அடிமைப் பட்டவர்கள் என்று சேஷத்வத்துக்குச் சூடின முடியையுடைய நித்திய சூரிகள் 'நல் வரவாகுக' என்று சொல்லி வரிசை வரிசையாக எதிர் கொள்ள, அலங்காரம் பொருந்திய வடிவினையுடைய மாதவன் எழுந் தருளியிருக்கின்ற வைகுண்டலோகத்திலே புகுதற்கு உறுப்பாக, கொடிகள் கட்டப்பட்ட அழகிய நீண்ட மதிள்கள் சூழ்ந்த கோபுரத் தைச் சார்ந்தனர்.

வி - கு :—எதிர்கொள்ள, வைகுந்தம் புக, கோபுரம் குறுகினர் என்க. முடியுடை வானவர் - நித்தியசூரிகள்.

மன்னனும் தம்முடைய திருமொழியில் முதல் திருப் பதிகத்திலேயே "தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும் சூழ் புனற் குடந்தையே தொழுது" என்றும், "சொற்பொருள் ஆளீர்! சொல்லுகேன் வம்மின்; சூழ் புனற் குடந் தையே தொழுமின்" என்றும், சரமப் பிரபந்தமான திருநெடுந் தாண்டகத்தின் முடிவிலும் "தண் குடந்தைக் கிடந்த மாலை நெடியானை அடி நாயேன் நினைந் திட்டேனே" என்றும் அருளிச்செய்தனர். மேலும் 'திரு எழு கூற்றிருக்கை' என்ற பிரபந்தம் ஒன்றையும் திருக்குடந்தை விஷயமாகவே அருளிச் செய்தனர்,

ஈடு :—எட்டாம் பாட்டு. [1] இவ் உலகங்கட்கு எல்லாம் அவ்வருகே பரமபதத்துக்குப் புறம்பாக நித்தியசூரிகள் இவர்களை எதிர்கொள்ளுகிற படியை அருளிச்செய்கிறார்.

[2] கோவிந்தன் தனக்கு இவர் குடி அடியார் என்று - அவனுடைய எளிமையிலே தோற்று, உற்றார் உறவினர்களோடு எழுதிக்கொடுத்தவர்கள் என்றாயிற்று, நித்தியசூரிகள் ஆதரிப்பது. "குடந்தை எம் கோவலன் குடி அடியார்" என்றது, மேலே. "குடி அடியார் இவர் கோவிந்தன் தனக்கு" என்றது, இங்கே. இதற்குக் கருத்து என்? என்னில், 'இவர்கள் அவதாரங்களைப் பற்றினவர்கள், இவர்கள் உகந்தருளின நிலங்களைப் பற்றினவர்கள்' என்று ஆயிற்று, அவர்கள் சிறப்பிப்பது. முடியுடை வானவர்-[3]அவனைப் போன்றே பெருமையில் குறைவு அற்றவர்கள் ஆயிற்று, இவர்களை ஆதரிப்பவர்கள். திருமுடி அவனுக்கும் நித்தியசூரிகளுக்கும் ஒக்குமாகில் வாசி என்? என்னில், அவன் பாதுகாப்பதற்கு முடி சூடி இருப்பன், இவர்கள் அடிமை செய்கைக்கு முடி சூடி இருப்பர்கள். முறை முறை எதிர் கொள்ள - வகை வகையாகத் தரம் தப்பாமல் எதிர் கொள்ள. [4]"எவ்விடத்தில் முன்னோர்களும் பற்றத் தக்கவர்களும்" என்றும், [5]"அடியார்கள் குழாங்களை" என்றும், சொல்லுகிறபடியே, தங்களுக்கு உத்தேசியர் ஆனவர்களுக்கு உத்தேசியர் ஆகிறார்கள் அன்றோ இவர்கள்.

[6]கொடி அணி நெடு மதிள் கோபுரம் குறுகினர்-இவர்கள் வருகிறார்கள் என்று, கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருப்

---

1. இரண்டாம் அடியினைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். பிரகிருதி மண்டலத்துக்கு அப்பால் பரமபதத்திற்கு இப்பால் நித்தியசூரிகள் இவர்களை எதிர்கொள்ளும்படியை அருளிச்செய்கிறார் இத் திருப்பாசுரத்தில்.

2. மேல் பாசுரத்தில் அர்ச்சாவதாரத்தில் ஈடுபாட்டினைக் கருதி உபசரித்தார்கள் என்றார். அவதாரத்தில் ஈடுபாட்டினைக் கருதி உபசரிக்கிறார்கள் என்கிறார் இப் பாசுரத்தில்.

3. "முடியுடை வானவர்" என்று விசேடிப்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனைப் போன்றே' என்று தொடங்கி.

4. வியாக்யாதாவின் ஈடுபாடு 'எவ்விடத்தில்' என்று தொடங்கும் வாக்கியம்.

"யத்ர பூர்வே ஸாத்யாঃ" என்பது, புருஷ சூக்தம்.

ஸாத்யாঃ என்கையாலே உத்தேசியர் என்கிறது.

5. திருவாய்மொழி, 2. 3: 10.

6. "கொடி அணி" என்றது, இயற்கை அன்று; அபிப்பிராயத்துடன் கூடியது என்கிறார் அரும்பத உரைகாரர்.

பதாய் ஒக்கத்தையுடைத்தாய்ப் பரமபதத்துக்கு எல்லையான திருமதிளில் திருக் கோபுரத்தைச் சென்று கிட்டினர்கள். வடிவுடை மாதவன் - [1]"கிழத் தன்மையை விட்டு வசுதேவன் காளைப் பருவத்தை யடைந்தான்" என்கிறபடியே, கம்சனைக் கொன்ற பின்பு பிள்ளையைக் கண்ட ஸ்ரீ வசுதேவரையும் தேவகியாரையும் போலவும், பெருமாளைக் கண்ட சக்கரவர்த்தி "மீண்டு இளமைப் பருவத்தை அடைந்தார்" என்று சொல்லப்பட்டாற் போலவும், வடிவுடை மாதவன். அன்றிக்கே, [2]தங்கள் வரவால் உண்டான உவகையாலே புதுக்கணித்த வடிவையுடைய திருமகள் கேள்வன் என்னுதல். வைகுந்தம் புக-பரமபதத்திலே புகுகைக்காக. [3]வந்து கிட்டினர் என்றவாறே, தனக்கும் பிராட்டிக்கும் வடிவு இட்டு மாறினாற் போலேயாம் என்றபடி. (8)

1089.

வைகுந்தம் புகுதலும், வாசலில் வானவர்
வைந்தன் தமர் எமர், எமது இடம் புகுத என்று
வைகுந்தத்து அமரரும் முனிவரும் வியந்தனர்;
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே.

போ - ரை :—பரமபதத்தின் திருவாசலை அடைந்த அளவிலே திருவாசலைக் காக்கும் திருமுதலிகள், வைகுந்தநாதனிடத்தில் விருப்பமுள்ளவர்கள் எமக்கும் உத்தேசியர் ஆவர்; எங்கள் அதிகாரத்திலே புகுர வேண்டும் என்று விரும்பினர்கள்; வைகுந்தத்திலே இருக்கிற அமரர்களும் முனிவர்களும் பூ உலகில் உள்ளவர்கள் பரமபதத்தை அடைவது என்ன புண்ணியமோதான் என்று விரும்பி ஆதரித்தார்கள்.

---

1. "வடிவுடை" என்றதும் தம்முடைய அபிப்பிராயம் என்கிறார் 'கிழத் தன்மையை' என்று தொடங்கி.

மஹோத்ஸவம் இவ ஆஸாத்ய புத்ராநந விலோகநம்
யுவேவ வஸுதேவ: அபூத் விஹாய அப்யாகதாம் ஜராம்.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 20: 52.

நந்தாமி பஶ்யந்நபி தர்ஸநேந பவாமி த்ருஷ்ட்வாச புந:யுவேவ.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 12: 105.

2. "வடிவுடை மாதவன்" என்பதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'தங்கள் வரவால்' என்று தொடங்கி.

3. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'வந்து கிட்டினர்' என்று தொடங்கி.

41

வி-கு:—புகுத என்று என்பது, புகுது என்று வந்தது விகாரம். புகுத என்று வியந்தனர் என்றும், வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே என்று அமரரும் முனிவரும் வியந்தனர் என்றும், வியந்தனர் என்னும் சொல்லை ஈரிடத்தும் கூட்டுக.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [1] பரமபதத்திலே சென்று திருவாசலில் முதலிகளால் உபசரிக்கப் பட்டவர்களாக, அங்குள்ள நித்தியசூரிகள் 'பரமபதத்தில் வருவதே! இது என்ன புண்ணியத்தின் பலம்!' என்று ஈடுபட்டார்கள் என்கிறார்.

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர் - பரமபதத்தைச் சென்று கிட்டின அளவிலே திருவாசல் காக்கும் முதலிகள். வைகுந்தன் தமர் எமர் எமது இடம் புகுத என்று - 'ஸ்ரீவைகுண்ட நாதனுடையார் எங்களுடைய ஸ்வாமிகள், எங்கள் பதத்தினைக் கைக்கொள்ள வேண்டும்' என்று ஆயிற்று, அவர்கள் பாசுரம். [2]"பயிலும் திருவுடையார் எவரேலும் அவர், எம்மை ஆளும் பரமர்" என்ற இவ்வரைப் போலே ஆயிற்று, அங்குள்ளாரும் இருப்பது. என்றது, [3]திருவாசலில் முதலிகள், எதிரே வந்து உபசரித்து, கையைக் கொடுத்து, கொண்டு புக்குத் தங்கள் கைப்புடைகளிலே இருத்தி, திருக்கையிலே பிரம்பையும் கொடுப்பர்கள் ஆயிற்று என்றபடி. [4]சென்று புகுகிறவர்களுக்கும் அடிமை வேலையே உத்தேசியம், அங்கு இருக்கிறவர்களுக்கும் அடிமை வேலை செய்தலே தொழில் ஆகையாலே, இவர்கள் கொள்ளுவதும் அது; அவர்கள் கொடுப்பதும் அது. 'புகுத' என்றது, புகுதுக என்றபடி. வைகுந்தத்து [5]அமரரும் முனிவரும் - ஸ்ரீபரதாழ்வானையும் இளையபெருமாளையும் போலே, குண நிஷ்டரும் கைங்கரிய நிஷ்டரும். வியந்தனர் -

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இங்கு நின்றும் போகின்றவர்களை, நித்தியசூரிகள் "எமர்" என்னக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பயிலும்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 3. 7 : 1.

3. கைக் கொண்டால் அவர்கள் கொடுக்கும் வரிசையை அருளிச்செய்கிறார் 'திருவாசலில்' என்று தொடங்கி. கைப்புடை - வாசல்காப்பார் இருக்குமிடம்.

4. பிரம்பினைக் கொடுக்குமது ஓர் ஆச்சரியமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சென்று புகுகிறவர்களுக்கும்' என்று தொடங்கி.

5. அமரர் - கைங்கரிய நிஷ்டர். முனிவர் - குணநிஷ்டர். ஸ்ரீ பரதாழ்வான் - குணநிஷ்டர். இளையபெருமாள்-கைங்கரிய நிஷ்டர்.

ஈடுபட்டார்கள். வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே - கடலிலே உள்ள நீர் மலையிலே ஏறக் கோத்தாற் போன்று, இவ்வுலகிலே பிறவியிலே உழன்று திரிகின்றவர்கள் பரமபதத்திலே புகுரும்படிக்கு ஈடாகப் புண்ணியத்தைப் பண்ணுவதே! என்று ஆழங்காற் பட்டார்கள். (9)

1090.

விதி வகை புகுந்தனர் என்று நல் வேதியர்
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்;
நிதியும், நல் சுண்ணமும், நிறை குட விளக்கமும்
மதி முக மடந்தையர் ஏந்தினர் வந்தே.

பொ - ரை :—சிறந்த நித்தியசூரிகள் நாம் செய்து வைத்த புண்ணியத்தாலே இவர்கள் இவ்விடத்திற்கு வந்தார்கள் என்று தம் தம் இருப்பிடங்களிலே செய்ய வேண்டிய முறைப்படியே திருவடிகளை விளக்கினார்கள்; சந்திரன் போன்ற முகங்களையுடைய தெய்வப் பெண்கள் வந்து திருவடி நிலையையும் சிறந்த வாசனைப் பொடிகளையும் நிறை குடங்களையும் மங்கள தீபத்தையும் ஏந்தினார்கள்.

வி - கு :—நல் வேதியர், விதிவகை புகுந்தனர் என்று பாதங்கள் கழுவினர்; மடந்தையர் வந்து நிதியும் சுண்ணமும் நிறை குடமும் விளக்கமும் ஏந்தினர் என்க. வேதியர்-வேதங்களிலே சொல்லப்பட்டவர்கள்; நித்தியசூரிகள். நிதி - செல்வத்தைப் போன்றனவான திருவடி நிலைகள். நிறை குடமும் விளக்கமும் என்க. அன்றிக்கே, குடத்திலே ஏற்றிய விளக்குமாம்.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] நித்தியசூரிகள் இவர்களைக் கொண்டாடும்படியை அருளிச்செய்கிறார்.

விதி வகை புகுந்தனர் என்று - [2] "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே!" என்று இவர்கள் சொல்லுகிறது வார்த்தை அன்று என்று, வேறே சிலர் 'இவர்கள் இங்கே வந்து புகுரப் பெற்றது நாம் செய்த புண்ணியத்தின் பலம் அன்றோ?' என்பர்கள். என்றது, [3]விஷயங்கள் நடை ஆடுகிற

---

1. முதல் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "மண்ணவர் விதி" என்னுமல், பொதுவிலே "விதிவகை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வைகுந்தம்' என்று தொடங்கி.

3. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'விஷயங்கள்' என்று தொடங்கி. "விண்ணுளாரிலும்" என்பது, திருவிருத்தம், செய். 79.

இவ்வுலகத்திலே இருந்து வைத்து வேறு பயனைக் கருதாதவராய், பகவானுடைய குணங்களை அநுபவிக்கிற மஹா புருஷர்களாய் "விண்ணுளாரிலும் சீரியர்" எனப்படுகிற இவர்கள் இங்கே வந்து புகுரப் பெற்றது, நாம் செய்த புண்ணியத்தின் பலம் அன்றோ என்பர்கள் என்றபடி. [1] மேலே "வைகுந்தம் புகுவது" என்றார்; இங்குப் 'புகுந்தனர்' என்கையாலே, தங்கள் புண்ணியத்தைக் காட்டுகிறது. [2] நல் வேதியர் - [3] "எவ்விடத்தில் காண்கிறவர்களும் முன் தோன்றியவர்களும் பழமையானவர்களும்" என்றும், [4] "எங்கு முன்னுள்ளவர்களும் பற்றத் தக்கவர்களுமான தேவர்கள் உளரோ" என்றும், [5] "எங்கும் பரந்திருக்கின்ற திருமாலுக்கு யாதொரு சிறந்த இடம் உண்டோ அந்தப் பரமபதத்தை ஞானம் நிறைந்தவர்களும் துதிப்பதையே தன்மையாகவுடையவர்களும் எப்பொழுதும் ஜாக்கிரதையோடு கூடினவர்களுமான நித்தியசூரிகள் அடைகிறார்கள்" என்றும் வேதங்களாலே சொல்லப்பட்டவர்கள்.

பதியினில் - ஆதிசேடன், பெரிய திருவடி முதலானவர்கள் தங்கள் திருமாளிகைகளிலே கொடு புக்கு. பாங்கினில் பாதங்கள் கழுவினர் - 'இவன் பிறப்பு இறப்புக்களிலே உழன்று திரிந்து போந்த ஒருவன்; நாம் சம்சாரத்தின் வாசனை சிறிதும் தீண்டப்பெறாதவர்கள்' என்று வாசி வையாதே, இவனைச் சிங்காசனத்திலே உயர வைத்து, அவர்களுக்குப் பாங்காகத் தாங்கள் இருந்து திருவடிகளை விளக்குவர்கள். நிதியும் நல்

---

1. மேலே அவர்கள் செய்த புண்ணியம் என்று கூறி, இங்கே நம்முடைய புண்ணியத்தால் என்பதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி. என்றது, மேல் பாசுரத்தில் கூறியதைப் போன்று அன்றிக்கே, "புகுந்தனர்" என்று புகுதலைக் கண்கூடாகக் காட்டுகையாலே, அதற்குக் காரணமான தம்முடைய புண்ணியத்தைக் காட்டுகிறது என்றபடி.

2. நல் வேதியர் - ஸ்ரீ புருஷசூக்தம் முதலியவற்றிலே சொல்லப்பட்டவர்கள். நல் என்னும் அடைமொழி ஸ்ரீ புருஷ சூக்தத்தில் சொல்லப்பட்டவர்கள் என்பதனைக் காட்டுகிறது.

3. "யத்ர ரிஷயः ப்ரதமஜாःயேபுராணாः"
என்பது, யஜுர்வேதம்.

4. "யத்ர பூர்வே ஸாத்யாः ஸந்தி தேவாः"
என்பது, புருஷசூக்தம்.

5. "தத்விப்ராஸः விபந்யவः ஜாக்ருவாம்ஸः ஸமிந்ததே
விஷ்ணோः யத் பரமம்பதம்"
என்பது, இருக்குவேதம்.

சுண்ணமும் நிறை குட விளக்கமும்-[1] அவ்வளவிலே பகவானுக்குத் தொண்டு செய்கிறவர்கள் வந்து எதிர் ஏற்பார்கள்; ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் செல்வமான திருவடி நிலைகளையும், திருச்சுண்ணப் பிரசாதத்தையும், நிறை குடங்களையும், மங்கள தீபங்களையும் ஏந்தி. மதிமுக மடந்தையர் - வேறு தேசத்திற்குப் போன பிள்ளைகள் வந்தால் தாய் முகம் குளிர்ந்திருக்குமாறு போலே, உவகையாலே, பூர்ண சந்திரனைப் போலே இருக்கிற முகங்களையுடையவர்கள் வந்து எதிர் கொண்டார்கள். (10)

1091.

வந்தவர் எதிர் கொள்ள, மா மணி மண்டபத்து
அந்தம் இல் பேரின்பத்து அடியரோடு இருந்தமை
கொந்து அலர் பொழில் குருகூர்ச் சடகோபன் சொல்
சந்தங்கள் ஆயிரத்து இவை வல்லார் முனிவரே.

பொ - ரை :— திருமகள்கேள்வனை அந்தப் பரமபதநாதன் வந்து எதிர்கொண்டு அழைக்க, திருமாமணி மண்டபத்திலே முடிவு இல்லாத பேரின்பத்தை அநுபவிக்கின்ற நித்தியசூரிகளோடு இருந்தமையை, பூங்கொத்துக்கள் மலர்கின்ற சோலைகளையுடைய திருக்குருகூரிலே வந்து அவதரித்த ஸ்ரீ சடகோபராலே சொல்லப்பட்ட ஆயிரம் திருவிருத்தங்களிலே இப் பத்துத் திருவிருத்தங்களையும் கற்று வல்லவர்கள் முனிவர்களே யாவர்.

வி - கு :— "அந்தம் இல் பேரின்பத்து" என்பதனை ஆழ்வார்க்கு அடைமொழி ஆக்கலுமாம். அவர் வந்து எதிர்கொள்ள என்க. அவர் என்றது, எட்டாம் பாசுரத்தில் கூறிப் போந்த வடிவுடை மாதவனைச் சுட்டுகிறது. பரமபதத்திலே உள்ளவர்கள் ஆகவுமாம். சந்தங்கள் - விருத்தங்கள். சந்தஸ்ஸுக்களாகவுமாம். முனிவர் - மனன சீலர்.

ஈடு :— முடிவில், [2] இத் திருவாய்மொழி கற்றவர்கள் நித்திய சூரிகளோடு ஒப்பர் என்கிறார்.

---

1. மேலுக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவ்வளவிலே' என்று தொடங்கி.

2. "இவை வல்லார் முனிவரே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

அவர் வந்து எதிர்கொள்ள - [1]பிராட்டியோடேகூட எம் பெருமான்தான் வந்து எதிர்கொள்ள. [2] அன்றிக்கே, இந்தப் பிரகிருதி சம்பந்தம் இல்லாத அயர்வு அறும் அமரர் எதிர் கொள்ள என்னவுமாம். மா மணி மண்டபத்து - ஆனந்த மய மான திரு மாமணி மண்டபத்திலே. அந்தம் இல் பேர் இன் பத்து - [3] எல்லை இல்லாத கிலேசங்களுக்கு எல்லாம் எதிர்த் தட்டே அன்றோ. [4] இவ் உலக வாழ்க்கையில் சுகம் என்று மயங்குமித்தனையே, உள்ளது துக்கமேயாம். [5] பாண்டு, ஒரு வன் மேல் அம்பை விட, அவன், ‘இவ் உலக வாழ்க்கையில் ஆயிரம் கூற்றில் ஒரு கணமாயிற்றுச் சுகம் உள்ளது; அதனை யும் அநுபவிக்க ஒட்டிற்றிலையே’ என்றானே அன்றோ. அடி யரோடு இருந்தமை - [6]“அடியார்கள் குழாங்களை உடன் கூடு வது என்றுகொலோ?” என்று ஆசைப்பட்ட படியே இருந் தமை. கொந்து அலர் பொழில் குருகூர்ச் சடகோபன் சொல்- எப்பொழுதும் மலர்களை யுடைத்தான சோலையாற் சூழப்பட்ட திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. [7] போக்கிலே

---

1. அவர் என்னும் சுட்டு, மேலே கூறிப் போந்ததனைச் சுட்டு மாகை யாலும், “வடிவுடை மாதவன்” என்று மேலே திருமகள் கேள்வன் சொல்லப் பட்டிருப்பதாலும் அதனைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் ‘பிராட்டி யோடே’ என்று தொடங்கி.

2. பத்தாம் பாசுரத்திலே “நல் வேதியர்” என்று நித்தியசூரிகளும் கூறப்பட்டிருப்பதால் “அவர்” என்ற சொல்லால் அந்த நித்யசூரிகளைச் சுட்டு கிறார் என்று கோடலுமாம் என்கிறார் ‘அன்றிக்கே’ என்று தொடங்கி.

3. “அந்தம் இல் பேர் இன்பம்” என்பதற்கு, பாவம் அருளிச்செய் கிறார் ‘எல்லை இல்லாத’ என்று தொடங்கி.

4. ஆயின், இவ் உலகவாழ்க்கையில் இன்பம் என்பது இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ‘இவ் உலகவாழ்க்கையில்’ என்று தொடங்கி.

5. இவ் உலகவாழ்க்கையில் உள்ளது துக்கமே என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் ‘பாண்டு’ என்று தொடங்கி. ‘ஒருவன் மேல்’ என்றது, மான் உருக்கொண்டு, மானு உருக் கொண்ட தன் மனைவியோடு சேர்ந்திருந்த ஒரு முனிவன் மேல் என்றபடி. ‘என்றான்’ என்றது, அம்முனிவனை. இங்கே, வில்லிபாரதம் சம்பவச் சருக்கம் 49 முதல் 51 முடிய உள்ள செய்யுட் பகுதி களைப் படித்தறிதல் தகும்.

6. இவர் விரும்பும் பேறு சர்வேஸ்வரனை அடைதலே அன்றோ? “அடியரோடு இருந்தமை” என்றல் பொருந்துமோ? என்ன, “அடியார்கள்” என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, திருவாய்மொழி, 2. 3 : 10.

7. இப்போது “கொந்து அலர்” என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ‘போக்கிலே’ என்று தொடங்கி.

ஒருப்பட்டவாறே திருநகரியே தொடங்கிப் போலே காணும் சோலை செய்வது. சந்தங்கள் ஆயிரத்து - விருத்தங்களை யுடைத்தான ஆயிரம் என்னுதல். வேதத்தின் உருவமான ஆயிரம் என்னுதல். இவை வல்லார் முனிவரே-இப்பத்தினைக் கற்க வல்லார் அப் பரமபதத்திலே பகவானுடைய குணங்களை அநுபவித்து அவற்றிலே ஈடுபட்டவராய் அதற்கு அவ்வருகு கால் வாங்க மாட்டாதே இருக்குமவர்களைப் போலே ஆவர்கள். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

சூழ்ந்து நின்ற மால் விசும்பில் தொல்லை வழி காட்ட
ஆழ்ந்ததனை முற்றும் அநுபவித்து—வாழ்ந்துஅங்கு
அடியருடனே இருந்த ஆற்றை உரை செய்தான்
முடிமகிழ் சேர் ஞான முனி.

—:o:—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

பத்தாம் திருவாய்மொழி — "முனியே"

முன்னுரை

ஈடு :—[1]பரமபதத்திலே புக்கு "அந்தம் இல் பேரின்பத்து அடியரோடு இருந்தமை" என்கிறபடியே, எல்லை இல்லாத ஆனந்தத்தை உடையராய் அத் திரளிலே இருந்த இருப்பு நினைக்கக்கூடிய ஞான மாத்திரமேயாய்ப் புறம்பே கண்டு அநுபவிப்பதற்குத் தகுதி இன்றிக்கே இருந்தது; அதற்குமேலே, [2]"இல்லை கண்டீர் இன்பம்" என்றும், "பிறப்பாம் பொல்லா அருவினை மாய வன்சேற்று அள்ளல் பொய்ந் நிலம்" என்றும் தாம் பிறர்க்கு உபதேசிக்கிற இவ் உலகத்திலே சரீரத்தோடு கட்டுப் பட்டவராய் இருக்கிறபடியையும் கண்டார்; கண்டு, [3]மேருவின் உச்சியிலே துக்கம் இல்லாதவனாய் மேலான சுகத்தை உடையவனாய் இருக்கிறான் ஒருவன், பலப்பல துக்கங்களை உடையதாய்த் தாண்ட முடியாததாய்ப் பேர் ஆழமாய் ஓரிடத்திலும் நிலை இன்றிக்கே இருக்கும்படியான பாதாளத்திலே விழுந்து நோவு படுமாறு போலே, துக்கம் கொண்டவரானார்; அதற்கு மேலே, [4]பண்டு அவன் தமக்குக் கைவந்த படியையும், தன்னைப் பெறுகைக்கு உபாயம் தானே அல்லது வேறு இன்றிக்கே இருக்கிற படியையும், தன் தலையிலே ஓர் உபாயத்தை ஏறட்டுக் கொண்டு ஒழுகுமவனுக்கும் தன் கை பார்த்திருக்க வேண்டும்படி எல்லாப் பொருள்களையும் காப்பாற்றுகின்றவனாய் இருக்கிற படியையும் நினைந்து, அக் கணத்

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு அருளிச்செய்கிறார் 'பரமபதத்திலே புக்கு' என்று தொடங்கி.

2. "இல்லை கண்டீர்" என்பது, திருவாய்மொழி, 9. 1 : 6. "பிறப்பாம்" என்பது, திருவிருத்தம், செய். 100.

3. பரமபதத்திலே பரம ஆனந்தத்தோடு கூடி இருப்பவர் இவ் உலகத்திலே கட்டுப்பட்டவராய் நோவுபடுதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'மேருவின் உச்சியிலே' என்று தொடங்கி.

4. இத் திருவாய்மொழியிலே வருகின்ற "என்னை உயிர் வேறு இன்றி ஒன்றாகவே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'பண்டு அவன்' என்று தொடங்கியும், "ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தன்னைப் பெறுகைக்கு' என்று தொடங்கியும், "மேவித் தொழும் பிரமன் சிவன்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றித் 'தன் தலையிலே' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

திலே பெருமையாலே ‘இப்படி இருக்கிறவன் நம்மை இங்ஙனே நோவுபட விட்டு வைப்பதே!’ என்று மிகவும் துக்கங் கொண்டவர் ஆனார்.

[1]அங்ஙனம் துக்கம் கொண்டவர், தாய் தந்தையர்கள் முன்னே இருக்கப் பசியாலும் தாகத்தாலும் நோவுபடுகிற சிறு குழவியானது துன்பத்தின் மிகுதியாலே தாய் பேரைச் சொல்லிக் கூப்பிடுமாறு போலே, “வளவேழ் உலகின்” என்ற திருவாய்மொழியிற் கூறிய தன்மையையுடைய தாம், தம் தன்மையை நினைக்க ஆற்றல் இல்லாதவராய், தூதர் மூலமாக அறிவித்தற்கும் இயலாதவராய், அவன் எதிரே நின்று பிராட்டி ஆணை இட்டுத் [2]தலக்கு அற்றுச் சொல்லும்படியான ஆற்றாமையோடே, இரக்கம் இல்லாதவருடைய மனங்களும் இரங்கும்படியாகவும், அவனுக்குத் தம்மைக் காப்பாற்றி அல்லது பரமபதத்திலும் இருப்பு அரிதாம்படியாகவும், காட்டுத் தீயிலே அகப்பட்டாரைப் போலே துயர ஒலியோடே பெரு மிடறு செய்து கூப்பிட்டு, [3]“வானரங்கள் இராவணனுடைய அம்புகளால் துன்பம் உற்றனவாய் ஓடின; புகலிடமான இராமனைச் சரணம் அடைந்தன” என்கிறபடியே, தரிக்கமாட்டாமையாலே, அவன் திருவடிகளிலே சரணம் புக்கார்.

இவர் சரணம் புக, அவன் அருட்கடல் ஆகையாலே ‘இவரை இப்படியே நோவுபட விட்டு வைத்தோமே அன்றோ!’ என்று [4]இவரைக் காட்டிலும் தான் நொந்து, [5]பிராட்டி

---

1. “என் பொல்லாக் கனி வாய்” என்பது போன்றவைகளாலே அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதற்குத் திருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார் ‘அங்ஙனம் துக்கம் கொண்டவர்’ என்று தொடங்கி.

2. தலக்கு - நாணம்.

3. துயரம் மிகுகின்ற காலத்தில் அவனைச் சரணம் புகுவதற்கு மேற்கோள் காட்டுகிறார் ‘வானரங்கள்’ என்று தொடங்கி.

தே வத்யமாநா: பதிதா: சவீரா: நாநத்யமாநா: பயஶல்யவித்தா:
ஶாகா ம்ருகா: ராவண ஸாயகார்த்தா: ஜக்மு: ஶரண்யம் ஶரணம் ஸ்ம ராமம்.
என்பது; ஸ்ரீராமா. யுத். 60 : 45.

4. “அந்தோ!” என்ற பதத்தைத் திருவுள்ளம்பற்றி ‘இவரைக் காட்டிலும் தான் நொந்து’ என்கிறார்.

5. “என் அவா” என்கிற இவருடைய அவாவானது, “கோலத் திருமா மகளோடு உன்னைக் கூடாதே” என்றும், “பண் கொண்ட புள்ளின் சிறகு ஒலி பாவித்து” என்றும், பிராட்டியோடு கூடிய சேர்த்தியிலே அவனைக் காணவேண்டும் என்றும், பெரிய திருவடியை மேற்கொண்டு வந்து தோற்ற வேண்டும் என்றும் இருக்குமது ஆகையாலே, அது தீருகைக்காகப் பிராட்டியோடும் பெரிய திருவடியோடும் வந்து தோற்றினான் என்கிறார் ‘பிராட்டியோடு’ என்று தொடங்கி.

யோடே கூடப் பெரிய திருவடி மேலே இவர் விரும்பியபடியே எல்லாவற்றாலும் நிறைந்தவனாய் வந்து தோற்றி, இவருடைய [1] சரீர சம்பந்தத்தையும் அறுத்து, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்று இவர் ஆசைப் பட்டபடியே அத்திரளிலே புகப்பெற்று, "என் அவா அறச் சூழ்ந்தாயே" என்றும், "அவா அற்று வீடு பெற்ற" என்றும் இவர்தாமே சொல்லலாம்படி இவர் விடாயும் தீர, இவர் விடாய்க்கும் அவ்வருகான தன் விடாயும் தீரும்படி கலந்தருளி னான் என்கிறார்.

[2] இப் பிரபந்தத்துக்குத் தலைவன் சர்வேஸ்வரன்; இப் பிர பந்தம் அவாவில் அந்தாதி; மயர்வு அற மதிநலம் அருளப் பெற்றவர் கவி பாடினார்; இனி, இவருடைய அவதாரம்தான் சர்வேஸ்வரனுடைய அவதாரத்தைப் போன்று சாதுக்களி னுடைய புண்ணியத்தின் பலம்.

1092.

முனியே! நான்முகனே! முக்கண் அப்பா! என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே! என் கள்வா!
தனியேன் ஆர் உயிரே! என் தலைமிசையாய் வந்திட்டு
இனி நான் போகல் ஒட்டேன்; ஒன்றும் மாயம் செய்யேல் என்னையே.

பொ - ரை:—உலகத்தைப் படைப்பதற்காக நினைப்பிட்டவனே! படைப்பதற்காக நான்முகனாக இருப்பவனே! அழிப்பதற்காகச் சிவன் உருவமாக இருப்பவனே! கொவ்வைக் கனி போன்ற திரு அதரத்தை யும் தாமரைமலர் போன்ற திருக் கண்களையுமுடைய, தொளை செய்யப் படாத என் கரிய மாணிக்கமே! என் கள்வனே! தனிமைப்பட்ட என் னுடைய அரிய உயிராக இருப்பவனே! என் தலையிலே உன் திருவடி கள் இருக்கும்படியாக வந்திருந்த பின்னர், இனிமேல் நீ பிரிந்து

---

1. "வீடு பெற்ற" என்றதனைத் திருவுள்ளம்பற்றிச் 'சரீர சம்பந்தத் தையும் அறுத்து' என்கிறார்.

2. பிரபந்தத்தை முடிக்கிறார் ஆகையாலே, இப் பிரபந்தத்திலே எல்லார்க்கும் ருசி பிறப்பதற்காகப் பிரமேய பிரமாண பிரமாத்ரு வைலக்ஷண்யங் களையும், இவர் அவதார வைலக்ஷண்யத்தையும் அருளிச்செய்கிறார் 'இப் பிரபந்தத்துக்கு' என்று தொடங்கி. பிரமேயம் - நூலில் சொல்லப்பட்ட பொருள். பிரமாணம் - நூல். பிரமாதா - நூலை அருளிச்செய்தவர். வை லக்ஷண்யம் - சிறப்பு; மேன்மை.

போவதற்கு ஒரு நாளும் நான் உடன்படேன்; ஒரு விதமான வஞ்சனையையும் என்னைச் செய்யலாகாது என்கிறார்.

வி - கு:—பொல்லல் - துளைத்தல்; பொல்லா-துளையாத. என்றது, வேறு ஒருவராலும் அநுபவிக்கப்படாத என்றபடி. "கருமாணிக்கமே" என்றது, மும்மூர்த்திகளுள் நடுவிலே உள்ள விஷ்ணு அவதாரத்தைக் குறித்தது. ஆய் - ஆக. வந்திட்டுப் போக ஒட்டேன் என்க.

ஈடு:—முதற் பாட்டு. [1] ஒருவித காரணமும் இல்லாமலே உன்னுடைய வனப்பு முதலானவற்றைக் காட்டி, உன்னை ஒழியச் செல்லாதபடி என்னைச் செய்து, பொறுக்கக் கூடாத தான இவ் உலகத்திலே என்னை வைத்து, நீ சென்று பண்டு போலே ஒரு குணத்தை அநுபவிப்பிக்க விட ஒண்ணாது என்கிறார்.

முனியே-[2]"அவனிடத்தில் பிறக்கையாலும் அவனிடத்தில் லயிக்கையாலும் அவனாலே காக்கப்படுகையாலும் இப்பொருள் யாவும் அவனே" என்றும், [3]"விஷ்ணுவானவன் சூக்குமமான சித்து அசித்துக்களோடு கூடின தன்னைப் படைப்பில் ஸ்தூல சித்து அசித்துக்களோடு கூடினவனாகப் படைக்கிறான்; காப்

---

1. "என் தலைமிசையாய் வந்திட்டு, என் பொல்லாக் கனி வாய்த் தாமரைக் கண் கரு மாணிக்கமே, தனியேன் ஆர் உயிரே, ஒன்றும் மாயம் செய்யேல்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "முனியே" என்பதற்கு, "பஹுஸ்யாம் - பலவாக ஆகிறேன்" என்று நினைக்குமவன் என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, இப்படிப் பலவாக ஆகின்ற நினைவோடு கூடியவன் என்று பொருள் கூறினால், 'விகாரம் இல்லாதவன்' என்று கூறுகின்ற சுருதி வாக்கியங்களோடு முரணாகாதோ? என்னில், சித்து அசித்துக்களோடு கூடிய தன்மையனாய்ச் சங்கல்பிக்கிறான் ஆகையாலே முரண் இல்லை என்று சொல்ல நினைத்து, சித்து அசித்துக்களோடு கூடிய தன்மையனாய்ப் படைத்தல் முதலான காரியங்களைச் செய்கிறான் என்பதற்குப் பல பிரமாணங்களையும் காட்டுகிறார் 'அவனிடத்தில்' என்று தொடங்கி.

"ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம தஜ்ஜலாந் இதி" என்பது, சாந்தோக்கிய உபநிடதம். இந்த உபநிடத வாக்கியத்தில், "இதம் - ஸர்வம்" என்றதனாலே, ஸ்தூல சித்து அசித்துக்களோடு கூடின பிரஹ்மத்தைச் சொல்லுகிறது. இவை எல்லாம் அவன் ஆதற்குக் காரணத்தைச் சொல்லுகிறது "தஜ்ஜலாந்" என்றதனால். அவனிடத்திலே பிறக்கையாலும் அவனிடத்திலே லயிக்கையாலும் அவனாலே காக்கப்படுகையாலும் இவை எல்லாம் அவன் என்றபடி.

3. ஸ்ருஷ்டௌ ஸ்ருஜதிச ஆத்மாநம் விஷ்ணு: பால்யஞ்ச பாதிச
உபஸம்ஹ்ரியதே சாந்தே ஸம்ஹர்தாச ஸ்வயம் ப்ரபு:.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 2: 67.

பாற்றப்படுகிற பொருளான தன்னைக் காப்பாற்றுகிறான்; பிரளய காலத்தில் தான் அழிக்கப்படுகின்றான்; தான் அழிக்கின்றான்" என்றும், [1] "அவனே படைக்கப்படுகின்றான், அவனே படைக்கின்றான், அவனே பாதுகாக்கின்றான், அழிக்கின்றான், அவனே பாதுகாக்கப்படுகின்றான்; பிரமன் சிவன் முதலிய நிலைகளோடுகூடி எல்லாப்பொருள்களையும் சரீரமாகவுடையவனாய், மேம்பட்டவனாய், சிறந்த வரங்களைக் கொடுப்பவனாய், இருப்பவன் விஷ்ணுவே" என்றும், [2] "என்னுடைய சரீரமாகவும் அநாதியாகவும் இருக்கின்ற உயிரானது மாயையில் அடங்கியிருக்கிற மனத்தினை ஆறாவதாகவுடைய இந்திரியங்களை இவ்வுலகத்தில் இன்பத்தின் பொருட்டு இழுக்கிறது" என்றும், [3] "உயிர் பரம்பொருளின் கூறேயாகும்; அது பரம்பொருளின் வேறாகவும் ஒன்றாகவும் சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது" என்றும் சொல்லுகிறபடியே, சித்து அசித்துக்களோடு கூடின தானே படைத்தலையும் அழித்தலையும் செய்கிறான்.

ஆகையாலே, [4] "பூமி தண்ணீரில் மறைகிறது, தண்ணீர் நெருப்பில் மறைகிறது, நெருப்புக் காற்றில் மறைகிறது, காற்று

---

1. ஸஏவ ஸ்ருஜ்ய: ஸச ஸர்க்க கர்த்தா
ஸஏவபாதி அத்திச பால்யதேச
ப்ரஹ்மாதி அவஸ்தாபி: அஶேஷ மூர்த்தி:
விஷ்ணு: வரிஷ்ட: வரத: வரேண்ய:

என்பது, பிரமாணம்.

2. ஆனால், பரம்பொருளும் இவையும் ஒன்றேயோ? என்ன, அன்று என்பதனை இரண்டு பிரமாணங்கள் மூலம் விளக்குகிறார் 'என்னுடைய' என்று தொடங்கியும், 'உயிர் பரம்பொருளின்' என்று தொடங்கியும்.

மமைவ அம்ஶ: ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந:
மந:ஷஷ்டாநி இந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி.

என்பது, ஸ்ரீ கீதை, 15. 7.

3. "அம்ஶ: நாநா வ்யபதேஶாத் அந்யதாச
அபிதாஶ கிதவாதித்வம் அதீயத ஏகே"

என்பது, சாரீரக மீமாம்சை, 2. 3: 42.

4. படைத்தல், அழித்தலை முன்னிட்டுக் கொண்டு உள்ளது ஒன்றாகையாலே, முந்தற அழிக்கும் முறையை அருளிச்செய்கிறார் 'பூமி' என்று தொடங்கி. பின் படைக்கும் முறையை அருளிச்செய்வர்.

"ப்ருதிவீ அப்ஸு ப்ரலீயதே, ஆப: தேஜஸி லீயந்தே, தேஜோ வாயௌ லீயதே, வாயு: ஆகாஶேலீயதே, ஆகாஶம் இந்த்ரியேஷு இந்த்ரியாணி தந்மாத்ரேஷு தந்மாத்ராணி பூதாதௌ லீயந்தே, பூதாதி: மஹதி லீயதே, மஹாந் அவ்யக்தே லீயதே, அவ்யக்தம் அக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரேதேவ ஏகீபவதி" என்பது, சுபால உபநிடதம்.

ஆகாசத்தில் மறைகிறது, ஆகாசம் இந்திரியங்களில் மறைகிறது, இந்திரியம் தன்மாத்திரையில் சேர்கிறது, தன்மாத்திரைகள் அகங்காரத்தில் சேர்கின்றன, அகங்காரம் மஹத்தத்துவத்தில் மறைகிறது, மகத்து அவ்யக்தத்தில் மறைகிறது, அவ்யக்தம் அக்ஷரத்தில் மறைகிறது, அக்ஷரம் தமசில் மறைகிறது, தமசு பரம்பொருளில் மறைகிறது" என்கிறபடியே, தன்னிடத்தில் மறைந்திருக்கிற இதனை, [1]"பலவாக ஆகிறேன்" என்று நினைந்து விளங்கச்செய்து தமசு என்ற சொல்லுக்குரிய பொருளாக்கி, அதனை அக்ஷரமாக்கி, அக்ஷரத்திலிருந்து அவ்யக்தத்தை உண்டாக்கி, அவ்யக்தத்திலிருந்து மஹானை உண்டாக்கி, மஹானிலிருந்து அகங்காரத்தை உண்டாக்கி, அகங்காரத்தில் நின்றும் பூததன்மாத்திரைகளை உண்டாக்கி, அவற்றைப் பூதங்களாக முற்றுவித்து, அண்டத்தைப் படைத்தலை முடிவாக உடைய உலகத்தினைப் படைத்தல் செய்கிற திவ்விய சங்கல்பத்தினை யுடையனாய்ப் பகவான் என்ற பெயரால் சொல்லப்படுகின்றவனாய்ப் பரப்பிரஹ்மம் பரமாத்மா முதலிய பெயர்களாலே வேதாந்தங்களில் சொல்லப்பட்ட, [2] சொரூபத்தால் நிலைபேறுடையனாய் இருந்த பரம புருடன் என்றவாறு.

[3] அன்றிக்கே, "அப் பரம புருடன் தன்னம் தனியனாய் இருந்த காலத்தில் மகிழ்ச்சி கொண்டான் இலன்" என்கிறபடியே, எல்லாப் பொருள்களும் தத்தமது பெயரையும் உருவத்தையும் இழந்து பரம்பொருளினுடைய பெயரும் உருவமுமேயாய் அறிவில் பொருளாய்க் கிடந்தாற் போலே, சர்வேஸ்வரனை தானும் இவற்றைப் பிரிந்து அசித்தைப் போன்றவனை தன்மையைச் சொல்லுகிறது என்னுதல்.

---

1. அழிக்கும் முறையை அருளிச்செய்து, இனிப் படைக்கும் முறையை அருளிச்செய்கிறார் 'பலவாக ஆகிறேன்' என்று தொடங்கி.

"பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி"

என்பது, தைத்திரீய ஆனந். 6.

2. "நான்முகனே, முக்கண்ணப்பா" என்ற இடங்களில் அவர்கள் வழியாகப் பரமபுருடன் சொல்லப்படுகையாலே, "முனியே" என்கிற இடத்தில், நேரே பரம புருடனைச் சொல்லுகிறது என்பது தோற்ற 'சொரூபத்தால் நிலைபேறுடையனாய் இருந்த பரமபுருடன்' என்கிறார்.

3. "முனியே" என்றதற்கு வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

"ஸ ஏகாகீ நரமேத" என்பது, மஹோபநிடதம். ஈண்டு முனி என்பதற்கு, வெறுத்தவன் அல்லது துறந்தவன் என்பது பொருள்.

[1] "ஜாம்பவானால் புகழ்ந்து பேசப்பட்ட பின்னர் பகைவர்களை அழிக்க வல்ல அநுமான், இராவணனால் கொண்டு போகப்பட்ட பிராட்டி இருக்குமிடத்தைத் தேடுதற்குத் தேவர்கள் சஞ்சரிக்கின்ற ஆகாசத்தின் வழியாகச் செல்லுதற்கு விரும்பினார்" என்கிறபடியே, கடல் கொண்ட பொருளை நாடுகைக்குத் திருவடி இச்சித்தாற் போலே அன்றோ, உரு மாய்ந்த மக்களை உண்டாக்க நீ மனனம் பண்ணிற்று? [2] நான் இல்லாத அன்று ஒரு காரணமும் இல்லாமலே என்னை உண்டாக்கின நீ, நான் உண்டாய் நோவுபடுகிற இன்று எனக்கு உதவ வேண்டாவோ? முனியே - [3] 'அம்மே!' என்பாரைப் போலே. [4] என்றது, உறுப்புக்களும் சரீரமும் இல்லாதனவாய் இவை கிடந்த அன்று உண்டாக்கினாய்; ஆசைப்பட்ட எனக்கு இன்று உதவல் ஆகாதோ? [5] நீ நினைக்குமன்றோ உதவலாவது? நான் நினைக்கும் அன்று உதவல் ஆகாதோ? என்றபடி.

[6] இனி, "வானரங்கள் இராவணனுடைய அம்புகளால் துன்புற்று ஓடின; புகலிடமான இராமனைச் சரணமடைந்தன" என்றும், "அரக்கர்களால் துன்புறுத்தப்பட்ட வானரர்

---

1. "முனியே" என்ற சொல்லைப் பிரயோகித்தற்குத் திருஷ்டாந்தத்தோடு பாவம் அருளிச்செய்கிறார் 'ஜாம்பவானால்' என்று தொடங்கி.

ததஃ ராவண நீதாயாஃ ஸீதாயாஃ ஶத்ரு கர்ஶநஃ
இயேஷ பதம் அந்வேஷ்டும் சாரணாசரிதே பதி.

என்பது, ஸ்ரீராமா. சுந். 1: 1.

2. 'முனியே' என்று, இல்லாத அன்று படைப்பதற்கு மனனம் செய்ததனைச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நான் இல்லாத' என்று தொடங்கி.

3. முனியே என்றதிலுள்ள ஏகாரத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அம்மே என்பாரைப் போலே' என்று.

4. 'அம்மே என்பாரைப் போலே' என்று சம்பந்தம் சொல்லுகிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'என்றது' என்று தொடங்கி.

5. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'நீ நினைக்கு மன்றோ' என்று தொடங்கி.

6. அவனுடைய காரணத்வத்தைச் சொல்லுகிற "முனியே" என்ற இப் பதத்தால் 'அவனே சரண்யன்' என்பதும் போதருகின்றது என்று கூறத் திருவுள்ளம்பற்றி, அதனை அருளிச்செய்கிறார் 'இனி' என்று தொடங்கி.

"ஶாகா ம்ருகாஃ ராவண ஸாயகார்த்தாஃ ஜக்முஃ ஶரண்யம் ஶரணம் ஸ்ம ராமம்.
என்பது, ஸ்ரீராமா. யுத். 60 : 45.

ராக்ஷஸைஃ வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூஃ
ஶரண்யம் ஶரணம் யாதா ராமம் தஶரதாத்மஜம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 94 : 17.

களுடைய பெரிய கூட்டமானது காப்பாற்றுகின்றவரான ஸ்ரீராமபிரானைப் புகலாக அடைந்தது" என்றும் சொல்லு கிறபடியே, உன்னை ஒழிய ஒரு புகல் இல்லாதார்க்கு உதவு மவன் அன்றோ என்னுதல்.

நான்முகனே-[1] "முதல் முன்னம் பிரமனை எவன் படைத் தானோ" என்கிறபடியே, பிரமனைப் படைத்து, அவன் ஆத்மா வழியாக அவன் சரீரத்திலே அநுப்பிரவேசித்து, அறிவுள்ள வர்களான மக்கள் அறிவில்லாதனவான தங்கள் தங்கள் சரீரங்களைக் கொண்டு தங்கள் தங்கள் நினைவுக்குத் தக்கபடி போதல் வருதல் முதலிய செயல்களைச் செய்யுமாறு போலே, தன்னுடைய சரீரமாக இருக்கிற பிரமனுக்கு அந்தர்யாமியாய், அவனைக் கொண்டு மற்றும் நினைவிற்குத் தகுதியாகத் தேவ மனித திரியக்குத் தாவரங்களின் உருவமான உலகத்தைப் படைத்த படியைச் சொல்லுகிறது. [2]இதனால், இவன் நினைத்த அன்று ஏதேனும் கொண்டு காரியம் கொள்ள வல்லவன் என் பதனைத் தெரிவித்தபடி. [3] இருந்து படைக்கும் ஆசனத்தைப் போன்றவன் பிரமன்; [4] அறிவில் பொருளான மகத்து முத லான தத்துவங்களைக் கொண்டு படைத்ததோடு அறிவுள்ளவ னான பிரமனைக் கொண்டு படைத்ததோடு வேறுபாடு இல்லை

---

1. "முனியே" என்ற பதத்தால் அழிக்கும் நிலையைச் சொல்லிற்றே, "நான்முகனே" என்னும் பதத்தால் எதனைச் சொல்லுகிறது? என்ன, வியஷ்டி சிருஷ்டிக்குத் தகுதியாகச் சமஷ்டி புருஷனான பிரமனுக்கு அந்த ராத்மாவாக இருக்கும் இருப்பைச் சொல்லுகிறது என்கிறார் 'முதல் முன்னம்' என்று தொடங்கி.

"யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ஸ்ச ப்ரஹி ணோதி தஸ்மை" என்பது, ஸ்வேதாஸ்வதரம். 'அந்தர்யாமியாய்' என்றது, நான்முகன் என்னும் சொல் தன்னளவிலே வந்து முடியும்படி அவனுடைய செயல்களனைத்தும் தன் அதீநமாய் இருக்கும் இருப்பைச் சொல்லுகிறது என்றபடி.

2. "நான்முகனே" என்ற சொல்லைச் சேர்த்ததற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி.

3. "நான்முகனே" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய் கிறார் 'இருந்து படைக்கும்' என்று தொடங்கி.

4. "ஆசனத்தைப் போன்றவன்" என்று அறிவில் பொருளைப் போன்று பிரமனைச் சொல்லலாமோ? என்ன, சர்வேஸ்வரனைப் பார்க்கும் போது அப்படிச் சொல்லலாம் என்கிறார் 'அறிவில் பொருளான' என்று தொடங்கி.

இவனுக்கு;[1] அறிவுடைப் பொருள் என்றும் அறிவில் பொருள் என்றும் தம்மில் தாம் வேற்றுமை உண்டேயாகிலும், அவனைக் குறிக்கப் பரதந்திரமாகுமிடத்தில் இரண்டும் ஒக்கும். [2]தேவர் மனிதர் திரியக்கு என்றும், பிராமணன் அரசன் வணிகன் என்றும் அந்த அந்தச் சரீரங்களைக் காட்டும் சொற்களாலே அவற்றில் வேறாய் இருந்துள்ள அவர்களும் சொல்லப்பட்டாற் போலே, இங்கும் [3]"எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவனுக்கு பிருதிவி சரீரமோ" என்றும், [4]"உனக்கு உலகமுழுதும் சரீரம்" என்றும், "அவை யாவும் அவனது உடல்" என்றும், "அவை யெல்லாம் அரியினுடைய உடல்" என்றும் சொல்லுகிறபடியே, சரீரத்தைக் காட்டுகிற சொல் ஆத்மாவரையிலும் தன் பொருளைக் குறிக்கும் என்னும் நியாயத்தாலே, தனக்குச் சரீரமாக இருக்கிற பிரமனைக் காட்டக்கூடிய நான்முகன் என்ற சொல்லாலே, அவனில் வேறாய் அவனுக்கு ஆத்மாவாக இருக்கிற எம்பெருமான் சொல்லப்படுகையாலே, 'நான்முகனே' என்ற சொல்லாலே எம்பெருமானை விளிக்கிறது.

முக்கண் அப்பா-[6] "எவனுக்குப் பிராமணனும் க்ஷத்திரியனும் உணவாக ஆகிறார்களோ, அழிக்கிறவன் வெஞ்சனப்

1. ஆயின், அறிவுடைப் பொருளுக்கும் அறிவில் பொருளுக்கும் வேற்றுமை இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அறிவுடைப் பொருள் என்றும்' என்று தொடங்கி.

2, "நான்முகன்" என்னும் பெயர் சர்வேஶ்வரனைக் காட்டுமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மீதேவர் மனிதர்' என்று தொடங்கி.

3. "யஸ்ய ஆத்மா ஶரீரம் - யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்"
என்பது, அந்தர்யாமிப்ராஹ்மணம்.

4. ஜகத் ஸர்வம் சரீரம் தே ஸ்தைர்யம் தே வஸுதாதலம்
அக்நிஃ கோபஃ ப்ரஸாதஃதேஸோமஃ ஶ்ரீவத்ஸலக்ஷண.
என்பது, ஸ்ரீராமா. யுத். 118: 20. ஸ்ரீராமனைப் பார்த்துப் பிரமன் கூறியது.

5. தஸ்ய ஸ்ருஜ்யஸ்ய ஸம்பூதௌ தத் ஸர்வம் வை ஹரேஸ்தநுஃ,
யாநி மூர்த்தாநி யமூர்த்தாநி யாநி அத்ர அந்யத்ர வா க்வசித்,
"ஸந்திவைவஸ்து ஜாதாநி தாநி ஸர்வாணி தத்வபுஃ."
என்பன, ஸ்ரீ விஷ்ணு புரா. 1: 22: 86., 38.

6. அழிக்கிற காலத்திலே, சிவபெருமானிடத்தில் விசேஷ அதிஷ்டானம் செய்துகொண்டு அவ் வழியாலே சர்வேஸ்வரன் அழிக்கிறானுகையாலே, "முக் கண்ணன்" என்ற பெயரால் சர்வேஸ்வரனை விளிக்கிறார் என்கிறார் 'எவனுக்கு' என்று தொடங்கி.
யஸ்ய ப்ரஹ்மச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதநம்
ம்ருத்யுஃ யஸ்ய உபஸேசநம் க இத்தா வேத யத்ர ஸஃ.
என்பது, கடவல்லீ உபநிடதம், 1: 2, இங்கு, "ம்ருத்யுஃ" என்ற சொல் நெருப்பு, யமன், சிவன் இவர்களைச் சொல்லுகிறது.

பொருளோ, அத்தகைய அவனது பெருமை இவ்வளவு என்று அறிகிலர்" என்று சொல்லுகிறபடியே, அழிக்கப்படுகின்ற பொருள்களோடே கூட அழிக்கின்றவனையும் அழிக்கின்ற சர்வேஸ்வரனுக்குச் சரீரமாக இருக்கிற சிவனுடைய 'முக்கண்ணன்' என்ற பெயராலே, அவனில் வேறாய் அவனுக்கு அந்தராத்மாவான எம்பெருமானை விளிக்கிறது. [1]அப்பா என்ற சொல் உபகாரத்தைக்காட்டுகிறது; [2]படைப்பதைக் காட்டிலும் அழித்தல் உபகாரமே அன்றோ. நான்கு நாட்கள் கழித்துப் படைத்தாலும் ஆத்மா கிடக்கும். சடக்கென அழிக்காவிடில் ஆத்மாவை இழக்க வேண்டும்படி தீம்பிலேஆயிற்றுக் கைவளர்வது. எங்ஙனே? என்னில், தந்தாம் கைகளைக் கொண்டு கண்களைக் கலக்கிக் கொள்வாரைப் போலே, படைத்த படைப்பு பேற்றுக்கு உடல் அன்றியே தீம்புக்கு உடலானவாறே, சிறு குழந்தைகளைக் கால்களிலும் கைகளிலும் விலங்கிட்டுக் காப்பாற்றும் தாய் தந்தையர்களைப் போலே, உறுப்புக்களையும் உறுப்புக்களோடு கூடின சரீரங்களையும் நீக்கி அழித்திட்டு வைக்கையும் உபகாரமாய் இருக்கிறபடி. [3]"நீ ஒருவனே உலகத்தைப் படைக்கிறவனும், அப்படியே உலகத்தை அழிக்கிறவனும் ஆகின்றாய்" என்கிறபடியே.

[4]"நாராயணன் ஒருவனே ஆதியில் இருந்தான், பிரமனும் இல்லை, சிவனும் இல்லை, இந்த விண்ணும் மண்ணும் இல்லை, நக்ஷத்திரங்கள் இல்லை, நீர் இல்லை, நெருப்பு இல்லை,

---

1. "அப்பா" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார்.

2. படைத்தல் அளித்தல் உபகாரமாம்; அழித்தல் உபகாரமாயவாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'படைப்பதைக் காட்டிலும்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார். 'நான்கு நாட்கள்' என்று தொடங்கி.

3. ஆக்குதலைப் போன்று அழித்தலும் உபகாரம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'நீ ஒருவனே' என்று தொடங்கி.

> ஏக: த்வம் அஸி லோகஸ்ய ஸ்ரஷ்டா ஸம்ஹாரக: ததா
> அத்யக்ஷஸ்சாநுமந்தாச குணமாயா ஸமாவ்ருத:

என்பது, ஜிதந்தா.

4. "முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா!" என்று, உபநிடதத்திலும் சொல்லப்பட்டது என்கிறார் 'நாராயணன்' என்று தொடங்கி.

"ஏகோஹவை நாராயண ஆஸீத், நப்ரஹ்மா, ந ஈஸாந:, நேமே த்யாவா ப்ருதிவீ, ந நக்ஷத்ராணி, ந ஆப: ந அக்நி: ந ஸோம: ந ஸூர்ய: ஸ ஏகாகீ நரமேத தஸ்ய த்யாநாந்தஸ்தஸ்ய ஏகாகந்யா தஸேந்த்ரியாணி.... அதபுநரேவ நாராயண: ஸ: அந்யம் காமம் மநஸா த்யாயீத, தஸ்ய த்யாநாந்தஸ்தஸ்ய லலாடாத் ஸ்வேத: அபதத், தா இமா ஆப:, தத் ஹிரண்மயம் அண்டம் அபவத் - தத்ர ப்ரஹ்மா சதுர்முகோஜாயத...

சந்திரன் இல்லை, சூரியன் இல்லை, அவனே தனியனாய் வருந்தினான்; தன்னுடைய தியானத்தில் இருக்கிறவனுக்கு ஒரு மனம், பத்து இந்திரியங்கள்" என்று தொடங்கி, "பின்பு மீண்டும் அந்த நாராயணன் வேறு ஒன்றனைச் சங்கல்பிக்க நினைத்துத் தியானம் செய்தார்; தியானம் செய்கின்ற அவனுடைய நெற்றியிலிருந்து வெயர்வை கீழே விழுந்தது, அது தான் இந்தத் தண்ணீர்; அது பொன் மயமான அண்டமாக ஆயிற்று; அந்த அண்டத்தில் நான்கு முகங்களையுடைய பிரமன் உண்டானான்; பின்பு மீண்டும் அந்த நாராயணன் வேறு ஒன்றனைச் சங்கல்பிக்க நினைத்துத் தியானம் செய்தார்; அங்ஙனம் தியானம் செய்கிறவனுடைய நெற்றியிலிருந்து வெயர்வை கீழே விழுந்தது; அவ் வெயர்வையினின்றும் குமிழி உண்டாயிற்று; அந்தக் குமிழியினின்றும் முக்கண்களையுடையனாய்ச் சூலத்தைக் கையிலே தரித்தவனாய்ப் புருஷன் ஒருவன் உண்டானான்" என்று சொல்லுகிற மஹோபநிடத வாக்கியத்தை நினைப்பூட்டுதல் செய்கிறது "முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா!" என்ற இந்த விளி வாக்கியம். [1]"படைத்தல் காத்தல் அழித்தல்களைச் செய்கிற பிரமன் விஷ்ணு சிவன் என்ற பெயர்களைப் பகவானான அந்த ஜனார்த்தனனே அடைகின்றான்" என்பது ஸ்ரீ விஷ்ணு புராணம்.

என் பொல்லாக் கனி வாய்த் தாமரைக் கண் கரு மாணிக்கமே - [2]படைத்தல் அழித்தல்களுக்கு இடையில், பருந்து இருஞ்சினாற்போலே இருஞ்சிகொண்டு போவர்களே அன்றோ காப்பார் இல்லாவிட்டால்; அதற்காக, படைத்தல் அழித்தல்களைச் செய்யும் தலைவர்களாய் ஆதிதேவர்களாய் உள்ள பிரமனுக்கும் சிவனுக்கும் நடுவே தான் இக்ஷ்வாகு குலத்தாரோடும் யதுகுலத்தாரோடும் ஒத்த தரத்தனாய்க் கொண்டு திரு அவதாரம் செய்தாற் போலே, ஆதிதேவனாய் விஷ்ணு என்னும்

"அதபுநரேவ நாராயண: ஸ: அந்யம் காமம் மநஸா த்யாயீத, தஸ்ய த்யாநாந்தஸ்த்தஸ்ய லலாடாத் ஸ்வேத: அபதத், ஸ்வேதாத் புத்புதம் அபவத் - புத்புதாத் த்ர்யக்ஷ: ஶூலபாணி: புருஷோஜாயத"
என்பது, மஹோபநிடதம்.

1. ஸ்ருஷ்டி ஸ்திதி அந்தகரணீம் ப்ரஹ்ம விஷ்ணு ஶிவாத்மிகாம்
ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாந் ஏக ஏவ ஜநார்த்தந:.
என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 2: 23.

2. படைக்கும் நான்முகனையும் அழிக்கும் சிவனையும் சொன்ன பின்னர் விஷ்ணுவைப் பிரித்துச் சொல்லுவதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'படைத்தல்' என்று தொடங்கி. 'விஷ்ணு என்னும் பெயரை யுடையனாய்' என்னும் இவ்விடத்தில், "பரமாத்மாச ஸர்வேஷாம் ஆதார: பரமேஶ்வர:,

பெயரையுடையனுய்த் தனது உருவத்தினுலே திரு அவதாரம் செய்து காப்பாற்றும்படியைச் சொல்லி விளிக்கிறது. [1] கண் அற்றுச் செய்ய வேண்டுவது ஒன்று ஆகையாலே படைத்தல் அழித்தல்களுக்கு ஆள் இடும். காத்தலானது தானே தண்ணளி செய்து செய்ய வேண்டுவது ஒன்று ஆகையாலே வேறு ஆள் இட ஒண்ணுது; ஆள் இட்டாலும் வேறு சிலரால் காப்பாற்ற முடியாது; [2]"காப்பாற்றுவதில் நிலை நிற்கின்றவரும் எல்லாப் பொருள்களுக்கும் ஈஸ்வரனும் மஹாத்மாவாயும் இருக்கிற திருமாலைத் தவிர வேறு ஒருவர்க்கும் பாதுகாக்கும் ஆற்றல் இல்லை; இது பிரசித்தம்" என்றும், "செல்வத்தைக் கொடுப்பதிலும் ஆபத்துக்களைப் போக்குவதிலும் அந்தப் புருஷோத்தமனான விஷ்ணுவைத் தவிர, வேறு ஒருவரும் ஆற்றல் உள்ளவர்களாகக் காணப்படவில்லை" என்றும் சொல்லுகிற படியே.

[3]"நான்முகனே! முக்கண்ணப்பா" என்கிற இடத்தில் கண்களைச் செம்பளித்துக் கொண்டு போய் விசேடியத்திலே இளைப்பாறினர்; இங்கு விசேடணமே தன் குறிக்கோளான படியைச் சொல்லுகிறது '**என் பொல்லாக் கனிவாய்த் தாம**

விஷ்ணுநாமா ஸவேதேஷு வேதாந்தேஷு ச கீயதே - எல்லாப் பொருள்கட்கும் ஆதாரமாக உள்ள பரமாத்மா சர்வேஸ்வரன் எனப்படுகிறூர்; அவரே விஷ்ணு என்னும் பெயரையுடையவர்; அவர் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் பேசப்படுகிறூர்" என்பது நினைத்தல் தகும்.

1. பிரமனுக்கும் சிவனுக்கும் அந்தரியாமியாக இருந்து கொண்டு படைத்தல் அழித்தல்களைச் செய்வது போன்று, காத்தலுக்கும் வேறு ஓர் ஆள் இட ஒண்ணுதோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறூர் 'கண் அற்று' என்று தொடங்கி. படைத்தலில் கண் அறுகையாவது, அவர் அவர்களுடைய கர்மங்களுக்குத் தகுதியாக உயர்வு தாழ்வுகள் உண்டாகும்படி படைத்தல்.

2. பாதுகாத்தல், வேறு சிலரால் ஒண்ணுது என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறூர் 'காப்பாற்றுவதில்' என்றும், 'செல்வத்தை' என்றும் தொடங்கி.

> நஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேஸ்வரம் ஹரிம்
> ஸ்திதௌ ஸ்திதம் மஹாத்மாநம் பவதி அந்யஸ்ய கஸ்யசித்.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 22: 19.

> ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே
> ஸமர்த்தோ த்ருஸ்யதே கஸ்சித் தம்விநா புருஷோத்தமம்.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 22:

3. "என் பொல்லாக் கனிவாய்த் தாமரைக் கண் கருமாணிக்கமே" என்ற விசேஷணங்களுக்கு, பாவம் அருளிச்செய்கிறூர் 'நான்முகனே என்று' தொடங்கி.

ரைக் கண் கருமாணிக்கமே !' என்று. [1] ஆழ்வார்கள் திருமேனிக்கு அப்பால் போக அறியார்கள்; [2] இந்தத் திருமேனியையே பற்றுகோடாகச் சொல்லாநிற்கச்செய்தே, இதனை விட்டுத் திவ்விய ஆத்ம சொரூபத்தளவும் போ என்கிறது, இதனை விடச் சொல்லுகிறது அன்று; திவ்ய ஆத்ம சொரூபத்தளவும் போவான் என்கையிலே கருத்து.

'பொல்லா' என்னுமதனை 'கருமாணிக்கம்' என்றதனோடே சேர்ப்பது. 'பொல்லாக் கருமாணிக்கம்' என்று கண்ணெச்சில் வாராமைக்காகக் கரி பூசுகிறார். அன்றிக்கே, அழகிலே வேறுபட்ட சிறப்பினையுடைமையாலே கூறுகிறது என்னுதல். கனிவாய் - [3] "பேசாதவன் விருப்பம் இல்லாதவன்" என்று சொல்லப்படுகிறவன், அநுகூலரைக் கண்டு அங்ஙனம் சொல்லப்படுகின்ற நிலை நீங்கி புன்முறுவல் செய்து நிற்கும் படியைச் சொல்லுகிறது; [4] "தங்களுடைய வினைத் தீயினால் வெந்தவர்களுக்குத் துன்பம் நீங்கும் பொருட்டு" என்கிறபடியே. தாமரைக் கண் - [5] வினவப் புக்கு விக்கித் தடுமாறினால், குறையும் தலைக்கட்டும் கண்களைச் சொல்லுகிறது; [6] "தேவனே! அடைக்

---

1. சர்வேஶ்வரனுக்குச் சொரூப குணங்கள் இருக்கத் திருமேனியைச் சொல்லுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆழ்வார்கள்' என்று தொடங்கி.

2. ஆயின், பற்றுவதற்கு எளிதாக இருக்கிற திவ்யமங்கள விக்கிரஹத்தை விட்டுத் திவ்யாத்ம சொரூபத்தைத் தியானம் செய்யச் சொல்லுகிறதே வேதாந்தங்களில்? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இந்தத் திருமேனியை' என்று தொடங்கி.

3. "கனிவாய்" என்றதனால் போதரும் பொருள், செந்நிறம் பொருந்திய வாய் என்பது, செந்நிறம் தோன்றுவது புன்முறுவல் செய்யும்போது ஆகையாலே அதனை அருளிச்செய்கிறார் 'பேசாதவன்' என்று தொடங்கி. "அவாக்யநாதர:" என்பது, சாந்தோக்ய உபநிடதம்.

4. புன்முறுவல் சொல்லுதற்குப் பிரமாணம் காட்டும் மூலமாக, பாவம் அருளிச்செய்கிறார் 'தங்களுடைய' என்று தொடங்கி.

"ஸ்வ கர்மாநல தப்தாநாம் த்யாயிநாம் கேதஶாந்தயே"

என்பது, ஸ்ரீ பௌஷ்கரம்.

5. "கனிவாய்" என்பதனையும் சேர்த்துக் கொண்டு "தாமரைக் கண்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வினவப் புக்கு' என்று தொடங்கி.

6. திருக் கண்களாலே குளிர நோக்கி என் துன்பத்தை நீக்கியருள வேண்டும் என்று கொண்டு அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தேவனே' என்று தொடங்கி.

தேவ ப்ரபந்நார்த்திஹர ப்ரஸாதம் குரு கேஶவ
அவலோகந தாநேந பூயோ மாம் பாலய அவ்யய.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 20 : 14.

கலம் அடைந்தவர்களுடைய துன்பத்தைப் போக்குகிறவனே! கேசவனே! அழிவு இல்லாதவனே! திரு அருள்புரிய வேண்டும்; பார்வையைச் செய்தலாலே மறுபடியும் என்னைக் காப்பாற்றியருள வேண்டும்" என்கிறபடியே. கரு மாணிக்கமே - [1] இவ் உலகத்தில் விடாய் தீர அணைக்கும் உடம்பைச் சொல்லுகிறது; [2]"இரண்டு சரீரங்களை உண்டாக்கிய மகாத்மாவான அந்தத் திருவடிக்கு, காலங் கருதி என்னால் விருப்பத்தோடு கொடுக்கப்பட்ட எல்லாப் பொருளுமான இந்த ஆலிங்கனமானது அவனது பெரிய கொடைக்கு ஒத்தது ஆகாது" என்கிறபடியே. [3]தாமரை பூத்தது ஒரு மாணிக்கம் புன்முறுவல் செய்தாற்போலே ஆயிற்று வடிவு இருப்பது.

என் கள்வா-[4]என் இசைவு இன்றிக்கே என்னைக் கவர்ந்தவனே! [5] கருமத்தினாலே, இறைவனுடையதான ஆத்மாவை முன் தோற்றாதே நின்று கவர்வான் இவன், வடிவினைக் காட்டி இவனைக் கவர்வான் அவன். [6]சர்வேஸ்வரனுக்கும் தனது பொருளைக் களவு கண்டுகொள்ள வேண்டும்படிக்கு ஈடாக அன்றோ இவனுடைய என்னின் உரம் இருப்பது.

---

1. "கருமாணிக்கமே" என்பதிலுள்ள கருமை குளிர்த்தியைக் காட்டுவதாகக் கொண்டு அதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவ் உலகத்தில்' என்று தொடங்கி.

2. அணைப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'இரண்டு சரீரங்களை' என்று தொடங்கி.

> ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:
> மயா காலம் இமம் ப்ராப்ய தத்த தஸ்ய மஹாத்மந:.

என்பது, ஸ்ரீராமா. யுத். 1 : 14.

3. "கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே" என்றதனை உருவகமாக அருளிச்செய்கிறார் 'தாமரை' என்று தொடங்கி.

4. "கள்வா" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என் இசைவு இன்றிக்கே' என்று தொடங்கி.

5. ஆத்மாவினைக் களவு காண்பவன் இவனாக இருக்க, அவனைக் "கள்வா" என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கருமத்தினாலே' என்று தொடங்கி. 'முன் தோற்றாதே நின்று' என்றது, ஈஸ்வரனுடையது என்று அறியாதே என்றபடி. "பண்டே உன் தொண்டாம் பழ உயிரை என்னது என்று, கொண்டேனைக் கள்வன் என்று கூறாதே" என்றார் திவ்ய கவியும்.

6. உடையவன் உடைமைப் பொருளைக் கொள்ளுதல் களவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரனுக்கும்' என்று தொடங்கி. 'என்னின் உரம்' என்றது, எனது என்னும் செருக்கின் வலிமை என்றபடி.

[1] ஸ்ரீ சனகராஜன் பெண்பிள்ளையை நீர் வார்ப்பித்துத் தனக்கு ஆக்கினாற் போலே அன்றோ, ஆத்மாவைத் தனக்கு ஆக்கிக் கொள்ளுகையாவது. தனியேன் ஆர் உயிரே - [2] என் இசைவு இன்றிக்கே என்னை அங்கீகரித்த அளவேயோ, உன் சுவட்டினை அறிவித்துப் பிரிந்தாலும் முடியாதபடி குணங்களின் தோற்றரவாலே உளேன் ஆம்படி செய்தவனே! இவ் உலக மக்களோடு பொருந்தாமையும் பரமபதத்திலே புகப் பெறாமையும் நோக்கித் '**தனியேன்**' என்கிறார். [3] பிராட்டி அசோகவனத்திலே அரக்கிகள் நடுவே இருந்தாற் போலே காணும் இவர்க்கு இவ் உலக மக்கள் நடுவே இருக்கிற இருப்பு. [4] உன்னைப் பிரிந்து, பொருந்தாத இவ் உலகத்திலே இருக்கின்ற எனக்கு உயிர்க்குக் காரணமாக உள்ளவனே!

[5] என் தலைமிசையாய் வந்திட்டு - "செழும் பறவை தான் ஏறித் திரிவான தாள் இணை என் தலை மேலே", "தலை மேல தாள் இணைகள்" என்று சொல்லுகிறபடியே குறைவு இல்லாமல் வந்து தோற்றி. ஒரு காரணமும் இல்லாமல் வந்து தோற்றி என்றுமாம். இனி - [6] உன்னைக் காட்டின மாத்திரம் அன்றியே, பரமபதத்தில் சுவட்டினையும் அறிவித்த பின்பு.

---

1. அதனை ஓர் எடுத்துக்காட்டு மூலம் விவரணம் செய்கிறார் 'ஸ்ரீ சனகராஜன்' என்று தொடங்கி. என்றது, ஸ்ரீ சனகராஜன் சீதையைத் தன் பெண் என்று நினைத்தது போன்று, இவனும் ஆத்மாவைத் தன்னது என்று நினைத்திருக்கிறான் என்றபடி.

2. "என் கள்வா" என்றது, உபகாரம் ஆனாற் போன்று, "ஆர் உயிர்" என்றதும் உபகாரத்தை நோக்கி என்கிறார் 'என் இசைவு இன்றிக்கே' என்று தொடங்கி.

3. தனிமைக்கு எடுத்துக்காட்டு ஒன்று காட்டுகிறார் 'பிராட்டி' என்று தொடங்கி.

4. "ஆர் உயிரே" என்றதற்குப் பதப் பொருள் அருளிச்செய்கிறார் 'உன்னைப் பிரிந்து' என்று தொடங்கி.

5. "என் தலைமிசையாய் வந்திட்டு" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருளிலே, தலைமிசை - என் தலைக்கு மேலே - அதாவது பூர்ணமாக வந்து தோற்றி என்பது பொருள். இதனையே 'குறைவு இல்லாமல் வந்து தோற்றி' என்கிறார். இரண்டாவது பொருளில், என்தலை - இத்தலை - இவ்விடம், மிசையாய்-மிகையாம்படி, வந்து தோற்றி - நிர்ஹேதுகமாக வந்து தோற்றி என்பது பொருள்; இதனையே 'ஒரு காரணமும் இல்லாமல் வந்து தோற்றி' என்கிறார். "செழும் பறவை" என்பது, திருவாய்மொழி, 10. 6 : 5.

6. மேலே போந்த "சூழ்விசும்பு" என்ற திருவாய்மொழியிற் சொன்ன பொருளையும் அநுவதித்துக் கொண்டு "இனி" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'உன்னை' என்று தொடங்கி.

நான் - [1]வழிச் சுவடு அறிந்த நான். போகல் ஒட்டேன் - [2]தம்முடைய செல்லாமையாலும் சம்பந்தத்தாலும் தடுக்கவும் வளைக்கவும் உரியரானபடி. [3]"உணவு இல்லாதவனும், ஒளி யிழந்த முகத்தை யுடையவனும் செல்வம் இல்லாதவனும் ஆன பிராமணன் போலே, எத்துணைக் காலம் என்னிடம் இரங்க இல்லையோ அத்துணைக் காலம் இலைக் குடிலின் முன்பு படுக்கிறேன்" என்கிறபடியே. போகல் ஒட்டேன் - [4]வரும்போது உன் சுவாதந்திரியத்தாலே வரலாமத்தனை அல்லது, போம்போது உன் காரியம் உன்னதோ? [5]இவர்க்கு இப்படிச் சொல்லலாகிறது, முற்றறிவினன் அறியத் தமக்கு உண்டான விரைவாலேயும், விரும்பிய அளவில் இவர் காரியம் செய்யப் பெறாத பிற்பாட்டுக்கு "நான் அடையத் தக்கவர்களான இப்படிப்பட்ட அந்தணர்களால் நான் அடையப் பட்டேன் என்னும் இது எனக்கு மிகவும் நாணமாக இருக்கிறது; நீங்கள் என்னுடைய தவற்றினைப் பொறுத்தருள வேண்டும்" என்று நாணம் கொள்பவன் ஆகையாலும் அன்றோ.

ஒன்றும் மாயம் செய்யேல்-[6]உன்னை அறிவதற்கு முன்பு, விடத்தக்க விஷயங்களைக் காட்டி அதுவே அமையும் என்னச் செய்தாய்; உன்னை அறிந்த பின்பு குணங்களை அநுபவிப்

---

1. மேற் கூறிய முறையிலேயே "நான்" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வழிச் சுவடு' என்று தொடங்கி.

2. அடியனானவன் "போகலொட்டேன்" என்று நிர்ப்பந்திக்கலாமோ? என்ன, 'தம்முடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. இப்படி நிர்ப்பந்தித்து வளைத்த பேர் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உணவு இல்லாதவனும்' என்று தொடங்கி.

> அநாஹாரோ நிராலோகோ தநஹீநா யதாத்விஜ:
> ஶேஷ்யே புரஸ்தாத் ஶாலாயா: யாவத்மே ந ப்ரஸீததி.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 111 : 14. இது, ஸ்ரீ பரதாழ்வான் கூற்று.

4. "போகலொட்டேன்" என்று நிர்ப்பந்திப்பதற்கு வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறார் 'வரும்போது' என்று தொடங்கி. என்றது, அடியார்கட்குப் பரதந்திரப்பட்டவன் ஆதலாலும் வளைக்கிறார் என்றபடி.

5. அந்த ஆர்த்தியையும் பாரதந்திரியத்தையும் விவரிக்கிறார் 'இவர்க்கு இப்படி' என்று தொடங்கி.

> ப்ரஸீதந்து பவந்த: மே ஹ்ரீ: ஏஷா ஹி மமாதுலா
> யத் ஈத்ருஶை: அஹம் விப்ரை: உபஸ்தேயை: உபஸ்தித:.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 10 : 9.

6. "ஒன்றும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உன்னை' என்று தொடங்கி.

பித்து, [1]"உம்பர் என் குறை" என்னவும், [2]"ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்" என்னவும் செய்தாய்; அப்படியே, இனி, ஒரு குணத்தை அநுபவிக்கச் செய்து நான் பெற்றேனாகச் செய்து என்னை வஞ்சியாதே கொள். அங்ஙன் வேண்டுவான் என்? என்ன, என்னையே - [3]"காட்டிலே கொடிய அரக்கர்களாலே பல வகையிலே துன்புறுத்தப்பட்டவர்களாய்ப் பலராய் இருக்கிற முனிவர்களுடைய சரீரங்களைப் பார்த்தருள வேண்டும்; எழுந்தருள வேண்டும்" என்கிறபடியே, விரகம் தின்று குறைவுபட்ட உடம்பினைக் காட்டுகிறார்; [4]அங்குச் சரீர மாத்திரம் அவர்களுக்கு; இவர்க்கு ஆத்மாவின் நாசமன்றோ. (1)

1093.

மாயம் செய்யேல் என்னை; உன் திரு மார்வத்து மாலை நங்கை
வாசம் செய் பூங்குழலாள் திரு ஆணை; நின் ஆணை கண்டாய்;
நேசம் செய்து உன்னோடு என்னை உயிர் வேறு இன்றி ஒன்றாகவே
கூசம் செய்யாதுகொண்டாய்; என்னைக் கூவிக்கொள்ளாய்வந்து அந்தோ.

பொ - ரை :— என்னை வஞ்சியாது ஒழிய வேண்டும்; உனக்குக் கூடச் செல்வமாய் இருக்கிறவளும் திருமார்விற்கு மாலை போல் அலங்காரமாக இருக்கிறவளும் குணங்களுக்கு எல்லாம் கொள்கலமாக இருப்பவளும் உன் திருமேனிக்கும் வாசனையைக் கொடுக்கிற அழகிய கூந்தலை யுடையவளுமான பிராட்டியின் மேல் ஆணை; நின்மேல் ஆணை; என் சரீரத்தைக் கண்டு அருவருக்காமல் அன்பு வைத்து என் உயிர் வேறாகத் தோன்றாதபடி உன்னோடு ஒன்றாகவே என்னை அங்கீகரித்தாய்; ஐயகோ! வந்து என்னைக் கூவிக்கொள்ளவேண்டும்; உன்னை அணுகி அநுபவிக்கும்படி செய்ய வேண்டும்.

வி - கு:— 'மாயம் செய்யேல்' என்றது, இவர் ஆசைப்பட்டபடியே வெளியே காட்சியைக் கொடாது, தன்னுடைய யாதாயினும் ஒரு குணத்தையாவது, வடிவழகையாவது காட்டி, இவர் நினைத்ததனை மறக்கும்படி செய்தலை. கூசம் செய்யாது நேசம் செய்து உயிர் வேறு

1. "உம்பர்" என்பது, திருவாய்மொழி, 10. 8 : 7.
2. "ஈதே" என்பது, திருவாய்மொழி, 10. 8 : 10.
3. ஏஹி பஶ்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம்
ஹதாநாம் ராக்ஷஸை: கோரை: பஹூநாம் பஹுதாவநே.
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 6 : 16.
4. அவர்களைக் காட்டிலும் "என்னையே" என்னும் இவர்க்கு ஏற்றம் உண்டு என்கிறார் 'அங்கு' என்று தொடங்கி.

இன்றி உன்னோடு என்னை ஒன்றாகவே கொண்டாய் எனக் கூட்டுக. கண்டாய் என்பது முன்னிலை அசைச் சொல்.

ஈடு:—இரண்டாம் பாட்டு. [1] தாம் விரும்பியதைச் செய்தல்லது நிற்க ஒண்ணாதபடி அவனுக்குத் திரு ஆணை இடுகிறார்.

மாயம் செய்யேல் - [2] மேல் "மாயம் செய்யேல்" என்னச் செய்தே, மீண்டும் சொல்லுகிறது என்ன ஆற்றாமைதான்! [3] இப்படி இவர் நிர்ப்பந்தித்த இடத்திலும், உம்மை மாயம் செய்யோம்: "துக்கப்பட வேண்டாம்" என்னாமையாலே மாயம் செய்யேல் என்று மீண்டும் கூறுகின்றார். என்னை - [4] இதனால் உன்னுடைய விளையாட்டுக்கு உரிய இந்த உலகம் முடிந்துவிடாதுகாண். அன்றிக்கே, [5] "என்னையே எவர்கள் சரணமாக அடைகின்றார்களோ, அவர்கள் இந்த மாயையினைத் தாண்டுகிறார்கள்" என்கிற உன்னுடைய வார்த்தையை நம்பி, "அலர் மேல் மங்கை உறை மார்பா, உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்று புகல் புக்க என்னை வஞ்சியாதே கொள் என்னுதல். இப்படி நிர்ப்பந்திக்கச் செய்தேயும் "துக்கப்படாதே" என்னாமையாலே, அவனுக்கும் மறுக்க ஒண்ணாதபடி பெரிய பிராட்டியார் திரு ஆணை இடுகிறார்: உன் திரு - [6] "விஷ்ணுவுக்

---

1. "திரு ஆணை நின் ஆணை கண்டாய்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அநுவாதத்துக்கு பாவம் அருளிச்செய்கிறார் 'மேல்' என்று தொடங்கி.

3. அநுவாதத்துக்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

4. "என்னை" என்பதற்கு, என் ஒருவனையும் என்றும், அடைக்கலம் புகுந்த என்னை என்றும் இரண்டு வகையில் கருத்து அருளிச்செய்கிறார். இவ் இரண்டு கருத்துக்களையும் முறையே 'இதனால்' என்று தொடங்கியும் 'அன்றிக்கே' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார். இதனால் - என்னை அங்கீகரித்ததனால்.

5. தைவீ ஹி ஏஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே.

என்பது, ஸ்ரீ கீதை, 7: 14.

6. "உன் திரு" என்பதற்கு, உனக்குத் திரு என்றும், உன்னுடைய திரு என்றும் இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'விஷ்ணுவுக்கும்' என்று தொடங்கியும், 'விஷ்ணுவினுடைய' என்று தொடங்கியும். இரண்டாவது பொருளுக்கு, விஷ்ணுவுக்கு அடியவள் என்பது கருத்து.

நித்யைவ ஏஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீ: அநபாயிநீ
யதா ஸர்வகத: விஷ்ணு: ததைவ இயம் த்விஜோத்தம.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 8: 17.

கும் செல்வமாக இருப்பவள்" என்கிறபடியே உலகத்துக்கு எல்லாம் செல்வம் அவன்; அவனுக்கும் செல்வம் இவள். அன்றிக்கே, "விஷ்ணுவினுடைய திரு" என்கிறபடியே உன்னுடைய செல்வம் என்னுதல். [1]"திருவுக்கும் திருவாகிய செல்வா!" என்றும், [2]"திருவுக்கும் திருவாகிய இறைவனே" என்றும், [3]"தேவரீரை உதார வாக்கினையுடைய ஆழ்வார் போன்றவர்கள் சொல்லுகிறார்கள்" என்றும் சொல்லுகிறபடியே. முதற் பொருளுக்கு, [4]"திருமகளாலே சர்வேஸ்வரன் தெய்வத் தன்மையை யடைகிறான்" என்றும், [5]"யாவர் ஒருவர்க்கு அந்த ஜனக குலத்தில் பிறந்த பிராட்டி மனைவியாக இருக்கின்றாளோ அவருடைய ஆற்றல் அளவிட்டு அறியக் கூடாததாக இருக்கிறது" என்றும் கூறுகிறபடியே. [6]ஆதாரப் பிரதானமாய் இருத்தல், ஆதேயப் பிரதானமாய் இருத்தல்; [7]ஆதேயத்துக்கு ஆதாரத்தை ஒழிய உளதாம் தன்மையும் இல்லை; நிரூப்யத்துக்கு நிரூபகத்தை ஒழிய சொரூபத்தின் நிலை இல்லை; ஒன்றை ஒன்று ஒழியில் சொரூபம் நிலைபெறுதல்

---

1. இரண்டாவதாக அருளிச்செய்த பொருளுக்குப் பிரமாணங்கள் மூன்று காட்டுகிறார் 'திருவுக்கும்' என்று தொடங்கி. 'திருவுக்கும்' என்றது, பெரிய திருமொழி, 7. 7 : 1.

2. "ஶ்ரிய: ஶ்ரியம் பக்தஜநைக ஜீவிதம்
ஸமர்த்தம் ஆபத்ஸகம் அர்த்தி கல்பகம்."

என்பது, தோத்திரரத்நம். 45.

3. தாம்ஶ்ரீ: இதி த்வத் உபஸம்ஶ்ரயணாத் நிராஹு:
த்வாம்ஹி ஶ்ரிய: ஶ்ரியம் உதாஹு: உதாரவாச:.

என்பது, ஸ்ரீ வைகுண்டஸ்தவம், 29.

4. முதலிலே அருளிச்செய்த 'உனக்குத் திரு' என்ற பொருளுக்கும் பிரமாணங்கள் இரண்டு காட்டுகிறார் 'திருமகளாலே' என்று தொடங்கி. "ஶ்ரத்தயா தேவ:" என்பது, சுருதி வாக்கியம்.

5. 'யாவர் ஒருவர்க்கு' என்று தொடங்கும் பொருள் அமைந்த சுலோகத்தை மேலே 139-ஆம் பக். குறிப்புரையிற் காண்க.

6. மேலே கூறிய இரண்டு பொருள்களையும் எதிர் நிரல் நிறையாக விவரணம் செய்கிறார் 'ஆதாரப் பிரதாநமாய் இருத்தல்' என்று தொடங்கி. என்றது, எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாக இருக்கின்ற ஈஸ்வரனுக்கு முதன்மை. 'ஆதேயப் பிரதானமாயிருத்தல்' என்றது, மலரிலே உள்ள மணத்தைப் போன்று என்றபடி. இதனால் பிராட்டிக்கு முதன்மை கூறியபடி.

7. மேலே கூறிய இரண்டு பொருள்களையும் உறுதிப்படுத்துகிறார் 'ஆதேயத்துக்கு' என்று தொடங்கி. ஆதேயம் - பிராட்டி. ஆதாரம் - சர்வேஸ்வரன். நிரூப்யம் - சர்வேஸ்வரன். நிரூபகம் - தர்மம் ; பிராட்டி.

இல்லை, [1]"தன் ஆகத் திருமங்கை தங்கிய திருமார்வன்", "பிராட்டியைப் பிரிந்தால் ஒரு கணநேரமும் உய்யேன்" என்கிறபடியே.

மார்வத்து மாலை - [2]கேவலம் செல்வமாய் இருக்கை அன்றிக்கே திருமார்பிற்கு அலங்காரமுமாய் இருக்கை. [3] மார்பிற்கு அலங்காரம் அவள், அவளுக்கு அலங்காரம் மார்பு; [4]"தேவரீருடைய சொரூபமானது தேவரீருக்கு அன்று; அடியார்களுக்காகவே; தேவரீருடைய திருமேனி தேவரீருக்கு அன்று; அடியார்களுக்காகவே; தேவரீர் அடியார்களுக்காகவே பிரகாசித்துக்கொண்டு இருக்கிறீர்" என்கிறபடியே. நங்கை - [5] வடிவு ஒழிய, மற்றைய சொரூபகுண விபூதிகளும்அவளாலே என்கை.

---

1. 'ஒன்றை ஒன்று ஒழியில் சொரூபம் நிலைபெறுதல் இல்லை' என்றதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தன்னாகத் திருமங்கை' என்று தொடங்கி. இது, நாய்ச்சியார் திருமொழி, 8 : 4. இது, சர்வேஸ்வரனை நீங்கில் பிராட்டிக்குச் சொரூபம் இல்லை என்பதற்கு மேற்கோள். தான் உளள் ஆகைக்காக - தன் சத்தை பெறுகைக்காக நித்ய யுவதியான பெரிய பிராட்டியார் நித்திய வாசம் செய்யும் வீறுடைய திருமார்பு படைத்தவர்க்கு என்பது அவ் அடிக்குப் பொருள். "பிராட்டியைப் பிரிந்தால் ஒரு கணநேரமும் உய்யேன்" என்பது, பிராட்டியைப் பிரிந்தால் சர்வேஸ்வரனுக்குச் சொரூபம் - சத்தை இல்லை என்பதற்கு மேற்கோள்.

சிரம் ஜீவதி வைதேஹீ யதி மாஸம் தரிஷ்யதி
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 66 : 10.

2. "உன்திரு" என்றதன்பின் "மார்வத்து மாலை" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கேவலம்' என்று தொடங்கி.

3. பிராட்டியை மாலை என்கையாலே, மார்விற்கு மாலை இன்றேல் அழகு இல்லாமையாலும், மாலைக்கும் மார்வில் அணிந்திராத காலத்து அழகு இல்லாமையாலும் அதற்குத் தகுதியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'மார்பிற்கு' என்று தொடங்கி.

4. மார்வு பிராட்டிக்கு அலங்காரமாகைக்கு அவன் மார்பு அவளுக்கு அதீனமாக இருக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தேவரீருடைய' என்று தொடங்கி.

ந தே ரூபம் நச ஆகாரஃ ந ஆயுதாநி நச ஆஸ்பதம்
ததாபி புருஷாகாரஃ பக்தாநாம் த்வம் ப்ரகாஸஸே.

என்பது, ஜிதந்தா, 5.

5. இவளுடைய நிறைவின் எல்லை அவனுடைய சொரூபம் முதலானவற்றிற்கும் நிறைவு உண்டாகும்படி இருக்கும் என்று கொண்டு அருளிச்செய்கிறார் 'வடிவு ஒழிய' என்று தொடங்கி. வடிவு ஒழிய - அவன் வடிவிற்கு அலங்காரமாதல் அன்றிக்கே. நங்கை-சொரூப குண விபூதிகளால் நிறைந்தவள். இதற்கு ஆண்பாற் பெயர் நம்பி.

[1]“உலகங்கட்கெல்லாம் தலைவன்” என்கிறவனுக்கும் இவள் நிறைவாலே பொரிபுறம் தடவ வேண்டும்படி இருக்கை.[2] மற்றையோரைக் காட்டிலும் வேறுபாடு இத்தனையுமே அன்றோ. [3] திருவாளனுக்குத் திருஇல்லாதார் ஒப்பு ஆகார் அன்றோ. [4]ஞானமே வடிவாக இருத்தலில் ஒற்றுமை.

வாசம் செய் பூங் குழலாள் - [5]நாற்றத்துக்கும் நாற்றம் கொடுக்கும் குழல். “ஸர்வகந்தః” என்பவனுக்கும் நறுமணம் கொடுக்கும் குழல். [6] “ஸர்வகந்தః” என்னும் ஏற்றம் இத் தலையாலே காணும் அவனுக்கு வந்தது. பூங்குழல் - பூவை யுடைத்தான குழல் என்னுதல்; அழகிய குழல் என்னுதல்.

திரு ஆணை நின் ஆணை கண்டாய் - [7]திருவினுடைய ஆணை காண், என் காரியம் செய்தல்லது இட்ட அடி பேர ஒண்ணாத படி உனக்கு இட்ட ஆணை. போகவல்லையாகில் போய்க் காண்

---

1. மேலே ‘வடிவு ஒழிய’ என்று தொடங்கி அருளிச்செய்த வாக்கியத்தை விவரணம் செய்கிறார் ‘உலகங்கட்கெல்லாம்’ என்று தொடங்கி.

“பதிம் விஶ்வஸ்ய ஆத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவம் அச்யுதம்” என்பது, தைத்திரீய நாரா.

2. மேல் வாக்கியத்தால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் ‘மற்றையோரைக் காட்டிலும்’ என்று தொடங்கி. என்றது, பிரமன் சிவன் முதலான தேவர்களைக் காட்டிலும் சர்வேஸ்வரனுக்கு உண்டான திருமகள் கேள்வனான தன்மையாலே வேற்றுமை தோற்றுகிறது என்றபடி.

3. இதனை விவரணம் செய்கிறார் ‘திருவாளனுக்கு’ என்று தொடங்கி.

4. “நர நாரீமயோஹரி:-பெருமானும் பிராட்டியும் சேர்ந்த உருவமே அரி என்பது” என்று ஈஶ்வரனோடு ஐக்யம் சொல்லாநிற்க, மேலே ‘உன்னுடைய திரு’ என்று அவனுக்கு அடியவள் என்று கூறியது தகுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ‘ஞானமே வடிவாக இருத்தலில் ஒற்றுமை’ என்று. இவ்வாக்கியத்தை மேலே கூறிய ‘ஆதாரப் பிரதானமாக இருத்தல்’ என்ற வாக்கியத்தோடே சேர்த்துப் பொருள் காண்க.

5. “வாசம் செய்” என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் ‘நாற்றத்துக்கும்’ என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் “ஸர்வகந்தః” என்று தொடங்கி.

6. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் ‘ஸர்வகந்தః என்னும் ஏற்றம்’ என்று தொடங்கி. ‘இத் தலையாலே’ என்பதற்கு, இந்தத் தலைமயிராலே என்பது நேர் பொருள்.

7. “வளைத்து வைத்தேன் இனிப் போகலொட்டேன் உன்தன் இந்திர ஞாலங்களால், ஒளித்திடில் நின் திரு ஆணை கண்டாய் நீ ஒருவர்க்கும் மெய்யன் அல்லை” என்பது, பெரியாழ்வார் திருமொழி, 5. 3 : 2.

என்பது கருத்து. [1]எல்லார்க்கும் அறப் பெரியவன் ஆகை யாலே மற்றையோர்க்கு எல்லாம் உன்னுடைய ஆணை, உனக்கு நீ உகந்தார் ஆணை இடுமத்தனை அன்றோ. [2]அன்றிக்கே, "ஓ பரதனே! தாயாரான கைகேயியைக் காப்பாற்று; அவளைக் குறித்து அவளிடத்தில் கோபம் வையாதே; என்னாலும் சீதையாலும் ஆணை வைக்கப்பட்டிருக்கிறாய்" என்கிறபடியே, பெரிய பிராட்டியார் ஆணை, உன் ஆணை காண் என்னலுமாம். [3]நீர் இட்ட ஆணை உம்முடைய சொருபத்திற்கு மாறுபட்டது காணும்; அடியர் ஆனால் நாம் செய்தபடி கண்டிருக்கவேண்டும் காணும்; என்ன, மாறுபட்டது அன்று என்கிறார் பின் இரண்டு அடிகளாலும்: அதாவது, ஆற்றாமையின் மிகுதியைச் சொல்லி நீக்குகிறார் என்றபடி.

'உமக்குப் பாரதந்திரியம் சொருபமானால் தலைவன் செய்தபடி கண்டிருக்குமத்தனை காணும்' என்ன, 'அடியவன் உளனாய்க் கண்டிருக்க வேண்டுமே!' என்று [4]தம்முடைய இல்லாமையை விவரிக்கிறது மேல் இரண்டு அடிகளாலும்: [5]பாரதந்திரியம் சொருபமானால் வேறு நிற்றலும் வேறாகத் தோன்றுதலும் உண்டோ என்கிறார். நேசம் செய்து-[6]பெரிய பிராட்டி

---

1. "திரு ஆணை" என்றாலே போதியதாமே, "நின் ஆணை" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

2. "திரு ஆணை நின் ஆணை" என்பதற்கு, வேறும் ஒருவகையில் கருத்து அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

மாதரம் ரக்ஷ கைகேயீம் மா ரோஷம் குரு தாம் ப்ரதி
மயா ச ஸீதயாசைவ ஶப்தஃ அஸி ரகுநந்தந.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 113: 27.

ஸ்ரீ பரதாழ்வானைப் பார்த்து ஸ்ரீராமபிரான் கூறியது. இருவர் மேலும் ஆணை என்பது இரண்டாவது கருத்துக்குப் பொருள்.

3. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நீர் இட்ட ஆணை' என்று தொடங்கி.

4. தம்முடைய இல்லாமையை - சத்தை இல்லாமையை.

5. பிரிவு மாத்திரத்திலேயே தாம் உளராகாமை உளதாமோ? என்ன, "உயிர் வேறு இன்றி" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாரதந்திரியம்' என்று தொடங்கி. இவ் வாக்கியத்தை, மேல் 'நீர் இட்ட ஆணை' என்று தொடங்கி அருளிச்செய்த சங்கைக்கு விடையாகவும் கோடல் அமையும்.

6. 'நேசம் செய்து' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பெரிய பிராட்டியார்' என்று தொடங்கி.

யார் பக்கலிலும் செய்யாத அன்பை என் பக்கலிலே செய்து. [1]நான் அன்பு செலுத்த இருந்தாயோ, என் விடாய்க்கு அடி உன் விடாய் அன்றோ? [2]"அகலகில்லேன் இறையும்" என்று அவள் செல்லாமை கண்டே அன்றோ அவள் பக்கல் அன்பு செலுத்தினாய். உன்னோடு என்னை - உன்னை அறிந்தாயோ, என்னை அறிந்தாயோ? [3]விழுமிய அமரர் முனிவர் விழுங்கும் கன்னல் கனி நீ, அதற்கு எதிர்த்தலை அடியேன். அன்றிக்கே, "இவன் அணு அளவினன், ஏவப்படுகின்றவன்; நாம் எங்கும் பரந்திருப்பவன், ஏவுகின்றவன்" என்று பார்த்தாயோ? என்னுதல். உயிர் வேறு இன்றி ஒன்றாகவே-உயிர் வேறுபாடு இல்லாதபடி அன்றோ என்னை அங்கீகரித்தது. [4]"உன்னது என்னது ஆவியும், என்னது உன்னது ஆவியும்" என்னும்படி என்னைப் பிரித்துக் காண ஒண்ணாதபடி அன்றோ நீ தலையாலே சுமந்தது. [5]"சூரியனோடு கூடியது ஒளி என்பது

---

1. இதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'நான் அன்பு செலுத்த' என்று தொடங்கி.

2. பிராட்டி பக்கலிலும் வையாத அன்பினை என் பக்கல் வைத்தான் என்கைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அகலகில்லேன்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 6. 10 : 10.

பிராட்டியின் செல்லாமை கண்டு அவள் பக்கல் அன்பு செலுத்தினான் என்பதற்குக் காரணம் என்? என்ன, "இன்னும் ஈண்டு ஒரு திங்கள் இருப்பல் யான், பின்னை ஆவி பிடிக்கின்றிலேன் அந்த, மன்னன் ஆணை இதனை மனக் கொள் நீ" என்ற பிராட்டி வார்த்தையைத் திருவடி சொல்லக் கேட்டுச் "சீதையைப் பிரிந்து ஒரு கணமும் நான் உயிர் வாழேன்" என்று பெருமாள் அருளிச்செய்தது என்பர்.

3. 'உன்னை அறிந்தாயோ, என்னை அறிந்தாயோ' என்றதனை விவரணம் செய்கிறார் 'விழுமிய' என்று தொடங்கி. 'விழுமிய முனிவர்' என்பது, திருவாய்மொழி, 3. 6 : 7. 'அதற்கு எதிர்த்தலை அடியேன்' என்னுமிவ்விடத்தில் "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்பது நினைத்தல் தகும்.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'உன்னது' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 4. 3 : 8. என்றது, கலவிக்காலத்தில் என் சொரூபம் நீ இட்ட வழக்காகவும், உன் சொரூபம் நான் இட்ட வழக்காகவும் தலை தடுமாறாக அன்றோ நீ செயல் செய்தபடி என்றபடி. தலையாலே சுமந்தது - தலை தடுமாறாகச் செயல் புரிந்தது.

5. இதனால் பெரிய பிராட்டியாரைக் காட்டிலும் வேறுபாடு தோற்றி இருக்கிறது என்கிறார் 'சூரியனோடு' என்று தொடங்கி.

ஶக்யா லோபயிதும் ந அஹம் ஐஶ்வர்யேண தநேநவா
அநந்யா ராகவேண அஹம் பாஸ்கரேண ப்ரபா யதா,

என்பது, ஸ்ரீராமா. சுந். 21 : 15.

போன்று" என்கிற [1]இதுவும் விளக்கம் இல்லை என்னலாம்படி செய்தான் என்றபடி.

கூசம் செய்யாது கொண்டாய் - முற்றறிவினனான நீயும் வாசி வைத்துக் கலக்க அறிந்திலை. என் பக்கல் உள்ள தாழ்மையைப் பாராதே அங்கீகரித்தாய். [2]முதலிலே என்னுடைய முன்னைய செயல்களைப் பாராதே மயர்வற மதிநலம் அருளினாய்; பின்பு, "வளவேழ் உலகின்" என்ற திருவாய்மொழியிலே நான் 'தாழ்ந்தவன்' என்று அகல, என்னை என் வழியிலே விடாதே உன் செல்லாமையைக் காட்டிச் சேர்த்துக்கொண்டாய். [3]இப்படி அன்று செய்திலையாகில் இன்று வருந்த வேண்டா ஆயிற்றே. என்னைக் கூவிக் கொள்ளாய் வந்து - ஆனபின்பு, என்னை ஈண்டென வந்து அணுகப் பாராய். [4]சாஸ்திரங்களால் அறிவிக்கும் அளவு போராது; குணங்களை அநுபவிப்பிக்கும் அளவாலே போராது; உட்கண்ணால் காணலும் போராது; உன்னைக் கிட்டி அநுபவிக்கும்படி செய்ய வேண்டும். அந்தோ-[5]தன்னை ஒழியச் செல்லாமையைத் தானே விளைத்துக் கூப்பிட வந்து முகம் காட்டாதொழிவதே! (2)

1094.

கூவிக் கொள்ளாய் வந்து, அந்தோ! என் பொல்லாக் கருமாணிக்கமே!
ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு நின்னலால், அறிகின்றிலேன் யான்;
மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரன் ஆதிக்குஎல்லாம்
நாவிக் கமல முதல் கிழங்கே! உம்பர் அந்த அதுவே!

---

1. 'இதுவும் விளக்கம் இல்லை என்னலாம்படி செய்தான்' என்றது, ஒளி என்றும் ஒளியையுடைய பொருள் என்றும் பேதம் உண்டு அங்கு; அப்படி இன்றிக்கே, ஒரே பொருள் என்னலாம்படி செய்தான் இங்கு என்றபடி.

2. தாழ்வினைப் பாராதே அங்கீகரித்தமையை விவரணம் செய்கிறார் 'முதலிலே' என்று தொடங்கி.

3. "கூசம் செய்யாது கொண்டாய்" என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'இப்படி அன்று' என்று தொடங்கி.

4. "வந்து கூவிக்கொள்ளாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சாஸ்திரங்களால்' என்று தொடங்கி.

5. "அந்தோ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன்னை ஒழிய' என்று தொடங்கி.

பொ - ரை :—எனக்குத் தொலை செய்யாத கரிய மாணிக்கம் போன்றவனே! பொருந்தித் தொழுகின்ற பிரமன் சிவன் இந்திரன் முதலான தேவர்களுக்கு எல்லாம் காரணமான திரு நாபிக் கமலத்துக்கு மூலமாக இருப்பவனே! பிரமன் முதலான தேவர்களுக்கும் அப்பாற் பட்டிருக்கின்ற நித்தியசூரிகளுக்கும் அடையத்தக்க பொருளாக இருப் பவனே! என் உயிருக்குப் பற்றுக் கோடாக உள்ள ஒரு கொம்பு உன்னைத் தவிர வேறு அறிகின்றிலேன் யான்; ஆதலால், நீ தானே வந்து அழைத்துக்கொண்டு அருளல் வேண்டும்; ஐயோ! உன் காரி யத்தை யான் கூற வேண்டுவதே!

வி - கு :—பொல்லல் - தொளைத்தல்; பொல்லா என்றது, வேறு ஒருவராலும் அநுபவிக்கப் படாமையைக் குறித்து நின்றது. முதல் நாவிக் கமலம் என மாற்றுக. அந்த அது என்பது அந்தது என வந்தது விகாரம். அந்த - அப்படிப்பட்ட.

ஈடு :—மூன்றும் பாட்டு. [1] பெருமிடுக்கரான பிரமன் முத லாயினோர்களுடைய சொரூபம், நிலை பேறு முதலாயினவற்றிற் கெல்லாம் நிர்வாஹகனான நீ, உன்னால் அல்லது ஜீவிக்க விரகு இன்றியே இருக்கிற என்னை, ஐயோ! வந்து அங்கீகரித்தருள வேண்டும் என்கிறார்.

கூவிக் கொள்ளாய் - [2] மேலே "கூவிக் கொள்ளாய்" என் றவர், இங்கேயும் 'கூவிக் கொள்ளாய்' என்கிறார் காணும்; விடாய் கொண்டவன் 'தண்ணீர், தண்ணீர்' என்னுமாறு போலே. [3] ஆற்றாமை மிக்குச் செல்லாநின்றாலும் பாசுரம் இது அல்லது இன்றிக்கே இருக்கிறபடி. [4] கூவிக் கொள்ளு மளவும் போராது, வந்து கூவிக் கொள்ள வேண்டும் என்பார் 'வந்து' என்கிறார். [5] ஆற்றாமை மிக்காலும் நான் வந்து

---

1. "என் பொல்லாக் கருமாணிக்கமே! மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரன் ஆதிக்கு எல்லாம் நாபிக் கமல முதற் கிழங்கே! உம்பர் அந்ததுவே! நான் ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்; அந்தோ! கூவிக் கொள்ளாய்" என்று கொண்டு கூட்டி அவதாரிகை அருளிச்செய் கிறார்.

2. "கூவிக் கொள்ளாய் வந்து அந்தோ" என்ற அநுவாதத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி.

3. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'ஆற்றாமை' என்று தொடங்கி.

4. "வந்து" என்று விசேடிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கூவிக் கொள்ளுமளவும்' என்று தொடங்கி.

5. ஆற்றாமை உண்டானால் நீரே சென்று கிட்ட ஒண்ணாதோ? என்ன, 'ஆற்றாமை மிக்காலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

கிட்டுகை முறைமை அன்று; உனக்குத் தாழ்ச்சியுமாம் என்கிறார். [1]எழுதும் என்னும் இது மிகை என்பவனுக்கு நாம் செல்லுதல் என்னுமது பொறுக்க முடியாதது என்னுமிடம் சொல்ல வேண்டாவே அன்றே. [2]வருகை அவனுக்கே உரியதாய் இருக்கிறபடி. "பகைவர்கள் வலியை அழிப்பவரான ஸ்ரீ ராமபிரான் இலங்கையை அம்புகளாலே நெருங்கினதாகச் செய்து என்னை அழைத்துக்கொண்டு செல்வராகில் செல்லும் அச் செயல் அவருக்குத் தக்கதாக இருக்கும்" என்றாள் பிராட்டி. அந்தோ - [3]உனக்கு நிறம் அன்று என்று நான் சொல்ல வேண்டுவதே!

என் பொல்லா கருமாணிக்கமே-தொளையாத மாணிக்கம். அநுபவிக்கப்படாத இரத்தினம் என்றபடி. அன்றிக்கே, உலகத்துக்கு ஒப்பான அழகு அன்றிக்கே வேறுபட்டிருக்கையாலே '**பொல்லா**' என்கிறார் என்னுதல். அன்றிக்கே, கண்ணெச்சில் வாராமைக்காகப் '**பொல்லா**' என்கிறார் என்னுதல். நீ அழைத்தபோது கண்டிருக்கல் ஆயிற்றே, நீ நீ அன்றிக்கே இருந்தாயாகில் என்பார் '**பொல்லாக் கருமாணிக்கமே**' என்கிறார். கிரமத்திலே அழைக்க நினைத்தாயாகில், அழகைக் காட்டி உனக்கே உரியவன் ஆகும்படி செய்தது என்? என்பார் '**என் பொல்லாக் கரு மாணிக்கமே**' என்கிறார். நன்று; [4]உலகங்கட்கு எல்லாம் வேறு பட்டவனாக இருப்பினும் சொரூபத்தைப் பார்த்து ஆறி இருக்க வேண்டாவோ? என்னில், அது செய்யுமிடத்தில் நான் உன்னை ஒழிய உளனாக வேண்டுமே? என்கிறார் மேல்: ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு நின் அலால்

1. இவர் சென்று கிட்டுகை இவர் சொரூபத்திற்கு ஒத்தது அன்று என்பது மாத்திரமே அன்று; அவனுக்கும் பொறுக்க ஒண்ணாதது என்கிறார் 'எழுதும் என்னும்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 9. 3: 9.

2. இதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'வருகை' என்று தொடங்கி.

> ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந:
> மாம் நயேத் யதி காகுத்ஸ்தஃ தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 3. 9: 30.

3. "அந்தோ" என்று துக்கிக்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'உனக்கு' என்று தொடங்கி.

4. "ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'உலகங்கட்கெல்லாம்' என்று தொடங்கி. சொரூபம் - அடிமையாகிற தன்மை.

அறிகின்றிலேன் யான்-[1] பற்றுக்கொம்பு வரையறை செய்யப் பட்டதாய் இருக்கிறபடி. கொடி, கொள்கொம்பை ஒழிய நிற்கவற்றோ! வேரை அறுத்துப் படர் என்றால் படருமோ? என்றபடி. [2]என் உயிர் பிழைப்பதற்குக் காரணமாய் இருப்பது ஒன்று, உன்னை ஒழிய வேறு காண்கின்றிலேன். [3]"ஸ்ரீ ராகவா! உம்மாலே பிரிக்கப்படுகின்ற சீதை பிழைக்க மாட்டாள்; நானும் பிழைக்கமாட்டேன்" என்கிறபடியே.

ஆயின், பேற்றுக்கு உடலாக நீரும் சில செய்தாலோ? எனின், மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரன் ஆதிக்கு எல்லாம் முதல் நாபிக்கமலம் கிழங்கே - செருக்கு அற்றவர் களாகித் தொழும் பிரமன் சிவன் முதலாயினோர்கட்கு எல்லாம் காரணமான திரு நாபீகமலத்துக்குக் கிழங்கு ஆனவனே! காரியம் இல்லாதபோது ஒருவர்க்கு ஒருவர் மாறுபட்டவர்களா யிருப்பார்களாதலானும், தங்களுக்கு ஒரு காரியம் வந்தவாறே எல்லாரும் கூடித்தொழுவார்களாதலானும் '**மேவித் தொழும்**' என்கிறார். அன்றிக்கே, யான் எனது என்னும் செருக்கு அற்றவர்களாய்த் தொழுகிறார்கள் என்பார் '**மேவித் தொழும்**' என்கிறார் என்னுதல். இதனால், மற்றைப் பிரமன் சிவன் முதலாயினோர்களும் கூடத் தங்கள் காரியத்தைத் தாங்களே செய்து கொள்ளுகின்றார்கள் இலர் என்பதனையும், 'ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு' என்று சொல்லாதவர்களுக்கும் உதவு மவன் அன்றோ நீ என்பதனையும் தெரிவித்தபடி. 'ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு' என்று சொல்ல அறியாமையாலே பிர

---

1. 'பற்றுக் கொம்பு வரையறை செய்யப்பட்டதாய் இருக்கிறபடி' என்றது, "நின் அலால் அறிகின்றிலேன்" என்றதனை நோக்கி. அதனை விவரணம் செய்கிறார் 'கொடி' என்று தொடங்கி.

2. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'என் உயிர்' என்று தொடங்கி.

3. அவனை ஒழியத் தரிக்க மாட்டாமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஸ்ரீ ராகவா' என்று தொடங்கி.

> நச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ
> முஹூர்த்தமபி ஜீவாவ: ஜலாத் மத்ஸ்யாவிவ உத்ருதௌ.

என்பது, ஸ்ரீ ராமா. அயோத். 53 : 31.

> நீருள எனின் உள, மீனும் நீலமும்;
> பாருள எனின் உள, யாவும்; பார்ப்புறின்,
> நாருள தனு வுளாய்! நானும் சீதையும்
> ஆர் உளர் எனின் உளேம்? அருளுவாய் என்றான்.

என்றார் கம்பநாட்டாழ்வாரும்.

மன் முதலாயினோர்கள் சொல்லார்கள்; நித்தியசூரிகள் யான் எனது என்னும் பற்று இல்லாதவர்கள் ஆதலானும் இன்று புதிதாகச் சொல்ல வேண்டாமையாலும் சொல்லார்கள். உம்பர் அந்த அதுவே - அவர்களுக்கும் மேலான நித்திய சூரிகட்கும் [1]அப்படிப்பட்ட அடையத்தக்க பொருளாக இருப்பவனே! பிரமாணப் பிரசித்தியைச் சொல்லுகிறார் 'அது' என்று. [2]நித்தியசூரிகளோடு பிரமன் முதலாயினர்களோடு வேறுபாடு அற நிர்வாஹகனாய் இருக்கிற நீ வந்து என்னைக் கூவிக்கொள்ளாய்.

இப் பாட்டால், முன்னும் பின்னும் சொல்லுகிற சாமாநாதிகரண்யத்துக்குக் காரணம், காரிய காரண பாவம் என்னுமதனை அருளிச்செய்தாராயிற்று. [3]"இவை எல்லாம் பிரஹ்மம் அல்லவா" என்பது சுருதி. (3)

1095.

உம்பர் அம் தண் பாழேயோ! அதனுள் மிசை நீயேயோ!
அம்பரம், நற் சோதி! அதனுள் பிரமன், அரன், நீ;
உம்பரும் யாதவரும் படைத்த முனிவன் அவன் நீ;
எம்பரம் சாதிக்கல் உற்று, என்னைப் போர விட்டிட்டாயே.

பொ - ரை:—எல்லாவற்றுக்கும் மேலே உள்ள அழகிய குளிர்ந்த மூலப்பகுதியும் நீயே; அம் மூலப்பகுதியில் இருக்கும் ஆத்மாக்களும் நீயே; ஆகாயமும் சிறந்த ஒளி மயமான நெருப்பும் நீயே; அந்த ஐம்பெரும் பூதங்களாலான உலகத்திலே இருக்கிற பிரமனும் சிவனும் நீயே; தேவர்களையும் மற்றும் உள்ள மனிதர் முதலானவர்களையும் படைத்த முனிவனான அவனும் நீயே; என் காரியத்தை நீயே செய்வதாக ஏறிட்டுக்கொண்டு, பின் அதனைச் செய்யாதே அறிவில் பொருளைப் போகடுமாறு போலே போகட்டுவிட்டாயே! என்கிறார்.

---

1. 'அப்படிப்பட்ட' என்றது, உபயலிங்க விசிஷ்டனாய் எளிதில் அடையத் தக்கவனான என்றபடி. 'பிரமாணப் பிரசித்தியை' என்றது, "ஸதா பஶ்யந்தி ஸூரய:—நித்தியசூரிகள் எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்" என்ற பிரசித்தியைச் சொல்லுகிறது.

2. அந்வய முகத்தால் பாவம் அருளிச்செய்கிறார் 'நித்திய சூரிகளோடு' என்று தொடங்கி.

3. "ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம" என்பது, சாந்தோக்யம்.

வி - கு :—பாழ் - மூலப்பகுதி. அதனுள்மிசை - ஆத்மா. போரவிட்டிட்டாய் - உன் பக்கல் நின்றும் அகன்று போம்படி உபேக்ஷித்துப் பொகட்டுவிட்டாய்.

ஈடு :—நாலாம் பாட்டு. [1] எல்லாப் பொருள்கட்கும் நிர்வாஹகனான நீ, என் காரியத்தை நானே செய்து கொள்வேனாகப் பார்த்தருளினாயாகில், என்னைக் கைவிட்டாய் அல்லையோ? என்கிறார்.

உம்பர் அம் தண் பாழே ஓ - [2] மகான் முதலான காரியங்களுக்கு எல்லாம் காரணமாகையாலே மேலாய், தன்னுடைய ஒரு கூற்றாலே காரியவர்க்கத்தைப் பிறப்பிக்க வற்றான ஆற்றலையுடைத்தாய், வியக்கத்தக்க பரிணாமத்தையுடையதாய், ஆத்மாக்களுக்குப் போகத்தையும் மோக்ஷத்தையும் விளைத்துக் கொள்ளலாம் நிலமாய் இருந்துள்ள மூலப்பகுதிக்கு நிர்வாஹகன் ஆனவனே! உம்பர்-மேல். அம் தண்-அழகிதுமாய்க் குளிர்ந்திருக்கை. பாழ் - படைத்தற்குத் தகுதியாய் இருக்கை. [3]காரண நிலையில் காரியத்துக்குத் தகுதியாக நின்று தன் காரியத்தாலே ஆத்மாக்களுக்குப் போகத்தையும் மோக்ஷத்தையும் விளைக்கவற்று என்னுமிடத்தைச் சொல்லுகிறது. [4] வெண்மை என்று கொண்டு பிரித்துக் காட்டுஞ் சொல்லாலே தருமத்தைப் பிரியச் சொல்லுமாறு போலே, பிரியச் சொல்லப் போகாது இறைவனுக்குச் சரீரமானவற்றை. ஆதலின், 'பாழேயோ' என்கிறார். [5]'உம்பர் அம் தண் பாழேயோ' என்கிற இதனால், ஆத்மாக்களுக்குச் சரீரமாய் அவ்வழியாலே ஈஸ்

---

1. திருப்பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பிரகிருதி மேலாக இருக்கும் வகையையும், அதற்கு அழகும் குளிர்ச்சியும் இன்னது என்னுமதனையும், "பாழ்" என்ற சொல்லுக்குப் பொருளும் அருளிச்செய்கிறார் 'மகான்' என்று தொடங்கி.

3. 'ஆத்மாக்களுக்குப் போகத்தையும் மோக்ஷத்தையும் விளைத்துக் கொள்ளலாம் நிலமாய்' என்று மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'காரண நிலையில்' என்று தொடங்கி.

4. 'ஆடை வெண்மை நிறத்தை யுடையது' என்னுமாறு போன்று பிரித்துச் சொல்லாமல் "பாழேயோ" என்று சமானாதிகரிக்கிறது (ஒன்றாகவே சொல்லுகிறது) என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வெண்மை' என்று தொடங்கி.

5. "பாழேயோ" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'உம்பர் அம்' என்று தொடங்கி.

வரனுக்குச் சரீரமாகை அன்றிக்கே,[1]"எவனுக்கு ஆத்மாக்கள் எல்லாம் சரீரமோ, எவனுக்கு மண் சரீரமோ" என்கிறபடியே ஆத்மாக்களுக்கு வேறுபட்டதான அறிவில்பொருளுக்கும் அவனை ஒழிய நிர்வாஹகர் இலர் என்கையைத் தெரிவித்தபடி. [2]'**பாழேயோ**' என்கிற இதனால், சுத்த பேதம் கொள்ளுகிற மீமாம்சகரையும், சொரூபத்தால் தாதாத்மியம் கொள்ளுகிற மாயாவாதிகளையும் அழிக்கிறது.

[3] அதனுள் மிசை நீயேயோ - அதிலே மறைந்து நிற்கிற சிறப்புடையதான ஆத்மாவுக்கு நிர்வாஹகன் ஆனவனே! நுட்பமானசித்துஅசித்துக்களைச் சரீரமாகவுடையவன்காரணமாகையாலே காரணனாய் உள்ள நிலை சொல்லிற்று. [4] இதனால் விசேடணத்துக்கு முதன்மை சொல்லும் நியாய வைசேடிக மதங்களும், விசேடணத்திற்குப் பொய்மை கூறும் மாயாவாதியின் மதமும் ஆழ்வார்க்கு உடன்பாடு அன்று என்றதாயிற்று. [5]'**நீயேயோ**' என்கிற இதனால், ஆத்மாவை ஒழியச் சரீரத்துக்கு நிலை இல்லாதவாறு போன்று, ஈஸ்வரனை ஒழிய ஆத்மாவுக்கு நிலை இல்லை என்கிறது. அம்பரம் நல் சோதி - ஆகாசமும் சிறப்புடையதான ஒளியும். இவை இரண்டும் மற்றைய பூதங்கட்கும் உபலக்ஷணம். [6]"விஷ்ணுவின் சம்பந்தப்பட்ட

---

1. "யஸ்ய ஆத்மா ஶரீரம் - யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" என்பது, சுருதி.

2. "பாழேயோ" என்ற சாமாநாதிகரண்யத்தால் பலித்த விஷயத்தை அருளிச்செய்கிறார் 'பாழேயோ' என்று தொடங்கி. 'பாழேயோ என்கிற இதனால்' என்றது, "பாழேயோ" என்று சரீர சரீரி பாவ சம்பந்தம் சொல்லுகிற இதனால் என்றபடி. சொரூபத்தால் தாதாத்மியம் கொள்ளுகிற மாயாவாதி, ஜீவனோடே பிரஹ்மத்துக்கு ஐக்யம் சொல்லுகை ஒழிய, மூலப்பகுதியோடே ஐக்கியம் கூறமாட்டான்.

3. "அதனுள்" என்றது, அந்த மூலப்பகுதியிலே என்றபடி.

4. 'இதனால்' என்றது, "அதனுள் மிசை நீயேயோ" என்னும் இதனால் என்றபடி. 'விசேடணத்துக்கு முதன்மை சொல்லும்' என்றது, விசேடணமாக இருக்கிற உயிருக்குச் சுவாதந்திரியம் சொல்லும் என்றபடி. விசேடணத்துக்குப் பொய்மை கூறும்' என்றது, விசேடணமாக இருக்கிற உயிரோடே பிரஹ்மத்துக்கு உண்டான வேற்றுமை பொய் என்று சொல்லும் என்றபடி.

5. "நீயேயோ" என்று ஆத்மாவை இறைவனோடு ஒற்றுமைப் படுத்தியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நீயேயோ' என்று தொடங்கி.

6. ஒரு தொகையில், ஒன்று இரண்டனைச் சொல்லிய அளவில், கூறு தொழிந்த மற்றையவற்றை உபலக்ஷணத்தாற் கொள்வதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'விஷ்ணுவின்' என்று தொடங்கி.

யத் அம்பு வைஷ்ணவ: காய: தத: விப்ர வஸுந்தரா
பத்மாகாரா ஸமுத்பூதா பர்வதாப்த்யாதி ஸம்யுதா.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 2 : 12.

சரீரம் யாதொரு காரணத்தால் தண்ணீர் ஆயிற்றோ" என்று தண்ணீரைச் சொல்ல மற்றைப் பூதங்கட்கும் உபலக்ஷணம் ஆனாற்போலே. அதனுள் பிரமன் அரன் நீ - [1] பஞ்சீகிருத மான ஐம்பெரும் பூதங்களால் உண்டான அண்டங்களிலே வசிக்கின்ற பிரமன் சிவன் முதலாயினோர்களும் நீ இட்ட வழக்கு என்கிறது.

உம்பரும் யாதவரும் படைத்த முனிவன் அவன் நீ-தேவர்களையும் மற்றும் உள்ளாரையும் படைத்த முனியாகப் பிரசித்தனாக இருப்பவனும் நீ. [2]'பிரமன் அரன் நீ' என்ற ஒற்றுமைத் தன்மை, காரிய காரணத் தன்மை அடியாய் வந்தது; [3] "பரம்பொருளிடத்தினின்றும் உண்டானவை; அவனால் அழிக்கப்படுகின்றவை; காக்கப்படுகின்றவை; ஆதலால், காணப்படுகின்ற இந்தப் பொருள்கள் எல்லாம் பிரஹ்மம் அல்லவா" என்னுமாறு போலே. [4] எல்லாப் பொருள்களையும் கர்மங்கட்குத் தகுதியாகப் படைப்பதற்காக அவைகள் செய்த முன் கர்மங்களை நினைக்குமவன் அன்றோ முனி ஆகிறான்; [5]"நாம ரூப வேறுபாடு அற்ற சூக்கும சேதனங்களோடும் அசேதனங்களோடும் கூடிய அந்தப் பரம்பொருளே, நாம ரூப வேறுபாட்டிற்குரிய ஸ்தூல சேதன அசேதனங்களோடுங் கூடிய பொருளாகக் கடவேன் என்று எண்ணியது." [6] இதனால் ஸ்தூலமான சித்தை

1. பஞ்சீகிருதம் - சூக்கும பூதங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு சம பாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தைத் தன் ஸ்தூல பூதத்திலும், மற்றொரு பாகத்தை நான்கு சம பாகமாகப் பிரித்து, ஒவ்வொரு சிறு பாகத்தையும் மற்றை நான்கு ஸ்தூல பூதங்களிலும் சேர்த்தல்.

2. "படைத்த" என்றதனால் போதருவதோர் பொருள் விசேடத்தை அருளிச்செய்கிறார் 'பிரமன் அரன்' என்று தொடங்கி.

3. காரிய காரண பாவ நிபந்தனம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பரம்பொருளிடத்தினின்றும்' என்று தொடங்கி. இப் பொருள் அமைந்த உபநிடத வாக்கியத்தை மேலே 171-ஆம் பக். காண்க.

4. "முனி" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'எல்லாப் பொருள்களையும்' என்று தொடங்கி.

5. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'நாம ரூப வேறுபாடு' என்று தொடங்கி.

"தத் அஸதேவ ஸத் மநோகுருத ஸ்யாம் இதி"

என்பது, யஜுர்வேதம்.

6. "அம்பரம் நற்சோதி" என்றது முதல் "முனிவன் அவன் நீ" என்றது முடிய உள்ளனவற்றிற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி.

யும் அசித்தையும் சரீரமாக உடையவன் என்பதனுலே காரிய மாம் தன்மை சொல்லிற்றுயிற்று.

[1]எம்பரம் சாதிக்கல் உற்று என்னைப் போரவிட்டிட்டாயே- என் காரியத்தை நீயே செய்வதாக ஏறிட்டுக்கொண்டு, அதனை விட்டு, அறிவில் பொருளைப் பொகடுமாறு போலே பொகட் டாய் என்னுதல்; அன்றிக்கே, எல்லாவற்றையும் நிர்வஹிக் கிற நீ, என் ஒருவனையும் நான் என் காரியம் செய்வேனுகப் பார்த்து, உன் பக்கல் நின்றும் போரவிட்டு விரும்பாமல் இருந்தாய் என்னுதல். என்னை - உன்னுல் அல்லது செல்லாத என்னை. போர விட்டிட்டாய் – அவன் பக்கல் நின்றும் பிரிகதிர்ப்பட்டுப் போந்தாராய் இருக்கிறபடி. [2] குணம் நடை யாடாத தேசத்திலே தள்ளினுய் என்கிருர். [3]தெளிந்த ஞானத் தினை உண்டாக்கிப் பேற்றின் அளவும் செல்லாமல் இருக்கிற இது, நளன் தமயந்திக்கு வழிகாட்டி விட்டாற் போலே இருக் கிறது காணும். (4)

1096.

போர விட்டிட்டு என்னை நீ புறம்போக்கல் உற்றுல்,
பின்னை யான்
ஆரைக்கொண்டு எத்தை? அந்தோ! எனது என்பது என்?
யான் என்பது என்?
தீர இரும்பு உண்ட நீரது போல, என் ஆர் உயிரை
ஆரப் பருக, எனக்கு ஆரா அமுது ஆனுயே!

---

1. எம் பரம் - என் காரியம். சாதிக்கல் உற்று என்பதற்கு, நீ சாதிக்கலுற்று என்னுதல்; நான் சாதிக்கலுற்று என்னுதல். நீ செய்வதாக ஏறிட்டுக்கொண்டு என்பது முதற் பொருள். நான் செய்வேனுகப் பார்த்து என்பது இரண்டாவது பொருள். இவ் விரு பொருள்களையும் முறையே அருளிச்செய்கிருர் 'என் காரியத்தை' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும்.

2. அவனுக்குச் சரீரமாய் அவனேடு கூடியிருக்கச் செய்தே, "போர விட்டிட்டாய்" என்கிறது என்? என்ன, 'குணம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

3. அவன் போர விட்டானே? என்ன, 'தெளிந்த' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

பொ - ரை :—உன் பக்கல் நின்றும் அகற்றி உபேக்ஷித்து வேறு கதி இல்லாத என்னைப் புறம்பே போக்குவதற்கு நினைத்தால், பின்னர் எந்த உபாயத்தைக் கொண்டு எந்தப் புருஷார்த்தத்தை முடித்துக் கொள்வேன்? ஐயோ! என்னுடையது என்பது ஒரு பொருள் உண்டோ? யான் என்பது ஒரு பொருள் உண்டோ? தன் காய்ச்சல் தீரும்படி இரும்பினாலே உண்ணப்பட்ட நீர் போன்று, என் அரிய உயிரை முற்றும் பருகுவதற்கு எனக்குத் தெவிட்டாத அமுதமாக இருந்து என்னை அகப்படுத்தினாயே!

வி - கு :—எத்தை என்பதன் பின் முடிப்பது என்னும் சொல்லை வருவித்துப் பொருள் முடிவு காண்க. தீர என்றது, நெருப்பினால் காய்ச்சப்பட்ட இரும்பினது காய்ச்சல் தீரும்படி என்றவாறு. பருக ஆரா அமுது ஆனாய் என்க.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [1] எல்லாப் பொருள்களையும் பாதுகாக்கின்ற நீ கைவிட்டால், என் காரியம் நான் செய்யவோ, பிறர் செய்யவோ? முடிந்தேனே அன்றோ என்கிறார்.

போர விட்டிட்டு - உன் பக்கலில் நின்றும் பிறித்து உபேக்ஷித்து. என்னை - வேறு கதி இல்லாத என்னை. அன்றிக்கே, அறிவின்மை ஆற்றல் இன்மைகளுக்கு எல்லாம் எல்லையான என்னை என்னுதல். நீ - படைப்பே தொடங்கி இவ்வளவும் வரப் புகுர நிறுத்தின நீ. என்றது, ஞானத்தாலும் ஆற்றலாலும் நிறைவுற்றிருக்கிற நீ என்றபடி. அன்றிக்கே, எல்லாப் பொருள்களையும் பாதுகாக்கின்றவனான நீ என்னுதல். என்றது, [2] ஆள் பார்த்து உழிதரும் நீ, [3]எதிர்சூழல்புக்குத் திரியும் நீ என்றபடி. [4] அக்கரை ஏறமாட்டாதான் ஒருவனை அமுக்கினாற்போலே இருக்கிறது காணும். என்னை நீ - [5] கண்ணும் காலும் இன்றிக்கே இருப்பான் ஒருவன், கண்ணும் காலும் உடையனாய் இருப்பான் ஒருவன்; யாருக்கு யார் வழி

---

1. முன் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஆள் பார்த்து" என்பது, நான்முகன் திருவந்தாதி, 60.

3. "எதிர் சூழல்புக்கு" என்பது, திருவாய்மொழி, 2. 7: 6.

4. "புறம் போக்கலுற்றால்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி மேலுக்கெல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அக்கரை' என்று தொடங்கி.

5. ஞானமும் ஆற்றலும் எனக்கு இருப்பின் உமக்குச் செய்ய வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் யாதேனும் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கண்ணும் காலும்' என்று தொடங்கி.

காட்டுவார் என்கிறது. [1] "உன்னால் அறியப்படாத பொருள் ஒன்றும் இல்லை, நீ ஒருவருக்கும் அறிய ஒண்ணாதவனாக இருக்கிறாய்" என்கிறபடியே.

புறம் போக்கல் உற்றால் - புறம்பே போக்குகையிலே நினைத்தால். என்றது, என் காரியம் நான் செய்வேனாகப் பார்த்து என்னைக் கைவிட்டால் என்றபடி. பின்னை யான் ஆரைக் கொண்டு எத்தை - அளவிலா ஆற்றலையுடைய நீ கைவிட்ட பின்பு ஆற்றல் இல்லாதவனான நான் எந்த உபாயத்தைக் கொண்டு என்ன புருஷார்த்தத்தினை முடிப்பது? [2] பேற்றினைப் பெறுவது இறைவனாலே, அறிவு இல்லாத கர்மங்களின் கூட்டத்தால் அன்று என்னுமிடம் தோற்றுகைக்காக '**ஆரைக் கொண்டு**' என்கிறார். அந்தோ - [3] "என்னையே புகலாகப் பற்று" என்ற உனக்கு நான் உபதேசிக்க வேண்டுவதே! [4] எனது என்பது என் யான் என்பது என் - முடிந்தேனே அன்றோ என்கிறார். [5] இரும்பு தீர உண்ட நீரது போல என் ஆர் உயிரை ஆரப் பருக எனக்கு ஆரா அமுது ஆனாயே - நெருப்பினாலே நன்கு காய்ச்சப்பட்ட இரும்பு காய்ச்சல் தீர

1. இறைவன் ஞான சக்திகள் நிறைந்தவன் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'உன்னால்' என்று தொடங்கி.

"நைவ கிஞ்சித் பரோக்ஷம்தே ப்ரத்யக்ஷோஸி ந கஸ்யசித்"

என்பது, ஜிதந்தா. நீ அறியாதது ஒன்றும் இல்லை, நான் அறிவதும் ஒன்றும் இல்லை என்பது, இச் சுலோகத்திற்குக் கருத்து.

2. எத்தைக் கொண்டு என்னாதே, 'ஆரைக் கொண்டு' என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பேற்றினை' என்று தொடங்கி.

3. "அந்தோ" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'என்னையே' என்று தொடங்கி.

'மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ' என்பது, ஸ்ரீ கீதை, 18 : 66.

4. பேறு உம்மதானால் சாதனமும் நீரே செய்ய வேண்டாவோ? என்ன, 'எனது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்னது என்கிறது எது, யான் என்கிறது எது. என்னது என்கைக்கு ஒரு பரிகரம் இல்லை, யான் என்கைக்குச் சுதந்திரனான ஒரு தலைவன் இல்லை என்பது சொற்களுக்கு நேர் பொருள்.

5. "தீர இரும்புண்ட நீரது போல என் ஆர் உயிரை ஆரப் பருக எனக்கு ஆரா அமுது ஆனாயே" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருளில் இரும்பு எம்பெருமானுக்கு உவமை. இரண்டாவது பொருளில் ஆழ்வார்க்கு உவமை.

"இரும்புண்ட நீர் மீள்கினும் என்னுழையில்
கரும்புண்ட சொல் மீள்கிலள் காணுதியால்"

என்பது, கம்பராமா. சடாயு உயிர் நீத்த படலம், 104.

நீரை முற்றும் உண்ணுமாறு போலே, என் ஆத்மாவை முற்றும் உண்ணுவதற்காக, எனக்கு உன்னுடைய எல்லை இல்லாத இனிமையைக் காட்டி என்னை அகப்படுத்தினாய். என் விடாய் தீரக் கலந்தாய் என்று இருந்தேன்; உன் விடாய் தீரவாய் இருந்ததே அன்றோ. என்றது, உனக்காக அன்றோ உன்னைக் காட்டிற்று என்றபடி.

அன்றிக்கே, உயிரை என்ற இரண்டாம் வேற்றுமையை முதல் வேற்றுமையாகக் கொண்டு, என் ஆர் உயிரானது உன்னை ஆரப் பருக என்னவுமாம்; அப்போது, காய்ந்த இரும்பு அக் காய்ச்சல் தீரும்படி நீரைப் பருகுமாறுபோலே, என் ஆர் உயிரானது என் தாபம் எல்லாம் தீரும்படி உன்னை அநுபவிக்க எனக்குப் பண்டு எல்லை இல்லாத இனியன் ஆனவனே என்று ஆம்.

பேறு உம்மதானால் அதற்குச் செய்ய வேண்டிய உபாயமும் உம்முடைய தலையிலே ஆக வேண்டாவோ? என்ன, எனக்கு உபாயமாய் இருப்பது ஒன்று உண்டு என்பதோர் பொருள் உண்டோ? பிரிந்து நிற்றற்குத் தகுதியாய் இருப்பது ஒரு நான் உண்டோ? [1]சரீரியை ஒழியச் சரீரத்தைப் பாதுகாப்பதற்கு வேறு சிலர் உளரோ? என்கிறார். (5)

1097.

எனக்கு ஆரா அமுதாய்,
　　எனது ஆவியை, இன் உயிரை,
மனக்கு ஆராமை மன்னி,
　　உண்டிட்டாய்; இனி உண்டொழியாய்;
புனக் காயா நிறத்த,
　　புண்டரீகக் கண், செங்கனிவாய்,
உனக்கு ஏற்கும் கோலமலர்ப் பாவைக்கு
　　அன்பா! என் அன்பேயோ!

பொ-ரை:—புனத்திலே உள்ள காயாம் பூவைப் போன்ற நிறத்தினையும் செந்தாமரை போன்ற திருக் கண்களையும் சிவந்த கொவ்வைக் கனி போன்ற திரு அதரத்தையும் உடைய உனக்குத் தகுதியாக வடிவு படைத்திருக்கின்ற பெரிய பிராட்டியாருக்கு அன்பனே! என் விஷயத்தில் அன்பே வடிவெடுத்தாற்போன்று இருப்பவனே! எனக்குத்

1. 'சரீரி' என்றது, ஆத்மாவைச் சரீரமாகவுடைய சர்வேஶ்வரனை.

தெவிட்டாத அமுதமாய், என் சரீரத்தையும் இனிய உயிரையும் உன்னுடைய மனம் நிறைவு பெறுமலே பொருந்தி அநுபவித்தாய்; இனிக் குறையும் அநுபவிக்கவேண்டும்.

வி - கு :—ஆரா அமுதாய் மன்னி உண்டிட்டாய் என்க. ஆவி என்றது, ஈண்டுச் சரீரத்தினை. உண்டொழியாய் - ஒரு சொல். உண்ணுவாய் என்பது பொருள்; விரைவில் அங்கீகரிக்க வேண்டும் என்பது கருத்து.

ஈடு :—ஆரும் பாட்டு. [1]பெரிய பிராட்டியார் பக்கல் போலே என் பக்கல் மிக்க காதலையுடையனாய், என் சரீரத்திலும் ஆத்மாவிலும் மிக்க விருப்பத்தைச் செய்து அநுபவித்த நீ, என்னைக் கைவிடாமல் ஈண்டென அங்கீகரித்தருளாய் என்கிறார்.

எனக்கு ஆரா அமுதாய் - [2]தேவசாதியினுடைய உப்புச்சாறு போல் அன்றியே, எப்பொழுதும் அநுபவிக்கத் தகுந்ததாய், நித்தியசூரிகள் எல்லாரும் கூட அநுபவிக்கும் உன்னைப் பிறவியிலே உழன்று திரிகிற எனக்குத் தந்தாய். எனது ஆவியை-[3] என்னுடையது என்னுமதுவே காரணமாக, காதலியின் அழுக்கு உகக்கும் காமுகனைப் போலே என் உடம்பை விரும்பினாய். இன் உயிரை - [4]பகவானுடைய அபிப்பிராயத்தாலே தவ தவ நாறுகிறபடி. அன்றியே, செவ்வாய்க்கிழமையை மங்களவாரம் என்னுமாறு போலே, சரீரத்தோடே சேர்ந்திருக்கையாலே தண்ணிது என்று சொல்லுகிறார் ஆகவுமாம். மனக்கு ஆராமை மன்னி உண்டிட்டாய் - மனத்துக்கு அமையாமையாலே எக்காலத்தும் அநுபவித்தாய். இனி உண்டொழியாய் - நீ தொடங்கின காரியத்தையும், நடுவே குறைகிடக்க விடாதே அங்கீகரித்தருளாய். என்றது, நீ இவ்வளவு புகுர நிறுத்துகைக்கு நான் துணை செய்தது உண்டோ?

---

1. "கோல மலர்ப் பாவைக்கு அன்பா! என் அன்பே, எனது ஆவியை இன் உயிரை மனக்கு ஆராமை மன்னி உண்டிட்டாய், இனி உண்டொழியாய்" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "எனக்கு" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தேவசாதியினுடைய' என்று தொடங்கி.

3. ஆவியை என்னாது "எனது ஆவியை" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'என்னுடையது' என்று தொடங்கி.

4. "இன் உயிரை" என்று சிறப்பிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பகவானுடைய' என்று தொடங்கி. தவ தவ நாறுகையாவது, பாரதந்திரியமான வாசனை வீசுதல். தவம் - பாரதந்திரியம். மற்றொரு 'தவ' உரிச் சொல்.

[1]உன் காரியத்துக்கு உன்னை வேண்டிக்கொள்ள வேண்டுமோ? [2] இவருடைய அமுதத்துக்கு அநுபவிக்கும் தன்மை உண்டு காணும்.

[3] இவ் ஆத்மாவையும் இதனுடைய சரீரத்தையும் விரும்புகை உனக்குச் சேருமோ? நீ உகந்தார்க்குச் சேருமோ? புனம் காயா நிறத்த - தன் நிலத்தில் அலர்ந்த காயாம்பூப் போலே ஆயிற்று வடிவு இருப்பது. புண்டரீகம் கண் - வாத்சல்யமாகிய அமுத மழையைப் பொழியும்படி ஆயிற்றுக் கண்கள் இருப்பன. செம் கனி வாய் - சிவந்து கனிந்து ஆயிற்று முறுவல் இருப்பது. [4] பிராட்டி விரும்பும் துறைகள் அலவோ இவை. [5] அக் காயா, தாமரை பூத்துக் கனியப் பழுத்தாற்போலே ஆயிற்று, திருமேனியும் திருக்கண்களும் திருப்பவளமும் இருப்பது.

உனக்கு ஏற்கும் கோலம் - [6] இவனைப் போன்று வார்த்தையாலே கசக்குதற்கும் பொருத மிருதுத் தன்மையை யுடையவள். [7] இப்படிப்பட்ட உனக்கு ஒத்த அழகினையுடையளாய். மலர்ப் பாவைக்கு அன்பா - மலரில் மணத்தை வடித்து [8]வகுத்தாற் போலே இருக்கிற பிராட்டிக்கு அன்பனே! 'உனக்கு ஏற்கும் கோலம்' என்று [9] அவ் அழகினை இங்கே ஏறிடுகிறார்.

---

1. "உண்டிட்டாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'உன் காரியத்துக்கு' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. "ஆரா அமுதாய்" என்றவர் "உண்டிட்டாய்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவருடைய' என்று தொடங்கி.

3. மேலே உள்ளவற்றையும் சேர்த்துக்கொண்டு "கோலமலர்ப் பாவைக்கு அன்பா" என்பது முடிய உள்ளனவற்றிற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவ் ஆத்மாவையும்' என்று தொடங்கி. 'நீ உகந்தார்' என்றது, பிராட்டியை.

4. "புனக்காயா நிறத்த புண்டரீகக் கண் செம் கனி வாய்" என்பதனை "உனக்கு ஏற்கும் கோல மலர்ப் பாவை" என்றதனோடு கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'பிராட்டி' என்று தொடங்கி.

5. உருவகம் செய்கிறார் 'அக் காயா' என்று தொடங்கி.

6. இறைவன் உறுப்புக்களை வருணித்தது போன்று பிராட்டியின் உறுப்புக்களை வருணிக்காமல் "உனக்கு ஏற்கும்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவனைப் போன்று' என்று தொடங்கி.

7. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இப்படிப்பட்ட' என்று தொடங்கி.

8. வகுத்தாற் போலே - வடிவத்தை ஆக்கினாற் போலே.

9. 'அவ் அழகினை' என்றது, "புனக்காயா" என்பது போன்றவைகளால் இறைவனைப்பற்றி மேலே கூறிய அழகினை.

[1]நியாயாதிதேசம் பண்ணுகிறார். கோலம் மலர்ப்பாவைக்கு அன்பா என் அன்பேயோ -[2] அவள் பக்கல் அன்புடையவன் என்று தோற்றி இராநின்றது; தம் பக்கல் அன்பு என்றும் அது உடையன் என்றும் தெரிக்கப் போகிறது இல்லை; [3]ஞானத்தையுடையவனை ஞானம் என்ற சொல்லால் கூறுவது போன்று. [4]"ஞானத்தை முக்ய குணமாக உடையவன் ஆகையால் ஜீவன் ஞானமென்று கூறப்படுகின்றான்; இறைவனைப் போன்று." (6)

1098.

கோல மலர்ப்பாவைக்கு அன்பு ஆகிய என் அன்பேயோ!
நீல வரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்தது ஒப்ப
கோல வராகம் ஒன்றாய், நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்!
நீலக் கடல் கடைந்தாய்! உன்னைப் பெற்று இனிப்போக்குவனோ?

பொ - ரை :— அழகிய தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாருக்கு அன்பனாக இருக்குமதனாலே என்னிடத்திலும் அன்புடையவனாக இருக்குமவனே! கரிய நிறத்தையுடைய ஒரு மலையானது இரண்டு பிறையைக் கவ்விக்கொண்டு புறப்பட்டாற் போன்று, ஒப்பற்ற அழகிய வராகமாகி, பாதாளத்தில் அழுந்திக் கிடந்த பூமியைத் தந்தத்திலே கொண்டு காப்பாற்றின எந்தையே! நீல நிறத்தையுடைய கடலைக் கடைந்தவனே! உன்னை அடைந்த பின்பு இனி நழுவவிடுவனோ!

---

1. ஏறிடுவது முழுவதும் ஒத்திருந்தால் அன்றோ, காளமேகம்போன்ற நிறம் முதலானவற்றை, பொன்னிறத்தை யுடைய இவளிடத்திலே ஏறிடுதல் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நியாயாதிதேசம் பண்ணுகிறார்' என்று. என்றது, சொரூபத்தால் ஏறிடுகிறது அன்று, அவனைப் போன்று இவளும் அழகுடையவள் என்கிறது என்றபடி. சொரூப அதிதேசம் என்றும், நியாய அதிதேசம் என்றும் இரண்டு வகைப்படும் ஏறிடுதல். சொரூப அதிதேசமாவது, முற்றுவமை கொள்ளுதல். நியாய அதிதேசமாவது, அதனைப் போன்று இதுவும் சிறப்பினை யுடைத்தாய் இருக்கும் என்றல். அதிதேசம் - ஏறிடுதல்.

2. அன்பா என்னுமல் "என் அன்பே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவள் பக்கல்' என்று தொடங்கி.

3. அன்பு தானாகச் சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஞானத்தை யுடையவனை' என்று தொடங்கி. ஆகுபெயரால் கூறுகிறார் என்றபடி.

4. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஞானத்தை' என்று தொடங்கி. "தத்குண ஸாரத்வாத் து தத் வ்யபதேஶஃ ப்ராஜ்ஞவத்" என்றது, சாரீரக மீமாம்சை, 2. 3: 30.

வி - கு :—பிறை தந்தத்திற்கும், அதிலே உள்ள மறு தந்தத்திலே தங்கிய பூமிக்கும் உவமை. நீலவரை வராகத்திற்கு உவமை. நீலக் கடல் - நீல ரத்தினங்களையுடைய கடல் என்றுமாம்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1] நான் பெரிய பிராட்டியாரைச் சார்ந்தவன் ஆகையாலே பிரளயத்திலே மூழ்கின ஸ்ரீ பூமிப் பிராட்டியை எடுத்து அவளோடே கலந்தாற்போலவும், கடலைக் கடைந்து பெரிய பிராட்டியாரோடே கலந்தாற்போலவும், பிறவிக் கடலில் மூழ்கின என்னை எடுத்து என்னோடே கலந்தருளி என் பக்கலிலே மிக்க காதலைச் செய்த உன்னைப் பெற்று வைத்து இனித் தப்ப விடுவனோ? என்கிறார்.

கோலம் மலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ-பிராட்டி பக்கல் உள்ள அன்பின் மிகுதியாலே அந்த அன்பே காரணமாக அவளால் அங்கிகரிக்கப்பட்ட என் பக்கலிலே மிக்க அன்புள்ளவன் ஆனவனே! [2]பட்டர் தம்முடைய இறுதிக் காலத்தில் அருளிச்செய்த வார்த்தை :—பெரிய பிராட்டியார்க்கு அன்பன் ஆகையாலே அவளால் அங்கீகரிக்கப்பட்ட நமக்கு அன்பனும் என்று இப் பாட்டினை **நம்முடையார்** துவயத்தின் அர்த்தத்தோடு அநுசந்திப்பர்கள் என்பது. [3] "திருமால் என்னை ஆளும் மால்" என்னும்படியே தம்முடைய அன்புக்கு அடி சொல்லுகிறார். [4] அந்தப்புரத்தைச் சார்ந்தவன் அன்றோ. என் அன்புக்கு அடி இல்லையோ?

நீல வரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்தது ஒப்ப - ஒரு நீல மலை இரண்டு பிறையைக் கவ்வி நிமிர்ந்தாற்போல. [5] பிறையில் மறுவைப் போன்றதாயிற்று திரு எயிற்றில் கிடந்த

1. பூமியை எடுத்து வந்து நிறுத்தியதையும் கடலைக் கடைந்ததனையும் கூறுகின்றவருடைய மனோபாவத்தை அருளிச்செய்து கொண்டு, "உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பிராட்டி பக்கல் உள்ள அன்பின் மிகுதியாலே அந்த அன்பே காரணமாக அவளால் அங்கீகரிக்கப்பட்ட என் பக்கலிலும் மிக்க அன்புள்ளவனாக இருப்பவனே என்பதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பட்டர்' என்று தொடங்கி.

3. பெரிய பிராட்டியாரிடத்தில் அன்புள்ளவனாக இருப்பது தம்முடைய அன்புக்குக் காரணமோ என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திருமால்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 10. 7 : 5.

4. அதனை விவரணம் செய்கிறார் 'அந்தப்புரத்தை' என்று தொடங்கி.

5. எயிற்றில் கிடந்த பூமிக்கு, உபமானத்தில் சொல் இல்லையே? என்ன, 'பிறையில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

பூமி. கோலம் வராகம் - [1] மாசு உடம்பில் நீர் வாராநின்ற நிலை அன்றோ இவர்க்கு ஆலத்தி வழிக்க விஷயமாயிற்று; அன்றிக்கே, "பாசி தூர்த்துக் கிடந்த பார் மகள்" என்கிறபடியே காதலி அழுக்கோடே இருக்கத் தாமானபடியே வருவாராகில் காதலுக்குக் குறைவாமித்தனை அன்றோ என்னுதல். [2] அவன் அழிவுக்கு இட்ட வடிவிற்கே அன்றோ இவர் ஆலத்தி வழிக்கிறது. [3] ஒன்றாய் - வராகத்தின் இனத்தோடு சேர்ந்ததாய் என்னுதல்; மூன்று உலகங்களையும் கண்செறி இட்டாற் போலே விம்ம வளர்ந்தபடியாலே ஒப்பு அற்றதாய் என்னுதல். நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய் - [4] பிரளயம் கொண்ட பூமியை அண்டத்தினுடைய சுவரிலே புக்குத் திரு எயிற்றிலே கொண்டு எடுத்தாற் போலே பிறவிக் கடலில் மூழ்கின என்னை எடுத்தவனே!

நீலம் கடல் கடைந்தாய் - பிராட்டியைப் பெறுகைக்காகக் கடலைக் கடைந்தவனே! [5] கடைகிறவனுடைய நிழலீட்டாலே 'நீலக் கடல்' என்கிறார். அன்றிக்கே, எல்லா மருந்துகளையும் பொகடுகையாலே வந்த நிற வேறுபாட்டால் சொல்லுகிறார் என்னவுமாம். அன்றிக்கே, நீலம் என்பது நீல இரத்தினத்தைச் சொல்லிற்றாய், அவை மிக்கிருக்கின்ற காரணத்தால் '**இரத்தினகரம்**' என்ற பெயரை நோக்கிக் கூறுகின்றார் என்னவுமாம். உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ - [6] ஸ்ரீ

1. வராகத்திற்குக் கோலமாவது, அறப் பெரிய இறைவன் கொண்ட கோலமாகையாலே வந்த கோலம் என்றும், காதல் குணத்தால் வந்த கோலம் என்றும் இருவகையாக அழகினை விவரணம் செய்கிறார் 'மாசு உடம்பில்' என்று தொடங்கியும், 'பாசி தூர்த்து' என்று தொடங்கியும். 'மாசுடம்பில்' என்பது, நாய்ச்சியார் திருமொழி, 11 : 8.

2. 'மாசுஉடம்பில்' என்று தொடங்கி அருளிச்செய்த முதற் பொருளை விவரணம் செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

3. "ஒன்றாய்" என்பதற்கு இருபொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருள் சிறுமையிலே நோக்கு. இரண்டாவது பொருள் பெருமையிலே நோக்கு. கண்செறி இடுதல் - மறைத்தல்.

4. அவதாரிகையில் 'பிரளயம் கொண்ட ஸ்ரீ பூமிப்பிராட்டியை எடுத்து' என்ற வாக்கியத்தை இங்கு விவரணம் செய்கிறார் 'பிரளயம் கொண்ட' என்று தொடங்கி.

5. திருப் பாற்கடலை அன்றோ கடைந்தது, அதனை "நீலக் கடல்" என்பது என்? என்ன, மூன்று வகையாக அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கடைகிறவனுடைய' என்று தொடங்கி.

6. "எந்தாய்" என்பதனை, "நீலக் கடல் கடைந்தாய்" என்றதனோடும் கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ பூமிப் பிராட்டியை' என்று தொடங்கி.

பூமிப் பிராட்டியைப் பெறுகைக்குச் செய்த செயலையும், பிராட்டியைப் பெறுகைக்குச் செய்த செயலையும், என்னைப் பெறுகைக்காகச் செய்து, என்னைக் கிட்டப்பெற்ற பின்பு உன்னைப் போக விடுவனோ? [1] நீ செய்த செயலின் பலத்திலே சேர்ந்த நான் கைப்பட்ட செல்வத்தை விடத் தக்கவனோ? (7)

1099.

பெற்று இனிப் போக்குவனோ உன்னை, என் தனிப் பேருயிரை?
உற்ற இருவினையாய், உயிராய்ப், பயன் ஆயவை ஆய்
முற்ற இம் மூஉலகும் பெரும் தூருய், தூற்றில் புக்கு
முற்றக் கரந்து ஒளித்தாய்! என் முதல் தனி வித்தேயோ!

பொ - ரை :—ஆத்மாவோடு கலந்து கிடக்கின்ற இருவகைப் பட்ட நல்வினை தீவினைகளை நியமிப்பவனாய், அவற்றிலே கட்டுப்பட்டுக் கிடக்கிற உயிரை நியமிப்பவனாய், அந்த நல்வினை தீவினைகளினுடைய பலங்கட்கு நிர்வாஹகனாய், இவை எல்லாமாகிற மூன்று உலகங்கள் என்கிற தூற்றை உண்டாக்கி, இவ்வுலகமாகிற தூற்றிலே புகுந்து எங்கும் பரந்து ஒருவராலும் அறியமுடியாத தன்மையனாய் இருக்கிறாய்; என்னுடைய நற்செயல்களுக்கு எல்லாம் காரணனாய் இருப்பவனே! என்னுடைய ஒப்பற்ற பெரிய ஆத்மாவாய் இருக்கிற உன்னைப் பெற்று வைத்து நெகிழவிடுவேனோ? விடேன் என்றபடி.

வி - கு :—புக்குக் கரந்து ஒளித்தாய், என் முதல் தனி வித்தே, என் தனிப் பேர் உயிராகிய உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ? என்க. தூறு ஆய் - தூற்றை உண்டாக்கி. தூறு என்றது, இந்தச் சம்சாரத்தை.

ஈடு :—எட்டாம் பாட்டு. [2] சிறிதும் அறிய முடியாதவனான உன்னைப் பெற்று வைத்து இனி விட உபாயம் இல்லை என்கிறார்.

உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ - [3] ஓர் அச்சு இல்லாக் காசாய்ப் போகிற்றாகில் போகிறது என்று இருக்

1. "பெற்று இனிப் போக்குவனோ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீ செய்த செயலின்' என்று தொடங்கி.

2. "முற்றக் கரந்து ஒளித்தாய், பெற்று இனிப் போக்குவனோ" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "உன்னை" என்பதற்கு, உயர்வற உயர்ந்த உன்னை என்றும், அறிதற்கு அரியனான உன்னை என்றும் இரண்டு பொருள். அவற்றிலே முதற் பொருளை அருளிச்செய்கிறார் 'ஓர் அச்சு இல்லாக் காசாய்' என்று தொடங்கி. அச்சு இல்லாக் காசு - முத்திரை இல்லாக் காசு.

கிறேனே? அன்றிக்கே, [1]உன்னை நீ அறியாயோ? என்னுதல். [2] மிக மிகத் தாழ்ந்தவனாய் இருந்த எனக்கு மிகவும் தாரகனான உன்னைப் பெற்று வைத்து இனி நான்விடுவேனோ? என் தனிப் பேர் உயிரை - [3]'வரில் பொகடேன், கெடில் தேடேன்' என்று இருக்கிற ஆத்மாவின் அளவோ? 'உன்னை' என்றதனை [4] விவரிக்கிறார் மேல்: [5]"உலகங்கட்கெல்லாம் ஓர் உயிரேயோ" என்கிறபடியே எல்லா ஆத்மாக்களுக்கும் ஆத்மாவான உன்னை. 'பெற்று இனிப் போக்குவனோ' என்கிறது, [6]மற்றைய இலாபங்களில் வேறுபாடு. 'என் தனிப் பேர் உயிரை' என்றது, தம்மில் வேறுபாடு.

உற்ற இரு வினையாய் - ஆத்மாவைப் பற்றிக் கிடக்கிற நல்வினை தீவினைகட்கு நிர்வாஹகனாய். [7] உன்னை ஒழிய வேறு சில கர்மங்களைத் தனித்து இயலும் தன்மையை உடையனவாக நினைத்திருந்தேனாகில் அன்றோ உன்னை விடலாவது? உயிராய் - நல்வினை தீவினைகளைச் செய்கிற ஆத்மாவுக்கு நிர்வாஹகனாய். [8] அந்த இரு வினைகளைச் செய்கிறவன்தான் உனக்கு உரியவன் அன்றாகில் அன்றோ உன்னை விடலாவது? பயன் ஆயவை ஆய் - அக் கர்மங்களினுடைய பலத்துக்கு நிர்வாஹகனாய். [9]நல்வினை தீவினைகளின் பலன் உன்னை ஒழிய வேறு சிலரால் கிடைக்கின்றது என்று இருந்தேனாகில் அன்றோ விடலாவது?

---

1. இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'உன்னை நீ அறியாயோ' என்று.

2. "முதல் தனி வித்தேயோ, என் தனிப் பேர் உயிரை" என்றதனைக் கடாக்ஷித்துப் "பெற்று இனிப் போக்குவனோ" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மிக மிகத் தாழ்ந்தவனாய்' என்று தொடங்கி.

3. "பேர் உயிர்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வரில் பொகடேன்' என்று தொடங்கி. 'ஆத்மாவின் அளவோ' என்றது, ஆத்மாவுக்கும் ஆத்மா அன்றோ என்றபடி.

4. 'விவரிக்கிறார் மேல்' என்றது, 'என் தனிப் பேர் உயிரை' என்று தொடங்கி மேலே விவரிக்கிறார் என்றபடி.

5. "தனி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உலகங்கட்கெல்லாம்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 8. 1: 5.

6. 'மற்றைய இலாபங்களில்' என்றது, ஐஶ்வரிய லாபத்தை. 'தம்மில்' என்றது, கைவல்யத்தில் என்றபடி.

7. "உற்ற இரு வினையாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உன்னை ஒழிய' என்று தொடங்கி. உற்ற - உற்றிருக்கிற.

8. "உயிராய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அந்த இருவினைகளை' என்று தொடங்கி.

9. "பயன் ஆயவை ஆய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நல்வினை தீவினைகளின்' என்று தொடங்கி. பயன் ஆயவை ஆய் - அந்தப் பயனாகி.

முற்ற இம் மூஉலகும் பெரும் தூறு ஆய்-முற்றவுமான இம் மூஉலகும் என்கிற தூற்றை உண்டாக்கி. [1]விடத்தக்கதான இவ் உலக வாழ்க்கையானது உன்னை ஒழிய வேறு என்று நினைத்திருந்தேனாகில் அன்றோ விடலாவது? [2] இவ் உலக வாழ்க்கையானது புக்க இடமும் போந்த இடமும் தெரியப் போகாதே இருக்குமாதலின் 'பெருந் தூறு' என்கிறது. தூறு ஆய் - இவ் உலக வாழ்க்கையை உண்டாக்கி. தூற்றில் புக்கு- இதனுள்ளே புகுந்து. [3] முற்றக் கரந்து - நீ பரந்திராதது ஓர் இடம் உண்டாகில் அன்றோ விடலாவது? ஒளித்தாய்-[4]"எவனை ஆத்மா அறிகிறான் இல்லையோ" என்கிறபடியே, உன்னாலே பரந்திருக்கப்பட்ட பொருள்கள் அறியாதபடி நின்றாய். [5]கண்களுக்கு விஷயமானாயாகில் பிழையேனோ? என் முதல் தனி வித்தேயோ - [6] மற்றையோர்க்கு வெளியிடாதே இருந்து எனக்கு வெளியிட்டவனே! முதல் தனி வித்தேயோ - நான் ஓர் அடிவரநின்றேனாகில் ஆறியிருக்கலாயிற்றே. எனக்கு முதல் புண்ணியமானவனே! (8)

1100.

முதல் தனி வித்தேயோ, முழு மூஉலகு ஆதிக்கு எல்லாம்!
முதல் தனி உன்னை, உன்னை எனை நாள் வந்து கூடுவன் நான்
முதல் தனி அங்கும் இங்கும் முழு முற்றுறு வாழ் பாழாய்,
முதல் தனி சூழ்ந்து, அகன்று, ஆழ்ந்து, உயர்ந்த முடிவிலீயோ!

பொ - ரை :— முழுவதுமான மூன்று உலகங்கள் முதலான எல்லாப் பொருள்களுக்கும் நிமித்த காரணமும் துணைக் காரணமும் முதற் காரணமும் ஆனவனே! அண்டத்துக்கு அப்பாலும் அண்டத்துக்குள்ளும் இருக்கின்ற முழுவதுமான எல்லாப் பொருள்களிலும் பரந்திருந்து அவற்றை வாழச் செய்கின்ற முதன்மை பெற்ற ஒப்பில்லாத மூலப் பகுதிக்கு ஆத்மாவாய், முதன்மை பெற்றனவாய் ஒப்பு இல்லாதனவாய்ச் சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்திருக்கின்ற முடிவில்லாத

1. கருத்து அருளிச்செய்கிறார் 'விடத்தக்கதான' என்று தொடங்கி.

2. இவ் உலக வாழ்க்கை என்னுமல் "பெருந்தூறு" என்றதற்குக் காரணம் அருளிச்செய்கிறார் 'இவ் உலக வாழ்க்கையானது' என்று தொடங்கி.

3. முற்றக் கரந்து - எங்கும் பரந்து மறைந்து.

4. "யம் ஆத்மா ந வேத" என்பது, சுருதி.

5. "ஒளித்தாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கண்களுக்கு' என்று தொடங்கி.

6. "என்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மற்றையோர்க்கு' என்று தொடங்கி.

ஆத்மாக்களுக்கு ஆத்மாவாய் இருப்பவனே ! முதன்மை பெற்றவனும் ஒப்பு இல்லாதவனும் இருக்கின்ற உன்னை, பரமபதத்தில் எழுந்தருளியிருக்கின்ற உன்னை எப்பொழுது வந்து கூடுவேன் ?

வி-கு:—'முதல்' என்றது நிமித்த காரணத்தையும், 'தனி' என்றது துணைக் காரணத்தையும், 'வித்து' என்றது முதற் காரணத்தையும் காட்ட வந்தது. முழு மூ உலகு ஆதிக்கு எல்லாம் முதல் தனி வித்தேயோ என்க. 'அங்கும் இங்கும் முழு முற்று உறு வாழ் முதல் தனி பாழாய்' என்றது, இந்த அண்டத்துக்கு உள்ளும் இதற்கு வெளியிலும் எல்லாப் பொருள்களிலும் பரந்திருந்து கொண்டு, எல்லா ஆத்மாக்களுக்கும் போகங்களையும் மோக்ஷத்தையும் அடையும்படி காரியமான நிலையில் உபகாரஞ்செய்கிற மூலப் பகுதிக்கு ஆத்மாவாய் இருக்கிறான் என்றபடி. அறிவுள்ளவைகளாய் இருப்பதால் அதனைக் காட்டிலும் உயர்ந்தவைகளாய், தங்களுடைய குணமான ஞானத்தாலே மேல் கீழ் முதலான பத்துத்திக்குகளிலும் வியாபித்துக் கொண்டு முடிவு இல்லாதவைகளாய் இருக்கிற ஆத்மாக்களுக்கு ஆத்மாவாக இருப்பவனே ! என்பது நான்காம் அடியின் கருத்து. இப்படி உலகங்கட்குக் காரணமாயும் அவைகளுக்கு ஆத்மாவாயும் இருந்து, அவைகளாயும் தோன்றுகிற உன்னுடைய ஆகாரத்தையும் பார்த்தேன் ; அது எனக்குப் போராது ; இந்த ஆகாரத்தைத் தவிர வேறாய், வைகுந்தத்தில் பிராட்டிமாருடனும் திருவாபரணங்களுடனும் திவ்யாயுதங்களுடனும் நித்தியசூரிகளோடும் கூடினதாய் அப்ராக்ருதமாய் இருக்கிற திவ்ய உருவத்தை நான் பரமபதத்துக்கு வந்து சேர்ந்து அனுபவிக்கவேண்டும் என்பது இரண்டாம் அடியின் கருத்து.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [1]"அவை யாவும் அவனது சரீரம் என்றும்", [2]"எவனுக்கு ஆத்மாக்கள் சரீரமோ எவனுக்கு மண் சரீரமோ என்றும்", [3]"அது முழுதும் அரியினுடைய சரீரம் என்றும்" சொல்லுகிறபடியே, எங்கும் வந்து முகம் காட்ட

1. "முதல் தனி அங்கும் இங்கும் முழு முற்று உறு வாழ் பாழாய், முதல் தனி சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவிலீயோ ? முதல் தனி உன்னைக் கண்டேன் ; உன்னை என நாள் வந்து கூடுவன்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

"தாநி ஸர்வாணி தத் வபுஃ" என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 1. 22 : 86.

2. "யஸ்ய ஆத்மா ஶரீரம், யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" என்பது, அந்தர்யாமி ப்ராஹ்மணம்.

3. "தத் ஸர்வம் வை ஹரேஃ தநுஃ" என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 22: 38.

இம் மூன்று பிரமாணங்களும் இத் திருவாய்மொழியின் முதல் திருப்பாசுரத்தின் வியாக்கியானத்திலே காட்டப்பட்டு உள்ளன.

லாம்படி உலகத்தை உருவமாகக் கொண்டு இருக்கும் [1] இருப்பைக் காட்டித் தந்தோ மன்றோ? என்ன, அது, உகந்தார்க்கும் உகவாதார்க்கும் பொதுவாக இருந்தது; வேறு உருவம் இல்லையாகில் அன்றோ 'அதுவே அமையும்' என்று ஆறியிருக்கலாவது? பரமபதத்திலே வேறுபாட்டோடு கூடியதாய் எல்லாம் நிறைந்ததாய் இருக்கிற இருப்பைக் காணவேண்டும் என்கிறார்.

முழு மூ உலகு ஆதிக்கு எல்லாம் முதல் தனி வித்தேயோ-மூன்று உலகங்கள் தொடக்கமாக உள்ள எல்லாவற்றுக்கும் மூன்றுவித காரணங்களும் ஆனவனே! [2] இதனால், காப்பாற்ற என்று புக்கால் காப்பாற்றப் படுகின்ற பொருள்களின் துணை வேண்டாதவனே! என்பதனைத் தெரிவித்தபடி. [3] முதல்-நிமித்த காரணம். தனி - துணைக் காரணம். வித்து - முதற் காரணம். முதல் தனி உன்னை உன்னை - முதன்மை பெற்றவனாய், ஒப்பு இன்றிக்கே, [4] குணம் விபூதி முதலியவற்றால் நிறைந்திருக்கின்ற நீயான உன்னை. எனை நாள் வந்து கூடுவன் நான் - என்று வந்து கூடுவேன்? [5] அவன் கொடுத்த ஞானத்தாலே சொரூபத்தை உணர்ந்தாருக்கு, தன்னைப் பிராட்டிமாரைப் போன்று பேசலாய் இருக்கிறபடியால் 'வந்து கூடுவன்' என்கிறார். நான்-பரமபதத்தில் சுவடு அறிந்த நான். என்றது, உனக்கே உரியதான விக்கிரஹத்தைக் காண ஆசைப்பட்ட நான் என்றபடி.

முதல் தனி அங்கும் இங்கும் முழு முற்று உறு வாழ் பாழ் ஆய் - முதன்மை பெற்றதாய், உபமானம் இல்லாததாய், அங்கும் இங்குமான மகத்து முதலான தத்துவங்கள் முழுவதிலும் எங்கும் ஒக்கப் பரந்து ஆத்மாக்களுக்குப் போகங்களையும்

---

1. 'இருப்பைக் காட்டித் தந்தோம் அன்றோ' என்றது, இத் திருப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி.

2. "மூ உலகு ஆதிக்கு எல்லாம் முதல் தனி வித்தேயோ" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி.

3. 'மூன்று வித காரணங்களும் ஆனவனே' என்றதனை விவரணம் செய்கிறார் 'முதல்' என்று தொடங்கி.

4. 'ஒப்பு இன்றிக்கே' என்றதனை விவரணம் செய்கிறார் 'குணம் விபூதி' என்று தொடங்கி. "உன்னை உன்னை" என்பதற்குப் பொருள், 'நீ யான உன்னை' என்பது.

5. சேர்வன் என்னாதே, "கூடுவன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் கொடுத்த' என்று தொடங்கி.

மோக்ஷத்தையும் விளைக்கும் விளை நிலமாக இருக்கிற மூலப் பகுதிக்கு ஆத்மா ஆனவனே!

ஒன்பதாம் பாட்டு. [1]இன்னம், "அவை யாவும் அவனது சரீரம் என்றும்", "எவனுக்கு ஆத்மாக்கள் சரீரமோ எவனுக்கு மண் சரீரமோ என்றும்", அது முழுதும் அரியினுடைய சரீரம் என்றும்" சொல்லுகிறபடியே, எங்கும் ஒக்க வந்து முகம் காட்டலாம்படி உலகத்தை உருவமாகக் கொண்டு இருக்கிற இருப்பைக் காட்டித் தந்தோமே அன்றோ? என்ன, அது உகந்தார்க்கும் உகவாதார்க்கும் பொதுவாய் இருந்தது; வேறு உருவம் இல்லையாகில் அன்றோ 'அதுவே அமையும்' என்று இருக்கலாவது? பரமபதத்திலே வேறுபட்டதாய், எல்லாம் நிறைந்ததாய் இருக்கிற இருப்பையும் காணவேண்டும் என்கிறார்.

முதல் தனி வித்தேயோ - முதல் - நிமித்த காரணம், தனி- துணைக்காரணம், வித்து - முதற் காரணம். முழு மூ உலகு ஆதிக்கு எல்லாம் - [2]மூ உலகு என்கையாலே, கிருதகம், அக்ருதகம், கிருதகாகிருதகம் என்று மூன்று வகைப்பட்ட அண்டத்தைச் சொல்லுகிறது. முழு என்கையாலே, [3]"அந்த மூலப்பகுதியில் ஆயிரம் அண்டங்களினுடைய ஆயிரமும் பதினாயிரமும் இப்படிப்பட்ட அண்டங்கள் பல கோடிகள் இருக்கின்றன" என்று சொல்லப்பட்ட எல்லை இல்லாத அண்டங்களைச் சொல்லுகிறது. ஆதி என்கையாலே, இவ் அண்டங்கட்குக் காரணமான [4] ஆவரணங்களைச் சொல்லுகிறது. ஆக, மூன்று உலகங்கள் தொடக்கமாக ஒன்று ஒழியாமல் எல்லாவற்றுக்கும் மூன்றுவித காரணங்களும் ஆனவனே என்றபடி.

---

1. நடுவே ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் எழுந்தருள, மீண்டும் பாசுரத்துக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இன்னம்' என்று தொடங்கி. 'அவையாவும்' என்றும், 'எவனுக்கு' என்றும், 'அது முழுதும்' என்றும் தொடங்கும் பொருள்களையுடைய வடமொழி வாக்கியங்களை மேலே காண்க.

2. 'மூ உலகு தொடக்கமான ஒன்று ஒழியாமல் எல்லாவற்றுக்கும்' என்று மேலே அருளிச்செய்ததனை விவரணம் செய்கிறார் 'மூ உலகு என்கையாலே' என்று தொடங்கி. கிருதகம் - கற்பாந்த காலத்து அழிவது; அக்ருதகம் - கற்பாந்த காலத்து அழியாதது; கிருதகாகிருதகம் - அழிந்தும் அழியாமலும் இருப்பது.

3. அண்டாநாம் து ஸஹஸ்ராணும் ஸஹஸ்ராணி அயுதாநிச
ஈத்ருஶாநாம் ததா தத்ர கோடி கோடி ஶதாநி ச.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 2. 7 : 27.

4. ஆவரணங்கள் - மதிள்கள்.

முதல் தனி உன்னை-[1] முதல்வனாய், ஒப்பு இன்றிக்கே, குணம் விபூதி முதலியவற்றால் நிறைந்தவனாய், உலகத்தை உருவமாகக் கொண்டு இருக்கிற உன்னை. ஆக, இத்துணையும் லீலா விபூதி யோடு கூடி இருக்கிற இருப்பைச் சொல்லிற்று.

நித்தியசூரிகளுக்கு இனியனாய் இருக்கும் வடிவழகினைக் கண்டு அநுபவிக்க வேண்டும் என்கிறார் மேல்: உன்னை - பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலையைச் சொல்லுகிறது. 'உன்னை' என்ற அளவில் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலையைக் காட்டுமோ? என்னில், காட்டும்; [2]"ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர்" என்கிறபடியே, அவனையும் அவளையும் சொல்லவே பரமபதமும் அடங்கிற்றே அன்றோ.

உன்னை-[3] "முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந் ததுவோ" என்று ஐயுறும்படி இருக்கிற திருமுடியும், [4]"மாயன் குழல்" என்னும்படியான திருக்குழலும், [5]"கோளிழைத் தாம ரையும் கொடியும் பவளமும் வில்லும், கோளிழைத் தண்முத் தமும் தளிரும் குளிர் வான் பிறையும், கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டம் கொல்" என்னும்படியான அழகிய திருமுகமும், நாய்ச்சிமாருடைய திருக் கரங்களின் ஆபரணங் களாலே அடையாளம் செய்யப்பட்டதாய் கமுகினுடைய இளங் கழுத்தையும் சங்கையும் ஒத்ததாயுள்ள திருக்கழுத்தும், [6]கற் பகக் கா அன்ன நற் பல தோள்களும், பெரிய பிராட்டியார்க்

1. "உன்னை உன்னை" என்பதற்கு, நீ யான உன்னை என்று மேலே பொருள் அருளிச்செய்தார். இங்கு, முதலிலே உள்ள "உன்னை" என்பதற்கு உலகத்தை உருவமாகக் கொண்டிருக்கிற உன்னை என்றும், இரண்டாவது "உன்னை" என்பதற்கு, பரமபதத்தில் எழுந்தருளியிருக்கிற பரமபத நிலைய னான உன்னை என்றும் பொருள் அருளிச்செய்கிறார் 'முதல்வனாய்' என்று தொடங்கி. 'உருவமாகக் கொண்டு இருக்கிற உன்னை' என்றதற்குப் பின் 'கண்டேன்' என்னும் ஒரு சொல்லைக் கொணர்ந்து 'உன்னைக் கண்டேன்' என்று கூட்டி முடிக்க.

2. "ஒண்டொடியாள்" என்பது, திருவாய்மொழி, 4. 9. 10.

3. "உன்னை" என்ற பதத்தாலே சொல்லப்பட்ட விக்கிரகத்தின் அழகினை அருளிச்செய்கிறார் 'முடிச்சோதி' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 3. 1 : 1.

4. "மாயன் குழல்" என்பது, திருவாய்மொழி, 7. 7. 9.

5. "கோளிழை" என்பது, திருவாய்மொழி, 7. 7 : 8.

6. "கற்பகக்கா அன்ன" என்பது, திருவாய்மொழி, 6. 6 : 6.

குக் கோயிற் கட்டணமாய் என்றும் அநுபவித்துக்கொண்டே இருக்கச் செய்தேயும் "அகலகில்லேன்" என்று அவனைப் பிச்சு ஏற்றும்படி[1]குருமாமணிப்பூண்குலாவித் திகழும் திருமார்வும், [2]"உள்ளத்துள் நின்று உலாகின்றதே" என்கிறபடியே, நித்தியர் முக்தர் இவர்களுடைய உள்ளங்களிலே அழகு செண்டு ஏறுகிற திரு உதர பந்தமும், வனப்பாகிற வாரிதி இட்டளப்பட்டுச் சுழித்தாற் போலே இருக்கிற திரு உந்தியும், ஓர் அடைமொழி இட வேண்டாதே [3]"அல்குலும்" என்னும் படி இருக்கிற அல்குலும், சிற்றிடையும், மாலைக்காலத்தே தோன்றுகிற செந்நிறத்தாலே அழகுபெற்ற ஆகாசம்போலே இருக்கத் திரு அரை பூத்தாற்போலே இருக்கிற [4]அந்திபோல் நிறத்து ஆடையும், வாழைமரம் முதலானவற்றைப் போன்று கம்பீரமான திருத்துடைகளும், தாமரைநாளம் போலே [5]முட்களோடு கூடிய திருக்கணைக் கால்களும், சங்கு, சக்கரம், கற்பகம், கொடி, தாமரை, அங்குசம், வஜ்ஜிரம் ஆகிய அடையாளம் பண்ணப்பட்டதாய், நாய்ச்சிமாரும் கூடக் கூசித் தொட வேண்டும்படி மெல்லடியாய் "தேனே மலரும்" என்கிறபடியே எல்லை இல்லாத இனியனவான திருவடிகளையுமுடையையாய் ஏழ் உலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருளுகிற உன்னை.

எனை நாள் வந்து கூடுவன் - என்று வந்து கிட்டக் கடவேன்? [6]மயர்வு அற மதி நலம் அருளப்பெற்றவர் ஆகையாலே பிராட்டிமாரைப் போன்று பேசலாய் இருக்கிறபடி. நான் - அவ் வடிவினைக் காண ஆசைப்பட்ட நான். முதல் தனி அங்கும் இங்கும் முழு முற்று உறு வாழ் பாழ் ஆய் - முதன்மை பெற்றதாய், உபமானம் இல்லாததாய், அங்கும் இங்குமான மகத் தத்துவங்கள் முழுதிலும் பரந்து, மக்களுக்குப் போகங்களையும் மோக்ஷத்தையும் விளைத்துக் கொள்ளுகைக்கு ஈடாகக்

1. "குருமாமணிப் பூண்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 1. 3: 10
2. "உள்ளத்துள்" என்பது, அமலனாதிபிரான், 4.
3. "அல்குலும்" என்பது, திருவாய்மொழி, 5. 5: 8.
4. "அந்திபோல் நிறத்து" என்பது, அமலனாதிபிரான், 3.
5. பிராட்டிமார் தீண்டுகையால் கணைக்கால்கள் மயிர்க்கூச்செறிந்திருக்கையாலே 'முட்களோடு கூடிய திருக் கணைக்கால்களும்' என்கிறார்.
6. சேர்வேன் என்னாதே "கூடுவன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மயர்வற' என்று தொடங்கி.

கருநிலமாய் உள்ள மூலப்பகுதிக்கு ஆத்மாவாய், முதல் - மூலப்பகுதியை நோக்கத் தான் முதன்மை பெற்றதாய் நியமிக்கக் கூடியதாய். தனி - உபமானம் இல்லாததாய். சூழ்ந்து - மூலப்பகுதியிலும் மூலப்பகுதியாலாய பொருள்களிலும் பரந்து. அகன்று ஆழ்ந்து உயர்ந்த - பரந்திருக்குமிடத்தில், ஞானத்தாலே பத்துத் திக்குகளிலும் பரந்த. முடிவிலீயோ - அளவிட்டு அறிய முடியாததான ஆத்ம தத்துவத்துக்கு நிர்வாஹகன் ஆனவனே! முடிவு என்பது அழிவினைக் குறிப்பதாகக் கொண்டு, சரீரத்தைப் போன்று அழிந்துபோவது அன்றிக்கே என்றும் உள்ளதான ஆத்ம தத்துவம் என்னலுமாம்.

[1] முதல் தனி அங்கும் இங்கும் முழு முற்று உறு வாழ் பாழாய், முழு மூ உலகு ஆதிக்கு எல்லாம் மூதல் தனி வித்தாய், முதல் தனி சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவிலியாய் இருக்கிற முதல் தனி உன்னைக் கண்டேன்; பரமபதத்திலே நித்திய சூரிகளுக்கு இனியனாய் இருக்கிற உன்னை எனை நாள் வந்து கூடுவன் நான்? [2] காரண காரியங்களான இரண்டு நிலைகளையுடைய சித்துக்கும் அசித்துக்கும் நிர்வாஹகனாய் இருக்கிற இருப்பைக் காட்டி அநுபவிப்பித்த இவ்வளவு போராது; உனக்கே உரிய விக்கிரகத்தை யுடையனாய்ப் பரமபதத்திலே இருக்கும் இருப்பைக் கண்டு அநுபவிக்க வேண்டுமென்றதாயிற்று. (9)

1101.

சூழ்ந்து, அகன்று, ஆழ்ந்து, உயர்ந்த முடிவு இல் பெரும் பாழேயோ!
சூழ்ந்து, அதனிற் பெரிய பர நன் மலர்ச் சோதீயோ!
சூழ்ந்து, அதனில் பெரிய சுடர் ஞான இன்பமேயோ!
சூழ்ந்து, அதனில் பெரிய என் அவா அறச் சூழ்ந்தாயே.

பொ - ரை :— தன் காரியத்தின் கூட்டமான மகத்து முதலான தத்துவங்களை அடங்கச் சூழ்ந்து பத்துத் திக்குகளிலும் புகுந்து எங்கும் பரந்து அழிவு இல்லாததாய் அளவிடக் கூடாததாய் மக்களுக்குப் போக மோக்ஷங்களை விளைத்துக் கொள்ளலாம் நிலமான மூலப்பகுதிக்கு ஆத்மா ஆனவனே! அந்த மூலப்பகுதியை ஞானம் என்னும்

---

1. பாசுரத்துக்கு அந்வயம் காட்டுகிறார் 'முதல் தனி' என்று தொடங்கி.

2. அந்வய முகத்தால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'காரண காரியங்களான' என்று தொடங்கி.

குணத்தால் வியாபித்து அதனைக் காட்டிலும் பெரியதாய் அதற்கு மேலானதாய் விகாரங்கள் இல்லாமையாலே சிறந்ததாய் மலர்ந்த ஒளி உருவமான ஆத்மாவிற்கும் ஆத்மா ஆனவனே! அவ் விரண்டனையும் வியாபித்து அவற்றைக் காட்டிலும் பெரியதாய்க் கல்யாண குணங்களால் பிரகாசிக்கின்ற ஞான ஆனந்த லக்ஷண சொரூபத்தை யுடையவனே! மேலே கூறிய அசித்துச் சித்து ஈஸ்வரன் என்ற மூன்று தத்துவங்களையும் சூழ்ந்து கொண்டு அவற்றைக் காட்டிலும் பெரியதான என் அவா நீங்கும்படி வந்து கலந்தாய் என்கிறார்.

வி - கு:—முதல் மூன்று அடிகளும் முறையே அசித்து, சித்து, ஈஸ்வர தத்துவங்களைக் கூறுகின்றன. ஈற்றடி இவருடைய அவாவின் பெருக்கினைத் தெரிவித்து, அத்தகைய அவா குறையும்படி சர்வேஸ்வரன் வந்து கலந்த தன்மையைக் கூறுகின்றது.

ஈடு:—பத்தாம் பாட்டு. [1]எம்பெருமானுக்கு இவர் விரும்பிய காரியத்தைச் செய்தல்லது நிற்க ஒண்ணாதபடி பெரிய பிராட்டியார் ஆணை இட்டுத் தடுத்து மிகப் பெரிய துன்பத்தோடே கூப்பிட்டு இவர் வேண்டிக்கொண்டபடியே எல்லாவற்றாலும் நிறைந்தவனாய்க் கொண்டு வந்து கலந்தருளக்கண்டு, அளவிட முடியாததான மூலப்பகுதி தத்துவத்திலும் ஆத்ம தத்துவத்திலும் உன்னுடைய நினைவின் உருவமான ஞானத்திலும் பெரியதான என் விடாய் எல்லாம் தீர வந்து என்னோடே கலந்தாய்; என்னுடைய விருப்பமும் ஒருபடி முடியப் பெற்றது என்கிறார்.

இனி, இல்லை என்னும்படி என்னை விடாய்ப்பித்து, அதற்கு அவ்வருகான விடாயையுடையையாய்க் கொண்டு என்னோடே கலந்த உன்னுடைய விடாயும் ஒருபடி நீங்கியதே

---

1. "அவா அற" என்பதற்கு இரண்டு பொருள். தம்முடைய அவா நீங்கும்படி வந்து கலந்தான் என்பது முதற் பொருள். மூன்று தத்துவங்களையும் விளாக்குலை கொண்டிருக்கிற தம் அவாவானது, அற - சிறிதாம்படி; அதாவது, தம்முடைய காதல் குளப்படி என்னும்படி கடல்போன்ற காதலோடே தான் வந்து கலந்தான் என்பது இரண்டாவது பொருள். இவ்விரண்டு பொருள்களையும் முறையே அருளிச்செய்கிறார் 'எம்பெருமானுக்கு' என்று தொடங்கியும், 'இனி, இல்லை என்னும்படி' என்று தொடங்கியும். "துயர் அறு சுடர் அடி" என்ற முதற் பாசுரப் பகுதியிலே அருளிச்செய்ததனை இந்த இரண்டு அவதாரிகையாலும் முடித்துக் காட்டுகிறார் என்று தோன்றுகிறது.

என்கிறார் என்னவுமாம். [1] "பரதனை மடியின்மேல் வைத்துக் கொண்டு சந்தோஷத்துடன் தழுவினார்" என்னும்படியே.

சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவு இல் பெரும் பாழேயோ - தன்னிடத்து உண்டான மகத்து முதலான தத்துவங்களைப் பத்துத் திக்கிலும் புக்கு எங்கும் ஒக்கப் பரந்து, என்றும் உள்ளதாய் அளவிட முடியாததாய் மக்களுக்குப் புருஷார்த்தத்தை விளைத்துக் கொள்ளலாம் நிலமான மூலப்பகுதிக்கு ஆத்மா ஆனவனே! சூழ்ந்து அதனில் பெரிய பரம் நல் மலர்ச் சோதீயோ - அதற்குள்ளும் பரந்து, அதனைக் காட்டிலும் பெரிதாய், அதனை ஏவுகின்றது ஆகையாலே மேலாய், விகாரம் முதலானவைகள் இல்லாமையாலே சிறந்ததாய், மலர்ந்த ஒளி உருவமான ஆத்ம வஸ்துவுக்கும் ஆத்மா ஆனவனே! [2] இப்போது மூலப்பகுதியையும் ஆத்மாக்களையும் சொல்லுகிறது, தம்முடைய காதல் பெரியவற்றிலும் பெரியது என்கைக்காக. [3] அவற்றுக்கும் ஈஸ்வரனை ஒழியத் தோன்றுதல் நிலைத்தல் இல்லாமையாலே அவ்வளவும் சொல்லுகிறது.

சூழ்ந்து அதனில் பெரிய [4]சுடர் ஞான இன்பமேயோ - அவை இரண்டனையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, அவற்

---

1. இரண்டாவது அவதாரிகைக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பரதனை' என்று தொடங்கி.

"அங்கே பரதம் ஆரோப்ய முதிதः பரிஷஸ்வஜே."

என்பது, ஸ்ரீராமா. யுத். 130 : 39.

2. பேற்றினைப்பெறுகிற சமயத்தில் மூலப் பகுதியையும் ஆத்மாவையும் சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இப்போது' என்று தொடங்கி. 'இப்போது' என்றது, பேறு பெறுகிற சமயத்திலே என்றபடி.

3. ஆயின், "பாழேயோ, சோதீயோ" என்று சாமாநாதிகரணமாக (ஒன்றாக)ச் சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவற்றுக்கும்' என்று தொடங்கி.

4. "சுடர் ஞான இன்பமேயோ" என்பதற்கு இரண்டு பொருள். முதற் பொருளில், சுடர் இன்ப ஞானமேயோ என்று மாற்றுக. "ஞானமேயோ" என்றது, ஞானத்துக்கு இருப்பிடமானவனே என்றபடி. "சுடர் என்பதற்கு, நினைவின் உருவமான - சங்கல்ப ரூபமான என்பது பொருள். தடை இல்லாத ஒளியுடன் கூடியதாகையாலே சங்கல்பத்தைச் "சுடர்" என்ற சொல்லால் அருளிச்செய்கிறார்.

றுக்கு நிர்வாஹகமாய் நினைவின் உருவமாய் சுகத்தின் உருவமான ஞானத்தை யுடையவனே என்று நினைவின் உருவமான ஞானத்தினைச் சொல்லுதல். அன்றிக்கே, ‘சுடர் ஞான இன்பமேயோ’ என்று ஒளி உருவனும், இன்பத்தின் உருவனுமானவனே என்று எம்பெருமானைச் சொல்லுதல். [1]சூழ்ந்து - மேலே கூறிய மூன்று தத்துவங்களையும் விளாக்குலைகொண்டு, அதனில் பெரிய - அவை குளப்படியாம்படி பெரிதான, என் அவா - என்னுடைய காதலை, அறச் சூழ்ந்தாய் - அதனிலும் பெரிய உன் காதலைக் காட்டி வந்து கலந்தாயே! [2]என்னுடைய கூப்பீடும் ஒருபடி ஓவும்படி பண்ணிற்றே! [3]“பரதனை மடியின் மேல் ஏற்றிக் கொண்டு மகிழ்ச்சியுற்றவராய்த் தழுவினர்” என்கிறபடியே, மீண்டு புகுந்து, ஸ்ரீ பரதாழ்வானை மடியிலே வைத்து உச்சியை மோந்து உகந்து அணைத்தாற் போலே ஆயிற்று, இவருடைய விடாய் கெடும்படி கலந்தது. (10)

1102.

அவா அறச் சூழ் அரியை, அயனை, அரனை அலற்றி,
அவா அற்று, வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவா இல் அந்தாதிகளால் இவை ஆயிரமும் முடிந்த
அவா இல் அந்தாதி இப்பத்து அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே.

பொ - ரை:—பிரமனுக்கு அந்தராத்மாவாக உள்ளவனும், சிவனுக்கு அந்தராத்மாவாக உள்ளவனும், தன்னைக் காணவேண்டும் என்ற அவாவினையுடைய அடியார்களுடைய அவா தீரும்படி வந்து கலக்கும் அரி என்னும் திருப்பெயரையுடையவனுமான எம்பெருமானைக் கூப்பிட்டு, உலகப் பற்று நீங்கி, துக்கம் அற்றவரான திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே பரபக்தியால் அருளிச்செய்யப்பட்ட அந்தாதித் தொடையாக அமைந்த ஆயிரம் திருப்பாசுரங்களுள், பரமபக்தியால் அருளிச்செய்த அந்தாதியாகிய இப்பத்துத் திருப்பாசுரங்களையும் வல்லவர்கள் உயர்ந்த பிறவியினையுடையர் ஆவர்கள்.

---

1. இப்பாசுரத்துக்கு அருளிச்செய்த அவதாரிகை இரண்டனுள் இரண்டாவது அவதாரிகைக்குத் தக, பொருள் அருளிச்செய்கிறார் ‘சூழ்ந்து’ என்று தொடங்கி.

2. முதல் அவதாரிகைக்குச் சேர பொருள் அருளிச்செய்கிறார் ‘என்னுடைய’ என்று தொடங்கி.

3. இதற்கு உதாரணம் காட்டுகிறார் ‘பரதனை’ என்று தொடங்கி. இப் பொருள் அமைந்த சுலோகத்தை மேலே காண்க.

வி - கு :—வீடு பெற்ற - விடுதலை அடைந்த. மூன்றும் அடியில் உள்ள அவா-பரபக்தியைக் குறித்தது. நான்காம் அடியிலுள்ள அவா-பரமபக்தியைக் குறித்தது. இரண்டு இடங்களிலும் அவாவில் என்பது வேற்றுமை மயக்கம்; அவாவால் என்பது பொருள். உயர்ந்து என்பது, செயவென் எச்சத்திரிபு.

ஈடு :—முடிவில், [1]எல்லாக் குற்றங்களுக்கும் எதிர்த்தட்டு ஆனவனாய், மங்களங்கட்கெல்லாம் நிலைக்களனாய், ஞான ஆனந்தங்களையே வடிவாக உடையனாய், உயர்வு அற உயர் நலம் உடையனாய், வனப்பு முதலானவற்றோடு கூடிய நித்தியமான மங்களம் பொருந்திய விக்கிரஹத்தை உடையனாய், அளவு இல்லாத திவ்விய ஆபரணங்களால் நிறைந்தவனாய், எல்லா ஆயுதங்களையுமுடையனாய், திருமகள் பூமகள் ஆய்மகள் இவர்கட்கு நாயகனாய், அஞ்ச வேண்டாத இடங்களிலும் அஞ்சக் கூடியவர்களான ஆதிசேடன் பெரிய திருவடி முதலான நித்திய சூரிகளாலே எப்பொழுதும் தொண்டு செய்யப்படுகின்ற திருவடித் தாமரைகளையுடையனாய், ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருப்பவனாய், சர்வேஸ்வரனாய், தன்னால் ஏவப்படுமவர்களான பிரமன் சிவன் முதலானவர்கட்கும் அந்தராத்மாவாய்,

---

1. பிரபந்தம் முடிகின்றது ஆகையாலே, இப் பிரபந்தத்திலே சொல்லப்பட்ட கருத்தினைச் சுருங்க அருளிச்செய்து கொண்டு, "அவா அறச் சூழ் அரியை" என்றது முதல் "இப் பத்து அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே" என்றது முடிய உண்டான அர்த்தங்களையும் சேரப் பிடித்து அருளிச்செய்து, இது கற்றார்க்குப் பலம் சொல்லுகிறது என்று இப்பாட்டுக்கு இயைபு அருளிச்செய்கிறார் 'எல்லாக் குற்றங்களுக்கும்' என்று தொடங்கி.

"மனனக மலமற" என்கிற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி 'எல்லாக் குற்றங்கட்கும்' என்று தொடங்கியும், "துயரறு சுடரடி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'வனப்பு முதலானவற்றோடு' என்று தொடங்கியும், "பல பலவே ஆபரணம்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'அளவு இல்லாத' என்று தொடங்கியும், "ஒண் சங்கதை வாள் ஆழியான்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'எல்லா ஆயுதங்களையு முடையனாய்' என்று தொடங்கியும், "தேவிமார் ஆவார்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றித் 'திருமகள்' என்று தொடங்கியும், "அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'அஞ்சவேண்டாத' என்று தொடங்கியும், "அயனை அரனை" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தன்னால் ஏவப்படுமவர்களான' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

[1]தன்னைக் காண வேண்டுமென்று விடாய் கொண்டு அடைகின்ற அடியார்களுடைய விடாய் தீரக் கலக்கும் தன்மையனை எம்பெருமானைக் காண வேண்டும் என்று கூப்பிட்டு, அவனைப் பெற்றுத் துக்கம் அற்றவராய், எல்லாத் தடைகளும் நீங்கினவரான ஆழ்வாருடைய பக்தியினுடைய தூண்டுதல் காரணமாகப் பிறந்தது ஆயிரம் திருவாய்மொழியும்; அவற்றில் வைத்துக் கொண்டு, மேலே கூறியவை போல் அன்றிக்கே பெற்று அல்லது தரிக்க ஒண்ணுதபடியான பரம பக்தியாலே பிறந்த அந்தாதியான இத் திருவாய்மொழி வல்லார், சம்சாரத்தில் பிறந்து வைத்தே அயர்வு அறும் அமரர்களோடு ஒப்பர் என்கிறுர்.

அவா அறச் சூழ் அரியை - விரும்பியவற்றை எல்லாம் கொடுக்கின்றவனை சர்வேஸ்வரனைத் [2]தம்முடைய காதல் கெட வந்து கலந்தபடியாலே வேறு ஒரு அடை கொடாதே அது தன்னையே சொல்லுகிறுர். [3]அவா அறச் சூழ்கையாவது, தன்னைக் காணவேண்டும் என்று விடாய்த்த அடியார்களுடைய விடாய் தீரக் கலக்கை. அயனை அரனை - [4]தன்னுடைய ஏவலாளர்களான பிரமனுக்கும் சிவனுக்கும் அந்தராத்மா ஆனவனை. [5]அயனை அரனை என்னும் இச் சாமாநாதி கரண்யத்

1. "அவா அறச் சூழ் அரியை" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தன்னைக் காணவேண்டும்' என்று தொடங்கியும், "அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'பக்தியினுடைய' என்று தொடங்கியும், "இப் பத்து அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இத் திருவாய்மொழி வல்லார்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறுர்.

2. நாராயணன் முதலான திருப் பெயர்கள் இருக்க, அவற்றை விட்டு, "அவா அறச் சூழ் அரியை" என்று இதனையே நிரூபகமாகச் சொல்லுவான் என்? என்ன, 'தம்முடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர்.

3. மேலே நால்வகைப்பட்ட அதிகாரிகளுடைய அவா அறச் சூழ் அரியை என்று பொருள் அருளிச்செய்தார். இப்பொழுது, கேவலம் முமுக்ஷுக்களுடைய அவா அறச் சூழும் அரியை என்று பொருள் அருளிச்செய்கிறுர் 'அவா அறச் சூழ்கையாவது' என்று தொடங்கி. இது, அவதாரிகையிற் சொன்ன அர்த்தத்தை விவரித்தபடி.

4. "அயனை அரனை" என்கிற சாமாநாதிகரண்யம் சரீர ஆத்மபாவ நிபந்தனம் என்று கொண்டு பொருள் அருளிச்செய்கிறுர் 'தன்னுடைய' என்று தொடங்கி.

5. இச்சாமாநாதிகரண்யத்துக்குப் பயன் அருளிச்செய்கிறுர் 'அயனை அரனை' என்று தொடங்கி.

தால், பிரமன் சிவன் என்னும் இவர்கள் ஈஸ்வரர்கள் ஆவர்களோ? என்று மக்கள் கொள்ளும் ஐயத்தை அறுக்கிறார். [1] அவர்களுடைய உண்மை, நிலை பேறு, செய்தல், செய்யாமை இவைகள், சர்வேஸ்வரனுடைய அதீனமாகையாலே அவர்களுக்குப் பாரதந்திரியமே சொரூபம்; தலைவர்களாக இருக்கும் தன்மை அவர்களுடைய செயல்கள் காரணமாக வந்த இத்தனை.

இச் சாமாநாதி கரண்யத்தை அறியும் தன்மை இன்றியே எளியராய் இருப்பார் அறியத் தகும் முறையில் கூறப்படும் வகைகளும் உண்டு. அவை: "அயனை அரனை அவா அற்று, அரியை அலற்றி, வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்" என்பது ஒரு வகை; "அயனை அரனை அவா அறச் சூழ் அரியை அலற்றி, வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்" என்பது மற்றொரு வகை.

அலற்றி அவா அற்று வீடு பெற்ற - கூப்பிட்டு அவனைப் பெற்று எல்லாத் தடைகளும் நீங்கியவர் ஆகையாலே துக்கம் இல்லாதவரான ஆழ்வார் அருளிச்செய்த. அவா இல் அந்தாதிகளால் இவை ஆயிரமும் - பக்தியின் தூண்டுதலாலே பிறந்த ஆயிரம் திருவாய்மொழியிலும். [2] இவருடைய அவா மைத்திரேய பகவான் தானத்திலே நிற்கிறதாயிற்று. அன்றிக்கே, [3] அவா உபாத்தியாயராக நடத்த நடந்த ஆயிரம் என்னுதல். [4] ஆழ்வார்க்குப் பின்பு நூறுயிரம் கவிகள் போரும் உண்டானார்கள்; அவர்கள் கவிகளோடு கடலோசையோடு வாசி அற்று

1. அவர்களை, படைத்தல் அழித்தல்களைச் செய்பவர்களாகச் சாஸ்திரங்கள் சொல்லாநிற்க, சரீர ஆத்மபாவத்தால் அவர்களுக்குப் பாரதந்திரியம் சொல்லுதல் பொருந்துமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவர்களுடைய' என்று தொடங்கி.

2. தத்துவார்த்தங்களை எல்லாம் ஸ்ரீ பராசர பகவான் மேலும் மேலும் விரிவாகக் கூறியது, ஸ்ரீ மைத்ரேய பகவான் வினாக்கள் கேட்ட பின்பு ஆகையாலே, அந்த மைத்ரேய பகவான் ஸ்தானத்திலே இங்குப் பக்தி என்கிறார் இவருடைய' என்று தொடங்கி. என்றது, ஸ்ரீ விஷ்ணு புராணத்துக்கு மைத்ரேய பகவான் காரணமானாற்போலே, இப் பிரபந்தத்துக்கும் இவருடைய பக்தி மூலம் என்றபடி.

3. வேறு ஒரு வகையிலே பாவம் அருளிச்செய்கிறார் 'அவா உபாத்தியாயராக' என்று தொடங்கி.

4. பக்தி முன்னாகப் பிறந்தது ஆகையாலே இப் பிரபந்தத்தை உலகமெல்லாம் கொண்டாடுகின்றன என்கிறார் 'ஆழ்வார்க்கு' என்று தொடங்கி.

அவற்றை விட்டு இவற்றைப் பற்றுகைக்கு அடி, இவருடைய காதற் பெருக்கு வழிந்து புறப்பட்ட சொல்லாகை [1]அன்றோ.

[2]முடிந்த அவாவில் அந்தாதி இப் பத்து-தரிக்க ஒண்ணாத படியான பரம பக்தியாலே பிறந்ததாயிற்று இத் திருவாய்மொழி. இந்த அவாவிற்கு உதவிற்றிலனாகில் ஈஸ்வரனுக்கும் சைதந்யம் இன்றிக்கே ஒழியும். [3]"சூழ் விசும்பு அணி முகில்" என்ற திருவாய்மொழிக்கு முன்னே பரபக்தியாலே சென்றது. "சூழ் விசும்பு அணி முகில்" என்ற திருவாய்மொழி பர ஞானத்தாலே சென்றது. இத் திருவாய்மொழி, பரம பக்தி யாலே. [4]பகவானுடைய திரு அருள் பாதியும் தாங்கள் பாதியு மாகச் சொல்லுமவர்களுக்கு, சரீரத்தின் முடிவிலே இப் பர பக்தி முதலானவைகள் உண்டாம்; இவர் அடியிலே மயர்வற மதிநலம் அருளப்பெறுகையாலே எழுந்தருளியிருக்கும் போதே உண்டாயிற்றின.

[5]கர்மத்தாலும் ஞானத்தாலும் உண்டாகின்ற பக்தியி னுடைய இடத்திலே சர்வேஸ்வரனுடைய திரு அருள் நிற்க, அது அடியாகப் பிறந்த பரபக்தி பரஞான பரமபக்திகள்

---

1. நாவலம் தீவிற் கவிகள் எல்லாம் சிலநாள் கழியப்
பூவலந் தீவது போல்வ வல்லாற் குருகூர்ப் புலவன்
கேவலந் தீங் கறுப்பான் கவிபோல் எங்கும் போய்க் கெழுமிக்
கூவலம் தீம் புனலும் கொள்ளுமே வெள்ளம் கோளிழைத்தே.

உரிக்கின்ற கோட்டலின் உந்து கந்தம் என ஒன்று மின்றி
விரிக்கும் தொறும் வெறும் பாழாய்விடும் பிறர் புன்கவி ; மெய்
தெரிக்கின்ற கோச் சடகோபன்தன் தெய்வக்கவி புவியில்
சுரிக்கின்ற நுண்மணல் ஊற்றொக்கும் தோண்டச் சுரத்தலினே.

என்னும் செய்யுட்கள் இங்கு நோக்கத்தகும். சடகோபரந்தாதி, 58, 63.

2. முடிந்த அவா - பரமபக்தி. "முடிந்த அவா" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இந்த அவாவிற்கு' என்று தொடங்கி. சைதந்யம் - சித்தின் தன்மை ; ஞானம்.

3. இது மாத்திரமேயோ பரமபக்தியாலே பிறந்தது? என்ன, 'சூழ் விசும்பு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. சரீரத்தின் முடிவிலே அன்றோ பரமபக்தி உண்டாவது? இவர்க்கு முன்னே உண்டாகக் கூடுமோ? என்ன, 'பகவானுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. ஆயின், கர்ம ஞானங்களாலே அன்றோ பக்தி உண்டாவது? என்ன, 'கர்மத்தாலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

அன்றே இவரது. அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே - இதனை அறிந்தவர்கள் இவ் உலகிலே பிறந்து வைத்தே நித்திய சூரிகளோடு ஒப்பர். பிறந்தே உயர்ந்தார் - [1] சர்வேஸ்வரனுடைய அவதாரத்தைப் போன்றதாம் இவர்களுடைய பிறப்பும். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

முனிமாறன் முன்பு உரை செய் முற்று இன்பம் நீங்கித்
தனியாகி நின்று தளர்ந்து — நனியாம்
பரமபத்தியால் நைந்து பங்கயத்தாள் கோனை
ஒருமை உற்றுச் சேர்ந்தான் உயர்ந்து.

பத்தாம் பத்து ஈட்டின் தமிழாக்கம்
முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.
வடக்குத் திருவீதிப்பிள்ளை மலரடி வாழ்க.
நம்பிள்ளை நற்றாள் வாழ்க.
மாறன் மலரடி வாழ்க.

---

1. இங்கே பிறந்திருக்கச்செய்தே உயர்வு உண்டாகக் கூடுமோ? என்ன, 'சர்வேஸ்வரனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "உயர்ந்தே" என்ற பதத்தில் உள்ள ஏகாரத்தைப் பிரித்துப் "பிறந்தார்" என்ற பதத்தோடும், "பிறந்தார்" என்ற பதத்திலே உள்ள ஆர் விகுதியைப் பிரித்து "உயர்ந்தே" என்ற பதத்தோடும் கூட்டுக. பிறந்தே உயர்ந்தார் என்க.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

பிற்சேர்க்கை I

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

செய்யுள்	பக்கம்
அசுரர்கள் தலைப்பெயில்	111
அடிச்சியோம் தலைமிசை	103
அந்தமில் புகழ்	64
அமரராய்த் திரிகின்றார்	53
அமரர்க்கு அரியானை	179
அருளை ஈ என்னம்மானே	257
அருள்பெறுவார்	186
அவத்தங்கள் விளையும்	118
அவாவறச்சூழ் அரியை	279
அன்றியாம் ஒரு புகலிடம்	11
ஆழியான் ஆழி அமரர்	151
ஆள்கின்றான் ஆழியான்	140
ஆள்வான் ஆழிநீர்	173
இடர்கெட எம்மை	13
இலங்கதி மற்றொன்று	9
இன்று போய்ப் புகுதிர்	37
இன்று என்னை	294
உகக்கும் நல்லவரொடும்	114
உண்டு களித்தேற்கு	283
உம்பரந்தண்பாழேயோ	355
உற்றேன் உகந்து	299
ஊரும் புட்கொடியும்	42
ஊழிமுதல்வன் ஒருவனே	261
எதிர் எதிர் இமையவர்	311
எளிதாயினவாறு	282
எனக்காராவமுதாய்	362
என்கொல் அம்மான்	245
என்னை முற்றும்	240
என்னெஞ்சத்துள்	203
ஏத்துமின் நமர்காள்	26
கடுவினை களையலாகும்	58
கண்டேன் கமலமலர்	155
கண்ணன் கழலிணை	165
கண்ணுள் நின்றகலான்	291
காட்டித் தன் கனைகழல்	223
குடியடியார் இவர்	319
குரைகழல்கள் குறுகினம்	213
கூத்தன் கோவலன்	17
கூவிக்கொள்ளாய்	351
கெடும் இடராய	30
கோலமலர்ப்பாவைக்கு	365
சாரா ஏதங்கள்	178
சார்வே தவநெறிக்கு	134
சூழ்ந்தகன்று	376
சூழ்விசும்பணிமுகில்	305
செங்கனிவாய்	121
செஞ்சொற்கவிகாள்	228
தகவிலை தகவிலையே	82
தலைமேல தாளிணைகள்	211
தலைமேல் புனைந்தேன்	144
தாள தாமரைத்தடம்	6
தானேயாகி நிறைந்து	235

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
தானேயுலகெல்லாம்	171	பெருமையனே வானத்து	137
திகழ்கின்ற திருமார்பில்	218	பெற்றினிப் போக்குவனோ	368
திருப்பேர் நகரான்	286	பேசுமின் கூசமின்றி	46
திருமாலிருஞ்சோலைமலை என்றேன்	274	பேரே உறைகின்ற	278
திருமாலிருஞ்சோலை மலையே	258	போரவிட்டிட்டு	359
திருமாலிருஞ்சோலை யானே	255	மங்க ஒட்டுன் மாமாயை	263
துடைத்த கோவிந்தனாரே	56	மடந்தையர் வாழ்த்தலும்	317
துயர்கெடும் கடிது	21	மணித் தடத்தடி	23
தொண்டீர்வம்மின்	15	மற்றிலம் அரண்	20
தொழுத்தையோம்	91	மாதவன் என்றென்று	176
தொழுதனர் உலகர்கள்	309	மாதவன் தமர் என்று	314
நண்ணு அசுரர்	249	மாயம் செய்யேல்	344
நண்ணினம் நாராயணனை	199	மாய்ந்தறும் வினைகள்	63
நாகத் தணையானை	148	மானாங்கார மனம்கெட	266
நாடீர் நாள்தோறும்	174	முதல் தனி வித்தேயோ	370
நாமடைந்த நல்லரண்	24	முனியே நான்முகனே	330
நாமுமக்கறியச்சொன்ன	60	மெய்ந்நின்று கமழ்	214
நாரணன் எம்மான்	168	மேயான் வேங்கடம்	175
நாரணன் தமரை	307	வகையால் மனம் ஒன்றி	158
நிச்சித்திருந்தேன்	116	வந்தவர் எதிர்கொள்ள	325
நில்லா அல்லல்	302	வாட்டாற்றான் அடி	194
நெடியான் அருள்சூடும்	181	வானே தருவான்	283
பணிநெஞ்சே நாளும்	149	வானேற வழிதந்த	207
பணிமொழி நினைதொறும்	97	விதிவகை புகுந்தனர்	323
பற்றென்று பற்றி	161	வினைவல்லிருள் என்னும்	180
பிடித்தேன் பிறவி	280	வீவன்நின் பசுநிரை	87
பிரியாதாட்செய் என்று	220	வேமெமதுயிர்	160
புண்ணியம் செய்து	49	வேய்மருதோளிணை	73
		வேள்வியுள் மடுத்தலும்	315
		வைகுந்தம் புகுதலும்	321

செய்யுள் அகராதி முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை II

—:o:—

வியாக்கியானத்தில் வந்துள்ள

ஐதிஹ்யங்கள்

ஒரு திருவேட்டையிலே, பட்டர் திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாக இருக்க, 'மாலைப் பொழுது ஆயிற்று' என்று சிலர் விண்ணப்பம் செய்ய, 'நாம் பெருமாள் அழகிலே துவக்குண்டு இன்று ஒரு நாளும் செய்யவேண்டிய காரியத்திலே சிறிது தாழ நின்றோம் என்றால், இது குற்றமாக யமன் கேட்கவோ? ஓர் அரசன் இருந்து நாட்டுக் கணக்குக் கேட்டுக்கொடு வாராநின்றால் அரசனுக்கு அந்தரங்கனாய் இருப்பான் ஒருவன் பெயரை வாசித்தால், 'ஓம்காண்! அது கிடக்க; மேற்செல்' என்றால் பின்னை ஒருநாளும் அப் பெயரை எடுத்து வாசிக்கப் பெறான்காண்' என்றாராம். பக். 34.

பிள்ளை திருநறையூர் அரையரும் பட்டரும் உள்ளே புக்கு வலம் வாராநிற்க நான் சேவித்துப் போனேன்: அல்லாதார் எல்லாரும் விரைந்து சடக்கென வாரா நிற்க, இவர்கள் திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையும் கண்களாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வருகிறபடியைக் கண்டு, அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்கச் செய்தே இவர்களான வாசி இருந்தபடி என்? என்று இருந்தேன் என்று அருளிச்செய்வர் நஞ்சீயர். பக். 40.

பிள்ளை ஜநநாதப்பிரஹ்மராயர் திருமுடிக் குறையிலே மரம் வெட்டுவியாநிற்க, எம்பார் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. ஆச்சான் திருவாலிநாடுதாசர் சுரவன்பாக்குகள் நல்லன சிலவற்றைப் பட்டருக்குக் கொடுவந்து கொடுக்க, அவற்றைக் கண்டு 'இவை இருந்தபடி என்? திருவருள் கமுகினின்றும் வந்தவையோ?' என்று அருளிச்செய்தாராம். பக். 41.

பட்டரை நஞ்சீயர் 'திருநாமம் சொல்லும்போது பக்தியுடையனாய்க் கொண்டு சொல்ல வேண்டுமோ?' என்று கேட்க, 'கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறு ஒரு உவர்க் குழியிலே முழுகிப் போக வேண்டுமோ? மேல் உண்டான நன்மை

யைத் தருகிற இது தகுதியையும் தரமாட்டாதோ?' என்று அருளிச்செய்தாராம். பக். 50.

ஒரு செட்டியை இவன் தமிழில் சிறந்த புலமைப் படைத்தவன் என்று பட்டருக்குக் காட்டினார்களாக, பட்டர் அவனைப் பார்த்து 'உனக்கு யாதேனும் கேட்க விருப்பம் இருப்பின் கேட்கலாகாதோ?' என்ன, 'சிலர் காண்கிற தேகத்துக்கு அவ்வருகு ஆத்மாவும் இல்லை, புண்ணிய பாவங்களும் இல்லை, ஈச்வரனும் இல்லை' என்று இராநின்றார்கள்; சிலர் இச் சரீரம்தான் நிலை அற்றது என்று இதனுடைய தாழ்வினைக் கண்டு, அவ்வருகே நிலைத்திருப்பதொன்றனைப் பற்றவேண்டும் என்று இராநின்றார்கள்; விஷயம் ஒன்றாக இருக்க, வேறுபட்ட இவ் இரண்டு கொள்கைகளும் நடக்கிறபடி எங்ஙனே?' என்ன, "என்னுடைய மாயையானது ஒருவராலும் தாண்ட முடியாதது" என்றும், "என்னையே பற்றினவர்கள் அம் மாயையினைத் தாண்டுகிறார்கள்" என்றும் சொல்லுகிறபடியே, நல்லவர்கள் இதனுடைய தாழ்வினைக் கண்டு இதனைக் கழித்துக் கோடற்கும், மற்றையோர்கள் இதிலே இனிமை உண்டு என்று நினைத்துக் கேடு உறுகைக்கும் உடலாம்படி இதனை இடை எடுத்துக் காணும் ஈஸ்வரன் பண்ணிற்று என்று அருளிச்செய்தார். பக். 51.

திரு அத்யயனம் பாடாநிற்க, இதனைக் கேட்டருளி, ஆளவந்தார் 'நமக்கு ஆழ்வாரோடே ஒரு சம்பந்தம் உண்டாக வேண்டும்' என்று, அப்போதே ஸ்ரீ பாதத்தை உடையாரைக் கூட்டிக்கொண்டு எழுந்தருளினார். பக். 60.

இதற்குப் பட்டர் அருளிச்செய்தாக, பரிஜையப்பர் 'ஒரு மதிப்பன் தலையிலே கிடவாத அன்று கொள்வார் கொடுப்பார் இன்றியே எளி விலையனாய்ப் போம்' என்று அருளிச்செய்வர். பக். 62.

பிள்ளையமுதனார் 'ஒரு பசுவின் காலிலே முட் பாய்ந்தால் ஆயன் தலைகாண் சீக்கொள்வது' என்பராம். பக். 94.

இளையாழ்வான் ஆச்சானைப் பார்த்துப் 'பட்டரை அடைந்த அடியவர்கள் எல்லாரைக் காட்டிலும் நீர் மிகத் தாழ நின்று பழகுவது என்?' என்று கேட்க, 'நீ அன்று கண்டிலை காண், எம்பெருமானார், பட்டர் கையிலே புத்தகத்தைக் கொடுத்துத் திருமுன்பே ஒரு சுலோகத்தை விண்ணம் செய்வித்துத் திருப் பிரம்புக்குப் புறம்பாகக் கொண்டு புறப்பட்டுச்

சுற்றும் பார்த்தருளி, நம்முடையார் அடங்கலும் நம்மை நினைத்திருக்குமாறு போலே இவனை நினைத்திருங்கோள்' என்று அருளிச்செய்தார்.

பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் கிரந்தியைப் பார்த்துச் சிரித்துச் சொன்ன வார்த்தையை நினைப்பது. பக். 209.

ஆழங்காலிலே இழிந்து அமிழ்வார் அவ்விடத்தே கொண்டைக் கோல் நாட்டுமாறு போலே, கொண்டைக்கோல் நாட்டுகிறார் ஆழ்வார் என்று சிற்றாள் கொண்டான் பணிப்பர். பக். 230.

அவ்யபதேஶ்யனுக்கு அநந்தரத்திலவன், தமப்பன் செய்ததனைக் கேட்டு 'இவன் என் செய்தானானன்' என்று சிரித்தான்; 'ஒரு மதிளை வாங்குங்காட்டில் அத் தரிசனம் குலைந்ததோ, திருவாய்மொழி என்றும் ஸ்ரீ ராமாயணம் என்றும் வலியன இரண்டு மகாப் பிரபந்தங்கள் உளவாக இருக்க' என்றானாயிற்று. பக். 251.

நம்பி திருவழுதிநாடு தாசர், "அருள் கொண்டாடும்" என்ற பாட்டிலே, 'ஸ்ரீ கீதையைக் கற்றான் ஒருவன் காலை நேரத்திலே ஒரு சபைக்குச் சென்றால், பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து நம்பமாட்டாமையாலே 'புறத்திண்ணையிலே கிட' என்பர்கள். திருவாய்மொழி கற்றான் ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால், சர்வேஶ்வரன் அகப்படப் புறப்பட்டு எதிர்கொண்டு அகம் ஒழித்துக் கொடுத்து அமுது படியும் எடுத்துவிட்டு உபசரிப்பர்கள் என்றாராம். பக். 254.

எம்பெருமானார் உலாவி அருளுகிறவர் முடியப் போகாதே நடுவே மீண்டருள, எம்பார் கதவினை ஒருச்சரித்துத் 'திருமாலிருஞ்சோலை யாகாதே திருவுள்ளத்தில் ஓடுகிறது' என்ன, 'ஆம், அப்படியே' என்று அருளிச்செய்தார். பக். 281.

இதற்கு ஈஶ்வரன் சொன்ன விடை என்? என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, 'இவர் தலையிலே ஒரு பழியினை ஏறட்டுப் பலகாலம் இழந்திருந்த நாம் சொல்லுவது என்? என்று நாணம் உற்றவனுக்குக் காலாலே தரையைக் கீறி நிற்குமித்தனை போக்கி வேறு விடை உண்டோ?' என்று அருளிச்செய்தார். பக். 297.

இங்கு 'வைஷ்ணவர்கள்' என்றதுவே காரணமாகப் பங்கு பெறாதே திரியுண்ட வைஷ்ணவர்களை அங்குள்ளார் எதிர் கொண்டு இருப்பிடங்கள் கொடுக்கிறபடி! மிளகாழ்வான் படை வீட்டிலே அகரத்துக்குச் செல்ல, 'நீ ஆந்தராளிகன், உனக்குப் பங்கு இல்லை' என்ன, 'நன்மையில் குறை உண்டாய்ச் சொல்லுகிறீர்களோ, அன்றோ' என்ன, 'நன்மையில் குறை இல்லை, இது அன்றோ காரணம்' என்ன, 'நம் நெஞ்சில் இல்லையாகிலும் இவர்களால் வைஷ்ணவன் என்று கைவிடப் பெற்றோமன்றோ' என்று புடைவையை முடிந்து எறட்டுக் கூத்தாடினார். பக். 313.

பட்டர் தம்முடைய இறுதிக் காலத்தில் அருளிச்செய்த வார்த்தை :—பெரிய பிராட்டியார்க்கு அன்பன் ஆகையாலே அவளாலே அங்கீகரிக்கப்பட்ட நமக்கு அன்பனும் என்று இப் பாட்டினை நம்முடையார் துவயத்தின் அர்த்தத்தோடு அநுசந்திப்பர்கள் என்பது. பக். 366.

—:—

ஸ்ரீ:

பிற்சேர்க்கை III

—:o:—

பெரியோர்கள் உரைத்த உரைநயங்கள் வந்துள்ள இடங்கள்

1. ஆச்சான் :—பக். 92.
2. ஆளவந்தார் :—பக். 132.
3. எம்பெருமானார் :—பக். 128, 189, 230.
4. நஞ்சீயர் :—பக். 124.
5. பட்டர் :—பக். 190.
6. பிள்ளான் :—பக். 131.
7. பிறர் :—பக். 83, 189.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை IV

—:o:—

வியாக்கியானத்தில் வந்துள்ள உவமைகள்

அரு நிலங்களிலே வழி போவார் 'அகப்படை' என்று மிடுக்கராய் இருப்பாரைக் கூட்டிக்கொண்டு தம் கைப்பொருளை அவர்கள் கையிலே கொடுத்து அமர்ந்த நிலத்திலே சென்ற வாறே வாங்கிக்கொள்ளுவாரைப் போலே. பக். 5.

ஸ்ரீ மதுரையிலே காலயவனன் ஜராசந்தன் முதலியோர்கள் கிட்டினாற்போலே. பக். 12.

நீணகர் நீள் எரி வைத்தருளாய் என்று பிரமன் சிவன் முதலாயினோர் திருப்பாற்கடலைக் கிட்டினாற்போலே. பக். 12.

ஒரு கல் மதிளுக்குள்ளே போமாறு போலே. பக். 24.

சிங்கம் வசிக்கும் முழைஞ்சு என்னுமாறு போலே. பக். 24.

பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்திற்குப் போம் பெண் பிள்ளைகள் பந்துக்கள் இருந்த இடம் எங்கும் கண்டு வினவப் போமாறு போலே. பக். 28.

செந்தெங்கிற்கு முள் கட்டினாற் போலே. பக். 36.

மஹாராஜர் ஒருவரையும் அங்கீகரிக்க வானர சாதியாக வாழ்ந்து போனாற்போல. பக். 39.

பிரளய ஆபத்தில் உலகத்துக்கு அவன் வயிற்றில் புகாத போது உண்டான செல்லாமையைப் போலே. பக். 44.

ஸ்ரீ பரதாழ்வானைப் போலே ஆயிற்று அவர்கள்; இளைய பெருமாளைப் போலே ஆயிற்று இவர்கள். பக். 49.

இடறினவன் அம்மே என்னுமாறு போலே. பக். 50.

மாம்பழத்தோடு ஒரு சம்பந்தம் இல்லாதது ஒன்றுக்கு மாம்பழ உண்ணி என்று பெயராய் இருக்குமாறு போலே பக். 54.

முக்தர் சாமகானம் செய்து களித்து வசிக்குமாறு போலே. 57.

இந் நிலத்தை விட விட இவனுக்குப் புகழ் உண்டாமாறு போலே. பக். 65.

மயக்கம் கொண்டவனுக்குப் பிறந்த தெளிவு போலே. பக். 68.

செருக்கனுய் இருக்கும் அரசபுத்திரனுக்கு உன் தோட்டம் அழிகிறது என்னுமாறு போலே. பக். 74.

கிண்ணகத்திலே அடிச் சுடுவாரைப் போலே. பக். 74.

எதிர்த்தலையையும் தனியே வைத்து நோவுபடுத்தித் தானும் தனியே இருந்து நோவுபடுவாரைப் போலே. பக். 78.

திருஷ்டி விஷம் போலே. பக். 78.

பெறுக்காறு வற்றி அடி சுட்டாற் போலே. 85.

அருச்சுனன் பின்பு இருந்து எளிவரவு பட்டாற்போலே. பக். 88.

மலையாளர் வளைப்புப் போலே. பக். 89.

அறிவில் பொருள்களைப் பொகடுமாறு போலே. பக். 94.

இராவணன் துறவி வேடத்தைக் கொண்டுவந்து தோற்றினற் போலே. பக். 98.

மதம்பிடித்த யானையானது முன்னே தலைப்பறை கொட்ட வருமாறு போலே. பக். 99.

பகதத்தன் விட்ட வேலுக்கு அருச்சுனனைப் பின்னை இட்டு உன் மார்விலே ஏற்றாற் போலே. பக். 99.

குளித்துப் பூச்சூட இருப்பாரைப் போலே. பக். 100, 144.

காலன் கொண்டு மோதிரம் இடுவாரைப் போலே. பக். 102.

கருமுகை மாலையும் யுகாந்தத்தில் நெருப்பும் கூடினற் போலே. பக். 110.

தாம் இருந்த இடத்திலே மேன்மக்கள் அடங்கலும் வந்து சேருமாறு போலே. பக். 123.

நீர் பாய்ந்த பயிர் போலே. பக். 139.

நீலமணியின் ஒளியை வடிவாக வகுத்தாற் போலே. பக். 150.

பெரிய திருநாளுக்கு எல்லாத் திசைகளிலும் உள்ள மக்கள் வந்து ஏறுமாறு போலே. பக். 160.

அம்மே என்பாரைப் போலே. பக். 167.

அளத்திற் பட்டன எல்லாம் உப்பு ஆமாறு போன்று பக். 167.

சரீரத்துக்கு உளதாகும் பால்யம் யௌவனம் முதலான வைகள் ஆத்மாவினை அடையாதது போன்று. பக். 172.

குழந்தை தீம்பிலே கை வளர்ந்தால் மாற்றைக் கொண்டு 'வாய் வாய்' என்பாரைப் போலே. பக். 187.

வயது சென்ற சேனாதிபதிகளைக் கண்ட அரசர்களைப் போலே. பக். 191.

தானே ஆக்கி உண்டு களித்தல் தவிர்ந்து, தந்தையோடே ஒன்றாக உண்டு களித்து ஜீவிப்பாரைப் போலே. பக். 198.

படுக்கைக் கீழே மிகப் பெரிய நிதி கிடக்கப் புறங்கால் வீங்கிச் சாவாரைப் போலே. பக். 198.

விடாயர் மேலில் நீரை நீக்கி உள்ளே ஆழ முழுகிக் கிடக்கு மாறு போலே. பக். 204.

சிங்கத்தினைக் கண்ட நரி போலே. பக். 205.

சௌபரி ஐம்பது வடிவு கொண்டாற் போலே. பக். 211.

கடலில் நீர் மலையில் ஏறக் கொழித்தாற்போலே. பக். 215

தடையோடே முடிந்த பெரிய வுடையாரைப் போலே. பக். 218.

பித்தத்தினாலே பீடிக்கப் பட்டவர்கள் சந்தனச் சேற்றி னின்றும் கை வாங்க மாட்டாதாற் போலே. பக். 220.

காதலி இருக்குமிடத்தில் தண்ணீர் என்று புகுமாறு போலே. பக். 232.

கண்ணொழிந்தார் அகம் போலே. பக். 236.

செருக்கனாய் இருக்கும் அரச புத்திரன் இழிகுலப் பெண் ணின் காற் கடையிலே துவளுமாறு போலே. பக். 247.

தொக்குக் கழிந்த சுளை போலே. பக். 253.

தந்தையானவன் மகனுக்குப் பசுவினை நீர் வார்த்துக் கொடுத்து, அவன் பக்கலிலே மீள நீர் ஏற்றுப் பசுவினைப் பெறுமாறு போலே. பக். 253.

மகனுக்குச் சொற்களைக் கற்பித்து அவன் சொல்லக் கேட்டுத் தந்தை இனியன் ஆமாறு போலே. பக். 253.

பிச்சுத்தான் ஒரு வடிவு கொண்டாற் போன்று. பக். 256.

பிரளய ஆபத்துக்களில் இவற்றுக்குத் தன்னை ஒழிய நிலைத்திருத்தல் இல்லாதவாறு போலே. பக். 262.

வறு நாற்றத்தினைக் காட்டிச் சில பொருள்களைத் தப்பாத படி அகப்படுத்துமாறு போலே. பக். 266.

அத்திரி பகவான் ஆஶ்ரமத்திலே 'நான் இராமன், இவள் மைதிலி, இவன் இலக்குமணன்' என்று வணங்கி நின்றாற் போலே. பக். 277.

பாற்கடல் தந்தை, நான் தாய், இலக்குமி மகள், அரங்க நாதன் நாயகன் என்பது போல. பக். 277.

தன்னை நம்பி உடன் கிடந்தவனை மடி தடவினவனைப் போலே. பக். 279.

தொடருகிற பாம்பினைத் திரிய விடுவிப்பாரைப் போலே. பக். 281.

விடாயர் மடுவினுள்ளே புகுமாறு போலே. பக். 285.

குறைவு அற்றவன் நந்தவனத்திலே வசிக்குமாறு போலே. பக். 287.

ஐம்புல இன்பங்களிலே ஆசை உள்ளவர்கள் போகச் சொன்னாலும் தூணைக் கட்டிக்கொண்டு போகாதவாறு போலே. பக். 291.

பெருங்கடல் மண்டினாரைப் போலே. பக். 297.

கந்தர்வர்கள் ஒப்பித்து நின்று பெரிய மண்டபங்களிலே நின்று கொட்டுமாறு போலே. பக். 306.

அரச புத்திரன் போகாநின்றால் அரசனோடு சம்பந்த முடையார்க்கு எல்லாம் அங்கீகரிக்க வேண்டுமாறு போலே. பக். 307.

வேறு தேசத்திலே சென்றிருந்த அரசன் தன் தேசத்திலே புகுமாறு போலே. பக். 311.

இளையபெருமாள் அடிமை செய்கைக்கு உறுப்பாக உறங்காதிருந்தது போன்று. பக். 312.

அரசர்கள் ஒருகால் கண்டு சிரித்து 'அழகிது' என்று போகைக்காக மாநாவி சமைப்பாரைப் போலே. பக். 312.

நிலை விளக்குப் போலே. பக். 312.

வேறு தேசத்துக்குப் போன குழந்தையைத் தாய்மார் குளிரப் பார்க்குமாறு போலே. பக். 316.

ஸ்ரீ பரதாழ்வானையும் இளைய பெருமாளையும் போலே. பக். 322.

வேறு தேசத்திற்குப் போன பிள்ளைகள் வந்தால் தாய் முகம் குளிர்ந்திருக்குமாறு போலே. பக். 325.

மேருவின் உச்சியிலே துக்கம் இல்லாதவனாய் மேலான சுகத்தை யுடையவனாய் இருக்கிறான் ஒருவன்........பாதாளத்திலே விழுந்து நோவுபடுமாறு போலே. பக். 328.

காட்டுத் தீயிலே அகப்பட்டாரைப் போலே. பக். 329.

கடல் கொண்ட பொருளை நாடுதற்குத் திருவடி இச்சித்தாற் போலே. பக். 334.

தேவர் மனிதர் திரியக்கு என்றும் பிராமணன் அரசன் வணிகன் என்றும் அந்த அந்தச் சரீரங்களைக் காட்டும் சொற்களாலே அவற்றில் வேறாய் இருந்துள்ள அவர்களும் சொல்லப்பட்டாற் போலே. பக். 336.

தந்தாம் கைகளைக் கொண்டு கண்களைக் கலக்கிக் கொள்வாரைப் போலே. பக். 337.

சிறு குழந்தைகளைக் கால்களிலும் கைகளிலும் விலங்கிட்டுக் காப்பாற்றும் தாய் தந்தையர்களைப் போலே. பக். 337.

தான் இக்ஷ்வாகு குலத்தாரோடும் யது குலத்தாரோடும் ஒத்த தரத்தனாய்க் கொண்டு திரு அவதாரம் செய்தாற் போலே. பக். 338.

ஸ்ரீ சனகராஜன் பெண் பிள்ளையை நீர் வார்ப்பித்துத் தனக்கு ஆக்கினாற் போலே. பக். 342.

பிராட்டி அசோக வனத்திலே அரக்கிகள் நடுவே இருந்தாற் போலே. பக். 342.

விடாய் கொண்டவன் 'தண்ணீர், தண்ணீர்' என்னுமாறு போலே. பக். 352.

நளன் தமயந்திக்கு வழிகாட்டி விட்டாற் போலே. பக். 359.

அக்கரை ஏற மாட்டாதான் ஒருவனை அமுக்கினாற் போலே. பக். 360.

நெருப்பினாலே காய்ச்சப்பட்ட இரும்பு காய்ச்சல் தீர நீரை முற்றும் உண்ணுமாறு போலே. பக். 362.

காதலியின் அழுக்கு உகக்கும் காமுகனைப் போலே. பக். 363.

செவ்வாய்க்கிழமையை மங்களவாரம் என்னுமாறு போலே. பக். 363.

ஞானத்தை உடையவனை ஞானம் என்ற சொல்லால் கூறுவது போன்று. பக். 365.

மலரில் மணத்தை வடித்து வகுத்தாற் போலே. பக். 364.

ஒரு நீலமலை இரண்டு பிறையைக் கவ்வி நிமிர்ந்தாற் போலே. பக். 366.

பிரளயம் கொண்ட பூமியை அண்டத்தின் சுவரிலே புக்கு திரு எயிற்றிலே கொண்டு எடுத்தாற் போலே. பக். 367.

பிழை திருத்தம்

பிழை		திருத்தம்	வரி	பக்
தாஸி	—	தாஸீ	19	72
மந்த்ரி	—	மந்த்ரீ	19	72
லக்ஷ்மி	—	லக்ஷ்மீ	20	72
தரித்ரி	—	தரித்ரீ	20	72
பத்நி	—	பத்நீ	22	72
என்	—	என்பது	31	124
அப் யுபேதః	—	அப்யுபேதః	34	222
என்னுலேசே தனன்	—	என்னுலே சேதனன்	27	238

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

கண்ணிநுண் சிறுத்தாம்பு

முன்னுரை

இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில்
இகழாத பல்லுறவில் இராக மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில்
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில்
அன்பர்க்கே அவதரிக்கும் மாயன் நிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே.

— **ஸ்ரீ வேதாந்த தேசிகன்.**

கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று முதலில் தொடங்கப்படுவதனால் கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று இந் நூற்குப்பெயர் அமைந்தது. இதனைப் பல்லாண்டு, அமலனாதிபிரான், வாக்குண்டாம், கொன்றைவேந்தன் என்பனவற்றிற்குப் பெயர் அமைந்தது போன்று கொள்க. இது ஸ்ரீ மதுரகவி ஆழ்வாரால் தம் ஆசாரியராகிய நம்மாழ்வார்மீது பாடப்பட்டதொரு ஒப்புயர்வற்ற நூல்.

ஆழ்வார்கள் பதின்மர்களால் அருளிச்செய்யப்பட்டது தமிழ்மறையாகிய நாலாயிர திவ்வியப்பிரபந்தம். அது முதலாயிரம், பெரியதிருமொழி, இயற்பா, திருவாய்மொழி என நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அப்பிரிவினுள் முதலாவதான முதலாயிரம் என்ற பிரிவில் இந்நூல் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"தாவா விழுப் புகழ் மாயோன்"; (தொல். பொருள். சூத். 64.) "இறைவன் பொருள் சேர் புகழ்"; (திருக்குறள்) "தேயா விழுப் புகழ்த் தெய்வம்"; (கலி. முல். 3.) "புகழ்த லுற்றோர்க்கு மாயோன்"; (புறம். 57.) உரைசால் சிறப்பின் நெடியோன்";

(சிலப். 22 - 60.) என்று ஆசிரியர் தொல்காப்பியனாலும் பண்டைப் புலவர் பெருமக்களாலும் போற்றிப் புகழ்ந்து பாராட்டப்படுகின்ற இறைவனுடைய திருப்புகழினைக் கூறுகின்ற திவ்வியப் பிரபந்தத்தின் நடுவில் இதனைச் சேர்த்துத் தொகுத்திருப்பதே இதன் ஒப்புயர்வற்ற தன்மைக்கு ஒரு சான்று.

வாய்த்த திரு மந்திரத்தின் மத்திமமாம் பதம்போல்
சீர்த்த மதுரகவி செய் கலையை—ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து.

—உபதேச ரத்தினமாலை.

"இதுதான், 'பயிலும் சுடரொளி', 'நெடுமாற்கடிமை' தொடக்கமானவற்றின் அர்த்தத்தைப் பிரதிபாதிக்கையாலே இதன் அர்த்த கௌரவத்தை விசாரித்து, நன்றாய் இருப்பதொரு ஆரத்தைச் சமைத்து அது ஒளி பெறும்படி சிலாக்கியமாய் இருப்பதொரு நாயகக்கல்லை அதன் நடுவே பதித்தாற்போலே அருளிச்செயல்கள் தாம் நிறம் பெறும்படி அவற்றின் நடுவே இத்தைச் சேர்த்தார்கள்; சேர்த்த சேர்க்கையின் சாதுர்யத்தாலேயிறே முத்துமாலை தொடக்கமான ஆபரணங்கள் நிறம் பெறுவது; அதுபோலே ஆயிற்று இது" என்பது அதன் வியாக்கியானம்.

மேலும், திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதிகளில் எழுந்தருளும்போது முன்னே தென் மொழி மறையாகிய திவ்வியப் பிரபந்தமும் பின்னே வட மொழி மறையும் ஓதப்படுதல் மரபு. தென் மொழி மறை ஓதப்படுகின்ற காலத்தில் திருவாய்மொழி மாத்திரம் அங்கு ஓதப்படுவது இல்லை. அங்ஙனமே, திருவாய்மொழியின் சாரமான இக் கண்ணிநுண் சிறுத்தாம்பும் திருவீதிகளில் ஓதப்படுவது இல்லை. திருவாய்மொழியைச் சேவிக்கத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் இப் பிரபந்தம் சேவிக்கப்படல் வேண்டும் என்பது பெரியோர்கள் நியதி. இதனைத் திருவாய்மொழியின் சாரம் என்பர் பெரியோர்.

திருவாய்மொழிக்குப் பெரியார் பலர் உரை வகுத்திருப்பது போன்று இதற்கும் பெரியார் பலர் உரை செய்திருத்தலும் இதன் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஊரும் நாடும் உலகமும் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்றுமாறு, திவ்வியப் பிரபந்தம் உலகெங்கும் பரந்ததற்குக் காரணமும் இக் கண்ணிநுண் சிறுத்தாம்பே ஆகும். ஸ்ரீமந் நாதமுனிகள் இப் பிரபந்தத்தினுல் நம்மாழ்வாரை நேரில் கண்டு வணங்கி அவரிடமிருந்து திவ்வியப் பிரபந்தத்தைப் பெற்று உலகின் மல்கு இருள் அகல பரவச்செய்து மக்களை உய்வித்தனர் என்பது உண்மை வரலாறு.

ஸாக்ஷாத் நாராயணோதேவః க்ருத்வாம் மர்த்யமயீம் தநும்
மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா
தஸ்மாத் பக்திஃ குரௌ கார்யா ஸம்ஸார பய பீருணா.

சாக்ஷாத் நாராயணனை இறைவன் தன் பரம கிருபையாலே ஆசாரியனுகிற மனித உருவைக்கொண்டு சாஸ்திரங்களாகிற கைகளாலே சம்சாரக் கடலில் மூழ்கியிருக்கும் உலக மக்களைக் கைதூக்கி விடுகிறுன் என்றும்,

மாத்ரு தேவோ பவ ; பித்ரு தேவோ பவ ;
ஆசார்ய தேவோ பவ ; அதிதி தேவோ பவ.

மாதாவையும் பிதாவையும் ஆசாரியனையும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் தெய்வமாகக் கொள்க என்றும்,

குருரேவ பரம்பிரஹ்ம குருரேவ பராகதிః
குருரேவ பராவித்யா குருரேவ பரம்தநம்
குருரேவ பரః காமோ குருரேவ பராயணம்
யஸ்மாத் த்த் உபதேஷ்டாஸௌ தஸ்மாத்
குருதரோ குருః.

ஆசாரியனே மேலான பரம்பொருள், ஆசாரியனே மேலான தர்மம், ஆசாரியனே மேலான கல்வி, ஆசாரியனே மேலான பொருள், ஆசாரியனே மேலான இன்பம், ஆசாரியனே மேலான பேறு, பரம்பொருளைப் பற்றி உபதேசிப்பதால் ஆசாரியன் அப் பரம்பொருளைக் காட்டிலும் மேலானவன் என்றும்,

“பீதகஆடைப் பிரானுர் பிரம குருவாகி வந்து”

என்றும்,

தேனார் கமலத் திருமா மகள்கொழுநன்
தானே குருவாகித் தன்னருளால் — மானிடர்க்கா
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்குமவன் தாளிணையை
உன்னுவதே சால உறும். (பிரமேய சாரம், 38.)

என்றும் இரு மொழிகளிலுமுள்ள உண்மை நூல்கள் அனைத்தும் அறப் பெரிய இறைவனே ஆசாரியனாக வந்து அவதரிக்கிறான் என்று ஒரு மிடறாக உணர்த்துகின்றன.

ஆதலால், ஆசாரியனைத் தெய்வமாகவே பாவிக்க வேண்டும்; நம்மோடு ஒத்த மனிதனாக எண்ணலாகாது என்பது போதருகின்றது.

மானிடவன் என்றும் குருவை, மலர்மகள்கோன்
தானுகந்த கோலம் உலோக மென்றும்—ஈனமதா
எண்ணுகின்ற நீசர் இருவருமே எக்காலும்
நண்ணிடுவர் கீழாம் நரகு.

என்பது பிரமேய சாரம், 32.

அத் தகைய ஆசாரியனுடைய பெருமையைப் பேசுகின்றது இந்நூல். "தேவு மற்று அறியேன்", "அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்", "குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே" என்பன போன்றவைகளால் அநுஷ்டித்துக் காட்டினார் ஸ்ரீ மதுர கவி ஆழ்வார்.

"ஈஸ்வரனைப் பற்றுகை கையைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோபாதி, ஆசாரியனைப் பற்றுகை காலைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோபாதி. ஆசாரியன் இருவர்க்கும் உபகாரகன்; ஈஸ்வரனுக்குச் சேஷ வஸ்துவை உபகரித்தான்; சேதனனுக்கு ஈஸ்வரனை உபகரித்தான். ஆசாரிய சம்பந்தம் குலையாதே கிடந்தால் ஞான பக்தி வைராக்கியங்கள் உண்டாக்கிக் கொள்ளலாம், ஆசாரிய சம்பந்தம் குலைந்தால் அவை உண்டானாலும் பிரயோஜனம் இல்லை. தாலி கிடந்தால் பூஷணங்கள் பண்ணிப் பூணலாம்; தாலி போனால் பூஷணங்கள் எல்லாம் அவத்யத்தை விளைக்கும். தாமரையை அலர்த்தக் கடவ ஆதித்யன் தானே நீரைப் பிரிந்தால் அத்தை உலர்த்துமாறு போலே, சொரூப விகாசத்தைப் பண்ணும் ஈஸ்வரன்

தானே ஆசாரிய சம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப் பண்ணும். இத்தை ஒழியப் பகவத் சம்பந்தம் துர்லபம்.

(ஆதலால்) ஆசாரிய அபிமானமே உத்தாரகம்; கைப் பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிசிக்கக் கடவனல்லன். விடாய் பிறந்தபோது கரஸ்தமான உதகத்தை உபேக்ஷித்து, ஸ்ரீமூத ஜலத்தையும் சாகர சலிலத்தையும் ஸரித் சலிலத்தையும் வாபீ கூப பயஸ்ஸுக்களையும் வாஞ்சிக் கடவன் அல்லன். பாட்டுக்கேட்கும் இடமும், கூப்பீடுகேட்கும் இடமும், குதித்த இடமும், வளைத்த இடமும், ஊட்டும் இடமும் எல்லாம் வகுத்த இடமே என்றிருக்கக் கடவன். ஈஶ்வர சம்பந்தம் பந்த மோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவாய் இருக்கும்; ஆசாரிய சம்பந்தம் மோக்ஷத்திற்கே ஏதுவாய் இருக்கும். உண்டபோது ஒரு வார்த்தையும் உண்ணுதபோது ஒரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேர் உண்டிறே, அவர்கள் பாசுரம்கொண்டன்று இவ்வர்த்தம் அறுதியிடுவது. அவர்களைச் சிரித்திருப்பார் ஒருவர் உண்டிறே, அவர் பாசுரம் கொண்டு இவ்வர்த்தம் அறுதியிடக் கடவோம். பிராப்யத்துக்குப் பிரதம பர்வம் ஆசார்ய கைங்கர்யம்; மத்யம பர்வம் பகவத் கைங்கர்யம்; சரம பர்வம் பாகவத கைங்கர்யம்." என்னும் ஸ்ரீ வசனபூஷண ஸ்ரீ சூக்திகளால் ஆசாரியனுடைய பெருமை முதலானவற்றை அறிதல் தகும்.

ஆசாரியனுடைய பெருமை முதலானவற்றைக் கூறு கின்ற இத்தகைய ஒப்புயர்வற்ற இந் நூலுக்கு, பட்டருடைய மாணுக்கரான நஞ்சீயர், நஞ்சீயர் மாணுக்கரான நம்பிள்ளை, நம்பிள்ளையின் மாணுக்கரும் பரமகாருணிகருமான பெரிய வாச்சான்பிள்ளை, நம்பிள்ளையின் மாணுக்கராய்த் திருவாய் மொழிக்கு ஈடு முப்பத்தாறுயிரப்படி எழுதிய வடக்குத் திரு வீதிப் பிள்ளையின் திருக் குமாரர் அழகிய மணவாளப் பெரு மாள் நாயனுர் என்னும் பெரியார்கள் நால்வர் அருளிச் செய் துள்ள வியாக்கியானங்கள் உள்ளன. பரகால ஜீயர் என்னும் பெரியார் அருளிச் செய்த வியாக்கியானமும் ஒன்று உளது. இது தவிர, அவதாரிகையும் முதல் திருப்பாசுரத்துக்கு மட்டும் வியாக்கியானமும் உள்ள தம்பிரான்படி என்ற வியாக் கியானம் ஒன்று உளது.

இவற்றுள் நஞ்சீயர் வியாக்யானம் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் அழகோடு சுருக்கமாக அமைந்

துளது. அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக்கியானம் நூலிற் பொதிந்து கிடக்கும் ஆழ் பொருள்களையெல்லாம் மிகத் தெளிவாக விளக்கிக் கொண்டு விரிவாகவும் கம்பீரமான நடையோடும் செல்கின்றது. நம்பிள்ளை ஈடு, பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் இவ்விரண்டும் சுருக்கமுமின்றி விரிவுமின்றி நடுத்தரமாக அமைந்து அழகு செய்கின்றன. இவை எல்லாம் திட்ப நுட்பங்கள் செறிந்து அருமை பெருமைகளை யுடையனவாய் முறையே கற்ருர்கட்கு மட்டும் பயன்படுவனவாய் இருக்கின்றன. ஆதலின்,

அனைவர்க்கும் பயன்படும் பொருட்டுப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தைத் தழுவி 'விரிவுரை' என்ற பெயரால் இயன்ற வரையில் எளிய நடையில் கருத்து மாறுபடாமல் எழுதப் பட்டிருக்கின்றது இவ்வுரை. வியாக்கியானத்தில் ஆங்காங்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள சுலோகங்களுக்குப் பதிலாக அவற்றின் பொருள் ஆங்காங்கு எழுதப்பட்டிருக்கின்றது. அச் சுலோகங்கள் அவ்வப் பக்கங்களில் கீழ்க் குறிப்பில் தரப்பட்டிருக்கின்றன. மற்றைப் பெரியார்களுடைய வியாக்கியானங்களும் வேண்டுமிடங்களில் ஆங்காங்குக் கீழ்க்குறிப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பெரியார் பலருடைய விருப்பத்திற்கு ஏற்பத் தம்பிரான் படி வியாக்கியானத்தை ஈற்றில் சேர்த்திருக்கிறேன்.

இந் நூலாசிரியர் சரிதையை முதற்பத்தின் முகவுரையிற் காண்க. இப் பெரியாருக்கு 'மதுரகவி' என்னும் இத் திருப்பெயர் இயற்பெயர் அன்று; காரணம் பற்றி வந்த பெயராதல் வேண்டும். "ஆழ்வார் தாம் சொன்ன பாசுரம் தமக்கு இனிதாக இருக்கையாலே மதுரகவி என்கிருர்" (பெரியவாச்சான் பிள்ளை வியாக்.) என்றும், "அவர் தத் விஷயத்தைக் கவி பாடுகையாலே 'என்னுவில் இன்கவி' என்ருற் போலே இவரும் ஆழ்வாரைக் கவி பாடுகையாலே தம்மை மதுரகவி என்கிருர்" (அழகிய மணவாளப்பெருமாள் நாயனுர் வியாக்.) என்றும் வரும் வியாக்கியான பந்திகளால் அறிதல் தகும். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் கவிகள் நான்கனுள் மதுரகவி என்பது ஒன்று. அது இந்த அக் கவியைப் பாடுகின்றவருக்கு ஆயிற்று. இப் பெரியார் இயற்பெயர் இப்பொழுது நமக்குத் தெரிந்திலது.

இவருடைய பிரபந்தம் ஆழ்வார்கள் அருளிச்செயலோடு சேர்க்கப் பெற்றுத் '**திவ்வியப் பிரபந்தம்**' என வழங்கி வருவது போன்று இப் பெரியாரையும் ஆழ்வார்கள் கோஷ்டியிலே சேர்த்து ஆழ்வார்களுள் ஒருவராக வழங்கி வருதல் மரபு. இதனை,

"ஆழ்வார் திருமகளார் ஆண்டாள் மதுரகவி
ஆழ்வார் எதிராச ராமிவர்கள்"

என்றும், "பாரில்
மதியாரும் ஆண்டாள் மதுரகவி ஆழ்வார்
எதிராசர் தோன்றிய ஊர் இங்கு"

(உபதேச ரத்தினமாலை)

என்றும் வருவன கொண்டு அறிதல் தகும்.

ஆழ்வார்களிற் சிலரை ஒவ்வொரு காரணம் பற்றிக் குலசேகரப் பெருமாள், பாண்பெருமாள் என்று வழங்குவது போன்று இப் பெரியாரையும் மதுரகவிப் பெருமாள் என்றும் வழங்குவர்.

மன்றே புகழும் திருவழுந்தூர் வள்ளல் மாறனை முன்
சென்றே மதுர கவிப்பெருமாள் தென் தமிழ்த்தொடையில்
ஒன்றே பதிக முரைத்தவன் பொன்னடி உற்று நின்றான்
என்றே பதிகம் பதிகமதாக இசைத்தனனே.

என்பது சடகோபரந்தாதி.

இறைவனுடைய திருவடி நிலைகளை நம்மாழ்வார் திருப்பெயரால் ஸ்ரீ சடகோபன் என்றும் சடாரி என்றும் வழங்குவது போன்று, நம்மாழ்வார்க்குத் திருவடித் தொண்டராய் வாழ்ந்த இப் பெரியாருடைய திருப்பெயரால் நம்மாழ்வார் திருவடி நிலைகளை **ஸ்ரீ மதுரகவிகள்** என்று கூறுதல் மரபு.

தீங்கேதும் இல்லாத தேசிகன் தன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையார் — ஓங்காரத்
தேரின்மேல் ஏறிச் செழுங்கதிரி னூடுபோய்ச்
சேருவரே அம்தாமம் தான். (சப்தகாதை)

ஏராரும் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த
சீராரும் சித்திரையில் சித்திரைநாள் — பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாட்களிலும்
உற்றதெமக்கு என்று நெஞ்சே ஓர்.

(உபதேச ரத்தினமாலை.)

தேறிய மா ஞானமுடன் திருக்கோளூரில்
சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி
ஆறிய நல் அன்புடனே குருகூர் நம்பிக்கு
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து
மாறனை அல்லால் என்றும் மறந்தும் தேவு
மற்றறியேன் எனும் மதுரகவியே! நீ முன்
கூறிய கண்ணிநுண் சிறுத்தாம்பதனிற் பாட்டுக்
குலவு பதினொன்றும் எனக்கு உதவு நீயே.

—ஸ்ரீ வேதாந்ததேசிகன்.

சித்திரையில் சித்திரைநாள் சிறக்கவந்தோன் வாழியே
திருக்கோளூர் அவதரித்த செல்வனார் வாழியே
உத்தர கங்காதீரத் துயர்தவத்தோன் வாழியே
ஒளிகதிரோன் தெற்குதிக்க உகந்து வந்தோன் வாழியே
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே
பராங்குசனே பரன் என்று பற்றினான் வாழியே
மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
மாறன் மலரடி வாழ்க.

—:o:—

ஸ்ரீ மதுரகவி யாழ்வார் அருளிச்செய்த

கண்ணிநுண் சிறுத்தாம்பு

ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச்செய்த

தனியன்கள்

அவிதித விஷயாந்தரஸ் ஶடாரே:
உபநிஷதாம் உபகாந மாத்ர போக:
அபிச குணவஶாத் ததேக ஶேஷீ
மதுரகவி: ஹ்ருதயே மம ஆவிரஸ்து.

பொருள் :— ஶடாரே: - நம்மாழ்வாரைத் தவிர, அவிதித விஷயாந்தர: - வேறு விஷயங்களை அறியாதவரும், ஶடாரே: - நம்மாழ்வாருடைய, உபநிஷதாம் - உபநிடதங்களாகிய திவ்யப் பிரபந்தங்களை, உபகாந மாத்ர போக: - இசையோடு பாடுவது ஒன்றனையே பேரின்பமாகக் கொண்டவரும், குணவஶாத் அபிச - குணம் காரணமாகவும், ததேக ஶேஷீ - அந்த நம்மாழ்வார் ஒருவரையே தமக்குத் தலைவராகக் கொண்டவரும் ஆன, மதுரகவி: - ஸ்ரீ மதுரகவி ஆழ்வார், மம ஹ்ருதயே - என்னுடைய மனத்தில், ஆவிரஸ்து - தோன்றி எழுந்தருளியிருக்கக் கடவர் என்பதாம்.

நம்மாழ்வாரைத் தவிர வேறு ஒருவரையும் ஒன்றனையும் அறியாதவரும், அவருடைய திவ்வியப் பிரபந்தங்களைப் பாடுதலையே பேரின்பமாகக் கொண்டவரும், அவருடைய குணம் காரணமாகவும் அடிமை புக்கவரும் ஆன ஸ்ரீ மதுரகவி யாழ்வார் என் மனத்தில் எப்பொழுதும் எழுந்தருளியிருக்க வேண்டும் என்கிறார்.

இதனால், அநுகூலரான ஆசாரியர்களுக்குப் பரதந்திரப் பட்டிருக்குமவர்கள் விரும்பிப் போற்றத் தக்கவர்கள் என்பதனைத் தெரிவித்தபடி.

நம்மாழ்வார், "சிந்தை மற்றொன்றின் திறத்தது அல்லாத் தன்மை தேவபிரான் அறியும்" என்று, இறைவனைத் தவிர

வேறு ஒன்றையும் அறியாதிருந்தது போன்று இவரும் ‘ஶடாரேః அவிதித விஷயாந்தரః’ என்று நம்மாழ்வாரைத் தவிர வேறு ஒருவரையும் அறியேன் என்கிறார். இங்கு ‘விஷயாந்தரః’ என்றது, ஐம்புல இன்பங்களை அன்று; பகவத் விஷயத்தை. அதாவது, பாட்டுக் கேட்கும் இடமான பரத்துவத்தையும், கூப்பீடு கேட்கும் இடமான வியூகத்தையும், குதித்த இடமான விபவத்தையும், வளைத்த இடமான அர்ச்சாவதாரத்தையும் குறித்தவாறு. நம்மாழ்வாருக்கு “உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்” ஆகவே இருந்தது போன்று இவருக்கு எல்லாம் நம்மாழ்வாராகவே இருக்கிறபடி.

‘ஶடாரேః உபநிஷதாம் உபகாந மாத்ர போகః’ என்ற வாக்கியத்தால் நாட்டியல்வு ஒழிந்து சடரை ஓட்டின சடகோபன் மொழி பட்டோடும் கவி அமுதமான யாழினிசை வேதத்தின் பண்ணார் பாடலின் அநுபவத்தாலாய பேரின்பத்தையுடையவர் என்பது தெரிவிக்கப்படுகிறது. இதனால், நம்மாழ்வாரைப் போன்று அவர் சம்பந்தமுடையதும் இவருக்கு உத்தேசியமாம் என்பது போதருகின்றது.

‘அபிச குணவஶாத் ததேகஶேஷீ’ என்றதனால், “அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபன்” என்றும், “பயன் இன்றாகிலும் பாங்கிலராகிலும், செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்” என்றும் கூறப்படுகின்ற வாத்சல்யம் முதலிய குணங்கள் கூறப்படுகின்றன. ‘குணவஶாத் அபிச - குணம் காரணமாகவும்’ என்ற இந்த உம்மை, ஆத்மாவிற்கு இயல்பிலே அமைந்துள்ள சொருபமான அடிமையைத் தழுவுகின்றது. “பகவத் விஷயத்தில் இழிகிறதும் குணம் கண்டன்று; ஸ்வரூப ப்ராப்தம் என்று”, “குணக்ருத தாஸ்யத்திலும் காட்டில் ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதாநம்” என்பன ஸ்ரீ வசன பூஷண ஸ்ரீ சூக்திகள். மேலே ‘அவிதித விஷயாந்தரஶ் ஶடாரேః’ என்றதனால் சொருபத்தோடு கூடியுள்ளதான அடிமையைக் கூறியுள்ளமை காண்க.

‘உபநிஷதாம்’ என்ற பன்மையால் நான்கு வேதங்களின் சாரமாக ஆழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு மறைகளையும் கோடல் தகும். உபநிஷத: என்பது இதற்கு ஒருமை.

வேறொன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் — ஏறு எங்கள்
வாழ்வாம் என்று ஏத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வார் அவரே அரண்.

பொருள் :—வேறு ஒன்றும் நான் அறியேன் - நம்மாழ்வாரைத் தவிர வேறு ஒரு பொருளையும் நான் அறியேன் என்று, வேதம் தமிழ் செய்த - வேதங்களின் உண்மைப் பொருள்களைத் தமிழிலே அருளிச்செய்த, மாறன் - மாறன் என்னும் திருப்பெயரை யுடையவரும், வண்குருகூர் ஏறு - திருக்குருகூர்க்குத் தலைவரும் ஆன, சடகோபன்-நம்மாழ்வார், எங்கள் வாழ்வாம் - எங்களுக்குப் பேறு ஆவர், என்று - என்பதாக, ஏத்தும் - துதித்த, மதுரகவியார் - ஸ்ரீ மதுரகவி ஆழ்வார், எம்மை ஆள்வார் - எம்மை அடிமை கொள்பவர்; அவரே-அம் மதுரகவிகளே, அரண் - பிரபந்ந ஜந குலத்துக்குக் காவலாக இருப்பவர் என்றவாறு.

நம்மாழ்வாரை ஒழியத் தேவு மற்று அறியாத ஸ்ரீ மதுரகவிகளே நம்மை ஆள்கின்றவரும் ஆவர்; நமக்கு அரணுக இருப்பவரும் ஆவர் என்கிறார் இப் பாசுரத்தால்.

'வேறு ஒன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் வண்குருகூர் ஏறு எங்கள் வாழ்வாம் என்று ஏத்தும்' என்னுமளவும் ஸ்ரீ மதுரகவி யாழ்வாருடைய சொற்களை ஸ்ரீமந் நாதமுனிகள் அநுவதித்தபடி. அதற்கு மேல் உள்ள பகுதி இத் தகையார் நமக்குத் தலைவரும் ஆவார், பற்றப்படுமவரும் ஆவார் என்பதனைக் கூறுகிறது.

'வேதம் தமிழ் செய்த' என்றது, வேதங்களையே தமிழில் மொழி பெயர்த்தார் என்பது அன்று; வடமொழி வேதங்களில் எளிதிற் காண ஒண்ணுதவாறு மறைந்து கிடக்கின்ற தத்துவப் பொருள்களை எல்லாம் எடுத்துத் தெளிவுபடச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தமையைத் தெரிவித்தபடி.

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
    பொருநல்வரும் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
    தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வய்யமெலாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்
    மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
    தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே.

என்பது ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஸ்ரீ சூக்தி.

"அந்த மிலா மறை ஆயிரத்து ஆழ்ந்த அரும்பொருளைச்
செந்தமி ழாகத் திருத்தில னேல் நிலத் தேவர்களும்
தந்தம் விழாவும் அழகும் என்னும்" என்றார் கம்பநாடர்.

'அல்ப ச்ருதர் கலக்கின ச்ருதி நன் ஞானத்துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை அறிவித்தது", மேகம் பருகின ஸமுத்ராம்பு போலே நாற்கடல் சொல் இவர் வாயன வாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வ உபஜீவ்யமாமே" என்பன ஆசார்ய ஹ்ருதயம்.

வடமொழி வேதம் போன்று தமிழ் மறையாகிய திவ்வியப் பிரபந்தங்களும் நித்யம் என்பது சான்றோர் கொள்கை. இறைவன் பேரருளால் உணர்த்த உணர்ந்து ஆழ்வார்கள் திவ்வியப் பிரபந்தங்களை வெளியிட்ட மாத்திரத்தைக் கொண்டு அவர்கள் செய்தனவாகச் சொல்லுவது உபசாரவழக்கு. "முன்னம் திசைமுகனைத் தான் படைக்க மற்றவனும், முன்னம் படைத்தனன் நான்மறைகள்" (பெரிய திருமடல்) என்று, நித்தியமான வடமொழி வேதங்களைப் பிரமன் படைத்தான் என்று கூறப்படுதல் காண்க.

மாறன், சடகோபன் என்பன நம்மாழ்வாருடைய திருப்பெயர்கள். குருகூர் என்பது பாண்டிய நாட்டுத் திவ்விய தேசங்கள் பதினெட்டனுள் ஒன்று; ஆழ்வார் திருவவதரித்த புண்ணிய பூமி; ஆழ்வார் திருநகரி என்று இப்பொழுது வழங்கப்படுகின்றது. 'வண்' என்பது ஏற்றிற்கு அடைமொழி. திருவாய்மொழியைத் தந்த வண்மையைக் குறிக்க வந்தது. குருகூர்க்கு அடை ஆக்கலும் ஆம்.

தம்மைப் போன்ற பரம பாகவதர்களை எல்லாம் உளப்படுத்திக் கொண்டு '**எங்கள் வாழ்வு**' என்று பன்மையாற் கூறுகிறார். "யாம் உறாமை" (திருவிருத். 1.) என்ற ஆழ்வார் திருவாக்கும் இங்குக் குறிக்கொள்ளத் தகும். 'இவர் பரம வைஷ்ணவர் ஆகையாலே உலகத்துக்காகத் தாம் மன்றாடுகிறார்' என்பது அதற்குப் பெரியவாச்சான் பிள்ளை எழுதிய வியாக்கியானம்.

—:o:—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
மாறன் மலரடி வாழ்க.

—:o:—

கண்ணிநுண் சிறுத்தாம்பு விரிவுரை

தோற்றுவாய்

[1] "வேதங்கள் மூன்று குணங்களையுடைய மனிதர்களை விஷயமாகக் கொண்டுள்ளன" என்கிறபடியே, செல்வம் முதலான எல்லாப் புருஷார்த்தங்களையும் அவர் அவர்களுடைய குணங்களுக்குத் தக்க முறையிலே நின்று விதிக்கிற வேத மரியாதையிலே நின்றார்கள் முனிவர்கள். என்றது, வேதங்களின் பொருள்களை விரித்துரைக்க வந்த இதிகாச புராணங்கள் முகத்தாலே மக்களுடைய குணங்களுக்குத் தகுதியாகச் செல்வம் முதலான சிறிய புருஷார்த்தங்களையும் உயர்வற உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தையும் உபதேசிக்கிற முறையிலே நின்றார்கள் முனிவர்கள் என்றபடி.

யாங்ஙனம்? எனின், [2] "இல்லறத்திலே நிற்கின்றவர்கள் பிரஜாபதி உலகத்தையும், துறவறத்திலே நிற்கின்றவர்கள் பிரமன் உலகத்தையும் அடைகிறார்கள்" என்று தொடங்கிக் கேவலம் இல்லறம் முதலான நிலைகளுக்குரிய ஒழுக்கங்களையே செல்வம் முதலானவற்றைப் பெறுதற்குச் சாதனங்களாக உபதேசித்து, "ஆத்ம இன்பத்தையே விரும்பும் கைவல்யார்

---

1. 'வேதங்கள்' என்றது முதல் 'ஆக, இப்படி ஸ்ரீ சத்ருக்நாழ்வானைப் போலே இருப்பார் ஒருவர் ஸ்ரீ மதுரகவிகள்' என்றது முடிய, இந் நூலை அருளிச்செய்த ஸ்ரீ மதுரகவி ஆழ்வாருடைய வைபவம் பேசப்படுகிறது.

அவற்றுள், ஸ்ரீ மதுரகவி யாழ்வாருடைய பெருமை தோன்றுவதற்காக முதலில் முனிவர்களுடைய ஏற்றம் பேசப்படுகிறது 'வேதங்கள்' என்றது முதல் 'உபதேசித்தார் ஸ்ரீ பராசர பகவான்' என்றது முடிய.

"த்ரைகுண்ய விஷயா வேதா: நிஸ்த்ரைகுண்யோ பவ அர்ஜுந"
என்பது, ஸ்ரீ கீதை, 2 : 45.

2. ப்ராஜாபத்யம் க்ருஹஸ்தாநாம் ப்ராஹ்மம் ஸந்யாஸிநாம் ஸ்ம்ருதம்
யோகிநாம் அம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம்.
என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 6 : 37.

களுக்கு அழியாத வீட்டுலகம் உண்டு" என்று கைவல்யத்திலே நிற்பவர்களுக்கு ஆத்ம இன்பத்தை உபதேசித்து, [1] "எக்காலத்தும் பரம்பொருளையே தியானிக்கும் யோகிகள், நித்திய சூரிகள் எப்பொழுதும் அநுபவித்துக் கொண்டிருக்கிற உயர்வற உயர்ந்த பரமபதத்தை அடைகிறார்கள்" என்று சத்துவ குணத்திலே நிலைபெற்றிருப்பவர்கள் பகவானையே அடைகிறார்கள் என்று உபதேசித்தார் ஸ்ரீ பராசர பகவான்.

[2] இங்ஙனம் உபதேசித்த முனிவர்களைக் காட்டிலும் ஆழ்வார்களுக்கு நெடுவாசி உண்டு. யாங்ஙனம்? எனின், வேதங்களின் உட்பொருளாய் உயர்வற உயர்ந்த புருஷார்த்தமான பகவானை அநுபவிப்பதில் நிலை நின்றவர்கள் ஆழ்வார்கள்; மேலும், [3] பிறர்க்கு உபதேசிக்குமிடத்திலும் சாஸ்திரங்களிலே விதிக்கப்பட்ட செல்வம் முதலான புருஷார்த்தங்களையும் "இவை அற்பமானவை; அழிந்து போமவை; ஆதலால், வீடுமின் முற்றவும்" என்று உபதேசித்தவர்கள்; ஆதலால், ஏற்றமுடையவர்கள் ஆழ்வார்கள்.

---

1. ஏகாந்திந: ஸதா ப்ரஹ்மத்யாயிந: யோகிந: ஹி யே
தேஷாம் தத் பரமம் ஸ்தாநம் யத்வை பஶ்யந்தி ஸூரய:.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 6 : 38.

2. முனிவர்களைக் காட்டிலும் ஆழ்வார்களுக்கு உள்ள ஏற்றம் பேசப்படுகிறது 'இங்ஙனம்' என்றது முதல் 'ஆதலால், ஏற்றமுடையவர்கள் ஆழ்வார்கள்' என்றது முடிய.

3. "ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்", "அண்டக்குலத்துக் கதிபதியாகி" என்ற திருப்பல்லாண்டு திருப்பாசுரங்களையும், "ஒரு நாயகமாய் ஓட", "கொண்ட பெண்டிர் மக்கள்" என்பன போன்ற திருவாய்மொழி திருப்பதிகங்களையும் இங்குப் படித்தறிதல் தகும்.

"காமாதி புருஷார்த்தாந்தரங்களையும் கலந்த கட்டியாக உபதேசித்த அந்த ரிஷிகளிற் காட்டில் பகவத் பிரசாத ஹேதுகமான மயர்வற மதிநலங்களையுடையருமாய்ப் பரோபதேச சமயத்திலும் 'வீடாம் தெளிதரு நிலைமை' என்று தொடங்கி 'வீடே பெறலாமே' என்று பரம புருஷார்த்தத்தையே முதல் நடு இறுதியாக உபதேசித்து, அதற்குச் சாதனமும் 'வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே', 'திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ' என்று அவன் திருவடிகளே என்று உபதேசித்து, அவ்வளவு அன்றிக்கே, 'வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்', 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்று அவற்றைத் தாம் அநுஷ்டித்தும் போந்த நம்மாழ்வார்க்கு நெடுவாசி உண்டு" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

[1] ஆழ்வார்கட்கும் ஸ்ரீ மதுரகவி ஆழ்வார்க்கும் நெடுவாசி உண்டு. யாங்ஙனம்? எனின், பகவானை அடைதலாகிற உயர்வற உயர்ந்த இப் புருஷார்த்தத்துக்கு எல்லை நிலமான அவன் அடியார்கட்கு அடிமைப் பட்டிருத்தலாகிற பேற்றின் அளவும் வரப் புகுர நின்றவர் ஸ்ரீ மதுரகவிகள்; ஆதலால், ஸ்ரீ மதுரகவிகள் அவர்களைக் காட்டிலும் ஏற்றமுடையவர்.

இவர்க்கு இவ் ஏற்றம் வந்தவாறு யாங்ஙனம்? எனின், "பொய்ந்நின்ற ஞானம்" என்று தொடங்கி "அவா அற்று வீடு பெற்ற" என்னுமளவும் செல்ல அநுபவித்த இடத்தில் ஆழ்வார், தம்முடைய புருஷார்த்தத்திற்கு எல்லை நிலமாக விரும்பி உள்ளதான [2] அவன் அடியார்கட்கு அடிமைப் பட்டிருத்தலாகிற பேற்றினையே இவர் பற்றினர்.

[3] "ஆசாரியனாலே விரும்பி மேற்கொள்ளப் பட்டதான ஓர் அர்த்தமே சத்வ குணத்திலே நிலை நின்றவர்கள் மேற்கொள்ளத் தக்கது" என்னுமிடம் மகாபாரத சாரமான ஸ்ரீ சஹஸ்ரநாம அத்தியாயத்தில் சொல்லப்பட்டது.

[4] ஸ்ரீ வீடுமன் பக்கலிலே எல்லாத் தருமங்களையும் குறைவு அறக் கேட்ட தருமபுத்திரன் "இவர் தாம் குறிக்கோளாக மேற்கொண்ட தத்துவ ஹிதங்களே நமக்குக் குறிக்கோள்" என்று நினைத்து [5] "எல்லாத் தருமங்களிலும் மிகச் சிறந்ததாகத் தேவரீர் நினைத்திருக்கும் தருமம் யாது?" என்று கேட்க, [6] "தாமரைக் கண்ணனாகிற பகவானை ஒருவன் பக்தியோடு துதிப் பாக்களால் அருச்சித்தலாகிற இதுவே எல்லாத் தருமங்களிலும் மேலான தருமம் என்பது என் நினைவு" என்று தான்

---

1. ஆழ்வார்களைக் காட்டிலும் ஸ்ரீ மதுரகவி ஆழ்வார்க்கு உள்ள ஏற்றம் பேசப்படுகிறது 'ஆழ்வார்கட்கும்' என்று தொடங்கி.

2. இங்கு, திருவாய்மொழி "பயிலும் சுடரொளி", "நெடுமாற்கடிமை" என்ற திருப்பதிகங்களை ஓதி உணர்தல் தகும்.

3. ஆழ்வார்க்கு விருப்பம் ஆனல், இவரும் அதனையே பற்ற வேண்டுமோ? என்ன, 'ஆசாரியனாலே' என்று தொடங்கி அதற்கு விடை பேசப்படுகிறது.

4. சஹஸ்ரநாம அத்தியாயத்தில் சொல்லப்பட்ட வகை யாது? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'ஸ்ரீ வீடுமன் பக்கலிலே' என்று தொடங்கி.

5. "கோதர்மஃ ஸர்வ தர்மாணாம் பவதஃ பரமோ மதஃ"
என்பது, சஹஸ்ரநாம அத்.

6. ஏஷ மே ஸர்வ தர்மாணாம் தர்ம: அதிக தமோ மதஃ
யத் பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவை: அர்ச்சேந்நரஃ ஸதா.
என்பது, சஹஸ்ரநாம அத்.

விரும்பி மேற்கொண்ட தருமத்தை உபதேசித்தான் ஸ்ரீ விதுமன்.

[1] **எம்பெருமானாகிய திருமாலே பற்றத் தக்கவன்** என்று நீங்கள் பற்றியது, பிரமாண பலத்தாலேயோ என்று திரிபுரா தேவியாரைக் கேட்க, 'அங்ஙனம் ஒன்றும் அன்று; **எம்பெருமானர் காடிச்சால் மூலையில்** தேவதையைப் பற்றினராகில் அதுவே எங்களுக்கும் பற்றத் தக்க பொருளாகக் கடவது' என்றாள் **திரிபுரா தேவி.**

அந்த நியாயத்தாலே, ஆழ்வார், தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கும் அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டு இருத்தலாகிற பேற்றினையே இவரும் தமக்குப் புருஷார்த்தமாக அறுதியிடுகிறார்.

[2] அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டு இருத்தலாகிற இத் தருமம்தான், இராமாயண புருஷர்களில் ஸ்ரீ சத்ருக்நாழ்வானுடைய செய்கையிலே காணப்பட்டது.

எங்ஙனே? என்னில், [3] "வேதங்களை விவரணம் செய்வதற்காக அவர்களைக் கற்பித்தார்" என்கிறபடியே, **வேதங்களை விவரணம் செய்யும் பொருட்டுத் தோன்றிய ஸ்ரீ ராமாயணத்தில்** இராமாயண புருஷர்கள் நால்வரும் தருமங்களை நிலை நிறுத்துவதற்காகத் தோன்றினவர்கள் ஆகையாலே நான்கு தருமங்களை அநுஷ்டித்துக் காட்டினார்கள்.

---

1. மேலதற்கே ஓர் ஐதிஹ்யமும் காட்டப்படுகிறது 'எம்பெருமானாகிய' என்று தொடங்கி. திரிபுராதேவி - அரசனுடைய மனைவி. 'காடிச்சால் மூலையில் தேவதை' என்றது, சிவபெருமானை. காடிச்சால் மூலை - வடகிழக்குத் திக்கு. திக்குப் பாலகர்கள் எண்மரில் வடகிழக்குத் திசைக்கு உரியவன் சிவன்.

2. பிரமாண முகத்தாலும் ஐதிஹ்ய முகத்தாலும் மேலே கூறப்பட்ட அர்த்தத்துக்கு அநுஷ்டானமும் காட்டப்படுகிறது 'அவன் அடியார்கட்கு' என்று தொடங்கி.

3. ஸ்ரீ சத்ருக்நாழ்வான் அநுஷ்டானந்தான் கொள்ளத் தக்கவாறு யாங்ஙனம்? என்ன, 'வேதங்களை விவரணம் செய்வதற்காக' என்று தொடங்கி அதற்கு விடை கூறப்படுகிறது.

ஸது மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்டிதௌ
வேத உபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:॰

என்பது, ஸ்ரீராமா. பால. 4 : 6.

தர்மங்களை நிலை நிறுத்தும் பொருட்டு நால்வரும் அவதரிக்கையாலே ஸ்ரீ சத்ருக்நாழ்வான் அநுஷ்டானமும் கொள்ளத் தக்கது என்பதாம்.

[1]"உலகத்திற்குரிய ஒழுக்கங்களின்படி நடக்கின்றவனும் ஒழுக்கங்களை நடத்துவிக்கின்றவனும் ஸ்ரீ ராமபிரானே" என்கிறபடியே, தருமங்களை நடத்துவித்தற்காக 'ஒருவன் சொல்லிற்றை ஒருவன் செய்யக் கடவன்' என்கிற முறை நேராக அழிந்து கிடக்கையாலே தந்தை சொல்லைக் காப்பாற்றுதல் முதலிய செயல்களாலே சாமான்ய (பொதுவான) தருமத்தை அநுஷ்டித்தார் **பெருமாள்.**

[2] "தந்தையின் சொல்லை நிறைவேற்றுவதற்காக இராமபிரான் வனத்திற்குச் சென்றார்" என்றும், [3] "அகத்தியருடைய வார்த்தையைக் கேட்டு.........ஏற்றுக் கொண்டார்" என்றும், [4] "சுக்கிரீவன் சொல்லிய சொற்களுக்கு உடன்பட்டு வாலியைக் கொன்றார்" என்றும் வருகின்ற இன்னோரன்னவற்றைக் காணல் தகும்.

"ஒருவித காரணமும் பற்றாமலே எல்லார்க்கும் தலைவனாக இருக்கிற பகவானைக் குறித்து வேண்டிய தொண்டுகளைச்

1. ஸ்ரீ சத்ருக்நாழ்வானுடைய அநுஷ்டானம் இன்னதென்று தெரிவிப்பதற்காக முதலில் ஸ்ரீ ராமபிரானுடைய அநுஷ்டானம் காட்டப்படுகிறது 'உலகத்திற்குரிய' என்று தொடங்கி.

"மர்யாதாநாம் ச லோகஸ்ய கர்த்தா காரயிதா ச ஸ:."

என்பது, ஸ்ரீராமா. சுந். 35 : 11.

2. அநுஷ்டித்தமைக்குப் பிரமாணங்கள் காட்டப்படுகின்றன 'தந்தையின் சொல்லை' என்று தொடங்கி.

ஸ ஜகாம வநம் வீர: ப்ரதிஜ்ஞாம் அநுபாலயந்
பிதுர் வசநநிர்த்தேஶாத் கைகேய்யா: ப்ரியகாரணாத்.

என்பது, ஸ்ரீராமா. பால. 1 : 24.

3. அகஸ்த்ய வசநாத்சைவ ஜக்ராஹ ஐந்த்ரம் ஶராஸநம்
கட்கஞ்ச பரம ப்ரீத: தூணீ ச அக்ஷய ஸாயகௌ.

என்பது, ஸ்ரீராமா. பால. 1 : 42.

விழுமியது சொற்றனை யிவ்வில் இது இவண் மேனாள்
முழு முதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்
வழிபட இருப்பது இது தன்னை வடி வாளிக்
குழு வழுவில் புட்டிலொடு கோடி என நல்கி.

இப் புவனம் முற்றும் ஒரு தட்டினிடை இட்டால்
ஒப்புவரவிற்று என உரைப்பரிய வாளும்
வெப்புருவு பெற்ற அரன் மேருவரை வில்லா
முப்புரம் எரித்த தனிமொய் கணையும் நல்கா.

என்பன, கம்பராமா. அகத்தியப் படலம்.

4. தத: ஸுக்ரீவ வசநாத் ஹத்வா வாலிநம் ஆஹவே
ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவ: ப்ரத்யபாதயத்.

என்பது, ஸ்ரீராமா. பால. 1 : 70.

செய்து ஓர் அடியவன் தான் உளனாகக் கடவன்" என்னும் விசேட தருமத்தை அநுஷ்டித்தார் இளைய பெருமாள்.

[1] "என்னைத் தொண்டு செய்பவனாக வைத்துக்கொள்ள வேண்டும்" என்பதும், [2] "நான் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்" என்பதும், [3] "அந்த இலக்குமணன் தமையனாராகிய ஸ்ரீ ராமபிரானுடைய திருவடிகளை நன்றாகப் பிடித்துக் கொண்டு, பிராட்டியையும் (அடியார்களைக் காத்தலாகிற) பெரிய விரதத்தையுடைய இராகவனையும் பார்த்துச் சொன்னான்" என்பதும் அன்றோ இவருடைய செயல்கள்.

[4] "உம்மைப் பாதுகாத்தலே" அன்றி, [5] "உம்முடைய இராச்சியத்தையும் பாதுகாப்பேன்; எனக்குச் சொரூபம் அடிமையானாலும் உம்மால் என்னை மீறி நடக்க ஒண்ணாது காணும்; எது போன்று? எனின், கடலுக்குக் கரை உறுப்பாக இருக்கச் செய்தேயும் கரையை மீறித் தாண்டமாட்டாதே

1. இளைய பெருமாள் அநுஷ்டித்த அநுஷ்டானத்திற்குப் பிரமாணங்கள் காட்டப்படுகின்றன 'என்னை' என்று தொடங்கி.

"குருஷ்வ மாம் அநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே
க்ருதார்த்தஃ அஹம் பவிஷ்யாமி தவ சார்த்தஃ ப்ரகல்பதே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31: 22.

2. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதஸ்ச தே.

என்பது, ஸ்ரீராமா. பால. 31: 25.

3. ஸ ப்ராதுஃ சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தநஃ
ஸீதாம் உவாச அதியஸா ராகவஞ்ச மஹாவ்ரதம்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31: 2.

4. இளைய பெருமாளுடைய அநுஷ்டானத்தைக் காட்டிலும் ஸ்ரீ பரதாழ்வானுடைய அநுஷ்டானத்துக்கு ஏற்றம் காட்டுவதற்காக இளைய பெருமாளுடைய படிக்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'உம்மை' என்று தொடங்கி.

தம் மத்த மாதங்க விலாஸகாமீ
கச்சந்தமவ்யக்ரமநா மஹாத்மா
ஸலக்ஷ்மணோ ராகவம் இஷ்ட சேஷ்டோ
ரரக்ஷ தர்மேண பலேந சைவ.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1: 128.

'உம்மைப் பாதுகாத்தலே அன்றி' என்பது, மேலே காட்டப்பட்டுள்ள சுலோகத்தில் "ரரக்ஷ தர்மேண பலேந சைவ - தர்மத்தாலும் பலத்தாலும் பாதுகாத்தார்" என்றதிலே நோக்கு.

5. ராஜ்யம் ச தவ ரக்ஷ்யம் அஹம் வேலேவ ஸாகரம்
ப்ரதி ஜாநாமி தே வீர மாபூவம் வீரலோகபாக்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 23: 27.

அன்றே கடல்; அப்படியே, நீர் பெரியீர் என்று, உம்மால் என்னை விஞ்ச ஒண்ணாது காணும்; நான் இப்படிச் சூளுறவு செய்கிறேன்; நான் சூளுறவு செய்கிறது ஒரு கோழை முன்பேயோ? சூளுறவு செய்தால் அதனை முடித்துத் தர வல்ல ஆண்மையையுடைய உம்முடைய முன்பே அன்றே? இப்படிச் செய்திலேனாகில் உம்முடைய திரு முன்பு வசிக்கப் பெறேனாதலன்றிக்கே உம்முடைய இராச்சியத்திலும் வசிக்கப் பெறாதவனாகின்றேன்; உமக்கு முடிசூட்டி அநுபவிக்க எண்ணி அது பெறாதே போன சக்கரவர்த்தி புக்க உலகம் புகுகிறேன்" என்கிறபடியே, நிர்ப்பந்தித்து அடிமை செய்தார் இளைய பெருமாள்; அங்ஙனம் செய்யாது, '**தலைவன் உகந்த அடிமையே அடியவன் செய்ய வேண்டியது**' என்னும் தருமத்தை அநுஷ்டித்தார் **ஸ்ரீ பரதாழ்வான்.**

[1] தன் செல்லாமையைப் பாராதே தலைவனான ஸ்ரீ ராமபிரானுடைய திருவுள்ளத்தைப் பார்த்து [2]"உவந்த உள்ளத்தனாய் அப்பொழுதே தேரில் ஏறினான்" என்கிறபடியே, தேரில் ஏறி நகரத்திற்கு மீண்டானே அன்றே ஸ்ரீ பரதாழ்வான்.

[3] இப்படி இருக்கிற ஸ்ரீ பரதாழ்வானை அல்லது அறியாதே இருக்கையாலே, பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலுக்கு எல்லை நிலமான அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலாகிற தருமத்தை அநுஷ்டித்தான் **ஸ்ரீ சத்ருக்நாழ்வான்.** [4] "பாபம் இல்லாதவனும் உட்பகைகளாகிய இந்திரியங்கள் ஐந்தனையும் வென்றவனும் பிரீதியினாலே தூண்டப்பட்டவனுமான சத்ருக்நன், மாமன் வீட்டிற்குச் செல்லுகின்ற ஸ்ரீ பரதாழ்வானாலே அப்பொழுது அழைத்துச் செல்லப்பட

1. 'தன் செல்லாமையைப் பாராதே' என்றது, ஸ்ரீராமபிரானை விட்டுப் பிரிந்து தரித்திருக்க மாட்டாமையைப் பாராமல் என்றபடி.

2. ததஃ ஶிரஸி க்ருத்வாது பாதுகே பரதஃ ததா
ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்டஃ ஶத்ருக்நேந ஸமந்விதஃ.
என்பது, ஸ்ரீராமா. அயோத். 113 : 1.

3. ஸ்ரீ சத்ருக்நாழ்வான் படி காட்டப்படுகிறது 'இப்படி இருக்கிற' என்று தொடங்கி.

4. அதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'பாபம் இல்லாதவனும்' என்று தொடங்கி.

கச்சதா மாதுலகுலம் பரதேந ததா அநகஃ
ஶத்ருக்நஃ நித்ய ஶத்ருக்நஃ நீதஃ ப்ரீதிபுரஸ்க்ருதஃ.
என்பது, ஸ்ரீராமா. அயோத். 1: 1.

டான்" என்பதே அன்றே ஸ்ரீ சத்ருக்நாழ்வானுடைய செயல்.

[1] "**கச்சதா**" - என்கிற நிகழ்காலச் சொல்லாலே, போகிற இடத்திலே தனக்கு ஒரு பயன் உண்டாயாதல், இங்கே தாய் தந்தையர்களைக் கேள்வி கொள்ளுதல், தமையனாரான பெருமாளைக் கேள்விகொள்ளுதல்செய்யும் இவ்வளவும் இன்றிக்கே, ஸ்ரீ பரதாழ்வானை நீங்கிப் பிழைக்க மாட்டாமையாலே சென்றான் என்றபடி. 'கச்சதா' என்பதற்குச் செல்லுகின்ற என்பது பொருள்.

"**மாதுலகுலம்**" - யுதாஜித்து அழைத்தது ஸ்ரீ பரதாழ்வானை ஆகையாலே போகவேண்டியவனும் அவனே ஆவான்; ஸ்ரீ சத்ருக்நாழ்வான் சென்றது, ஸ்ரீ பரதாழ்வான் உத்தேசியமாக என்றபடி. மாதுலகுலம் - மாமன் வீடு.

"**பரதேந**" - சக்கரவர்த்தியும் துஞ்ச, பெருமாளும் இராச்சியத்தைப் பொகட்டுப்போக, இளையபெருமாளும் தொடர்ந்து அடிமை செய்ய வேண்டும் என்று அவர் பின்னே போக, ஸ்ரீ சத்ருக்நாழ்வானும் ஸ்ரீ பரதாழ்வானை அல்லது அறியேன் என்றிருக்கும் நிலையிலே '**இராச்சியத்தைப் பரிக்கக்கடவன்**' என்றே அன்றே ஸ்ரீ வசிஷ்டபகவான் திருப் பெயர் வைத்தது. [2] "இராச்சியத்தைப் பரித்து நிற்றலால் பரதன் என்று சொல்லப்படுகிறான்" என்றான் ஸ்ரீ **சதாநீகன்**. பரித்தல்-தாங்குதல்.

'**ததா**' - இருவரும் அரசபுத்திரர்களாய் [3] நக்ஷத்திர வேற்றுமையும் உண்டாய் இருந்தால் பிரித்து முகூர்த்தம்

---

1. 'கச்சதா' என்றது முதல் 'நித்ய ஶத்ருக்நः என்றதனால் இனிமை' என்றது முடிய மேலே காட்டிய சுலோகத்துக்குப் பரம காருணிகரான பெரியவாச்சான் பிள்ளை எழுதிய வியாக்கியானம் தரப்படுகிறது.

2. பரதன் என்பதற்குத் தாம் அருளிச்செய்த பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'இராச்சியத்தை' என்று தொடங்கி.

"பரத இதி ராஜ்யஸ்ய பரணாத்"

என்பது, பிரமாணம்.

3. இருவரும் அவதரித்த நக்ஷத்திரம் வெவ்வேறு ஆகையாலே 'நக்ஷத்திர வேற்றுமையும்' என்கிறார். ஸ்ரீ பரதாழ்வான் திருநக்ஷத்திரம் - பூசம். ஸ்ரீ சத்ருக்நாழ்வான் திருநக்ஷத்திரம் - மகம்.

"பூசமும் மீனமும் பொலிய நல்கினாள்
மாசறு கேகயன் மாது மைந்தனை."
"மடங்கலும் மகமுமே வாழ்வி னோங்கிட
விடங்கிளர் விழியினாள் மீட்டும் ஈன்றனள்."

என்பன கம்பராமாயணம்.

இட்டுப் போதுதல் தகுதியாக இருக்க, அவன் சென்ற முகூர்த்தமே தனக்கும் முகூர்த்தமாகச் சென்றான். ததா - அப்பொழுது. நன்று; ‘ ததா ’ என்ற சொல்லின் பொருள் ‘ கச்சதா ’ என்ற சொல்லின் பொருள் ஆற்றலால் போதருமே அன்றோ? அங்ஙனம் இருக்க, மீண்டும் ‘ ததா ’ என்பது என்? என்னில், அங்கு எனது என்னும் செருக்கு அற்றபடி சொல்லிற்று; இங்கு அதற்கு இருப்பிடமான ‘யான்’ என்னும் செருக்கு அற்றபடி சொல்லுகிறது; ஆகையாலே, கூறியது கூறல் என்னும் குற்றம் இல்லை. [1] யான் எனது என்னும் செருக்கு இரண்டும் அடிமையாக இருக்கும் ஒருவனுக்குப் பெரும்பகை அன்றோ.

“ **அநகஃ** ” - பாவம் இல்லாதவன் இவனே ஆவன். ஒருவன் கொண்ட உத்தேசியத்திற்குத் தடையாக இருப்பது எதுவோ அது பாவம் எனப்படும். [2] இவ்விடத்தில் இவனுக்குப் பாவமாவது - **ஸ்ரீராமபக்தி**. அநகஃ - பாபம் இல்லாதவன். நன்று; இராமபக்தியைப் பாவம் என்னலாமோ? என்னில், [3] பாவத்தைக் காட்டிலும் புண்ணியம் நன்றாக இருக்க, மோக்ஷத்திற்குத் தடை ஆகையாலே செய்யலாகாது என்று புண்ணியமும் விலக்கப்படுகின்றது. [4] “குதிரை மயிர்களைச்

---

1. எனது என்னும் செருக்கு அற்றபடி சொன்னால் போதாதோ? யான் என்னும் செருக்கு அற்றபடியும் சொல்ல வேண்டுமோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது ‘யான் எனது’ என்று தொடங்கி.

2. யான் எனது என்னும் செருக்கு அற்றவன் என்ற போதே பாவம் இல்லாதவன் என்பது போதருமே? மீண்டும் பாவம் இல்லாதவன் என்று சொல்ல வேண்டுமோ? என்ன, அதற்கு விடை பேசப்படுகிறது ‘ இவ்விடத்தில் ’ என்று தொடங்கி.

3. ஸ்ரீ ராமபிரானிடம் எல்லோரும் பக்தியைச் செலுத்தவேண்டியதாக இருக்க, அவனிடம் காட்டும் பக்தியைப் பாவம் என்னலாமோ? என்ன, ‘ பாவத்தைக் காட்டிலும் ’ என்று தொடங்கி அதற்கு விடை கூறப்படுகிறது. இங்கு,

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

என்ற திருக்குறளையும், அதன் உரையையும் நினைவிற் கோடல் தகும்.

4. விலக்கப்படுவதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது ‘ குதிரை ’ என்றுதொடங்கி.

அஶ்வ இவரோமாணி விதூய பாபம்
சந்த்ர இவ ராஹோர் முகாத் ப்ரமுச்ய
தூத்வா ஶரீரம் அக்ருதம் க்ருதாத்மா
ப்ரஹ்மலோகம் அபிஸம்பவாமி இதி அபிஸம்பவாமீதி.

என்பது, சாந்தோக்யம், 8. 13: 1.

சிலிர்ப்பது போல் பாவத்தை விட்டு" என்ற இடத்தில் பாவம் என்ற சொல்லால் புண்ணியமும் சொல்லப்படுகின்றது. ஆகையாலே, பரதனுக்குத் தொண்டு செய்தலாகிற தனது உத்தேசியத்திற்கு ஸ்ரீராமபிரானுடைய அழகு தடையாக இருக்குமேயானல் ஸ்ரீராமபிரானுடைய அந்த அழகில் கால் தாழுமதுவும் பாபமாமித்தனை.

[1] "ஸ்ரீராமபிரான் நடந்து செல்லுகையில் (அந்த நடை அழகில் ஈடுபட்டு அவனைக் காப்பாற்றுவதில்) கவனம் இன்றி இராதே" என்கிறபடியே ஸ்ரீராமபிரானுக்குத் தொண்டு செய்வதற்கும் அவனுடைய அழகு இடைச்சுவராகச் சொல்லப் பட்டிருக்கின்றது; அங்ஙனம் இருக்க, ஸ்ரீபரதனுக்குத் தொண்டு செய்வதற்கு ஸ்ரீராமபிரானுடைய அந்த அழகு இடைச்சுவர் என்னுமிடம் சொல்ல வேண்டாவே.

"ஶத்ருக்நः" - பிள்ளைகளுடைய தோற்றப் பொலிவுகளைக் கண்டு திருப் பெயர்களை வைக்கின்ற ஸ்ரீ வசிஷ்ட பகவான், பெருமாள் கண்டவர்களை அழகாலே துவக்க வல்லவராகத் தோற்றுகையாலே '**இராமன்**' என்றும், இளையபெருமாளுக் குத் தொண்டே அடையாளமாகத் தோற்றுகையாலே '**இலக்ஷ் மணன்**' என்றும், இராச்சியத்தைப் பரிப்பவன் என்று தோற்றுகையாலே '**பரதன்**' என்றும் திருப் பெயர்களை வைத் தாற்போன்று, இவருடைய தோற்றப் பொலிவைக் காணவே பகைவர்கள் மண்ணுண்ணும்படி இருக்கையாலே '**சத்ருக்நன்**' என்று திருப் பெயர் வைத்தான்.

[2] '**நித்யஶத்ருக்நः**' - புறம்பே உள்ள பகைவர்களை அன் றிக்கே, உட்பகைவர்களான ஐந்து இந்திரியங்களையும் வென்ற வன் என்கை. அவ் இந்திரியங்களை வென்ற வெற்றியின்

இங்கு ஸ்ரீராம பக்தியாவது, இராமபிரானுடைய அழகில் ஈடு படுவது.

1. ஸ்ரீராமபிரானிடத்தில் ஈடுபாடு, ஸ்ரீ பரதாழ்வானுக்குத் தொண்டு செய்வதற்குத் தடையாகும் என்பதனைக் கிம்புநர் நியாயத்தால் சாதிக்கப்படு கிறது 'ஸ்ரீராமபிரான்' என்று தொடங்கி.

> ஸ்ருஷ்டः த்வம் வநவாஸாய ஸ்வநுரக்தः ஸுஹ்ருஜ்ஜநே
> ராமே ப்ரமாதம் மாகார்ஷீः புத்ர ப்ராதரி கச்சதி.

என்பது, ஸ்ரீராமா. அயோத் 40 : 5.

2. ஈண்டு 'நித்ய ஶத்ரு' என்றது, இந்திரியங்களை. சிற்றின்பத்தில் ஈடுபாடாகிற அரிஷ்டத்தை அநாதியாக உண்டாக்கிக்கொண்டு வருமவைகள் ஆகையாலே இந்திரியங்களை 'நித்ய சத்ரு' என்கிறார்.

எல்லை எத்துணை? என்னில், [1] "ஆடவர்களின் கண்களையும் மனத்தையும் கொள்ளை கொள்கின்ற ஸ்ரீ ராமபிரான்" எனப் படுகின்ற இராமபிரானுடைய அழகிலும் துவக்குண்ணு திருக்கை. என்றது, [2] இவர், பெருமாளைப் பற்றும் போதும் தன் உகப்பாலேயாதல், அவருடைய அழகாலேயாதல் பற்று தல் அன்றிக்கே, தனக்கு உத்தேசியனான ஸ்ரீ பரதாழ்வான் உகந்த விஷயம் என்று பற்றுவார் என்றபடி.

"நீதः" - [3] அரசர்கள் போகும் போது உடைவாள் முதலியனவற்றைக் கொண்டு போமாறு போலே, பரதன் கொடு போகப் போனான் என்கை. [4] ஒருவனுக்கு மற்றொருவ னோடு உளதாகும் சேர்க்கை இருவருடைய உடன்பாட்டா லேயே உளதாக இருக்கும். அங்ஙனம் அன்றிக்கே, சாதியும் குணங்களும் போன்று போனான் என்கை. நீதः - அழைத்துச் செல்லப்பட்டான்.

---

1. "ரூபௌதார்ய குணைः பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்." என்பது, ஸ்ரீராமா. அயோத். 3 : 29.

> "ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்
> தாடகை என்பது அச் சழக்கி நாமமே"

என்பது கம்பராமாயணம்.

2. "ஶத்ருக்நः சத்ரமாததே - சத்துருக்நன் இராமபிரானுக்குக் குடையைப் பிடித்தான்" என்றும், "ராமமேவ அநுசிந்தயந் - இராமபிரானையே நினைத்துக்கொண்டு" என்றும் சொல்லப்பட்டிருக்க, இராமபிரானுடைய அழகில் ஈடுபட்டிலன் என்று சொல்லுதல் பொருந்துமோ? என்ன; அதற்கு விடை அருளிச்செய்யப்படுகிறது 'இவர் பெருமாளைப் பற்றும் போதும்' என்று தொடங்கி.

3. 'ஸ்ரீ சத்துருக்நாழ்வானும் உடன் சென்றான்' என்னாமல் 'பரதேந நீத:— பரதனாலே அழைத்துச் செல்லப்பட்டான்' என்றதனால், ஸ்ரீ பரதாழ்வானுக்குச் சுவாதந்திரியமும் ஸ்ரீ சத்ருக்நாழ்வானுக்கு அசித்தினைப் போன்ற பாரதந்திரியமும் தோற்றுகிறது என்று அருளிச்செய்கிறார் 'அரசர்கள்' என்று தொடங்கி. யான் எனது என்னும் செருக்கு அற்றவன் என்ற போதே பாரதந்திரியம் போதருமாதலாலே, இங்கு 'நீதः' என்ற பதத்தாலே அசித்தினைப் போன்ற பாரதந்திரியமும் சொல்லபட்டதாகக் கோடல் வேண்டும்.

4. மேலே சொல்லப்பட்ட பாரதந்திரியத்தினது எல்லை நிலம் காட்டுவதற்குத் திருவுள்ளம்பற்றி மேலே அருளிச்செய்த பொருளில் நின்றும் வேறுபடுத்தி அதனைக் காட்டிலும் ஏற்றம் சொல்லுகிறார் 'ஒருவனுக்கு' என்று தொடங்கி.

"ப்ரீதிபுரஸ்க்ருதஃ" - [1] 'தமையனுக்குத் தொண்டு செய்யத்தக்கது' என்ற விதியை மேற்கொண்டு போனான் அல்லன். "நான் எல்லா அடிமைத் தொழில்களையும் செய்வேன்" என்று சென்ற இளைய பெருமாளைப் போலே, 'சென்ற இடத்திலே எல்லாத் தொண்டுகளையும் செய்யலாம்' என்று பாரித்துக் கொண்டு அன்பு தூண்டச் சென்றான். படை வீட்டில் இருந்தால் பலரும் உளர் ஆகையாலே இவன் தொண்டு செய்வதற்குச் சமயம் நேராது. ப்ரீதிபுரஸ்க்ருதஃ - அன்பு முன்னாக.

[2] 'நீதஃ' என்கையாலே, அடிமையில் அறிவில் பொருளைப் போன்று இருக்கக் கடவன் என்பதனைத் தெரிவித்தபடி. 'ப்ரீதிபுரஸ்க்ருதஃ' என்கையாலே, அடிமைக்குத் தக்கதான தொண்டுகளைச் செய்யுமிடத்தில் அறிவினால் உண்டாகும் தர்மங்கள் உளவாக இருத்தல்வேண்டும் என்பதனைத் தெரிவித்தபடி. [3] "படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே" என்பதன்றோ அபியுக்தர் திருவார்த்தையும்.

இனி, [4] "அநகஃ, நித்யஶத்ருக்நஃ" என்ற பதங்கட்கு, தூய்மையாலும் இனிமையாலும் அவனையே பற்றினான் என்று

---

1. ப்ரீதி புரஸ்க்ருதஃ என்றதற்கு, பரதனாலே கொண்டாடப் பட்டவனாய்ப் போனான் என்று பொருள் சொல்லுமளவில், மேலே கூறிய பாரதந்திரியத்துக்கு முரண்படுமாகையாலே, அங்ஙனம் மாறுபடாதபடி 'தன்னுடைய பிரீதியாலே தூண்டப்பட்டவனாகிச் சென்றான்' என்று பொருள் அருளிச் செய்கிறார் 'தமையனுக்கு' என்று தொடங்கி.

2. 'நீதஃ' என்று சொல்லியிருக்க, 'ப்ரீதிபுரஸ்க்ருதஃ' என்று சொல்லக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நீதஃ என்கையாலே' என்று தொடங்கி.

3. தாம் அருளிச்செய்த பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'படியாய்க் கிடந்து' என்று தொடங்கி. இது, பெருமாள் திருமொழி, 4 : 9. இங்கு, படியாய்க் கிடந்து என்பதும், காண்பேனே என்பதும் குறிக்கொள்ளத் தக்கவை. அபியுக்தர் - அறிஞர்.

4. "அநகஃ" என்ற பதத்துக்கு, ஸ்ரீராமபிரானுடைய அழகினைக் கண்டு அதில் கால்தாழ்தலாகிற ஸ்ரீராம பக்தி இல்லாதவன் என்று பொருள் கூறி, அதற்குக் காரணமாக "நித்ய ஶத்ருக்நஃ" என்றதனைத் திருவுள்ளம் பற்றி, இவ் இரண்டாலும் பெருமாளிடத்தில் காட்டிலும் ஸ்ரீ பரதாழ்வானிடத்தில் இனிமை மிகுதி தோற்றப் பொருள் அருளிச்செய்தார் மேல். இனி, இவ் இரண்டு பதங்களாலும் தூய்மையும் இனிமையும் பெருமாளிடத்திற் காட்டிலும் ஸ்ரீபரதாழ்வானிடத்தில் மிக்குத்தோன்றுகையாலே "அநகஃ, நித்யஶத்ருக்நஃ"

கருத்துக் கூறலுமாம். அநகஃ என்பதனால் தூய்மை. நித்யஶத்ருக்நஃ என்பதனால் இனிமை.

[1] "அநகஃ, நித்யஶத்ருக்நஃ" என்பனவற்றிற்குப் பயன், "ஸ்ரீ சத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி, அவரை அல்லது அறியாத ஸ்ரீ பரதாழ்வானை அல்லது வேறு ஒன்றனை அறியாதபடி யாதல்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர். இதுவே பிரயோஜனமானால் சொன்ன மிகை எல்லாம் பொறுக்கும்.

ஆக, இப்படி இருக்கிற ஸ்ரீ சத்ருக்நாழ்வானைப் போலே இருப்பார் ஒருவர் ஸ்ரீ மதுரகவிகள்.

என்றார் என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் "அநகஃ" என்று தொடங்கி. என்றது, "அநக" பதத்தால் ஸ்ரீ ராமபிரான் விஷயத்தில் தூய்மையால் உண்டாகிற பெருமையாலே வருகிற அன்பு இல்லாதவன் என்று தோற்றுகையாலே ஸ்ரீ பரதாழ்வான் விஷயத்தில் தூய்மையின் மிகுதி தோன்றுகிறது என்பது கருத்து. 'நித்ய ஶத்ருக்நஃ" என்பதனால் ஸ்ரீராமபிரானுடைய அழகில் கண்வையான் என்கையாலே, இங்குக் கண் வைப்பதற்குத் தக்க இனிமையின் மிகுதி தோற்றுகிறது என்பது கருத்து.

1. "அநகஃ" என்றதற்கு 'ஸ்ரீராம பக்தி இல்லாதவன்' என்றும், "நித்ய ஶத்ருக்நஃ" என்றதற்கு ஸ்ரீராமபிரானிடத்தில் கண் வையான் என்றும் சொல்லுதல் பொருந்துமோ?

"கதாந்வஹம் ஸமேஷ்யாமி பரதேந மஹாத்மநா
ஶத்ருக்நேந ச வீரேண த்வயாச ரகுநந்தந -

இரகு குலத்தில் பிறந்தவனே! மஹாத்மாவான பரதனோடும், வீரனான சத்ருக்நனோடும், உன்னோடும் நான் கூடி வாழ்வது என்றோ" (ஸ்ரீராமா. ஆரண். 16 : 40.) என்கிறபடியே, பெருமாளுக்கு ஸ்ரீ சத்ருக்நாழ்வானிடத்தில் அன்பு உண்டாகையாலே இவனுக்கும் அவரிடத்தில் அன்பு இருக்க வேண்டியது முறைமையாகையாலே, இவ் இரண்டு பதங்கட்கும் பொருள் இல்லை; பொருள் இல்லாமையாலே பயனும் இல்லை என்று முன்புள்ள பெரியோர்கள் கேட்க, அதற்கு எம்பெருமானார் அருளிச்செய்த விடையை, இங்கும் அந்தச் சங்கையை நீக்கவேண்டுவதொன்றாகையாலே, அதனைச் சம்வாதமாக அருளிச்செய்கிறார் "அநகஃ" என்று தொடங்கி. என்றது, ஸ்ரீ பரதாழ்வான் காரணமாக இருவர்க்கும் பரஸ்பரம் பிரீதி உண்டு என்பது கருத்து. 'சொன்ன மிகை எல்லாம் பொறுக்கும்' என்றது, பெருமாளுக்கு நல்லனான ஸ்ரீ பரதாழ்வானை அல்லது அறியாதிருக்கையாலே "அநகஃ நித்ய ஶத்ருக்நஃ" என்று சொன்ன மிகையெல்லாம் பொறுக்கும் என்றபடி.

ஆக, இதனால் சர்வேஶ்வரன் விஷயத்தில் கண்ணழிவற்ற ருசியுடையாருடைய அபிமானத்திலே ஒதுங்கி, அவர் திருவடிகளே பேறும் பேற்றி

[1] இனி, அவன் அடியார்கள் பற்றப்படுமவராமிடத்தில், பகவானுடைய சம்பந்த மாத்திரத்திலேயே அங்கீகரித்தும், பகவானிடத்திலே இப்போது உள்புகச்செய்தும், குணங்களை நினைந்தால் அல்லது போது போக்க இயலாத நிலையையுடைய காலத்தில் "ஒருவர்க்கு ஒருவர் அறிவிப்பவர்களாய்" என்கிற படியே, போது போக்குகைக்கு உசாத் துணையாகியும், [2] "யாதொரு பரமபதத்தில் சாத்தியர் எனப்படும் தேவர்கள் இருக்கின்றார்களோ, அந்தப் பரமபதத்தைப் பெருமையினை யுடையவர்களாய் அவர்கள் அடைகிறார்கள்" என்கிறபடியே, பேற்றினைப் பெறும் நிலையில் பகவானுடைய அநுபவத் துக்குத் துணையாகியும் போருகின்ற பலவித உபகாரத் தாலே எல்லா நிலைகளிலும் அவன் [3] அடியார்களே உத்தேசியர் என்று அறுதியிட்டு, தம்மை, அடியார்களுடைய அங்கீகாரத் துக்கு முன்பே அறிவின்மையைப் போக்கிய முகத்தாலே பகவானிடத்திலே பக்தி வரச் செய்த மஹோபகாரரான ஆழ் வாரையே பற்றுகிறார்.

தோற்றுவாய் முற்றிற்று.

னைப் பெறுதற்குரிய வழியும் ஆம் என்று அறுதியிட்டு இருப்பவர் "திரிதந் தாகிலும்" என்ற திருப்பாசுரப்படியே சர்வேஸ்வரனுடைய உகப்புக்கு விஷயமாவர் என்ற விஷயத்தைத் தெரிவித்தபடி.

ஆக, இதுகாறும் நூலாசிரியருடைய பெருமை சொல்லப்பட்டது.

1. இனி, நூலில் சொல்லப்பட்ட பொருளின் ஏற்றம் சொல்லப்படுகிறது 'இனி' என்று தொடங்கி. 'பற்றப்படுமவராமிடத்தில்' என்னுமதனை மேலே வருகின்ற 'அவன் அடியார்களே உத்தேசியர் என்று அறுதியிட்டு' என்ற தனோடு கூட்டுக. 'அறுதியிட்டு' என்னுமதனை மேலே வருகின்ற 'ஆழ் வாரையே பற்றுகிறார்' என்னுமதனோடு கூட்டுக.

2. தேஹ நாகம் மஹிமாநः ஸசந்தே
   யத்ர பூர்வே ஸாத்யாः ஸந்தி தேவாः.

என்பது, புருஷ சூக்தம்.

3. "ஆகையாலே, இவ்வாழ்வாராகிறார் அவ் ஆசார்ய வைபவம் அறியு மவராகையாலும், ஆழ்வார் திருவடிகளிலே நெடுநாள் தொண்டு செய்து அவருடைய திருவருளுக்குப் பாத்தராய்ப் போந்தவராகையாலும், அவர் பண்ணின உபகாரத்துக்குப் பிரதியுபகாரம் உண்டாக நினைத்திராதவரா தலாலும், அவரை வாயாரப் புகழ்ந்து அவருடைய உபகார அநுசந்தான பிரீ திக்குப் போக்குவிட வேண்டுகையாலும், இப் பிரபந்த முகத்தாலே ஆழ்வார் வைபவத்தைப் பேசுகிறார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
மாறன் மலரடி வாழ்க.

கண்ணிநுண் சிறுத்தாம்பு
விரிவுரை

—:o:—

1. கண்ணி நுண் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுது ஊறும் என் நாவுக்கே.

பொருள் :—கண்ணி - (உடம்பிலே உறுத்தும்படியான) பல முடிகளையுடைத்தாய், நுண் - (சரீரத்திலே அழுந்தும்படி) நுண்ணியதாய், சிறு - (எட்டம் போராதபடி) சிறியதாய், (இருக்கிற) தாம்பினால் - கயிற்றால், கட்டுண்ணப் பண்ணிய- (தாயானவள் தன்னைக்) கட்டும்படி செய்வித்துக் கொண்ட, பெருமாயன் - மிகப் பெரிய ஆச்சரியத்தையுடையவனான, என் அப்பனில் - என் தந்தையான சர்வேஸ்வரனை விட்டு நீங்கி, நண்ணி - (ஆழ்வாரைக்) கிட்டி, தென்-அழகிய, குருகூர் நம்பி- திருக்குருகூரிலே அவதரித்த ஆழ்வார், என்றக்கால் - என்று அவர் திருப்பெயரைச் சொன்னால், அண்ணிக்கும் - தித்திக்கும்; என் நாவுக்கே - என்னுடைய நாவிற்கே, அமுது ஊறும்; அமிர்தம் ஊறாநிற்கும்.

இத் திருப்பாசுரத்தில் ஆழ்வாருடைய [1] எல்லை இல்லாத இனிமை பேசப்படுகிறது. நன்று; பேற்றுக்கு எல்லை நில மான ஆழ்வாரைப் பற்றுகிற இவர் பேற்றுக்கு முதற்படியான இறைவனைக் "**கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன் என்னப் பன்**" என்றும், அவனைப் பேச விரும்பினாலும் அவனுடைய கல்யாண குணங்களைப் பேசாமல் அவன் கட்டுண்ட கயிற்றினைக் "**கண்ணிநுண் சிறுத்தாம்பு**" என்று புகழ்ந்தும் பாராட்டுவான் என்? என்னில், ஆழ்வாருடைய இனிமையின் மிகுதி

1. 'எல்லை இல்லாத இனிமை' என்றது, "குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுது ஊறும் என் நாவுக்கே" என்றதிலே நோக்கு.

தோற்றுவதற்காகவும், ஆழ்வாருடைய முகமலர்த்திக்காகவும், ஆழ்வாரால் உகந்து பேசப்பட்டவன் ஆகையாலும், [1]"உரலினோடு இணைந்து இருந்து ஏங்கிய எளிவு - எத்திறம்" என்றும், [2]"பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்றும், [3]"பையவே நிலையும்" என்றும் ஆழ்வார் ஆழங்காற்பட்ட விஷயமாகையாலும் இறைவனைப் பற்றிப் பேசுகிறார். ஆழ்வார் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் ஆகையாலே [4]"உயர்வற உயர்நலம் உடையவன்" என்று அவன் குணத்தைப் பேசினர்; இவர் முதலடியிலேயே ஆழ்வாரையே தெய்வமாகப் பற்றுகையாலே அவன் திருமேனியிலே சம்பந்தப்பட்டதொரு கயிற்றினைக் "கண்ணி நுண் சிறுத் தாம்பு" என்று வருணிக்கிறார். ஆக, ஆழ்வாருக்கு உத்தேசியமான அப் பரம்பொருள் இவருக்கு வெளிறுய்க் கழிகிறபடியைத் தெரிவித்தபடி.

கண்ணி நுண் சிறுத் தாம்பினல் - [5] ஆழ்வார் பக்கல் இவருக்குஉளதான குறிக்கோள், ஆழ்வாருடைய குறிக்கோளுக்கு விஷயமாக இருக்கும் அப் பரம்பொருளினைக் கட்டினதொரு கயிற்றின் உண்மானம் புறமானம் ஆராயும்படி இருக்கிறதாயிற்று. உடம்பிலே கட்டப்புக்கால் உறுத்தும்படி பல பிணைகளை யுடைத்தாய் இருக்கையாலே '**கண்ணித்தாம்பு**' என்கிறார். கண்ணி-முடிச்சு. சரீரத்திலே அழுந்தும்படி நேரியதாய் இருத்தலின் '**நுண்தாம்பு**' என்கிறார். இவனைக் கட்டினபின்பு உரலோடே சேர்க்கைக்கு எட்டம் போராதிருத்தலின் '**சிறுத் தாம்பு**' என்கிறார்.

---

1. 'உரலினோடு' என்பது, திருவாய்மொழி, 1. 3 : 1.
2. 'பிறந்தவாறும்' என்பது, திருவாய்மொழி, 5. 10 : 1.
3. 'பையவே' என்பது, திருவாய்மொழி, 5. 10 : 3.
4. 'உயர்வற' என்பது, திருவாய்மொழி, 1. 1 : 1.
5. "கட்டின கயிற்றினைக் கொண்டாடுகிறார்; தத் சம்பந்தியான தொன்றைக் கொண்டாடுகை இவர்க்கு உள்ள தொன்றிறே" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்கியானம் இங்குக் காணல் தகும்.
6. "கண்ணிநுண் சிறுத்தாம்பு - போக்யதா காஷ்டை உள்ளது இவ் அபதானமாகையாலே அத்தை முற்படச் சொல்லி, அதிற்காட்டில் ஆழ்வார் தமக்குப் போக்யரானபடியை இப் பாட்டாலே வெளியிடுகிறார். அதில் அவன் கட்டுண்ட தாம்பை முற்படக் கொண்டாடுகிறார். கண்ணித் தாம்புமாய் நுண் தாம்புமாய் சிறுத்தாம்புமாய் இருக்கும். ஞான பக்தி வைராக்கியங்களைக் கொண்டாடுமாறுபோலே இங்கு மூன்று விசேஷணங்களைச் சொல்லுகிறார்... பிரதமத்திலே ருசி, ஸங்கம், பக்தி, பரபக்தி, பரஞானம், பரம பக்திகள் என்று அநேக பர்வையாயிறே அந்தப் பக்தி இருப்பது" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக். இங்குக் குறிக்கொள்ளத் தகும்.

'உரலை நேரிதாகச் செதுக்கப்போகாது, அப் போதாகக் கயிற்றினை நெடுகவிடப் போகாது; இனி, இவனைவிட்டு நெடிய கயிறுதேடி எடுக்கப் புகில் இவன்தான் கிட்டான், காற்றிற் கடியனாய் ஓடும்; இனிச் செய்வது என்?' என்று அவள் தடுமாறுகிறபடியைக் கண்டான், [1] "என்றும் ஒரே தன்மையதாக இருக்கும் திவ்ய மங்கள விக்கிரகத்தையுடையவன்" எனப்படுகிற தான் தன்னுடைய திருமேனியை நெருக்கி இடம் கண்டு கட்டுண்ணும்படி செய்தான்; ஆதலின், '**கட்டுண்ணப் பண்ணிய**' என்கிறார். [2] 'கட்டுகைக்கு ஏற்ற சாதனம் இல்லை' என்று கட்டுதலை விட்டு நீங்குவாளேயாயின், தான் பிறந்து படைக்க நினைத்த குணத்தை இழந்து விடுவான்; ஆதலால், திருமேனியிலே கட்ட இடம் கொடுத்தான். [3] "கண்ணியார் குறுங் கயிற்றால் கட்ட வெட்டென்று இருந்தான்" என்றும், [4] "கண்ணிக் குறுங் கயிற்றால் கட்டுண்டான்" என்றும் எல்லோரும் ஈடுபடும் துறை அன்றோ இதுதான்.

[5] "கயிற்றினால் வயிற்றிலும் உரலிலும் கட்டி, துருதுருக்கைத்தனம் செய்கின்றவனே! உனக்கு ஆற்றல் இருந்தால் போய்க் காண்" என்று சொல்லுகிறபடியே, தாய் கட்டின கட்டினை அவிழ்க்க ஆற்றலுடையேன் அல்லேன் என்று

---

1. அவிகாராய ஶுத்தாய நித்யாய பரமாத்மநே
ஸதைக ரூப ரூபாய விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே.
என்பது, ஸ்ரீவிஷ்ணுபுரா. 1. 2: 1.

2. தன் சங்கல்பத்தால் தானே கட்டுண்ண வேண்டுமோ? அவள் கட்டாதொழியின் நல்லது அன்றோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'கட்டுகைக்கு' என்று தொடங்கி. 'நினைத்த குணம்' என்றது, சௌலப்ய குணத்தை. ஆக, "கண்ணிநுண் சிறுத்தாம்பினால்" என்றதனால், ஆழ்வார் மோகிப்பதற்குக் காரணமாக இருந்த இறைவனுடைய சௌலப்ய குணத்தைக் குறித்தபடி.

3. திருமங்கைமன்னன் முதலிய பெரியார் பலரும் ஈடுபடுவதும் இந்த சௌலப்ய குணத்திலேயேதான் என்பதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'கண்ணியார்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 5. 9: 7.

4. "கண்ணி" என்பது, பெரிய திருமொழி, 11. 5: 5.

5. மேலே காட்டப்பட்ட பிரமாணங்களில் "வெட்டென்றிருந்தான்" என்றும், "கட்டுண்டான்" என்றும் அவர்கள் ஆழங்காற்பட்ட தன்மை விளக்கப்படுகிறது 'கயிற்றினால்' என்று தொடங்கி.

தாம்நாசைவ உதரே பத்த்வா ப்ரத்யபத்நாத் உலூகலே
க்ருஷ்ணம் அக்லிஷ்ட கர்மாணம் ஆஹச இதம் அமர்ஷிதா.
யதி ஶக்நோஷி கச்ச த்வம் அதிசஞ்சல சேஷ்டித
இதிஉக்த்வாஅத நிஜம் கர்ம ஸா சகார குடும்பிநீ.
என்பன, ஸ்ரீவிஷ்ணுபுரா. 5. 6: 14. 4. 6: 15.

இருந்தான் காண். [1] "சம்சாரக் கட்டு நிலைத்திருப்பதற்கும் விடுபடுவதற்கும் காரணமாக இருப்பவன்" என்கிறபடியே மற்றை எல்லோரும் கட்டுப்படுவதற்கும் விடுபடுவதற்கும் காரணமாக இருப்பவன் கண்டீர் இப்பொழுது ஒரு பெண் கட்டின கட்டினை அவிழ்த்துக்கொள்ள ஆற்றல் இன்றிக்கே இசைந்திருக்கிறான். [2] செருக்கனான ஓர் அரசன் தன் மனைவி கையிலே அகப்பட்டு ஒரு கருமுகை மாலையாலே கட்டுண்டால் அதனை விடுவித்துக்கொள்ளமாட்டாதே இருக்குமாறுபோலே அன்றோ, இவள் கட்டின கட்டினையும் விடுவித்துக்கொள்ள மாட்டாதே இவன் இருந்த இருப்பும்.

[3]பிறருடைய கர்மம் காரணமாகவரும் கட்டினை அவிழ்க்கு மத்தனை அல்லது, தன் அருளாலே வந்த கட்டுத் தன்னாலும் அவிழ்க்கப் போகாது என்கை.

[4] 'ஒரு பெண்ணைக் களவு கண்டான், வெண்ணெயைக் களவு கண்டான், ஊரை மூலையடியே நடத்தினான்' என்றே

---

1. அளவிலா ஆற்றலையுடைய இறைவன் ஆற்றல் இல்லாதாரைப் போன்று கட்டுப்பட்டிருக்கலாமோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'சம்சாரக்கட்டு' என்று தொடங்கி. என்றது, பிரேமத்தாலே கட்டுப்பட்டிருந் தான் என்றபடி.

ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதிः குணேஶः
ஸம்ஸார பந்த ஸ்திதி மோக்ஷ ஹேதுः.

என்பது, ஶ்வேதாஶ்வதரம், 6 : 16.

2. பிரேமத்தாலே கட்டுப்பட்டிருத்தலை ஓர் எடுத்துக்காட்டு மூலம் விளக்கப்படுகிறது 'செருக்கனான' என்று தொடங்கி.

அல்லியம் பூ மலர்க் கோதாய்! அடிபணிந்தேன் விண்ணப்பம்;
சொல்லுகேன் கேட்டருளாய், துணை மலர்க்கண் மடமானே!
எல்லி யம் போதினிதிருத்தல் இருந்ததோ ரிடவகையின்
மல்லிகை மா மாலை கொண்டங்கு ஆர்த்ததும் ஓரடையாளம்.

என்ற திருப்பாசுரம் நினைத்தல் தகும்.

"ஆஶ்ரிதர் கையாலே கட்டுண்ணாவிடில் சீலத்துக்குப் போராது; அநாஶ்ரிதரைக் கட்டாவிடில் பிரபாவத்துக்குப் போராது. ராஜாவானவன் எதிரிகளைக் கட்டிவைக்கையும் பும்ஸ்த்வம். தன் மகிஷியின் கையில் பூமாலையாலே கட்டுண்டு கிடக்கையும் பும்ஸ்த்வம்" என்பது, நஞ்சீயர் வியாக்யானம்.

3. மக்களுடைய பிறவித் தளையை அறுக்கும் அவன் தாய் கட்டின இந்தக் கட்டினை அவிழ்த்துக் கொள்ளாமைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை பேசப்படுகிறது 'பிறருடைய' என்று தொடங்கி.

4. 'ஒரு பெண்ணை' என்றது முதல் 'தொழுகிறான்' என்றது முடிய, மேலே மேற்கோளாகக் காட்டப்பட்ட "யதிஶக்நோஷி" என்ற சுலோகத்திலே உள்ள "அதிசஞ்சல சேஷ்டித - துருதுருக்கைத்தனம் செய்பவனே" என்பதற்கு அவதாரிகை.

அன்றோ இவனைக் கட்டுவது. [1]'இவன் சாமான்யன் என்று இடும் ஈடெல்லாம் இடுங்கோள்' என்று இருந்தான். இதனால் களவிலே தகண் ஏறினமையைத் தெரிவித்தபடி. இவள் கட்டிவைத்து அடிக்கப் புக்கவாறே 'இந் நிலையில் விருப்பம் நிறைவேறுவதற்குச் சாதனம் கைகூப்பி வணங்குதலேயாம்' என்று அறியுமவன் ஆகையாலே [2]"தொழுகையும்" என்கிற படியே தொழத் தொடங்கினான்; எல்லாரையும் தொழுவித்துக் கொள்ளுமவன் அன்றோ தொழுகிறான். [3]துருதுருக்கையாகக் கொண்டு ஊர்ப் பூசல் விளைத்தவன் அல்லையோ நீ என்று ஒரு சொல்லாலே விலங்கிட்டு வைத்து, [4]அவள் கறப்பது கடைவதாகத் தொடங்கினாள். [5]இவனைப் போன்று நியமிக்க வேண்டுவன பலவும் உண்டு அவளுக்கு.

பெருமாயன்-எல்லை இல்லாத ஆச்சரியங்களையுடையவன். [6]இதனால், ஒன்றாலும் ஒரு குறையும் இல்லாதவனாய் எல்லாப்

---

1. 'இவன் சாமான்யன் என்று இடும் ஈடு எல்லாம் இடுங்கோள்' என்றது, அழகர் திருமலையிலே சாமாந்யர் என்றும் சோழியர் என்றும் இரு வகைப் பிரிவினர் இருந்தனர்; அவ் விருவகைப் பிரிவினர்களுக்குள் எப்போதும் விரோத உணர்ச்சி உண்டு; அதனால், சோழியர்கள் எல்லோரும் சாமாந்யரைக் கண்டால் அடித்துத் துன்புறுத்துவது என்ற எண்ணம் கொண்டிருந்தனர்; ஒருநாள் இரவிலே சோழியர்களிலே ஒருவன் தனியே வர, அவனைச் சாமான்யன் என்று நினைத்துச் சோழியர் அனைவரும் ஒருங்கு திரண்டு வந்து அடிக்க, அடிபடுகிற அவன் 'நான் சோழியன், என்னை ஏன் அடிக்கின்றீர்கள்' என்ன, 'ஐயோ! உன்னைச் சாமான்யன் என்று நினைத்து அடித்துவிட்டோமே' என்ன, 'அப்படியானால், இன்னம் அடியுங்கோள் குத்துங்கோள், என்று, சாமாந்யன் மேலே உள்ள பகை உணர்ச்சியால், தான் அடிபடுகின்ற நோவும் தோற்றாமல் சொன்னான் என்பது ஐதிஹ்யம். அப்படியே, ஸ்ரீகிருஷ்ணனும் வெண்ணெய் களவு கண்டான் என்று கட்டினாலும் அடித்தாலும் 'கள்ளன்' என்று அவர்கள் அடிப்பது தனக்கு விருப்பம் என்பது தோற்ற இருந்தான் என்பதாம்.

2. 'தொழுகையும்' என்பது, பெருமாள் திருமொழி, 7 : 8.

3. அச் சுலோகத்தில் அதற்கு மேல் உள்ள 'இதிஉக்த்வா' என்ற தொடருக்குப் பொருள், 'துருதுருக்கைத்தனம்' என்றது முதல் 'விலங்கிட்டு வைத்து' என்றது முடிய.

4. அதற்குமேல் உள்ள 'அதநிஜம் கர்மசகார' என்ற தொடருக்குப் பொருள் 'அவள் கறப்பது கடைவதாகத் தொடங்கினாள்' என்பது.

5. ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டாமலும் அடியாமலும் அவன் களவு செய்யாதபடி அவன் அண்மையிலேயே யசோதை இருந்தால் என்? என்ன, அதற்கு விடை 'இவனைப் போன்று' என்று தொடங்கும் வாக்கியம். இது, 'ஸாகுடும்பிநீ' என்ற சொல்லின் கருத்து.

6. மாயன் - ஆச்சரியமான செயல்களை யுடையவன். அச் செயல்கள் விளக்கப்படுகின்றன 'இதனால்' என்று தொடங்கி. "பெருமாயன் - அவன் நினைக்க ஒண்ணாத ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையவன். அதாவது, அழுகையும் அஞ்சி நோக்கும் அந் நோக்கும் தொழுகையுமான இச் சேஷ்டிதங்கள்" என்பது அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வியாக்.

பொருள்களாலும் நிறைவுற்றவனான சர்வேஸ்வரனுக்கு ஒரு குறைஉண்டாய், அக் குறையை நீக்க நினைத்துச் சிறியோரைப் போலே வழி அல்லாத வழியாகிய களவிலே இழிந்து, எல்லா வற்றையும் செய்து முடிக்கும் ஆற்றலையுடைய அவன்தான் அதனையும் தலைக்கட்ட மாட்டாமல் வாயது கையதாக அகப் பட்டுக் கட்டுண்டு அடியுண்டு "பையவே நிலையும்" என்கிற படியே உடம்பு வெளுத்து நின்ற நிலை அளவும் செல்ல நினைக் கிறார்.

என் அப்பனில் - இவருடைய குறிக்கோள் ஆழ்வாராக இருக்க, '**என் அப்பன்**' என்று சர்வேஸ்வரனைக் கூறுவான் என்? என்னில், பகவானுடைய சம்பந்தம் அற வார்த்தை சொன்னாராகில் ஆழ்வாருடைய சம்பந்தத்தை அறுத்துக் கொண்டார் ஆவர்; அதனாலே சொல்லுகிறார். [1] அன்றிக்கே, [2] "ஆடவர்களுடைய கண்களையும் மனங்களையும் கொள்ளை கொள்ளுகின்றவர்" என்கிறபடியே, அவ்வருகே போவாரை யும் துவக்கவல்ல விஷயமாகையாலே சொல்லுகிறார் என்னு தல்.

என் அப்பனில் நண்ணி - சர்வேஸ்வரனை நீங்கி ஆழ்வார் பக்கலிலே கிட்டி: [3] பேற்றில் முதல்படியான சர்வேஸ்வரனை விட்டுப் பேற்றில் எல்லை நிலமான அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலைப் பெறுதல், ஐம்புல இன்பங்களிலே உள்ள ஆசையினை நீக்கிப் பகவானைக் கிட்டுகையில் உண்டான அருமை போரும்; ஆதலின், '**அப்பனில் நண்ணி**' என்கிறார்.

1. "அன்றிக்கே" என்று தொடங்கும் இரண்டாவது சமாதானத் துக்குக் கருத்து 'அவர் அப்பனில்' என்று சொல்ல வந்தவர், தன்வச மறந்து பரவசப்பட்டு 'என்னப்பனில்' என்கிறார் என்பது.

2. "ரூப ஔதார்ய குணை: பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்". என்பது, ஸ்ரீராமா. அயோத். 3 : 29.

3. என்னப்பனில் தென்குருகூர் என்றால் போதியதாமே? "நண்ணி" என்பான் என்? என்ன, நண்ணுவதில் உண்டான அருமை தோன்றச் சொல்லியபடி என்று கொள்க. அந்த அருமை ஒரு திருஷ்டாந்த மூலமாக **விவரிக்கப்படுகிறது** 'பேற்றில் முதல்படியான' என்று தொடங்கி.

"இப்போதை இவருடைய தாஸ்யம் 'குணைர்தாஸ்யம் உபாகத:' என் கிறபடியே அத்தலையில் குண சேஷ்டிதங்களுக்குத் தோற்றுயிற்று. இவ ரையும் உட்படத் தோற்பிக்கிறதிறே இவ் வபதானம். இனி, ஆழ்வாரைப் போலே இளநெஞ் சல்லாமையாலே மீண்டாரித்தனை" என்பது அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வியாக்.

[1] அவற்றினிடையே குற்றங்களைக் காண்கையாலே ஐம்புலஇன்பங்களை விடலாம்; இங்கு அங்ஙன் ஒரு குற்றம் காண விரகு இல்லாமையாலே இது அதிலும் அரிது.

தென் குருகூர் நம்பி - [2] "நல்கி என்னை விடான் நம்பி நம்பியே" என்று ஆழ்வார் தமக்குக் குறிக்கோளாகப் பற்றின சர்வேஸ்வரனுடைய நிறைவினைப் போன்றது அன்று, இவர் பற்றின ஆழ்வாருடைய நிறைவு; பகவானைப் பற்றினால் அவனுக்கு எல்லை நிலமான ஆழ்வார் அளவும் வரவேண்டி இருக்கும்; ஆழ்வாரைப் பற்றினால் அதற்கு அப்பால் சென்று பற்றக்கூடிய ஓர் இடம் இல்லை; ஆதலின் [3] 'நம்பி' என்கிறார். **'ஆசாரியர்களை நம்பி என்னக் கற்பித்தவர் ஸ்ரீமதுரகவிகள்' என்று சீயர் அருளிச்செய்வர்.**

என்றக்கால் - மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றும் வேண்டியிருக்கும் சர்வேஸ்வரனைப் பற்றுவதற்கு; ஒரு சொல் மாத்திரமே அமையும் ஆழ்வாரைப் பற்றுதற்கு; ஆதலின், **'என்றக்கால்'**என்கிறார். இதனால் [4] நிறைவால் வந்த ஏற்றம் மாத்திரமே அன்று; சௌலப்யத்தாலும் ஏற்றம் உண்டு என்கை.

அண்ணிக்கும் - தித்திக்கும். சர்வேஸ்வரனை அநுபவித்தால் ஆழ்வார்க்குப் பிறக்கும் பேரானந்தம் எல்லாம் ஆழ்வார் திறத்திலே ஒருசொல் மாத்திரத்திலேயே தமக்குக் கிடைத்தது ஆதலின் **'என்றக்கால் அண்ணிக்கும்'** என்கிறார். அமுது

---

1. மேல் 'அருமை போரும்' என்றது, ஒப்புமையைத் தெரிவித்தபடி. அதனைக் காட்டிலும் இதற்கு ஆதிக்யம் தோற்ற வேறும் ஒரு பொருள் கூறப்படுகிறது 'அவற்றினிடையே' என்று தொடங்கி. "சப்தாதி விஷயங்களின் போக்யதையை அறுத்துத் தன் பக்கலிலே ஆக்கிக்கொள்ளும் பகவத் விஷயம். பகவத்விஷய போக்யதையிலே நின்றும் மீட்டுத் தன் பக்கலிலே ஆக்கிக்கொண்டது ஆழ்வார் வைலக்ஷண்யம்" என்பது, அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்வியாக்.

2. 'நல்கி' என்பது, திருவாய்மொழி, 1. 10 : 8.

3. "குறுங்குடி நம்பியைக்காட்டிலும் குருகூர் நம்பியை வியாவர்த்திக்கிறது. அவனுக்குப் பூர்த்தி ஞான சக்தியாதிகளாலே; இவர்க்குப் பூர்த்தி ஞான பக்தியாதிகளாலே; ஜகத்தைத் தனக்கு ஆக்கும்படியான குணங்கள் அவனது; அவன்தன்னைத் தனக்கு ஆக்கும்படியான குணங்கள் இவரது" என்பது அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வியாக்.

4. 'நிறைவால் வந்த ஏற்றம் மாத்திரமே யன்று' என்றது, "நம்பி" என்றதனை நோக்கி. முக்கரணங்களும் வேண்டியிராமல் வாயினால் சொன்ன அளவிலேயே பேறு சித்தித்தலின் 'சௌலப்யத்தாலும் ஏற்றம் உண்டு' என்கிறது.

ஊறும் - அமுது ஊற்று மாறாதே நிற்கும். [1] "பின்னர் இங்கு மீண்டு வருகிறான் இல்லை" என்கிறபடியே, அப் பேரானந்தம் ஆழ்வாருக்கு அவனுடைய திருவருளாலே என்றும் உள்ள தாகச் செல்லுமாறுபோலே, [2] தமக்கும் ஆழ்வார் திருவரு ளாலே என்றும் உள்ளதாகச் செல்லுகிறது என்றபடி.

[3] என் நாவுக்கே - 'இது பின்னை எங்களுக்கு இனிக்கிறது இல்லையே?' என்னில், முதல் அடியான பகவானுடைய கல் யாண குணங்களும்கூட இனியாது இருக்கிற உங்களுக்கு, அதன் எல்லை நிலத்திலே நிற்கிற எனக்கு இனிக்குமாறு போன்று இனிக்குமோ? என்றபடி. அன்றிக்கே, தொன்று தொட்டுப் பல காலமாக ஐம்புல இன்பங்களை ஆரத் துய்த்துப் போந்த என் நாவுக்கே 'திருக்குருகூர் நம்பி என்றக்கால்' இனிக்கிறது என்றுமாம்.

---

1. "பிரஹ்மலோகம் அபிஸம்பத்யதே, நசபுநராவர்த்ததே, நசபுநராவர்த்ததே"

என்பது, சாந்தோக்யம், 1. 15 : 1.

2. "நினைத்த நெஞ்சும் தித்தித்து, சொன்ன நாக்கும் தித்தித்து வாராநின்றது. உச்சாரணம் ஸக்ருத்தாய், சாரஸ்யம் சதாகாலமும் வர்த்தியா நின்றது. இனி, பகவத் விஷயத்தை நினைக்கைக்கு நெஞ்சும் இல்லை ; சொல்லு கைக்கு நாக்கும் இல்லை" என்பது அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வியாக்.

3. "என் நாவுக்கே" என்பதற்கு இரண்டு பொருள்: பாகவதர் களிடத்தில் தொண்டு பூண்டு ஒழுகுகின்ற என்னுடைய நாவிற்கு என்பது முதற்பொருளின் கருத்து. இரண்டாவது பொருள், பல காலமாகச் சிற்றின் பத்திலே ஈடுபட்டு அதிலே ரசித்துப் போந்த என்னுடைய நாவிற்கு இனிக் கிறபடியே என்று ஆச்சரியத்திலே நோக்கு.

"இந்த சாரஸ்யம் எங்களுக்குப் பிறக்கக் காண்கிறிலோமீ ! என்னில், என் நாவுக்கே - உங்களைப் போலே பகவத் விஷயமும் ரசித்து, ஆழ்வாரும் ரசிக்கும் நா அன்றே என்னது. அடியே பிடித்து ஆழ்வாருடைய சாரஸ் யத்திலே பழகின நா அன்றோ. அவர்தாம் 'என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்' என்றாற்போலே இவரும் 'என் நாவுக்கே' என்கிறார்" என்பது அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வியாக்.

2. நாவினுல் நவிற்றி இன்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்று அறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே.

பொருள் :—நாவினுல் - (பகவான் திறத்திலே உபகரித்தோரைத் துதிசெய்யக் கூடிய) நாக்காலே, நவிற்றி - (ஆழ்வாரைத்) துதித்து, இன்பம்-மேலான இன்பத்தை, எய்தினேன்-பெற்றேன் ; அவன் - அவ் ஆழ்வாருடைய, பொன் அடி - விரும்பத்தக்க திருவடிகளை, மேவினேன் - அடைந்தேன்; மெய்ம்மையே - இது சத்தியமேயாகும்; மற்று தேவு அறியேன்-வேறு ஒரு தெய்வத்தை அறியேன்; குருகூர் நம்பி-திருக்குருகூர்க்குத் தலைவரான ஆழ்வார் அருளிச்செய்த, பாவின்-திருவாய்மொழிப் பாசுரங்களை, இன் இசை-இனிய இசையோடு, பாடி - பாடிக்கொண்டு, திரிவன் - திரிந்து கொண்டிருப்பேன்.

[1] முதல் திருப்பாசுரத்தால் ஆழ்வார் என்றால் தமக்கு இனிக்கிறபடியை அருளிச்செய்தார்; இத் திருப்பாசுரத்தால் உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் அவர் திருப்பாசுரங்களேயாம் என்கிறார்.

மனத்தின் துணை இல்லாமலே ஒரு சொல்லைச் சொன்ன அளவிலே எல்லை இல்லாத இன்பம் வரக்கூடியதாக இருந்தால் அதனை மீண்டும் மீண்டும் கூறுதல் உலக வழக்கு ஆதலின், "குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும்" என்று மேலே கூறியதனையே அதில் உண்டான அன்பின் மிகுதியால்

1. "கீழ்ப்பாட்டிலே 'நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே' என்று ஆழ்வார் பக்கல் ஸ்மிருதி சாரஸ்யத்தையும் சங்கீர்த்தந சாரஸ்யத்தையும் சொல்லக் கேட்டவர்கள், நாட்டார் அடைய பகவத் விஷயத்தையே ஸ்மர்த்தவ்யமாகவும் ஸங்கீர்த்தநீயமாகவும் சொல்லாநிற்க, நீர் ஆழ்வாரை இவ் இரண்டுமாக அநுசந்திப்பான் என்? பகவத்விஷயத்திலேயும் அந்வயிக்கப் பார்த்தாலோ? என்ன, அதற்கு இப்பாட்டாலே உத்தரம் சொல்லுகிறார்.

தாம் தாம் பற்றின விஷயத்தை விட்டுப் புறம்பு சில போக வேண்டுவது அவ்விஷயம் இஹலோக சுக ஜனகம் அல்லவாயாதல், பரலோக சுகத்துக்குச் சாதனம் அன்றாயாதல், பற்றினவர்கள் இவ்விஷயத்தை ஒழிய வேறே ஒரு ஸ்வாமி உண்டாக நினைத்திருத்தல், காலக்ஷேபவிஷயமல்லாமையாதலே யாதல் அன்றே? அவற்றில் எனக்கு இஹலோக சுக ஜனகரும் ஆழ்வாரே; பரலோக சுகத்துக்குச் சாதனமும் ஆழ்வாரே; எனக்குச் சுவாமியும் ஆழ்வாரே; காலக்ஷேப விஷயமும் ஆழ்வாரே; ஆன பின்பு, பகவத் விஷயத்தில் அந்வயிக்க வேண்டுகிறது என்? என்கிறார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

மீண்டும் '**நாவினால் நவிற்றி இன்பம் எய்தினேன்**' என்கிறார். [1] '**நாவினால் நவிற்றி**' என்றதனால் மனத்தின் துணை இல்லை என்பது போதரும்.

[2] அன்றிக்கே, பகவான் திறத்திலே உபகாரம் செய்தவர்களைத் துதி செய்வதற்காகவே படைக்கப்பட்டது நாக்கு ஆகையாலே அந்த நாவினைக் கொண்டு அவர்களைத் துதி செய்தலாகிற அந்தக் காரியத்தைக் கொள்ளப் பெற்றேன் என்பார் '**நாவினால் நவிற்றி**' என்கிறார் என்னுதல். "கண் முன்னே துதிக்கத் தக்கவர்கள் ஆசாரியர்கள்" என்னக் கடவது அன்றோ.

[3] அன்றிக்கே, "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே அடைந்து" என்கிறபடியே, முக்கரணங்களாலும் இறைவனை அடைந்து ஆழ்வார் பெற்ற பேற்றினைச் சொல் அளவிலேயே நான் பெற்றேன் என்பார் '**நாவினால் நவிற்றி**' என்கிறார் என்னுதல்.

[4] அன்றிக்கே, பல காலமாக நரகத்திலேயே படைப்பும் நரகத்திலேயே அழிப்பும் ஆம்படி பாவங்களைச் செய்து போன

1. "நவிற்றி" என்ற அளவிலேயே நாக்கு என்பது, பொருள் ஆற்றலால் போதருவதாக இருக்க, "நாவினால்" என்று மிகைபடச் சொல்லுவான் என்? என்ன, அதற்கு நான்கு வகையாக விடை கூறப்படுகிறது "நாவினால் நவிற்றி" என்று தொடங்கி. முதற் பொருளுக்கு மனத்தின் துணை இல்லை என்பது கருத்து. "நாவினால் நவிற்றி" என்னும் இவ்விடத்தில்,

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

என்னும் திருக்குறளையும் அதன் விசேட வுரையையும் நினைத்தல் தகும்.

2. இரண்டாவது பொருளுக்கு உயர்விலே நோக்கு. இரண்டாவது பொருளுக்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'கண் முன்னே' என்று தொடங்கி.

ப்ரத்யக்ஷே குரவஃ ஸ்துத்யாஃ பரோக்ஷே மித்ர பாந்தவாஃ
கார்யாந்தே தாஸ ப்த்ருயாஃ ச ந கதாசந புத்ரகாஃ. என்பது, பிரமாணம்.

3. மூன்றாவது பொருளுக்கு இறைவனை அடைவதற்கு ஆழ்வார்க்கு முக்கரணங்களும் வேண்டியிருந்தது; ஆழ்வாரை இவர் அடைவதற்கு இவருக்கு ஒரு கரணமே போதியதாயிற்று என்பது கருத்து. "பகவத் விஷயத்தில் புறம்புள்ள இந்திரியங்களை மனசிலே யடக்கி, மனசைக் கொண்டு போய் சுபாஸ்ரயத்திலே வைத்து, பின்பு அநவரத பாவனை யுண்டாய், அது தானே போய்ச் சமாதி பர்யந்தமான விறே ஆனந்தம் சித்திப்பது. ஆழ்வார் தமக்கு 'அடியை யடைந்து உள்ளம் தேறி ஈறில் இன்பத்து இரு வெள்ளம் யான் மூழ்கினன்' என்று இத்தனை வேண்டிற்று" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

4. நன்காவது பொருளுக்கு இது காறும் தீயவைகளையே பேசிப் போந்த நாவினாலே இப்பொழுது நலம் தரும் சொல்லைப் பேசி உய்வு பெற்றேன் என்பது கருத்து.

என் நாவாலே நவிற்றி ஈறில் இன்பம் எய்தினேன் என்பார் '**நாவினல் நவிற்றி**' என்கிருர் என்னுதல்.

இதனல், "வீவில் இன்பம் மிக எல்லை நிகழ்ந்தனன் மேவி" என்கிறபடியே ஆழ்வார் பகவானிடத்தில் பெற்ற பேற்றினை நான் ஆழ்வார் விஷயத்திலே பெற்றேன்; ஆதலால், இறைவன் படைத்த படைப்பின் பயனைப் பெற்றவன் நான் ஒருவனுமே என்பதனைத் தெரிவித்தபடி.

[2] "தள்ளுகிறேன்" என்று பகவானும் கூட வெறுத்துத் தள்ளிய நிலையிலே அங்கீகரித்தார் ஆழ்வார்; அங்ஙனம் அங்கீகரித்த ஆழ்வாருடைய திருவடிகள் ஆதலின் அவை விரும்பத் தக்கன என்பார் [3] '**அவன் பொன்னடி**' என்கிருர். **அடிமேவினேன்** என்றதனுல் அந்தத் திருவடிகளையே உத்தேசியமாகப் பற்றினேன் என்பதனைத் தெரிவித்தபடி.

நன்று; [4] ஆழ்வார் செய்த உபகாரத்தை நோக்கி நீர் அவரைப் பற்றினீரேயாகிலும், பேற்றில் உம்முடைய உறுதிப்பாடு இருந்தபடி என்? என்ன, '**மெய்ம்மையே மேவினேன்**' என்கிருர். அதாவது, உதவியைச் செய்கின்றவர்கள் திறத்திலே நிற்கிற வரையில் ஒரு காரியம் குறிக்கோளாய், அது கிட்டினவாறே அதில் நின்றும் தோள் மாறும்படி அன்றிக்கே, இம்மை

---

1. "வீவில் இன்பம்" என்பது, திருவாய்மொழி, 4. 5 : 3.

2. தாநஹம் த்விஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு.
என்பது, ஸ்ரீகீதை, 16: 19.

3. "அவன் பொன்னடி மெய்ம்மையே மேவினேன்" என்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. ஸ்ரீமதுரகவிகள் பிராஹ்மணோத்தமராயிருந்தும் வேளாண் வருணத்திற் பிறந்த ஆழ்வாருடைய திருவடிகளையே இச் சரீரத்தோடிருக்கும் போதே உபாய உபேயமாகப் பற்றினேன் என்கிருர். பற்றுகின்றவர் அந்தணர், பற்றப்படுமவர் வேளாண் மரபினர், பற்றுவதும் விபவத்திலே. இதனுல், ஒரு சாரார் கூறும் கூற்றுப் பயன் இன்றி ஒழிதல் காண்க.

4. "அவன் பொன்னடி மேவினேன்" என்பதற்கு இருவகையாகப் பொருள் கூறப்படுகிறது. முதற் பொருளுக்கு, எவ்வகைப்பட்ட பலன்களும் எனக்கு ஆழ்வார் திருவடிகளேயாம் என்பது கருத்து. எனக்குப் பிராப்யமும் ஆழ்வார் திருவடிகளே, பிராபகமும் ஆழ்வார் திருவடிகளேயாம் என்பது இரண்டாவது பொருளுக்குக் கருத்து. பிராப்யம் - பேறு. பிராபகம்-பேற்றினை அடைதற்கு உரிய வழி. இவற்றுள் முதற் பொருள், 'ஆழ்வார் செய்த உபகாரத்தை நோக்கி' என்று தொடங்கிக் கூறப்படுகிறது. இரண்டாவது பொருள், மேல் 'அன்றிக்கே' என்று தொடங்கிக் கூறப்படுகிறது.

மறுமை இன்பங்கள் இரண்டும் ஆழ்வார் திருவடிகளேயாகப் பற்றினேன் என்றபடி.

[1]அன்றிக்கே, இங்கு இருந்த நாட்களில் அறியாதனவற்றை அறிவிப்பதிலே உபகாரகராகவும் பகவானைப் பெறுவதற்குப் புருஷகாரமாகவும், பரமபதத்தில் "எந்தப் பரமபதத்தில் சாத்தியர்கள் எனப்படும் தேவர்கள் இருக்கிறார்களோ" என்கிறபடியே பேறுகவும் ஆழ்வார் திருவடிகளையே பற்றினேன் என்பார், '**மெய்ம்மையே அவன் பொன்னடி மேவினேன்**' என்கிறார் என்னுதல். [2] "இவ் உலகத்திலும் பரமபதத்திலும் நாதமுனிகளுடைய திருவடிகள் எனக்குப் புகலிடம்" என்று **ஸ்ரீஆளவந்தார்** அருளிச்செய்ததும் இது நோக்கியேயாம். என்றது, அவர் அங்ஙனம் அருளிச்செய்ததற்கும் காரணம் இவரேயாவர் என்றபடி.

'**தேவு மற்று அறியேன்**' என்றதனால், அடையத்தக்க பொருளும் வேறு ஒன்று உண்டு என்று இரேன், அதனை அடைதற்குரிய வழியும் வேறு ஒன்று உண்டு என்று இரேன் என்கிறார். நன்று; [3]மேல் '**மெய்ம்மையே அவன் பொன்னடி மேவினேன்**' என்றாரே, அதற்குப் பயன் என்? எனின், 'மெய்ம்மையே' என்ற இடம் உடன்பாட்டாற் கூறியது; இங்கு எதிர்மறை முகத்தால் அருளிச்செய்கிறார், தம்முடைய

---

1. "ஆனால் இப்போதன்றோ இந்த இன்பத்தை விரும்பினீர், சரீர வியோக ஸமநந்தரம் பிறக்கும் ஆனந்த சித்திக்கு ஒரு சாதனத்தைப் பற்ற வேணும். அதற்குச் சாதனமாக லோக விக்ராந்த சரணங்களை ஆச்ரயிக்க வேண்டாவோ? என்ன, மேவினேன் அவன் பொன்னடி—அதுவாகில் அதற்கும் ஆழ்வார் தம்முடைய திருவடிகளையே உபாயமாகப் பற்றினேன். அவன் பொன்னடி—யாதொரு விஷயத்தை நாவினால் நவிற்றி இன்பம் எய்தினேன், அவனுடைய திருவடிகளை. பிராப்யமானது தானே பிராபகமும் ஆயிற்று. பொன்னடி=நான் தொட்டுப் பரிமாறினாலும் தோஷம் வாராத திருவடிகள்" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக். இங்கு நினைத்தல் தகும்.

2. இரண்டாவது பொருளுக்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'இவ் உலகத்திலும்' என்று தொடங்கி.

"நாதாய நாதமுநயே அத்ர பரத்ர சாபி
நித்யம் யதீய சரணௌ ஶரணம் மதீயம்"

என்பது தோத்திரரத்நம், 2.

3. மேலே "அவன் பொன்னடி மெய்ம்மையே மேவினேன்" என்பதற்குக் கூறப்பட்ட இருவகைப் பொருள்களில் இரண்டாவது பொருள், பிராப்ய பிராபகங்களாக இருக்க, இங்குத் "தேவு மற்று அறியேன்" என்பதற்கும் 'அடையத்தக்க பொருளும்' என்று தொடங்கி அந்தப் பிராப்ய பிராபகங்களையே பொருளாகக் கூறலாமோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகின்றது 'மேல் மெய்ம்மையே' என்று தொடங்கி.

உறுதி தோற்றுகைக்காக. அன்றிக்கே, [1] 'மற்று அறியேன்' என்று மற்றைப் புருஷார்த்தங்களைப் போன்று பகவானையும் கழிக்கிறார், [2]பேற்றிற்கு எல்லை நிலமான ஆழ்வார் திருவடிகள் அளவும் வந்தவர் ஆகையாலே என்னுதல். [3] சாஸ்திரங்களின் அறிவாலேயாதல், ஆசாரியனுடைய உபதேசத்தாலேயாதல் '**மற்று அறியேன்**' என்று சொல்லுகிறார் அல்லர்; உபகாரத்தைச் செய்த ஆழ்வார் திருவடிகளிலே நெஞ்சுபடிதலாலே சொல்லுகிறார்.

[4]ஆழ்வாரைப்பற்றின பின்னர் வேறு ஒருவரையும் பற்ற வேண்டாதபடி ஆழ்வாருடைய குணநிறைவு இருத்தலின் '**குருகூர் நம்பி**' என்கிறார். [5] 'நம்பி பா' என்றது, திருவாய்மொழியை. இவர் திருவாய்மொழியை விரும்புவதற்குக்

---

1. "அவன் பொன்னடி மேவினேன்" என்பதற்குக் கூறிய இருவகைப் பொருள்களில் 'எல்லாப் பலன்களும் எனக்கு ஆழ்வார் திருவடிகளேயாம்' என்று கூறிய முதற் பொருளுக்குத் தகுதியாக, "மற்று அறியேன்" என்பதற்கு, வேறும் ஒரு கருத்து கூறப்படுகிறது 'மற்று அறியேன்' என்று தொடங்கி.

2. அதற்குக் காரணம் கூறப்படுகிறது 'பேற்றிற்கு' என்று தொடங்கி. "ஆனால், 'என்னப்பன்' என்று பகவத் விஷயத்தை அநுசந்தித்தீரே? என்ன, அது ஆழ்வார் ஆதரித்த விஷயம் என்று ஆதரித்தேனித்தனை போக்கி தேவதா புத்தி பூர்வகமாகச் சொன்னேன் அன்று. 'ஸ்ரீராமபிரானைத் தவிர வேறொரு தெய்வத்தை அறியாதிருக்கை' என்கிறபடியே, அநந்ய தைவத்வத்தையுடைய பிராட்டி பெருமாளுக்கு எடுத்துக் கை நீட்ட, பெரிய பெருமாள் பாடு புகுமாறுபோலே" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக். இங்கு நினைத்தல் தகும்.

3. பிராப்யமும் பிராபகமும் எம்பெருமானே யாவன் என்று சாஸ்திரமும் சொல்லாநிற்க, ஆசாரிய உபதேசமும் அங்ஙனமேயாய் இருக்க, இவர் இப்படி அதனைக் கழிப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை 'சாஸ்திரங்களின்' என்று தொடங்கும் வாக்கியம்.

4. 'ஏற்கும் பெரும்புகழ் வானவரீசன் கண்ணன் தனக்கு, ஏற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச் சடகோபன்' என்கிறபடியே ஸ்துத்ய விஷயத்துக்குப் பரத்வ சௌலப்ய பூர்த்தி; ஸ்தோத்ரு விஷயத்துக்கு ஞான பக்தி பூர்த்தி" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக். இங்கு நினைத்தல் தகும்.

5. நீர் ஆழ்வாரை ஒழிய "தேவு மற்று அறியேன்" என்று இருக்கிறவராகில் முகில் வண்ணன் அடிமேல் சொன்ன சொல் மாலை ஆயிரமான திருவாய்மொழியைப் பாடித் திரிவான் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'நம்பிபா' என்றது முதல் 'திருவாய்மொழியில் இவர்க்கு ஆதரம்' என்றது முடிய.

காரணம் அது ஆழ்வார் திருவாயாலே அருளிச்செய்யப் பட்டதே யாதலின் **‘குருகூர் நம்பி பா’** என்கிறார். [1] “பரன் அடிமேல் குருகூர்ச் சடகோபன் சொல் நிரல் நிறை ஆயிரம்” என்பது ஆழ்வார் அருளிச் செயல். ஆக, ஆழ்வாரால் அருளிச் செய்யப்பட்டது என்னும் அவ் வழியாலே ஆயிற்றுத் திருவாய் மொழியில் இவர்க்கு ஆதரம்.

[2] **அன்றிக்கே, ‘குருகூர் நம்பி பா’** என்றதனால், **கண்ணி நுண்சிறுத்தாம்பு** என்னும் இந்நூலையே சொல்லுகிறார் என்று கோடலுமாம். யாங்ஙனம்? எனின், இந் நூலுள் சொல்லப் படுகின்றவர் ஆழ்வார் ஆகையாலே. முதற்பொருளுக்கு, நம்பியினாலே அருளிச்செய்யப்பட்ட பா என்று கோடல் வேண்டும்; இரண்டாவது பொருளில் நம்பி விஷயமாக அருளிச்செய்யப்பட்ட பா என்று கொள்க.

[3] பாவின் இன் இசை - பாக்களோடே கூடப் புணர்ப் புண்ட இனிய இசை. பாடித் திரிவன் - [4] இவருடைய போது போக்கு இருக்கிறபடி. அதாவது, ப்ரீதியினாலே தூண்டப்

---

1. ஆழ்வார் திருவாயாலே அருளிச்செய்யப்பெற்றதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது ‘பரனடிமேல்’ என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 1. 1 : 11.

2. “குருகூர் நம்பி பா” என்பதற்கு வேறும் ஒரு பொருள் கூறப்படு கிறது ‘அன்றிக்கே’ என்று தொடங்கி.

3. “பாவின் இன்னிசை பாடித் திரிவன்” என்பதற்கு நஞ்சீயர் வியாக்கி யானம் இங்குப் படித்து இன்புறல்தகும். அது இங்குத் தரப்படுகிறது:“பாவிலே பூண்ட இனிய இசை; ஐஶ்வர்யத்தை அல்பாஸ்திரம் என்று கழித்து, ஸ்திர மான ஆத்மப்பிராப்தியை அபுருஷார்த்தம் என்று கழித்து, ஸ்திரமுமாய்ப் பரம போக்யமுமான பகவத் பிராப்தியைப் பிராப்தியில் பிரதமாவதி என்று கழித்து, இதில் சரமாவதியான ஆழ்வாரையும் உத்தேஶ்யர் அல்லர் என்று கழித்து, அவரோடு சம்பந்தித்த விஷயத்தையும் ரஸாஶ்ரயம் அன்று என்று கழித்து, அத்தோடு சம்பந்தித்த இசையே எனக்கு உத்தேசியம் என்கிறார். ‘தெய்வத் தண்ணந்துழாய்த்தாராயினும் தழையாயினும் தண் கொம்பதாயினும் கீழ் வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே’ இத்யாதிப்படியே பகவத் சம்பந்தம் போகப் போக நிறம் பெறுகிறபடி”.

4. “பாடித் திரிவனே” என்பதற்கு இரண்டு கருத்து. ஒன்று, பாடு வதனைத் திரிவதற்குக் காரணமாக்கித் தாரகமாகக் கூறுவது; மற்றொன்று, பாடித் திரிவதனாலே யமன் முதலான விரோதிகள் கழிந்தபடி கூறுவது. இவ்விருவகைக் கருத்துக்களும் முறையே விவரிக்கப்படுகின்றன ‘இவரு டைய’ என்று தொடங்கியும், ‘நமன்தமர்’ என்று தொடங்கியும்.

பட்டவனைக் கொண்டு பாடி, இவ்வாறு பாடுதலே நான் தரித்திருப்பதற்குக் காரணமாக இருக்கத் திரிந்து கொண்டு இருப்பேன் என்கிறார் என்றபடி. அன்றிக்கே, [1]"நமன் தமர் தலைகள் மீதே நாவலிட்டு உழிதருகின்றோம்" என்னுமாறு போலே இதுவே தொழிலாகக் கொண்டிருக்கிற என்னுடைய செயலை விலக்க வல்லார் உளரோ? என்னுதல். என்றது, முன் செய்து போந்த புண்ணிய பாவங்களின் பலன்களை அநுபவிப்பிக்கும் யமனும் என்செயலை விலக்க ஒண்ணாது; புண்ணிய பாவங்களுக்கு அடியான ஐம்புல இன்பங்களாலும் என்செயலை விலக்க ஒண்ணாது என்றபடி.[2] (2)

3. திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரிய கோலத் திரு உருக் காண்பன் நான்
பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு ஆள்
உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே.

பொருள்:— திரிதந்தாகிலும் - [3](பகவானோடு ஒட்டு அற்றுத் திரியாநின்றேனேயாகிலும், தேவபிரானுடை - நித்திய சூரிகளுக்குத் தலைவனான சர்வேஸ்வரனுடைய, கரிய - நீல மேகம் போன்ற, கோலம் - அழகிய, திரு - திருமகள் சேர்ந்திருக்கின்ற, உரு - திருமேனியை, நான் - பகவானை விட்டிருந்த நான், காண்பன் - வணங்குவேன்; பெரிய வண் - மிக்க வள்ளன்மையையுடைய, குருகூர் நகர் - திருக் குருகூரில் எழுந்தருளியிருக்கின்ற, நம்பிக்கு - ஆழ்வார்க்கு, உரிய ஆளாய் - உரிய அடியவனாய், (இருந்து வைத்து) அடியேன் - நான், பெற்ற - அடைந்த, நன்மையே - நன்மை இது ஆகும்.

மேல் திருப் பாசுரத்தில் "தேவு மற்று அறியேன்" என்று மற்றைய புருஷார்த்தங்களைப் போன்று இறைவனையும் விலக்

1. திருமாலை, செய். 1.

2. "ஆகையாலே, சுகபூதரும் ஸாதனபூதரும் ஸ்வாமியும் காலக்ஷேப விஷயமும் எனக்கு ஆழ்வாரே என்று பகவத் விஷயத்தோடே அந்வயிக்கத் தேடினவர்களுக்கு உத்தரம் சொன்னாராய் நின்றார் இத் திருப்பாசுரத்தால்" என்பது, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. "திரிதந்தாகிலும் - திரியாநிற்கச்செய்தேயும், இங்ஙனே சஞ்சரியா நிற்கச்செய்தேயும்; 'மெய்ம்மையே தேவு மற்று அறியேன்' என்று பிரத்யயம் பண்ணலாம்படி பகவத் விஷயத்தோடு ஒட்டு அற்றுத் திரியாநிற்கச்செய்தேயும் இப் பேறு பெற்றேன்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

கிய நீவிர் இத் திருப் பாசுரத்தில் 'கரிய கோலம் திரு உருக் காண்பன்' என்னுதல் பொருந்துமோ? என்ன, [1]'எனக்குப் புருஷார்த்தம் அன்று என்னுமளவிலே ஆயிற்று நான் விலக்கியது; ஆழ்வார் உகந்த விஷயம் என்னும் இவ் வழியாலே தேவு மற்று அறியிலும் அறிவன் என்கிறார் இத் திருப் பாசுரத்தில். என்றது, [2] சூர்ப்பணகையைப் போன்று கிடந்தானைக் கண்டு ஏறுமதனையே நான் தவிர்த்துக் கொண்டது; "விட்டு சித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அதுகாண்டும்" என்று பெரியாழ்வார் முன்னாகப் பற்றும் ஆண்டாளைப் போன்று ஆழ்வார் முன்னாகப் பற்றும் பற்றினை நான் தவிர்ந்திலன் என்கிறார் என்றபடி.

---

1. மேல் திருப்பாசுரத்தில் "தேவு மற்று அறியேன்" என்றவர் இத் திருப்பாசுரத்தில் "தேவபிரானுடைக் கரிய கோலத் திருவுருக் காண்பன்" என்னுதல் பொருந்துமோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'எனக்கு' என்று தொடங்கி.

"இவர், 'தேவு மற்று அறியேன்' என்றார் கீழ்ப் பாட்டில்; இங்கு ஈஸ்வரன்தான் இவர் பக்கல் மண்டினபடியைச் சொல்லுகிறார். பகவத் விஷயப் பிரீணனமாக ஆசார்ய விஷயத்திலே பிரவணனாகக் கடவன். ஆசார்ய பிரீணனமாகப் பகவத் விஷயத்திலே பிரவணனாகக் கடவன். 'நான் ஞானிக்குப் பிரியன், அவனும் எனக்குப் பிரியன்' என்கிறபடியே ஒருவர்க்கு ஒருவர் பிரிய விஷயமா யிருக்குமிறே. ஒருவனை ஒருவன் உகந்தானாவது, அவன் உகந்தாரையும் உகக்கையாயிற்று.

இவர் கீழ், 'தேவு மற்றுஅறியேன்' என்று நம்மையும் மறந்து ஆழ்வார் பக்கலிலே பிரவணர் ஆனரே; எல்லாம் கூட நம்மை அறிவித்தவர் என்றிறே ஆழ்வார் பக்கல் இவர்க்கு ஆதரம்; இப்படி நம்மை உகந்தாருக்கு இவர் பிரீதராமிடத்தில் 'என் பக்தனிடத்தில் பக்தி உள்ளவர்களிடத்தில் எனக்கு மிக்க அன்பு உண்டு' (பாரதம் ஆச்வ. 116 : 23.) அன்றோ. ஆகையாலே, நாம் கொடுக்கும் பரிசில் யாது என்று பார்த்து, ஆழ்வார் பக்கல் பக்தி பூர்ணமான இவர் திருவுள்ளத்திலே நீர் வெள்ளத்திலே நெய்தல் பாரித்தாற் போலே, தன்னுடைய வடிவைக் கொடுவந்து பாரிக்க, இதனைக் கண்டு பிரீதரான இவர், இதற்கு நிமித்தம் என்? என்று ஆராய்ந்து பார்த்து, அது பகவத் சேஷத்வ ஞானத்தாலும் வந்ததன்று; பாகவத சேஷத்வ மாத்திரத்தாலும் வந்ததன்று; பகவத் ஆஸ்ரயணத்தாலும் வந்ததன்று; எல்லாம் கூட நான் ஆழ்வார்க்கு அநந்யார்ஹ சேஷ பூதனாய்ப் பெற்ற பேறிறே இது என்று ஸ்வகதமாகப் பிரீதராகிறார்" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக். இங்கு உளம்கொளத் தகும்.

2. அது ஒரு திருஷ்டாந்த மூலம் விவரிக்கப்படுகிறது 'சூர்ப்பணகை' என்று தொடங்கி. என்றது, வழியல்லாத வழியில் செல்லுதலையே தவிர்ந்தேன் என்றபடி. "விட்டு சித்தர்" என்பது, நாய்ச்சியார் திருமொழி, 10 : 10.

[1] "எந்தத் தருமம் மிகச் சிறந்த தருமம் என்று தேவரீர் நினைக்கிறீர்" என்று கேட்க, [2] "தாமரைக்கண்ணன் ஆகிற எம் பெருமானை மனம் மொழி மெய்களால் வணங்குதலாகிய இது ஒன்றே எல்லாத் தருமங்களிலும் மிகச் சிறந்த தருமம் என்பது என் நினைவு" என்று ஸ்ரீ வீடுமன் கூற, கேட்ட தருமபுத்திரன் அதனையே கடைப் பிடித்து ஒழுகினான்.

வடகிழக்குத் திசை மூலைக்கு உரிய சிவனும் வணங்கத் தக்கவனே என்று உடையவர் அருளிச்செய்தாராகில் எனக்கும் அதுவாம் அத்தனை என்றார் **திரிபுராதேவியார்.**

[3] குணமலைப்பாடியுடையான் காங்கேயன் தெற்கே சென்று தன் சேனையைப் பாடிவீடு செய்திருந்த போது, **பிள்ளையாத்தான்** அங்கே அவனுக்குக் குறைவற வேண்டிய பச்சை சமைக்க, அதனைக் கண்டு இன்புற்ற அவன் 'உமக்கு வேண்டுவது என்?' என்ன, இவர் 'உம்மால் பண்டே உபகாரம் கொண்டோம் காணும்' என்ன, அவன் 'ஆவது என்? என்னை அறியாதே வருவது ஓர் உபகாரம் உண்டோ?' என்ன, 'எங்கள் ஆசாரியர் 'நான் கோயிலிலே ஒரு வீடு பெற்றது அவ் வேளாளனாலே' என்று அருளிச்செய்யக் கேட்டிருந்தோம்; எம் ஆசாரியருக்குச் செய்த இந்த உபகாரத்துக்கு மேற்பட்டது ஓர் உபகாரம் உண்டோ நமக்கு?' என்றார்.

உடையவர், சோழன் கிருமிகண்டன் காரணமாக வெள்ளை சாத்திக் கொண்டு மேல் நாட்டுக்கு எழுந்தருளின காலத்தில் 'அவர் திருவடிகளில் சம்பந்த முடையாரைப் பெருமாளைத் திருவடி தொழ வேண்டா' என்று அரசனுடைய ஏவலாளர் விலக்க, அப்பொழுது திருவடி தொழுவதற்குச் சென்றவர்களில் ஒருவரான ஆழ்வானைப் பார்த்து 'நீர் ஒருவர்க்கும் விரோதி அல்லீர்; நீர் சென்று திருவடி தொழலாம்' என்று கூற,

---

1. ஆழ்வார் உகந்த விஷயம் என்று எம்பெருமானை இவர்தாம் விரும்பும் தன்மைக்கு நான்கு திருஷ்டாந்தங்கள் காட்டப்படுகின்றன 'எந்தத் தருமம்' என்று தொடங்கி. 'எந்தத் தருமம்' என்று தொடங்கும் வாக்கியப் பொருள் அமைந்த சுலோகத்தை மேலே பக். 7. காண்க.

2. 'தாமரைக் கண்ணனாகிற' என்று தொடங்கும் வாக்கியப் பொருள் அமைந்த சுலோகத்தையும் மேலே பக். 7. காண்க.

3. 'குணமலைப் பாடி' என்பது, ஓர் ஊர். 'காங்கேயன்' என்பது ஒரு வேளாளனுக்குப் பெயர். பாடி வீடு செய்தல் - சேனையோடு சென்று பாசறையில் தங்குதல். பிள்ளையாத்தான் - ஒரு வைணவர். வீடு பெற்றது - ஓர் இல்லத்தைப் பெற்றது. இவ் ஐதிஹ்யத்தால் ஆசாரியனுக்கு அபிமதனாயிருப்பவன் தமக்கும் அபிமதன் என்று தோற்றுகிறது.

[1] '**ஆத்மகுணம் மோக்ஷத்திற்குக் காரணம்** என்றிருந்தோம், **அது பந்தத்திற்குக் காரணமான பின்பு எம்பெருமானர் திருவடிகளில் சம்பந்தத்தை அறுத்துக் கொள்ளவோ?**' என்று இறைவனைத் திருவடி தொழாதே மீண்டு போந்தார்.

திரிதருதல் - மீளுதல். மீளுதலாவது, [2] போன வழி எல்லாவற்றினின்றும் திரும்புதல். போன வழி எல்லாவற்றினின்றும் திரும்புதலாவது, திருவாய்மொழிப் பாவை விட்டு, அதன் இசைகளை விட்டு, ஆழ்வாரை விட்டு, அவர் உகந்த விஷயம் என்று எம்பெருமானுகிற முதற் படிக்கு வருதல்.

[3] '**தேவபிரான்**' என்றதனுல் நித்திய சூரிகளுக்குத் தன்னை முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுத்துக் கொண்டிருக்கும் உபகாரகன் என்பதனைத் தெரிவித்தபடி. 'தேவபிரானுடைக் **கரிய** [4] **கோலம் திரு உரு**' என்றதனுல் நித்தியசூரிகளுக்குப் படி விடும் வடிவு காளமேகம் போன்று கரியதாய் அழகுதான்

1. 'ஆத்ம குணம்' என்றது, சமம் தமம் என்னும் குணங்களை. "ஆத்ம குணங்களில் பிரதானம் சமமும் தமமும்", "இவை இரண்டும் உண்டானுல் ஆசாரியன் கை புகுரும்; ஆசாரியன் கை புகுந்தவாறே திருமந்திரம் கை புகுரும்; திருமந்திரம் கை புகுந்தவாறே ஈஸ்வரன் கை புகுரும்; ஈஸ்வரன் கை புகுந்தவாறே 'வைகுந்த மா நகர் மற்றது கையதுவே' என்கிறபடியே பிராப்ய பூமி கை புகுரும்" என்னும் ஸ்ரீ சூக்திகள் இங்கு நினைத்தல் தகும். ஸ்ரீ வசனபூஷணம் பிரதம பிரகரணம், சூத். 96, 97.

2. 'போன வழி எல்லாம்' என்றது, "குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும்" என்றும், "குருகூர் நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே" என்றும் மேலே போந்தனவற்றைக் குறித்தபடி.

3. "இவர் திருவுள்ளத்தில் ஈஸ்வரன் கொடுவந்து பாரித்துக் காட்டின வடிவு நித்திய சூரிகளுக்குப் படி விடும் வடிவாயிற்று. அவர்களையும் இவரையும் பார்த்தால், அவர்கள் நமக்கே நல்லவர்கள்; இவர் ஆழ்வார்க்கே நல்லர்; இவருக்கன்றே இவ்வடிவை நாம் பிரகாசிப்பிப்பது என்று இவருக்குக் கொடுவந்து அநுபவிப்பித்தான்" என்பது, அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக்.

4. "கோலம் - ஆனைக்கு உதவ வந்தாப்போலே இருந்தபடியே வருகை அன்றிக்கே, இங்கு அநுபாவ்யனுய் வருகிறவனுகையாலே சாத்தின திரு ஆபரணமும் தானுமாயாயிற்று வந்தது. அபிமத விஷயத்தின் பாடு போவார் ஆபரணம் பூண்டிறே போவது. திருவுரு - கழற்ற ஒண்ணுதிருப்பதோர் ஆபரணத்தையும் கொண்டு வந்தார். அவ் இருண்ட வடிவுக்கு மின் போலே பிரகாசிகையாய் இருக்குமவளாயிற்று; இவளைக் கண்டாலாயிற்று அவ் வடிவையும் காணலாவது. 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்கிறபடியே சொரூபத்தாலே சொரூபத்துக்குப் பிரகாசிகையாயிருக்கும். விக்கிரஹத்தாலே விக்கிரஹத்துக்குப் பிரகாசிகையாய் இருக்கும் அவள்தான்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக்.

ஒரு வடிவு கொண்டாற் போலே இருப்பது என்பதனைத் தெரிவித்தபடி. '**தேவபிரானுடைக் கரிய கோலம் திரு உருக்** [1] **காண்பன்**' என்றதனால், குருகூர் நம்பி பாவின் இன் இசைப் பாடித் திரிந்து கொண்டிருக்கிற நிலை குலைந்து, பகவானிடத்தில் ஈடுபடும் போதும் பகவத் விஷயத்துக்கு மேல் எல்லையான நித்திய சூரிகள் அநுபவிக்கும் திரு உருவத்தையே காண்பேன் என்பதனைத் தெரிவித்தபடி. இதனால், கண்டு அநுபவிக்கும் ஆழ்வாரை விட்டால் தாம் காண்பது பரமபத நிலையனை என்பதனைத் தெரிவித்தவாறு.

நன்று; தேவபிரானுடைத் திரு உரு கரிய கோலம் என்பதனை இவர் அறிந்து கூறியவாறு யாங்ஙனம்? எனின், [2] "கோலமே! தாமரைக் கண்ணது ஓர் அஞ்சன நீலமே!" என்று ஆழ்வார் வாய்புலற்றக் கேட்டிருக்குமவராகையாலே '**கரிய கோலம் திரு உரு**' என்கிறார். '**கரிய கோலம்**' என்று, விரும்பும்படி ஆழ்வார் வருணிக்கக் கேட்டிருக்கையாலே, [3] பரமயோகிகள் யோகம் கைபுகுந்தால் ஊர்வசியை வருணிப்பது போன்று இவரும் வருணிக்கிறார். [4]மேலே "தேவு மற்று அறியேன்" என்று பகவானை விலக்கி இருந்த தன்மை தோற்றுகிறது '**நான்**' என்ற சொல்லில்.

---

1. "காண்பன் - இவ் வடிவைச் சிரவணமாத்திரத்தாலேயாதல், மனன மாத்திரத்தாலே யாதல், நிதித்யாச மாத்திரத்தாலேயாதல் அன்றிக்கே, பிரத்யக்ஷசமாநாகாரமாம்படி அநுபவிக்கப்பெற்றேன். அவை வேண்டுவது இவன் காண ஆசைப்படும் போதிறே. இங்கு அப்படி யன்றிக்கே அவன் தானே ஆதரித்து மேல்விழுகையாலே எனக்குக் கண்ணாலே காணுமாபோலே காணலாயிற்று. பிராட்டிக்கு நித்தியாநுபாவ்யமாய்ச் சூரிகளுக்குச் சதாதர்சநீயமுமான விக்கிரஹத்தைக்கிடீர் விமுகனான நான் கண்டு அநுபவிக்கப் பெற்றேன்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. "கோலமே" என்பது, திருவாய்மொழி, 3. 8 .8.

3. பகவானிடத்தில் ஈடுபாடு இன்றிக்கே இருக்கிற இவர் அவன் திருமேனியை இப்படி வருணிப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'பரமயோகிகள்' என்று தொடங்கி. என்றது, யோகிகள் விரக்தராயிருக்கச் செய்தேயும் சிருங்காரத்துக்காக வருணிப்பதுபோன்று இவரும் விருப்பமின்றியே வருணிக்கிறார் என்றபடி.

4. "காண்பன்" என்ற அளவிலேயே "நான்" என்பது பொருளாற்றலால் தானே போதருமாதலின் "நான்" என்று மிகைபடக் கூறியது எற்றிற்கு? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'மேலே' என்று தொடங்கி. "நான் காண்பன் - 'தேவு மற்று அறியேன்' என்று காணுமைக்குக் கண்களைத் திரிய வைத்த நான் கிடீர் கண்டேன்" என்ற அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வியாக். இங்குக் காணல் தகும்.

[1] சர்வேஸ்வரனுடைய பேரருளும் வள்ளன்மையும் பயன் பெருத காலத்திலே தம்முடைய வாசி அறிவித்த வள்ளல் ஆதலின் [2] '**பெரிய வண் நம்பி**' என்கிருர். 'குருகூர் நகர்' என்றதனுல் 'வைகுந்த மா நகரை' வேறுபடுத்துகிருர். '**நம் பிக்கு**' என்றதனுல் [3] ஆழ்வாருடைய குணநிறைவினைக் கூறு கிருர். அதாவது, நான் ஒன்றைப் பற்றினேன், ஒன்றைவிட் டேன் என்று சொல்லத் தக்கதாக இல்லை; ஆழ்வாரை அநுப விக்கும் அநுபவத்தில் பகவத் அநுபவமும் அடங்கியதாக இருக் கிறது என்பதனைத் தெரிவித்தபடி.

[4] ஆழ்வார் "வைகுந்த மா நகர்" என்பது, "அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்பதாய்ப் படுவனவெல்லாம், இவரும் 'திரு நகரி' என்றும் 'ஆழ்வார்' என்றும் படுகிருர். என்றது, ஆழ்வார்க்கு அப் பெயர்களைச் சொல்லும் போது உண்டா கும் நிலைகள் எல்லாம் இவர்க்கும் இப் பெயர்களைச் சொல் லும்போது உண்டாகிறது என்றபடி.

---

1. "நான் ஆழ்வார்க்கு அநந்யார்ஹசேஷ பூதனுய்ப் பெற்ற பேறு என்! என்கிருர் மேல்: இப் பேறு என்னுலும் வந்ததன்று, பிறராலும் வந்த தன்று; அவன்தன்னுலும் வந்ததன்று, ஆழ்வார் அடியாக வந்தது என்கிருர்." என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக். இங்குக் காணல் தகும்.

2. "பெரிய, வண்" என்ற இரண்டு சொற்களையும் குருகூருக்கு அடை மொழியாக்குவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர். "வண்குருகூர்- வண்மையையுடைத்தான திருநகரி. ஆழ்வார் என்னைத் தந்தாற் போலே ஆழ்வார் தம்மைத் தந்த திருநகரி. ஸர்வகாமதுக்கான தேசம். பெரிய குருகூர்- பரமபதம் ஒரு சிறுங்கை என்னும்படி உபய விபூதியும் ஒதுங்கலாம்படி பெருமையையுடைத்தான ஊர். அன்றிக்கே 'புவியும் இரு விசும்பும் நின்னகத்த; நீ என் செவியின் வழி புகுந்து என் உள்ளாய்' என்கிறபடியே விபூதிமானையும் விபூதியையும் தமக்குள்ளே அடக்கியிருக்கிற ஆழ்வாரைத் தனக்குள்ளே அடக்கும்படியான பெரிய தேசம் என்னுதல்" என வருதல் காண்க.

3. "வேறு பகவத் விஷயம் தேடிப் போகவேண்டியோ ஆழ்வாருடைய பூர்த்தி இருப்பது. அந்த சர்வரக்ஷகனுனவனுக்கும் ஆளாகாத என்னையும் ரக்ஷித்து ஆள்ஆக்கிக்கொண்ட பூர்த்தி அன்ருே ஆழ்வாரது" என்பது, அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக்.

4. அன்பின் பெருக்காலே ஆழ்வாரையும் திருநகரியையும் வருணிப் பதற்குத் திருஷ்டாந்தமுகமாக ஒரு கருத்துக் கூறப்படுகிறது 'ஆழ்வார்' என்று தொடங்கி.

'ஆள் உரியனாய்' என்றதனால், [1] உரிய அடியார்க்குத் தத்தமக்கு என்று ஒரு விருப்பு வெறுப்புக்கள் இன்றியே தலைவன் உகந்ததையே பற்றி, அவன் கைவிட்ட விடத்தே விட்டிருக்குமதுவே சொரூபம் என்பதனைத் தெரிவித்தபடி. [2] "தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்று ஆர்த்தும்" என்னும் ஆழ்வாருடைய நீர்மைக்குத் தோற்று **'அடியேன்'** என்கிறார்.

பெற்ற நன்மை - பெற்ற இலாபம். அதாவது, பகவானைப் பற்றுதலாகிற இலாபம். என்றது, [3] அடையத் தக்கது, அடையத் தகாதது என்று அறியும் அறிவின் தன்மையால் கிடைத்த நன்மை அன்று இது; ஆழ்வாருக்கு உரிய அடியவனாக இருத்தலாலே பெற்ற நன்மை இது என்றபடி. (3)

---

1. "ஆள் உரியனாய்" என்று விசேடித்ததற்குப் பயன் கூறுவதற்காக, உரிய அடியாருடைய தன்மை கூறப்படுகிறது 'உரிய அடியார்க்கு' என்று தொடங்கி. இவ் வாக்கியத்தால் "ஆள் உரியனாய்" என்று விசேடித்ததன் பயன் தெரிவித்தபடி. "ஆள் உரியனாய் - ஆளாகப் பிராப்தனாய்; பகவத் சேஷத்வத்திற்கு ஆள் அற்று இருக்க, ஆழ்வாருக்குச் சேஷபூதராகை பெரும் பேறு இறே. அன்றிக்கே, உரிய அடியனாய், 'தேவுமற்றறியேன்' என்னும்படி சர்வ சேஷிபாடும் போகாதபடி ஆழ்வார்க்கு அநந்யார்ஹனாய் என்னுதல்" என்ற அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வியாக். இங்கு நினைத்தல் தகும்.

2. மேலே "நான்" என்றவர் இங்கு "அடியேன்" என்பான் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது "தொண்டீர்" என்று தொடங்கி. 'தொண்டீர்' என்பது, திருவாய்மொழி, 5. 2 : 2.

3. "நன்மையே" என்றதிலே உள்ள ஏகாரம் ஈடுபாட்டிலே நோக்கு. அந்த ஈடுபாடு விவரிக்கப்படுகிறது 'அடையத்தக்கது' என்று தொடங்கி. "பெற்ற நன்மையே-ஆழ்வார் தமக்கு இனிப் பெறவேண்டும் நன்மை உண்டேயாகிலும் நமக்கு இனிப் பெறவேண்டும் நன்மை ஒன்றும் இல்லை. ஆழ்வார் தமக்கு 'அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ' என்றும், 'மல்கு நீலச் சுடர் தழைப்ப' என்று தொடங்கி 'என் திருமார்வனை வந்து எய்துமாறு அறியேன்' என்றும் மநோரதம் நடவாநிற்க, இன்று நான் இப்பேறு பெறும்படியானபடி என்! அவனுக்குச் சேஷபூதராய் இருந்து வைத்தே அவர் அலமராநிற்க, நான் ஆழ்வார் தமக்கே சேஷபூதராய் இருந்து வைத்து இந் நன்மையைப் பெறுவதே! வைஷ்ணவ சம்ச்ரயரானால் 'ப்ரயாஸ்யந்தி' என்று போய்ப் பெறவேண்டாதே, இருந்த இடத்திலே வந்து திருக் குதிப்பதே! 'எத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சார்த்தியிருப்பார் தவம்' என்ற வார்த்தை என்னளவிலே பலித்தது என்று ஸ்வ அநுசந்தானத்தாலே ஸந்துஷ்டராகிறார்" என்ற அழகியமணவாளப் பெருமாள் நாயனார் வியாக். இங்கு அறிதல் தகும்.

4. நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவர் ஆதலில்
அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே.

பொருள் :— நன்மையால் - (அபகாரத்தைச் செய்தவர்களுக்கும் உபகாரத்தையே செய்தலாகிற) நன்மையாலே, மிக்க - மேன்மை உற்ற, நான்மறையாளர்கள் - நான்கு வேதங்களையும் கற்றுத் துறைபோய பெரியோர்கள், புன்மையாக - புன்மையே ஒரு வடிவு எடுத்தது போன்றதாக, கருதுவர் - அடியேனை நினைப்பர்கள்; ஆதலில் - அங்ஙனம் அவர்கள் நினைக்குமதுவே காரணமாக, அன்னையாய் - தாயாகவும், அத்தனாய் - தந்தையாகவும், என்னை - அடியேனை, ஆண்டிடும் தன்மையான் - அடிமைகொண்ட தன்மையினரான, சடகோபன் - நம்மாழ்வார், என் நம்பி - (என் குறையைத் தீர்க்க வல்ல) நிறைவினையுடையவர் ஆவர்.

[1] முதல் திருப்பாசுரத்தில் "என் அப்பனில் நண்ணி" என்றும், இரண்டாம் திருப்பாசுரத்தில் "தேவு மற்று அறியேன்"

---

1. மேல் திருப்பாசுரங்களுக்கும் இதற்கும் இயைபு கூறப்படுகிறது 'முதல் திருப்பாசுரத்தில்' என்று தொடங்கி.

'என் தண்மை பாராதே என்னை அங்கீகரித்த ஆழ்வாரே' என்றது, 'அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்' என்றதனை நோக்கி.

"'தேவுமற்றறியேன்,' 'பெரிய வண்குருகூர் நகர் நம்பிக்கு ஆள் உரியனாய் அடியேன் பெற்ற நன்மை' என்று இவர் சொல்லக் கேட்டவர்கள் 'ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதாச மாதவ', 'பிதாஅஹம் அஸ்ய ஜகதோ மாதா,' 'உலகுக்கோர் முந்தைத் தாய் தந்தையே' என்கிறபடியே ரிஷிகளும் ஆழ்வார்களும் அவன் தானும் ஏக கண்டமாகச் சர்வலோகங்களுக்கும் மாதா பிதாவாகச் சர்வேஶ்வரனைச் சொல்லாநிற்க, நீரும் அந்த லோகத்திலே ஒருவராக இருக்க, இப்படிப் பந்துவானவனை ஆஶ்ரயித்தல், அதுவுமன்றிக்கே, 'வாஸுதேவஃ ஸர்வமிதி ஸமஹாத்மா', 'பெருமக்கள்', 'சிறுமாமனிசர்' என்று கட்டுண்ணப் பண்ணிய பெருமாயனும் ஆழ்வார் தாமும் கொண்டாடும்படியான விலக்ஷண வர்க்கத்திலே சிலரை ஆஶ்ரயித்தல் செய்யாதே, ஆழ்வாரையே நீர் ஆஶ்ரயிக்கைக்கு ஆழ்வார் உமக்குச் செய்த உபகாரம் யாது? என்ன, என் தோஷாதிசயத்தாலே அந்தப் பரம சாத்விகரும் என்னை நெகிழ, அதுவே பற்றாசாக எனக்கு முகம் தந்து மாதா பிதாவும் தாமேயாய் என்னை அடிமை கொண்டு போந்த ஸ்வபாவம் ஆழ்வார்க்குள்ள தொன்றாகையாலே அவரே அன்றோ எனக்குப் பூர்ணரான உபகாரகர் என்று இப்பாட்டிலே அவர்களுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார். ஆழ்வாருடைய பூர்த்தியை உபபாதித்தபடி" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

என்றும் எம்பெருமானைத் தள்ளி விலக்கிய நீர் ஆழ்வார் உகந்தார் என்னுமதனாலே "கரிய கோலத் திரு உருக் காண்பன்" என்று அவ் எம்பெருமானை விரும்புதல் கூடுமோ? என்ன, என் தண்மை பாராதே என்னை அங்கீகரித்த ஆழ்வாரே எனக்குத் தலைவர்; அத்தகைய அவர் உகந்த எம்பெருமானை நான் உகவாதொழிதல் அறன் அன்று; ஆதலால், அவர் உகந்த "கரிய கோலத் திரு உருவினைக் காண்பன்" என்றேன்; என்ன, நன்று; உம்முடைய தண்மை யாது? அத்தண்மையைப் பாராதே அவர் அங்கீகரித்தபடி என்? என்ன, அதனைப் பேசுகிறார் இத் திருப்பாட்டில்.

ஆத்ம குணங்கள் மிக்கிருப்பாராய்ச் சம்சாரிகளால் பற்றத் தக்கவர்களாய் இருப்பார்களில் [1] ஆழ்வாரை ஒழிந்தார் அனைவரும் 'இவன் பொருள் அல்லாதவன்' என்று கைவிடும்படி இருக்கிற தம் தன்மைகளைக் கூறுகிறார் முதல் இரண்டு அடிகளால்.

[2]ஈண்டு '**நன்மை**' என்றது, குற்றங்களும் குணங்களும் ஒருவனிடத்தில் இருக்குமேயானால் குற்றங்களை நீக்கிக் குணங்களை மட்டும் எடுத்துக்கொள்ளும் குணத்தை. அந்த '**நன்மையில்**

---

1. புன்மையாகக் கருதுகிறவர்களில் ஆழ்வாரையும்சேர்ப்பின், பின்னே 'என்னை ஆண்டிடும் தன்மையான்' என்பது பொருந்தாமையின் 'ஆழ்வாரை ஒழிந்தார் அனைவரும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

2. "நன்மையால் மிக்க" என்றது விவரணம் செய்யப்படுகிறது 'ஈண்டு' என்று தொடங்கி.

குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

என்பது, திருக்குறள்.

"ததீயரை 'நலத்தால் மிக்கார்' என்று ஆழ்வார் அருளிச்செய்யக் கேட்டிருக்கையாலே தாமும் 'நன்மையால் மிக்க' என்கிறார். தீமை போன வளவாதல், நன்மை உண்டான வளவாதல் அன்றிக்கே, நன்மையால் அதிசயித்தவர்கள். ஒருவனுக்கு நன்மை கலவாத பொல்லாங்காவது, 'மநஸாநிஷ்டசிந்தநம்' என்றும், 'கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து' என்றும், 'சினத்தினாற் செற்றம் நோக்கி, வாளா தீவிளி விளிவன்' என்றும் சொல்லுகிறபடியே, நிர் நிபந்தனமாகப் பகவத்விபூதிபூதரோடே சீறுபாறு என்றுபோருகை. நன்மையாவது, அவர்கள் பக்கல் அபகார விபரீதனுகையும், தன் பக்கலிலே நிர்நிபந்தனமாக அபகாரபரர் அளவில் உபேக்ஷித்திருக்கையும். நன்மையால் மிகுகையாவது, 'தனக்கு அபகாரத்தைச் செய்தவர்களிடத்திலும் நல்லவன் எப்பொழுதும் நல்லவனாகவே இருக்கிறான்' என்கிறபடியே அந்த அபகாரபரர் அளவிலும் உபகாரகனாய்ப் போருகை. அதாகிறது, அவர்கள் அளவில் குறை காணா தொழிகையிறே" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

மிருதி'யாவது, குணம் என்று பேரிடலாவது ஒன்றும் இன்றிக்கே குற்றங்களே நிறைந்திருந்தால் அந்தக் குற்றங்களே பற்றாசாக அவனைக் கைக்கொள்ளுதல். [1]**'நான்மறையாளர்கள்'** என்றது, அதற்கு அடியாக நன்மையையே கூறிச்செல்லுகிற வேதங்களிலே உட்புகுந்திருக்குமவர்களை. நான்கு வகைப்பட்ட வேதங்கட்கும் வியாசபதம் செலுத்த வல்லவர்கள் என்றபடி. அவர்கள் ஆவார்: [2] **ஸ்ரீ ஜனகராஜன் திருமகளும்,** [3] **கூரத்தாழ்வானும்.** ஆக, இதனால், வேதாந்தங்களின் கருத்துக் கை

---

1. "இவர்களுக்கு இவ் ஆத்மகுணம் உண்டாகைக்கு ஊற்றுவாய் வேத சம்பந்தமாயிற்று. 'ஆயிரம் தாய் தந்தையர்களைக் காட்டிலும் அன்பை யுடையது சாஸ்திரம்' என்றும், 'நலங்களாய நற்கலைகள்' என்றும் குற்றம் செய்தாரை எவ்வளவிலும் கைவிடமாட்டாத இத்தோட்டை சம்பந்தமாயிற்று இதற்கு அடி. இக் கலைகளைக் கல்லாதவர்களிறே இந் நன்மை பெறாதவர்கள். 'கற்றிலேன் கலைகள்-பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை' என்கிறபடியே, இது கல்லாதவர்கள் ஆகையாலே லங்காவாசிகளான ராக்ஷசர்கள் ரிபூணுமபிவத்ஸலரான பெருமாளோடே வெறுப்புக் கொண்டது. 'கல்லாதவர் இலங்கை'யிறே" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்யானம்.

2. "ஏகாக்ஷி ஏககர்ணி தொடக்கமான ராக்ஷஸி வர்க்கம் ஓவாமல் இருந்து தர்ஜந பர்த்ஸநாதிகளைப் பண்ணியிருக்கச்செய்தேயும் இவர்களை நலியவேணும் என்ற திருவடியோடே மறுதலைத்து 'கார்யம் கருணம் ஆர்யேண' என்றாற் போலே ஐந்திர வியாகரண பண்டிதனான நீ பின்னையும் உன் ஜன்மம் விடாமல் வார்த்தை சொன்னாயே; இவர்கள் கண்ணநீர் கண்டால் கற்றவனால் கருணை பண்ணவன்றோ அடுப்பது. நாட்டில் குற்றம் செய்யாமல் இருக்கிறார் ஆரேனும் உண்டோ? இவர்கள் தாம் குற்றம் செய்யில் அன்றோ இவ் விசாரம் வேண்டுவது. அவர்கள் ஏதேனும் விதி அதிக்ரமம் பண்ணினார்களோ? நீ கற்ற பரப்பில், 'நாயன் சொன்னது அடியான் செய்கை குற்றம்' என்று ஒரு வசனம் கிடந்ததோ? அவர்கள் ராவண பரிகரமாய் அவனுக்குக் கைவழி மண்ணான அடியாருமாய், அவனுடைய ஆஜ்ஞா பரிபாலன சீலைகளுமாகாநின்றால் அவன் சொன்னதை மறுக்கலாமோ? பெருமாள் உன்னை என்னைக் கண்டு வா என்று விட்டாரோ, ஸ்திரீவதம் பண்ணி வா என்று விட்டாரோ? அப்படிச் சொன்னாராகில் அவர் குற்றமாகிறது; நீ சொன்னாயாகில் அந்த விதி அதிக்ரமம் உன்னதாகிறது என்று குணக்ரஹணம் பண்ணி ராக்ஷசிகளை ரக்ஷிப்பித்தாளிறே பிராட்டி. ஆகையாலிறே இவள் கோஷ்டியைப் பற்ற ராமகோஷ்டி லகுதரை ஆயிற்று" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்கியானத்தால் பிராட்டியின் குண சீர்மையை உணர்தல் தகும்.

3. அவத்தப் பஞ்சமயப் புன்சொல் பொய்யை மெய்யென்று அணிமிடறு புழுத்தான் தன் அவையின் மேவிச் சிவத்துக்கு மேற் பதக்கு உண்டு என்று தீட்டிய காலத்தில் தம்முடைய திருக் கண்கள் போதற்குக் காரணமாக இருந்த நாலூரானும் தாம் பெற்ற பேறு பெறவேணும் என்று திருவரங்கத்து இறைவனிடம் வேண்டிக் கொண்டவர் கூரத்தாழ்வான். ஆதாலால், தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் நன்மையே செய்யும் சீரிய குணம் படைத்தவர் இவர்.

வரப் பெற்றவர்கள் என்பதனைத் தெரிவித்தபடி.[1] அதாவது, உயிர் மாட்டுப் பேரிரக்கம் உடையவர்கள் என்றபடி.

‘**புன்மையாகக் கருதுவர்**’ என்றது, [2] புன்மை என்ற ஒரு குணமும் அதற்கு இருப்பிடமான குணியுமாய் இருத்தல் அன்றி, புன்மையே ஒரு வடிவு கொண்டது என்று இருப்பர் என்றபடி. புன்மையாவது, துக்கமாதல், பாவமாதல்; பகவானை ஒழிந்த விஷயங்களிலே ஈடுபாடாதல், அகங்காரமாதல்.

இவ்வளவில் நாம் அல்லது பாதுகாப்பவர் இலர் என்று, அப் புன்மையே காரணமாக எனக்கு எல்லாவிதமான உறவும் ஆனவர் என்பதனைத் தெரிவிக்கிறார் ‘ஆதலில்’ என்று தொடங்கிப் பின்னிரண்டு அடிகளால்: [3] “அந்தக் காகாசுரன் மூன்று உலகங்களையும் சுற்றித் திரிந்து மீண்டு, ஸ்ரீராமபிரானையே சரணமாக அடைந்தான்” என்கிறபடியே, காகத்திற்குப் புறம்பு ஒரு சரண் இல்லாதது போன்று, இவனுக்கும் புறம்பே ஒரு பற்றுசு இல்லை என்று, அதுவே காரணமாக என்னைப் பலவகையாலும் காப்பாற்றுமவர்.

[4] பிரியமே செய்யக்கூடிய தாய்செய்யுமதனையும், ஹிதமே செய்யக்கூடிய தந்தை செய்யுமதனையும், சொரூபத்துக்குத் தகுதியாக அடிமை கொள்ளும் நாயன் செய்யுமதனையும் ஆழ்வார் ஒருவரே செய்து அடிமை கொண்டார் ஆதலின் ‘**அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்**’ என்கிறார்.

---

1. அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும்
 செந்தண்மை பூண்டொழுகலான்.

என்ற திருக்குறள் இங்கு அறிதல் தகும்.

2. “புன்மை என்றும், நான் என்றும் வேறு இன்றிக்கே, ‘என்ன தாவி என்னும் வல்வினை’ என்கிறபடியே புன்மை தானாகவே நினைப்பர்கள். தர்ம பிராசுர்யத்தாலே தர்மியைத் தர்ம வியபதேசம் பண்ணக்கடவதிறே” என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. எல்லாராலும் விடப்படுவதற்குக் காரணமாக இருந்த புன்மை, இவருக்குக் காப்பாற்றுவதற்குக் காரணமாக இருந்த தன்மை விவரிக்கப் படுகிறது ‘அந்தக் காகாசுரன்’ என்று தொடங்கி.

ஸ பித்ராச பரித்யக்தஃ ஸுரைஃ ச ஸமஹர்ஷிபிஃ
த்ரீந்லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கதஃ.

என்பது, ஸ்ரீராமா. சுந். 38 : 33.

4. “‘அத்தனாகி அன்னையாகி’ என்று பகவத் விஷயம் போலே முற்பட ஹிதபரனாய், பின்பு பிரியபரனாகை யன்றிக்கே முற்படப் பிரிய பரராய்ப் பின்பு ஹிதபரரானார். அப்படியே ஆளவந்தாரும் உட்பட ‘மாதா பிதா’ என்று மாத்ருத்வத்தை ஆயிற்று முந்துற அநுசந்தித்தது” என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

[1] "தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்த அத்தா! நீ செய்தன" என்று பகவான் திறத்தில் ஆழ்வார் சொல்லுவன எல்லாம் ஆழ்வார் திறத்திலே சொல்லுகிறார் இவர்.

[2] தீக்குத் தெறல் போலவும் நீர்க்குத் தண்மை போலவும் இத் தன்மைகளை இலக்கணமாக வுடையவர் என்பார் '**ஆண்டிடும் தன்மையான்**' என்கிறார். அதாவது, இவருக்கு உதவி செய்தோம் என்று தாம் நினைத்தல், இவர் கைம்மாறு செய்வதற்குத் தாம் ஒருப்படல் செய்யாதவர் என்பதனைத் தெரிவித்தபடி.

'**சடகோபன்**' என்றதனால், தம் பக்கல் உள்ள வஞ்சகத் தன்மையைப் போக்கினவர் என்பதனைத் தெரிவிக்கிறார். மேல் மூன்று திருப்பாசுரங்களிலும் '**தென்குருகூர் நம்பி**' என்றவர் இத் திருப்பாசுரத்தில் '**சடகோபன்**' என்பது தம்முடைய வஞ்சகத்தைப் போக்கினபடியாலே என்றபடி. சடகோபன் - வஞ்சகத்தைப் போக்கினவர்.

தாய் செய்வது தந்தை செய்யமாட்டான், தந்தை செய்வது தாய் செய்யமாட்டாள், ஆசாரியன் செய்வது இருவரும் செய்ய மாட்டார்கள்; நாயன் செய்வது அடியான் செய்யமாட்டான்; எல்லார் செய்வன எல்லாவற்றையும் இவர் ஒருவரே செய்ய வல்ல குண நிறைவினையுடையவர் என்பார் [3] '**நம்பி**' என்கிறார். என்னுடைய [4] பாழ்ந்தாறு நிரம்பும்படியான குண நிறைவினையுடையவர் என்பார் '**என் நம்பி**' என்கிறார்.

---

1. '*தாயாய்*' என்பது, *திருவாய்மொழி*, 2. 3: 2.

"ஸ்வாமி கிருத்யமும் அநுஷ்டித்தார். பகவத் விஷயத்தை 'அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்' என்று அநுசந்தித்தாப் போலே இவரும் ஆழ்வார் விஷயத்திலே அவற்றை அநுசந்திக்கிறார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. "இது ஸஹஜ ஸ்வபாவமாயிற்று ஆழ்வாருக்கு. ஆழ்வார் அடியாக அடிமை கொள்ளுகையாலே பகவத் விஷயத்துக்கு ஔபாதிகம்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. "அவரே அன்றோ என் குறைவை நிறைக்கும்படியான நிறைவையுடையவர். என் குறைவாகிற பாழ்ந்தாறு நிறையும்போது அவருடைய பூர்த்தியே வேண்டாவோ? ஸத்வ நிஷ்டர்க்கு பஹிஷ்டனான என்னைத் தாம் அங்கீகரித்தும், அப்ரியங்களிலும் அஹிதங்களிலும் கைவளர்ந்து போந்த என்னைப் பிரியஹிதங்களிலே மூட்டியும், அநுபகாரகனான என்னைக் கைங்கரியம் கொண்டும் போந்த பூர்த்தியை யுடையவர் ஆழ்வாரே அன்றோ என்று ஸ்வஸித்தாந்தத்தைத் திருடீகரிக்கிறார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

4. பாழ்ந்தாறு - படுகுழி. அதாவது தம்முடைய புன்மைகளாகிற படுகுழியைத் தூற்றுப் போகடுகைக்குத் தக்க அருள் முதலான குணங்கள் நிறைந்தவர் என்றபடி.

[1] இவரைக் குறித்து, 'அன்னையாய்' என்று தொடங்கி மேலே கூறிய உவமைகளுக்கு எவ்வகையிலும் ஒப்புமை இல்லை என்க. என்னை? எனின், அவர்கள் கர்மங் காரணமாக வந்த சம்பந்தத்தை யுடையவர்கள் ஆகையாலும், குண நிறைவு பெருதவர்கள் ஆகையாலும். ஒத்தாரும் மிக்காரும் இலையாய மா மாயனுக்கு உலகப் பொருள்களில் ஒரு சிலவற்றை உவமை கூறுவது போன்று இங்கும் சொல்லப்பட்டதித்தனை. (4)

5. நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்எலாம்
செம்பொன் மாடத் திருக்குருகூர் நம்பிக்கு
அன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே.

பொருள் :— அடியேன்-இன்று அடியேன் என்று சொல்லும்படி ஆழ்வாரால் திருத்தப்பட்ட நான், முன்எலாம்-இதற்கு முன்னே போந்த காலம் எல்லாம், பிறர் - பிறருடைய, நன் பொருள்தன்னையும் - [2] நல்ல பொருள்களை எல்லாம், நம்பினேன்-என்னது என்று விரும்பிப் போந்தேன்;மடவாரையும்-பெண்களையும், நம்பினேன்-விரும்பிப் போந்தேன்; இன்று-இப்பொழுது, செம்பொன் - அழகிய பொன்மயமான, மாடம்-மாடங்களையுடைய, திருக்குருகூர் - திருக்குருகூரில் எழுந்தருளியிருக்கின்ற, நம்பிக்கு - நம்மாழ்வாருக்கு, அன்பனாய் - அடியவனாய், சதிர்த்தேன் - சதுரப்பாட்டினை உடையவன் ஆனேன்.

---

1. இவருடைய பெருமை விளக்கப்படுகிறது 'இவரைக் குறித்து' என்று தொடங்கும் வாக்கியத்தால்.

ஆக, "தேவு மற்று அறியேன்" என்று நீக்கப்பட்ட இறைவனையும், பலவகையாலும் எனக்கு உதவியைச் செய்த ஆழ்வாருடைய முகமலர்த்திக்காக வணங்குவேன் என்பது மேல் திருப்பாசுரத்தின் கருத்து.

2. "நம்பினேன் பிறர் நன் பொருள் தன்னையும் - என்று தேக ரக்ஷண சேஷமாகப் 'பிறர் பொருளிலே ஆசை வைப்பது' என்கிறபடியே அந்ய திரவியங்களை ஆசைப்பட்டுப் போந்தேன் என்றுமாம்; அங்கு 'நன் பொருள்' என்று அவர்கள் நினைவாலே சொல்லுகிறது. அவ்விடம் தன்னிலும் மேல் எழுந்த திரவியங்களை ஆசைப்பட்ட அளவன்றிக்கே அவர்கள் சீர்க்கக் கனக்க நினைத்திருக்கும் மடிச் சாக்கை ஆயிற்று ஆசைப் பட்டது" என்னும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்கியானம் இங்குக் காணல் தகும்.

[1] உம்மைப் புன்மையாகவும், ஆழ்வார் உமக்குப் பல வகையாலும் உதவியைச் செய்தவராகவும் சொன்னீர் ; உம்முடைய புன்மையையும், உமக்கு ஆழ்வார் செய்த நன்மையையும் சொல்லிக் காணீர் என்ன, இத் திருப்பாசுரத்தின் முன் இரண்டு அடிகளால் தம்முடைய புன்மையையும், பின் இரண்டு அடிகளால் ஆழ்வார் தமக்குச் செய்த நன்மையையும் சொல்லுகிறார்.

முன் எலாம் பிறர் நன்பொருள் தன்னையும் நம்பினேன், மடவாரையும் நம்பினேன்-இது என்னுடைய புன்மை இருந்தபடி. ஈண்டுப் '**பிறர்**' என்றது சர்வேஸ்வரனை. [2] நித்தியர் முத்தர் பத்தர் என்னும் மூவகையான உயிர்களின் கூட்டத்துக்கும் அப்பாற்பட்டவனாய் வேறுபட்ட இனத்தானாகிய சிறப்பினை உடையவன் ஆகையாலே சர்வேஸ்வரனைப் "**பிறர்**" என்கிறார். [3] "மேலான புருஷன், (முன் சொல்லப்பட்ட புருஷர்களைக் காட்டிலும்) வேறுபட்டவன்" என்பது சுருதி வாக்கியம்.

---

1. மேல் திருப்பாசுரத்துக்கும் இதற்கும் இயைபு கூறப்படுகிறது 'உம்மை' என்று தொடங்கி.

2. "பிறர்" என்ற சொல் ஈஸ்வரனைக் காட்டும் என்பதற்கு விளக்கம் தரப் படுகிறது 'நித்தியர்' என்று தொடங்கி.

3. அதற்குப் பிரமாணம் காட்டப் படுகிறது 'மேலான புருஷன்' என்று தொடங்கி.

"உத்தமஃ புருஷஃ து அந்யஃ பரமாத்மா இதி உதாஹ்ருதஃ."
என்பது, ஸ்ரீ கீதை. 15 : 17.

"இங்குப் 'பிறர்' என்றது சர்வேஸ்வரனை. பிறர் என்பது அந்யரையிறே. 'பரமாத்மா என்று சொல்லப்படுகிற அந்தப் புருஷோத்தமன் (முன் சொல்லப்பட்ட புருஷர்களைக் காட்டிலும்) வேறுபட்டவன்' என்றும், 'அசித்தையும் சித்தையும் எவன் நியமிக்கிறானே அவன் அவ் விரண்டிலும் வேறுபட்டவன்' என்றும் சொல்லுகிறபடியே சேதந அசேதந விஸஜாதீயனான சர்வேஸ்வரனையிற்று அந்யன் ஆகிறான். 'உயர்வற வுயர்நல முடையவன்' என்றும், 'எல்லையில் அந்நலம்' என்றும், 'எப்பால் எவர்க்கும் நலத்தால் உயர்ந்து உயர்ந்து அப்பாலவன்' என்றும், பலபடியாலும் ஈஸ்வரனைச் சித்து அசித்து வியாவர்த்தனாக ஆழ்வார் பாடே கேட்டுப் போருகையாலே அந்த வியாவிருத்தி தோற்றப் 'பிறர்' என்கிறார். அந்யனாகிறான் - கூடியிருக்கச் செய்தேயும் காரியங்களில் கூட்டுப் படாதவன் இறே; அதில் சித்து அசித்துக்களோடே கூடி இருக்கச்செய்தேயும் பரிணாம அஜ்ஞத்வ துக்கித்வங்கள் தன் பக்கலிலே ஏறிப் பாயாமல் இருக்கையாலே 'பிறர்' என்கிறார். சர்வ பூதங்கட்கும் அந்தர்யாமியா யிருக்கச் செய்தேயும் அபஹத பாப்மாவாய் இருக்குமவனிறே அவன்; இவ் அர்த்தம் 'அவையாய் அவை அல்லனுமாம் கேசவன்' என்று ஆழ்வார் பாடே கேட்டு வைப்பரிறே" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

'**நன்பொருள்**' என்றது, வேறுபட்ட சிறப்பினையுடைய ஆத்மாவினை. நன்று; [1] ஆத்மாவினைப் பொருள் என்னலாமோ? எனின், [2] "மண்முதற்கொண்டு பொருள்கள் ஒன்பது வகைப்பட்டனவாக அறிகின்றார்கள்" என்கிறபடியே, ஆத்மாவைப் பொருள்களில் ஒன்றாக நிச்சயித்தான் வைசேடிகன்; அவன் மதம்பற்றி ஆத்மாவைப் '**பொருள்**' என்கிறார். அன்றிக்கே, '**நல்**' என்ற அடைமொழியாலே 'பொருள்' என்றதற்கு ஆத்மா என்று பொருள் கோடலுமாம்.

பேற்றுக்கு முதற்படியான பகவானுக்கு அடிமை என்ற அளவில் நில்லாது, பேற்றுக்கு எல்லை நிலமான அவன் அடியார்கட்கு அடிமை என்ற அளவிலே நிற்கிற ஆத்மா ஆதலின் '**பொருள் தன்னையும்**' என்கிறார். தன்னை என்றது, தானான தன்மையை. ஆத்மாவுக்குத் தானான தன்மையாவது, இறைவனுக்கு அடிமையாக இருத்தல். இறைவனுக்கு அடிமைப்பட்டது என்ற அளவிலே அவன் அடியார்கட்கு அடிமைப் பட்டிருத்தலும் தானே போதரும்.

நம்பினேன்-ஆசைப்பட்டேன். [3] நம்புதல்-ஆசைப்படுதல். ஈண்டு ஆசைப்படுதலாவது, களவினைச் செய்தல். அதாவது, சர்வேஸ்வரனுக்கு உரிய ஆத்மாவினை 'என்னது' என்று அபிமானித்திருத்தலைக் குறித்தபடி. நன்று; ஆசைப்படுதல்

---

1. பொருள் என்னும் சொல் ஆத்மாவினைக் காட்டுமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை தரப்படுகிறது 'ஆத்மாவினை' என்று தொடங்கி.

2. "த்ரவ்யாணி நவதத் விதः" என்பது பிரமாணம். அவை - பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம், காலம், திசை, ஆத்மா, மனம் என்பனவாம்.

"பொருள் - வஸ்து. 'ஸத்யஞ்ச' என்றும், 'உள்ளது' என்றும் சொல்லும்படி உண்டாயே போருமது; அஹம் அர்த்தமாய், என்றும் பிரகாசித்தே போரும் வஸ்து. 'என்றும் உள்ளதான ஆத்மாவுக்கு அழிவு இல்லை' என்கிறபடியே. நன்பொருள் - விலக்ஷணமான திரவியம்; 'எண் பெருக்கு அந் நலத்து ஒண் பொருள்' என்றும், 'நன்றாய் ஞானம் கடந்து' என்றும் ஆழ்வார் பாடே கேட்டுப் போருகையாலே 'நன் பொருள்' என்கிறார். நன்மையாவது, 'ஐந்து பூதங்களால் ஆய பொருள் சரீரம்' என்றும், 'மேம் பொருள்' என்றும் சொல்லுகிறபடியே தேகத்துக்கு வஸ்துதை உண்டேயாகிலும் அது போலே அநித்யமாய் அநவரத விகார ஆஸ்பதமாய் அத்யந்த ஹேயமாய் அஜ்ஞானமாய் அஸுகமாய் அபோக்யமாய் இருக்கை அன்றிக்கே, நித்யமாய் நிர்விகாரமாய் அத்யந்த விலக்ஷணமாய் ஸ்வயம்பிரகாசமாய் சுகமாய் ஸ்வபாவதோ போக்யமாய் இருக்கை" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்கியானம்.

3. "நம்பும் மேவும் நசையா கும்மே"
என்பது, தொல்காப்பியம், சொல். உரியியல்.

களவு ஆகுமோ? எனின், [1]களவு எனப்படுவது, பிறர்பொருளை ஆசைப்படுதலேயாம். [2] "வன்கள்வன்" என்றும், [3] "கள்வனேன் ஆனேன்" என்றும் ஆழ்வார்களும் அருளிச்செய்தார்கள். [4]"வேறு ஒருவர்க்கு உரியவனான தன்னை, வேறு தன்மையனாக எவன் எண்ணுகின்றானோ அவன் ஆத்மாவாகிய தன்னைக் களவு செய்தவன் ஆவன்; அந்தத் திருடனால் செய்யப்படாத பாவம் யாது" என்பது பாரதம்.

[5] களவு காணுமிடத்தில் வந்தால் களவு செய்யப்படுகிற பொருளின் உயர்விற்கும், அப் பொருளையுடையவன் உயர்விற்கும் தக்கபடியே கழுவாயும் (பிராயச்சித்தம்) கனத்திருக்கும். பிராமணனுடைய பொருளைக் களவுசெய்தால் செய்யப்படும் கழுவாயைப் போன்றது அன்று, சண்டாளனுடைய பொருளைக் களவுசெய்தால் செய்யப்படும் கழுவாய். அப்படியே, விறகு வைக்கோல் இவற்றைக் களவுசெய்தால் அதற்குக் கொடுக்கப்படும் தண்டனையைப் போன்றது அன்று, இரத்தினத்தைக் களவுசெய்தால் கொடுக்கப்படும் தண்டனை. இங்குக் களவு செய்யப்பட்ட பொருளோ ஆத்மா; அது சர்வேஸ்வரன் திருமார்பில் அணிந்து கொண்டிருக்கிற ஸ்ரீ கௌத்துபம் என்னும் இரத்தினத்தைப் போன்றதாகும் ஈஸ்வரனுக்கு; அவ் ஆத்மாவை உடையவனோ சர்வேஸ்வரன் என்பார் 'பிறர் நன்பொருள்' என்கிறார். பிறர் நன்பொருளை நம்பிய இச் செயலுக்கு உய்திறன் இல்லை என்பது கருத்து.

---

1. ஆசைப்படுதல் களவு ஆகுமோ? எனின், அதற்கு விடை கூறப்படுகிறது 'களவு எனப்படுவது' என்று தொடங்கி.

2. அதற்குப் பிரமாணம் காட்டப் படுகிறது 'வன் கள்வன்' என்று தொடங்கி, இது, திருவாய்மொழி, 5. 1 : 4.

3. 'கள்வனேன்' என்பது, பெரிய திருமொழி, 1. 1 : 5.

"பண்டே உன்தொண்டாம் பழ உயிரை என்னதென்று
கொண்டேனைக் கள்வன் என்று கூறாதே"

என்றார் திவ்விய கவியும். நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி.

4. யோந்யதா ஸந்தம் ஆத்மாநம் அந்யதா ப்ரதி பத்யதே
கிம்தேந நக்ருதம் பாபம் சோரேண ஆத்மாபஹாரிணா.

என்பது, பாரதம் உத்யோகபர். 42 : 35.

5. இறைவனைப் 'பிறர்' என்று கூறியதாலும், ஆத்மாவிற்கு 'நல்' என்ற அடை கொடுத்ததனாலும் போதருவதோர் பொருள் விசேடம் கூறப்படுகிறது 'களவு காணு மிடத்தில்' என்று தொடங்கி,

இப்படி அவனுக்கு உரிய ஆத்மாவை எனக்கு உரியது என்று கொண்டேன் ஆதலின் அதற்குப் பலமான சிற்றின்பப் படுகுழியிலே விழுந்தேன் என்கிறார் இரண்டாம் அடியால்.

[1] சர்வேஸ்வரனுக்கு விருப்பமான பொருளைக் களவு செய்த நான், சரீரத்தையே ஆத்மாவாக நினைத்திருக்கும் சம்சாரிகள் தங்கள் உடைமை என்று நினைத்திருக்கும் பொருளைக் களவு காணச் சொல்ல வேண்டுமோ? அரசனுடைய இரத்தினத்தைக் கொள்ளை கொள்ள அஞ்சாத நான் தாழ்ந்த ஒருவனுடைய விறகும் வைக்கோலும் களவு காண அஞ்சுவனோ? என்பார் '**மடவாரையும் நம்பினேன்**' என்கிறார். முன் அடியிலுள்ள 'பிறர்' என்ற சொல்லை இங்கும் கூட்டுக. இங்குப் 'பிறர்' என்றது, மக்களை. [2] இங்கும், வேறு ஒருவர்க்கு உடைமையாக இருப்பவர்களையே விரும்பினேன் என்பார் '**மடவாரை நம்பினேன்**' என்கிறார்.

ஆக, முன் இரண்டு அடிகளால் ஈஸ்வரனுக்கு விருப்பமான பொருளையும் களவு கண்டேன், பிறருக்கு விருப்பமான பெண்களையும் ஆசைப்பட்டேன், இது என்னிடத்துள்ள புன்மை என்பதனைத் தெரிவித்தபடி.

இப்படிச் சரீரத்தையே ஆத்மாவாக விரும்பியவனும் சிற்றின்பங்களிலே ஈடுபாடு உடையவனும் போந்த காலமும் ஓர் எல்லைக்குட்பட்டது அன்று என்பார் '**முன்னெலாம்**' என்கிறார். என்றது, [3] ஈஸ்வரனைப் போன்று ஆத்மாவும் நித்தியம்,

---

1. "பிறர் நன் பொருள்" என்றதிலே நோக்காக, "மடவாரையும் நம்பினேன்" என்பதற்குக் கருத்துக் கூறப்படுகிறது 'சர்வேஸ்வரனுக்கு' என்று தொடங்கி.

2. பெண்கள் என்னுமல் "மடவார்" என்றதற்குக் கருத்துக் கூறப்படுகிறது 'இங்கும்' என்று தொடங்கி.

"ஸ்திரீகளையும் ஆசைப்பட்டுப் போந்தேன். மடவார் - அவர்கள் புருஷ வசீகாரம் பண்ணுவது தந்தாமுடைய மடப்பத்தைக் காட்டியாயிற்று. 'சதிரிள மடவார்' என்று ஆழ்வார் பாடே கேட்டு வைக்கையாலே 'மடவார்' என்கிறார். மடவார் - அதிலும் ஒருவர் இருவரை ஆசைப்படுகை அன்றிக்கே பல பேர்களையும் ஆசைப்பட்டேன். ஒன்றிலே துவக்கலாவது, அதில் போக்யதை உண்டாகிலிறே; அது இல்லாமையாலே பல விஷயங்களையும் ஆசைப் பட்டுப் போந்தாராயிற்று" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. அநாதிகாலமாக ஆத்ம அபஹாரம் வந்ததற்குக் காரணம் கூறப்படுகின்றது 'ஈஸ்வரனைப் போன்று' என்று தொடங்கி.

"பெருமை பொருந்திய காலம் அநாதியானது; இதற்கு முடிவும் கிடையாது" என்கிறபடியே, காலம் நித்தியமாகையாலும், அநுஷ்டாதாவான சேதநன் நித்தியனாகையினாலும், தத் உபகரணபூத கரண களேபரங்களும்

காலமும் நித்தியப்பொருள், இந்தச் சரீரத்தின் சம்பந்தமும் அநாதி, ஆகையாலே முன்புள்ள காலம் எல்லாம் இதுவே என்னுடைய செயல் என்றபடி.

நன்று; [1] உம்முடைய தண்மை குறைவற்று இருந்தது; இப்படி இருந்த நீர் ஆழ்வாரைக் கிட்டினவாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'செம்பொன் மாடத் திருக்குருகூர் நம்பிக்கு அன்பனாய் சதிர்த்தேன் இன்று' என்று. [2] அதாவது, சிற்றின்பத்தை நுகர்வதற்குப் பொருள் தேடிப் பொருளைக் களவு காண்பதற்கு இடம் பார்த்துத் திரியாநிற்க, அங்கே உள்ள செம்பொன் மாடத்தினைக் களவு காணப் புக்கேன்; அங்கே **வைத்த மா நிதியைக்** கண்டு அகப்பட்டேன் என்கிறார் என்றபடி. இவர்க்கு வைத்த மா நிதி ஆழ்வாரே யாவர். ஆழ்வார் திருவடிகளைப் போன்று திருநகரியும் இவர்க்கு விரும்பத் தக்கதாக இருக்கையாலே '**செம்பொன் மாடத் திருக்குருகூர்**' என்று திருநகரியைக் கவி பாடுகிறார்.

பிரவாஹதயா நித்யங்களாகையாலும், இவ் அனர்த்த புத்திக்கு அடியான அவித்யா கர்ம வாசனைகள் நித்தியங்கள் ஆகையாலும் இதுவே எனக்கு யாத்திரையாய்ப் போந்தது. அக்ருத்யங்கள் ஒன்றிரண்டாகிலும் ஆச்வசிக்கலாம். காலம் பரிமிதமாகிலும் கண்டு தரிக்கலாம். அநாதிகாலம் அபரிமிதமான அனர்த்தங்களை அநவரதம் அநுஷ்டித்துப் போந்தேன் என்று தாத்பரியம்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

1. மேலுக்கு அவதாரிகை கூறப்படுகிறது 'உம்முடைய' என்று தொடங்கி.

2. "நான் அர்த்தார்ஜன இச்சுவாய்த் தேசாந்தர சஞ்சாரம் பண்ணாநிற்கச்செய்தே தைவாயத்தமாகத் திருநகரியிலே மாடங்கள் ஓங்கி உயர்ந்து பொற்கென்று தோன்றிற்று; இங்கே போய் அர்த்தாபஹாரம் பண்ணலாம், இதுதான் நகரியாகையாலே நாகரிகைகளான மடவாரையும் இம் மாடங்களிலே காணலாம் என்று அறுதியிட்டு வழிவிலங்கி உள் புக்கேன். அந் நகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் திருவஷ்டாக்ஷர ஸம்சித்தராகையாலே அவ்விடத்தில் தஸ்கர ஸஞ்சரணம் இல்லாமையாலே, ஒரு வைஷ்ணவ ஸகாசத்தில் க்ஷுத்திர பந்துக்குப் பிறந்த அவஸ்தை போலே, எனக்கும் ஆழ்வார் ஸகாசத்திலே அபஹார புத்தி போய் உள்ளே ஆழ்வார்தம்மைக் காணவேண்டுமென்று புக்கு, அவருடைய பூர்த்தியைக் கண்டு நின்றாற் போலே இருக்க, அவருக்கு அன்பனாய் விட்டேன். 'துவளில் மா மணி மாடமோங்கு தொலைவில்லி மங்கலம்' என்று உகந்தருளின நிலங்களில் மாடங்களும் ஆழ்வார்க்கு உபாதேயமானாப் போலே இவருக்கும் ஆழ்வாருடைய மதி நலங்களோபாதி மாடங்களும் உபாதேயமாயிருக்கிறதாயிற்று; ஆதலால், அர்த்தகாமப் பிரவணரையும் ஆளாக்கும் தேசமாயிற்று" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

நான் ஆத்மாவைக் களவு கண்டேன், சிற்றின்பத்திலே ஈடுபாடு உடையவன் ஆனேன் என்று கைவிடும்படி குண நிறைவு இல்லாதவர் அன்று ஆழ்வார் என்பார் [1] **"நம்பிக்கு"** என்கிறார். இதற்கு முன்பு தமக்கு ஒரு நினைவு இன்றிக்கே இருக்க, நினையாமலே ஆழ்வார் திருவடிகளிலே அன்புள்ள வராகத் தம்மை இன்று கண்டனராதலின் [2] **'இன்று அன்பனாய்'** என்கிறார். அதாவது, தொன்றுதொட்டே ஆத்மாவைக் களவு கண்டும் சிற்றின்பத்திலே ஈடுபாடு உடையவனாயும் போந்த இது, இழத்தற்குக் காரணமாகை அன்றி, ஆழ்வாருடைய பிரபாவத்தாலே பேற்றுக்கு உடலாகக் கிருஷிபண்ணினாரைப் போலே பலித்துக் கொடு நிற்கக் கண்டேன்; நான் எனது என்று இருக்கை தவிர்ந்து, மற்றை விஷயங்களை அறத் துறந்தவராய், பகவானுக்கு அடிமை என்னும் அளவில் நில்லாது, அதற்கு எல்லை நிலமான அவன் அடியார்கட்கு அடிமை என்னுமளவிலே நின்றார் ஆழ்வார்; இந்த முறையிலே நில்லாமல் முதலடியிலேயே நான் ஆழ்வார் திருவடிகளிலே அன்பனாகப் பெற்றேன் என்கிறார் என்றபடி.

[3] ஆழ்வாருடைய வைபவத்தை நினைத்து, [4] "இவருக்குக் குணங்களால் அடிமைப்பட்டவன்" என்னுமாறு போன்று, அக் குணங்களுக்குத் தோற்று **'அடியேன்'** என்கிறார்.

---

1. "நம்பிக்கு அன்பனாய் - அர்த்த காமாதிகளை நம்பிப் போந்த நான் ஆழ்வார்க்கு அன்பனாய் விட்டேன், அர்த்த காமங்களின் போக்யதையும் ஆழ்வார் பாடே காண்கையாலே அவர்க்கே அன்பனாய் விட்டேன்; கீழ்ப் பாட்டிலே 'அன்னையாய் அத்தனாய்' என்கையாலே 'மாதா பிதா' என்னுமிடம் சொன்னார். இதில் 'யுவதயஃ', 'விபூதிஃ' என்னுமிடம் சொல்லுகிறார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. "இன்றே-ஈஶ்வரனை அண்டை கொண்டு ஆரப்த சரீரபாதந சமயம் பார்த்திருந்து பின்னையும் வாசனா ருசிகளாகிற மண் பற்று விடாமல் விரஜை அளவும் போக வேண்டும்படி இருக்கை அன்றிக்கே, இன்றே சவாசனமாக விட்டேன். இன்றே - அன்று அப்படியானேன்; இன்று இப்படியானேன். நடுவில் இதற்கு என் கையில் கிடப்பதொரு ஹேதுவைக் கண்டிலேன். இதற்கு வரவாறு ஒன்று இன்றிக்கே இருக்க, வாழ்வு இனிதாம்படி விழுந்தது என்று விஸ்மிதராகிறார். இன்றே - அன்று ஈஶ்வரனும் கூட நிற்கச் செய்தே சம்சரித்துப் போந்தேன். இன்று ஆழ்வார் சந்நிதி மாஹாத்மியத்தாலே இவ்வளவும் பிறந்தது என்று ப்ரீதராகிறார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. நான் என்னுமல் அடியேன் என்றதற்கு, "நம்பி" என்ற பதத்திலே நோக்காகக் கருத்துக் கூறப்படுகிறது 'ஆழ்வாருடைய' என்று தொடங்கி.

4. "அஹம் அஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யம் உபாகதஃ." என்பது, ஸ்ரீராமா. கிஷ். 4: 12.
இது, திருவடிக்கு இளையபெருமாள் கூறியது.

ஆசாரியர்களை 'நம்பி' என்று அழைக்கக் கற்பித்தாற் போன்று, ஆசாரியர்கள் அழைத்தால் 'அடியேன்' என்று கூறக் கற்பித்ததும் ஸ்ரீ மதுரகவிகளேயாவர்.

[1] சதிர்த்தேன் - சதிரையுடையன் ஆனேன். என்றது, ஈஸ்வரனுக்கு அடிமையான ஆத்மாவை 'என்னது' என்று இருப்பதற்கும் சிற்றின்பத்தில் ஈடுபட்டிருப்பதற்கும் மேற்பட்ட சதிர்க்கேடு இல்லையே; அவற்றை விட்டு, பகவானுக்கு அடிமை என்ற அளவிலும் நில்லாது ஆழ்வார் அளவும் வரும்படியான சதிரை உடையன் ஆனேன் என்கிறார் என்றபடி. சதிர்த்தல்-செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்தல். (5)

6. இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் ஏத்த அருளினன்
குன்றம் மாடம் திருக் குருகூர் நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே.

பொருள்:—இன்று தொட்டும் - இன்று முதற்கொண்டு, எழுமையும்-மேல் உள்ள காலங்கள் எல்லாம், நின்று - உறுதியோடு நின்று, தன்புகழ் ஏத்த - தம்முடைய கல்யாண குணங்களைத் துதிக்கும்படி, எம்பிரான் - எனக்கு உபகாரத்தைச் செய்த நம்மாழ்வார், அருளினன் - கிருபை செய்தார்; குன்றம் - மலைகளைப் போன்ற, மாடம் - மாடங்களையுடைய, திருக்குருகூர் நம்பி - திருக்குருகூரில் எழுந்தருளியிருக்கின்ற ஆழ்வார், என்றும் - எக்காலத்தும், என்னை - அடியேனை, இகழ்விலன் - ஆதரிக்காமல் இரார்; காண்மின் - இதனை நீங்களே கண்டுகொள்ளுங்கோள் என்கிறார்.

[2] மேல் இரண்டு திருப்பாசுரங்களாலே தாம் செய்த பாவங்களையும், அந்தப் பாபங்களே பற்றாசாகத் தம்மை ஆழ்வார் அங்கீகரித்தபடியையும், ஆழ்வார் அங்கீகரித்த பின்னர் அங்

1. "சதிர்த்தேன் - சதிரன் ஆனேன். 'மோக்ஷயிஷ்யாமி' என்றவன் முழங்கைத் தண்ணீர் பார்த்திராதே ஆழ்வாருடைய பிரபாவத்தை இட்டு வென்றேன். நம்பிக்கு அன்பனாய்ச் சதிர்த்தேன் - 'மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு' என்கிறபடியே, ஆழ்வாருக்கு அன்பனாய் அந்ய விஷயங்களை வென்றேன்" என்பது, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. மேல் திருப் பாசுரங்கட்கும் இத் திருப்பாசுரத்துக்கும் இயைபு கூறப்படுகிறது 'மேல் இரண்டு' என்று தொடங்கி.

தப் பாபங்களைத் தாம் வென்றபடியையும், அந்தப் பாபங்கள் தம்மைவிட்டு நீங்கினமையாலே ஆழ்வார் திருவடிகளிலே தமக்கு உண்டான அன்பின் பெருக்கையும் அருளிச்செய்தார். இதனைக் கேட்டவர்கள் இப்போது உம்முடைய பாபங்கள் கழிந்ததேயாகிலும் இந்தச் சரீர சம்பந்தத்தால் மீண்டும் அந்தப் பாவங்கள் மறுவல் இடாவோ? அதற்கு நீர் கண்டு வைத்த மருந்து என்? என்ன, மேலே என்னைவிட்டு நீங்கிய அப் பாவங்களும் நான் ஒரு சாதனத்தைச் செய்ய அந்தச் சாதனத்தால் போயினவோ? ஆழ்வார் என்னை அங்கீகரித்த அங்கீகாரத்தாலே அவை போயின; அந்த அங்கீகாரம் மாறினல் அன்றோ அவை வந்து மேலிடுவனவாகும்? ஆழ்வார் என் குற்றம் கண்டு ஒருகாலும் என்னை இகழார்; இகழாராகையாலே அவையும் என்னை வந்து அடையா; இதனைக் காண மாட்டீர்களோ என்று இத் திருப்பாசுரத்தால் விடை அருளிச் செய்கிறார்.

இன்று தொட்டும் - அங்கீகரித்த இன்று முதலாக. என்றது, 'இறைவனைப் பற்றும்போது, பற்றுதல் ஒரு காலமும் அங்ஙனம் பற்றுதலாலாய பயன் நமக்குக் கிடைப்பது வேறொரு காலமுமாக இருக்கும்; அங்ஙனம் அன்றி, ஆழ்வாருடைய அங்கீகாரம், அங்கீகரித்த அன்று முதலே அநுபவ காலமாகவே இருக்குமாதலின் 'இன்று தொட்டும்' என்கிறார், எழுமையும்-ஏழு பிறப்புக்களிலும். ஏழு பிறவிகளைக் கூறியது. [1] மேலே வரும் பிறவிகளுக்கெல்லாம் உபலக்ஷணம். எம்பிரான் - எமது ஸ்வாமி. [2] "பிரான் பெருநிலம் கீண்டவன்"

---

1. 'மேலே வரும் பிறவிகளுக்கு எல்லாம் உபலக்ஷணம்' என்றது, ஆழ்வாருடைய புகழினை ஏழு பிறவிகளுள் கூறி முடிக்க ஒண்ணுமை கருதி. அன்றிக்கே, "எழுமையும்" என்று மேல் உள்ள காலம் எல்லாம் என்னலாமோ? இங்கிருக்கும் நாட்களிலே ஆசாரியன் உத்தேசியன்; பரமபதத்திற்குப் போனல் அங்கு ஈஸ்வரன் அன்றோ உத்தேசியன்? எனில், இதற்கு, "இவருடைய நியமம் இருக்கிறபடி. ஒரு தேச விசேஷத்திலே போனலும் ஆழ்வார் கீழே ஒதுங்குமவராயிற்று இவர்; மாதுல குலத்துக்குப் போன ஸ்ரீ பரதாழ்வானைப் பின் சென்ற ஸ்ரீ சத்ருக்நாழ்வானைப் போலே... பிரீதி புரஸ்க்ருதத்வமும் உண்டாயிற்று" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்கியானத்தைப் படித்தறிதல் தகும் இங்கு.

2. அருளின பின்பு அன்றோ 'எம்பிரான்' என்று செய்ந்நன்றியறிதலைக் காட்டல் தகும்? அருளுதற்கு முன்னரே 'எம்பிரான்' என்றல் என்? என்ன, அதற்கு விடை கூறப் படுகிறது 'பிரான்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 1. 7: 6.

என்று பகவத் விஷயத்தில் ஆழ்வார் பேசும்படியை, செய்ந் நன்றியறிதலாலே ஆழ்வார் விஷயத்திலே பேசுகிறார். [1]

நின்று - ஒருபடிப்பட நின்று. என்றது, செய்ந்நன்றியறிவாலே பகவானைப் பெறுமளவும் ஆழ்வாரை அநுபவித்து, பின்பு அது கிட்டினவாறே அதிலே தோள் மாறும் படி அன்றிக்கே, என்றும் ஒரு படிப்பட நிற்றலைத் தெரிவித்த படி. [2] ஆழ்வாருடைய அநுபவத்துக்குள்ளே இறைவனுடைய அநுபவமும் அடங்கும்படி ஆழ்வாருடைய பெருமை இருத்தலின் 'தன் புகழ் ஏத்த' என்கிறார். [3] 'அருளினான்' என்ற சொல்லால், ஒரு காரணமும் இன்றியே திருவருள் புரிந்தமையை வெளியிடுகிறார். [4] "மயர்வு அற மதி நலம் அருளினன்" என்று ஆழ்வார் இறைவன் விஷயத்தில் சொன்ன வார்த்தையை ஆழ்வார் திருவடிகளிலே சொல்லுகிறார் இவர்.

---

1. "'எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும் தம்பிரானை' என்று ஆழ்வார் பகவத் விஷயத்தைச் சொல்லக் கேட்டுப் போந்த வாசனையாலே தாமும் 'எம்பிரான்' என்கிறார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. அவன் புகழ் என்னாமல் "தன் புகழ்" என்பான் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'ஆழ்வாருடைய' என்று தொடங்கி. எப்பொழுதும் பகவானையே அநுபவித்துக் கொண்டிருக்கிற ஆழ்வாரைத் தாம் அநுபவிக்கும் பொழுது அந்தப் பகவானுடைய அநுபவமும் இதனாலே உண்டாகும் என்பது கருத்து.

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம் மாயனுக்கு என்பர் நல்லோர், அவைதம்மொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமாநுசன் மனத்து; இன்று அவன் வந்து
இருப்பிடம் என்தன் இதயத்துள்ளே தனக்கு இன்புறவே.

என்ற திருப்பாசுரம் இங்கு நினைத்தல் தகும். இராமாநுச நூற்றந்தாதி, 106.

"தன் புகழ் ஏத்த அருளினான் - 'தென் குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும்' என்று துவங்கி 'முயல்கின்றேன் உன்தன் மொய்கழற்கு அன்பையே' என்றது இறுதியாகத் தம்முடைய புகழை ஏத்தும்படியருளினார். ஆழ்வார் பகவத் குணங்களையே புகழும்படித் திருத்தினாரே யாகிலும் இவர் தம்முடைய பிரீதியாலே 'தன் புகழ் ஏத்த' என்கிறார். ஏத்த - 'நற்பூவைப் பூவீன்ற வண்ணன் புகழ் - இயற்றுவாய்' என்று தொடங்கி 'மொய்கழலே ஏத்த முயல்' என்று ஆழ்வார் தம்மைப் போலே ஏத்த உத்யோகித்து விட்டவளவன்றிக்கே பத்தும் பத்தாக ஏத்தும்படி அருளினார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. 'எனக்கு அருளினான்' என்னாமல் "அருளினான்" என்றமையின் காரணம் இல்லாமலே அருள் செய்தமை பெறுதும்.

4. அதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'மயர்வற' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 1. 1 : 1.

[1] "குன்றம் போல் மணி மாடம் நீடு திருக்குருகூர்" என்று ஆழ்வார் அருளிச்செய்தது இவர் நெஞ்சிலே ஊற்று மாறுதே இருத்தலின் **'குன்றம் மாடம் திருக்குருகூர்'** என்கிருர். நம்பி என்ற சொல், [2] ஆழ்வாராகிய தம்மை ஏத்திய பின் வேறு ஒரு விஷயத்தையும் ஏத்த வேண்டாதபடியான ஆழ்வாருடைய நிறைவினைக் கூறுகிறது.

என்றும் என்னை இகழ்விலன் - என்றும் இகழ்விலன், என்னை இகழ்விலன் என்று தனித்தனியே கூட்டுக. [3]என்றும் இகழ்விலன் - உயிர் உள்ள வரையிலும் புறம்பே ஒரு விஷயத்திலே போக விட்டுக் கொடார். என்னை இகழ்விலன் - என் தண்மை பாராதே என்னை அங்கீகரித்தவர் வேறு விஷயங்களிலே நான் செல்லுவதற்கு ஒட்டுவரோ? அன்றிக்கே, தம் திருவடிகளை ஒழியப் புறம்பு புகல் அற்று இருக்கிற என்னை, புறம்பு போக என்ருலும் போகலாம்படி என் கையிலே என்

---

1. "குன்றம் மாடம் திருக்குருகூர்-கீழிற்பாட்டில் 'செம்பொன் மாடம்' என்று மாடங்களினுடைய அலங்காரத்தைச் சொன்னர். இதில் மாடங்கள் வெறும் புறத்திலே ஆகர்ஷகமாய் ஸர்வதாதுஸமலங்க்ருதமாய்ச் சம்சாரிகளுக்கு அண்டை கொள்ளலாம்படி இருக்கும் என்கிருர்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்.

2. "நின்று தன் புகழ் ஏத்த அருளினன்" என்பதற்குத் தகுதியாக, "நம்பி" என்ற சொல்லுக்குக் கருத்துக் கூறப்படுகிறது 'ஆழ்வாராகிய' என்று தொடங்கி.

"நிற்பாடிய அலங்கு செந்நாப்
பிறரிசை நுவலாமை
ஓம்பா ஈயும் ஆற்றல் எங்கோ." (புறம். 22.)

"செருமான வேற்சென்னி தென்உறந்தை யார்தம்
பெருமான் முகம் பார்த்த பின்னர் — ஒருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருள் நசையால் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்". (தண்டி. சூ: 21. மேற்).

"இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள." (குறள். 223.)

என்பன இங்கு நோக்கல் தகும்.

"நம்பி - யாவதாத்மபாவி தம்முடைய புகழை ஏத்தாநின்ருலும் வரையிடாத குண பூர்த்தியை யுடையவர்" என்பது, அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்.

3. "குன்றம் மாடம் திருக்குருகூர் நம்பி என்றும் என்னை இகழ்விலன் - எனக்குத் தோஷம் மேலிட்டபோதொடு குணம் மேலிட்டபோதொடு வாசிஅற என்னை அநாதரிக்கிறிலர். அம் மாடங்களுக்குச் சலநம் உண்டாளுலும் ஆழ்வார் திருவுள்ளம் என்னளவில் சலியாது" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்.

னைக் காட்டித் தருவரோ? என்னுதல். [1] இது கண்கூடாகக் காணலாவது ஒன்ருக இருக்க, ஆழ்வார் பெருமையை நான் சொல்லக் கேட்கை மிகை அன்ருே? என்பார் '**கேண்மின்**' என்கிருர். (6)

7. கண்டுகொண்டு என்னைக் காரி மாறப்பிரான்
பண்டை வல் வினை பாற்றி அருளினுன்
எண்திசையும் அறிய இயம்புகேன்
ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே.

பொருள் :—காரி மாறப் பிரான் - காரியின் புதல்வராய் அவதரித்த மாறன் என்ற திருப்பெயரையுடைய உபகாரக ரான ஆழ்வார், என்னை - தம் பெருமை அறியாத என்னை, கண்டு - என் குற்றங்களைக் கண்டு கூசாதே பார்த்து, கொண்டு - குற்றம் கண்டு காற்கடை கொள்ளாதே கைக்கொண்டு, பண்டை - முன்னைய, வல்வினை - கொடிய தீய வினைகளை எல்லாம், பாற்றி அருளினுன் - உருமாய்ந்து போம்படி செய்தார்; ஒண் - அழகிய, தமிழ் - திருவாய்மொழியை அருளிச்செய்த, சடகோபன் - ஸ்ரீ சடகோபருடைய, அருளையே - திரு அருளையே, எண் திசையும் - எட்டுத் திக்குக்களுளும், அறிய - அறியும்படி, இயம்பு கேன் - சொல்லுகிறேன்.

[2] ஆழ்வார் ஒருவித காரணமும் இல்லாமலே தம்பக்கல் செய்த அங்கீகாரத்தைக் கண்டு, இந்த அங்கீகாரத்துக்கு எல் லாரும் தகுதியுடையவர்களாக இருக்க, உலகத்தார் இழந்து நிற்பதற்கு அடி என்? என்று நினைந்து, இவருடைய பெரு மையை அறியாமையாலே இழக்கின்ருர்கள்; அங்ஙனம் இழந்து போகாதவாறு எல்லாரும் அறிந்து உய்யுமாறு இவர் தம் பெருமையைச் சொல்லக்கடவேன் என்கிருர்.

---

1. "காண்மினோ-இவ் வர்த்தம் உங்களுக்கு ஏறக் காணமாட்டீர்களோ? என்னுதல். பகவத் குணங்களை ஆராய்கிற நீங்கள் அத்தை விட்டு ஆழ்வார் குணங்களை நெஞ்சாலே காணமாட்டீர்களோ என்னுதல்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்.

2. மேல் திருப்பாசுரத்துக்கும் இதற்கும் இயைபு கூறப்படுகிறது 'ஆழ்வார்' என்று தொடங்கி.

"கீழ் மூன்ரும் பாட்டிலே தம்முடைய புன்மையைக் கண்டு பெரியவர் களும் தம்மை இகழ்ந்தபடி சொல்லி, இவனுக்கு நம்மை ஒழிய இனிக் கதி இல்லை என்று, ஆழ்வார் மாதா பிதாவாய் நின்று தம்மளவில் அபிமானித்த

[1] தாம் கிட்டின அளவிலே ஆழ்வார் திருவுள்ளம் நிதி எடுத்தாற் போலே இருந்ததாதலின் ‘கண்டுகொண்டு’ என்கிறார். அன்றிக்கே, தம்மைப் பெறுகைக்கு எதிர்சூழல்புக்குத் திரிந்தார் இவர் என்று தோற்றும்படி இருத்தலின் ‘கண்டு கொண்டு’ என்கிறார் என்னுதல். என்றது, அவர் திருவருளுக்குத் தகுதியான பாத்திரமே அன்றோ தாம் என்பதனைத் தெரிவித்தபடி. [2] என்னை - உலகத்தாரைக் காட்டிலும் ஆழ்வார்க்கு உண்டான பெருமையின் வேற்றுமையை அறியாத என்னை. அன்றிக்கே, ஒருவித காரணமும் இல்லாமலே என்னை அங்கீகரித்த அங்கீகாரத்தை நினைக்கவும்கூட மாட்டாத என்னை என்னுதல்.

படியையும் சொல்லி, அநந்தரம் பாட்டிலே அந்தப் புன்மைதான் யாது? ஆழ்வார்தம்மை நீர் கிட்டின வழி என்? என்று கேட்க, அவற்றுக்கு உத்தரம் சொல்லி, கீழ்ப் பாட்டிலே இப்போது கைக்கொண்ட ஆழ்வார் உம்முடைய குற்றம் கண்டு இன்னும் இகழில் செய்வது என்? என்ன, இன்று தொடங்கிக் காலதத்வம் உள்ளதனையும் என்னை இகழாதே தம்முடைய குணஸ்துதியே கால யாத்ரையாம்படி பண்ணினார்; ஆனபின்பு என் குற்றம் மேலிடுமோ? மேலிட்டாலும் பரிபூர்ணரானவர் என்னை நெகிழப் புகுகிறாரோ என்றார்.

இதில் ஆழ்வார் என்னை அங்கீகரிக்கிற போதே என்னுடைய துர்க்கதி கண்டு, இவன் பக்கல் இவை கிட்டக்கடவ அல்ல என்று, பழையவாய் வலியவான பாபங்களைப் பாறிப் போம்படி பண்ணி அன்றோ கிருபை பண்ணிற்று, இனி இவற்றுக்கு உயிர் உண்டோ என்று கீழ் உக்தத்தைப் பரிஹரித்துக் கொண்டு, ‘தன் புகழ் ஏத்த அருளினான்’ என்று ஆழ்வாருடைய ,கிருபை கீழே பிரஸ்துதமாகையாலே அவருடைய கிருபா பிரபாவத்தைத் திகந்தரங்கள் தோறும் வெளியிடக் கடவேன் என்கிறார்.

ஆழ்வாருடைய ஆத்ம குணங்களிற் காட்டில் ‘வீடுமின் முற்றவும்’ என்று தொடங்கி ‘கண்ணன் கழலிணை’ ஈறாகப் பல இடங்களிலும் சம்சாரி சேதநருடைய துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாமே உபதேசிக்கைக்கு அடி கிருபையாகையாலே, அந்தக் கிருபா பிரபாவத்தை அநுசந்தித்து அத்தை எல்லாரும் அறியும்படி வெளியிடக் கடவேன் என்கிறார். ஈஶ்வரன் நிரதிசய கிருபாவானாயிருந்தானேயாகிலும் ஸ்வாதந்தர்ய விசிஷ்டனாகையாலே தோஷ தர்சனத்தாலே உபேக்ஷிப்பதும் ஒரு புடை உண்டு; ஆழ்வார் அப்படி அன்றிக்கே பற்றினாரை இகழாதவராயிற்று” என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

1. “கண்டு கொண்டு” என்பதற்கு இருவகையில் பொருள் கூறப் படுகிறது; ஒன்று காணாதவனைக் கண்டு என்பது. மற்றொன்று தேடினதைக் கண்டு என்பது. இவ் விருவகைப் பொருளும் முறையே கூறப்படுகின்றது ‘தாம் கிட்டின’ என்று தொடங்கியும், ‘அன்றிக்கே’ என்று தொடங்கியும்.

2. “என்னை” என்பதற்கும் இருவகையாகப் பொருள் கூறப்படுகின்றது. ஒன்று ‘உலகத்தாரை’ என்று தொடங்குவது. மற்றொன்று ‘அன்றிக்கே’ என்று தொடங்குவது. இங்கு, “என்னைக் கண்டு என்னைக் கொண்டு-பார்க்க ஒண்ணாத என்னைப் பார்த்தார். எல்லாரும் கைவிட்ட என்னைக் கைக்கொண்டார். இவர் ஸ்வீகரித்தால் அவனாலும் விடப் போகாதே” என்னும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக். நினைத்தல் தகும்.

[1] ஆழ்வார் தமக்குச் செய்த உபகாரத்தை நினைத்துப் 'பிரான்' என்கிறார். ஆழ்வாருக்கு உபகாரத்தைச் செய்த இறைவனிடத்தில் பிரான் என்ற சொல் போகாமைக்காகக் 'காரி மாறப் பிரான்' என்கிறார். என்றது, [2]"எல்லா உயிர்களிடத்திலும் அன்புடையவனான என்னை" என்கிறபடியே, இறைவன் செய்யும் உபகாரம் எல்லார்க்கும் பொதுவாக ஆயிற்று இருப்பது; அந்தப் பொதுமையில் போகாமைக்காகத் தம்மிடத்தில் அன்புள்ளவரைக் '**காரி மாறப் பிரான்**' என்று விசேடிக்கிறார் என்றபடி.

பண்டை வல் வினை - பல காலமாக ஈட்டப்பட்டனவாய்ச் சிற்றின்பங்களின் ஈடுபாட்டிற்குக் காரணமான பாவங்கள், சூர்ப்பணகையைப் போலே வகுத்த இறைவனைப் பற்றுகைக்கு வழி அல்லா வழியில் இழிகைக்கு அடியான பாவம், பேற்றுக்கு முதல் நிலமான இறைவனே புருஷார்த்தம் என்னும் அறிவிற்கு அடியான பாவம் என்னும் இவைகள். பிராயச் சித்தத்தால் அழிக்கப்படாமல் இருத்தலின் இவற்றை '**வல் வினை**' என்கிறார்.

[3] பாற்றி அருளினன்-[4]"பாவத்தைப் பகைவர்கள் அடைகின்றார்கள்" என்றும், [5]"சும்மெனாதே கைவிட்டு ஓடித் தூறுகள் பாய்ந்தனவே" என்றும் சொல்லுகிற வகைகள் அன்றிக்கே, உருமாய்ந்து போம்படி செய்தார். [6]"தன் புகழ் ஏத்த அருளினன்" என்கிறபடியே தம்மையே வாய்புலற்றும்படி

1. "காரிமாறப்பிரான் - என்னைக் கொண்டு என் பாவம் தன்னையும் பாறக் கைத்து எமர் ஏழேழு பிறப்பும் மேவும் தன்மையம் ஆக்கின ஆழ்வாருடைய பிரான் அன்று. காரி மாறப் பிரான் - அவனைப் போலே தான் தோன்றியான பிரான் அன்று; அபிஜாதரான ஆழ்வார். காரிமாறப் பிரான்- அக் குடியிலே பிறந்து எனக்கு உபகரித்தவர். தான் பிறந்து என் பிறவியை அறுத்தவர்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. "ஸுஹ்ருதம் ஸர்வ பூதாநாம்" என்பது, ஸ்ரீ கீதை, 5 : 29.

3. "பாற்றி - அத்தைப் பாறப் பண்ணி; ஈஸ்வரனைப் போலே மோக்ஷயிஷ்யாமி பண்ணிவிடுகை அன்றிக்கே பாறு பாறு ஆம்படி பண்ணினார். எந்தத் தூற்றிலே புக்கது என்று தேடும்படி பாற்றினார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

4. "த்விஷந்தஃ பாபக்ருத்யாம்" என்பது, சாட்யாயந சாகை.

5. 'சும்மெனாதே' என்பது, பெரியாழ்வார் திருமொழி, 5. 4 : 3.

6. "அருளினன்-தம்முடைய புகழை ஏத்தும்படி அருளினார். விரோதி நிவ்ருத்தியையும் பண்ணி அபிமதப் பிரதாநமும் பண்ணினார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

செய்தார். [1] எண்திசையும் அறிய இயம்புகேன் - மேன்மக்களோடு மேன்மக்கள்அல்லாதாரோடு வேற்றுமை அற எல்லாரும் அறியும்படி சொல்லுகிறேன். [2] "தொண்டீர் எல்லீரும் வாரீர்" என்ற ஆழ்வாருடைய வாசனையாலே சொல்லுகிறார். அவர் பகவத் விஷயத்தில் ருசியாலே அவ் விஷயத்தில் ருசியுடையார் எல்லாரும் வாருங்கோள் என்றார். இவர், ஆழ்வார் பக்கல் ருசியுடையார் எல்லாரும் வாருங்கோள் என்கிறார் ஆழ்வார் பக்கல் உள்ள பக்தியின் மிகுதியாலே.

[3] ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே - மயர்வு அற மதி நலம் அருளினவனுடைய அருள்போல் அன்று ஆழ்வாருடைய திரு அருள்; அவன் அருளுக்கும் அகப்படாத அளவிலே தம் பக்கல் வரப் பண்ணின அருள் அன்றோ ஆழ்வாருடைய திரு அருள். பால் ஏய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும்படி திருவாய்மொழி பாடின அருளுக்கும் அப்பாற்பட்டது அன்றோ என்னை அங்கீகரித்த அருள். [4] ஒண் தமிழ் - ஒள்ளிய தமிழ்; அழகிய தமிழ் என்றபடி. (7)

---

1. "எண்திசையும் அறிய இயம்புகேன் - ஸ்வரக்ஷணத்திலே தத்பரராயிருப்பாரும், தேவதாந்தரங்கள் ரக்ஷகம் என்றிருப்பாருமான கோஷ்டிகளிலே சென்று ஆழ்வாருடைய கிருபையை வெளியிடக் கடவேன். 'எண் திசையும்' என்றது பத்துத் திக்குக்கும் உபலக்ஷணம். மேல் ஏறமாட்டாமலும் கீழ் இழியமாட்டாமலும் எண்டிசையும் என்கிறார். ஆழ்வாருடைய அருள் உண்டாகையாலே அதஃ பதநம் இல்லை. ஆழ்வார் போனால் அல்லது போகாதவர் ஆகையாலே மேல் ஏறமாட்டார். எண்திசையும் அறிய இயம்புகேன் - ஸ்ரீ ஜாம்பவான் மஹாராஜர் த்ரைவிக்ரம பிரசம்சையைச் சாற்றிக் கொண்டு திரிந்தாப்போலே; அங்கு ஈஸ்வரனுடைய சக்திப் பிரபாவம்; இங்கு ஆழ்வாருடைய கிருபா பிரபாவம். அங்குப் பிரயோஜநாந்தரபரர் வாழ்ந்தபடி; இங்கு அநந்யப்பிரயோஜநர் வாழ்ந்தபடி. அங்குக் கிருத்ரிம வியாபாரம், இங்கு அக்ருத்ரிம வியாபாரம். இனி, பதக் கிரமத்தாலே திருத்தினபடிக்குச் சாம்யமுண்டாகில் உண்டத்தனை" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. 'தொண்டீர்' என்பது, திருவாய்மொழி, 5. 2: 3.

3. "ஒண்டமிழ்ச் சடகோபன் - என்னளவில் பண்ணும் உபகாரத்தையோ நான் இயம்புவது? உலகத்தாருக்கு அவர் பண்ணின உபகாரத்தையும் சொல்லி அன்றோ? கருணையாலே என்னைத் திருத்தினபடியையும், கவி பாடி உலகத்தைத் திருத்தினபடியையும் இயம்புவன். சடகோபன் அருளை - 'தெரியச் சொன்ன ஆயிரம்' என்கிறபடியே திருவாய்மொழியைப் பாடிச் சம்சாரிகளுடைய சாட்டியத்தைப் போக்கினவருடைய கிருபையை" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

4. "ஒண்தமிழ் - ஒள்ளிய தமிழ். பெரிய ஆழத்தில் உள்ளுக் கிடந்த பதார்த்தங்கள் எல்லாம் தரையிலே காணுமாறு போலே அதிக்ருதாதிகாரமாய் அவகாஹிக்க ஒண்ணாதே, 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்னும் விஷயத்தைச் சர்வாதிகாரமாக்குகையாலே 'ஒண்தமிழ்' என்கிறது" என்பது நஞ்சீயர் வியாக்.

8. அருள்கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினன் அவ் அரு மறையின் பொருள்
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினன்
அருள்கண்டீர் இவ் உலகினில் மிக்கதே.

[1]**பொருள்:**—அருள் - எம்பெருமானுடைய திரு அருளையே, கொண்டாடும் - தமக்குப் பாதுகாவலாகக் கொண்டாடிச் செல்லுகின்ற, அடியவர்-அடியார்கள், இன்பு உற-பேரானந்தத்தை அடையும்படியாக, அ - அந்த, அரு - அறிதற்கு அரிய, மறையின் பொருள் - வேதங்களின் பொருள்களை, அருளினன் - கீதாசாரியனாக இருந்து கொண்டு பகவத்கீதை மூலமாக அருள் செய்தான்; அருள் கொண்டு-எம்பெருமானுடைய திரு அருளை முதலாகக்கொண்டு, ஆயிரம் - ஆயிரம் திருப்பாசுரங்களைக் கொண்ட திருவாய்மொழியை, இன் தமிழ் - இனிய தமிழிலே, பாடினன் - பாடித் தந்த ஆழ்வாருடைய, அருள் கண்டீர் - அருள்தான், இவ் உலகினில் - இந்த உலகத்திலே, மிக்கது - மிக்கு இருக்கிறது.

[2]மேல் திருப்பாசுரத்தில், "எண் திசையும் அறிய இயம்புகேன்" என்கைக்குக் காரணம் இத் திருப்பாசுரத்தில் கூறப்

---

1. இத் திருப்பாசுரத்திற்கு நஞ்சீயர் வியாக்கியானத்தைத் தழுவிப் பதவுரை எழுதப்படுகின்றது. "வேத ரஹஸ்யத்தை வெளியிட்ட சர்வேஶ்வரன் கிருபையைக் காட்டில் திருவாய்மொழியை அருளிச்செய்த ஆழ்வாருடைய கிருபை ஜகத்துக்கு மிக்கது என்கிறார்.........எம்பெருமான் அருளினது பிராதேசிகம்; ஆழ்வார் அருளினது சார்வத்ரிகம்; 'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்' என்றும், 'தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள்' என்று மிறே சொல்லிற்று" என்பது நஞ்சீயர் வியாக். திருவாய்மொழி, 10. 7 : 5. ஆம் பாசுரத்தின் வியாக்கியானத்தை ஈண்டு நோக்கல் தகும். அழகிய மணவாளப் பெருமாள் நாயனாருடைய வியாக்கியானத்திலும் இக் கருத்தினை நாம் காணலாம்.

2. "அருள் இத்யாதி - ஆழ்வாருடைய கிருபையைக் கீழிற் பாட்டிலே 'எண்திசையும் அறிய இயம்புகேன் ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே' என்று இவர் சொல்லக் கேட்டிருக்குமவர்கள் பகவத் கிருபை அன்றோ நாட்டாரடையக் கொண்டாடுவது; நீர் ஆழ்வாருடைய கிருபையை எண்திசையும் அறிய இயம்புகேன் என்கைக்கு அடி என்? என்ன, பகவத் கிருபையும் ஆழ்வார் கிருபையுமானால், பிராப்தி சித்திக்கும் அன்றன்றோ பகவத் கிருபை வேண்டுவது? அந்தப் பிராப்தி உண்டாவது ஞானத்தாலே அன்றோ? அந்த ஞானசித்தி ஆழ்வாராலே அன்றோ? ஆகையாலே ஆழ்வார் கிருபையே அன்றோ லோகத்தில் விஞ்சியிருப்பது என்கிறார். பிராப்தி ஞானஸாபேக்ஷமாயிருக்கும். ஞானம் பிராப்திஸாபேக்ஷமாய் இராது" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

படுகிறது. என்றது, ஆழ்வாருடைய திருஅருள், சித்து அசித்து ஈசன் என்று செப்புகின்ற மூவகைத் தத்துவங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு மேம்பட்டு இருக்கையாலே '**இயம்புகேன்**' என்கிறார் என்றபடி.

அருள் கொண்டாடும் அடியவர் - இவ் ஆழ்வார்தம்மைப் போலே இருக்குமவர்கள். [1]"அதுவும் அவனது இன் அருளே" என்றும், [2]"அருள் பெறுவார் அடியார்தம் அடியன்" என்றும் இருக்கும் இவரைப் போலே, [3]"ஆனைக்கு அன்று அருளை ஈந்த" என்றும், [4]"நின்னோடும் ஒக்க வழிபட அருளினாய்" என்றும், [5]"அருள் புரிந்த சிந்தை" என்றும், [6]"நின்னருளே புரிந்திருந்தேன்" என்றும், [7]"அருளாதொழியுமே" என்றும் இப்படிகளால் அவன் அருளைக் கொண்டாடுமவர்கள்; இப்படிப் பகவானுடைய அருளையே கொண்டாடிப் போருமவர்கள். அவர்கள் யாவர்? எனின், பகவானுடைய திருஅருளே காரணமாகத் தம்மால் வருகின்ற கர்ம ஞான பக்திகளை உபாயமாக ஆதரிக்குமவர்கள் அன்றிக்கே கேவலம் பகவானுடைய திரு அருளே உஜ்ஜீவிப்பதற்குக் காரணம் என்றிருக்குமவர்கள்.[8]என்றது, தந்தாம் பக்கல் உள்ள நலன்களைப் பகவானுடைய திரு அருள் அடியாக வந்தது என்று நினைத்திருக்குமது ஒழிய, திருவருளுக்குக் காரணமாக நினைத்திராதவர்கள் என்றபடி. இவர் இப்படி நினைத்திருக்கிறது, மற்றை

1. 'அதுவும்' என்பது, திருவாய்மொழி, 8. 8: 3.
2. 'அருள் பெறுவார்' என்பது, திருவாய்மொழி, 10. 6: 1.
3. 'ஆனைக்கு' என்பது, திருமாலை, செய். 44.
4. 'நின்னொடும்' என்பது, திருமாலை, செய். 42.
5. 'அருள்புரிந்த' என்பது, இரண்டாந் திருவந்தாதி, 59.
6. 'நின்னருளே' என்பது, பெரியாழ்வார் திருமொழி. 5. 4: 1.
7. 'அருளாது' என்பது, மூன்றாந் திருவந்தாதி, 19.
8. "அருள் கொண்டாடும் அடியவர் இன்புற - ஞானவிஷய பூதனான ஈஸ்வரனுடைய பிரியத்துக்காக அன்றிக்கே ஞான நிஷ்டரான சாத்விகர் உகக்கைக்காக ஆயிற்றுத் திருவாய்மொழி பாடிற்று. அடியவர்-சேஷ விருத்தி புருஷார்த்தம் என்னும்படி சொரூப ஞானம் பிறந்தவர்கள்; சேஷத்வ ஞானம் சேஷ விருத்தி சேஷமிறே. அருள் கொண்டாடும் அடியவர் - அப் புருஷார்த்தத்துக்குச் சாதனமும் அவனுடைய கிருபை என்றிருக்குமவர்கள்; ஆகையாலே கைங்கரியம் புருஷார்த்தம், கருணை சாதனம் என்றிருக்குமவர்கள்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

ஆழ்வார்களை; [1] "ஆழியான் அருளே", [2] "நின்னருளே புரிந்திருந்தேன்" என்பன அன்றோ அவர்கள் திருப்பாசுரங்கள்.

[3] இன்பு உற - ஆனந்தத்திலே மூழ்கிக் கிடக்க. [4] "எண்ணுதனகள் எண்ணும் நன்முனிவர் இன்பம் தலை சிறப்ப" என்கிறபடியே, சாதனத்தில் இழியாமல் பகவானுடைய அநுபவமே யாத்திரையாக இருக்கும்படியாக. [5] அவ் அரு மறையின் பொருள் அருளினன் - பிரசித்தமாய்ப் பெறுதற்கு அரிதாய் இருக்கிற மறை. என்றது, வேத ரஹஸ்யமான உபநிடதம். [6] சத்துவ குணத்திலே நிலைபெற்றிருக்கிறவர்களுக்கு அல்லது தோற்றாத அந்த உபநிடதப் பொருளை அருளிச்செய்தார். சத்துவ குணத்திலேயே நிலை பெற்றிருப்பவர்கட்கு என்றும் அழியாத செல்வம் உபநிடதமே ஆகும். "சத்துவ குண நிஷ்டருக்கு வேதமே அழியாத செல்வம் ஆகும்" என்பது பிர

---

1. மற்றை ஆழ்வார்களை என்பதற்குக் காரணம் கூறப்படுகிறது 'ஆழியான்' என்று தொடங்கி. 'ஆழியான்' என்பது, பெரிய திருமொழி, 1. 1 : 4.

2. 'நின்னருளே' என்பது, பெரியாழ்வார் திருமொழி, 5. 4 : 1.

3. "இன்புற-அவர்கள் பிரீதியைப் பெற; அவர்கள் பண்டே அருள் கொண்டாடும் அடியவர்களே யாகிலும், இவ் வர்த்தம் ஆழ்வார் அருளிச்செய்யப் பெற்றோமே என்று பிரீதரானவர்கள். ராகசித்தம் விதி சித்தமாகப் பெற்றோமே என்று பிரீதரானவர்கள்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

4. 'எண்ணுதனகள்' என்பது, திருவாய்மொழி, 10. 7 : 5.

5. "அருளினன் அவ் அரு மறையின் பொருள்-மறையின் அந்த அரும் பொருளை அருளினன். அப் பொருளை - 'கருணை சாதநம், கைங்கர்யம் புருஷார்த்தம்' என்கிற அப்பொருளை. 'வழுவிலா அடிமை செய்யவேண்டும்' என்பது, 'அடியை யடைந்து அருள் சூடி உய்ந்தவன்' என்பதாய் இவற்றை உபதேசிக்கை. பொருளை அருளினன் - தாம் வாக்கிய உச்சாரணம் பண்ண மாட்டாமையாலே பொருளை அருளினர். அரும் பொருளை அருளினன் - பிரவிருத்தி சிலர்க்குப்பட அரிதான அர்த்தத்தை நிர்த்தோஷரான சத்துக்களுக்கு அருளினர். அதுதான் ஸ்வார்த்தத்தைப் போதிப்பியாநிற்க இவர் வெளியிட வேண்டிற்று என்னே? எனின், மறை - ரஜஸ் தமஃபிரசுரர்க்கு ஸ்வார்த்தத்தை மறைத்து, ஸத்வ பிரசுரர்க்குப் போதிக்கும்படி 'மறையாய நால் வேத' மாகையாலே அவ் அர்த்தத்தை வெளியிட்டார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

6. அருளினன் என்பதற்கு அதற்குள்ள சீர்மை என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'சத்துவ குணத்திலே' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'சத்துவகுண நிஷ்டர்க்கு' என்று தொடங்கி.

"ஸாஹி ஸ்ரீஃ அம்ருதா ஸதாம்"

என்பது, யஜுர். அஷ்ட. 3 : 7.

மாணம். [1] அதாவது "ஸர்வ ரஸஃ - எல்லாச் சுவைகளையு முடையவன்" என்றும், "ரஸோவை ஸஃ-அந்தப் பரமபுருஷன் ஆனந்த சொரூபன்" என்றும் சொல்லப்படுகிற பரம் பொருளை அவன் அருளாலே அடைதல். [2] "இந்தப் பரம் பொருளே ஜீவாத்மாவை ஆனந்திப்பிக்கிறன்" என்றும், [3] "ஜீவாத்மாவினுடைய ஆனந்தத்துக்குக் காரணமாகப் பர மாத்மாவைச் சொல்லுகையாலே" என்றும் சொல்லியிருத்தல் காண்க.

அருள்கொண்டு ஆயிரம் இன் தமிழ் பாடினன் - [4] இவர் தாம் தம் புத்தியாலே அருளிச்செய்தார் அன்று; "மயர்வுஅற மதிநலம் அருளினன்" என்கிறபடியே, இறைவனுடைய திரு வருளால் கிடைத்த ஞானத்தை முதலாகக்கொண்டு அதனாலே தூண்டப்பெற்றவராய்க் கொண்டாயிற்று அருளிச்செய்தது. "என்னாகியே தப்புதல் இன்றித் தனைக் கவி தான் சொல்லி"

---

1. சத்துவகுண முடையவர்க்குத் தோற்றுகிற பொருள் யாது? என்ன, அதற்கு **விடை** கூறப்படுகிறது 'அதாவது' என்று தொடங்கி.

'சர்வரஸஃ' என்பது, சாந்தோக்யம், 3. 14 : 2.

'ரஸோவை ஸஃ' என்பது, தைத்திரீ. ஆந. 7.

2. இங்குக் கூறிய பொருளுக்குப் பிரமாணம் காட்டப் படுகின்றன 'இந்தப் பரம்பொருளே' என்று தொடங்கி.

"ஏஷ ஹ்யேவ ஆநந்தயாதி"

என்பது, தைத்திரீ. ஆந. 7.

3. "தத் தேது வ்யபதேசாச் ச"

என்பது, பிரஹ்ம சூத். 1. 1 : 15.

4. இங்குத் திருவாய்மொழி ஏழாம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி யைப் படித்தறிதல் தகும்.

"இவர் இவ் வர்த்தத்தை என்ன சப்த முகத்தாலே வெளியிட்டது என்ன, அருள் கொண்டு ஆயிரம் இன் தமிழ் பாடினன் - அந்த ஸஹஸ்ர சாகாப் பிரதி பாதிதமான அர்த்தத்தை ஸஹஸ்ர காதா முகத்தாலே வெளியிட்டார். தமிழ் பாடினன் - 'வேதத்தில் உள்ள சொற்கள் பொருள் உணர அரியவை' என்கிற படியே, துர்ப் போதமான வேத சப்தம்போலன்றிக்கே திராவிட பாஷையிலே வெளியிட்டார். ஆயிரம் இன் தமிழ் பாடினன் - பிரணவம் போலே அதி சங்கிரஹமாதல், மஹாபாரதம் போலே அதிவிஸ்திருத மாதல் அன்றிக்கே ஆயிரம் இன் தமிழாகப் பாடினர். இன் தமிழ் பாடினன்-அவன் சொன்னதும் அறியலாயிருக்கச்செய்தே அது வரை முறுகலாயிருக்கும். இது செவிக் கினிய செஞ்சொல்லா யிருக்கும். பாடினன் - 'வேட்கையால் சொன்ன பாடல்' என்கிறபடியே தம்முடைய அநுபவ ஆனந்த சாகரத்துக்குப் பரிவாக சுப வசனங்களைப் பண்ணினர். ஆனல், ஒரு புருஷ புத்தி மூலமாக வந்த இது பிர மாணமாம்படி என்? என்ன, தாம் சொன்னாகில் அன்றே அது சொல்ல வேண்டுவது. அவனுடைய அருள் மூலமாகச் சொன்ன ராகையாலே அது

என்கிறபடியே, பிறரைப் போன்று கவிபாடுகிற தாமும் ஆச்சரியமுடையராம்படி குற்றம் அற்றதாக அன்றே கவிபாடுவித்துக்கொண்டது. ஆயிரம் இன் தமிழ் பாடினன்-[1]"வால்மீகி பகவான் இருபத்து நாலாயிரம் சுலோகமாகப் பாடினர்" என்கிறது போலே ஆயிரமாக ஆயிற்றுப் பாடிற்று; [2]ஓர் ஆத்மாவின் நலத்துக்கு ஒரு பாட்டே அமையும்படி அன்றே இவர் பாடிற்று. [3]"இராமாயண காவியமானது படிக்கும்போதும் கேட்கும்போதும் இனியதாக இருப்பது" என்கிறபடியே, அறிதற்கு அரிய மறையின் பொருளை இனிமை பொருந்தியதாகவும் எல்லாரும் கற்றுப் பயன் பெறும்படியாகவும் பாடினராதலின் '**இன் தமிழ் பாடினன்**' என்கிறது.

பாடினன் அருள் கண்டீர் - [4]"மயர்வு அற மதி நலம் அருளினன்" என்னும்படி அருளவல்ல இறைவனுடைய அருளையும் விளாக்குலை கொண்டிருக்கும் அருள் ஆழ்வாருடைய திருவருள்; ஆதலின், '**பாடினன் அருள்**' என்கிறார். [5]ஈஸ்வரன் கைவிட்ட ஆத்மாக்களையும், அவர்களுடைய துர்க்கதியைக் கண்டு திருத்த ஒருப்பட்டபடியாலே இவர் அருள் கண்கூடு

சொல்லப் போகாது. 'தெரியச்சொன்ன ஆயிரம்' ஆகையாலே அருள் அடியாக வந்ததாயிற்று. 'ஆம் முதல்வன் இவன் என்று தன் தேற்றி, என் நா முதல் வந்து புகுந்து நல் இன் கவி தூ முதல் பத்தர்க்குத் தான் தன்னைச் சொன்ன என் வாய் முதல் அப்பனை' என்று ஆழ்வார் தாமே அருளிச்செய்தாரிறே" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்.

1. எல்லை இல்லாத வேதார்த்தங்களை இப்படிச் சுருங்க அருளிச் செய்தவர்கள் உளரோ? என்ன, அதற்கு விடை தரப்படுகிறது 'வால்மீகி பகவான்' என்று தொடங்கி.

"சதுர்விம்ஶத் ஸஹஸ்ராணி ஶ்லோகாநாம் உக்தவாந் ரிஷிঃ" என்பது, ஸ்ரீராமா. பால. 1 : 2.

2. நன்று; ஸ்ரீ ராமாயணத்தைப் போன்று இருபத்து நாலாயிரமாகப் பாடாமல் ஆயிரமாகப் பாடுவான் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'ஓர் ஆத்மாவின்' என்று தொடங்கி.

3. "பாட்யே கேயே ச மதுரம் ப்ரமாணை: த்ரிபி: அந்விதம்" என்பது, ஸ்ரீராமா. பால. 4 : 8.

4. "சடகோபன் அருள்" என்றாற் போன்று, "பாடினன் அருள்" என்கிறவருடைய மனோபாவம் கூறப்படுகிறது 'மயர்வற' என்று தொடங்கி.

5. "கண்டீர்" என்பதற்குக் கருத்துக் கூறப்படுகிறது 'ஈஶ்வரன்' என்று தொடங்கி. "கண்டீர்-இவ்வம்சம் நான் சொல்லவேண்டி இருந்ததோ? ப்ரத்யக்ஷமன்றோ. கண்டீர்.- அவனுடைய அருள் சாஸ்திர கம்யம்; இது ப்ரத்யக்ஷ சித்தம்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் வியாக்.

என்பார் '**கண்டீர்**' என்கிறார். [1]ஆழ்வாருடைய திருவருள் சித்து அசித்து ஈஸ்வரன் என்னும் மூன்று தத்துவங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு தான் பரந்து மேம்பட்டிருத்தலின் '**இவ் உலகினில் மிக்கது**' என்கிறார். என்றது, [2]'அதனில் பெரிய என் அவா' என்கிறபடியே இறைவனிடத்தில் ஆழ்வார் தமக்கு உண்டான காதல் அளவும் போருமாயிற்று, தம்மளவில் ஆழ்வார் செய்த திருவருளும் என்கிறார் என்றபடி. (8)

9. மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்
தக்க சீர்ச் சடகோபன் என் நம்பிக்கு ஆள்
புக்க காதல் அடிமைப் பயன் அன்றே.

பொருள் :— மிக்க வேதியர் - சிறந்த வைதிகர்களால் ஓதப்படுகின்ற, வேதத்தின் - வேதத்தினுடைய, உட்பொருள் - மறைந்திருக்கின்ற கருத்துப் பொருளானது, நிற்க - நிலைத்து நிற்கும்படியாக, பாடி - திருவாய்மொழியைப் பாடி, என் நெஞ்சுள் - என்னுடைய மனத்திலே, நிறுத்தினான் - நிலைபெறச் செய்தான்; தக்க - தகுதியான, சீர் - கல்யாண குணங்களையுடைய, சடகோபன் - சடகோபன் என்ற திருப்பெயரையுடையவரான, என் நம்பிக்கு - ஆழ்வார் திருவடிகளில், ஆள்

---

1. உலகம் என்பதனை லோகம் என்ற சொல்லின் விகாரமாகக்கொண்டு அப் பதத்திற்குரிய லோக்யத இதி - லோக: என்ற தாதுவிற்குரிய பொருள் கூறப்படுகிறது 'ஆழ்வாருடைய' என்று தொடங்கி.

2. தம் பக்கல் ஆழ்வார் செய்த திருவருள் திருஷ்டாந்த மூலம் விவரிக்கப் படுகிறது 'அதனில்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 10. 10: 10.

"இன்தமிழ் பாடினான் அருள் கண்டீர் இவ் உலகினில் மிக்கது-'கேட்டு ஆரார் வானவர்கள் செவிக்கு இனிய செஞ்சொல்லே' என்று அந்த லோகத்தில் இவருடைய பாட்டு மிக்காற் போலே இந்த லோகத்தில் இவருடைய அருள் மிக்கது. இங்கு அருள் மிக்கு அங்குப் போகம் மிகும்படியிறே லோக ஸ்வபாவங்கள் இருப்பன. இவ்வுலகினில் மிக்கது - அவனுடைய அருள் ஆழ்வாரளவிலே சுவறிவிட்டது. இவருடைய அருள் சாம்ராஜ்யம் பண்ணு நின்றது; அவனுடைய அருளைக் கொண்டாடுமவர்கள் அடியவர்களாய், இவர் அருள் உலகமடங்கக் கொண்டாடும்படி தேஜிஷ்டமாயிற்று. இவ் உலகினில் மிக்கது-இந்த உலகத்தையும் ஆழ்வாருடைய அருளையும் சீர்தூக்கிப் பார்த்தால் அதிலும் விஞ்சியிருப்பது இவர் அருள் அன்றோ. 'கடல் மண்ணெல்லாம் விலையோ என மிளிரும்' படியிறே இவருடைய கண்ணுடைமை இருப்பது" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

புக்க - அடிமை புகுவதற்குக் காரணமான, காதல் - ஆசை யானது, அன்றே - அப்பொழுதே, அடிமைப் பயன் - (ஆழ்வார் திருவடிகளில்) தொண்டு செய்தலையே பயனாக உடைத்தாயிற்று.

[1] ஆழ்வாருடைய திரு அருள் இவ் உலகினில் மிக்கது என்று அறிகைக்கு அடி என்? என்னில், என்னுடைய [2] தண்மை பாராதே வேதங்கள் அனைத்தினுடைய உட்பொருள்களைத் தமிழிலே பாடி அதனை எனக்குக் கொடுத்தருளினார் என்கிறார். [2]"நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதி" என்று எம்பெருமான் விஷயத்தில் ஆழ்

---

1. மேல் திருப் பாசுரத்துக்கும் இதற்கும் இயைபு கூறப்படுகிறது 'ஆழ்வாருடைய' என்று தொடங்கி.

"மிக்க வேதியர் இத்யாதி. கீழே ஆழ்வாருடைய குண கீர்த்தனம் பண்ணும்படி அவர் தமக்குக் கிருபை பண்ணினபடியைச் சொல்லி, அதற்குத் தண்ணீர்த் துரும்பான அநாதி கர்மங்களை ஆழ்வார் தம்முடைய பார்வையாலே பாற அடித்தபடி சொல்லி, 'அப்படியான ஆழ்வாருடைய கிருபா வைபவத்தைத் திக்குக்கள் தோறும் அறிவிக்கக் கடவேன்' என்று தம்முடைய ஆதர விசேஷத்தைச் சொல்லி, 'அந்தக் காகாசுரனை ஸ்ரீராமபிரான் தன் அருளாலே காப்பாற்றினார்' என்றும், 'அருளினன்' என்று தொடங்கி 'ஆழியான் அருள் தருவான் அமைகின்றான்' என்றது முடிவாக ரிஷிகளும் ஆழ்வார் தாமுமாகப் பகவத் கிருபையை ஆதரித்துப் போராநிற்க, நீர் ஆழ்வாருடைய கிருபா பிரசித்தியிலே பிரவணரானபடி என்? என்ன, பகவத் கிருபையிற் காட்டில் ஆழ்வாருடைய கிருபையே இந்த உலகத்தில் அபிவிருத்தமாகையாலே என்றும் சொல்லி நின்றது கீழ்.

இதில், கீழே ஆழ்வாருடைய ஞானப்பிரதானம் பிரஸ்துதமாகையாலே அவர் சகல வேதாந்த தாத்பர்யமான அர்த்த விசேஷத்தைத் தமக்கு அறிவித்த பிரகாரத்தைச் சொல்லி, அதற்கு ஈடான குணங்களை யுடையராகையாலே பூர்ணரான ஆழ்வார் விஷயத்தில் சேஷபூதன் பிரேமமே அன்றோ அவர்க்கு அடிமை செய்கையில் பிரயோஜனம் என்று உபகாரஸ்மிருதியாலே அவருக்கு சேஷபூதன் என்று பிரேம பூர்வகமாகப் பிறக்கும் ஆதரம் அன்றோ அடிமையில் முடிந்த நிலம் என்கிறார்.

கீழ் நாலாம் பாட்டிலே ஆசார்ய விசுவாசம் சொன்னார். மேல் இரண்டு பாட்டாலே ஆசாரிய வைபவமும் அவருடைய உபகார வைபவமும் சொன்னார். இதில் உபகாரப் பிரகார உபபாதனம் பண்ணுகின்றுகொண்டு தம்முடைய கிருதஜ்ஞதையைச் சொல்லுகிறார். ஆசாரியனுக்குக் கிருபையே வேஷமாய் சிஷ்யனுக்குக் கிருதஜ்ஞதையே வேஷமாய் இருக்கும்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. கங்கைக்கரையினின்றும் ஆழ்வாருடைய திவ்விய தேஜஸை நேராகக் கண்டு வந்து ஆழ்வாரை அடைந்த இம் மதுரகவிகட்கு ஓர் தண்மை உண்டோ? 'என் தண்மை பாராதே' என்பது என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'நீசனேன்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 3. 3 : 4.

வார் அருளிச்செய்ததை ஆழ்வார் திருவடிகளில் இவர் அருளிச்செய்கிறார்.

மிக்க வேதியர் - [1]மிக உயர்ந்த பிரமாணமான வேதத்தையே அடையாளமாக உடையவர்கள். "உளன் சுடர் மிகு சுருதியுள்" என்று ஆழ்வார் அருளிச்செய்யக் கேட்டவராகையாலே மிக உயர்ந்த பிரமாணம் என்கிறார் வேதத்தை. அன்றிக்கே, [2]பல சாகைகளை அத்யயனம் செய்தவர்கள் என்றுமாம். வேதத்தின் உட்பொருள்-[3]வேதங்கள் அனைத்தினுடைய

---

1. "மிக்க" என்ற அடைமொழிக்கு இருவகையாகக் கருத்துக் கூறப்படுகிறது. ஒன்று மேன்மையிலே நோக்கு. ஒன்று பன்மையிலே நோக்கு. முதல் கருத்து விவரிக்கப் படுகிறது 'மிக உயர்ந்த' என்று தொடங்கி. வேதத்திற்கு உயர்வாவது புருஷனாலே செய்யப்படாமை. 'உளன்' என்பது திருவாய்மொழி, 1. 1: 7.

2. இரண்டாவது கருத்து விவரிக்கப் படுகிறது 'பல சாகைகளை' என்று தொடங்கி.

"மிக்க வேதியர் - ஆழ்வார், தமக்கு அறிவித்த அர்த்தத்தின் சீர்மையை அருளிச்செய்கிறார். வேதியர் - வேதியராகிறார் - பாஹ்ய சாஸ்திரங்களைக் 'காண்பரோ கேட்பரோதான்' என்று கண்ணாலும் பாராதே செவியாலும் கேளாதே நித்ய நிர்த்தோஷமான வேதப் பிரமாண நிஷ்டரானவர்கள். 'வேத சாஸ்த்ராத் பரம் நாஸ்தி', 'வேதநூல் ஓதுகின்றது உண்மை அல்லது இல்லை' என்றும் சொல்லுகிறபடியே வேதத்துக்கு அவ்வருகு பிரமாணம் இல்லை என்றிருக்குமவர்கள். மிக்க வேதியர் - 'மிக்கார் வேத விமலர்' என்று ஆழ்வார் பாடே கேட்கையாலே 'மிக்க வேதியர்' என்கிறார். அன்றிக்கே, மிக்க வேதியர் என்று 'சுடர் மிகு சுருதி' என்கிறபடியே பிரத்யக்ஷாதிகளில் அதிகமான வேதப் பிரமாண நிஷ்டர் என்றுமாம்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. வேதத்திலே சொல்லப்பட்ட பொருள் இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தலே அன்றோ? அதன் உட்பொருளாவது என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'வேதங்கள்' என்று தொடங்கி. வேதத்தின் உட்பொருள்-பிரணவத்தில் சதுர்த்தி (நான்காம் வேற்றுமை) அர்த்தம்.

மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு
உற்றிலேன்; உற்றதும் உன் னடியார்க் கடிமை;
மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும்
கற்று, நான் கண்ணபுரத் துறை அம்மானே!

என்பது, திருமங்கை மன்னன் திருவாக்கு.

"வேதத்தின் உட்பொருள் - அந்த வேதத்தில் உண்டான அர்த்த விசேஷத்தை. வேதத்தின் பொருள் - அதாவது, 'எல்லா வேதங்களாலும் அறியப்படுமவன் நானே' என்றும், 'வேதப்பொருளே என் வேங்கடவா' என்றும், 'வேதாந்த விழுப்பொருள்' என்றும், சொல்லுகிறபடியே சகல வேதங்களும் ஒருமிடறாக ஓதித் தலைக்கட்டுவது பகவத் ஸ்வரூபாதிகளையிறே. உட்பொருள்-அதில் தத்விஷய பிரதி பாதகமான அம்சம் புறப் பொருளாய், ததீயப்

உட்பொருளை; வேதாந்தத்தின் உட்பொருள் அவன் அடியார்கட்கு அடிமைப் பட்டிருத்தலை எல்லையாகவுடைய பகவத் சேஷத்வம் என்றே அன்றோ வைதிக சாஸ்திரம் அறுதியிட்டது.

அறிதற்கு அரியதான இந்த உட்பொருளைக் கேட்டாருடைய அறிவிற்கு விஷயமாம்படி பாடினாராதலின் '**நிற்கப் பாடி**' என்கிறார். [1]"பரமனைப் பயிலும் திருவுடையார் எவரேலும்" என்பதும், [2]"எம்மை ஆளும் பரமர்" என்பதும் ஆழ்வார் அருளிச்செயல். என் நெஞ்சுள் நிறுத்தினான் - [3]இறைவனுடைய தொண்டிற்கும்கூட மேட்டு மடையான தமது நெஞ்சிலே இதனை நிலைத்து நிற்கச் செய்தார் ஆதலின் '**என் நெஞ்சுள் நிறுத்தினான்**' என்கிறார். கல்லைத் துளைத்து அதிலே நீரை நிறுத்துவாரைப்போலே, தொளை இல்லாத என் நெஞ்சிற்கு இதுவே விஷயமாம்படி செய்தார். இது அன்றோ என் தன்மை பாராதே என் திறத்தில் செய்த உபகாரம்.

அவர் செய்த நன்றியை நினைத்தலாலே தமக்குப் பிறந்த காதற் பெருக்கினைப் பேசுகிறார் மேல்: தக்க சீர்ச் சடகோபன்- [4]'**சர்வேஸ்வரன் கவி**' என்றால் தகுதியான கல்யாண குணங்களையுடைய ஆழ்வார். "**அயர்வறும் அமரர்கள் அதிபதி**" என்றால் சர்வேஸ்வரனுக்குப் போரும்படி இருக்குமாறு போலே, '**சர்வேஸ்வரன் கவி**' என்றால் போரும்படி ஆயிற்று ஆழ்வார் இருக்கும்படி. [5]"ஏற்கும் பெரும்புகழ் வானவர் ஈசன் கண்ணன்

பிரதி பாதகமான அம்சம் உட்பொருளாய் இருக்கும். அதில் புறப்பொருளையே சொல்லிவிடுகை அன்றிக்கே, அதற்கு ஹ்ருதயமான ததீய வைபவத்தைப் 'பயிலும் சுடர் ஒளி', 'நெடுமாற்கடிமை' இரண்டாலும் அருளிச் செய்தார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

1. 'பரமனை' என்பது, திருவாய்மொழி, 3. 7 : 1.
2. 'எம்மை' என்பது, திருவாய்மொழி, 3. 7 : 1.
3. "என் நெஞ்சுள் நிறுத்தினான் - புன்மையே வேஷமான என் நெஞ்சிலே படுத்தினார். நிறுத்தினான்-உபதேசித்தவர் தாமே குலைக்கிலும் குலையாதபடி திருடாத்யவஸாயமாக உபதேசித்தார். தத்விஷயமும் உட்பட ஊடுபோகாத என் நெஞ்சிலே ததீய வைபவமுட்பட நடையாடும்படி பண்ணினார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.
4. தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன்
 பாவிற் சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதனே
 நாவிற் சிறந்த அம் மாறற்குத் தக்க நன் நாவலவன்
 பூவிற் சிறந்த ஆழ்வான் கம்பநாட்டுப் புலமையனே.

என்பது ஈண்டு ஒப்பு நோக்கலாகும். சடகோபரந்தாதி தனியன்.

5. 'ஏற்கும் பெரும்புகழ்' என்பது, திருவாய்மொழி, 3. 9 : 11.

தனக்கு, ஏற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச் சடகோபன்" என்று தாமே அருளிச்செய்தார் அன்றே. என் நம்பிக்கு - [1]அதற்கு மேலே ஒரு நிறைவு அன்றோ இது. [2]என்னை அங்கீகரிப்பதற்குத் தகுதியான சீலம் முதலான குணங்கள் நிறைந்திருப்பவர்க்கு. [3]ஆள் புக்க காதல்-தமக்கே தொண்டு ஆக்கின ருசி.

அன்றே அடிமைப் பயன் - இந்த ருசி அப்போதே தொண்டுபூண்டு ஒழுகுதலாகிற பிரயோஜனத்தோடே கூடியதாயிற்று. பகவத் விஷயத்தில் ருசி அடியாகப் பிறந்த அடிமையின் பயன், இச் சரீரத்தைத் துறந்து அர்ச்சிராதி மார்க்கத்தாலே ஒரு தேச விசேடத்திலே சென்றால் பெறக் கடவதாக இருக்கும்; அங்ஙன் அன்றிக்கே, ஆழ்வார் பக்கல் பிறந்த ருசி இச் சரீரத்தோடே இங்கே ஆழ்வார் திருவடிகளிலே எல்லா அடிமையும் செய்யலாம்படி செய்யும். "துயர் அறு சுடர் அடி தொழுது எழு" என்று முதலிலே விரும்பிய ஆழ்வாருக்கு "முனியே நான்முகனே" என்னும் திருவாய்மொழியின் முடிவிலே அன்றோ பேறு ஆயிற்று. ஆழ்வார் விஷயத்தில் ருசி பிறந்தால் அத்துணை விளம்பியாது என்கிறார். (9)

---

1. 'தக்க சீர்" என்றதனாலே ஆழ்வாருடைய கல்யாண குணங்களைச் சொல்லியிருக்க, "நம்பி" என்பான் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'அதற்கு மேலே' என்று தொடங்கி.

2. "நம்பி - விபூதிக்காக உபதேசித்தாலும் தம்முடைய ஞானாதிகளைத் தரை காண ஒண்ணாதவர். குறைவாளரைக் குறைவறுக்கையிறே ஒருவன் பூர்த்திக்கு மேல் எல்லை. என் நம்பி - அவர் உபதேசித்த அர்த்தங்களிலும் அவருடைய பூர்த்தியிலே ஆயிற்று இவர் தோற்றது. தக்க சீர்ச் சடகோபன் என் நம்பி - 'தக்க கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பி'யான அவருடைய நம்பி அன்று, இவருடைய நம்பி. அப் பூர்த்தி என்னளவிலே வந்ததில்லையே" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. "ஆள் புக்க காதல்-அவருக்கு அடிமைப் புக்கதால் உண்டான ஆதரம். அடிமைப் பயன் அன்றே - அடிமையே பிரயோஜனமாகவுடையதன்றோ. முற்பட அடிமை புக்கு அனந்தரம் ஆதரம் நடந்து பின்பு அடிமைசெய்யுமதுவே அவருக்குப் பிரதியுபகாரம். முற்பட சேஷ பூதனைப் பின்பு பிரேமம் நடந்து பிரேம அநுரூபமான கிஞ்சித்காரமும் நடக்கவேணும். ஆசார்ய பவ்யதையும் ஆசாரிய பிரேமமும் ஆசாரிய கிஞ்சித்காரமும் இம் மூன்றும் அபேக்ஷிதமிறே சிஷ்யனுக்கு. அவர் பகவச் சேஷத்வத்தையும் பகவத் பிரேமத்தையும் பகவச் சேஷ விருத்தியையும் உபதேசித்தார். இவர் ஆழ்வாருக்குச் சேஷமாய் அவர்க்கே ஸ்நிக்தராய் அவருக்கே கிஞ்சித்கரிக்கத் தேடுகிறாராய் நின்றது. இவர் கற்றது இதிலே ஆயிற்று" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

10. [1] பயன் இன்று ஆகிலும் பாங்கலர் ஆகிலும்
செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்
குயில் நின்று ஆல் பொழில் சூழ் குருகூர் நம்பி
முயல்கின்றேன் உன்தன் மொய்கழற்கு அன்பையே.

பொருள்:—பயன் இன்று ஆகிலும் - பிறரைத் திருத்துவதனால் தமக்கு ஒரு பயன் இல்லாமற் போனாலும், பாங்கலர் ஆகிலும் - நலத்தைக் கேட்பதற்குத் தகுதி இல்லாதவர்களாக இருப்பினும், செயல் - தம்முடைய செயலாலே, நன்றாகத் திருத்தி - நடைமுறையில் வரும் அளவும் திருத்தி, பணிகொள்வான் - அடிமை கொள்வதற்காக, குயில் - குயில்களானவை, நின்று - நிலைபெற்று, ஆல் - ஆரவாரம் செய்கின்ற, பொழில் சூழ் - சோலைகள் சூழ்ந்த, குருகூர்நம்பி - திருநகரிக்குத் தலைவராக எழுந்தருளியிருக்கின்ற என் நம்பியே! உன்தன்-உன்னுடைய, மொய் கழற்கு - பெருமை பொருந்திய திருவடிகளில், அன்பையே - பக்தியையே, முயல்கின்றேன் - மேலும் மேலும் விரும்புகிறேன்.

[2] ஆழ்வார், தமக்கு அருள்செய்த உபகாரத்தை நினைந்தவாறே தாம் இதற்கு முன்பு ஆழ்வார் திறத்தில் நின்ற நிலை அடங்க முதலடியும் இட்டிலராகத் தோற்றுகையாலே, அவர் செய்த உபகாரத்தைப் பேசுகிறார். நன்று; ஆசாரியன் செய்த உபகாரத்துக்குக் கைம்மாறு இல்லையோ? என்னில், [3]"தனக்கு பகவானைப் பற்றிய ஞானத்தை எவன் கொடுக்கிறானோ, அவனுக்குப் பணிவிடை செய்தல் வேண்டும்; பூமண்டலம் முழுதினையும் விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் அது அவன்

---

1. "பயனன்றாகிலும்" என்பதும், "குயில் நின்றார் பொழில்" என்பதும் முன்னைய பாடம். வியாக்கியானம் நோக்கித் திருத்தப்பட்டது. "குயில் ஆலும் வளர்பொழில் சூழ்" என்பது பெரிய திருமொழி, 3. 6 : 8.

2. மேலே "ஆட்புக்க காதல் அடிமைப்பயன் அன்றே" என்று கூறினவர் "பயனின்றாகிலும் பாங்கலராகிலும்" என்று கூறுதல் பொருந்துமோ? என்கிற சங்கையிலே, மேலே கூறியது தம் நெஞ்சில் படாமையாலே இங்ஙனம் கூறுகிறார் என்று அதற்கு விடை கூறப்படுகிறது 'ஆழ்வார்' என்று தொடங்கி. தமக்கு - மதுரகவிகளுக்கு. 'உபகாரம்' என்றது, 'என் நெஞ்சுள் நிறுத்தினான்' என்றதனை. இதற்கு முன்பு - "பயனின்றாகிலும்" என்ற திருப்பாசுரத்தைப் பாடுதற்கு முன்பு.

3. யோ தத்யாத் பகவத்ஜ்ஞானம் குர்யாத் வா தர்மதர்ஸநம்
க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாத் ந தத்துல்யம் கதஞ்சந.
என்பது, விஷ்ணுதர்மம். 70 : 78.

செய்த செயலுக்கு ஒப்பாக மாட்டாது" என்கிறபடியே, ஐந்நூறு கோடி யோஜனைப் பரப்புள்ளதான பூமியும் ஒப்பு அன்று என்றது சாஸ்திரம். அவன் இவனுக்குக் கொடுத்தது அற்ப் பெரியதாக இருப்பது ஒரு [1] மிதுநத்தை ஆனால் இப்படியே இருப்பது ஒரு மிதுநத்தைக் கொடுத்தால் அன்றோ இவன் கைம்மாறு செய்தவன் ஆனான் ஆவது. ஆகையாலே, ஆசாரியன் திறத்தில் எல்லாம் செய்தாலும் அவன் செய்த உதவியைப் பார்த்தால் இவன் ஒன்றும் செய்திலனாய், என்றும் ஒக்கக் குறைவாளனாகவே இருப்பன்.

பயன் இன்று ஆகிலும்-உலகத்தில் ஒருவனுக்கு ஒருவன் உதவி செய்வது ஒரு பயனைக் கருதியேயாம்; அங்ஙன் ஒரு பயன் இல்லாதிருக்கச் செய்தேயும் என்றபடி. பாங்கு அலர் ஆகிலும் - பயன் இல்லாவிட்டால் சொல்லுகிற நலத்தைக் கேட்பதற்குத் தகுதியாகவாவது இருக்கலாமே அன்றோ, அங்ஙன் ஒரு பாங்கு இன்றிக்கே இருந்தார்களேயாகிலும் என்றபடி. இப்படி இருக்குமவர்களுக்கு நலம் சொல்லுகைக்குக்

---

1. 'மிதுனத்தை' என்றது, பெரிய பிராட்டியாரோடு கூடிய இறைவனை. திருமாலை என்றபடி. மிதுனம் - இரண்டு. "பயன் இன்றாகிலும் இத்யாதி. கீழ்ப் பிரபந்தத்தில் ஓடின தாத்பரியம் ஆழ்வாருடைய ஸர்வப் பிரகார வைலக்ஷண்யமும் இப்படி விலக்ஷணரான ஆழ்வார் தம் பக்கல் பண்ணின உபகார வைபவமுமிறே. தம்முடைய தோஷத்துக்கு எதிர்த்தட்டான ஆழ்வார் வைலக்ஷண்யமும், தம்முடைய குறைக்கு எதிர்த்தட்டானஉபகாரகத்வமும் இவ்விரண்டையும் சொல்லிக் கொண்டு போந்தார் கீழ். இப்பாட்டில், அவ் வுபகாரத்துக்குப் பிரதியுபகாரம்தேடிக் காணாமையாலே தெகுடு ஆடுகிறார். 'வேதத்தின் உட்பொருள் நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்', 'எவன் எனக்குப் பரம் பொருளை அளிக்கிறானோ அவனே எனக்குத் தலைவன்' என்று முமுக்ஷு தசையோடு முக்த தசையோடு வாசி அற உபகாரஸ்மிருதி நடக்குமது போக்கிப் பிரதியுபகாரம் பண்ணித் தலைக்கட்டப் போகாதிறே.

பிரதியுபகார நிரபேக்ஷத்வம் ஆசாரிய லக்ஷணமாய், பிரதியுபகார ஸாபேக்ஷத்வம் சிஷ்ய லக்ஷணமாகையாலே அதற்கு வழி தேடிக் காணாமையாலே அலமருகிறார். உபகாரம் அதற்குப் பிரதியுபகாரம் தேடுகையிலே மூட்டும், உபகார கௌரவம் பிரதியுபகாரம் இல்லாதபடி பண்ணும்; அதற்குச் சத்ருச பிரதி உபகாரமாகவேணுமே; அது உண்டாகிலிறே இவன் பண்ணலாவது; இனி எத்தைச் செய்வோம் என்கிற தலைசீய்ப்போடே காலம் போக்கு மித்தனை; இவன் திருத்தித் தருகையாலே பகவத் விஷயத்துக்கு ஆத்ம சமர்ப்பணம் பண்ணலாம்; இவன் தானே திருத்தினவற்றை இவனுக்குக் கொடுக்கை சத்ருசம் அன்றே" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

காரணம் என்? என்னில், [1] இவர்கள் கெடும் கேட்டினைக் கண்டு பொறுக்கமாட்டாமையேயாம் என்க.

நன்று; இப்படி உபதேசித்தார் உளரோ? என்னில், உளர்; இராவணனுடைய தீ நெறியைக் கண்டு [2] "இராவணா! நீ இவ் உலகத்தில் வசிக்க விரும்பினையேயாகில், கோரமான கொலையை விரும்பாமல் இருந்தாயேயாகில், ஆடவர் திலகனான அந்த இராமபிரானோடு நண்பனாக இருத்தல் தகும்" என்று அவனுக்கு நலத்தைச் சொன்னாள் அன்றோ பிராட்டி. ஒருவன் தலைக்கடையையும் புறக்கடையையும் அடைத்துக் கொண்டு அகத்துக்குள்ளே கிடக்க, அகம் தீப்பிடித்து வேவா நின்றால், கண்டு நின்றவர்கள் அத் தீயினை அவிப்பது, தங்களுக்கு ஒரு பயனைப் பார்த்தாதல் உள்ளே கிடந்தவன் விரும்பியதற்காகவாதல் அன்றே? இப்படியே ஆயிற்று ஆழ்வார்படியும்.

தமக்கும் ஒரு பயன் இன்றி, எதிர்த்தலையும் பாங்கலரேயாயின் அத்தகையான் உய்யும் வகைதான் யாங்ஙன்? என்னில், அதற்கு விடை அருளிச்செய்கிறார் மேல்: 'செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்' என்று. செயல் நன்றாக - தம்முடைய செயலாலே எல்லாம் நன்றாம்படி செய்து. அன்றிக்கே, இவன் செயல்தான் நன்றாம்படி செய்து என்றுமாம். திருத்திப் பணிகொள்வான் - [3] "தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ள வல்ல" என்று பேறும், பேற்றினை

---

1. "தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவர் அடி பணிந்தவர்க்குமே இவை உள்ளது" என்ற ஆசாரிய ஹ்ருதய ஸ்ரீ ஸூக்தி இங்கு நினைத்தல் தகும். தாய் - சீதாபிராட்டியார். மகன் - பிரஹ்லாதன். தம்பி - ஸ்ரீ விபீஷணாழ்வான். இவர்க்கும் என்றது, நம்மாழ்வாரை. இவர் அடி பணிந்தவர் என்றது, எம்பெருமானாரை.

2. மித்ரம் ஔபயிகம் கர்த்தும் ராமஃ ஸ்தாநம் ப்ரீப்ஸதா
வதம்ச அநிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷபஃ.
என்பது, ஸ்ரீராமா. சுந். 21 : 19.

3. "திருத்தி" என்பது திருந்தாதாரையும் திருத்தி எனப் பொருள்படுமாதலால் அதனை விளக்குவதற்கு அதற்கு மறுதலைப்பொருள் கூறப்படுகிறது 'தீர்ந்த' என்று தொடங்கி. 'தீர்ந்த' என்பது, திருவாய்மொழி, 3. 5 : 11.

"செயல் நன்றாகத் திருத்தி - இவர் உபதேசித்த அர்த்தம் என் நெஞ்சிலே பட்டு அதுதான் அத்யவஸாய பர்யந்தமாய், அவ்வளவன்றிக்கே அநுஷ்டான சேஷமாய், அவ் வநுஷ்டானந்தான் சத் அசத் அநுஷ்டான மிஸ்ரமாகையன்றிக்கே சத் அநுஷ்டானமேயாம்படி திருத்தினார். முற்படச் சிரவணமும் சிருதமான அர்த்தத்தில் மனனமும்; மனனமான அர்த்தத்தில் மஹா விஸ்வாசமும்,

அடைதற்குரிய வழியும் அவனே என்று அறுதியிட்டு இருக்குமவர்களுடைய விரோதியைப் போக்கி, அடிமைகொள்ளுமவன் என்றதே அன்றோ சர்வேஸ்வரனை. [1] அங்ஙன் அன்றிக்கே, இவை ஒன்றும் இன்றிக்கே இருக்குமவர்களையும் திருத்திப் பணிகொள்ளுமவர் என்கிறது ஆழ்வாரை. பணிகொள்ளுமவராகித் திருக்குருகூர்க்குத் தலைவராய் எழுந்தருளியிருக்கின்ற நம்பியே என்பது பொருள். பணி கொள்வான்: வினையெச்சம். 'பணிகொள்வான்' என்றதனைக் 'குருகூர் நம்பி' என்றதனோடு கூட்டுக.

மேல் திருத்திப் பணி கொள்ளும்படிக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'குயில் நின்று ஆல் பொழில்' என்று. இவர் ஒரு காலத்திலே ஆற்றாமையாலே [2] "காணவாராய்" என்று கூப்பிடுவதும் ஒரு பாசுரம் உண்டு; [3] "யாவர் நிகர் அகல் வானத்தே" என்று களித்துச் சொல்லுவதும் ஒரு பாசுரம் உண்டு; இவர்

விச்வஸ்தமான அர்த்தத்தில் அநுஷ்டானமும், அதில் அசத் அநுஷ்டானம் கலசாதே சத் அநுஷ்டானமேயாய்ப் போருகையுமிறே செயல் நன்றாகத் திருத்துகையாவது. அவன் தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளுமித்தனை; இவர் கருந்தரையிலே திருத்துமவராயிற்று அவன் அதிகார நிஷ்பத்தி பிறந்தால் ப்ராப்பிய விரோதிகளைப் போக்கிப் பணி கொள்ளும். அவ் வதிகார நிஷ்பத்தி தன்னையும் கொடுத்தாயிற்று இவர் அடிமைகொண்டது. அதிகார நிஷ்பத்தி ஆசாரியனாலே, புருஷார்த்த நிஷ்பத்தி ஈஶ்வரனாலே. அதிகாரமாவது ஞான அநுஷ்டானங்களில் புரையறுதி யாகையாலே, செயல் நன்றாகத் திருத்தி என்று அவராலேயிறே இவர்க்கு உண்டாயிற்று" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

1. "பணி கொள்வான் - பகவத் பாகவத விஷயங்களில் கிஞ்சித் காரத்திலே மூட்டினார். திருத்தின பலம் விநியோகம் கொள்ளவேணுமே; இவரும் அவருக்கு உகப்பாகவாயிற்று பகவத் பாகவத விஷயங்களுக்கு அடிமை செய்வது. பகவத் கிஞ்சித் காரமும் வேணும்; ...வைஷ்ணவ கிஞ்சித் காரமும் வேணும்; பகவத் பாகவத விஷயங்களுக்கு அடிமை செய்யும் ஆசாரியனுக்குப் பிரியமாக; பகவத் பாகவத விஷயம் இரண்டும் உகக்கைக்கு ஆசாரியனுக்கு அடிமை செய்யும். பதத்ரய நிஷ்டையைப் போலே கிஞ்சித்காரத் திரயமும் இவனுக்கு அபேக்ஷிதமாய் இருக்கும்; ஸ்வரூபம் பகவத் கிஞ்சித் காரத்திலே மூட்டும். ...பாகவத பிரீதியும், இவ் வியக்தி துவயத்தினுடைய வைபவத்தை உபதேசித்த உபகார ஸ்மிருதியால் வந்த இவனுடைய பிரீதியும் ஆசார்ய கிஞ்சித்காரத்திலே மூட்டும். இப்படி ஒன்றுக்கு ஒன்று பிரவர்த்தகமாய் ஆயிற்று மூன்று விஷயமும் இருப்பது. இதில் ஒன்று நிருபாதிக சம்பந்தம். மற்றவை இரண்டும் ஸோபாதிக சம்பந்தம். அதில் ஒன்று உத்தேஶ்யதை உபாதியாகப் பிறக்கும். ஒன்று உபகாரத்வம் உபாதியாகப் பிறக்கும்" என்ற அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக். இங்கு நினைத்தல் தகும்.

2. 'காணவாராய்' என்பது, திருவாய்மொழி, 8. 5 : 2.

3. 'யாவர்' என்பது, திருவாய்மொழி. 4. 5 : 8.

பாசுரத்தைக் [1]கேட்ட குயில்களும் செவி ஏற்றுலே இப்பாசுரத்தையே சொல்லும். ஆக, இரண்டு பாசுரங்களையும் பயிற்றுவன குயில்கள் ஆயிற்று. [2]"ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல்" என்கிறபடியே அறிவுடைய மக்கள் அளவன்றிக்கே திரியக்குக்கள் அளவும் ஏறும்படியாய் ஆயிற்று ஆழ்வாருடைய நிறைவு இருப்பது; ஆதலின் [3]'குருகூர் நம்பி' என்கிருர்.

[4]உன் தன் மொய் கழற்கு அன்பையே முயல்கின்றேன் - உன்னுடைய பெருமை பொருந்திய திருவடிகளில் அன்பையே விரும்பாநின்றேன். செய்கிற அடிமையில் மன நிறைவு பிறவாமையாலே திருவடிகளிலே எனக்கு அன்பு வேண்டும்

1. "குயில் இத்யாதி - அசேதநமான பக்ஷிஜாதமடைய ஆழ்வார் பரிசரத்திலே திருந்தித் திருவாய்மொழி பாடக் கற்றுப் பாடா நின்றுல் சேதனனுன நான் திருந்தச் சொல்லவேண்டுமோ? சாகா சம்பந்த முண்டாகையாலே அக் குயில்கள் திருவாய்மொழியை யாயிற்றுப் பாடுவது. அவை பாடும் குயில்களாகையாலே தம்பிரான்மாரைப் போலே ஆழ்வார்க்குத் திருவாய்மொழி பாடுவன ஆயிற்று; ஒரு தேச சம்பந்தத்தாலே செவ்வாய்க் கிளி நான்மறை பாடுமானுல் இத் தேச வர்த்திகளுக்குத் திருவாய்மொழி பாடச் சொல்ல வேண்டாவிறே. தாம் மதுரவாக்கு ஆகையாலே மதுரவாக்கான குயிலையிட்டுப் பொழிலைச் சிறப்பிக்கிருர்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக்.

2. 'ஊரும் நாடும்' என்பது, திருவாய்மொழி, 6. 7 : 2.

3. "குருகூர் நம்பி - பிரதியுபகார நிரபேக்ஷதைக்கு அடியான பூர்த்தியை யுடையவரே! பகவத் கிஞ்சித் காரத்துக்குத் துவாரம் பெறினும் ஆசாரிய கிஞ்சித் காரத்துக்குத் துவாரம் இல்லை. இவன் திருஷ்டத்தைக் கர்மத்தின் கையிலே பொகட்டு, அதிருஷ்டத்தை ஈஸ்வரன் கையிலே பொகட்டிருக்குமவனிறே" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக்.

4. "உன் தன் மொய் கழற்கு அன்பையே முயல்கின்றேன் - உன்னுடைய பரம போக்யமான திருவடிகளில் உண்டான சிநேகமடியாகப் பிரதியுபகாரம் தேடி உத்சாஹியாநின்றேன். இவ் உத்சாஹத்துக்கு மேற்படப் பிரதியுபகாரம் பண்ணுகைக்கு விரகு இல்லையே! அவர் தாம் 'உனக்கு என்செய்கேன்' என்பது, 'அப்பனுக்கு எதுவும் ஒன்றும் இல்லை செய்வது இங்கும் அங்கே' என்பது போலே."

"மொய்கழல் - 'மொய் கழலே ஏத்த முயல்' என்று ஆழ்வார் அவ் விஷயத்தை அருளிச்செய்யக் கேட்டுப் போந்த வாசனையாலே இங்கும் 'மொய் கழல்' என்கிருர். கீழே 'அவன் பொன்னடி' என்று ஆழ்வார் திருவடிகளின் பாவனத்வம் சொன்னுர். இங்கே போக்யதை சொல்லுகிருர். வகுளாபிராமமாய் ஸ்ரீமத்தா யிறே ஆழ்வார் திருவடிகள் இருப்பது. இத் திருவடிகளின் போக்யதை அன்பைக் கொடுத்தது. அன்பு பிரதி யுபகாரத்திலே மூட்டிற்று. அதற்கு இடம் காணுமையாலே அலமராநின்றேன்; இவ் அலமாப்பு யாவச்சைதந்யமிறே" என்பன அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் வியாக்.

என்று வேண்டுகிறார். [1] "என்னைத் தீமனம் கெடுத்தாய் உனக்கு என் செய்கேன்" என்று ஆழ்வார்தாம் இறைவன் திறத்திலே தடுமாறினாற்போலே, ஆழ்வார் செய்த உபகாரத்துக்குக் கைம்மாறு காணாமையாலே தடுமாறுகிறார். (10)

11. அன்பன் தன்னை அடைந்தவர்கட்கு எல்லாம்
அன்பன் தென்குருகூர் நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே.

பொருள் :— அன்பன் தன்னை - அடியார்களிடத்தில் அன்பு உள்ளவனான எம்பெருமானை, அடைந்தவர்கட்கு எல்லாம் - அடைந்த அடியார்கள் எல்லாரிடத்திலும், அன்பன் - பக்தியை உடையவரான, தென் குருகூர் நகர் நம்பிக்கு - நம்மாழ்வார் திறத்தில், அன்பனாய் - பக்தியை யுடையராய், மதுரகவி சொன்ன சொல் - ஸ்ரீ மதுரகவிகள் அருளிச்செய்த இப் பிரபந்தத்தை, நம்புவார் - விரும்புகிறவர்களுக்கு, பதி - வசிக்கும் இடமாவது, வைகுந்தம் காண்மின் - பரமபதமே ஆகும்.

முடிவில், [2] இப் பிரபந்தத்தையே தஞ்சமாக நினைத்திருப்பவர்கட்கு வசிக்கும் இடம் பரமபதம் என்கிறது.

---

1. 'என்னை' என்பது, திருவாய்மொழி, 2. 7 : 8.

2. "ஆழ்வாருடைய போக்யதையும், அவர் தமக்கு ஸ்வாமி என்னுமிடத்தையும், தமக்குக் காலக்ஷேப விஷயம் அவருடைய பிரபந்தம் என்னுமிடத்தையும், ஆழ்வாரோட்டை சம்பந்தமடியாக ஈஶ்வரன் மேல் விழுந்து அநுபவித்தபடியையும், தம்முடைய தோஷம் பாராமல் ஆழ்வார் விஷயீகரித்தபடியையும், தோஷம் தான் அவருடைய தேசப் பிரவேச மாத்திரத்தாலே தம்மை விட்டுக் கழன்றபடியையும், பின்பு அத் தோஷம் மேலிடாதபடி ஆழ்வார் குணகீர்த்தனமே தமக்குக் காலயாத்திரையாம்படி அவர் தம்மைத் திருத்தினபடியையும், அவருடைய கிருபா வைபவத்தை உலகமடங்கலும் தாம் பரப்ப வேண்டும்படி தமக்குப் பிறந்த ஆதரத்தையும், பகவத் கிருபையிற் காட்டில் ஆழ்வாருடைய கிருபை உலகத்திலே அதிசயித்தபடியையும், அக் கிருபை அடியாக அவர் உபகரித்த உபகாரத்தையும், அவ் உபகார பரம்பரைகளுக்குப் பிரதியுபகாரம் தேடி அவருடைய பூர்த்தியாலே பிரதியுபகாரத்துக்கு அவகாசம் காணாமல் தாம் அலமருகிறபடியையும் இறே கீழே சொல்லி நின்றது. இவ் அர்த்தங்களுக்கு வாசக சப்தம் இட்டுச் சொன்ன இப் பிரபந்தத்திலே ஆதரமுள்ளார்க்கு நித்தியசூரிகள் பரமபதத்திலே ஒரு பிராப்தி பண்ணிக் கொடுப்பர்கள் என்கிறார் நிகமத்தில்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

[1] அன்பன் - வாத்சல்யம் என்னும் குணத்தை நிருபகமாக உடையவன் இறைவன் ஆகையாலே அவனை 'அன்பன்' என்கிறார். இன்னானுக்கு அன்பன் என்று விசேடியாமை யாலே [2]"பகைவர்களிடத்திலும் அன்பு உள்ளவரே" என்கிற படியே, எல்லாப் பொருள்கள் திறத்திலும் ஆயிற்று அவனு டைய வாத்சல்யம் இருப்பது. அதற்குக் காரணம் என்? என்னில், [3]"எல்லா உலகங்கட்கும் தந்தையும் தாயும் திருமகள் கேள்வனான இறைவனே" என்றும், [4]"தேவர்களுக்கும் அசுரர் களுக்கும் பொதுவான தெய்வம்" என்றும் பிறவியால் உண் டான சம்பந்தம் எல்லார்க்கும் பொது ஆகையாலே அன்பும் எல்லாரிடத்திலும் பொதுவாக இருக்கின்றது.

---

1. "அன்பன் - தன்னைச் சிநேகித்தார்க்குத் தான் ஒருவனுமே விஷய பூதனுமாய், தான் சிநேகிக்கு மிடத்தில் விபூதியாகச் சிநேகிக்குமவன். தன் னைச் சிநேகித்தவன் புறம்பே சிலவற்றைச் சிநேகித்தானாகில் அவனுக்குத் தன் னைப் பெற விரகில்லை; தான் எல்லாரையும் சிநேகியானாகில் தான் இன்றிக்கே ஒழியும். 'வாத்ஸல்ய மஹோததே' என்கிறபடியே கடலுக்குள்ளே மாணிக்கங்க ளுடைய மறைந்து கிடக்குமாறு போலே, இவ் வாத்ஸல்ய குணத்தில் குணாந் தரங்களுடைய மறையும்படி ஆயிற்று, இது சொரூபத்தை விளாக்குலை கொண்டு கிடக்கும்படி. சொரூபந்தான் ஸர்வதா ஸாத்ருச்ய ரஹிதமானாற் போலே ஆயிற்று, இக் குணமும் ஸத்ருச ரஹிதமாய் நிகரில் புகழாய் இருக்கும்படி. அந்த சாத்ருச்ய ராஹித்யத்தால் பெற்றது பரத்வசித்தி. இந்த ஸாத்ருச்ய ராஹித்யத்தால் பெற்றது சரண்யத்வ சித்தி. உபக்ரமத்திலே 'கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன் என்னப்பன்' என்று சீல சௌலப்ய சாமித்வங்களை உபாதானம் பண்ணி, உபஸம்ஹாரத்திலே வாத் சல்ய குணத்தோடே தலைக் கட்டுகிறார். அவை ஒரு தட்டு; இது ஒரு தட்டிறே. இத்தைப் பற்ற விறே 'ஶீலாதி குணஸம்பந்ந: ஸர்வலோக ஏகவத்ஸல:' என்று ரிஷிகளும் சொல்லிற்று" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. ஸகே ராகவ தர்மஜ்ஞ ரிபூணமபி வத்ஸல
அப்யநுஜ்ஞாதும் இச்சாமி கமிஷ்யாமி யதாகதம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 50: 56.

3. ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:
கச்சத்வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா:.

என்பது, பாரதம் ஆரண். 192: 56.

4. தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யம் அதி தைவதம்
சர்வதா சரணத்வந்த்வம் வ்ரஜாமி ஶரணம் தவ.

என்பது, ஜிதந்தா. 2.

"தாழி தரையாகத் தண்தயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக் கை நோவ
ஆழிகடைந்து அமுதம் எங்களுக்கே ஈந்தாய்
அவுணர்கள் தாம் நின்னடிமை யல்லாமை உண்டோ.

என்பது, ஈண்டு ஒப்பு நோக்கல் தகும். (கம்ப. ஆரண். சரபங். 29.)

ஆழ்வார் அன்பு அங்ஙன் பொதுவாய் இராமல் [1]"பரமனைப் பயிலும் திருவுடையார் எவரேலும் அவர் எம்மை ஆளும் பரமர்" என்கிறபடியே, பகவானுடைய சம்பந்தம் காரணமாகவே இவருடைய அன்பு இருக்குமாதலின் '**அன்பன் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம் அன்பன்**' என்கிறார். தம்மைப் போலே [2] "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்பார் எல்லாரையும் தமக்கு நாதராக ஆயிற்று இவர் நினைத்திருப்பது.

[3]"அடியார் அடியார் தம் அடியார் அடியார்" என்று அவன் சம்பந்திகள் அளவும் செய்த அன்பினாலே நிறைந்தவராக இருப்பர் ஆதலின் '**நம்பி**' என்கிறது. [4]'தென் குருகூர் நகர் நம்பிக்கு அன்பனாய்-இறைவனும் அவன் அடியார்களும் என்கிற இவர்கள் திறத்தில் அன்றி, ஆசார்யன் திறத்திலே அன்புடையராய்.

[5] தனக்குப் பேறு வேண்டியிருக்கில் பகவானைப் பற்ற அமையும்; அங்ஙன் அன்றிக்கே ஈஸ்வரன் உகப்பே

---

1. 'பரமனை' என்பது, திருவாய்மொழி, 3. 7 : 1.

"அடைந்தவர்கட்கெல்லாம் அன்பன்-அவர்களுடைய ஜாதியாதி நியமம் பாராதே தத் சம்பந்தமே ஹேதுவாக நல்லராயிருக்குமவர். 'கும்பி நரகர்கள் ஏத்துவரேலும் - எம் தொழுகுலம் தாங்களே,' 'எத்தனை நலம் தான் இலாத சண்டாள சண்டாளர்களாகிலும், மணிவண்ணற்கு ஆள் என்று உள் கலந்தார் அடியார் தம் அடியார் எம் அடிகளே' என்றிருக்குமவர். அடைந்தவர்கட்கு எல்லாம் அன்பன் - அவனைச் சேஷியாக வரிக்கவுமாம், பந்துத்வேந வரிக்கவுமாம், உபாயத்வேந வரிக்கவுமாம், உபேயத்வேந வரிக்கவுமாம், இவருக்கு ஆதரிக்க வேண்டுவது ஏதேனும் ஒரு சம்பந்தமாயிற்று" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. 'அடிக்கீழ்' என்பது, திருவாய்மொழி, 6. 10 : 10.

3. 'அடியார்' என்பது, திருவாய்மொழி, 3. 7 : 10.

4. "தென்குருகூர் நகர் நம்பி-இவருக்கு இப்படிப் பகவத் பாகவத விஷயத்தில் ஸ்நேகத்துக்கு ஊற்றுவாய் திருநகரியில் பிறப்பாயிற்று; துறை வாய்ப் பாலே பயிரும் வாய்க்குமிறே; இவருக்குக் காதல் கடல்புரைய விளைவிக்கைக்கு அடி அந்த நிலப் பண்பாயிற்று. நகர் - அந் நகர வாசத்தாலே யாயிற்று இவர் சாராசார விவேகஜ்ஞராயிற்று. நம்பி - இப்படி ஆத்மகுண பூர்ணரான ஆழ்வார்", "நம்பிக்கு அன்பனாய் - இப்படி இவருடைய பகவத் ஜ்ஞாந பக்தியாதிகளாகிற ஆத்மகுணம் கண்டாயிற்று இவருக்குச் சிநேகம் பிறந்தது. அவருக்குப் பகவத் பிரேமம் ஸ்வரூபப் பிரயுக்தமாய் 'ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்' என்று நிரூபகமானாற் போலே, இவருக்கும் ஆழ்வாருக்கு நல்லரானவர் என்று நிரூபகம். அவர் பிரணவ நமஸ்ஸுக்கள் இரண்டிலும் நிஷ்டராய்ப் போருவர். இவர் மத்யம பதத்திலே நிஷ்டராய் இருப்பர்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

5. நன்று ; இறைவனையும் அவன் அடியார்களையும் பற்றாமல், ஆசாரியரான ஆழ்வார் திறத்திலே அன்புடையராதற்குக் காரணம் என்? என்ன, "அன்பன் தன்னை யடைந்தவர்கட்கு எல்லாம் அன்பன், நம்பிக்கு அன்பன்" என்ற பதங்களிலே நோக்காகத் 'தனக்குப் பேறு' என்று தொடங்கும் வாக்கியம் முதற் கொண்டு மேலே வரும் ஐந்து வாக்கியங்களால் விடை கூறப்படுகிறது.

பேறு என்று இருக்கில் பாகவதர்களைப் பற்ற அமையும்; [1] "ஞானியே எனக்கு ஆத்மா என்பது என் கொள்கை" என்றும், "பாண்டவர்கள் எனக்குப் பிராணன்" என்றும் இறைவன் தானே கூறி உள்ளமை காண்க. அன்றிக்கே, ஈஸ்வரனோடு ஸ்ரீ வைஷ்ணவர்களோடு வாசி அற எல்லாருடைய உகப்பும் புருஷார்த்தம் என்று இருக்கில் ஆசார்யனைப் பற்ற அடுக்கும். [2] "ஆசார்யனை யுடையவனே அறிகிறான்" என்று ஆயிற்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் உகப்பது.

[3] முதன் முதலிலே ஆசாரியன், தனக்கு அறிவின்மையைப் போக்கு முகத்தாலே ஆத்ம ஞானத்தைப் பிறப்பித்தவனும் பகவானைப் பற்றும் வேளையிலே புருஷகாரத்தைச் செய்கின்றவனும், தன்னுடைய அநுஷ்டானத்தாலே இவனை நல்வழியே கொடுபோய்ப் பேற்றின் பெருக்கத்தைச் செய்து கொடுக்கக் கூடியவனும் இருத்தலின், பல வழியாலும் குறிக்கொள்ளத் தக்கவன் ஆசாரியனேயாவன்.

மதுரகவி சொன்ன சொல்-[4] ஆழ்வாரைத் தாம் சொன்ன பாசுரம் தமக்கு இனிதாக இருக்கையாலே 'மதுரகவி' என்

---

1. பாகவதர்களைப் பற்றுதல் இறைவனுக்கு உகப்பு என்பதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'ஞானியே' என்று தொடங்கியும், 'பாண்டவர்கள்' என்று தொடங்கியும்.

> உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்
> ஆஸ்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவ அநுத்தமாங்கதிம்.

என்பது, ஸ்ரீ கீதை, 7 : 18.

> த்விஷந்தம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத்
> பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணாஹி பாண்டவா:.

என்பது, பாரதம் உத்தியோகபர். 74 : 27.

2. ஆசாரியனைப் பற்றுதல் எல்லாருடைய உகப்புக்கும் காரணம் ஆம் என்பதற்குப் பிரமாணம் காட்டப்படுகிறது 'ஆசாரியனை' என்று தொடங்கி.

> "ஆசாரியவாந் புருஷோவேத"

என்பது, சாந்தோக்ய உபநி. 6. 14 : 2.

3. அவர்கள் உகப்புக்காகப் பற்றுதலே அன்றி, ஆசாரியன் செய்யும் உபகாரத்தை நோக்கியும் அவனைப் பற்றவேண்டும் என்று வேறும் ஒரு காரணம் கூறப்படுகின்றது 'முதன் முதலிலே' என்று தொடங்கி.

4. "மதுரகவி - அவர் தத் விஷயத்தைக் கவி பாடுகையாலே 'என் நாவில் இன்கவி' என்றாற் போலே, இவரும் ஆழ்வாரைக் கவி பாடுகையாலே தம்மை 'மதுரகவி' என்கிறார். நம்பிக்கு அன்பனாய் மதுரகவி-நெஞ்சுக்குப் பணி ஆழ்வார் பக்கல் சிநேகமாய், வாய்க்குப் பணி அவருடைய குண ஸ்தோத்திரமே ஆனவர்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

கிறார். நம்புவார் பதி வைகுந்தம் - [1] இனிதாய் இருந்தது இல்லை யாகிலும் இப் பிரபந்தத்தைத் தஞ்சமாக நினைத்திருக்குமவர் களுக்கு வசிக்கும் இடம் பரமபதம்.

ஆழ்வார் உத்தேசியர் ஆனால் திருநகரி அன்றோ அடையத் தக்க இடமாவது? என்னில், [2] திருநகரியில் பொலிந்து நின்ற பிரான் ஆணையும், ஆழ்வார் ஆணையுமாய் இருபுரியாகச் செல் லும். அங்ஙன் அன்றிக்கே, ஆழ்வார் ஆணையேயாகச் செல்லும் பரமபதம். இதனை [3] "அடியார் நிலாகின்ற வைகுந்தம்" என் றும், [4] "வானவர் நாடு" என்றும் வருவன கொண்டு அறிதல் தகும்.

[5] **நம்பி திருவழுதி வளநாடு தாசர்** 'நம்புவார் பதி வைகுந்தம்' என்று அவர்கள் இருந்த தேசம் காண் பரமபதம் என்று

---

1. சொல் நம்புவார் என்னுமல் "சொன்ன சொல் நம்புவார்" என்று "சொன்ன" என்ற மிகையால் போதருவதோர் பொருள் கூறப்படுகிறது 'இனிதாய் இருந்ததில்லை யாகிலும்' என்று தொடங்கி. "சொன்ன சொல்- இதுவும் ஒரு சொல்லே என்று விஸ்மிதராகிறார். நம்புவார்-இத்தை ஆசைப்படு மவர்கள். இவ் அர்த்தத்தை வியுத்பத்தி பண்ணி விடுதல் செய்கை அன்றிக்கே, இதிலே நசையுடையராய் இவ் இயலிலே எப்போதும் பரிசயிப்பது, இதற்குள் ஓடுகிற ஆழ்வாருடைய பிரபாவங்களிலே வித்தராவது, இப் பிரபாவத்தை எப்போதும் ஒருவர் சொல்லக் கேட்க ஆசைப்படுவதாய், இப்படி நசை பண்ணிப் போருவார்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

2. "இவர்களுக்குத் திருநகரியே பிராப்யஸ்தலமாய் இருந்ததே யாகிலும் அவர்கள் ஆதரத்துக்காக அங்கே போய் அங்கும் ஆழ்வாரை அநுப விக்கப் பெறுவர்கள்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வியாக்.

3. 'அடியார்' திருவிருத்தம், செய். 75.

4. 'வானவர் நாடு' என்பது, திருவாய்மொழி, 3. 9: 9.

5. "அதவா, நம்புவார் இருந்த இடமே வைகுந்தம் என்னவுமாம், திருநாடு என்றும் லீலா விபூதி என்றும் விபாகம் இல்லையோ? என்ன, நம்பி திருவழுதி வளநாடு தாசர் வார்த்தை - 'கூரத்தாழ்வான் மகன் பிறந்த பின்பு இடைச்சுவர் தள்ளி ஒரு போகியாயிற்றுக் காண் என்று பணித்தான்" என்பது நஞ்சீயர் வியாக். "இவ் விபூதியும் இவ் விபூதியிலுள்ளாரும் பாக்ய ஹீனரானால் அடியேன் செய்வது என்? நாய்க் குடலுக்கு நறு நெய் தொங்குமோ? என்னை இவ் விபூதி பொறுக்குமோ? இன்னம் சில நாள் இங்கே அடிமை கொண்ட ருளின் பரமபதத்திற்கும் இதற்கும் சுருளும்படியும் கட்டேனோ? என்று பெரு மாள் தம்மை விசேஷ கடாக்ஷம் செய்தருளின ராஜகுல மகாத்மியம் தோன்ற வார்த்தை அருளிச்செய்தார்" என்னும் குருபரம்பரை வாக்கியங்கள் இங்கு நினைத்தல் தகும்.

சொல்லுவர். [1]"உரைக்க வல்லார்க்கு வைகுந்தமாகும் தம் ஊர் எல்லாம்" என்னக் கடவதன்றே. கூரத்தாழ்வான் மகன் பிறந்த பின்பு சம்சாரமும் பரமபதமும் இடைச் சுவர் தள்ளி [2]ஒரு போகி ஆயிற்றுக் காண் என்று பெற்றி பணித்தார் என்று பிள்ளை அருளிச்செய்வர்.

கண்ணிநுண் சிறுத்தாம்பு விரிவுரை முற்றுப் பெற்றது.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

நஞ்சீயர் நலங்கழல் வாழ்க.

நம்பிள்ளை நற்றாள் வாழ்க.

பெரியவாச்சான்பிள்ளை பேரருள் வாழ்க.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அடிமலர் வாழ்க.

---

1. 'உரைக்க வல்லார்க்கு' என்பது, திருவாய்மொழி, 5. 3 : 11.

2. பரமபதத்தில் அநுபவம் இங்குக் கிட்டுகையாலே ஒரு போகியாயிற்று என்றபடி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

கண்ணிநுண் சிறுத்தாம்பு

தம்பிரான்படி அவதாரிகை

ஸ்ரிய:பதியாய், அவாப்த சமஸ்தகாமனுய், சமஸ்த கல்யாண குணத்மகனுய், சர்வ ஸ்வாமியான சர்வேஸ்வரன், [1] "பஞ்சசக்திமயமாய் இந்தப் பிரகிருதியின் சம்பந்தம் இல்லாததாய்ச் சுத்தசத்துவ குணமயமாய் இன்பத்திற்கு இருப்பிடமான பரமபதத்தில் இறைவியான பிராட்டியாரோடு கூடப் பரம ஈஸ்வரனுய் ஞானம் முதலான குணங்களால் நிறைந்திருக்கிறவனுன இந்த அரி நித்தியசூரிகளுக்கும் முத்தர்களுக்கும் அநுபவிக்கத் தக்கவனுக இருக்கிருன்" என்று சொல்லுகிறபடியே, பஞ்சோபநிஷண்மயமாய்ச் சுத்தசத்துவத்துக்கு இருப்பிடமாய் எல்லை இல்லாத ஆனந்தமயமான பரமபதத்திலே நித்தியமாயும் குற்றங்கள் இல்லாததாயும் உள்ள ஞானம் முதலான குணங்களை உடையராய், தனது திருவுள்ளத்தைப் பின்பற்றியுள்ள ஸ்வரூபத்தையும் இரக்ஷணத்தையும் செயல்களையுமுடைய நித்தியசூரிகளாலே எப்பொழுதும் கைங்கரியம் செய்யப்படுகின்ற இரண்டு திருவடித் தாமரைகளை உடையவனுய், நித்தியர்களையும் முத்தர்களையும் தன் அநுபவத்தாலே ஆநந்திப்பித்துக்கொண்டு, தானும் எல்லை இல்லாத ஆநந்தத்தை உடையவனுய்ப் போரா நிற்க;

இவ் உலகத்தில் உள்ளார் அந்த நித்தியர்களையும் முக்தர்களையும் போன்று தன்னை அநுபவிப்பதற்குச் சம்பந்தம் உண்டாயிருக்க, அதனை இழந்திருக்கிறபடியைக் கண்டு, துக்கம் நிறைந்த மனத்தினை உடையவனுய், இவர்களைப் பிழைப்பிப்பதில் உண்டான நசையாலே, அசித்தினும் வேறுபடாத

1. "பஞ்ச சக்திமயே திவ்ய ஶுத்த ஸத்வே ஸுகாகரே"
த்ரிபாத் விபூதௌ பகவாந் ஈஶ்வர்யா பரமேஶ்வர:
நித்ய முக்தைக போக்ய: அஸௌ மோததே ஸததம் ஹரி:.

என்பது, பிரமாணம்.

வர்களாய் அதனாலே போக மோக்ஷங்களுக்கும் தகுதி அற்ற வர்களாய்க் கிடக்கிற நிலையிலே, [1]"பிரளய காலத்தின் முடிவில் அசேதனத்தைப் போன்ற உயிர்களைச் செயலுடையராதல் பொருட்டு இந்திரியங்களோடும் சரீரங்களோடும் சேர்க்கத் திருவுள்ளம்பற்றித் திருவுள்ளம் இரங்கிப் படைத்தான்" என்கிறபடியே, பேரருள் குடிகொண்ட திருவுள்ளத்தை உடையவனாய், தனது திருவடித் தாமரைகளை அடைவதற்குத் தகுதியாகக் [2]"கை கால் முதலிய உறுப்புக்களுடன் கூடியதும் விசித்திரமானதுமான இச் சரீரம் சர்வேஸ்வரனை அடைவதற்காக ஆதிகாலத்தில் படைக்கப்பட்டது" என்கிறபடியே, கரண களேபரங்களைக் கொடுத்து, ஒரு தொழிலைச் செய்தல் செய்யாமைக்குரிய ஆற்றல்களையும் உண்டாக்கி, ஞானத்தின் காரியமாய் விடவேண்டியவற்றை விடுதற்கும் பற்றவேண்டியவற்றைப் பற்றுதற்கும் உரிய அறிவிற்குத் துணையாக, [3]"அருட்கடலான இறைவன் நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிவதற்குச் சாதனமான விளக்கினைப் போன்ற வேதத்தினைக் கொடுத்தான்" என்கிறபடியே வேதங்களைப் பிரமாணமாக அருளிச்செய்தான்.

பின்னர், மநு முதலானவர்களுக்கு அந்தர்யாமியாக நின்று மக்களுக்குரிய உடலையும் உயிரையும் பற்றிய சாஸ்திரத்தை வெளியிட்டருளினான். அந்தச் சாஸ்திரத்தைப் பயில்வதற்குப் பல தகுதிகள் வேண்டியிருப்பதாலும், பயில்வதற்குப் பல காலம் வேண்டியிருப்பதாலும் செய்தற்கு அரிய செயலாக இருப்பதனைத் திருவுள்ளம்பற்றி, மேற்கூறிய தகுதிகள் ஒன்

---

1. அசிதவிசேஷிதாந் ப்ரளய ஸீமநி ஸம்ஸரத:
கரண களேபரை: கடயிதும் தயமாந மநா:
வரத நிஜேச்சயைவ பரவாந் அகரோ: ப்ரக்ருதிம்
மஹத் அபிமாநபூத கரணாவலி கோர கிணீம்.

என்பது, ஸ்ரீரங்கராஜஸ்தவம் 2. 41.

2. விசித்ரா தேஹ சம்பத்தி: ஈஸ்வராய நிவேதிதும்
பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யதா:.

என்பது, விஷ்ணு தர்மம்.

3. ஹர்த்தும் தம: ஸதஸதீச விவேக்து மீஸ:
மாநம் பிரதீபமிவ காருணிகோ ததாதி
தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்
தத்ரைவ கேபி சபலா: ஶலபீபவந்தி.

என்பது, ஸ்ரீரங்கராஜஸ்தவம், 2 : 1,

றும் வேண்டி இராமையாலே எளிதாய் மக்களின் உயிரையே பற்றியதான திரு அட்டாக்ஷர பிரஹ்மவித்யையைத் தானே வெளியிட்டருளினன்.

அங்ஙனம் வெளியிட்ட அளவிலும் பயன் படாமையாலே ஓலைப்புறத்தே செல்லாத இராச்சியத்தை எடுத்துவிட்டுச் செலுத்திக் கொள்ளும் அரசர்களைப் போலே "**நாமே சென்று சம்சாரிகளைத் திருத்தக் கடவோம்**" என்று இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களைச் செய்து இவர்கள் இருக்கிற இடத்திற்குத் தானே வந்து திருத்தப் பார்த்தான்; அங்ஙனம் பார்த்த இடத்தும் ஒருவரும் திருந்தக் காணாமையாலே விஜாதீயரான நம்மால் ஒருபடியாலும் திருத்த ஒண்ணாதபடியாய் இருந்தது. இனி, இணக்குப்பார்வை இட்டு மிருகம் பிடிப்பாரைப் போலே சஜாதீயரைக் கொண்டு காரியம் கொள்ள வேண்டும் என்று அறுதியிட்டுத் தன்னுடைய நிர்ஹேதுகமான திரு அருளுக்கு இலக்கான ஆழ்வார்களை அவதரிப்பித்தான்.

அவர்கள் ஆவார்:—சர்வேஸ்வரனாலே மயர்வு அற மதி நலம் அருளப்பெற்றவர்கள் ஆகையாலே, பிறப்பு இறப்புக்களில் உழன்று திரியும் மக்கள் அனைவரும் விடத்தக்கனவற்றையும் பற்றத் தக்கனவற்றையும் அறிந்து உய்வு பெறுதற்கு உடலாகச் சர்வாதிகாரமான தமிழ் மறைகளான திவ்வியப் பிரபந்தங்களை அருளிச்செய்து உலகத்தினை வாழ்வித்தவர்கள் சிலர் ஆயிற்று.

இவர்களில் முதல் ஆழ்வார்கள், வியாசர் முதலான பரம ரிஷிகளில் வேறு பட்டவர்களே ஆயினும், உலக ஞானமும் கலசி ஊர் ஊராகத் திரிந்தார்கள் என்பது ஒன்று உண்டு. திருமழிசைப்பிரான் முதலான ஆழ்வார்கள் சிலகாலம் உலக ஞானம் மேலிட்டுப் பின்பு பகவானுடைய நிர்ஹேதுகமான திரு அருளுக்கு இலக்கு ஆனார்கள் என்பது ஒன்று உண்டு.

அங்ஙனம் கூறப்படுகின்ற குறைகள் ஒன்றும் இன்றிக்கே, நம்மாழ்வார் [1] "எங்ஙனம் திருத்துழாயானது தோன்றும்போதே வாசனையோடே தோன்றுகிறதோ" என்கிறபடியே, திருத்துழாய் மணத்தோடே தோன்றுமாறு

1. "உத்பத்யதே யதா லோகே துளஸீ கந்த ஸம்புதா" என்பது, பிரமாணம்.

போலே, [1] "கேவலம் என் இச்சையால் மாத்திரமே ஒவ்வொரு வர்க்கு ஒவ்வொரு காலத்தில் திருஅருள் புரிகிறேன்" என்கிற படியே, பகவானுடைய நிர்ஹேதுகமான திரு அருளாலே கருவிலே முடி சூடப்பட்டவராய், உலக ஞானம் முன்னவான செயல்கள் ஒன்றும் இன்றிக்கே, [2] "குழந்தையான நம்மாழ்வார் பதினாறு வயது வரையில் ஊமையாக இருப்பார்" என்கிறபடியே, திரு அவதாரம் தொடங்கி பதினாறு வயதுவரையிலும் முலைப்பால் அருந்துதலும் இன்றியே, பேசுதல் முதலான செயல்களும் இன்றியே, [3] "உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்கிறபடியே, தாரக போஷக போக்யங்கள் எல்லாம் எம்பெருமானேயாய், அவனுடைய குணங்களின் அநுபவமே வளர்க்க வளர்ந்து போந்தார் ஒருவர் ஆயிற்று.

இனி, அவருடைய பிரபாவத்தை அறுதியிட்டு உரைக்கும் போது பிராட்டிமாரிலும் நித்தியசூரிகளிலும் உபய விபூதியிலும் வேறுபட்டவராய் இருப்பர். யாங்ஙனம்? என்னில், [4] "பின்னைகொல் நிலமாமகள் கொல் திருமகள்கொல்" என்று ஒவ்வொரு தன்மையாலே அவர்களோடு ஒக்க விகல்பிக்கலாம் படி மூவர் படியையும் உடையராய் இருப்பர். இதற்குமேலே, "பிறந்திட்டாள்" என்கிறபடியே, வேறு ஒருவரிடத்திலும் காண முடியாத வேறுபாட்டினை உடையளான இவள் ஒருத்தி இங்ஙனே பிறப்பதே! [5] "என்ன மாயம்கொலோ இவள் நெடுமால் என்றே நின்று கூவுமால்" என்று ஈடுபடும்படிக்கு உடலான ஏற்றத்தை உடையராய், [6] "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும் நிலை இடம்" என்கிறபடியே இட வேற்றுமையாலும் உபய விபூதியிலும் அடங்காத தன்மையராய் இருப்பர்.

---

1. *நாஹம் புருஷகாரேண ந சாப்யந்யேந ஹேதுநா*
கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந.

என்பது, பிரமாணம்.

2. "*பால ஆஷோடஶ அப்தாத் து மூகபாவம் கமிஷ்யதி*"

என்பது, பிரமாணம்.

3. 'உண்ணும்' என்பது, திருவாய்மொழி, 6. 7 : 1.
4. 'பின்னைகொல்' என்பது, திருவாய்மொழி, 6. 5 : 10.
5. 'என்ன' என்பது, திருவாய்மொழி, 6. 5 : 10.
6. 'அடியார்' என்பது, திருவிருத்தம், செய். 75.

[1]"இனி யாவர் நிகர் அகல் வானத்தே" என்றும், [2]"மாறு உளதோ இம் மண்ணின் மிசையே" என்றும் வெளிப்படையாக உபய விபூதியிலும் தம்மோடு ஒப்பார் ஒருவரும் இலர் என்று தாமே அருளிச்செய்தார் அன்றோ.

இவ் ஆழ்வாருக்கு ஒப்புச் சொல்லலாவார் இவ் உலகத்திலும் இலர்; நித்தியவிபூதியிலும் இலர். தம் படி தாமும் அறியார்; இவ் உலகினரும் அறியார்; ஈஸ்வரனும் அறியான். ஒரு சாதனத்தை முடியச் செய்து இதனாலே நமக்கு இப்படி வீறு உடைமை வரும்என்று இருக்க வந்தது அல்லாமையாலே தாமும் அறியார்; இவரைப் போன்று எல்லாவற்றிலும் வேறுபட்ட சிறப்புடையாரை இவ் உலகத்திலே காணாமையாலே இவ் உலகினரும் அறியார்கள்; தன்னுடைய ஞானம் சக்தி முதலான குணங்கள் [3]"ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் இம் முச்செயல்களும் இடைவிடாமல் நடக்கின்றன" என்கிறபடியே, தொன்றுதொட்டு வருகின்ற படைப்பின் பரம்பரையில் (தொடர்ச்சி) வேறு ஒரு பொருளிலே இப்படிப் பலிக்கக் காணாமையாலே சர்வேஸ்வரனும் அறியான். [4]"விண்ணுளாரிலும் சீரியரே" என்கிறபடியே நித்தியசூரிகளிலும் வேறுபட்டவராய் இருப்பர். அன்றியும், புருடோத்தமனான சர்வேஸ்வரனோடேயும் ஒப்புச் சொல்லலாம்படியான பெருமை அன்றோ இவருடைய பெருமை.

[5] "எட்டு விதமான பக்தியானது எந்த மிலேச்சனிடம் காணப்படுகிறதோ அவனே பிராஹ்மண சிரேஷ்டன், அவனே முனிவன், அவனே செல்வவான், அவனே துறவி, அவனே பண்டிதன், அவனுக்கு ஞானத்தை உபதேசிக்கலாம், அவனிடமிருந்தும் ஞானோபதேசம் பெறலாம், **அவன் என்னைப் போன்று பூசிக்கத் தக்கவன்**" என்றும், [6] "ஞானி

---

1. 'இனி யாவர்' என்பது, திருவாய்மொழி, 4. 5 : 8.
2. 'மாறுளதோ' என்பது, திருவாய்மொழி, 6. 4 : 9.
3. அவ்யுச்சிந்நாஃ ததஃ து ஏதே ஸ்ருஷ்டி ஸ்திதி அந்த ஸம்யமாஃ. என்பது பிரமாணம்.
4. 'விண்ணுளாரிலும்' என்பது, திருவிருத்தம், செய். 79.
5. பக்திஃ அஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே
   ஸவிப்ரேந்த்ரோ முநிஃ ஸ்ரீமாந் ஸயதிஃ ஸசபண்டிதஃ
   தஸ்மைதேயம் ததோ க்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதாஹ்யஹம்.
   என்பது, காருடபுரா. 219 : 6, 10.
6. "உதாராஃ ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்பது, ஸ்ரீ கீதை. 7 : 18.

யானவன் எனக்குத் தாரகன்" என்றும், சொல்லுகிறபடியே, சர்வேஸ்வரன் தானே ஞானத்தின் ஏற்றத்தைக் கொண்டு ஒவ்வொருவரைத் தன்னோடு ஒப்பாகவும் தனக்குத் தாரகமாகவும் கூறினபடி கண்டால் இவர் திறத்தில் சொல்ல வேண்டாவே அன்றோ. மேலும், [1] "புவியும் இரு விசும்பும் நின்னகத்த நீ என், செவியின் வழி புகுந்து என் உள்ளாய் - அவிவின்றி, யான் பெரியன் நீ பெரியை என்பதனை யார் அறிவார், ஊன் பருகு நேமியாய் உள்ளு" என்கிறபடியே, எல்லா உலகங்களும் உன் நினைவிலே கிடக்கின்றன, இத்தகையனான நீ என்னுடைய செவியின் வழியாகப் புகுந்து நீக்கம் இன்றிக்கே என்னுடைய மனத்திலே உளன் ஆகாநின்றாய்; இப்படியான பின்பு உலகங்களையுடைய நீயோ, உலகத்தை எல்லாம் உள் அடக்கிய உன்னை என்னுள் அடக்கிய நானோ பெரியவன் என்று அறிவார் இலர்; தடை இல்லாத ஆற்றலையுடையவனான நீயேதான் இதனை அறுதியிட்டுக் காணாய் என்று உபயவிபூதிகளையுமுடைய இறைவனோடே மறுதலைக்கும்படியான பெருமையை யுடையராய் இருப்பர்.

[2] "தெய்வத்தினமோர் அனையீர்களாய்" என்று ஒருவர் இருவர் அன்றிக்கே, நித்தியசூரிகள் எல்லாரும் கூடினாலும் தமக்கு ஒரோ வகைக்கு ஒப்பாம்படியான பெருமையை உடையராய் இருப்பர்.

இப்படி மற்றையோர் எல்லாரைக் காட்டிலும் வேறுபட்டவராய், எல்லாவகையாலும் வேறுபட்ட சிறப்பினையுடையவரான இவ் ஆழ்வார் அவதரித்தது, மக்கள் செய்த புண்ணியத்தின் பலமாயிற்று. [3]"மஹாத்மாவான கிருஷ்ணனான சூரியன் எல்லா உலகங்களுமாகிற தாமரை மலர்வதற்காகத் தேவகியாகிற கிழக்குத் திக்கில் தோன்றினான்" என்கிறபடியே சர்வேஸ்வரன் அவதரித்தாற் போலே ஆயிற்று இவ் ஆழ்வார் அவதரித்ததும்.

அவதாரத்தின் காரிய வேற்றுமையாலே அச்சுத பானுவினுடைய தோற்றத்தைக் காட்டிலும் வகுளபூஷண பாஸ்க

---

1. 'புவியும்' என்பது, பெரிய திருவந்தாதி, செய். 75.
2. 'தெய்வத்தினம்' என்பது, திருவிருத்தம், செய். 23.
3. ததோகில ஜகத்பத்ம போதாயாச்யுத பானுநா
   தேவகீ பூர்வசந்த்யாயாம் ஆவிர்பூதம் மஹாத்மநா.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5, 3 : 1.

ரோதயம் வேறுபட்டதாக இருக்கும். [1]"எவருடைய திருவாய் மொழிப் பாசுரங்கள் ஆயிரமும் மக்களுடைய அக இருள்களைப் போக்குகின்றனவோ, நாராயணன் சங்கு சக்கரங்களோடு கூடினவனாய் எவரிடத்தில் வசிக்கிறானோ, எவருடைய பிறப்பிடமான திருக்குருகூரைச் செவியில் கேட்ட மாத்திரத்தில் அந்தணர்கள் வணங்குகின்றார்களோ, அப்படிப்பட்ட வகுளாபரணரான நம்மாழ்வாராகிய சூரியனுக்கு வணக்கம்" என்கிறபடியே, அச்சுதபாநுவுக்கு மலராத மனத்தாமரைகளும் மலர்ந்து, சூரியனாலே போக்க முடியாத உள் இருளான அறிவின்மை நீங்கியதும் வகுளபூஷண பாஸ்கரன் தோன்றின பின்பே அன்றோ.

இப்படி அக இருளாகிய அறிவின்மையை நீக்குகின்றவராய், [2]"ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்ற" என்கிறபடியே, எல்லாரும் தம்மைப் போல் பகவானுக்கே உரியவராம்படி அவதரித்த இவ் ஆழ்வார் திறத்திலே "தேவு மற்று அறியேன்" என்று சேஷித்வ சரண்யத்வ பிராப்யத்வங்களை அறுதியிட்டு அவர் ஒருவரையே பற்றினவராய்ப் போருமவர் ஆயிற்று ஸ்ரீ மதுரகவி ஆழ்வார்.

இப்படி இவர் அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலே செய்யத் தக்க காரியம் என்று அறுதியிடுகைக்கு வந்த வழிதான் யாது? என்னில், நம்மாழ்வாரைப் [3]"பொய்ந்நின்ற ஞானமும்" என்ற திருப்பாசுரம் தொடங்கி [4]"அவா அற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" என்ற அளவும் செல்ல அநுபவித்த இடத்தில் அவர் தமக்குப் பயனாகத் திருவாய்மொழியிலே "பயிலும் சுடர் ஒளி", "நெடுமாற்கு அடிமை" என்ற திருவாய்மொழிகளில் பேற்றிற்கு எல்லைநிலமான அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலையே அறுதி இடுகையாலே தம்முடைய ஆசாரியனுக்குக் குறிக்கோளான அர்த்தமே

1. யத் கோஸஹஸ்ரம் அபஹந்தி தமாம்ஸி பும்ஸாம்
நாராயணோ வஸதி யத்ர ஸ ஸங்கசக்ர:
யந்மண்டலம் ச்ருதி கதம் ப்ரணமந்தி விப்ரா:
தஸ்மை நமோ வகுளபூஷண பாஸ்கராய.

என்பது, பாராங்குசாஷ்டகம்.

2. 'ஊரும் நாடும்' என்பது, திருவாய்மொழி, 6. 7 : 2.
3. 'பொய்ந்நின்ற' என்பது, திருவிருத்தம், செய். 1.
4. 'அவாவற்று' என்பது, திருவாய்மொழி, 10. 10 : 11.

தாமும் குறிக்கொள்ளத் தக்கதாம் என்று நினைத்து, அவன் அடியார்களுக்குள் முதன்மை பெற்றவரான இவ் ஆழ்வாரையே "தேவு மற்று அறியேன்" என்று பற்றுகிறார்.

ஆசாரியன் விரும்பி மேற்கொண்டது ஒன்றே சத்துவ குணமுடையவர்களும் மேற்கொள்ளத் தக்கது என்னுமிடம் மஹாபாரத சாரமான ஸ்ரீ சஹஸ்ரநாம அத்தியாயத்திலே சொல்லப்பட்டது. ஸ்ரீ வீடுமர் பக்கலிலே எல்லா அர்த்தங்களையும் குறைவு அறக் கேட்ட தருமபுத்திரன், ஸ்ரீ வீடுமன் தனக்கு உத்தேசியமாகப் பற்றின சொரூப உபாயங்களே தனக்கு உத்தேசியம் என்று நினைத்து, [1]"பல தர்மங்களிலும் எந்தத் தர்மம் மிகச் சிறந்தது என்று தேவரீர் நினைக்கின்றீர்" என்று கேட்க, [2]"தாமரைக் கண்ணனான புருடோத்தமனைத் துதித்து அருச்சித்து வணங்குதலாகிய இதுவே எல்லாத் தர்மங்களிலும் மேலான தர்மம் என்பது எனது உட்கோள்" என்று தனக்கு விருப்பமான அர்த்தத்தை உபதேசித்தான் அன்றோ அவனும்.

திரிபுரா தேவியாரை எம்பெருமானே பற்றத்தக்க பரம்பொருள் என்று நீங்கள் பற்றியது பிரமாண பிராபல்யத்தாலேயோ? என்று கேட்க, "அது ஒன்றும் அன்று, **எம்பெருமானார் காடிச்சால்மூலையில்** தேவதையைப் பற்றினாராகில் அதுவே எங்களுக்கும் பற்றத்தக்க பொருள் ஆகக் கடவது" என்றாள். அந்த நியாயத்தாலே, ஆழ்வார் தமக்குத் தஞ்சமாக நினைத்திருந்த அவன் அடியார்கட்கு அடிமையையே விரும்பித் தமக்கும் புருஷகாரமாக அறுதியிடுகிறார்.

இதுதான் ஸ்ரீராமாயண புருஷர்களில் ஸ்ரீ சத்ருக்நாழ்வான் பக்கல் அநுஷ்டானத்தின் முடிவாகக் காணப்பட்டது. ஸ்ரீ வால்மீகி பகவான் [3]"வேதப்பொருளை விவரணம் செய்வதற்காக அவர்களைக் கற்பித்தார்" என்கிறபடியே, வேதத்தின் பொருளை வெளிப்படுத்துவதற்காகத் தோன்றின ஸ்ரீராமாயண புருஷர்கள் நால்வரும் தர்மங்களை நிலைநிறுத்துவதற்காக அவதரிக்கையாலே நான்கு தர்மங்களை அநுஷ்டித்

1. இச் சுலோகத்தை மேலே பக். 7-இல் காண்க.
2. இதனை மேலே பக். 7-இல் காண்க.
3. இதனை மேலே பக். 8-இல் காண்க.

துக் காட்டினர்கள். [1]"உலகத்தில் தர்மங்களைச் செய்பவனும் செய்விப்பவனும் ஸ்ரீராமபிரானே" என்கிறபடியே, செய்விப்பதற்காக, [2] "ஒருவன் சொன்னதை ஒருவன் செய்யக் கடவன்" என்கிற முறை நேராக அழிந்து கிடக்கையாலே தந்தை சொல்லைக் காப்பாற்றுதல் முதலியவற்றாலே சாமாந்ய தர்மத்தை அநுஷ்டித்தார் பெருமாள். [3]"தந்தையின் சொல்லாகிய ஆணையால்", [4]"அகத்தியருடைய வார்த்தையினால்", [5]"சுக்கிரீவன் வார்த்தையினால்" என்பனவே அன்றோ பெருமாளுடைய அநுஷ்டானம்.

ஒரு காரணமும் பற்றாமலே தலைவனாக இருக்கிற இறைவன் திறத்தில் அடியவனான ஒருவன் தொண்டினைச் செய்து தான் உளனாகக் கடவன் என்கிற விசேட தர்மத்தை அநுஷ்டித்தார் இளைய பெருமாள். [6]"என்னை அடியவனாக வைத்துக் கொள்ளும்; இதில் குற்றம் ஒன்றும் இல்லை", [7]"உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்" என்பனவே அன்றோ இவருடைய அநுஷ்டானம்.

[8]"வீரனே! கடலுக்குக் கரைபோலே உள்ள நான் உம்முடைய இராச்சியத்தையும் பாதுகாக்கக் கடவேன்; அங்ஙனம் இல்லையாகில், உம்முடைய இராச்சியத்திலே வாழக் கடவேன் அல்லேன்; வீரரான தசரதசக்கரவர்த்தி சென்ற உலகம் செல்லக் கடவேன்" என்று சொல்லுகிறபடியே, [9] "தனக்கு முன் செல்லும் இராமபிரானைத் தர்மத்தாலும் பலத்தாலும் காப்பாற்றினர்" என்கிறபடியே உம்மைப் பாதுகாத்தலே அன்றியே உம்முடைய இராச்சியத்தையும் பாதுகாக்கக் கடவேன்; எனக்கு அடிமை சொரூபம் ஆனாலும் உம்மால் என்னை மீற ஒண்ணாதுகாணும். "அஹம் வேலேவ ஸாகரம் - கடலுக்குக் கரை உறுப்பாக இருக்கச்செய்தேயும்

1. இதனை மேலே பக். 9. காண்க.
2. இதனை மேலே பக். 9. காண்க.
3. இதனை மேலே பக். 9. காண்க.
4. இதனை மேலே பக். 9. காண்க.
5. இதனை மேலே பக். 9. காண்க.
6. இதனை மேலே பக். 10. காண்க.
7. இதனை மேலே பக். 10. காண்க.
8. இதனை மேலே பக். 10. காண்க.
9. இதனை மேலே பக். 10. காண்க.

கரையைமீறித் தாண்டமாட்டாதே அன்றோ கடல். அப்படியே நீர் பெரியீர் என்ன, உம்மால் என்னை விஞ்ச ஒண்ணுதுகாணும். ப்ரதிஜாநாமி - சூளுறவு செய்கிறேன். தேவீர - ஒரு கோழை முன்னேயோ நான் சூளுறவு செய்கிறது? நான் சூளுறவு செய்தால் அதனைத் தலைக்கட்டித் தரவல்ல ஆண்பிள்ளைத் தனமுடைய உம்முடைய முன்பே அன்றோ? மாபூவம் - இப்படிச் செய்திலேனாகில் உம்முடைய திருமுன்னர் வசிக்கப் பெறுதொழிகையு மன்றிக்கே உம்முடைய இராச்சியத்திலும் வசிக்கப் பெறுதவன் ஆகிறேன். வீரலோகபாக் - உம்மை முடிசூட்டி அநுபவிக்கப் பாரித்து அது பெறுதே போன சக்கரவத்தி புக்க உலகம் புகுகிறேன்" என்கிறபடியே, நிர்ப்பந்தித்து அடிமை செய்கை அன்றிக்கே "தலைவன் உகந்த அடிமையை அடியவன் செய்யக் கடவன்" என்னும் விசேட தர்மத்தை அநுஷ்டித்தார் ஸ்ரீபரதாழ்வான்.

இப்படி இருக்கிற ஸ்ரீ பரதாழ்வானை அல்லது அறியா திருக்கையாலே, பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலுக்கு எல்லை நிலமான அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலை அநுஷ்டித்தான் ஸ்ரீசத்ருக்நாழ்வான். [1]"பாவம் இல்லாதவனும் உட்பகைவர்களாகிய இந்திரியம் ஐந்தையும் வென்றவனும் அன்பினால் தூண்டப்பட்டவனுமான ஸ்ரீ சத்ருக்நாழ்வான், மாமன் விட்டிற்குச் செல்லுகிற ஸ்ரீ பரதாழ்வானாலே அப்பொழுது அழைத்துச் செல்லப்பட்டான்" என்பதன்றோ இவருடைய அநுஷ்டானம்.

"கச்சதா" என்கிற நிகழ்காலச் சொல்லாலே போகிற இடத்திலே தனக்கு என்ன ஒரு பிரயோஜனம் உண்டாயாதல், இங்குத் தாய் தந்தையர்களைக் கேள்வி கொள்ளுதல், தமையனாரான பெருமாளைக் கேள்விகொள்ளுதல்செய்தலின்றிக்கே, அவனை ஒழிய ஜீவிக்கமாட்டாதவன் ஆகையாலே போனான் என்கை.

"மாதுல குலம்" - யுதாஜித்து அழைத்ததும் அவனை ஆகையாலே போக்கில் குறிக்கோளும் அவனுக்கு; இவன் அவனைக் குறிக்கோளாகக் கொண்டு போனான் என்கை.

"பரதேந" - சக்கரவர்த்தியும் துஞ்சிப் பெருமாளும் இராச்சியத்தைப் பொகட்டுப்போய் இளைய பெருமாளும் தொடர்ந்து அடிமைசெய்ய வேண்டும் என்று போய், ஸ்ரீ சத்

1. இப்பொருள் அமைந்த சுலோகத்தை, 11-ஆம் பக். காண்க.

ருக்நாழ்வானும் நின்னை அல்லது அறியேன் என்று இருக்கும் நிலையிலே இராச்சியத்தைப் பரிக்கக் கடவன் என்று ஆயிற்று ஸ்ரீ வசிஷ்ட பகவான் திருப்பெயர் சாத்திற்று. [1] "இராச்சியத்தைப் பரித்து நின்றதால் பரதன் எனப்படுகிறான்" என்றான் சுதாநீகன்.

"ததா" - இருவரும் அரசபுத்திரர்களாய் நக்ஷத்திர வேற்றுமை உண்டாய் இருந்தால் பிரித்து முகூர்த்தம் இட்டுப் போதல் தகுதியாக இருக்க, அவன் போனதுவே முகூர்த்தமாகப் போனான் என்கை. "ததா" என்பது, "கச்சதா" என்ற சொல்லின் பொருள் ஆற்றலால் போதருமே? "ததா" என்கிறது என்? என்னில், அங்கு எனது என்னும் செருக்கு நீங்கினமை சொல்லிற்று; இங்கு அதற்கு இருப்பிடமான நான் என்னும் செருக்கு நீங்கினமை சொல்லுகிறது. ஆகையாலே, கூறியது கூறல் என்னும் குற்றம் இல்லை. இரண்டும் அடிமையாக இருப்பதற்கு விரோதிகள் அன்றோ.

"அநகः" - பாபம் இல்லாதது இவனுக்கே அன்றோ. பாவம் என்பது, குறிக்கோளுக்குத் தடையாக இருப்பது ஒன்று. இவ்விடத்தில் பாவம் என்றது, இராம பக்தியை. இராம பக்தியைப் பாவம் என்னலாமோ? என்னில், பாவத்தைக் காட்டிலும் புண்ணியம் சிறந்ததாக இருக்க, மோக்ஷத்திற்குத் தடை ஆகையாலே புண்ணியமும் [2] "குதிரை மயிர்களை உதிர்ப்பது போலப் பாவத்தை நீக்கி, நித்தியமான பகவானுடைய உலகத்தை அடையக் கடவேன்" என்கிற இடத்தில் பாவம் என்ற சொல்லால் சொல்லப்பட்டதே அன்றோ. ஆகையாலே, பரதனுக்குத் தொண்டு செய்தலாகிற குறிக்கோளுக்குத் தடை ஆகில் இராமபிரானுடைய அழகிலே கால்தாழுமதுவும் பாபமித்தனையே. [3] "உன் தமையனாகிய ஸ்ரீராமன் நடந்து செல்லுகையில், பிள்ளாய்! அவன் நடை அழகில் ஈடுபட்டு அவனைப் பாதுகாக்கும் விஷயத்தில் கவனம் இல்லாமல் இருந்து விடாதே" என்று ஸ்ரீராமபிரானுடைய அழகினை ஸ்ரீராமபிரானுக்குத் தொண்டு செய்வதற்கும் இடைச் சுவராகச் சொல்லிற்றே அன்றோ.

"ஶத்ருக்நः" - பிள்ளைகளுடைய தோற்றப் பொலிவினைக் கண்டு திருப்பெயர் வைக்கின்ற ஸ்ரீ வசிஷ்ட பகவான், பெரு

1. இதனை மேலே பக். 12. காண்க.
2. இதனை மேலே பக். 13. காண்க.
3. இதனை மேலே பக். 14. காண்க.

மாள் தம் அழகாலே கண்டாரைத் துவக்க வல்லாராகத் தோற்றுகையாலே 'இராமன்' என்றும், இளையபெருமாளுக்குக் கைங்கரியமே அடையாளமாகத் தோற்றுகையாலே 'இலக்ஷ்மணன்' என்றும், திருப்பெயர்களை வைத்தது போன்று, இவனுடைய தோற்றப் பொலிவைக் காணவே பகைவர்கள் மண்ணுண்ணும்படி இருக்கக் காண்கையாலே 'சத்துருக்கனன்' என்று திருப்பெயரை வைத்தான்.

நித்யஶத்ருக்ந:—புறத்திலே உள்ள பகைவர்கள் அன்றியே, உட்பகைகளான இந்திரியங்களையும் வென்றவன் என்கை. அந்த இந்திரியங்களை வென்றமைக்கு எல்லை எவ்வளவு? என்னில், [1] "பார்க்கின்ற ஆடவர்களுடைய கண்களையும் மனத்தையும் கொள்ளை கொள்ளுகின்றவர்" என்கிற இராமபிரானுடைய அழகிலும் துவக்குண்ணுதிருக்கை. என்றது, பெருமாளைப் பற்றும்போதும் தன் உகப்பாலே யாதல், அவனுடைய அழகாலேயாதல் அன்றிக்கே தனக்கு உத்தேசியனான பரதன் உகந்த விஷயம் என்று பற்றுகை.

"**நீத:**"—அரசர்கள் செல்லும்போது உடைவாள் பரிசு மற்றொன்று கொண்டுபோமாறு போன்று அவன் கொண்டு போகப் போனான். ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளின் சேர்க்கை இரு பொருள்களையும் பற்றியனவாக இருக்கும். இங்கு அதுபோல் அன்றிக்கே, சாதி குணங்களைப் போன்று போனான்.

ப்ரீதிபுரஸ்க்ருத:—தமையனுக்குச் செய்யும் தொண்டு 'செய்யத்தக்கது' என்று போனான் அல்லன். [2] "நான் எல்லா அடிமைகளையும் செய்வேன்" என்று போன இளையபெருமாளைப் போலே எல்லாவிதமான தொண்டுகளையும் செய்யலாம் என்று அன்பு தூண்டப் போனான். படை வீட்டில் இருந்தால் பலரும் உளர் ஆகையாலே தனக்கு உள்ள பாகமே அன்றோ சித்திப்பது.

"**நீத:**" என்கையாலே அடியவனாக இருக்கும் தன்மையில் அறிவில் பொருளைப்போன்று இருக்கக் கடவன் என்பதனையும், "**ப்ரீதிபுரஸ்க்ருத:**" என்கையாலே சொரூபத்துக்குத் தக்கதான தொண்டு செய்யுமிடத்தில் அறிவிற்கு உரியதான குணங்கள் உண்டாக வேண்டும் என்பதனையும் தெரிவித்தபடி.

---

1. இதனை மேலே பக். 15. காண்க.
2. இதனை மேலே பக். 10. காண்க.

[1] "படியாய்க் கிடந்து உன் பவளவாய்க் காண்பேனே" என்பதன்றே பெரியார் திருவார்த்தையும். அன்றிக்கே, "அநகஃ", "நித்ய ஶத்ருக்நஃ" என்ற பதங்களாலே, பரிசுத்தத்தாலும் இனிமையாலும் ஸ்ரீபரதாழ்வானையே பற்றினுன் என்பதனைத் தெரிவிக்கிறுர் என்றலும் ஒன்று.

"அநகஃ", "நித்யஶத்ருக்நஃ" என்றதற்குப் பிரயோஜனம் என்? என்னில், "ஸ்ரீ சத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனுனபடி, அவரை அல்லது அறியாத ஸ்ரீ பரதாழ்வானை அல்லது வேறு ஒன்று அறியாதபடி ஆனுன்" என்று எம்பெருமானுர் அருளிச்செய்தார். இதுவே பிரயோஜனமானுல் சொன்ன மிகை எல்லாம் பொறுக்கும். ஆக, ஸ்ரீ சத்ருக்நாழ்வானைப் போலே இருப்பார் ஒருவர் ஆயிற்று ஸ்ரீ மதுரகவிகள்.

இனி, அவன் அடியார்கள் உத்தேசியர் என்னுமிடத்தில் பகவானுடைய சம்பந்தமாத்திரத்திலே அங்கீகரித்தும், அந்தப் பகவத் விஷயத்திலே மூழ்கி அவனுடைய குணங்களை அநுசந்தித்தால் அல்லது செல்லாத நிலையிலே [2] "ஒருவருக்கு ஒருவர் அறிவிப்பவர்களாய்" என்கிறபடியே இங்கே போது போக்குகைக்கு உசாத்துணையாயும், [3] "யாதொரு பரமபதத்திலே முன்னேர்களான சாத்தியர்கள் எனப்படுகின்ற தேவர்கள் இருக்கின்றுர்களோ" என்கிறபடியே, பேற்றினைப் பெறும் நிலையில் பகவானுடைய அநுபவத்துக்குத் துணை செய்கின்றவர்களாயும் இப்படிப் பல விதமான உபகாரத்தாலே எல்லா நிலைகளிலும் அவன் அடியார்களே உத்தேசியர் என்று அறுதியிட்டு, தன்னை வைஷ்ணவர்கள் சேர்த்துக்கொள்வதற்கு அறிவின்மையைப் போக்குமுகத்தாலே தன்னைப் பகவத் விஷயத்திலே மூட்டின மஹோபகாரகரான ஆழ்வார் தம்மையே பற்றுகிறுர்.

இப்படி, இவர் பரம ஆசாரியரான ஆழ்வார் திறத்திலே "தேவு மற்று அறியேன்" என்று தெய்வமாக நினைப்பதற்கு அடி என்? என்னில்,

---

1. 'படியாய்' என்பது, பெருமாள் திருமொழி, 4: 9.
2. "போதயந்தஃ பரஸ்பரம்" என்பது, ஸ்ரீகீதை, 10: 9.
3. இதனை மேலே பக். 18. காண்க.

[1] "பரம்பொருளைப் போன்று ஆசாரியனையும் வணங்கக் கடவன்" என்றும், [2] "ஆசாரியனைத் தெய்வமாகக் கொள்க" என்றும், ஆசாரியன் திறத்தில் தெய்வம் என்ற புத்தி செலுத்த வேண்டும் என்று வேதாந்தம் விதிக்கையாலும், [3] "ஆசாரியனே மேலான பரம்பொருள்" என்றும், [4] "ஆசாரியனே நேரே நடமாடும் பரம்பொருள் இதில் ஐயம் இல்லை" என்றும், [5] "சித்து அசித்துக்களுக்கு ஈசனான சாக்ஷாத் பரம்பொருளே இவ் ஆசாரியன்" என்றும், [6] "யோகிகளுடைய தலைவராலே தேடப்படும் திருவடிகளையுடைய பரம்பொருளான இவ் ஆசாரியனை இவ் உலகம் மனிதனாக நினைக்கிறது" என்றும், [7] "சாக்ஷாத் பரமபுருஷன் தன் திரு அருளாலே ஆசாரியனாகிற மனித உருவை எடுத்துக்கொண்டு சாஸ்திரங்களாகிற கைகளாலே பிறவிப் பெருங்கடலில் மூழ்கி இருக்கும் உலகத்தைக் கைதூக்கி விடுகிறான்" என்றும் வருகின்ற இவை முதலான பிரமாணங்களிலே சர்வேஸ்வரன் தானே ஆசாரியனாய் வந்து அவதரித்துப் பிறவிப் பெருங்கடலில் மூழ்கிக் கிடக்கின்ற இவ் உயிர்களைக் கேவலம் தன் திரு அருளாலே சாஸ்திரார்த்தங்களை உபதேசித்து பிறவிப் பெருங்கடலில் நின்றும் நீந்தச் செய்கிறான் என்று வெளிப்படையாகச் சொல்லப்படுகையாலும்;

---

1. "தேவம் இவ ஆசார்யம் உபாஸீத"
என்பது, ஆபஸ்தம்ப தர்ம சூத்.

2. மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ,
ஆசார்ய தேவோ பவ, அதிதி தேவோ பவ.
என்பது, தைத். ஶீக்ஷா. 11 : 2.

3. குருரேவ பரம்பிரஹ்ம குருரேவ பராகதிః
குருரேவ பராவித்யா குருரேவ பரம்தநம் ॥
குருரேவபரః காமோ குருரேவ பராயணம்
யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குருः.
என்பது, ஸாத்வத ஸம்ஹிதை.

4. "ஆசார்யः ஸஹரிः ஸாக்ஷாத் சரரூபீ ந ஸம்ஶயः"
என்பது, பிரமாணம்.

5. "ஏஷவை பகவாந் ஸாக்ஷாத் ப்ரதாந புருஷேஶ்வரः"
என்பது, பிரமாணம்.

6. "யோகீஶ்வரைः விம்ருக்யாங்க்ரிம் லோகோயம் மநுதே நரம்."
என்பது, பிரமாணம்.

7. ஸாக்ஷாத் நாராயணோதேவः க்ருத்வா மர்த்யமயீம்தநும்
மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் ஶாஸ்த்ரபாணிநா.
தஸ்மாத் பக்திः குரௌ கார்யா ஸம்ஸாரபய பீருணா.
என்பது, ஜயாக்ய ஸம்ஹிதை சாண்டில்ய வசனம்.

[1] "கிருதயுகத்தில் பகவான் அத்திரியின் புதல்வராய்த் தத்தாத்ரேயராயும், திரேதாயுகத்தில் தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரனாய் இராமனாயும், துவாபரயுகத்தில் நந்தகோபாலனுக்குப் புத்திரனாய்க் கண்ணனாயும், கலியுகத்தில் தேவரான நம்மாழ்வாராகவும் தோன்றுகிறான்" என்கிறபடியே, சர்வேஶ்வரன் தானே கிருதயுகத்திலே பிராஹ்மணோத்தமரான அத்திரி பகவானுக்குப் புத்திரனாய்த் தத்தாத்ரேயனாய் வந்து அவதரித்தாற் போலவும், திரேதாயுகத்தில் க்ஷத்திரியனான தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரனாய் வந்து அவதரித்தாற் போலவும், துவாபரயுகத்தில் பசுக்களைக் காத்தல் முதலான தர்மத்தையுடைய சாக்ஷாத் வைசியரான ஸ்ரீ நந்தகோபருக்குப் புத்திரனாக வந்து அவதரித்தாற் போலவும்;

[2] "கொடிய கலியுகம் வர, அதனால், உலகம் நாஸ்திகர்களால் கலங்கி இருக்கும் சமயத்தில் விஷ்ணுவின் ஒரு கூற்றில் பிறந்தவராய், வேதங்களினுடையவும் வேதப் பொருளினுடையவும் உண்மையை உணர்ந்தவராய், நல்லோர்கட்குத் தலைவரான நம்மாழ்வார் உலகங்கட்கு நன்மை செய்யவேண்டும் என்னும் விருப்பத்தாலே தம் பாஷையான தமிழில் வேதமயமான துதிகளைச் செய்யத் தோன்றுவார்" என்கிறபடியே, நாஸ்திகர்கள் நிறைந்திருக்கின்ற கலியுகத்திலே சர்வேஶ்வரனுடைய அம்ச அவதாரமாய்த் தத்துவ ஞானிகளுக்குத் தலைவராய் உலகத்தின் நலத்தின்பொருட்டுத் தமிழ் பாஷையாலே, உபநிடதங்களின் பொருள்களைப் பிரபந்தமாகச் செய்வதற்கு ஸ்ரீ சடகோபர் என்று திருப்பெயரை உடையராய் ஒருவர் திரு அவதரிக்கப் போகிறார் என்றும்;

[3] "பாவிகள் மிக்கு இருக்கும் கலியுகத்திலே அறப் பெரியனாயும் எல்லார்க்கும் ஆத்மாவாயும் இருக்கிற அந்த விஷ்ணு

1. க்ருதே அத்ரி ஸூநுః பகவாந் த்ரேதாயாம் ரகுநந்தநః
த்வாபரே நந்த ஸூநுஶ்ச கலௌ தேவః பராங்குஶః.

என்பது, பிரமாணம்.

2. க்ரூரே கலியுகே ப்ராப்தே நாஸ்திகைః கலுஷீக்ருதே
விஷ்ணோரம்ஶாம்ஶ ஸம்பூதோ வேத வேதார்த்த தத்த்வவித்
ஸ்தோத்ரம் வேதமயம் கர்த்தும் த்ராவிட்யா நிஜபாஷயா
ஜநிஷ்யதி ஸதாம் ச்ரேஷ்டோ லோகாநாம் ஹிதகாம்யயா.

என்பது, பிரமாணம்.

3. கலௌ புநః பாபரதாபிபூதே
ஸ உத்பவதி ஆச்ரிதவத்ஸலத்வாத்
பக்தாத்மநா விஶ்வஜநாந் ஸுகோப்தும்
விஶ்வாதிகோ விஶ்வமயோ ஹி விஷ்ணுः.

என்பது, திருக்குருகூர் மாஹாத்மியம்.

அடியார்களிடம் அருள் உள்ளவனுகையாலே உலகத்தாரைக் காப்பாற்றும்பொருட்டு ஒரு பக்தனுக அவதரிக்கிருர்" என்கிற படியே கலியுகத்திலும் எல்லாரையும் காப்பாற்றும்பொருட்டு அறப் பெரியனுன சர்வேஸ்வரன் பக்தனுக வந்து அவதரிப்பான் என்றும் சொல்லுகையாலும் ;

[1] "கலிகாலத்தில் தமிழ்நாடுகளில் தாமிரவரணி, கிருதமாலா, பாலாறு, புகழ்பெற்ற காவேரி, மேற்கு நோக்கிப் பாய்வதால் பிரதீசி என்னும் மஹாநதி ஆகிய நதிகள் எங்கு உள்ளனவோ ஆங்காங்கு நாராயணனையே உபாயமாகவும் உபேயமாகவும் கொண்ட மஹாத்மாக்கள் மிகுதியாகத் தோன்றுவார்கள் ; அரசனே ! எந்த மக்கள் அந்த நதிகளின் தண்ணீரைக் குடிக்கின்ருர்களோ அந்த மக்களுக்கு நாராயணனிடத்தில் தடை இல்லாத பக்தி வளர்கின்றது" என்கிறபடியே ஞானத்தில் மேம்பட்டவர்களான சத்துக்கள் வந்து தோன்றும் தல விசேடங்களை அவ்வத் தலங்களைச் சார்ந்துள்ள நதி விசேடங்களாலே விளங்கச்செய்து, அந்த அந்த நதிகளிலே உள்ள தண்ணீரைப் பருகுவோர்க்குப் பக்தி அதிகரித்தலைச் சொல்லுகிற அளவிலே, முதல் முன்னம் "தாம்பரபர்ணீ நதீ யத்ர - தாமிரபரணி ஆறு எங்கு" என்று இவர் அவதரித்த தலத்தைச் சொல்லுகையாலும் ;

[2] "பிரமனுடைய இந்த இரண்டாவது பரார்த்தத்தில் சிறந்ததான முதல் நாளில் நடக்கும் வைவஸ்வதமன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர் யுகத்தில் கலியுகத்தின் தொடக்கத்தில் வைகாசி மாதத்தில் வெள்ளிக்கிழமை கடகலக்கினத்

---

1. கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணுஃ
க்வசித் க்வசித் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிஶஃ ||
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ
காவேரீச மஹாபாகா ப்ரதீசீச மஹாநதீ ||
யே பிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேஶ்வர
தேஷாம் நாராயுணே பக்திஃ பூயஸீ நிருபத்ரவா ||
என்பது, ஸ்ரீ பாகவதம், 11. 5 : 38, 39, 40.

2. த்விதீயேது பரார்த்தே அஸ்மிந் திநே து ஆத்யே அத ஸத்தமே
மந்வந்தரே வர்த்தமாநே து அஷ்டாவிம்ஶே சதுர்யுகே ||
கலே ராதௌ மாஸிராதே காவ்யவாரே குளீரகே
பௌர்ணமாஸ்யாம் விஶாகாக்யே தாரே மஹதி ஶோபநே ||
ப்ரஜாபதேஃ ஜந்மயோகீ ஶடகோப இதி ஸ்மிருதஃ
மத்பக்தஃ அஹம் பவிஷ்யாமி நேதும் த்ராவிடதாம் ச்ருதீஃ ||
என்பது, திருக்குருகூர் மாஹாத்மியம்.

தில் பௌர்ணமியில் நலம் நிறைந்த விசாக நக்ஷத்திரத்தில் பிரஜாபதியின் மறு பிறப்பான சடகோபராய், வேதம் தமிழ் செய்வதற்காகச் சடகோபர் எனப்படும் என் பக்தனாக நான் ஆவேன்'' என்றும்;

[1] "தாமிரபரணியின் வடகரையில் குற்றம் இல்லாத தலத்தில் பிறப்பார்'' என்றும்;

[2] "திருவனந்தாழ்வான் உறங்காத திருப்புளியாழ்வாராக இவ்விடத்தில் இருந்துகொண்டு மக்கள் விரும்புவனவற்றை எல்லாம் எல்லாருக்கும் எப்போதும் கொடுப்பான்; தேவ தேவனை ஸ்ரீ மந் நாராயணன் தாமிரபரணி நதிக்கரையை அடைந்து சடகோப முனிவராகி எல்லாரையும் காப்பாற்றுவார்; இங்கு எல்லா வேதங்களும் தமிழ்ப்பாஷை யுடையன ஆகித் தேவர்களுக்கு எல்லாம் தலைவனை மாதவனைத் தெரிவிக்கும்'' என்றும்;

[3] "பெருமை பெற்ற பாண்டிய தேசத்தில் தாமிரபரணி நதிக்கரையில் மங்களம் நிறைந்த திருக்குருகூர் உள்ளது; அங்குப் பரம புருடன் கண்கூடாகக் காணப்பட்டான்'' என்றும் சொல்லுகிறபடியே அந்த நதிக்கரையில் நல்லார் நவில் குருகூரில் யுக வர்ண முறையிலே அவதரித்த சர்வேஸ்வரன் தானே [4] "குடி குடி வழி வந்து ஆட்செய்யும் தொண்டர்'' என்கிறபடியே, ஏழாட்காலும் பழிப்பு இல்லாதவராகிப் பகவானுக்கே அடிமைப்பட்டு அவனையே தியானம் செய்து கொண்டிருப்பவரான **காரியார்** இடத்தில் வந்து அவதரித்துக் [5] "**காரிமாறன் சடகோபன்**'' என்று பரம ஆப்த தமரான

---

1. "தாம்ரபர்ணீ உத்தர தடே தாந்த க்ஷேத்ரே ஜநிஷ்யதி'' என்பது, திருக் குருகூர் மாஹாத்மியம்.

2. நிர்நித்ர திந்த்ரிணீஸத்வம் கத்வா அத்ர புஜகாதிப:
ஸர்வ அபிலாஷாந் ஸர்வேஷாம் நித்யமேவ ப்ரதாஸ்யதி
ஶடகோப முநீந்த்ரத்வம் ஸம்ப்ராப்ய த்ரிதஶ ஈஶ்வர:
தாம்ரபர்ணீ தடம் ப்ராப்ய ரக்ஷிஷ்யதி அகிலாந் ஜநாந்
அத்ர வேதா: ஸமஸ்தாஶ்ச த்ராவிடத்வம் உபாகதா:
வேதயிஷ்யந்தி தேவேஶம் ஸகலா அபி மாதவம்.

என்பது, திருக் குருகூர் மாஹாத்மியம்.

3. அஸ்தி பாண்ட்ய மஹாதேஶே குருகா நகரீ ஶுபா
தாம்ரபர்ணீ நதீதீரே ஸாக்ஷாத் த்ருஷ்டோஹ்யதோக்ஷஜ:.

என்பது, திருக் குருகூர் மாஹாத்மியம்.

4. 'குடிகுடி' என்பது, திருவாய்மொழி, 9. 2 : 1.

5. 'காரிமாறன்' என்பது, திருவாய்மொழி,

தாமே அருளிச்செய்யும்படி எங்கும் பரந்த சீர்த்தியை யுடையவர் ஆகையாலே இவ் ஆழ்வாரே எல்லா மக்கட்கும் தாரகமாய், உபாயமாய் இருக்கின்ற பகவானுடைய அவதாரம் என்று அறுதியிட்டு அவரே பரம்பொருள் என்று ஸ்ரீமதுரகவிகள் பற்றினர் ஆயிற்று.

[1]"அறியாதன அறிவித்த அத்தா" என்று பகவானிடத்திலே ஆசாரியனும் தன்மையைப் புத்தி பண்ணினர் நம்மாழ்வார். இவர் ஆசாரிய விஷயத்திலே "தேவு மற்று அறியேன்" என்று பகவானுகப் புத்தி பண்ணினர். ஈஸ்வரனும் தன்மை ஆசாரியனும் தன்மை எனப்படுகிற இரண்டு தர்மங்களும் காரிய பேதத்தாலே பொதுவாக இரண்டு வடிவங்களிலும் காண்கையாலே இருவர் பக்கலிலும் இருவகையான எண்ணமும் நடக்கக் குறை இல்லை. [2]"ஸ்ரீதரனை ஆதி குருவுக்கு" என்கிறபடியே, திருமகள் கேள்வனை ஈஸ்வரன்தானே ஆதிகுருவாக, [3]"பகவான் தொடங்கி இவர் இவர் என்று ஆசாரியர்களுடைய அந்தக் குரு பரம்பரை அறியத்தக்கது" என்கிறபடியே, குரு பரம்பரையும் அறியப்பட வேண்டியதாகையாலும் அந்தக் குரு பரம்பரையை நடத்துவதும் தன்னிடத்தில் உள்ளது ஆகையாலும் சரம ஆசாரியனும் தன்மையும் தான் அன்றி இல்லாமையாலும் ஆசாரியனுடைய அவதாரமும் சர்வேஸ்வரனுடைய செயலாமத்தனை.

[4]"நான் யுகம் தோறும் அவதரிக்கிறேன்" என்று வாயோலை செய்தது ஆசாரிய அவதாரத்தை விலக்கி அன்று. ஆகையாலே நம்மாழ்வார் பகவானுடைய அவதார விசேடமாகையாலே அவர் திறத்திலே சேஷித்வ ஶரண்யத்வ பிராப்யத்வங்களை அறுதியிட்டு, ஸ்ரீ மதுரகவிகளும் தேவு மற்றறியாத தன்மையராகக் குறை இல்லை.

---

1. 'அறியாதன' என்பது, திருவாய்மொழி.

2. "ஸ்ரீதராயஆதிகுரவே"
என்பது, பிரமாணம்.

3. ஸச ஆசார்ய வம்ஶோ ஜ்ஞேயஃ
ஆசார்யாணும் அஸாவஸாவிதி ஆ பகவத்தஃ.
என்பது, ரஹஸ்யாம்நாயப்ராஹ்மணம்.

4. பரித்ராணய ஸாதூநாம் விநாஶாயச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.
என்பது, ஸ்ரீ கீதை. 4 : 8.

இப்படி ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் பரம்பொருளாக நினைத்த ஆழ்வார் திறத்திலே பிரதம பர்வமான ஈஸ்வரன் தானே சரம பர்வமான ஆழ்வாராய் வந்து அவதரித்தான் என்று குறிக்கொண்டு புத்தி பண்ணுமல் தம்மைப் போன்றவராக நினைத்தவர்கள் உயிர் உள்ளவரையிலும் ரௌரவம் முதலான நரகங்களில் அழுந்தவர்களத்தனை. [1] "விஷ்ணுவினுடைய அர்ச்சாவதாரங்களில் எவன் 'உலோகம்' என்னும் நினைவைச் செய்கிருனே ஆசாரியன் திறத்து எவன் 'மனிதன்' என்னும் நினைவைக் கொள்ளுகிருனே அவர்கள் இருவரும் நரகத்தில் விழுவர்கள்" என்கிறபடியே ஆசாரியனை மனிதனுக நினைத்தவனுக்கு நரகத்தில் விழுதலே பலமாகச் சாஸ்திரம் சொல்லாநின்றதே அன்றே. நம்மாழ்வார் பகவானுடைய அவதார விசேடம் என்னும் நினைவுதான் ஆஸ்திக அக்ரேசரர்களாய்ப் பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இருக்கும் புண்ணியவான்கள் சிலர்க்கு நெஞ்சிலே ஊற்று மாறுமல் எப்போதும் நிலைநிற்கும்.

[2] "சாஸ்திரங்களில் சாரமானதை அறிவுள்ள ஒருவன் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்றும், [3] "சாஸ்திரங்களில் மிக மிக சாரமானதையே கடலில் அமுதத்தைப் போன்று ஆதரிக்க வேண்டியது" என்றும் சொல்லுகிறபடியே சாஸ்திரங்கள் எல்லாவற்றினுடைய சாரார்த்தமாய் **ஸ்ரீமதுரகவிகள் நாதமுனிகள்** தொடக்கமான நம் பூர்வாசார்ரியர்களாலே உப

---

1. விஷ்ணோ: அர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதிய:
   யோ குரௌ மாநுஷம் பாவம் உபௌ நரகபாதிநௌ.

என்பது, பிரஹ்மாண்ட புராணம். இங்கு,

மானிடவன் என்றும் குருவை மலர்மகள்கோன்
தானுகந்த கோலம் உலோகமென்றும்—ஈனமதா
எண்ணுகின்ற நீசர் இருவருமே எக்காலும்
நண்ணிடுவர் கீழாம் நரகு. (ஞானசாரம், 32.)

என்பது, ஒப்பு நோக்கல் தகும்.

2. அநந்த பாரம் பஹுவேதிதவ்யம்
   அல்பஸ்ச காலோ பஹவஸ்ச விக்நா:
   யத் ஸாரபூதம் தத் உபாஸிதவ்யம்
   ஹம்ஸோ யதா க்ஷீரம் இவ அம்புமிஸ்ரம்.

என்பது, உத்தர கீதை. 3 : 1.

3. அஸாரம் அல்ப ஸாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத்
   பஜேத் ஸாரதமம் ஶாஸ்த்ரே ரத்நாகர இவ அம்ருதம்.

என்பது, ரஹஸ்யத்திரயஸாரம் ஸாரநிஷ்கர்ஷ அதிகாரம்.

தேசிக்கப்பட்டுத் தொடர்ந்து வருவதாய் ஆத்மாவுக்கு நேரே வகுத்த விஷயமாய்ச் சுதந்திரம் முதலானவைகள் கலசாதே எப்போதும் கிருபா மூர்த்தியாய் மிக்க எளிதாய் மோக்ஷத்திற்கே காரணமாய் இருந்துள்ள சரமபர்வத்திலே நின்ற நம்மாழ்வாரையே [1]"ஆசாரியனையே பேற்றிற்கு வழியாகவும் பேருகவும் நினைத்துச் சரணம் அடையக் கடவன்" என்கிற படியே, பேருகவும் பேற்றினை அடைதற்குரிய வழியாகவும் பற்றிப் பாரம் அற்றவர்களாய் இருப்பார்கட்குப் பேற்றில் கண்ணழிவு இல்லை.

[2]"அச்சுதனுன திருமாலினைப் பற்றினவர்கட்கு மோக்ஷம் கிடைக்குமோ? கிடைக்காதோ என்ற ஐயம் உண்டு; அவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டவர்கட்கு (மோக்ஷத்தில்) ஐயம் இல்லை" என்று, பிரதமபர்வமான ஈஸ்வரனைப் பற்றினவர்கட்குப் பேற்றில் ஐயம் உண்டு; சரமபர்வமான ஆசாரியனைப் பற்றினவர்களுக்குப் பேற்றில் கண்ணழிவு இல்லை என்னுகின்றது ஸ்மிருதியும். [3]"ஆசாரியன் வடிவமாக இருக்கும் பகவானுன புருடோத்தமன், வழியாக இருக்கும் தான் ஆகிற ஓடத்தாலே மக்களைப் பிறவிப் பெருங் கடலில் நின்றும் கரை ஏற்றுகிறுன்" என்கிறபடியே அவதார விசேடமான ஆசாரியனே பிறவிப் பெருங்கடலில் நின்றும் கரை ஏற்றுகிறவன் என்பது சாஸ்திரங்களுடைய கருத்து ஆகையாலே பரமாசாரியரான நம்மாழ்வாரே பிறவிப் பெருங் கடலில் நின்றும் கரை ஏற்றுகின்றவர் என்பது வெள்ளிடைமலையாம்.

மற்றை ஆழ்வார்கள் இவர்க்கு உறுப்புக்கள் போலப் பரதந்திரப்பட்டவர்கள் ஆகையாலே இவருள் அடங்குவரத்தனை. இவ் ஆழ்வார்தாம் அர்ச்சையிலே முன்னர் அழிந்து போன

---

1. த்யாயேத் ஜபேத் நமேத் பக்த்யா பஜேத் அப்யர்ச்சயேத் முதா
உபாய உபேயபாவேந தமேவ ஶரணம் வ்ரஜேத்.

என்பது, ஸாத்வத ஸம்ஹிதை.

2. ஸித்திஃ ப்வதி வா நேதி ஸம்ஶயஃ அச்யுத ஸேவிநாம்
ந ஸம்ஶயஃ அஸ்தி தத் பக்த பரிசர்யா ரதாத்மநாம்.

என்பது, சாண்டில்யஸ்மிருதி. 1 : 95.

3. குருமூர்த்யா ஸ்திதஃ ஸாக்ஷாத் பகவாந் புருஷோத்தமஃ
உத்தாரயதி ஸம்ஸாராத்தத் உபாய ப்லவேந து.

என்பது, பிரமாணம்.

எல்லாப் பிரபந்தங்களையும் நாதமுனிகளுக்குத் திருவாய் மலர்ந்து தாமே அருளிச்செய்கையாலே மற்றைப் பிரபந்தங்களை அருளிச்செய்த ஆழ்வார்கள் ஒன்பதின்மரும் இவருக்கு உரியவர்களாய் உறுப்புக்களாகக் குறை இல்லை.

இப்படி எல்லாரைக்காட்டிலும் வேறுபட்ட சிறப்பினையுடையராய்ப் பரமாசாரியரான நம்மாழ்வாரே நேரே பகவானுடைய அவதாரம் என்றும், அவர் திருவடிகளே பேற்றுக்கு வழியாகவும், அவர் திருவடிகளில் செய்யும் கைங்கரியமே புருஷார்த்தமாகவும், அவருடைய திருமுகமலர்ச்சியே மேலான பிரயோஜனமாகவும், அவர் எழுந்தருளி யிருக்கிற இடமே அடையத்தக்க மோக்ஷ உலகமாகவும், அவருடைய திருமேனி முதலானவற்றை அநுபவிக்கும் அநுபவமே [1] "உண்ணும் சோறு" என்ற திருப்பாசுரத்திற் கூறியபடியே தாரகம் முதலானவைகளாகவும் நினைந்து அறுதியிட்டிருக்கும் சரம அதிகாரிகளுக்குள்ளே தலைவர் ஆயிற்று ஸ்ரீமதுரகவி ஆழ்வார்.

இப்படிச் சரமபர்வ நிஷ்டரான இவர்தாம், தம்முடைய ஆசாரியரான நம்மாழ்வார் இறைவனிடத்தில் செய்யும் துதிகளின் வகைகளை இவ் ஆழ்வார் விஷயத்திலே செய்கிறார். யாங்ஙனம்? என்னில், அவர் [2] "அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆராவமுது" என்றார்; அந்த இனிமையின் மிகுதியை ஸ்ரீமதுரகவிகள்தாம் "நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே" என்றார். அவர் [3] "மலக்கு நாவுடையேற்கு" என்றார்; இவர் "நாவினால் நவிற்றி இன்பம் எய்தினேன்" என்றார். அவர் [4] "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்றார்; இவர் "மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே" என்றார். அவர் [5] "கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை" என்றார்; இவர் "தேவு மற்று அறியேன்" என்றார். அவர் [6] "பாடி இளைப்பிலம்" என்றார்; இவர் "பாடித் திரிவனே" என்றார். அவர் [7] "இங்கே திரிந்தேற்கு இழுக்கு உற்று என்" என்றார்; இவர் "திரிதந்தாகிலும்" என்றார். அவர் [8] "உரிய தொண்டர்

1. திருவாய். 6. 7: 1.
2. திருவாய். 2. 5: 4.
3. திருவாய். 6. 4: 6.
4. திருவாய். 6. 10: 10.
5. திருவாய். 5. 2: 7.
6. திருவாய். 1. 7: 10.
7. திருவாய். 8. 10: 4.
8. திருவாய். 6. 9: 11.

தொண்டர்" என்றார்; இவர் "நம்பிக்கு ஆள் உரியனே" என்றார்.

அவர் [1] "தாயாய்த் தந்தையாய்" என்றார்; இவர் "அன்னையாய் அத்தனாய்" என்றார். அவர் [2] "ஆள்கின்றான் ஆழியான்" என்றார்; இவர் "என்னை ஆண்டிடும் தன்மையான்" என்றார். அவர் [3] "கடியனாய்க் கஞ்சனைக் கொன்ற பிரான்" என்றார்; "இவர் தக்க சீர்ச் சடகோபன்" என்றார். அவர் [4] "யானே என்தனதே என்றிருந்தேன்" என்றார்; இவர் "நம்பினேன் பிறர் நன் பொருள் தன்னையும்" என்றார். அவர் [5] "எமர் கீழ்மேல் எழுபிறப்பும் மாசதிர் இது பெற்று" என்றார்; இவர் "இன்று தொட்டும் எழுமையும்" என்கிறார். அவர் [6] "என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசன்" என்றார்; இவர் "நின்று தன்புகழ் ஏத்த அருளினான்" என்கிறார். [7] அவர் "ஒட்டுமோ இனி என்னை நெகிழ்க்கவே" என்றார்; இவர் "என்றும் என்னை இகழ்விலன் காண்மினே" என்கிறார். அவர் [8] "மயர்வற மதிநலம் அருளினன்" என்றார்; "எண்திசையும் அறிய இயம்புகேன் ஒண்தமிழ்ச் சடகோபன் அருளையே" என்கிறார்.

அவர் [9] "அருளுடையவன்" என்றார்; இவர் "அருள் கண்டீர் இவ் உலகினில் மிக்கதே" என்கிறார். அவர் [10] "பேரேன் என்று என் நெஞ்சு நிறையப் புகுந்தான்" என்றார்; இவர் "நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்" என்கிறார். அவர் [11] "வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" என்றார்; இவர் "ஆட்புக்க காதல் அடிமைப்பயன்" என்கிறார். அவர் [12] "ஆராத காதல்" என்றார்; இவர் "ஆட்புக்க காதல்" என்கிறார். அவர் [13] "பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய்" என்றார்; இவர் "பயன் இன்று

1. திருவாய். 7. 8 : 1.
2. திருவாய். 10. 4 : 3.
3. திருவாய். 9. 6 : 11.
4. திருவாய். 2. 9 : 9.
5. திருவாய். 2. 8 : 1.
6. திருவாய். 7. 9 : 1.
7. திருவாய். 1. 7 : 7.
8. திருவாய். 1. 1 : 1.
9. திருவாய். 2. 10 : 11.
10. திருவாய். 10. 8 : 2.
11. திருவாய். 3. 3 : 1.
12. திருவாய். 2. 1 : 11.
13. திருவாய். 5. 7 : 3.

கிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்" என்கிறார். அவர் [1]"கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ" என்றார்; இவர் "தென் குருகூர் நம்பிக்கு அன்பனாய்" என்கிறார். அவர் [2]"உலகம் படைத்தான் கவி" என்றார்; இவர் "மதுரகவி" என்கிறார். அவர் [3]"உரைக்க வல்லார்க்கு வைகுந்தமாகும் தம் ஊர் எல்லாம்" என்றார்; இவர் "நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே" என்று தலைக்கட்டுகிறார்.

இப்படி ஆழ்வார் இறைவன் திறத்தில் கூறிய குண விசேடங்கள் அடையத் தாம் ஆழ்வார் திறத்திலே கூறும் படிக்கு ஈடாக ஆழ்வார் தம்மை அங்கீகரித்துச் சரமபர்வத்திலே நிற்கும் நிலையினராம்படி செய்தருளின உபகாரத்துக்குப் பிரதி உபகாரம் இல்லாமையாலே, அவருடைய குணங்களைக் கூறுமுகத்தால் அல்லது செல்லாதபடியான நிலையினைந்து, அவரது குண அநுபவங்களால் உண்டான பிரீதிகளுக்குப் போக்கு வீடாகப் பகவத் விஷயத்திலும் மிக்கதான ஆழ்வாருடைய இனிமையின் மிகுதியையும், அவருடைய பாசுரங்களே தேகயாத்திரையாம்படி தாரகமானபடியையும், ஆழ்வார் உகந்த விஷயம் என்று பகவத் விஷயம் தமக்குக் குறிக்கோளானபடியையும், அப்படிக் குறிக்கோளாக விரும்புகைக்கு அடி தம்மை ஆழ்வார் அங்கீகரித்த அங்கிகாரம் என்னுமதனையும், மற்றைய விஷயத்திலே உள்ள ஈடுபாட்டினை நீக்கிப் பகவத் விஷயத்தில் நில்லாதே ஆழ்வார் அளவும் வரும்படியான வெற்றியையும், ஆழ்வார் தம்மை அங்கீகரித்த அங்கீகாரத்தினுடைய திடத்தையும், தம்மை அங்கீகரிக்கைக்கு அடியான ஆழ்வாருடைய மிகுந்த கிருபையின் பிரகாசத்தையும், பகவானுடைய கிருபையைக் காட்டிலும் ஆழ்வாருடைய கிருபையே இவ் உலகத்தில் விஞ்சியிருக்கும் என்னுமதனையும், இப்படி ஆழ்வாருடைய கிருபை இவ் உலகத்தில் விஞ்சியிருக்கைக்கு அடி எல்லா வேதங்களினுடைய உட்பொருளையும் அறிவிக்கக் கூடியதான தம்முடைய பாசுரமான இப் பிரபந்தத்தை என் நெஞ்சிலே நிறுத்தினமையே என்பதனையும், இப்

1. திருவாய். 10: 10: 7.
2. திருவாய். 3. 9: 10.
3. திருவாய். 5. 3: 11.

படி ஆழ்வார் தம் பக்கல் செய்த உபகாரம் பிரதி உபகாரத்தை வேண்டாதே இருக்கும் என்னுமதனையும், இப்பத்துப் பாட்டுக்களாலே எளிதில் அறியும்படி அருளிச்செய்து, இப் பிரபந்தம் கற்றார்க்குப் பலம் ஸ்ரீ வைகுண்டம் என்றும் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

தம்பிரான்படி அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க

கண்ணிநுண் சிறுத்தாம்பு

முதற் பாசுரத்துக்குத் தம்பிரான்படி

அவதாரிகை :— ஆழ்வாருடைய எல்லை இல்லாத இனிமையைச்சொல்லுகிறது. பேற்றுக்குஎல்லைநிலமான ஆழ்வாரைப் பற்றுகிற இவர், பேற்றுக்கு முதல் நிலமான பகவானைப் பற்றிப் பேசுவான் என்? என்னில், ஆழ்வாருடைய இனிமையின் மிகுதி தோற்றுகைக்காகவும், அவருடைய முகமலர்த்தி தோற்றுகைக்காகவும், அவர் உகக்கும் விஷயமாகையாலும் பேசுகிறார்.

வியாக்கியானம் :— கண்ணி நுண் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன் - "உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவு எத்திறம்" என்றும், "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்றும், "பையவே நிலையும் வந்து" என்றும் ஆழ்வார் ஆழங்கால் பட்ட விஷயம் ஆகையாலே அதனைப் பேசுகிறார். கண்ணி நுண் சிறுத் தாம்பினால் - ஆழ்வார் பக்கல் இவர்க்கு உண்டான உத்தேஸ்யதை இருந்தபடி. ஆழ்வாருக்குக் குறிக்கோளாக இருந்த பரம்பொருளைக் கட்டினது ஒரு கயிற்றினுடைய உண்மானம் புறமானம் ஆராயும்படி ஆயிற்று இவர் பகவத் விஷயத்தில் கை ஒழிந்தபடி. 'கண்ணித் தாம்பு' என்றது, உடம்பிலே கட்டப்புக்கால் உறுத்தும்படி பல பிணைகளை உடைத்தாக இருக்கை. நுண் தாம்பு - உடம்பிலே அழுந்தும்படி நேரியதாய் இருக்கை. சிறுத்தாம்பு- இவனைக் கட்டின பின்பு உரலோடே சேர்க்கைக்கு எட்டம் போராதிருக்கை.

கட்டுண்ணப் பண்ணிய - உரலை நேரிதாகச் செதுக்கப் போகாது; அப்போதாகக் கயிற்றினை நெடுகவிடப் போகாது; இனி, இவனை விட்டு நெடிய கயிற்றினைத் தேடி எடுக்கப்புகில் பின்னை இவன்தான் எட்டான்; காற்றில் கடியனாய் ஓடும்; இனிச் செய்வது என்? என்று அவள் தடுமாறுகிறபடியைக்

கண்டான்; [1] "எப்போதும் ஒரு படிப்பட்டிருக்கும் திவ்விய மங்கள விக்கிரஹத்தை உடையவன்" என்கிறபடியே இருக்கும் தன்னுடைய திருமேனியை நெருக்கி இடம் கண்டு கட்டும்படி செய்தான். கட்டுகைக்குச் சாதனம் இல்லை என்று கட்டுதலை விட்டொழிவாளேயாயின் பிறந்து படைக்க நினைத்த குணத்தை இழக்குமத்தனை அன்றோ. ஆகையாலே, திருமேனியிலே இடம்கொடுத்தான்; [2] "கண்ணியார் குறுங்கயிற்றால் கட்ட வெட்டென்று இருந்தான்" என்றும், [3] "கண்ணிக் குறுங் கயிற்றால் கட்டுண்டான்" என்றும் எல்லாரும் ஈடுபடும் துறை அன்றோ இதுதான்.

[4] "கயிற்றினால் வயிற்றில் கட்டி மறுபடி உரலிலும் கட்டினாள், துருதுருக்கைத்தனம் செய்கின்றவனே! வல்லையாகில் போய்க் காணாய்" என்கிறபடியே, தாய் கட்டின கட்டினை அவிழ்க்க ஆற்றலுடையேன் அல்லேன் என்று இருந்தான் அன்றோ. [5] "சம்சாரத் தொடர்பு நிலைத்திருப்பதற்கும் விடுபடுவதற்கும் காரணமாக இருப்பவன்" என்கிறபடியே, தன்னை யொழிய மற்றைய அனைவரையும் கட்டுகைக்கும் விடுகைக்கும் காரணமானவன் கண்டீர் இப்போது ஓர் அபலை கட்டின கட்டினை அவிழ்த்துக்கொள்ள ஆற்றலன் அன்றிக்கே இருக்கிறான்; செருக்கனான ஓர் அரசன் தன் மனைவி கையிலே அகப்பட்டு ஒரு கருமுகை மாலையாலே கட்டுண்டால் அதனை விடுவித்துக் கொள்ளமாட்டாதே இருக்குமாறுபோலே அன்றோ, இவள் கட்டின கட்டினையும் விடுவித்துக்கொள்ள மாட்டாதே இருக்கிற இருப்பும். பிறருடைய கர்மம் காரணமாக வரும் கட்டினை அவிழ்க்குமத்தனை அல்லது, தன் அருளாலே வந்த கட்டு தன்னாலே அவிழ்க்கப் போகாது என்கை.

ஆழ்வார் மயர்வு அற மதி நலம் அருளப்பெற்றவர் ஆகையாலே "உயர்வு அற உயர் நலம் உடையவன்" என்று அவன் குணத்தை வர்ணித்தார். இவர் முதல் அடியிலே ஆழ்வாரையே பற்றுகையாலே அவன் திருமேனியிலே சம்பந்தப்பட்டது ஒரு கயிற்றை வர்ணிக்கிறார். அவருக்குக் குறிக்

---

1. இச் சுலோகத்தை மேலே பக். 21. காண்க.
2. 'கண்ணியார்' என்பது, பெரிய திருமொழி, 5. 9 : 7.
3. 'கண்ணிக் குறும்' என்பது, பெரிய திருமொழி, 11. 5 : 5.
4. இச் சுலோகத்தைப் பக். 21. காண்க.
5. இச் சுலோகத்தைப் பக். 22. காண்க.

கோளான பரம்பொருள் இவருக்கு வெளிறுய்க் கழிகிறபடி. அன்றிக்கே, 'கட்டுண்ணப் பண்ணிய' என்பதற்குப் பக்தி உண்டேயாகிலும் அவன்தானே தன்னை அணைத்துத் தர வேண்டும்படியாய், இது பின்னையும் சிறிதாய் இருக்குமாயிற்று; [1] "இந்தப் பரம்பொருள் கேள்வியாலும் மனனத்தினுலும் தியானத்தினுலும் அடையத் தக்கவன் அல்லன்; எவனை இப் பரம புருஷன் விரும்புகிறுனே அத் தகையோனுலேயே அடையத் தக்கவன்; அவனுக்கு இந்தப் பரம புருஷன் தன்னுடைய திருமேனியைக் காட்டுகிறுன்" என்கிறபடியே. இனி, இந்தப் பக்தி இவன் நெஞ்சில் உள்ள வேறு விஷயங்களில் ஆசையை அறுக்குமித்தனை; [2]"எட்டினேடு இரண்டெனும் கயிற்றினல் மனந்தனைக் கட்டி" என்கிறபடியே, எட்டும் இரண்டும் பத்தாய்ப் பக்தியைச் சொன்னபடி. அன்றிக்கே, எட்டு என்று திரு எட்டு எழுத்தாய் அதனுலேயாதல், இரண்டு என்று வாக்கியத் துவயமாய் அதனுலேயாதல் மனத்தினைக் கட்டி என்னவுமாம். அல்லது, எட்டும் இரண்டும் அறியாதார்க்குக் கட்டப்போகாதே.

இவனைக் கட்டுவது "ஒரு வெண்ணெயைக் களவு கண்டான், ஊரை மூலை அடியே நடத்தினன்" என்றே அன்றே. இவன் "சாமான்யன் என்று இடும் ஈடு எல்லாம் இடுங்கோள்" என்று இருந்தான். அதாவது, களவிலே தகண் ஏறினபடி. இவனைக் கட்டிவைத்து அடிக்கப்புக்கவாறே [3]"தொழுகையும்" என்கிறபடியே, தொழத் தொடங்கும்; எல்லாரையும் தொழுவித்துக் கொள்ளுமவன் அன்றே தொழுகிறுன்; இந்நிலையில் விருப்பம் நிறைவேறுதற்குக் கைகூப்பு (அஞ்சலி) ஒன்றே சாதனம் என்று அறியுமவன் அன்றே.

[4]"கயிற்றினல் வயிற்றில் கட்டி உரலிலும் கட்டினள், துருதுருக்கைத் தனம் செய்து திரிகிறவனே! வல்லையாகில் போய்க் காணுய்" என்கிறபடியே, தான் தாயான பரிவு தோற்ற

---

1. நாயம் ஆத்மா ப்ரவசநேந லப்யோ நமேதயா நபஹுநா ஸ்ருதேந
யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஃ தஸ்யைஷ ஆத்மா
[விவ்ருணுதே தநூம் ஸ்வாம்.
என்பது, கடவல்லி உபநி. 1 2 : 23.

2. 'எட்டினேடு' என்பது, திருச்சந்த விருத்தம், 83.

3. 'தொழுகையும்' என்பது, பெருமாள் திருமொழி, 7 : 8.

4. இதனை மேலே பக். 21. காண்க.

இவனைக் களவிலே கண்டு பிடித்துத் தாம்பாலே உரலோடே அடுத்துக் கட்டி மறு கண்ணியும் பொத்தி, நீ வல்லையாகில் போய்க் காணாய் என்று உறுக்கிவிட்டால் போக மாட்டாதே இருக்கும். [1]"இந்தப் பரமாத்மாவினுடைய சக்தியானது மேலானது; இயற்கையானது; அவ்வாறே ஞானமும் பலமும் ஏவுதல் முதலான காரியங்களும் உள்ளன என்று அறியப் படுகின்றது" என்று ஓதப்படுகிற பரம்பொருள் இவளுக்கு எளிதானபடியால் அன்றோ இங்ஙனே சொல்லுகிறாள். அதி சஞ்சல சேஷ்டித - துருதுருக்கையாய்க் கொண்டு ஊர்ப் பூசல் விளைத்தவன் அல்லையோ? இத்யுக்த்வா - ஒரு சொல்லாலே விலங்கிட்டு வைத்து, அத நிஜம் கர்ம ஸா சகார-அவள் கறப்பது கடைவதாகத் தொடங்கினாள். குடும்பிநீ - இவனைப் போலே நியமிக்க வேண்டுவன பலவும் உண்டே அன்றோ அவளுக்கு.

பெரு மாயன் - எல்லை இல்லாத ஆச்சரியத்தை உடையவன். இதனால், எல்லாப் பொருள்களாலும் நிறைவுற்று இருக்கின்ற இறைவனுக்கு (அவாப்த சமஸ்த காமனுக்கு) ஒரு குறை உண்டாய், அதனைப் பெறுதற்குப் புல்லியரைப் போலே களவாகிற வழி அல்லா வழியே இழிந்து, சர்வ சக்தியான தான் அதனைத் தலைக்கட்ட மாட்டாதே, வாயது கையது வாக அகப்பட்டுக் கட்டுண்டு [2]"பையவே நிலையும்" என்று உடம்பு வெளுத்து நின்ற நிலை அளவும் செல்ல நினைக்கிறார். என் அப்பனில் - ஆழ்வார் இவர்க்கு உத்தேசியராய் நிற்க, இங்ஙனே சொல்லுவான் என்? என்னில், பகவானுடைய சம்பந்தம் அற வார்த்தை சொன்னாராகில் ஆழ்வாருடைய சம்பந்தத்தை அறுத்துக் கொண்டாராமத்தனை அன்றோ? அதனாலே சொல்லுகிறார். அன்றிக்கே, [3]"ஆடவர்களுடைய கண்களையும் மனங்களையும் கொள்ளை கொள்ளுகின்றவர்" என்கிறபடியே, அவ்வருகு போவாரையும் துவக்கவல்ல விஷயமாகையாலே துவக்குண்டு சொல்லுகிறார்.

என் அப்பனில் நண்ணி - பகவானை விட்டு நீங்கி ஆழ்வாரைக் கிட்டி; ஐம்புல இன்பங்களை விட்டுப் பகவத் விஷயத்

1. பராஸ்ய ஶக்திஃ விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ [ஜ்ஞாந பல க்ரியாச. என்பது ஶ்வேதாஶ்வதரம், 6.

2. 'பையவே' என்பது, திருவாய்மொழி, 5. 10 : 3.

3. இதனை மேலே பக். 24. காண்க.

தைக் கிட்டுகையில் உண்டான அருமைபோல் அன்று, பேற்றுக்கு முதல் நிலமான பகவத் விஷயத்தை விட்டுப் பேற்றுக்கு எல்லை நிலமான அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலைக் கிட்டுகை. அவற்றினிடையே குற்றங்களைக் காண்கையாலே ஐம்புல இன்பங்களை விடலாம் அங்கு; இங்கு அங்ஙனம் ஒரு குற்றம் காண விரகு இல்லாமையாலே இது அதிலும் அரிது.

தென் குருகூர் நம்பி - [1]"நல்கி என்னை விடான் நம்பி" என்று ஆழ்வார் தாம் குறிக்கோள் கொண்டு பற்றின விஷயத்தின் நிறைவின் அளவு அன்று இவர் பற்றின ஆழ்வாருடைய நிறைவு. எங்ஙனே? என்னில், பகவத் விஷயத்தைப் பற்றினுல் அதன் எல்லையான ஆழ்வார் அளவும் வரவேண்டி இருக்கும்; ஆழ்வாரைப் பற்றினுல் அவ் வருகு சென்று பற்றக் கூடிய ஓர் இடம் இல்லையே. **ஆசாரியர்களை நம்பி என்னக் கற்பித்தார் ஸ்ரீ மதுரகவிகள் அன்றோ என்று சீயர் அருளிச் செய்வர்.** என்றக்கால் - மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றும் வேண்டி இருக்கும் பகவானைப் பற்றுதற்கு; ஒரு சொல் மாத்திரமே அமையும் ஆழ்வாரைப் பற்றுதற்கு. நிறைவினுல் வந்த ஏற்றமே அன்று; சௌலப்யத்தாலும் ஏற்றம் உண்டு என்கை.

அண்ணிக்கும் - தித்திக்கும்; பகவானை அநுபவித்தால் ஆழ்வார்க்குப் பிறக்கும் ஆனந்தம் எல்லாம் ஆழ்வார் திறத்திலே ஒரு வார்த்தை அளவிலே எனக்குக் கிடைத்தது. அமுது ஊறும் - அமுது ஊற்று மாறுதே நிற்கும். [2]"மோக்ஷத்தை அடைந்தவன் பின்னர் இங்கு மீண்டு வருவது இல்லை" என்ற அவ் ஆனந்தம் ஆழ்வாருக்கு அவன் திரு அருளாலே என்றும் உள்ளதாகச் செல்லுகிறுப் போலே எனக்கும் ஆழ்வார் திரு அருளாலே என்றும் புதியதாகச் செல்லப் பெற்றேன்.

என் நாவுக்கே - இது பின்னை எங்களுக்கு இனிக்கிறது இல்லையே? என்னில், முதல் அடியான பகவத் விஷயமும் கூட இனிக்காது இருக்கிற உங்களுக்கு அதன் எல்லையிலே

---

1. 'நல்கி' என்பது, திருவாய்மொழி, 1. 10 : 8.
2. 26-ஆம் பக். பார்க்கவும்.

நிற்கிற எனக்கு இனிக்குமாறு போலே இனிக்குமோ? அன்றிக்கே, பல காலமாக ஐம்புல இன்பங்களை ஆரத் துய்த்துப் போந்த என் நாவுக்கே 'திருக் குருகூர் நம்பி என்றக்கால்' இனிக்கிறது என்றுமாம்.

முதற் பாட்டின் தம்பிரான்படி வ்யாக்யானம்
முற்றிற்று.

ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி
தாழ்வாது மில் குரவர் தாம் வாழி—ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து.

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழச்
சடகோபன் தண்டமிழ் நூல் வாழக்—கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே!
இன்னும் ஒரு நூற்றாண் டிரும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே அரண்.
மதுரகவி ஆழ்வார் மாணடி வாழ்க.
மாறன் மலரடி வாழ்க.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

செய்யுள்.			பக்கம்.
1.	அருள் கொண்டாடும்	...	60
2.	அன்பன் தன்னை	...	75
3.	இன்று தொட்டும்	...	52
4.	கண்டு கொண்டு	...	56
5.	கண்ணிநுண்	...	19
6.	திரிதந்தாகிலும்	...	33
7.	நம்பினேன்	...	45
8.	நன்மையால்	...	40
9.	நாவினால் நவிற்றி	...	27
10.	பயனின்றாகிலும்	...	70
11.	மிக்க வேதியர்	...	65

செய்யுள் அகராதி முற்றிற்று.

மதுரகவி ஆழ்வார் மாணடி வாழ்க.

மாறன் மலரடி வாழ்க.